# உனக்கென நான்

எழுதியவர் ஜெனிபர்



## உனக்கென நான்

### *அத்தியாயம் - 1*

*வண்ணத்தை பார்த்தே பலதலைமுறை கடந்திருந்த ஓர் பள்ளிக்கூடம் அதில் ஒன்றாம் வகுப்பு முதல் ஐந்தாம் வகுப்பு வரை அடக்கம். ஒரு பெரிய அறையின் குறுக்கே மரபலகையாலான தடுப்பான் களை வைத்து ஐந்து வகுப்புகளையும் செவ்வனே பிரித்திருந்தனர் அந்த ஆசிரிய பொறியாளர்கள். சுவற்றில் கருப்பு வண்ணத்தில் பூசப்பட்டு அதற்கு கரும்பலகை என பெயரிட்டிருந்தனர். கூடவே ஒரு மேஜையும் நாற்காலியும் இருக்கவே அது பெரும்பாலும் ஓர் மெத்தையாகவே பயன்பட்டது பல ஆசிரியர்களுக்கு.*

*ஆனால் காலில் அணிந்த கொழுசு சலசலக்க ரோஜா நிறபுடவையால் தன்னை மறைத்துகொண்டு கழுத்தில் சிறிய தங்க நகை காதில் தோடுகள் நிலா போன்ற முகத்தில் திர்ஷ்ட்டி பொட்டாய் உதட்டின் மேல் ஒரு மச்சம். அதற்கு மேலாக மூக்குத்தி ஜொலிக்க அழகான வார்த்தைகளை பேசாமல் பேசும் கண்கள் என கை வளையல்கள் சினுங்க கரும்பலகையில் மயில் வரைந்துகொண்டிருந்தாள் அன்பரசி.*

*அன்பரசி இருபத்தைந்து வயதுள்ள பெண். தான் படித்த பள்ளியிலேயே வேலை செய்யும் வாய்ப்பு தன் தந்தையால் பெற்றவள். பின்ன "அப்பா எனக்கு சென்னைல ஒரு ஸ்கூல்ல வேலை கிடைச்சிருக்கு" என்று ஆர்வமுடன் வந்தவளை "பொமபளபுள்ளை அவ்வளவுதூரம் போக வேணாம்" என்ற ஒற்றை*

வரியில் அணைகட்டியவர். அதன் பலன் இன்று இந்த இரண்டாம் வகுப்பு மழலைகளுக்கு ஆசிரியர். அன்பரசிக்கு எதையும் ஏற்கும் குணம் கொண்டவள் ஓர் பசுவை போல.அதனால் முழு வீச்சுடன் இயங்கிகொண்டிருந்தாள்.

"மிஸ் இது எங்களுக்கு வரைய தெரியும்" என அந்த வகுப்பின் ஆயுதப்படை தலைவன் சஞ்சீவ் அந்த ஏழு வயதில் தெரிந்த மொழியில் முடக்கினான். எவ்வளவு பெரிய பேச்சாளராக இருந்தாலும் மாணவர்களின் முன் நின்றால் விதி முடிந்துவிடும் அதிலும் இந்த காலத்து குழந்தைகளின் அறிவு ஐன்ஸ்டீனை மிஞ்சும் அளவிற்கு உள்ளது.

இதற்கு மேல் சென்றால் கூச்சலிட்டு ஊரை கூட்டி விடுவார்கள் என்று உணர்ந்த அன்பரசி "சரி அப்போ நான் கதை சொல்லட்டுமா?"

"சரிங்க மிஸ்" என்று சத்தம் கேட்க சஞ்சீவின் பார்வை ' நீ சொல்லிதான் பாரேன் ' என்ற வடிவேலுவின் வசனம் போல் இருந்தது.

"ஒரு ஊர்ல ஒரு பாட்டி வடை சுட்டு கிட்டு இருந்துச்சாம் அப்போ ஒரு காக்கா..." என பழைய ரெக்கார்டை ஆரம்பித்தாள் அன்பரசி.

குறுக்கிட்ட நமது ஏழு வயது தலைவர் "இது எங்க மாமா ஏற்கனவே சொல்லிட்டாங்க... இப்போ அந்த பாட்டி நிலாவுல கடை போட்டுருக்கு" என ஏவுகணை தாக்குதல் நடத்திவிட்டு அருகில் இருந்த தன் தோழி கல்பனாவை ஓரகண்ணால் பார்த்தான். வகுப்பே சிரிப்பொலியில் நிறைந்தது.

அன்பரசிக்கு பெயருக்கு ஏற்றார்போல் அனைவரையும் அனைவரையும் அன்பாக நடத்துவது ஒரு சாபம். அது பின்னாலில் அவளது மனதை கீறபோவது தெரியாது. ஆனால் அவளுக்கு இருக்கும் குழப்பம் அந்த பாட்டி எப்போ நீலாவுக்கு போச்சு என்பதே.

அனைவரும் சிரிப்பதை பார்த்த அன்பரசியும் லேசாக புன்னகை செய்ய அவளது கண்ணங்கள் மேலும் அழகாக தோன்றியது. சஞ்சீவின் குறும்பையும் அறிவையும் ரசித்தாள்.

"டீச்சர் உங்களை ஹெட்மாஸ்டர் கூப்டாங்க" கையில் பிரம்புடன் அந்த உடற்பயிற்ச்சி ஆசிரியர் வந்து நிற்க.

குழந்தைகளை பார்த்தாள் அன்பரசி.

"இதுங்கள நான் பாத்துக்கிறேன் நீங்க போங்க" என அடுத்த வார்த்தை வெளிபடவே வகுப்பு மயான அமைதிக்கு சென்றது. அன்பரசி எனும் தேவதையின் கையிலிருந்த அந்த சாத்தான் கைக்கு மாறுவது யாருக்குதான் பிடிக்கும்.

"ம்ம் சரிங்க சார்" என கிளம்பினாள்.

"டீச்சர் உங்க பேக்கையும் எடுத்துட்டு போங்க"

ஏன் எதற்கு என்ற கேள்விகள் மனதில் எழுந்தாலும் அதை வெளிபடுத்தாமல் அமைதியாக எடுத்துகொண்டு கிளம்பினாள்.

ஒரு சிறிய அறை அதன் நடுவில் ஓர் மேஜை அதற்கு மேல் கீச் கீச் என ஓடிக்கொண்டிருந்த அந்த பழைய மின்விசிறி அதற்கு கீழே அந்த நாற்பது வயது பெண் மனோரமா அமர்ந்திருந்தார். வாசலில் வந்து நினற அன்பரசியை பார்த்து

"உள்ள வாங்க"

"மேம் கூப்டீங்கனு சொண்ணாங்க"

"உட்காருமா" என அன்பாக கூறினார். அன்பரசி அனைவருக்கும் செல்லபிள்ளைதான்.

சத்தம் ஏதும் இல்லாமல் அமர்ந்தாள் அன்பரசி.

"ஹாப்பி பர்த்டே மா " என தலைமை ஆசிரியர் கூறியதும் அன்பரசி யின் கண்கள் வியப்பில் ஆழ்ந்தன.

'ஓ நானே மறந்துட்டேன் இவங்களுக்கு எப்படி தெரியும்' என நினைக்கும்போதே "உங்க வீட்ல இருந்து ஃபோன் வந்துச்சு... உனக்கு பிறந்தநாள் கொண்டாடுராங்களாம் அதனால் மதியம் லீவ் எடுத்துகோ" என முடித்தார்.

"சரிங்க மேம்.... அன்ட் தாங்யு" என புன்னகை செயதாள். பதிலுக்கு தலைமை ஆசிரியரும் புன்னகை செய்ய எழுந்து கிளம்பினாள்.

வெளியே வந்தவள் அந்த பாலடைந்த பேருந்தின் வருகைக்கு காத்திருந்தாள். அந்த சாலையில் வேறு எந்த பேருந்தும் செல்லமுடியாது என அறியாதவர் இல்லை. அதுமட்டுமில்லை. இந்த இரண்டு ஊர்களையும் இணைக்கும் பாலம் அதுதான். பரவாயில்லை தாமதிக்காமல் வந்துவிட்டது. அதில் ஏறினாள். ஆனால் அவள் மனதில் குழப்பம் இருந்தது.

'இதுவரை எனக்கு பிறந்தநாள் என்பது சான்றிதழில் மட்டும்தானே பயன்பட்டது. இன்று என்ன புதுமை செய்கிறார்கள்.' என குழம்பிய நேரம் அங்கு அமர்ந்திருந்த ஒரு பெண்ணின் கையிலிருந்த குழந்தை அன்பரசியை பார்த்து கையை நீட்டியது.

அதை பார்த்து சிரித்தாள். உடனே அதன் தாய் சுதாரித்துகொண்டு நிமிர்ந்து பார்த்தாள்.

"ஏய் அன்பு எப்புடி இருக்க?"

"மலர் என்னடி எப்போ வந்த?!" இரண்டு தோழிகளும் நீண்டநாள் பிறகு பார்த்த சந்தோஷம். அதிலும் இருவருக்கும் ஒரு தொடர்பு வேறு உள்ளது.

"இப்போதாண்டி வாரேன்"

"ஆமா இவதான் உன் குழந்தையா? அழகா இருக்கா" என அந்த குழந்தையை கையில் ஏந்திகொண்டாள்.

பெரிய சத்தத்துடன் அந்த பேருந்து ஓட்டுநரின் திறமையால் நிறுத்தப்பட்டது. இரண்டு தோழிகளும் இறங்கினர். அவர்களை சகோதரிகள் என்று புதிதாக பார்ப்பவர்கள் நினைப்பதில் தவறு இல்லை.

"ஏண்டி அன்பு நீ ஏன் இன்னும் கல்யாணம் பன்னிக்கல?!"

கண்ணில் சோகம் இருந்தாலும் முகத்தில் சிரிப்பை வைத்துகொண்டு "உனக்குதான் தெரியேமேடி பின்ன ஏன் கேக்குற"

"இன்னும் அதையே நினைச்சுகிட்டு உன் வாழ்கையை வீணடிக்க போறிங்களா மேடம்"

குழந்தைக்கு முத்தம் கொடுத்துகொண்டிருந்தவள் "கல்யாணம் பன்னி என்னடி ஆகப்போகுது இப்போ?.. இந்த உன் குழந்தை இருக்கு இதை எனக்கு தரமாட்டியா நீ... நான் வளர்க்குறேன்" என பாவமாக முகத்தை வைத்துகொண்டாள்.

"அப்படியே ஒன்னு போட்டேனா தெரியும்... ஏன்டி உனக்கு ஒரு வாழ்கை வேனும்னு சொன்னா நீ லூசு மாதிரி பேசிகிட்டு இருக்க" என திட்டினாள். நெருங்கிய நட்பு வட்டத்தில் இதெல்லாம் சாதாரணம்.

இவள் இதற்குமேல் விட்டாள் அறிவுரை மழையை பொழிவாள் என்று ரயிலை வேறு தண்டவாளத்தில் மாற்றினாள் "நான் இவளை வீட்டுக்கு கொண்டு போறேன் நீ அப்புறமா வா " என குழந்தையை பார்த்து கூறினாள்.

"அடி அம்மா இது உன் குழந்தை நீயே வச்சுக்கோ ஆனா எங்க வீட்டுலயும் ஒருதடவை காட்டிட்டு வந்துடுறேன்...அப்புறம் நீயே வச்சுக்கோ"

"என்கிட்ட இருக்கானு சொல்லு சித்தி ஒன்னும் சொல்ல மாட்டாங்க..." என மீண்டும் குழந்தையை கொஞ்ச துவங்கினாள்.

"சரிடி நீ சொன்னா கேக்கவா போற... நானும் பெரியம்மாவை பாத்து ரொம்ப நாள் ஆச்சு நானும் வாரேன் " என மலரும் உடன் பயனித்தாள். வீடும் வந்தது.

என்றுமில்லாமல் வீட்டின் முன் ஓர் கார் நின்றது. அதன் ஒரு கால் தான் காலையில் வாசலில் வரைந்த ஓவியத்தின் மீது இருந்தது. அப்போது வெளியே வந்த அன்பரசியின் தாய்.

"வாம்மா மலர் எப்போ வந்த?"

"இப்போதான் பெரியம்மா " இது மலரின் பதில்.

"இது என்னமா கார் புதுசா" அன்பரசி குழப்பத்தில் இருந்தாள். இது பெண் பார்க்கும் படலம் என்று கூறிவிடுவார்களோ என்ற பயம் அவளுக்கு.

"அதுவா அப்பாவோட ஃப்ரண்ட் வந்துருக்காரு" என தாய் பார்வதி முடிக்க.

"என்ன பெரியம்மா அன்ப பொண்ணு பாக்க வந்துருக்காங்களா?" என நக்கலாக கேட்டாள்.

"இல்லமா சும்மாதான் வந்திருக்காங்க"

"சரிங்க பெரியம்மா நான் வீட்டுக்கு போய்ட்டு சாயங்காலம் வாரேன்" என மலர் குழந்தையை வாங்கினாள்.

"இருமா சாப்பிட்டு போ"

"இல்ல அம்மா எதிர்பார்த்துகிட்டு இருப்பாங்க"

"இருடி அப்புறம் போகலாம் " என அன்பரசி கிளம்பினாள். அவள் நடக்கபோகும் விபரீதத்தை உணர்ந்தாளோ என்னவோ..

"இல்லடி நான் வாரேன்"

அதற்குமேல் வற்புறுத்த முடியாது " சரிடி சாயங்காலம் பாப்பாவ தூக்கிட்டு வந்துடு இல்ல நான் அங்க வந்துடுவேன்" என ஒய்யாரமாக கூறினாள்.

அன்பரசி வீட்டினுள் நுழைந்ததும் "இதுதான் உன்னோட பொண்ணா " என தன் தந்தை வயதை ஒத்த ஒருவர் கேட்க தந்தையோ "ஆமாடா" என பதிலளித்து முடித்தார். அன்பரசியும் இருக்கையை கூப்பி வணக்கம் வைத்தாள். பின் சமையலறைக்கு சென்று மறைந்தாள்.

அப்போது வெளியே மற்றொரு கார் வந்து நிற்க வேகமாக ஓர் இளைஞன் வீட்டினுள் நுழைந்தான். கையில் ஓர் அட்டை பெட்டியுடன் வந்து நின்றான்.

"இந்தாங்க டாட் கேக் " என பேசும் சத்தம் கேட்கவே கதவின் பின் மறைந்து கொண்டு லேசாக எட்டிபார்த்தாள்.

"என்ன அன்பரசி இது உங்களுக்குதான் தைரியாமா வெளியே வாங்க நான் என்ன உங்களை கொலைபன்னவா போறேன்" என அந்த இளைஞன் திரும்பாமலே பேசினான். அவள் ஆச்சரியத்தில் ஆழ்ந்தாள்.

## அத்தியாயம் - 2

"அட கழுத வெளிய வா..." என செல்லமாக திட்டிய தன் தந்தை "நீ யாருன்னு தெரியலைல அதான் பயந்துபோய் நிக்குறா... இதுக்குதான்டா சொல்றது அடிக்கடி வந்துட்டு போகனும்னு" என தன் தோழரை கடிந்து கொண்டார் அன்பரசியின் தந்தை சந்திரபோஸ். ஆம் பெயருக்கு ஏற்றார் போல் சற்று தேசப்பற்று மிகுந்தவர். வீட்டில் ராணுவம் போன்ற அடக்குமுறையும் உண்டு.

"உன் பொண்ணு என்ன பாத்து ஒன்னும் பயந்துபோய் நிக்கலை நீ மிலிட்டரில ரூல்ஸ் போடுற மாதிரி போட்டுருப்ப அதான் உன்னை பார்த்து பயந்து போய் நிக்குறா" என தன் தோழனை விடாமல் ஈடுகொடுத்தார்.

அன்பரசிக்கு என்ன நடக்கிறது என்றே புரியவில்லை. கதவின் இடுக்கில்தான் மறைந்திருந்தாள். பின்னால் இருந்து ஒரு கை தலையில் கொட்டவே திரும்பினாள்.

"என்னடி பராக்ககு பாத்துகிட்டு இருக்க இந்த இந்த காஃபியை போய் குடு " என தட்டை நீட்டினாள்.

அன்பரசி ஓர் பார்வையை தன் தாயிடம் வீசினாள் அதில் " என்னமா எனக்கு கல்யாணம் வேண்டாம் " என்பது போல இருந்தது. அதை புரிந்துகொண்ட தாய். "உன்னை பொண்ணு பாக்க எல்லாம் வரலை. அவங்க இங்க ஒரு நிலத்தை வாங்க வந்துருக்காங்க ஒரு மில் கட்ட போறாங்களாம் அதான் ஒரு வாரம் நம்ம வீட்டுல தங்க போறாங்க

அவ்வளவுதான்..நீயா எதுவும் கற்பனை பன்னிகாதடி போ..." என தள்ளிவிட வேறு வழியில்லாமல் அதை எடுத்துகொண்டு நடந்தாள்.

சென்று அனைவருக்கும் கொடுக்க அதை எடுத்துகொண்டனர். ஆனால் அந்த இளைஞன் மட்டும் தனது கைபேசியில் எதையோ தட்டிகொண்டிருந்ததான். நவீன கைபேசிகள் உலகத்தை சுருங்கிவிட்டது என்றாலும் இதயங்களையும் சேர்த்தே சுருக்கிவிட்டது என்றுதான் கூறவேண்டும். அதனால்தான் என்னவோ அந்த அழகுபதுமையை விட அந்த ஆன்ட்ராய்ட் பதுமையில் கவனம் செலுத்திகொண்டிருந்தான். அதை பருகியவர்கள். தன் வேலை முடிந்ததும் வேகமாக சென்று சமையலறையில் மறைந்தாள்.

சிறிது நேரம் சிரிப்பு சத்தங்களும் உரையாடல்களும் அரங்கேறவே.

"சரிடா போஸ் நாங்க கிளம்புறோம்" என அந்த மனிதர் கூறும் சத்தம் சமையலறையை அடைந்தது. உடனே பார்வதி வேகமாக வெளியே சென்றார்.

"என்னடா சன்முகம் ஒரு வாரம் வேலை இருக்குனு சொன்ன?" என போஸ் தொடர.

"அதில்லடா போஸ் நாங்க இங்க எதாவது ஹோட்டல் புக் பன்னிகிறோம்" என முடித்தார்.

நக்கலாக சிரித்த அன்பரசியின் தந்தை "ஏன்டா இது என்ன சிட்டியா. உனக்கு காமெடி சென்ஸ் இன்னும் குறையலடா"

"ஆமா டாட் இங்க ரோடே ஒழுங்கா இல்லை இதுல ஹோட்டல் நோ சான்ஸ்" என அந்த இளைஞனின் குரல் ஒலித்தது.

"ஆமா அன்னா சந்துரு சொல்றது சரிதான் இங்கயே தங்கிகோங்க" என அன்பரசியின் தாய் உரிமையாக சண்டையிட்டார்.

சமையலறையில் இருந்த அன்பரசிக்கு மனதில் ஒர் சுனாமியே வந்தது.' யார் இவங்க ஏன் இவ்வளவு அக்கறையா இருக்ககாங்க அதுவும் அப்பா இன்னைக்கு தான் மனம்விட்டு சிரிக்குறாரு'

"டேய் பொம்பள புள்ள இருக்குற வீட்டுல ஒரு பையன் தங்குனா என்னடா நினைப்பாங்க " என சன்முகம் கிசுகிசுக்கும் குரல் கேட்டது.

கூடவே "எஸ் டாட் நாம பக்கத்துல இருக்குற எதாவது ஒரு டவுன்ல போய் தங்கிட்டு பின்ன தினமும் வந்துகளாம்" என சந்துரு வழிமொழிந்தான்.

"இந்த ஊர்காரன் என்ன நினைக்குறான்கிறதெல்லாம் எனக்கு முக்கியம் இல்லடா இப்ப நீ இங்க தங்கலைனா என் கூட ஜென்மத்துக்கும் பேசாதடா!" வாதம் முடிந்தது.

"அது இல்லடா என் பையனையாவது.." என சன்முகம் தொடர.

"ஏன்டா என்ன ஊர்காரன் கேட்டா என் பொண்ணு கட்டிக்க போற மாப்பிள்ளைனு சொல்லிகிறேன் போதுமா... ஏன் நீ இதுக்கு சம்மதிக்க மாட்டியா" என அக்னி ஏவுகணைகளை கொண்டு தாக்கினார்.

"யப்பபா சாமி சரிடா நாங்க இங்கயே தங்கிகிறோம்" என கையெடுத்து கும்பிட்டார். அனைவரின் சிரிப்பொலியும் கேட்டது.

ஆனால் ஏவப்பட்ட ஏவுகணைகள் தாக்கியது அன்பரசி யின் மனதை அவளது இதயத்தை ஊசியால் குத்துவதைபோல் உணர்ந்தாள். 'நான் எப்படி கல்யாணம்.. என் வாழ்வில் அப்படி ஒரு சம்பவம் நடக்கப்போவதில்லை என்னால் யாரும் காயபடகூடாது' என இதயத்தை பிழிந்து கொண்டிருந்தாள்.

"ஏய் உன் ரூமை ஒதுங்க வைடி இவங்க தங்கட்டும்" என தாயின் குரல் இவளது நினைவுகளை வெள்ளையடித்தது. தனது அறைக்கு ஓடினாள். அங்கிருந்த துணிகளை எடுத்து வேறு இடத்திற்கு

மாற்றினாள். அதற்குள்ளாகவே தோழர்கள் இருவரும் ராணுவத்தில் வழங்கப்பட்ட புல்லட்டை எடுத்துகொண்டு கிளம்பியிருந்தனர்.

அந்த இளைஞனோ சமையலறையில் அவளின் தாயிடம் எதையோ பேசிக்கொண்டிருந்தான். அந்த அறை சிறிது பெரியதுதான். அதில் ஒரு கட்டில் ஆனால் அதில் மூன்றுபேர் தூங்கலாம் எனும் அளவிற்கு இருக்கும். அன்பரசியின் கனவுகளுக்கு துனையான இடம் அதுதான். அதுமட்டுமில்லாமல் அருகில் ஓர் புத்தக மேஜை மற்றும் கனிபொறிக்கான ஓர் மூலை அருகில் ஓர் மேஜை அங்குதான் புத்தகங்களை படிப்பதும் மாணவர்களுக்கு மதிப்பிடுவதும் அரங்கேறும்.

புத்தகங்களை எடுத்து அடுக்கும்போது அங்கு அவன் நுழைந்தான். "ஏங்க நானும் புத்தகம் எல்லாம் படிப்பேன் இது இங்கயே இருக்கட்டும்...ஓ கம்ப்யூட்டர் எல்லாம் யூஸ் பன்னுவீங்கலா சூப்பர். " என அவன் பேசிகொண்டிருக்கும்போதே வெளியே செல்ல முயன்றாள்.

"அதுசரி இங்க யாரோ என்னை பச்சை கலர் ட்ரஸ் போட வச்சுருக்காங்க போல இருக்கே" என மெதுவாக கூறினான்.

அப்பொழுதுதான் முகத்தில் குழப்பத்துடன் நிமிர்ந்து பார்த்தாள். "பின்ன இந்த ரூம்ல நான் தனியா பேசிக்கிட்டு இருந்தா வேற என்ன சொல்றது" என மறுபடியும் கூற அன்பரசி சிரித்துவிட்டாள்.

"அப்பாடா பதினெட்டு வருசம் கழிச்சு சிரிச்சுட்ட" என அவன் மறுபடியும் கேட்டான்.

"என்ன ?" என்ற வார்த்தை உதிர்ந்தது அவளிடமிருந்து.

"அப்பாடா அப்போ உங்களுக்கு பேச்சு வருது... " என நக்கல் அடித்தான். அவள் புரியாமல் விழித்தாள்.

"வாவ் செஸ் போர்ட்... நீங்க விளையாடுவீங்களா?..."என மேஜை மீதிருந்த சதுரங்க பலகையில் கவனம் செலுத்தினான்.

"ம்ம்" என சத்தம் மெதுவாக வெளிப்பட்டது.

"நீங்களும் யாரும் விளையாடுவீங்க" என மீண்டும் தொடர்ந்தான்.

"இல்ல நானே இரண்டு பக்கமும் விளையாடுவேன் எதாவது கண்டுபிடிச்சு ஸ்கூல்ல பசங்களுக்கு சொல்லி தருவேன்" என முடித்தாள்.

"நீ இன்னும் மாறவே இல்லை..சரி நான் உங்ககூட விளையாடலாமா"

'என்ன நான் இன்னும் மாறவில்லையா இதற்குமுன் என்னை எப்படி இவனுக்கு தெரியும்'என குழப்பிகொண்டு "என்ன?" என கேள்வி எழுப்பினாள்.

அவனோ பதட்டத்தில் "ஐயோ செஸ் விளையாடலாமானு கேட்டேன் நீங்க தப்பா எடுத்துக்காதீங்க" என வேகமாக முடித்தான்.

'நான் என்ன கேட்டால் இவன் என்ன சொல்கிறான்' என நினைத்தவள் எதுவும் பேசாமல் அங்கிருந்து சென்றாள்.

"உங்க ஃபோன்ல என்ன சிம் போட்டுறுக்கீங்க எனக்கு டவரே கிடைக்கலா" என அவன் கூற.

"என்கிட்ட ஃபோன் இல்லைங்க" என முடித்தாள். அதிர்ச்சியான அவன் "ஏன்" என கேட்டான்.

"அது எனக்கு தேவைபடலைங்க" என சுருக்கமாக முடித்துவிட்டு வெளியே சென்றவளின் சத்தம் "அம்மா நான் மலர் வீட்டுக்கு போய்ட்டு வாரேன் " என ஒலித்தது.

சரி என அந்த கட்டிலில் அமர்ந்தவன் அருகில் இருந்த மாணவர்களின் நோட்டுகளை பார்த்தான். "ம்ம் பசங்களே இந்த காலத்துல இவ்வளவு தூக்கிட்டு வரமாட்டாங்க ஆனா இவ

இவ்வளவு நோட்ட தூக்கிட்டு வந்துருக்கா" என நோட்டமிட்டவன். ஒவ்வொரு நோட்டாக எடுத்து புரட்டினான்.

"மம்... கனிபிரபு 10 மார்க் வெரிகுட்

அன்ட் ராதா 8 மார்க் அதுக்கும் வெரிகுட்டா சரி சரி அப்புறம் சஞ்சீவ் 0 மார்க் என்னடா இதுக்கும் வெரிகுட் அப்படி என்னதான் எழுதியிருக்கான்" என ஆர்வமாக நோட்டை திறந்து பார்த்தான். அதிர்ச்சியாகினான்.

உள்ளே 'டீச்சர் எனக்கு ரொம்ப போர் அடிக்குது நான் தூங்கபோறன் பரிட்சை எழுதலை'. அதை வாசித்த சந்துரு குழுங்கி குழுங்கி சிரிக்க ஆரம்பித்து விட்டான்.

"என்னடி அன்பு அதுக்குள்ள வந்துட்ட ?" மலர் ஆச்சரியமாக கேட்டாள்.

"எனடி நீ பாப்பாவ காட்டிட்டு நீபாட்டுக்கு வந்துட்ட இவ என் கண்ணுகுள்ளையே நிக்குறா தெரியுமா?" என குழந்தையை அவளிடமிருந்து பிடுங்கினாள்.

உள்ளேயிருந்து வந்த மலரின் தாய் "நீயும் கல்யாணம் பன்னிருந்தா இன்னைக்கு உன்குழந்தைய கொஞ்சிருக்கலாம்ல?!" என

வழக்கமான நக்கலுடன் கூற... "அந்த ஏற்பாடுதான்மா இன்னைக்கு நடக்குது" என மலர் ஜாடையாக கூறினாள்.

"ஏய் சும்மா இருடி " என மலரின் கையை கிள்ளினாள்.

"இங்க பாருமா இவளை பொண்ணு பாக்க வந்தாங்க அதை உன்கிட்ட சொல்லகூடாதுன்னு சொல்லி கிள்ளி வைக்குற" என வழக்குபதிவு செய்தாள்.

"அப்படியெல்லாம் இல்லை சித்தி அவங்க அப்பாவோட ஃபிரண்ட் வேலை விசயமாக வந்திருக்காங்க" என சமாளித்தாள்.

"ஒன்னா சேந்துட்டீங்கள்ள இன்னும் ரெண்டு நாளைக்கு ஊர் அழிஞ்சதுடி என்னமோ பன்னுங்க" என சித்தி குடங்களுடன் கிளம்பினார்.

"ஏண்டி அம்மா கிட்ட ஏன் அப்படி சொன்ன" என மலர் கேட்க...

"நிஜமாவே அவங்க எங்க அப்பாவோட ஃபிரண்ட் தான்டி" என குழந்தையின் கன்னத்தை கிள்ளினாள்.

"உங்க அப்பாவும் அவரு ஃபிரண்டும் இந்த வழியாகத்தான் தோட்டத்துக்கு போனாங்க அப்போ எங்க அம்மா அவங்களை

*பாத்து பேசுச்சி... உங்க அப்பாதான் சொன்னாரு உன்ன பொண்ணு பாக்க வந்திருக்காங்கனு" என முடிக்க அன்பரசியின் சிரித்த முகம் வாடியது.*

*"ஏன்டி நீ இன்னும் அவனைத்தான் நினைச்சுகிட்டு இருக்கியா?!" என்ற அடுத்த வார்த்தை மலர் கூறுவாள் என எதிர்பார்க்காதவள் கண்ணின் ஓரம் வழிந்த நீரை துடைத்து விட்டு குழந்தையை மலரின் மடியில் அமர்த்திவிட்டு எழுந்து நடந்தாள்..*

## *அத்தியாயம்*- 3

*"நீ இன்னும் அவனைத்தான் நினைச்சுகிட்டு இருக்கியா" என்ற வார்த்தை அன்பரசியின் தலையின் மூலைமுடுக்கெல்லாம் எதிரொலித்தது. 'ஏன் அவள் அப்படி கூறினாள் அந்த நினைவுகள் இல்லாமல் இருந்திருந்தால் நன்றாக இருந்திருக்கும் இது என்ன என் மனம் ஏன் இப்படி இருக்கிறது'. என குழப்பிகொண்டே அடிமேல் அடியெடுத்து வைத்து நடந்தாள்.*

இருந்தாலும் அவளது குணம் மனதிலும் எதிரொலித்தது. 'ஐயோ அவள்மேல் கோபபட்டு குழந்தையை விட்டுட்டு வந்துட்டேனே' என அந்த அழகான பிஞ்சு குழந்தையின் முகமும் நினைவில் வந்து சேர்ந்தது. வீட்டின் வாயிலை அடைந்தாள்.

"ஏன் மாப்பிள்ளை இத்தனை நாள் வராம அவ்வளவு பிஸியா" என தாய் பார்வதியின் குரல் கேட்டது. அதை எதேச்சையாக கேட்டுவிட்டாள் அன்பரசி. அடுத்தவர் விசயத்தில் ஆர்வம் காட்டும் பழக்கம் அவளுக்கு இல்லை என்றாலும் மாப்பிள்ளை என்ற வார்த்தை அவளை வாசலிலேயே நிறுத்தியது. மேலும் என்ன பேசுகிறார்கள் என கேட்க துவங்கினாள்.

"அதை ஏன் கேக்குறீங்க அம்மா இறந்ததுக்கு அப்புறம் மாமா உதவி பன்னதாலதான் இப்போ இந்த அளவுகக்கு வந்துருக்கோம். அப்பா அம்மாவோட நியாபகத்தை மறைக்க பணத்துபின்னாடி ஓட ஆரம்பிச்சுட்டாரு நானும் விவரம் தெரிஞ்சதுல இருந்து அதே ஓட்டம் தான். ஆனா அம்மா கனவுல வந்து சொனாங்கலாம் அப்பாகிட்ட" என கூறும்போது அவனது குரலில் தொய்வு ஏற்பட்டது. 'என்ன இவனுக்கு அம்மா இல்லையா ஐயோ எவ்வளவு கஷ்டபட்டு இருப்பான்' என அன்பரசியின் மனதில் வலித்தது. அடுத்தவரின் உணர்வுகளை ஓர் கிளிப்பிள்ளை போல் உள்வாங்கிகொள்ளும் வரமோ சாபமோ பெற்றவள் அன்பரசி.

"சரி விடுப்பா என்ன சாப்பிடுற டீ எதுவும் போட்டு தரவா? "என பார்வதி அவனது கவலையை திசை திருப்ப முயன்றார்.

"இல்ல அத்தை வேணாம்..." என அமைதியானான் சந்துரு.

ரவை வறுக்கும் மனம் அந்த அறையை நிரப்பிகொண்டிருந்தது. பிறந்தநாள் என்றால் இங்கு கேசரி தான் பெரிய விருந்து அதற்கான் ஏற்பாடுதான் நடந்துகொண்டிருந்தது.

"என்ன அத்த ரெடி பன்றீங்க " என்ற கேள்விக்கு"கேசரிப்பா இன்னைக்கு அவளுக்கு பிறந்தநாள்ள" என்றாள். "கேசரியா ஐய்யோ"

"ஏன் என்னப்பா ஆச்சு"

"கேசரின்னு பேரை கேட்டாளே என்ககு அலர்ஜி தான்"

"ஏன் அப்படி சொல்ற"

"ஒரு டீலரை சமாளிக்க ஆந்திரா போயிருந்தோம் வேலையை முடிச்சுட்டு வேகமா வரும்போது வயிற்றை கிள்ளுச்சு அந்த அளவுக்கு பசி சரின்னு ரோட்டோரமா இருந்த ரெஸ்டாரன்ட்ல வண்டிய நிறுத்தி சாப்ட்டா முதல் வாய் கேசரி தான் வச்சேன். என் குடலே வெளிய வந்துடுச்சு."

"அப்பறம்"

"அப்பறம் என்ன பசில செத்தாலும் பரவாயில்லைடா பாயசன்ல சாககூடாதுன்னு அங்க வண்டிய எடுத்தவன்தான் சென்னைதான் அடுத்த ஸ்டாப்பிங்"

இதை வெளியிலிருந்து கேட்டுக்கொண்டிருந்த அன்பரசிக்கு இவனது குழந்தைதனம் பிடித்திருந்தது.

"ஏன் அத்த அன்புகிட்ட ஃபோன் இல்லையா?"

"அவ படிக்கும்போது யூஸ்பன்னா ஆனா இப்ப வேணாம் சொல்லிட்டா அவ மனசுகுள்ள எதையோ வச்சுகிட்டு வேதனைபடுறான்னு மட்டும் தெரியுது"

"எனக்கும் அப்படிதான் தோனுது முன்ன இருந்த அந்த அன்பரசி இவ இல்லை" என சந்துரு கூற வெளியில் நின்ற பாவைக்கு குழப்பம் நீடித்தது. ஆனாலும் தன் தாய் தன்னை புரிந்துள்ளார் என மகிழவும் செய்தாள்.

"அதான் மாப்பிள்ளை உங்க மாமா சொன்னாருள்ள "

"ஆமா அவ கல்யாணமே வேணாம்னு சொன்னாரு அதையா சொல்றீங்க"

"ஆமா, நீதான் அவ மனசுல என்ன இருக்குனு கண்டுபிடிச்சு சொல்லனும்" என்று பார்வதி முடிக்க.

"ம்ம் ட்ரைபன்றேன் அத்த ஆனா இந்த சைக்காலஜியெல்லாம என்க்கு தெரியாதே இதில் உங்க பொண்ணு என்கிட்ட் பேசவே காசு கேக்குது இதுல மனச திறந்து அப்படியே சொல்லிட்டாலும்..." என சிரித்தான்.

'என்ன என்மனம் எனும் பூட்டை உடைக்க வந்திருக்கும் திருடனா நீ முடிந்தால் முயன்றுபார்' என கோபம் பொங்க சட்டென உள்ளே நுழைந்தாள். இருவரும் அவள்செல்வதை கவனிக்காமல் இல்லை. ஆனால் அவளுக்கு தெரியாது அந்த பூட்டிற்கு சந்துரு தான் சொந்தகாரன் ஆவான் என்று.

"சரி அத்த நான் டவுனுக்கு போய்ட்டு வாரேன் ஒரு சின்ன வேலை"

"என்னப்பா வேலை "

"அது சர்ப்ரைஸ்" என வெளியே செல்ல அதை தொடர்ந்து கார் இன்ஜின் சத்தம் கேட்க அவன் சென்றுவிட்டான் என உணரமுடிந்தது.

அவனறையான தன் அறைக்குள் சென்றாள் திருத்தபட வேண்டிய புத்தகங்களை எடுத்தாள் அவை கலைந்திருந்தன. அவனது செயல்பாடுதான் என உணரமுடிந்தது. அவற்றை எடுத்துகொண்டு வேறு ஒரு மேஜைக்கு மாற்றினாள். ஆனால் அங்கு போதிய இடவசதி இல்லாததால் சிலவற்றை அங்கேயே வைத்துவிட்டாள். அப்போது எதேர்ச்சையாக அந்த டைரி கட்டிலில் இருப்பதை பார்க்க முடிந்தது.

அது அவனது டைரி என்பதை உணர்ந்தாள். ஆனால் இதை எங்கேயோ பார்த்த நியாபகம் மட்டும் மனதில் இருந்தது. அதை திறந்து பார்க்க ஆவலாக இருந்தாலும் அடுத்தவர் அந்தரங்கத்தில் தலையிட விரும்பாமல் நகர்ந்தாள். மேஜையில் அமர்ந்து அந்த கார்பன் பென்சில் கோடுகளுக்கு நடுவில் சிகப்பு மையால் திருத்திகொண்டிருந்தாள். கைவேலை செய்ததே தவிர மூளை வேறு உலகத்தில் மிதந்தது.

"இப்போ முடிவா என்ன சொல்ற"

"எனக்கும் உனக்கும் செட் ஆகாது சரியா நீ உன் லைஃப்பை பாத்துகிட்டு போ" என கத்திகொண்டிருந்தாள் அன்பரசி.

"நீ தாண்டி என் லைஃப் உன்னை விட்டுட்டு எபடிடி இருக்க முடியும்"

"பைத்தியாமா நீ"

"ஆமாடி உன்னை லவ் பன்னேன்ல நான் பைத்தியம்தான்"

"லவ்வா?! ஆனா நான் உன்னை லவ் பன்னலையே "

"என்ன லவ் பன்னலையா அப்போ என்கூட பழகுனது எல்லாம் பொய்யா"

"பச்ச். நான் எப்போதாவது உன்னை லவ் பன்றேன்னு சொல்லிருக்கேனா?"

சற்று சிந்தித்தவன் "இல்லை " என தலைகுணிந்தான்.

"பின்ன ஏன் என்னை டார்ச்சர் பன்ற"

"நீ பழகுனது எல்லாம் பொய்யா"

அன்பரசியின் கண்கள் சிவந்தன "டேய் நான் உன்கூட பழகுனது ஒரு ஃபிரண்டாதான் அதுமட்டுமில்லாம எனக்கு செலவு பன்ன ஒருத்தன் தேவைபட்டான் போதுமா அதான் உன்கூட பழகுனேன்" என முடித்தாள்.

"ச்சீ நீ இவ்வளவு கேவலமான பொண்ணா.. காசுக்காக என்ன வேணாலும் பன்னுவியா நான் உன்னை இப்படி எதிர்பாக்கலைடி. இனி உன் மூஞ்சிலேயே முழிக்க மாட்டேன். த்தூதூ" என சென்றுவிட அந்த காட்சிகள் அனபரசியின் வாழ்வில் நடந்த தருணம் அதை அவளால் எள்ளவும் மறக்க முடியாது.

இந்த காட்சிகள் ஓடவே இதயம் கனத்திருந்தது. தன் நிலா கண்ணங்களை அந்த மழலையின் நோட்டுகளின் மீது வைத்திருந்தாள். சோகமான பதுமையாக படுத்திருந்தாள். எவ்வளவு நேரம் யோசித்தாள் என்றே தெரியவில்லை. கடிகாரமுள் அரைபாதியை கடந்து சென்றிருந்தது.

புல்லட் சத்தமும் கார்சத்தமும் ஒருங்கே வரவே வீட்டில் அனைவரும் வந்துவிட்டனர். சந்துரு கையில் ஒரு பெட்டியுடன் அவளது தாயை சந்தித்தான்.

"என்னப்பா இது"

"சுடிதார் அத்த அன்பரசி பிறந்தநாளள அதான் வாங்கிட்டு வந்தேன் சீக்கிரம் எல்லாரும் ரெடி ஆகுங்கள் லெட்ஸ் செலிப்ரேட்" என அனைவரையும் அவசரபடுத்தினான்.

'இவன் யாரு எனக்கு ட்ரெஸ் எடுத்து கொடுக்க இவ்வளவு உரிமை கெண்டாடுரான் ' என கண்கள் அனலாக தகித்தன.

அதற்குள்ளாகவே அவளது தாய் பார்வதி அந்த சுடிதாரை எடுத்துகொண்டு இவளிடம் வந்தார். "பாருடி எனக்கு கூட தோனலை எவ்வளவு அழகா எடுத்து வந்திருக்கான் பாரு" என அவன் புகழை பாட துவங்கியிருந்தாள்.

"ப்ச்ச் அம்மா இதை எடுத்துட்டு போறியா?!" என்றுமில்லாமல் வார்த்தையை உதிர்த்துவிட்டாள். எவ்வளவு நாள் தான் எரிமலை அடங்கியே இருக்கும் மனதில்.

"என்னடி வாய் நீளுது ஒழுங்கா போய் குளிச்சுட்டு போட்டுட்டு வா " என்ற கட்டளை குரல் ஒலித்தது.

தன் கோபம் எல்லைமீறியதை உணர்ந்தவள் அமைதியாக அதை வாங்கிகொண்டு குளியலறையில் புகுந்தாள்.

அருகிலிருந்த தண்ணீர் தொட்டியில் அவளது கண்ணீர் துளிகள் சென்று விழுந்து கொண்டிருந்தன.

## அத்தியாயம் - 3

கண்ணீரை தண்ணீரில் வீணடித்து கொண்டிருந்தாள். சிறிது நேரத்தில் நிதானத்திற்கு வந்தவள் குளிக்க ஆரம்பித்திருந்தாள். மஞ்சளிட்டு சீகைகாய் தலையிலிட்டு வாசனைமிகுந்த சோப்பால் உடலை மாற்றி நீரை உடலில் தவழ விட்டாள். பின் அந்த பெட்டியை பிரித்து அந்த சுடிதாரை எடுத்து உடுத்தினாள். தான் சென்று தேர்வு செய்திருந்தாள்கூட இந்த அளவிற்கு இருந்திருக்காது. அப்படியிருக்க எப்படி இவனால் இவ்வளவு துல்லியமாக எடுக்க முடிந்தது. அப்போ இவன் நம்மை அந்த அளவுக்கு பார்த்துள்ளான். சே எல்லா ஆண்களும் இப்படித்தானா என நொந்து கொண்டிருந்தாள்.

"யேய் இன்னுமாடி குளிக்குற சீக்கிரம் வாடி" அன்னையின் தாழாட்டு இது.

பெருமூச்சு விட்டுக்கொண்டு வெளியே வந்தாள். அழகான நீலநிற உடை மயில் என்ற சொல்லுக்கு உயிர்கொடுத்திருந்தது அந்த சுடிதார். அவள் வீட்டிற்குள் நுழைந்ததும் கேக்கும் அதை சுற்றி சில குழந்தைகள் மற்றும் தனது தந்தை அவனது தந்தை என

நினைத்திருந்தனர். அவனோ அந்த கேக்கின் நடுவில் அந்த சுழலும் பொம்மையை நிலைநிறுத்திகொண்டிருந்தான்.

"வாவ் யூ லுக் வெரி ப்யூட்டி ஃபுல் " என்று மனதில் உள்ளதை வெளியே கொட்டிவிட்டான். பதிலுக்கு அவள் வீசிய பார்வையில் தான் ஏதோ தவறாக சொல்லிவிட்டோமா என நினைத்து குனிந்து கொண்டான்.

"தலையில் வாரிட்டு வாடி" பார்வதி மீண்டும் திட்டிகொண்டிருந்தார்.

"இல்ல பரவாயில்லை அத்த லூஸ் கேர் நல்லாதான் இருக்கு." அவளுக்கும் லூஸ் கேர்தான விருப்பம் ஆனால் தன்னை சுற்றியுள்ள வளையங்களால் அதை கைவிட்டிருந்தாள். இன்று அதற்கான பலியை இவன் ஏற்றுகொள்வதால் மகிழ்ந்தாள்.

அவளை கேக்கின் முன் நிற்கவைத்து அந்த மழலைகள் அவளை சூழ்ந்து கொண்டன. பின் தன் கைபேசியில் அவளது நிழலை சிறைபிடித்தான். பின் கேக்கை வெட்டி கொண்டாட வண்ணவெடிகளால் அந்த இடத்தை நிரப்பினான். சூழ்ந்திருந்தவர்களின் மகிழ்ச்சி இவளையும் ஆட்கொள்ள இவளது மனதிற்கு சிறிது ஆறுதல் தரவே அவன்மீது சிறிது மதிப்பு ஏற்பட்டது. ஆனால் அவனோ உற்சாகமாக அனைத்து குழந்தைகளுக்கும் கேக்கினை பங்கிட்டுகொண்டு இருந்தான். அவனது விளையாட்டில் மகிழந்த குழந்தைகள் அவனையும்

தங்களுடன் குழந்தையாக ஏற்றுகொண்டன அவனும் அவ்வாறே மாறிபோனான். முதல்முறையாக அவனை ரசிக்க துவங்கியிருந்தாள்.

அவள் தன்னை பார்த்துகொண்டிருந்ததை பார்த்து. "ஐயோ மறந்துட்டேன் இந்தா ஹாப்பி பர்த்டே " என ஒரு கலரதாள் சுற்றப்பட்ட சிறு பெட்டியை அவளிடம் தந்தான். அவள் தன் தாயை பார்க்க அவள் "வாங்கிக்கோ" என கூறவே அது அவனிடமிருந்து இவளிடம் வந்து சேர்ந்தது.

"ம்ம் பிரிச்சு பாரு" என அவனது வார்த்தை வெளிப்படவே அதை பிரித்தாள்.

உள்ளேயிருந்து ஓர் ஆன்ட்ராய்டு மொபைல் எட்டிப்பார்த்தது. சற்று விலை அதிகமான பொருள்தான். அன்பரசி யின் முகத்தில் ஓர் கலக்கம் தெரிந்தது. இது எனக்கு வேண்டாம் என்பதை போல.

"இங்க ஆப்பிள் ஃபோன் கிடைக்கல அதான் இதை வாங்கி வந்தேன் பிடிச்சிருக்கா" என சந்துரு கேட்க.

அவனிடம் எப்படி கூறுவது என தெரியாமல் விழித்தாள். "ஹேய் என்ன பிடிக்கலையா ரிட்டன்பன்னி வேற மொபைல் வாங்கிக்கலாம்" என அவன் கூறவே.

"இல்லை வோணாம்" என அவள் கூறி முடித்தாள். பின் வாழ்வில் முதல்முறையாக பிறந்தநாள் என்றால் என்ன என்று புரியவைத்தவனை பாரத்து மனதினுள் நன்றி கூறினாள்.

பின் போஸ் வழக்கம்போல் தனது தோழரை அழைத்துகொண்டு ஊர்காரர்களுக்கு அறிமுகம் செய்துவைக்க கிளம்பிவிட்டார்.

"ஏன்டா நீ சும்மாதானே அப்படி சொன்ன" என சன்முகம் ஆரம்பித்தார்.

"என்னடா சொன்னேன்" என பைக்கை ஓட்டிகொண்டே எதிரில் வருபவர்களுக்கு வணக்கம் வைத்துகொண்டு சென்றுகொண்டிருந்தார் போஸ். அந்த ஊரில் அவருக்கு அவ்வளவு மரியாதை உள்ளது.

"உன் பொண்ணை என் பையனுக்கு..." என இழுத்தார்.

"டேய் நீ விருப்பபட்டு நான் எதையாவது வேணாம்னு சொல்லிருக்கேனா?"

"அது இல்லடா" என சன்முகம் நிறுத்த வண்டியை நிறுத்தியவர். "வா டீ சாப்டுகிட்டே பேசலாம்" என அந்த பெட்டி கடையில் நிறுத்தி ஓர் இருக்கையில் அமர்ந்தனர்.

அடுத்த நொடி ஒரு சிறுவன் "ஐயா டீ " என அதை அவரிடம் நீட்டிவிட்டு ஒரு வணக்கம் வைத்தான். அவனுக்கு ராணுவத்தில் சேரவேண்டும் என்ற ஆசை அதனால் போஸிடம் அடிக்கடி அறிவுரை கேட்பதுண்டு.

"இங்க பாருடா சன்முகம் என் பொண்ணு உன் வீட்டுல விளக்கேற்ற வரனும்னு நீ ஆசைபடுறியா?"

"ஆசைதான் ஆனால் உன் சம்மதம் வேணும்ல அதுவும் இல்லாம நீ அன்னைக்கு சொன்ன விசயம்"

"டேய் எனக்கு உன் விருப்பம்தான் முக்கியம்... இப்ப சொல்றேன் அவதான் உன்னொட மருமகள் சரியா" என டீகடையில் நிச்சயம் முடிந்தது.

"இல்ல நீ அன்னைக்கு சொன்னியே உன் பொண்ணு ஏதோ மனசுகுள்ள வச்சுகிட்டு கல்யாணம் வேணாம்னு சொல்றான்னு இதை பார்த்தா அவ யாரையோ லவ் பன்றானு நினைக்குறேன்"

"அதுக்கு என்னடா"

"இல்ல வாழபோறவங்க விருப்பம் இல்லாமல் கல்யாணம் பன்னா நல்லா இருக்காதுடா"

"டேய் இப்ப சொல்றேன் அப்படி எதாவது இருந்தாகூட அவ் உன் மருமகளாதான் செத்துபோவாள் சரியா" என வேகமாக பேசிமுடிக்க அந்த வார்த்தைகளின் வலிமையை சன்முகம் நன்றாகவே உணர்ந்தவர். போஸ் பெயருக்கு ஏற்றார்போல் சொன்னதை செய்துவிடுவார்.

"டேய் அப்படியெல்லாம் எதுவும் பன்னிடாத அன்பரசிக்கு சம்மதம்னா எனக்கும் சம்மதம்டா" என முடிக்க ஒரு பெரியவர் அங்கு வந்துசேர்ந்தார்.

"என்ன மிலிட்டரி காரரே யாரு இது" என கண்ணாடி முகத்தை முழுமையாக மூடி ஓர் பெரியவர் கம்பு உன்றி வந்தார்.

"வாங்க ஐயா... இது என் ஃப்ரண்ட் சன்முகம் உங்களுக்கு தெரியுமே"

"ஓ சன்முகமா அடையாளமே தெரியலைப்பா எப்படி இருக்க " என அவர் கூற "நல்லா இருக்கேன் ஐயா " என சன்முகம் முடித்திருந்தார்.

"உன் பையன் என்ன பன்றான்" என அந்த பெரியவர் தொடர்ந்தார்.

"அவன் வியாபாரம் பன்றான் ஐயா" என சன்முகம் கூற "ம்ம் நல்லா இருங்க" என இறைவனை வேண்டினார்.

"உன் பொண்ண கட்டிகொடுத்து எப்பவும் பிரியாமல் இருங்கப்பா " என அந்த பெரியவர் கூற

"அதுக்குதான் ஐயா வந்துருக்காங்க அன்பரசிய பொண்ணு பாக்க" என போஸ் முடித்தார்.

"நல்ல பொண்ணுபா அன்பரசி உன் குடும்பத்துக்கு இனி வெளிச்சம்தான். இதை கேட்டு சந்தோஷப்பட காவேரி இல்லாம போய்டா " என அந்த பெரியவர் சன்முகத்தின் பழைய நினைவுகளை புரட்டிவிட்டார்.

"அம்மா எதாவது வேணுமான்னு கேக்க சென்னாங்க?" என அன்பரசி அவனது அறைக்குள் வந்தாள்.

அவனோ சதுரங்கத்தில் போராளிகளை அடுக்கிகொண்டிருந்தான். வெள்ளை ராணியை ராஜாவின் பக்கம் நிறுத்தியவன்.

"இல்ல எதுவும் வேணாம்... விளையாடலாமா?" என கேட்டான்.

"இல்ல எனக்கு அவ்வளவாக விளையாட தெரியாது" என்று விலகினாள்.

"நான் மட்டும் என்ன சாம்பியனா?" என சிரித்தான்.

"இல்லை..." என இழுத்தாள். ஓர் சந்துருவுக்கு எதிரில் அமர்ந்து விளையாடுவதில் அவளுக்கு தயக்கம் இருந்தது.

"ஓ அத்த எதுவும் வேலை சொன்னாங்களா?" என அவளது முகத்தை பார்த்தான். "அத்தை " என குரல் கொடுத்தான்.

"என்ன மாப்பிள்ளை?" என்ற பதில் குரல் வந்தது.

"அன்பரசிக்கு செஸ் விளையாட தெரியாதா?" என குரல் கொடுத்தான்.

"தெரியாதா?!!" என சிரித்துவிட்டு "அங்க மேலே பாருப்பா அவ வாங்கி வச்சுருக்க கப்பை" என கேட்க அப்போதுதான் பார்த்தான் அந்த கோப்பைகளையும் மெடல்களையும்.

அன்பரசியோ இன்னும் அமைதியாகவே நின்றாள்.

"ஓ காலேஜ் செஸ் சாம்பியன்!"

"இல்ல டிஸ்ட்ரிக் சாம்பியன் " என்ற மெதுவான வார்த்தைகள் வந்தன.

"சரி எனக்கும் சொல்லிகுடுங்க டீச்சர்" என கைகட்டி வாயில் விரல்வைத்தான். அவளுக்கு சிரிப்பு வந்துவிட்டது. ஒரு வழியாக அவளை சம்மதிக்க வைத்துவிட்டான்.

அவனுக்கு எதிரில் அமர்ந்தாள். "லேடிஸ் ஃபர்ஸ்ட்" என தன்பக்கம் இருந்த வெள்ளை காய்களை அவள் புறமாக திருப்பினான்.

அதை பார்த்தவள் ராணியும் ராஜாவும் தவறாக இருந்ததை சரி செய்தாள். "இப்படி தானே எனக்கு சொல்லிகொடுத்தாங்க" என தன் தவற்றை நியாயபடுத்தினான்.

அவள் தலையை குனிந்து கொண்டு சிரித்தாள். "அப்பாடா மேடம் சிரிச்சுட்டாங்க சரி ஸ்டார்ட் பன்னலாமா?" என்றான்.

அவள் வாயிலிருந்து பதில் வராமல் சிப்பாய் இரண்டடி முன்னே வந்தது. "ம்ம் சரிதான் " என அவனும் சிப்பாயை முன்னேற்றினான்.

*"அன்பு நான் ஏன் இங்கு வந்திருக்கேன் தெரியுமா?" என மெதுவான குரலில் கேட்டான்.*

*அவள் அவனது ராணியை வெளியேற்றிவிட்டு அவனை நிமிர்ந்து பார்த்தாள். சதுரங்க ராணி வெளியேற இவள்தான் அவன் ராணி என கூறும் தருனம் வந்தது.*

## அத்தியாயம் - 5

*"அன்பு நான் ஏன் இங்க வந்திருக்கேனு தெரியுமா?" என சந்துருவின் வாயிலிருந்து வார்த்தை வரும் தருணம் அவனது ராணி பலகையை விட்டு வெளியேறியிருந்தது.*

*அவள் அவனை நிமிர்ந்து பார்த்தாள் "ஏன்" என்ற கேள்வியை கண்ணில் வைத்துகொண்டு.*

*"ஓ நீ ரொம்ப புத்திசாலி ராணியை காலிபன்னிட்டியே" என பலகையை பார்த்தான். இவன் ஏன் என்னை குழப்புகிறான் என நினைத்துகொண்டு மறுபடியும் பலகையை பார்த்தாள். ஆனால் பல எண்ணவோட்டங்கள் அவளுள் அரங்கேற அவனுக்கு அதிஷ்டம்.*

இந்தமுறை அவளது யானையில் ஒன்று பரலோகம் சென்றிருந்தது. அதை கவனிக்காமல் தன் கை வேலைசெய்த இடத்தில் மந்திரியை செலுத்திகொண்டிருந்தாள். அவளது யானையை அழித்த பெருமையில் மீண்டும் பேச ஆரம்பித்திருந்தான்.

"உனக்கு என்னை நியாபகம் இல்லையா?" என சந்துரு கேட்டான். ஆனால் அன்பரசியின் வாழ்கையில் ஏற்பட்ட விபத்தை பற்றி சந்துருவுக்கு தெரிந்திருக்க வாய்ப்பில்லை.

"இல்லை" என பதிலளித்தாள்.

'எப்படி இவள் என்னை மறந்தாள்" என குழப்பிகொண்டே குதிரையை எடுத்து அவளின் ராணியை குறிவைத்தான்.

"அன்பு அன்பு " எனறு வெளியிலிருந்து ஒரு குரல் ஒழித்தது. அது மலரின் குரல்தான். உடனே தன் கையில் எடுத்திருந்த ராணியை பலகையின் ஏதோ ஓரிடத்தில் வைத்துவிட்டு வெளியே ஓடிவிட்டாள். வேகமாக சென்றவள் அவளது குழந்தையை போய் கொஞ்ச ஆரம்பித்துவிட்டாள்.

'என்ன பெரிய செஸ் பிளேர் ஒரு ஆட்டத்தை முழுதாக விளையாடவேண்டும் என்ற ஒரு எண்ணம் இல்லையே' என சளித்துகொண்டு அந்த ராணியைபார்த்தான். அந்த வெள்ளை

அழகுராணி கருமைராஜாவிற்கு முத்தமிட்டபடி நின்றிருந்தது. செக்மேட்... ராஜா அகபட்டிருந்தார் ராணியிடம்.

"அடிப்பாவி கேம் முடிச்சுட்டு தான் போனியா" என வெளியே வந்தான்.

"ஏண்டி நான் என்ன சொல்லிட்டேன்னும் குழந்தையை வீசிட்டு கோபமா வந்துட்ட " என மலர் திட்டிகொண்டிருந்தாள்.

"..." அன்பரிசி எந்த பதிலும் பேசாமல் அந்த குழந்தையுடன் விளையாடிகொண்டிருந்தாள். இருவரும் வீட்டின் முன்னிருந்த தின்னையில் அமர்ந்திருந்தனர்.

"ஏய் மாடு உன்கிட்டதான் பேசிக்கிட்டு இருக்கேன்" என மலர் ஆத்திரமானாள். அன்பரசியிடம் பதில் இல்லை.

"இந்த பாருடி " என அவளது முகத்தை திருப்ப "ஏய் ஏண்டி அழற" என மெதுவான குரலில் கேட்டாள் மலர்.

அப்போது சந்துரு வெளியே வந்தான். அவனை பார்த்ததும் தன் கண்ணீரை துடைத்துகொண்டு இயல்புக்கு மாறினாள். ஆனால் மலரின் முகத்தில் ஓர் அதிர்ச்சி தெரிந்தது.

"ஹேய் நீ மலர்தான?" சந்துரு தெளிவாக கேட்டான்.

"ஏய் சந்துரு நீ இன்னும் உயிரோடுதான் இருக்கியா" என நக்கலாக கேட்டாள்.

"ஏன் நீ கொல்லலாம்னு திட்டம் போட்டுருக்கியா?" என சந்துரு பதிலுக்கு கிண்டல் செய்தான்.

"பரவாயில்லையே என்னை நியாபகம் வச்சுருக்கியே " என மலர் கூற "அம்மா அங்கால பரமேஸ்வரி உன்னை என்னால மறக்க முடியுமா?" என கூற இருவரும் பலமாக சிரித்தனர். இவர்கள் இருவரையும் பார்த்து நடுவில் அமர்ந்திருந்த அன்பரசி குழப்பத்தில் இருப்பது அவளது கண்ணில் தெரிந்தது.

"ஏய் என்னடி பாக்குற நம்ம சந்துருடி" என தன் தோழிக்கு எதையோ உணர்த்த முயன்றாள். ஆனால் சந்துரு "வேண்டாம்" என தலையால் சைகை காட்டினான். அதை மலர் உடனே புரிந்துகொண்டாள்.

அடுத்ததாக பேச்சை தடம்புரட்டும் படலம் அரங்கேறியது. "அப்புறம் சந்துரு என்ன பன்ற?" மலர்தான் துவங்கிவைத்தாள்.

"நான் சின்னதா வியாபாரம் பன்றேன் நீ என்ன பன்ற"

"நான் என்ன பன்ன அவரை கவனிச்சுகிறதும் என் பட்டுகுட்டிய கொஞ்சுரதும்தான் எனக்கு வேலை" என அன்பரசியின் கையிலிருந்த குழந்தையின் கன்னத்தில் கிள்ளினாள்.

"ஓ கல்யாணம் ஆகிறுச்சா?" என சிரித்தான். "பின்ன கல்யாணம் பன்னாமலா குழந்தை இருக்கும்" என முறைத்தாள்.

"ஏய் நீ தான சொன்ன நானெல்லாம் கல்யாணம் பன்னாமதான் குழந்தை பெத்துகுவேன்னு..." என சந்துரு சிரித்தான்.

"ஏய் லூசு என்னடா அது அப்போ" என சந்துருவின் தோளில் அடித்தாள். "சரி குழந்தைக்கு என்ன பெயர் வச்சருக்க?" என ஆர்வமாக கேட்டான். அப்போதுதான் புரிந்தது அன்பரசிக்கு தான் பெயரைகூட கேட்கவில்லை என்று.

"பிரியா" என மலர் முடித்தாள்.

"ஓ பிரியா குட்டி வாங்க" என அந்த குழந்தையை நோக்கி தன் இருகையையும் நீட்டினான்.அது சிரித்துகொண்டே கையை நீட்டியது அவனை நோக்கி. ஆனால் அதை மடியில் வைத்திருந்த அன்பரசி சந்துருவை பார்த்து ஒரு பார்வை பார்க்க "குழந்தையை பிரிச்ச கொண்ணுடுவேன்" என்பதுபோல இருந்தது. பின் என்ன நமது ஹீரோ அந்த விபரீதத்தை மீண்டும் முயற்சிக்கவில்லை.

இருவரும் பேசிகொண்டிருக்க அன்பரசிக்கு அங்கு இருக்க மனம் விரும்பவில்லை குழந்தையை தூக்கிகொண்டு சற்று தூரம் நடக்க ஆரம்பித்திருந்தாள்.

இங்கு இருவரும் பேசிக்கொண்டே இருந்தனர். "அப்புறம் உங்க உட்பி என்ன பன்றாரு" என சந்துரு கேட்க.

"அவர் இங்க ஒரு காலேஜ்ல வேலைபாக்குறாரு...ஆமா உனக்கு எவளாவது செட் ஆனாளா?" என மலர் கேட்டாள்.

"அந்த அளவுக்கு எனக்கு கொடுப்பினை இல்லம்மா" என சந்துரு சிரித்தான்.

"சந்துரு நான் ஒன்னு கேட்கவா ?" என மலர் தயங்கினாள். "ஏய் என்கிட்ட என்ன தயக்கம் சும்மா கேளு" என திறந்துவிட்டான்.

"இல்ல அன்பரசியை...." என நிறுத்தினாள்.

"அன்பரசியை?!"

"சரிவிடு அது எதுக்கு " என கத்திரிபோட்டாள். சந்துருவும் எதுவும் கேட்கவேண்டாம் என்று நினைத்துகொண்டான். ஆனாலும் அந்த பந்தம் அவனை கேட்க வைத்தது.

"அன்புக்கு என்ன பிரச்சனை ஏன் கவலையாவே இருக்கா?" என சந்துரு கேட்டான். "லவ் பன்னாபோல இருக்கு அதான் மனசுகுள்ளேயே வச்சு கஷ்டபடுறா"

"இன்னும் லவ் பன்றாளா?"

"ஆமா அப்படிதான் தெரியுது ஆனா அவங்க அப்பாவைபத்திதான் தெரியுமே" என மலர் முடித்தாள்.

அந்த நேரம் அந்த இருசக்கர வாகனத்தில் இருவர் வந்தனர்.

"வாம்மா மலர் எப்போ வந்த ஊர்ல இருந்து? விட்டுகாரர் சௌக்கியமா?!" என போஸ் வண்டியின் காலை சீராக்கி கொண்டே கேட்டார்.

"ம்ம் நல்லா இருக்காங்க பெரியப்பா" என மலர் சுருக்கமாக முடித்தார். போஸிடம் அதிகமாக போசமாட்டாள் மலர். அனைவரும் அப்படிதான் ஆனால் சன்முகம் மட்டும் விதிவிலக்கு.

"ஆமா ஏன் அவரு நம்ம ஊருக்கு வரமாட்டாரா... உன்னை மட்டும் அனுப்பி வச்சுருக்காரு" என போஸ் கோபமடைந்தார்.

"இல்ல பெரியப்பா கடையில் வேலை ரொம்ப அதிகம் இந்த கடை பசங்களை நம்ப முடியாது அதான் அவரே பாத்துகிறாரு அதான் வீட்டுக்கு வரவே ரொம்ப நேரம் ஆகிறும்" என மலர் வேகமாக சொல்லி முடித்தாள்.

"ம்ம்ம்" என்ற உருமலுடன் உள்ளே நுழைந்தார் போஸ் அவரின் நண்பரும் உடன் சென்றார். மலரின் கனவன் இங்க வராமல் இருப்பதற்கு போஸ்தான் காரணம் என அவருக்கு தெரியாமல் இல்லை.

"பார்வதி சாப்பாடு போடு....சண்முகம் எங்க சந்துருவையும் வரசொல்... அன்பரசி வா வந்து சாப்பிடு மலரையும் கூட்டி வா" என்று குரல் காற்றை துளைத்தது.

அடுத்த நொடி அரக்கபறக்க அனைவரும் வந்து அங்கு ஆஜர் ஆகினர். பார்வதி அனைவருக்கும் பரிமாற அன்பரசி மலரின் குழந்தையை மடியில் வைத்துகொண்டு ஊட்டிவிட்டாள்.

சோற்றில் கை வைத்து பிசைந்துகொண்டிருந்த சந்துருவுக்கு மனதிலும் பிசைந்தது. 'என்ன அன்பரசி காதலிக்குறாளா? ஓஓ வீட்டுல சம்மதிக்கமாட்டாங்கனு பயந்துபோய் சோகமாக இருக்கா...

*சரி நாம் எப்புடி யாவது அவங்களை சேத்துவச்சிடுவோம்...எனக்கு அவள் முகத்தில் சிரிப்பு இருந்தா அதுவே போதும்... எல்லா பெண்களும் இப்படிதானா?! அப்போ சுவேதா?!" என மனதில் ஓட "சாப்பிடுங்க மாப்ள என்ன கனவுகண்டுகிட்டு இருக்கீங்க" என்ற மிலிட்டரி உத்தரவு.*

*முடிந்ததுகனவு தட்டிலிருந்து பிசைந்து வாயிலிட்டு விழுங்கினான் கனவுகளை.*

## அத்தியாயம் - 6

*சாப்பாடு முடிந்தது. மலர் தான் வீட்டிற்கு செல்ல உத்தரவு வாங்கிகொண்டாள். பின் சிறிதுநேரம் அனைவரும் பேசிக்கொண்டிருக்க அன்பரசி மட்டும் மாணவர்களின் படைப்புகளை திருத்தும் பணியில் இயங்கிகொண்டிருந்தாள். அமைதியாக பெரியவர்கள் பேசுவதை கேட்டுகொண்டிருந்த சந்துரு. தன் கைபேசியில் வரும் சத்தங்களை அடக்க முயன்றான். ஆனால் அதில் பல தகவல்கள் வந்த வண்ணம் இருந்தன.*

*"அப்பா நான் ரூம்க்கு போறேன்" என எழுந்து செல்ல "நல்லா தூங்குங்க மாப்பிள்ளை எதாவது வேணும்னா அத்தை கிட்ட*

கேளுங்க இல்லை அன்பரசி கிட்ட கேளுங்க" என கூறிவிட்டு மீண்டும் பட்டிமன்றத்தில் உறுப்பினராக மாறினார்.

உள்ளே நுழையும்போது ஒரு சிறு அறையில் அமர்ந்துகொண்டு அந்த நோட்டுகளை திருத்திகொண்டிருந்ததை பார்த்தான். அவளும் அவனை கவனிக்காமல் இல்லை.

'எப்படியும் ஊமையாக தான் இருக்கபோகிறாள்... ஏன் வீன் முயற்சி" என நினைத்துகொண்டு தன் அறையை நோக்கி நடந்தான்.

அவளும் அவனை கண்டுகொள்ளாமல் இருந்தால் தன் வேலையில் மும்முரமாக இயங்கிகொண்டிருந்தாள். அமைதியாக சென்று கட்டிலில் சாய்ந்தான். கண்களில் தூக்கம் வருவது என்பது சந்துருவுக்கு சற்று அரிதான காரியம்தான். இன்று இடமும் புதுமை என்பதால் மேலும் சிரமமாக இருந்தது. ஒரு தனிமையை அவனால் உணரமுடிந்தது. அதை போக்க தன் கைபேசியை எடுத்தான்.

அதில் வாட்ஸ்அப் எனும் செயலி பரபரப்பாக இயங்கிகொண்டிருந்தது. அதில் தனது கல்லூரி தோழர்களின் ஒரு குழுமம் இருக்க அதில் நுழைந்தான். ஒருவரை ஒருவர் தங்களின் நகைசுவை திறமையால் விரட்டிகொண்டிருக்க அவற்றை வரிசையாக வாசித்துவந்தவனுக்கு அவர்கள் அருகில் இருப்பதாய் ஒரு உணர்வு ஏற்படவே இதழில் புன்னகை சிந்தினான். இவனுது வருகையையும் சிலர் கண்டறிந்துவிட்டனர் துப்பறிவாளர்கள் போல. அடுத்த

தாக்குதல் இவனை நோக்கி இருக்கும் என இவன் சிறிதும் எதிர்பார்க்கவில்லை.

'சந்துரு வந்துட்டாரு' என ஒருவன் தண்டோரா போட அடுத்ததாக வந்தவைகள்.

'என்ன மாப்ள தங்கச்சிய பாத்தியா'

'எப்போடா கல்யானம்'

'சொல்லி அனுப்புடா'

'எதாவது பேசுடா' தன் அணியில் பலம் குறைவு என்பதை உணர்ந்தான். உண்மையை சொல்ல வேண்டும் என்றால் தன் அணியில் தான் மட்டும்தான் இருக்கிறான் என்பதை உணர்ந்தான். மொத்த தோழர்களும் தோழிகளும் எதிர்புறத்தில் இருந்தனர்.

'டேய் அப்படி நீங்க கற்பனை பன்றமாதிரியெல்லாம் இங்க எதுவும் நடக்கலைடா அவ முன்மாதிரி இல்லை' என பதிவேற்றினான்.

'ஓஓ அப்படியா'

'அச்சோடா'

"சோ ஷேட்' என சில குறந்தகவல்களுக்கு பிறகு சில பொம்மைகளும் வந்து அவனை கலாய்த்தன. பின் மெதுவாக சமாளித்து வேறு ஒருவனை கோர்த்து விட்டான். ஊசியில் நூலை ஏற்றுவது போல.

சிரித்துகொண்டே வெளியே வர அந்த தகவலை அவன் எதிர்பார்த்திருக்கவில்லை. அதன் சொந்தக்காரி சுவேதா.

'எப்படி இருக்க?' என இருந்தது.

'இவன் ம்ம்' என அனுப்பவே உடனே இரண்டு நீல மை திருத்தங்கள் விழுந்தன.

'அந்த பொண்ணு என்ன சொல்லுச்சு'

'அது எதுக்கு உனக்கு... தேவையில்லாம எதுவும் பேசாத சரியா' என பின்னாலயே இரண்டு கோபமுகங்களை அனுப்பினான். அடுத்த நொடி தாமதிக்காமல் சுவேதா இனையத்திலிருந்து வெளியேறியிருந்தாள். ஆனால் அவளது கண்கள் குலமாகியிருக்கும் என்பதை நினைக்கும்போது சந்துருவின் கண்களும் லேசாக

கலங்கியது. பல சிந்தனைகளை மனதிற்குள் படமென ஓட்டியவன் அப்படியே உறங்கிபோனான்.

சிறிதுநேரத்தில் உள்ளே வந்தாள் அன்பரசி. அவள் வந்திருப்பது "யேய் போய் மாப்பிள்ளைகிட்ட இந்த போர்வையை கொடுத்துட்டு வா" என்ற கட்டளையினால்தான். ஆனால் அவள் உள்ளே வந்திருக்க அவன் உறங்கியிருந்தான் ஓர் குழந்தைபோல. அவனது காதில் ஒலி தினிப்பான் இருந்தது அதன் ஒலி இவளாலும் கேட்க முடிந்தது ஆங்கில சோகபாடல்கள். மார்பில் குழந்தையை சுமப்பது போல தனது கைபேசியை கிடத்தியிருந்தான்.

அவனது முகத்தை அப்போதுதான் முழுமையாக ரசித்தாள் அவள். தாய்மைகுனம் இயல்பிலேயே கொண்டவள் என்பதால் வயதுவித்தியாசம் இல்லாமல் எந்த குழந்தையானாலும் சேவைசெய்துவிடுவாள் அன்பால். இவனது நிலையும் இதுவே. காதில் இருந்த ஒலி ராட்சசன்களை அவிழ்த்தவள் கைபேசியையும் எடுத்து அருகில் இருந்து மேஜையில் வைத்தாள். பின் தான் கொண்டுவந்திருந்த போர்வையை போர்த்தி விட அவன் அதை கட்டியணைத்து கொண்டு ஒருபுறமாக திரும்பி தூங்கினான். அதை பார்த்து லேசாக புன்னகை சிந்தியவள் அங்கிருந்து செல்லும்போது அந்த டைரி மீண்டும்கண்ணில் சிக்கியது. ஆனாலும் அதை படிக்க மனம் விரும்பிவில்லை. சென்றுவிட்டாள்.

இருவேறு துருவங்களாய் இருந்த இருவரின் கனவுகளும் காதல் கோட்டையில் பயனித்தன அந்த நடு இரவில் கனவாக...

காலைகதிரவனின் பனி செவ்வனே நிறைவேற்றி கொண்டிருந்தது. அந்த வீட்டின் குளியலறையை ஆக்ககிரமித்திருந்தான் சந்துரு. ஆனால் அவன் ஆக்கிரமித்திருப்பது அன்பரசியின் நேரத்தை என்று அவன் உணரவில்லை. அவளும் தனக்கான துணிகளை எடுத்துகொண்டு காத்திருந்தாள். ஆனால் அவன் பாடல்களை பாடிகொண்டிருந்தான். மன்னிக்கவும் பாடி கொன்று கொண்டிருந்தான். எதுவும் கூறமுடியாமல் காத்திருந்தாள்.

ஆனால் காலம் காத்திருக்கவில்லை. வீட்டிலிருந்த அந்த கடிகாரம் அன்பரசியின் வயிற்றுக்கு அன்னமிடும் நேரம் என காட்டிகொண்டிருந்தது. முகத்தில் சிறு சளனத்துடன் நின்றிருந்தாள். அப்போது அங்கு வந்த சன்முகம்.

"ஏன்மா என்னா ஆச்சு"

"ஒன்றுமில்லை மாமா ஸ்கூல்க்கு லேட் ஆச்சு" என கூறவே அவனது செயலை உணர்ந்ததார் ஆனால் அவள் மாமா என்று கூறியது சன்முகத்திற்கு ஆனந்தம் அளித்தது.

"டேய் சந்துரு சீக்ககிரம் வெளியே வாடா அன்பரிசி வேலைக்கு போனும் லேட் ஆகுது பாரு" என தன் மகனை கடிந்து கொண்டார்.

"ஏய் கழுத அதான் ஐந்து மணிக்கெல்லாம் எழுந்துடுறேல்ல அப்போவே குளிக்க வேண்டியதுதான..எப்பபாத்ததாலும் புத்தகத்தை பிடிச்சுகிட்டு உட்காந்துடுற" என பார்வதி தன்மகளின்மீது சீற அன்பரசியின் முகம் வாட்டம் கண்டது.

"ஐயோ சாரி டாட் நான் நம்ம வீட்டுல இருக்குற மாதிரி நினைச்சுட்டேன்" என சிறிது நிமிடங்களில் வெளியேறினான். அவளது கண்களை பார்த்தை "ஸாரி" என்பதை போல் சைகை செய்தான் ஆனால் அவள் அவனை பார்க்கக்கூட இல்லை.

பச்சைநிற சேலை அணிந்து மிக அழகாக வெளியே வந்தாள். வேகவேகமாக பின்னல் போட்டு கொண்டவள் வீட்டினுள் நுழைய அனைவரும் சாப்பிட அமர்ந்திருந்தனர். "நீயும் உட்காரும்மா" என தன் மருமகளிடம் கூறினார் சன்முகம்.

"இல்ல மாமா பஸ் வந்திடும் இப்போவே லேட் ஆகிருச்சு " என அந்த அலுமினிய டிபனில் மூன்று இட்லிகளை நிரப்பினாள்.

"எனமா மூனு போதுமா இப்படி சாப்பிட்டுதான் இப்புடி ஒல்லியா இருக்க" என சன்முகம் கூற "அவ அவ்வளவுதான் சாப்பிடுவாள் அன்னே" என பார்வதி கூற அந்த டிபனை தன் கைப்பையில் வைத்தார்.

அவள் சாப்பிடாமல் செல்வது சன்முகத்திற்கு மனதில் உறுத்தவே"ஒரு நிமிடம் நில்லுமா" திரும்பி பார்த்தாள்.

"நீ உட்காரு முதல்ல சாப்பிடு " என கூறவே "இல்ல மாமா பஸ்.." என்று மெதுவாக கூறினாள். "சந்துரு உன்னை கார்ல இறக்கிவிடுவான் நீ பொறுமையா சாப்பிட்டு போ" என சன்முகம் வற்புறுத்தினார். "அதான் மாமா சொல்றாங்கல்ல உட்காருடி" என தாயின் அதட்டல் அவளை அமரசெய்தது.

அதன்பின் நான்காவதாக ஒரு இட்லியை சாப்பிடவைக்க சன்முகம் பல போர் யுக்திகளை கையாளவேண்டியிருந்தது. இறுதியாக சாப்பிட்டவுடன் காரின் அருகே சென்று நின்று கொண்டான் சந்துரு.

அவளும் வரவே கார் தனது சக்கரங்களை சுழற்றி கொண்டு கிளம்பியது. சந்துருவின் வாயும் சுழல துவங்கியது.

"ஏன் அன்பரசி என்னை பார்த்தா பயமா இருக்கா?!" என்ற அவனது கேள்விக்கு தலையை குனிந்தே இருந்தாள். "கொஞ்சம் வாய் திறந்து பேசுறியா" என சளித்துகொண்டான்.

அவனது கண்களை நேருக்கு நேராக பார்த்தாள். காரின் சக்கரம் ஒரு பள்ளத்தில் ஏறி இறங்கியது. அவளின் தைரியம் மீண்டும் கானாமல் போனது.

"ச்ச்" என சலித்துகொணடவன். "அப்போ நாங்க உங்க வீட்டுல தங்கியிருக்குறது உனக்கு பிடிக்கலை. சரி இன்னைக்கு சாயங்காலம் நீ வரும்போது நாங்க இருக்கமாட்டோம் திருப்தியா" என வேகமாக கூறிவிட்டு ரோட்டில் கவனம் செலுத்தினான். அவள் பதறிகொண்டு அவனை பார்த்தாள்.

"இந்த பார்வைக்கு என்ன அர்த்தம்?!" என்றான். "இல்ல நீங்க வெளியே தங்குறேன்னு சொன்னீங்கல்ல.. அப்படிலாம் பன்னிடாதீங்க" என கூறிவிட்டு முகத்தை சோகமாக்கினாள்.

"ஏய் அன்பு நான் சும்மா சொன்னேன். இங்க பாரு நான் ஒரு ஓட்டை வாய். நான் பேசாம ஒரு பத்துநிமிடம் இருந்தால்கூட செத்துபோயிடுவேன். அதுமாதிரி மனசுகுள்ளேயும் எதுவும் வச்சுக்கமாட்டேன்... ஆனா நீ என்கூட பேசவே தயங்குற அதான் அப்படி நினைச்சேன்"

"இல்லைங்க நான் கொஞ்சம் சை டைப் " என அவள் கூற சிரித்தவன் "சை டைப்பா " அதுக்கு அர்த்தம் தெரியுமா என லேசாக சிரித்தான்.

அவள் புரியாமல் விழித்தாள்.

"சரி அதைவிடு உனக்கு என்ன பிரச்சனை ஏன் இப்படி எதையோ மனசுக்குள்ள வச்சுகிட்டு கஷ்டபடுற" என கேட்டான்.

"அப்படியெல்லாம் ஒன்னும் இல்லையே" என சமாளித்தாள். ஆனால் யாரும் கேட்காத கேள்வி அவளது அடிமனதை வருடியிருந்தது. தேன்கூடாய் இருந்த நினைவுகள் கலைந்து இதயத்தில் கொட்ட கண்ணில் நீர்த்துளிகள் வந்து நின்றன. சற்று குழப்பத்துடன் அவளது கண்ணீரை பார்த்தவன் அதிர்ச்சியானான்.

"ஏய் என்ன ஆச்சு அன்பு?" என்ற கேள்விக்கு "காதல்னா என்னனு தெரியுமா?" என்று அவளது வாயிலிருந்து வார்த்தைகள் பூவியை துளைத்து வரும் இளம் பனிபுற்கள் போல வந்துவிழும் என அவன் நினைத்திருக்கவில்லை.

அதிர்ச்சி தொடர கால்கள் தடைகட்டையை அழுத்த கார் இய்க்கவேகத்தை நிறுத்தியது. கண்ணீரை துடைத்துகொண்டு அந்த பாவை பள்ளியை நோக்கி நடக்கதுவங்கியிருந்தாள்.

## அத்தியாயம் - 7

'என்ன காதலா? காதலை பற்றி எனக்கு என்ன தெரியுமாவா?' என மனதில் எதிரொலிகளை அலைபாய விட்டிருந்தான்.
அதற்குள்ளாகவே பின்னால் வந்த மணல் லாரி தன் பலத்த ஒலியால் அவனது மனதை வெளுத்தது. "ஒரு நிமிடம்" என கையால் சைகை

செய்தவன் தனது மகிழுந்தை திருப்பிகொண்டு தன் பாதையை நோக்கி விரைய அந்த லாரி இடைஞ்சலான சாலைக்குள் நீந்தி சென்றது.

வீட்டிற்கு சென்று காரை நிறுத்திவிட்டு மயிலிறகைபோன்ற சாவியின் துனையை சுழற்றிகொண்டே நுழைந்தான். "என்ன மாப்ள எதாவது வாய் திறந்தாளா?" என பார்வதி கேட்டாள். "இல்லை அத்த ஆனால் ஏதோ ஒரு பெரிய சம்பவம் நடந்துருக்கு" என கூறிவிட்டு தன் தந்தையின் வருகைக்காக காத்திருந்தான்.

"அன்பு கொஞ்சம் என் கிளாஸை கவனிச்சுகிறியா?!" என இந்திரா மிஸ் உள்ளே நுழைந்தாள். ஆனால் அன்பரசியின் கண்ணீர் கைக்குட்டையால் உறிஞ்சபட்டுகொண்டிருந்தது. அதை பார்த்து திகைத்தார். 'என்ன இவள் அழுகிறாளா?' என்ற அதிர்ச்சி அவளுக்கு.

"அன்பு என்ன ஆச்சு" அக்கறையுடன் கேட்டார்.

"ஒன்னும் இல்லையே லேசாக தலைவலி" என கூறும்போதே கண்ணீர் தாரை தாரையாக வடிந்தது.

இவளிடம் கேட்டாலும் கூறமாட்டாள். தன் கஷ்டத்தால் அடுத்தவர் பாதிக்கபடகூடாது என நினைக்கும் ஓர் உள்ளம் என நினைத்துகொண்டு இந்திரா மிஸ் "சரி அன்பு நீ ரெஸ்ட் எடு உன் கிளாஸையும் நான் கவனிச்சுகிறேன்" என கிளம்பினார்.

தனது மேஜையின் மீது கன்னங்களை தலையனையாய் வைத்தவளின் கண்ணீரை புவியீர்ப்பு விசை ஆக்கிரமித்தது. மேஜையும் அதை சேகரிக்க தவறவில்லை.

"உன்னால முடியாதுடி உனக்கு அவ்வளவு தைரியம் இருக்கா?" ; "போடி எனக்கா தைரியம் இல்லை இன்னைக்கு பாருடி" இது சங்கீதா மற்றும் சிந்துஜாவின் சண்டை.

சங்கீதாவை ராஜேஷிடம் காதலை கூறவைக்கும் இரண்டு மா வேலையை செய்து கொண்டிருந்தாள். அதில் மௌடிக்கு அடங்கிய பாம்பாக சங்கீதா சிக்குண்டாள். இறுதியில் சங்கீதாவின் கையில் அந்த வெள்ளை காகிதம் நீல மைகளால் சில எழுத்துகளை துப்பி ராஜேஷின் வருகைக்காக காத்திருந்தது. அவனும் வந்தான். இரண்டு தோழிகளும் காத்துகொண்டிருக்க உலகமே அழிந்தாலும் சரி என்வேலைதான் முக்கியம் என காதில் ஹெட்போன்களை அணிந்து அந்த வகுப்பில் உட்காரந்திருந்தாள் அன்பரசி வாயை குறைக்க அடுத்தவர் பேசுவதை கேட்காமல் இருக்கவேண்டும் என் யுக்தி அது.

"ராஜேஷ் உன்கிட்ட இவ ஏதோ போசனுமாம்" என சங்கீதாவை கேடயமாக முன்நிறுத்தினாள். அவன் சலனமே இல்லாமல் "என்னப்பா சொல்லனும் " என சங்கிதாவை விழியிலிருந்து விழியென பார்த்தான். அவள் தயங்கினாள்.

"அடி போடி " என சங்கீதாவின் தலையில் தட்டிய சிந்து "இவ உன்னை லவ் பன்றாளாம் இந்த லட்டர்" என அவளிடமிருந்த

லட்டரை பிடுங்கி அவனிடம் கொடுத்தாள். சிரித்துகொண்டே அதை வாங்கியவன் "என்ன சங்கீதா மேடம் கொஞ்சம் லேட்டா வந்துட்டீங்களே. நான் ஏற்கனவை என் இதயத்தை ரிசர்வ் பன்னி வச்சுட்டேன்" என கூற இருவரும் பேயறைந்தது போல நின்றனர்.

"என்னப்பா சொல்ற" என சிந்து தொடர்ந்தாள். "யாரு" என சங்கீதா கேட்டாள். "இங்க அன்பான ராட்சசி யாரு " என அவன் கேட்க இருவரும் ராட்சசி என்ற சொல்லை பிடித்துக்கொண்டார். அடுத்த செயலாக அன்பரசியை திரும்பிபார்க்க அவளோ தலையை நவரசத்தையும் காட்டி அசைத்துகொண்டிருந்தாள் விழிகளை மூடிகொண்டு.

"செம்ம செலக்சன் அண்ணா உங்க லைஃப் உருப்புட்ட மாதிரிதான் " என வாழ்த்து தெரிவித்து விட்டு சிந்து அங்கிருந்து அகன்றாள். ஆனால் கோபமாக இருந்த சங்கீதா அன்பரசியின் அருகில் வந்து அவளது ஹெட்ஃபோன்களை எடுத்து தரையில் வீசினாள். அய்யோ சிங்கத்தின் பிடரியை பிடித்துவிட்டாள். என வகுப்பில் இருந்த அனைவரும் அடுத்த நிகழ்வை எதிர்பார்த்து காத்திருந்தனர்.

அன்பரசியின் கண்களில் அனல் பறக்க எழுந்த நின்று சங்கீதாவை அறைய கையை ஓங்கினாள். அதற்குள் அவளது கையை பிடித்த சங்கீதா "ஹாப்பியா இருடி ராஜேஷ் உன்னைத்தான் லவ் பன்றானாம் கங்ராஜிலேசன்" என அங்கிருந்து ஓடினாள். அதற்குள்ளாக இரும்பு நிலைகதவில் பூதம் குகையை காப்பது போல நின்றிருந்த ராஜேஷின் மீது கோபம் திரும்பியது.

'எப்படியும் வந்து ஒரு அறை கொடுக்க போகிறாள். இதுதான் சரியான தருணம் ஒரு அறை வாங்கினாலும் பரவாயில்லை. லவ்வ சொல்லிட வேண்டியதுதான். நிலைமை 144 ஐ மிறிருச்சுனா முத்தத்தை கொடுத்து சமாதானம் பன்னிட வேண்டியதுதான்' என தயாராக நின்றிருந்தான். அவளும் வேகமாக எழுந்து அவனிடம் நெருங்கினாள்.

பயத்தில் தன் இருகன்னங்களின் மீதும் கைகளை வைத்துகொண்டான். ஆனால் அவளின் வேகம் குறையவில்லை. அனைவரும் ஆவலாக காத்திருந்தனர்.

"ராஜேஷ் நம்ம காலேஜ் பங்கசனுக்கு லோகோ டிசைன் பன்னனும்" என கையில் ஒரு நோட்டை வைத்துகொண்டு ராதாகிருஷ்ணன் சார் வந்து நின்றார். அன்பரசி மட்டையால் அடித்த பந்தைபோல் திரும்பவும் தன் இடத்தில் வந்து அமர்ந்தாள். ஆனால் அவளது நிம்மதியை கெடுத்தவன் தனது வகுப்பு ஆசிரியருடன் சென்றுவிட்டான். கோபத்தில் மேஜையின் மீது ஓங்கி குத்தினாள். பாவம் எந்த செயலுக்கும் எதிர்செயல் உண்டு என அறியாதவள் சிறிது நேரத்தில் கைகளை உதறிகொண்டு வாயால் காற்றை ஊதினாள். கைகள் சிவந்திருந்தன.

அந்த செயல் அனைவருக்கும் சிரிப்பை ஏற்படுத்தியிருந்தது. இந்த வகுப்பின் சார்லி சாப்ளின் ஹிட்லர் இருண்டுமே இந்த அன்பான ராட்சசிதான்.

"நீ வாடா உன்னை வச்சுகிறேன்" என சிவந்த கைகளை பார்த்து கூறியவள் "இப்ப என்னடி இங்க என்ன காமெடி படமா காட்டிகிட்டு இருக்கேன்" என்ற சத்தம் மென்மையான தொண்டையிலிருந்து வெளிபடவே அனைவரும் அணுகுண்டு வெடிக்க போவதை உணர்ந்து அமைதியாகினர்.

"டீச்சர் சஞ்சீவ் கார்த்தியோட மண்டையை உடைச்சுட்டான்" என ஒரு பொடியன் வந்து அன்பரசி யின் முன் வந்து நின்றான். உடனை கண்களை துடைத்துகொண்டே நடந்து இல்லை விரைந்து சென்றாள்.

அங்கு ஆயுதப்படை தலைவன் ஏதோ சாதித்து போல பெருமையாக நிற்க கார்த்தியின் தலையில் சிறிய வெட்டு அதில் ரத்தம் வடிந்துகொண்டிருந்தது.அது சஞ்சீவின் கைஙரும்பலகையின் முத்தம் என அன்பரசிக்கு நன்றாக தெரியும். உடற்கல்வி ஆசிரியர் வந்து கார்த்தியை அழைத்துசென்று முதலுதவி செய்தார்.

"இங்க வாடா "என சும்மா பயமுறுத்த கையில் பிரம்பை எடுத்துகொண்டு நின்றாள் அன்பரசி.

தன் அரைகால் டவுசர் பையில் கைகளைவிட்டுகொண்டு ஓர் கதாநாயகன் போல நின்றான் சஞ்சீவ்.

"ஏன்டா அவனை அடிச்ச " என முதல்கட்ட விசாரணையை துவங்கினாள். ஆனால் அவன் அளிக்கும் பதில்தான் இந்த சம்பத்தின் முதலும் கடைசியுமான மூலகாரணம் என அன்பரசி அறிந்திருக்கவில்லை

## அத்தியாயம் - 8

"அவனை ஏன்டா அடிச்ச" என கேள்வியுடன் கையில் பிரம்புடன் நின்றாள் அன்பரசி. "லவ்வுக்காக மிஸ்" என்றான் சிறிதும் சலனமில்லாமல். இந்த காரணத்தை சிறிதும் எதிர்பார்த்திராத அன்பரசி புரியாமல் "என்ன?" என்றாள்.

"லவ்வு காதல் மிஸ். நீங்க பன்னதில்லியா?" என எதிர்கேள்விகேட்டான். அன்பரசிக்கோ தூக்கிவாரிப்போட்டது. ஓர் இரண்டாம் வகுப்பு சிறுவன் தமிழ் முதல் எழுத்துகளை அறிய வேண்டிய வயதில் முற்றும் துறந்தவர்களக்கும் புரியாத காரணியை பற்றி பேசுகிறானே என திகைப்பிலிருந்தது வெளியே வரவில்லை.

"லவ்வுனா உங்களுக்கு தெரியாதா?" என காலையில் தான் கேட்ட கேள்வியை திரும்பவும் கேட்டான் முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும் என்ற வள்ளுவன் கூற்றை மிக எளிதில் நிறைவேற்றிவிட்டான்.

"என்னமா என்ன சொல்றான்?" என தலைமை ஆசிரியர்வந்து பின்னால் நிற்க "இல்ல மேடம் இவன் ஓடி வரும்போது அவன் குறுக்க வந்துட்டான் அதான் கையிலிருந்த சிலேட் இடிச்சிடுச்சாம்" என சமாளித்துவிட்டாள். சஞ்சீவ் எவ்வளவு தவறு செய்தாலும் தண்டிக்க மனம் வருவதில்லை அன்பான ராட்சசிக்கு. மற்ற குழந்தைகளுடனும் இதே நிலைதான் என்றாலும் இவனுடன் ஓர் இனம்புரியாத ஈர்ப்பு இருந்தே வந்துள்ளது. அதன் காரணத்தையும் இவள் அறியாமல் இல்லை.

சன்முகம் வந்தார். "சந்துரு அந்த பார்ட்டிகிட்ட உங்க மாமா பேசிட்டாரு எல்லாம் ஓகேதான் அந்த இருபது C மட்டும் டிரான்ஸ்ஃபர் பன்னிடு நமக்கு வேலை முடிச்சிடுச்சு" என முகத்தில் எந்த மாற்றமும் இல்லாமல் கூறினார்.

அருகில் இருந்த போஸை பார்த்தான். "ரொம்ப த்தாங்கஸ் மாமா" என்றான். "நன்றி எல்லாம் ஏன் மாப்ள உங்க அப்பன் பன்னாத ஹெல்ப்பா நான் பன்னேன்" என மறுத்தாலும் சந்துருவின் மனதில் அவருக்கு ஒரு கோட்டையே கட்டியிருந்தான். பின்ன இரண்டு மாதமாக அலைபேசியின் வாயிலாகவே இழுத்துகொண்டிருந்த ஓர் பிரட்சனையை தான் வராமலேயே முடித்திருந்தார். அதிலும் ஒரு வாரம் ஆகும் என நினைத்திருந்த பட்டியலையும் தீயிட்டு எரித்துவிட்டார் அவரது மக்கள் செல்வாக்கு உணர்ந்துவிட்டது சந்துருவுக்கு.

ஆனாலும் சந்துருவுக்கு ஓர் கவலை அன்பரசி தன்னிடம் ஒரு வார்த்தைகூட மனம்விட்டு பேசவில்லை என்றுதான். ஆனாலும் ஒன்று மட்டும் சந்துருவின் மனதில் உதயமாகியது. அது 'வேலை முடிந்துவிட்டது. கிளம்பாலாம்' என்பதே அதற்குள் சன்முகம் "சரிடா நாங்க கிளம்புறோம் இன்னொருநாள் வாரோம்" என கூறியதும் சந்துரு தான்நினைத்தது சரி என முடிவுக்கு வந்தான்.

"டேய் மிலிட்டரில கொடுத்த கைத்துப்பாக்கி இன்னும் பிரோலதான் உறங்கிகிட்டு இருக்க இன்னொரு தடவை போறதபத்தி பேசுன அப்புறம் ஒரே அடியா அனுப்பி வச்சுடுவேன்" என சிரித்தார் போஸ்.

"உனக்கு எப்பவுமே விளையாட்டுதானாடா. அதான் வேலை முடிஞ்சுடுச்சே உங்களுக்கு ஏன் தொந்தரவு " என சன்முகம் கூற. தன் மாமன் எப்படியும் அதற்கு அனுமதிக்க மாட்டார் என நன்கு உணர்ந்துகொண்ட சந்துரு "ஆமா மாமா அன்பு கூட நான் இருந்தா கில்டியா பீல் பன்றானு நினைக்குறேன்" என தன் பங்குக்கு இரண்டு படத்தை காட்டினான்.

"அந்த கழுத என்ன பீல் பன்னா உங்களுக்கு என்ன மாப்ள. நீங்க இங்கதான் இருக்கனும் இன்னும் ஒரு வாரத்துக்கு" என ஆணிதரமாக கூறினார்.

"ஏன் மாமா " என சந்துரு விடையில்லாத கேள்வியை கேட்கவே அதற்கும் தகுந்த விடை அளித்தார் போஸ். "அது நாளைக்கு தெரியும் மாப்ள" என வீட்டினுள் நுழைந்தார். பின் தோழர்கள் இருவரும்

ஹிட்லருக்கே சவால் விடும் அளவுக்கு போர் தந்திரங்களை பற்றி பேசிகொள்ள ஆரம்பித்தனர். சந்துருவோ சதுரங்க பலகையில் வீரர்களை அடுக்கி கொண்டிருந்தான் அதே தவறுடன்.

"என்னடி புது மொபைலா? " என அன்பரசி யின் பையில் சாப்பாட்டுக்காக கைவிட்டபோது சிக்கியது அந்த பிறந்தநாள் பரிசு. தனது காக்கை உணவையும் மற்றவர்களுக்கு கொடுத்து விடுவது அன்பின் இயல்பு. "ஆமா இந்திரா" என அன்பரசி பதில் அளிக்க "ஏதுடி இது" என அடுத்தகேள்விகளை அந்த சிலிகான் மங்கையை தடவிக்கொண்டே கேட்டாள் இந்திரா.

"அது பிறந்தநாள் கிப்ட்டுடி" என அவளை எந்த உணர்ச்சியும் இல்லாமல் நிமிர்ந்து பார்த்தாள்.

"ஹேய் யாருடி கொடுத்தா" என நக்கலான கேள்வி வரும் என அனைவரும் அறிந்ததே. ஆனால் அந்த கேள்விக்கு அன்பரசியால் பதில் சொல்ல முடியவில்லை மாறாக அவள் முகத்தில் சலனம் தெரிந்தது.

"ஏன்டி வெட்கபடுற" என இந்திரா மேலும் வம்புக்கு இழுக்கவே "நான் எங்கடி வெட்கபடுறேன்" என மழலைகுரல் போல குழைந்து பேசினாள்.

"அப்போ சொல்லு இது யாரு வாங்கிகொடுத்தது." என மீண்டும் முயற்சித்தாள். அடுத்தவரின் அந்தரங்க வாழ்வை அறிவதில்

அவளுக்கு ஓர் அலாதியான இன்பம். போனமாதம் கல்யாணம் முடிந்து சென்ற மாலதி டீச்சர் இந்திராவிடம் பட்டபாடு அன்பரசி அறியாமல் இல்லை.

"காலையில என்னை ஒருத்தர் இறக்கிவிட்டாருல அவருதான்" என அன்பரசி குலைந்தாள். "ஓ அந்த அளவுக்கு வந்துருச்சா" என இந்திரா ஓர கண்ணால் பார்த்தாள்.

"ஏய் நீ நினைக்குறமாதிரிலாம் இல்லடி" என சமாளிக்க பார்த்தாள். "பின்ன எப்புடி" என கேட் போடப்பட்டது. "அவரு எங்க அப்பாவோட ஃப்ரன்ட் மகன் " என ஒரு வழியாக கூறிவிட்டாள். ஆனாலும் புயல் ஓயவில்லை. "அவரு உனக்கு என்ன வேணும்?" இறுதியாக சிகப்பு காயின் குழியில் விழுந்துவிட்டது "அவரு என் மாமா" என அன்பரசி என்ற பெயருடன். இந்திராவுக்கு பாக்கெட்.

"ஏய் நீ கலக்குடி " என அன்பரசியின் இடுப்பில் குத்தினாள் அவள் நெளிந்தாள். "என்னடி ஒரு வாட்ஸ்அப் கூட இல்லை" என கூறிவிட்டு அதற்கான செயலில் ஈடுபட்டார்.

"ம்ம் யாரு நம்பர் எல்லாம் இருக்கு?" என தேடிய இந்திராவுக்கு அதில் இருந்த ஒரே எண்ணான சந்துரு சிக்கினான். "யாருடி சந்துரு" என கேட்டாள் இந்திரா.

"அவருதாண்டி " என அன்பரசி முடித்தாள். "ஓ அப்படியா " என கூறியவள் 'ஹாய்' என அனுப்பினாள். மறுமுனையில் சோடாபாட்டில் மூடி சத்தம் ஒலிக்கவே தன்கையில் இருந்த டைரியை கிழே வைத்தவன் அன்பரசியின் ஹாயை பார்த்தான்.

"என்ன மேடம் கோபம் போயிருச்சா" என பதிவேற்றினான்.

"உங்க மேல எனக்கு கோபமே வராது" என அன்பரசியாக இந்திரா செயல்பட்டாள். அவளோ பேப்பர்களை திருத்த ஆரம்பித்திருந்தாள்.

"ஓ அப்போ உனக்கு நியாபகம் இருக்கா சும்மாதான் என்னை அழைய வச்சியா?" என மெஸேஜ் அனுப்பினான்.

"என்ன நியாபகம் வரனும் அதான் எதுவுமே மறக்கலையே"

"அடி பாவி அப்போ நேத்து பன்னது எல்லாம் நடிப்பா?" என்ற அவனது மெஸேஜை பாரத்தவள் "ஏய் நேத்து உன் லவ்வர்கூட என்னடி பன்ன?" என பேப்பரில் வண்ணம் தீட்டிகொண்டிருந்தவளிடம் கேட்டாள். இவள் என்ன பேசுகிறாள் என புரியாமல் விழித்தவள். அந்த கைபேசியை வாங்கி பார்த்தாள்.

"ஐயோ ஏன்டி இப்படி பன்ன?" என இந்திராவிடம் சோகமான முகத்துடன் கேட்டாள். கோபம் என்ற குனத்தை இவள்

விட்டிருப்பது அனைவருக்கும் நன்மையே செய்கிறது இல்லை என்றால் இந்திரா ஆசிரியர் கொலை அன்பரசிக்கு சிறை தண்டனை என்ற தலைப்பு செய்தியாய் வந்திருக்கும்.

அதன்பின் மொபைலை அனைத்துவிட்டாள் அன்பரசி. அவனும் எவ்வளவோ முயற்சித்தும் எந்த பலனும் இல்லை. கால் செய்தும் கஸ்டமர் கேரிடமே பேச முடிந்தது இவனாள். சற்று குழம்பிதான் போயிருந்தான்.

குழப்பத்துடன் இருந்தவனுக்கு அவளது கவிதை புத்தகம் கையில் சிக்கியது அவளது மனதை அறிந்துகொள்ள அதை புரட்டினான் அந்த கனினி முன் அமர்ந்து. எவ்வளவு நேரம் சென்றதென்றே தெரியவில்லை. அவ்வளவு உருக்கமான கவிதைகள் அவனது காலத்தை வைத்துவிட்டது என்றுதான் கூறவேண்டும் அந்த ஐன்ஸ்டைனின் கோட்பாட்டை போல.

வெளியில் அமர்ந்திருந்த போஸ் "அன்பரசி நில்லுமா " என்ற கம்பீர குரல்.

"என்னங்கப்பா?" இது தேன்குரல்.

"நீ ஸ்கூல்க்கு போக வேணாம்"

"நாளைக்கு லீவ் எடுக்க முடியாதுப்பா எக்ஸாம் இருக்கு"

"நாளைக்கு இல்ல இனி என்னைக்குமே போககூடாது" என்று அவன் கூறவும் தூக்கிவாரிபோட்டது சந்துருவுக்கு சட்டென எழுந்து வெளியே வர நினைத்தான். அதற்குள்ளாகவே "ஏன்பா?" என அன்பரசி சந்துரு இல்லாமலே அந்த நிலமையை கையான்டாள்.

"உனக்கும் சந்துருவுக்கும் நாளைக்கு நிச்சயம் இன்னும் ஒரு மாசத்துல கல்யாணம் இதுதான் என் முடிவு" என போஸ் ராணுவ கமென்டராக மாறியிருந்தார். அன்பரசியின் கண்கள் நீர் நிறைந்தன. முகம் சோகமாக மாறி துவங்கியிருந்தது. அதை மறைக்க ஓடிச்சென்று தன் பழைய கண்ணீர் நினைவு ஆலயத்தில் தஞ்சம் புகுந்தாள்.

அருகில் கனினி மேஜையில் அமர்ந்திருந்த சந்துருவை பார்க்காமல் கட்டிலின் மீது விழுந்து தலையணையை நனைக்க துவங்கினாள். ஆறுதல் கூற சந்துரு எழுந்தான். ஆனால் குற்றவாளியாய் எண்ணிய அவன் மனம் தயங்கியது.

## அத்தியாயம் - 9

கட்டிலில் மனதை திறந்து தலையணையை நனைத்துகொண்டிருந்த அந்த பாவைக்கு என்ன சொல்வது என்று தெரியாமல் விழித்துகொண்டிருந்தான்.

"அது தீடீர்னு சொன்னாங்கல்ல அதான் கொஞ்சம் வெட்கத்துல ஓடிட்டா" என பார்வதியின் குரல் கேட்கவே அது தனது தந்தையின் சந்தேக பார்வையை சுக்குநூறாக்க எடுத்த வாக்கியம் என சந்துரவால் உணர முடிந்தது. ஆனாலும் அவனது கவலை அன்பரசியின் கண்ணீர்தான். அன்பரசிக்காக உயிரையும் கொடுப்பேன் என சபதம் செய்திருந்தவனுக்கு அவளது கண்ணீர் கவலை அளிக்கும் விதமாக இருந்தது. உடனே வெளியே சென்று இந்த கல்யாணத்தில் தனக்கு விருப்பம் இல்லை என சொல்லவேண்டியது தான் என முற்பட்டான் ஆனால் சுவற்றில் மாட்டியிருந்த தனது மாமனார் போஸின் புகைப்படம் அவனை அங்கேயே சிலையாக்கியது. பீரோவில் இருக்கும் துப்பாக்கியின் பயம் இல்லை என்று எல்லாம் சொல்ல முடியாது.

அவள் குலுங்கி அழுவது தெரிந்தது. இந்த அளவுக்கு அவன் வாழ்கையில் ஒருமுறை அழுதிருந்ததாள் அவளது வலியை உணரமுடிந்தது. சட்டென எழுந்தான் அவளருகில் சென்றான்.

"அன்பரசி அன்பரசி" அவள் இன்னும் எழவில்லை.

முதுகில் கை படாதவாறு தட்டினான். "அன்பரசி அன்பரசி " மீண்டும் பதில் இல்லை. அவளது கைகளை பிடித்து திருப்பினான். அவள் மயங்கியிருந்தாள் இது மன அழுத்தத்தின் உச்சகட்ட வெளிப்பாடு என அவனால் அறிய முடிந்தது.

"அத்தை அத்தை சீக்கிரம் வாங்க அன்பரசி மயங்கிட்டா" என கூக்குரலிட அனைவரும் ஓடி வந்தனர் வேகமாக வந்த போஸ் அவளது முகத்தில் தண்ணீர் தெளிக்கவே கண்ணீர் துளியின் சாயல் மறைந்துவிட்டது. அவளை பின்னால் இருந்து பிடித்து உட்கார வைத்தார் பார்வதி.

"ஏன்டி மதியம் சாப்பிட்டையா?"

இல்லை என்பதுபோல் தலை அசைத்தாள்.

"இப்புடி சாப்பிடாம இருந்து உடம்ப கெடுத்துகிறா மாப்ள பாருங்க இன்னைக்கு மயங்கிட்டா இனிமே நீங்கதான் இவளை பத்திரமா பாத்துகனும்" என பட்டாசாக வெடிக்க சந்துருவின் இதயத்தில் அதன் சூட்டை உணர முடிந்தது.

"சரி எழுந்து வாடி வந்து எல்லாருக்கும் டீ போட்டு குடு" இது பார்வதியின் உத்தரவு.

"இல்ல அத்த அன்பு ரெஸ்ட் எடுக்கட்டும் நான் வேணா டீ பேடுறேன்" என்று கூறியவனை தன் நினைவு உலகத்திலிருந்து ராக்கெட் பிடித்து வந்து எட்டி பார்த்தாள். ஆனாலும் அது செயல்படாமல் மீண்டும் உள்ளிட்ட படவே சுவற்றில் எதையோ கூர்மையாக பாரத்துகொண்டிருந்தாள். மனதில் ஓடுவது சுவற்றில் தெரிகிறதா என்ன!

அவள் காதில் சென்றடையாத ஓசைகளாய்.

"ஏன் மாப்ள நான் பாத்துக்கிறேன்"

"நீங்க ஏன் அத்தை கஷ்டபடுறீங்க நான் டீ போடுறேன் "

"ஏன் அத்தை அப்படி பாக்குறீங்க நான் நல்லா சமைப்பேன் தீபாவளிக்கு நம்ம வீட்டு வேலைகாரங்களுக்கு என் சமையல்தான்"

"என்ன மாப்ள சொல்றீங்க"

"கொஞ்சம் தள்ளிகோங்க நான் செஞ்சு காட்டுறேன்"

அடுத்த சில நிமிடங்களில்

"ஆமா மாப்ள நல்ல வாசனையாதான் இருக்கு"

"அதுதான் சந்துரு டீ"

"சரி எங்க போறீங்க மாப்ள"

"அன்பரசிதான் பட்டினியா இருக்கா அதான் அவளுக்கு மொத கொடுத்துட்டு வாரேன் நீங்க அப்பாவுக்கும் மாமாவுக்கும் கொடுங்க"

"அப்போ உங்களுக்கு மாப்ள"

"நான் ரீஸ்க் எடுக்க விரும்பலை" என அங்கிருந்து நகர்ந்தான்.

டீயை அன்பரசியின் அருகில் வைத்தவன் தன் பையிலிருந்து சில ரொட்டி துண்டங்களை எடுத்தான்.

"அன்பரசி அன்பரசி " என கண்ணின் முன் பேருந்தை நிறுத்த சைகை செய்தான்.

சட்டென சுயநினைவுக்கு வந்தவள் இவனை திரும்பி பார்த்து எழுந்து கொள்ள முயன்றாள். "கொஞ்சம் இரு" என மெதுவாக கூறினான். அமைதியாக அமர்ந்தாள்.

"இந்தா இந்த டீயை குடி" என அவன் கூற மறுத்தாள். சந்துருவுக்கு எதிரில் டீ குடிக்க அஞ்சினாள் அதே சதுரங்க தயக்கம்.

"இதுல விசம் எல்லாம் வைக்கலம்மா நீ தைரியமா குடிக்கலாம்" என அவன் கூற 'அப்படி எதாவது இருந்தா வச்சு கொடுங்க நான் நிம்மதியா செத்துடுறேன்' என நினைத்துக்கொண்டு தேநிரை தன் கையில் மாற்றி கொண்டாள்.

"ஓ செத்துட்டா நிம்மதியா இருந்துடலாமா?" என அவன் வெளிபடுத்த இவனுக்கு எப்படி நம் மனதில் நினைத்தது தெரியும் என குழம்பினாள். அவளது பார்வையிலேயே இந்த கல்யாணத்தில் விருப்பம் இல்லை என்பது தெரிந்தது.

"இங்க பாரு அன்பு உனக்கு காதல்தான் பிரச்சனையா அது யாருன்னு சொல்லு நான் சேர்த்து வைக்கிறேன்" என ஒரு ரொட்டிதுன்டை அவள் கையில் தினித்தான். அதை அவள் வாங்கிகொண்டதாள் இந்த டீலிங்குக்கு சம்மதம் என நினைத்துகொண்டான். ஆனாலும் மௌனம் சாதித்தாள்.

"சரி விடு உன்னை எனக்குபிடிக்கலை ஏன்னா என்ன நம்பி ஒரு பொண்ணு இருக்கா " என அவன் கூறும்போதே சுவேதாவிடமிருந்து அழைப்பு வந்தது. "பாத்தியா அவதான் என்கூட பேசாம ஒரு நிமிடம் கூட இருக்கமாட்டா" என கைபேசியின் திரையை காட்ட அதில்

ஒருபெண் கையில் பூங்கொத்துடன் டீசர்ட் ஜீன்ஸ் லூஸ் கேர் என மார்டன் மகாலட்சுமியாய் நின்றிருந்தாள். இனைப்பை துண்டித்துவிட்டவன். "இப்போ சொல்லு நான் போறதுக்கு முன்னாடி உன்னை உன் லவ்வர்கூட சேத்து வச்சிட்டு போறேன் " என உறுதிமொழி அளித்தான்.

அமைதியாக எழுந்து சென்றவள் தனது சிறிய அறைக்குள் தன்னையே சிறைபடுத்திகொண்டாள். சந்துருவுக்கு என்ன செய்வது என்றே தெரியவில்லை. அவளது கண்ணில்.

"டேய் இப்போ ஏன்டா அந்த சங்கீதா கிட்ட அப்படி சொன்ன?" கண்களும் கன்னங்களும் சிவந்திருந்தன.

"என்ன சொன்னேன்" மிஸ்டர் கூல் என பதில் சொன்னாலும் உள்ளுக்குள் ரத்தவோட்டம் அதிகமாகவே இருந்தது ராஜேஷுக்கு.

"ஏய் தெரியாமாதிரி சீன் போட்ட கன்னம் பலுத்துடும் பாத்துக்க" என குரலை உயர்த்தினாள். மொத்த கேன்டினிலிருந்த காதலர்களும் சிலரும் சிலையென இவர்களின் சண்டையை பார்த்துகொண்டிருக்க. ஈக்கு என்னடா இரும்படிக்குற எடத்துல வேலை என்பதை போல அந்த கேன்டீன் சுத்தம் செய்யும் பாட்டி. சுத்தமாக காது கேட்காது. இருவரின் இடையிலும் அந்த வண்டியை தள்ளிக்கொண்டு வந்தார். அனைவரும் சிரிக்க ஆரம்பித்திருந்தனர்.

"ஏய் கிளவி உன்னை முதல்ல முதியோர் இல்லத்துல சேத்துவிடனும். ஏன்டா எக்ஸ்பையர் ஆன பொருள் எல்லாம் இங்க வச்சுருக்கீங்க" என திட்டினாள் ராட்சசி.

"சரி நான் கிளம்புறேன்" என வேகமாக நடந்தான் ராஜேஷ். "டேய் நில்லுடா உன்னை கொல்லாம விட மாட்டேன்" குரலில் சிறிது தொய்வு ஏற்பட்டது. ஆனால் அவன் காதுகேளாத பாட்டியாய் மாறி அங்கிருந்து தப்பித்துவிட்டான்.

சந்துருவின் கைபேசி பாலம் அமைக்க அந்த ஓசையில் நினைவை கலைத்தாள் ராட்சசி இப்போதைய அனபரசியாக. "ஹலோ என்னடி பிரச்சனை உனக்கு இப்ப"

மறுமுனையில் சுவேதா "மேரேஜ் பன்ன நீ வருவியா இல்லை நான் தற்கொலை பன்னிக்கவா" என துண்டிக்கப்பட்டது.

## அத்தியாயம் - 10

சுவேதாவின் வார்த்தைகள் சந்துருவின் மனதினை துளையிட நினைத்தன. ஆனால் அதற்கு தடுப்பு விதித்தான் சந்துரு. "ஏன்டி நீ

தற்கொலை பன்னிதான் சாகனும்னு விதி இருந்தா போய் சாவுடி நான் உனக்காக வருவேன்லாம் எதிர்பார்க்காத" என தனது கைபேசியிடம் கோபத்தை காட்டினான் சந்துரு. அது மெத்தையில் இதமாக மோதியதில் சந்துருவை முறைத்து பார்த்தது.

அன்பரசியோ தன் வாழ்கை எனும் ஓடையின் பயனத்தை நினைத்து வருந்தி கொண்டிருந்தாள். 'என் மனதை புரிந்துகொள்ள யாருமே இல்லையே! இல்லை இல்லை அதை புரிந்துகொள்ள ஒருவன் வந்தான் அவனையும் கை விட்டது உன் முட்டாள்தனம் நீதான் குற்றவாளி' என அவள் தரப்பு வழக்கறிஞர் அவளையே கூண்டில் ஏற்றி நிறுத்திவிட்டு சிரித்தார்.

"பார்வதி ஏய் பார்வதி" மிலிட்டரி மேனின் குரல்.

"என்னங்க" அதற்கு பதில் குரல் அளித்தாள் பார்வதி.

"நான் பணம் கொடுத்தேன்ல அதை எடுத்துட்டு வா நிச்சியத்துக்கு பொருள் வாங்கிட்டு வந்திடுறோம்" என தன் முடிவில் உறுதியாய் இருந்தார் போஸ். பீரோ திறக்கும் சத்தம் கேட்கவே பணமும் கைமாறியது ஆனால் அடுத்த அழைப்பை இந்த ஜோடி சிறிதும் எதிர்பார்த்திருக்கவில்லை.

"மாப்ளை மாப்பிள்ளை " என்ற குரல் வந்ததும் கால்கள் தானாக இயக்கத்தை துவங்கியிருந்தன. "சந்துரு சந்துரு" அடுத்து தன் தந்தையின் குரல் மூன்றாவது எட்டில் அவர்கள் முன் நின்றான்.

"அன்பு அன்பு" அன்பரசியை ஏன் அழைக்கிறார் என்ற குழப்பம் சந்துருவுக்கு. சிறிது நேரத்தில் திருமணம் நடக்கும் முன்னே ஜோடிகளாய் நின்றனர். "சரி ரெண்டு பேரும் ரெடி ஆகுங்க பொருள் எல்லாம் வாங்கிட்டு வந்திட்டலாம்" போஸ் அதிரடியாய் இயங்கினார்.

"நான் எதுக்குபா" அன்பரசி சினுங்கினாள். "அட கழுத உன்கிட்ட புது சேலை இருக்கா!? பின்ன மாப்ள வீட்டு கார்ங்ககிட்ட இப்டியா காட்டுறது" என சிரித்தார். "அட சும்மா சொன்னேன் சொந்தகார்ங்க வருவாங்கல அதான்! அம்மாவையும் கூட்டிட்டு போகலாம்" என போஸ் கூறவே " நான் வரலைங்க நெறைய வேலை கிடக்கு " என கட்டை போட்டார் பார்வதி.

"சரி சரி நாங்க பாத்துகிறோம் அதான் மாப்பிள்ளை வாரார்ல அவருக்குதான் ஃபேஷன் டெக்னாலஜி தெரியும்ல" என போஸின் வாயிலிருந்து வார்த்தைகள் தெறிக்கவே 'ஓ அதான் அவ்வளவு கட்சிதமா எனக்கு சுடிதார் எடுத்து வந்திருந்தானா?" என நினைத்தாள். "சரி மாப்ள ரெடி ஆகுங்கள்" முடிந்தது.

சிறிதுநேரத்தில் அனைவரும் காரில் இருந்தனர் அது புறப்படவே "மாப்ள நிறுத்துங்க பூ வாங்கிடலாம் "

"மாப்ள பழங்கள் "

"மாப்ள ஸ்வீட்ஸ்"

"மாப்ள."

"மாப்ள" என காரின் பிரேக்கின் முக்கியதுவத்தை அன்றுதான் உணர்ந்தான் சந்துரு. இதால் தோழர்கள் இருவரும் ஐந்து ரூபாய்பசையால் ஒட்டியதைபோல் பிரியாமலேயே இருந்தனர் காரின் பின் இருக்கையில். அன்பரசியோ முன் இருக்கையில் அமர்ந்து சாலையை வெறித்துகொண்டிருந்தாள்.

"மாப்ள என் ஃப்ரண்ட பாக்க வேண்டியிருக்கு கொஞ்சம் நேரம் ஆகும் அதுவரைக்கும் அன்பரசிகூட பேசிக்கிட்டு இருங்க " என இறங்கினார்.

"சன்முகம் நீயும் இரு நான் போய் பாத்துட்டு வந்துடுறேன்" என முதல்முறையாக தன் தோழர் வரவை எதிர்த்தார். "இல்லடா நானும் வாரேன் அவங்க தனியா பேசிகட்டும்" என இறங்கினார் சந்துருவின் தந்தை. இதனால் தன் நண்பனை மறுக்க முடியாமல் அழைத்துசென்றார்.

இருவரும் சென்றதும்

"அன்பரசி நான் ஒன்னு கேட்கலாமா?" என வாயை திறந்தான். அவளும் இவனிடம் மனம் திறக்க தயாராக இருந்தாள். மனம் திறப்பதினாள் தன் மானம் காக்கபடலாம் கல்யானம் என்ற போர்வையில் இருந்து என எண்ணினாள்.

"ம்ம்" என்ற ஓசை அந்த ஏசி காரில் எதிரொலிக்காமல் சந்துருவின் காதை அடைந்தது. "தேவதைகளை நீ பாத்துருக்கியா?" சந்துரு அந்த தேவதையின் முகத்தை பார்த்து கேட்டான்.

"நீ என்ன லூசா" என்பதைபோல் ஒரு குழப்ப பார்வை பார்த்தாள். "சரி ராட்சசிய பாத்துருக்கியா?!" இப்போது அன்பரசியின் முகத்தில் குழப்பம் தெரிந்தது.

"நான் என் பார்வையில் ராட்சசியாக தெரிந்து தேவதையாக தோன்றிய ஒரு பொண்ணை பத்தி சொல்லபோறேன்" என அவளது கண்களை பார்த்தான். என்ன இனைப்போ தெரியவில்லை அவளது கண்களும் இவனது கண்களை பார்த்தது அந்த தேவதை யார் என்று தேடுகிறாள் போல.

"டேய் இவ்வளவுதூரம்னு தெரிஞ்சிருந்தா கார்லயே வந்திருக்கலாமே ஏன் தேவை இல்லாம நடக்கனும்" என இடுப்பில் கைவைத்து நின்றார் சன்முகம். தனது தோழனின்

உடல்சோர்வைபார்த்து சிரித்த போஸ். "ஏன்டா தடியா உன்னையெல்லாம் மிலிட்டரில சேத்துவிட்டுருந்தா இப்படி பேசமாட்ட" என புன்னகை தொடர்ந்தது.

"டேய் அதுக்குன்னு இப்புடியாடா படுத்ததுவ நான் சாதாரன வியாபாரிடா என்னால இவ்வளவுதான் முடியுது" என மூச்சு வாங்கிக்கொண்டு தன் நண்பனின் அருகில் வந்து நின்றார் சன்முகம். பின் சிறிது தூரம் நடக்கவேண்டிய கட்டாயம். இறுதியாக கிடைத்த கனியென அவ்விடம் வந்தனர்.

"மணிகண்டன் கிளீனிக்" என வாசித்த சன்முகம் " ஏன்டா ஹாஸ்பிட்டல் வந்தோம்" என அதிர்ச்சியாய் கேட்டார். "ஆங்ங் இங்க ஏ குருப் ரத்தம் கேட்டாங்க அதான் உன்னை கூட்டி வந்தேன்"

"டேய் நான் ஓ டா " என உண்மையை சன்முகம் கூறவே "அதை அவங்க ஓ வா மாத்திப்பாங்க" என சிரித்துகொண்டே உள்ளே நுழைய சன்முகமும் பின்னாலயே சென்றார் ஹச் டாக் போல.

அங்கு தலையில் சில ஏக்கர்களை வைத்துகொண்டு சன்முகத்தின் வயதை ஒத்த மருத்துவர் ஆனால் சற்று பழைய கட்டிடம் மிக குறைந்த செலவில் ஏழைகளுக்கு உண்மையிலேயே உதவுகிறார் என்று தெரிந்தது. இவற்றை ஓர் ஷெர்லாக் ஹோம்ஸ் போல உள்ளிளுத்து கொண்டிருந்தார் சன்முகம்.

"வாங்க போஸ் வணக்கம்" என தன் தெய்வீக புன்னகையை வீசினார் அந்த டாக்டர்.

"வணக்கம் மணி என்ன முடிஞ்சதா" என கேட்கவே மருத்துவரோ அறையில் பார்வைபோர் தொடுத்திருந்த சன்முகத்தை பார்த்துகொண்டிருந்தார். "ஓ இதுவா சன்முகம் என் உயிர் நண்பன் அப்புறம் சம்மந்தி ஆகபோறோம் soon" என கூற "வணக்கம் சன்முகம் சார்" பதிலுக்கு வணக்கம் செய்த சன்முகம் இப்போது கவனத்தை மருத்துவர் பக்கம் திருப்பியிருந்தார்.

"ம்ம் போஸ் நீ என்னோட ஃபிரண்ட் அதனால உண்மையை என்னால மறைக்கமுடியலை மத்தவங்கனா அவங்கள வச்சு பணம் பாப்பாங்க ஆனா என் மனசு அதுக்கு இடம் கொடுக்கலை என்னை மன்னிச்சுடு" என மருத்துவரின் முகம் சோகமாக மாறியது.

போஸோ சிரித்துகொண்டே "அதான் நான்தான் அப்போவே சொன்னேனே நீதான் மனசு கேக்கலைடா ஒருதடவை பாக்கலாம்னு சொன்ன அதான் ரத்தம் டெஸ்ட் பன்ன கொடுத்தேன்" என சிரித்தார்.

இவர்களின் மர்ம பேச்சை கேட்டுகொண்டிருந்தத சன்முகம் "என்னடா பிரட்சனை " என போஸின் காதில் கிசுகிசுத்தார். ஆனால் அந்த அறை ரகசியம் பேசுவதற்கு சகல வசதிகளும் கொண்டதல்ல.

"ஓ அதுவா சார் அவருக்கு பிளட் கேன்சர் இருக்கு இன்னும் இரண்டு வருடம்தான். கொஞ்சம் மாத்திரை சாப்பிட்டா இன்னும் கொஞ்சம் கூட்டலாம் ஆனா இவன் ஒத்துக்க மாட்டேங்குறான்" என சோகமாக கூறினார் டாக்டர் மணிகண்டன்.

"என்ன டாக்டர் சொல்றீங்க " அதிர்ச்சியிலிருந்து சன்முகம் மீளவில்லை.

"ம்ம் நான் இன்னும் ரெண்டு வருசத்துல செத்துடுவேன்னு சொல்றாரு.. சரிடா மணி நாங்க கிளம்புறோம்." என டாக்டரிடம் இருந்த ரிப்போட்டை ஒரு கையிலும் தன் தோழனை மறுகையிலும் பிடித்துகொண்டு கிளம்பினார்.

## அத்தியாயம் - 11

சுவேதாவின் வார்த்தைகள் சந்துருவின் மனதினை துளையிட நினைத்தன. ஆனால் அதற்கு தடுப்பு விதித்தான் சந்துரு. "ஏன்டி நீ தற்கொலை பன்னிதான் சாகனும்னு விதி இருந்தா போய் சாவுடி நான் உனக்காக வருவேன்லாம் எதிர்பார்க்காத" என தனது கைபேசியிடம் கோபத்தை காட்டினான் சந்துரு. அது மெத்தையில் இதமாக மோதியதில் சந்துருவை முறைத்து பார்த்தது.

அன்பரசியோ தன் வாழ்கை எனும் ஓடையின் பயனத்தை நினைத்து வருந்தி கொண்டிருந்தாள். 'என் மனதை புரிந்துகொள்ள யாருமே இல்லையே! இல்லை இல்லை அதை புரிந்துகொள்ள ஒருவன் வந்தான் அவனையும் கை விட்டது உன் முட்டாள்தனம் நீதான் குற்றவாளி' என அவள் தரப்பு வழக்கறிஞர் அவளையே கூண்டில் ஏற்றி நிறுத்திவிட்டு சிரித்தார்.

"பார்வதி ஏய் பார்வதி" மிலிட்டரி மேனின் குரல்.

"என்னங்க" அதற்கு பதில் குரல் அளித்தாள் பார்வதி.

"நான் பணம் கொடுத்தேன்ல அதை எடுத்துட்டு வா நிச்சியத்துக்கு பொருள் வாங்கிட்டு வந்திடுறோம்" என தன் முடிவில் உறுதியாய் இருந்தார் போஸ். பீரோ திறக்கும் சத்தம் கேட்கவே பணமும் கைமாறியது ஆனால் அடுத்த அழைப்பை இந்த ஜோடி சிறிதும் எதிர்பார்த்திருக்கவில்லை.

"மாப்ளை மாப்பிள்ளை " என்ற குரல் வந்ததும் கால்கள் தானாக இயக்கத்தை துவங்கியிருந்தன. "சந்துரு சந்துரு" அடுத்து தன் தந்தையின் குரல் மூன்றாவது எட்டில் அவர்கள் முன் நின்றான்.

"அன்பு அன்பு" அன்பரசியை ஏன் அழைக்கிறார் என்ற குழப்பம் சந்துருவுக்கு. சிறிது நேரத்தில் திருமணம் நடக்கும் முன்னே ஜோடிகளாய் நின்றனர். "சரி ரெண்டு பேரும் ரெடி ஆகுங்க பொருள்

எல்லாம் வாங்கிட்டு வந்திட்டலாம்" போஸ் அதிரடியாய் இயங்கினார்.

"நான் எதுக்குபா" அன்பரசி சினுங்கினாள். "அட கழுத உன்கிட்ட புது சேலை இருக்கா!? பின்ன மாப்ள வீட்டு கார்ங்ககிட்ட இப்டியா காட்டுறது" என சிரித்தார். "அட சும்மா சொன்னேன் சொந்தகார்ங்க வருவாங்கல அதான்! அம்மாவையும் கூட்டிட்டு போகலாம்" என போஸ் கூறவே " நான் வரலைங்க நெறைய வேலை கிடக்கு " என கட்டை போட்டார் பார்வதி.

"சரி சரி நாங்க பாத்துகிறோம் அதான் மாப்பிள்ளை வாரார்ல அவருக்குதான் ஃபேஷன் டெக்னாலஜி தெரியும்ல" என போஸின் வாயிலிருந்து வார்த்தைகள் தெறிக்கவே 'ஓ அதான் அவ்வளவு கட்சிதமா எனக்கு சுடிதார் எடுத்து வந்திருந்தானா?" என நினைத்தாள். "சரி மாப்ள ரெடி ஆகுங்கள்" முடிந்தது.

சிறிதுநேரத்தில் அனைவரும் காரில் இருந்தனர் அது புறப்படவே "மாப்ள நிறுத்துங்க பூ வாங்கிடலாம் "

"மாப்ள பழங்கள் "

"மாப்ள ஸ்வீட்ஸ்"

"மாப்ள."

"மாப்ள" என காரின் பிரேக்கின் முக்கியதுவத்தை அன்றுதான் உணர்ந்தான் சந்துரு. இதால் தோழர்கள் இருவரும் ஐந்து ரூபாய்பசையால் ஒட்டியதைபோல் பிரியாமலேயே இருந்தனர் காரின் பின் இருக்கையில். அன்பரசியோ முன் இருக்கையில் அமர்ந்து சாலையை வெறித்துகொண்டிருந்தாள்.

"மாப்ள என் ஃப்ரண்ட பாக்க வேண்டியிருக்கு கொஞ்சம் நேரம் ஆகும் அதுவரைக்கும் அன்பரசிகூட பேசிக்கிட்டு இருங்க " என இறங்கினார்.

"சன்முகம் நீயும் இரு நான் போய் பாத்துட்டு வந்துடுறேன்" என முதல்முறையாக தன் தோழர் வரவை எதிர்த்தார். "இல்லடா நானும் வாரேன் அவங்க தனியா பேசிகட்டும்" என இறங்கினார் சந்துருவின் தந்தை. இதனால் தன் நண்பனை மறுக்க முடியாமல் அழைத்துசென்றார்.

இருவரும் சென்றதும்

"அன்பரசி நான் ஒன்னு கேட்கலாமா?" என வாயை திறந்தான். அவளும் இவனிடம் மனம் திறக்க தயாராக இருந்தாள். மனம் திறப்பதினாள் தன் மானம் காக்கபடலாம் கல்யானம் என்ற போர்வையில் இருந்து என எண்ணினாள்.

"ம்ம்" என்ற ஓசை அந்த ஏசி காரில் எதிரொலிக்காமல் சந்துருவின் காதை அடைந்தது. "தேவதைகளை நீ பாத்துருக்கியா?" சந்துரு அந்த தேவதையின் முகத்தை பார்த்து கேட்டான்.

"நீ என்ன லூசா" என்பதைபோல் ஒரு குழப்ப பார்வை பார்த்தாள். "சரி ராட்சசிய பாத்துருக்கியா?!" இப்போது அன்பரசியின் முகத்தில் குழப்பம் தெரிந்தது.

"நான் என் பார்வையில் ராட்சசியாக தெரிந்து தேவதையாக தோன்றிய ஒரு பொண்ணை பத்தி சொல்லபோறேன்" என அவளது கண்களை பார்த்தான். என்ன இனைப்போ தெரியவில்லை அவளது கண்களும் இவனது கண்களை பார்த்தது அந்த தேவதை யார் என்று தேடுகிறாள் போல.

"டேய் இவ்வளவுதூரம்னு தெரிஞ்சிருந்தா கார்லயே வந்திருக்கலாமே ஏன் தேவை இல்லாம நடக்கனும்" என இடுப்பில் கைவைத்து நின்றார் சன்முகம். தனது தோழனின் உடல்சோர்வைபார்த்து சிரித்த போஸ். "ஏன்டா தடியா உன்னையெல்லாம் மிலிட்டரில சேத்துவிட்டுருந்தா இப்படி பேசமாட்ட" என புன்னகை தொடர்ந்தது.

"டேய் அதுக்குன்னு இப்புடியாடா படுத்ததுவ நான் சாதாரன வியாபாரிடா என்னால இவ்வளவுதான் முடியுது" என மூச்சு

வாங்கிக்கொண்டு தன் நண்பனின் அருகில் வந்து நின்றார் சன்முகம். பின் சிறிது தூரம் நடக்கவேண்டிய கட்டாயம். இறுதியாக கிடைத்த கனியென அவ்விடம் வந்தனர்.

"மணிகண்டன் கிளீனிக்" என வாசித்த சன்முகம் " ஏன்டா ஹாஸ்பிட்டல் வந்தோம்" என அதிர்ச்சியாய் கேட்டார். "ஆங்ங் இங்க ஏ குருப் ரத்தம் கேட்டாங்க அதான் உன்னை கூட்டி வந்தேன்"

"டேய் நான் ஓ டா " என உண்மையை சன்முகம் கூறவே "அதை அவங்க ஓ வா மாத்திப்பாங்க" என சிரித்துகொண்டே உள்ளே நுழைய சன்முகமும் பின்னாலயே சென்றார் ஹச் டாக் போல.

அங்கு தலையில் சில ஏக்கர்களை வைத்துகொண்டு சன்முகத்தின் வயதை ஒத்த மருத்துவர் ஆனால் சற்று பழைய கட்டிடம் மிக குறைந்த செலவில் ஏழைகளுக்கு உண்மையிலேயே உதவுகிறார் என்று தெரிந்தது. இவற்றை ஓர் ஷெர்லாக் ஹோம்ஸ் போல உள்ளிளுத்து கொண்டிருந்தார் சன்முகம்.

"வாங்க போஸ் வணக்கம்" என தன் தெய்வீக புன்னகையை வீசினார் அந்த டாக்டர்.

"வணக்கம் மணி என்ன முடிஞ்சதா" என கேட்கவே மருத்துவரோ அறையில் பார்வைபோர் தொடுத்திருந்த சன்முகத்தை பார்த்துகொண்டிருந்தார். "ஓ இதுவா சன்முகம் என் உயிர் நண்பன்

அப்புறம் சம்மந்தி ஆகபோறோம் soon" என கூற "வணக்கம் சன்முகம் சார்" பதிலுக்கு வணக்கம் செய்த சன்முகம் இப்போது கவனத்தை மருத்துவர் பக்கம் திருப்பியிருந்தார்.

"ம்ம் போஸ் நீ என்னோட ஃபிரண்ட் அதனால உண்மையை என்னால மறைக்கமுடியலை மத்தவங்கனா அவங்கள வச்சு பணம் பாப்பாங்க ஆனா என் மனசு அதுக்கு இடம் கொடுக்கலை என்னை மன்னிச்சுடு" என மருத்துவரின் முகம் சோகமாக மாறியது.

போஸோ சிரித்துகொண்டே "அதான் நான்தான் அப்போவே சொன்னேனே நீதான் மனசு கேக்கலைடா ஒருதடவை பாக்கலாம்னு சொன்ன அதான் ரத்தம் டெஸ்ட் பன்ன கொடுத்தேன்" என சிரித்தார்.

இவர்களின் மர்ம பேச்சை கேட்டுகொண்டிருந்தத சன்முகம் "என்னடா பிரட்சனை " என போஸின் காதில் கிசுகிசுத்தார். ஆனால் அந்த அறை ரகசியம் பேசுவதற்கு சகல வசதிகளும் கொண்டதல்ல.

"ஓ அதுவா சார் அவருக்கு பிளட் கேன்சர் இருக்கு இன்னும் இரண்டு வருடம்தான். கொஞ்சம் மாத்திரை சாப்பிட்டா இன்னும் கொஞ்சம் கூட்டலாம் ஆனா இவன் ஒத்துக்க மாட்டேங்குறான்" என சோகமாக கூறினார் டாக்டர் மணிகண்டன்.

"என்ன டாக்டர் சொல்றீங்க " அதிர்ச்சியிலிருந்து சன்முகம் மீளவில்லை.

"ம்ம் நான் இன்னும் ரெண்டு வருசத்துல செத்துடுவேன்னு சொல்றாரு.. சரிடா மணி நாங்க கிளம்புறோம்." என டாக்டரிடம் இருந்த ரிப்போர்ட்டை ஒரு கையிலும் தன் தோழனை மறுகையிலும் பிடித்துகொண்டு கிளம்பினார்.

## அத்தியாயம் - 11

மணிகண்டன் டாக்டரின் ஓசைகள் காதில் சாத்தானின் ஒலியை போல் திரும்ப திரும்ப கேட்டது சன்முகத்தின் மூளையில். சன்முகம் நெருங்கியவர்களின் இழப்பை தாங்கமுடியாதவர் அந்த வலியை முதல்முறை உணர்ந்தபோது இருந்த அதே வலி இன்றும் ஏற்பட்டது. 'டேய் இது சும்மாடா உன்னை ஏமாத்த அப்படி நாடகம் போட்டோம்' என பலமுறை கூறியிருக்கிறான். இன்றும் அவன் அப்படி சொல்வான் என்ற நம்பிக்கையில் "டேய் விளையாடாதடா உண்மையை சொல்லு" என தன் நண்பனின் முகத்தில் சோகமாக பார்வை வீசினார்.

"டேய் நான் ஏன்டா விளையாடபோறேன் நீயே ரிப்போர்ட் பாருடா" என தன் கையிலிருந்த கோப்புகள் கரம் புரண்டன. அதை வாங்கி

வாசித்த சன்முகமுகத்தின் உடலில் இயக்கங்கள் நின்றன. தன் மனதை உணர்ந்தவர்கள் தன்னை விட்டு செல்கிறார்கள் என அழுதார். அவரால் உணர்ச்சியை கட்டுப்படுத்த முடியாமல் தன் தோழரை கட்டியனைத்து அழுதார். அவர்களின் பாசபினைப்பை அங்குசெல்லுப் வழிபோக்கர்கள் உணரும் அளவிற்கு.

"டேய் நீ வாடா நாம் வெளிநாட்டுல போய் ட்ரீட்மென்ட் பன்னலாம் நான் உன்னை சாகவிடமாட்டேன்" இவை இதயத்திலிருந்து வந்தது சன்முகத்தின் உதட்டிற்கு. "டேய் அது எல்லாம் எடுபடாதுடா சாகனும்னு முடிவாயிருச்சு நான் வாழ்ந்த ஊர்லயே செத்துபோறதுலதான் எனக்கு நிம்மதி" என சிரித்தார். இந்த சூழலிலும் சிரிக்க போஸால் முடிகிறது. இல்லை தன் நன்பணை ஆறுதல் செய்ய அவ்வாறு நடிக்கிறாரா?

அன்று காஷ்மீர் ரகசிய இந்திய ராணுவ தளம்.

"விஜய்சிங் இந்த மிசின் கொஞ்சம் சீக்ரட்தான். இதுல அணுகழிவுகளை வச்சு தயார் பன்ன மிசைல் இதை இங்கிருந்து நம்ம பேஸ்க்கு சிப்பிங் பன்னனும் கேர் புல்லா இருங்க. அனுகுன்டாவது உடனே உயிரை எடுத்துடும் ஆனா இது ஸ்லோ பாய்சன் மாதிரி" என அங்கே ஒரு கன்டெய்னரை நிறுத்திவிட்டு ஜீப்பில் புறபட்டார் ஜெனரல்.

அங்க இருந்த சில நபர்களில் முதலாவதாக சிக்கினான் போஸ். "போஸ் நீயும் ஆரவ்வும் இந்த கன்டெய்னரை எடுத்துட்டு X2 பேஸ்ல

நிறுத்திடுங்க" என கமென்டரின் வார்த்தைக்கு மறு வார்த்தை இல்லை.

"ஒகே சார்" என சாவியை பூட்டவே கன்டெய்னர் உறுமியது. அனு ஆயுதங்களால் தாக்குதல் என்றால் பூமிக்கு முகத்தில் ஆசிட் ஊற்றமதுபோலதான். குழந்தைகள் தீபாவளியில் விளையாடுவதைபோல ஒருவர் வெடித்தால் உலகமே வெடித்தது கொண்டாடிவிடும் பின்னர் மனிதர்கள் செவ்வாய்கிரகத்தில்தான் தஞ்சம்புகவேண்டும். அதனால்தான் என்னவோ இந்த ஆபத்தை மிகுந்த கவனத்துடன் தயாரித்து அரசாங்கத்தின் கணக்கில் வராமல் பாதுகாத்து வருகின்றனர். ஆனால் இதுபற்றி எங்களிடம் ஒரு வார்த்தையாவது சொல்லியிருக்கலாம். எங்கே?

அது ஒரு உலோக உருளை முனையில் கூர்மையுடனும் பின்னால் விசையூட்டபட்டு தீப்பிளம்பென பழுத்திருந்தது. அதன் அழகில் சொக்கி தான் போகவேண்டும். அதனால் தான் என்னவோ சொக்கி விழுந்தான் ஆரவ் தலையில் துளைத்து மறுபுறம் அந்த அழகி சென்றதால். துர்அதிஷ்டம் என்னவென்றால் அந்த வாகனத்தின் கைபிடி ஆரவின் கையிலிருந்தது. இப்போது அவனிடம் உயிர் இல்லை. மலைமுகட்டில் சட்டென திரும்பிய என்னை தன்னகத்தே வைத்திருந்த இரும்பு ராட்சசன் மலைமுகட்டில் சரிந்தான். நான் சீட்டின் கைகளை என்னை அணைக்கவிடாமல் மறந்திருந்தேன். தூக்கி எறியபட்டேன் ஓர் இருண்ட புதறினுள். என்னுடன் துனைக்கு வந்தது ஓர் மிசைல். வெறும் ஐந்து சான்தான் ஆனால் அணுகுன்டின் பேரன் அல்லவா அதன் வயிரும் கிழிந்திருந்தது. சில மனிதர்களின் நடமாட்டம் தெரிந்தது. அவர்கள் அந்த கன்டெய்னரில் சிக்கிய

உருளை ராணுவ தோழிகளை எடுத்துகொண்டு சென்றுவிட்டனர். ஆனால் அந்த விபத்து இவ்வளவு நாள் கழித்து விபரீதம் செய்யும் என போஸ் சிறிதும் நினைக்கவில்லை. அதன் விளைவு மிலிட்டரி செக்அப்பில் ரத்தபுற்றுநோய் ஆனாலும் அனுகளிவின் விளைவு என்பதால் சலுகைகள் மறுக்கபட்டது. தன் தவற்றை மறைத்துகொண்டது அரசு.

பின் ஓய்வுக்கு தள்ளபட்ட போஸின் வாழ்கை விவசாயத்தில் ஓடிக்கொண்டிருக்கிறது. இவற்றை எல்லாம் போஸ் மிக சாதாரனமாக தன் தோழரிடம் கூறினாலும் தன் செல்லமகளையும் அன்பு மனைவியையும் நினைக்கும்போது கண்ணில் வர ஆரம்பித்திருந்தது.

அதுவரை தன் நண்பனை இரும்புமனதன் என்றும் அவனது கண்கள் கரிகாலன் அனை எனவும் நினைத்திருந்த சன்முகத்தின் இதயம் நெருப்பாய் கக்கியது.

"என்னடா அழுகாதடா" என சமாதானம் செய்தார் சன்முகம். "டேய் நான் சாகுறத நினைச்சாகூட எனக்கு கவலை இல்லடா ஆனா என் பொண்டாட்டி என்ன பன்னுவா அவளுக்கு என்னைவிட்டா எதுவுமே தெரியாதுடா" என கண்ணீர் அந்த மீசையினுள் நுழைந்தது.

"டேய் நான் இருக்கேன்டா உன் குடும்பத்தை பாத்துகிறது என் பொறுப்பு" என கண்ணீர் சத்தியம் அரங்கேறியது.

"அதாண்டா என் மகள உன்னோட மருமகளா ஆக்கிட்டா நீ பாத்துக்க மாட்டாயா! அதனாலதான்டா என் செல்லபொண்ணுகிட்ட கூட இப்புடி நடந்துகிறேன் அவளுக்கு இப்போ வலிச்சாலும் பின்னாடி நல்லா இருப்பாடா என் நண்பன் வீட்டுல" என தன் நண்பனின் இருகையையும் பிடித்தார்.

"டேய் இனி அவள் உன் பொண்ணு இல்லைடா எங்க வீட்டு பொண்ணு அது மட்டும் இல்லடா என் தங்கச்சியையும் என் மகன் நல்லா பாத்துப்பான் நல்லா பாத்துப்பான்" என உறுதி அளித்தார் சன்முகம்.

தன் தங்கை என் சன்முகம் உரிமை எடுத்திருந்தது போஸுக்கு நம்பிக்கை அளித்தது. இதற்குமேல் அழுதால் நல்லா இருக்காது என நினைத்த மிலிட்டரி மேன் "அப்போ ரெண்டு பேரையும் பாக்க நான் உங்க வீட்டுக்குத்தான் வரணும் பேயா" என சிரித்தார்.

"கன்டிப்பா" என சன்முகம் சோககுரலுடனும் சிரிக்க முயற்சி செய்த உதட்டுடனும் கூறினார். "ஹேய் ஓல்ட் ஃப்ரண்ட் நமக்குள்ள ஒரு பந்தயம் நான் ஓடுறேன் முடிஞ்சா என்னை முந்திபாரு" என ஓட ஆரம்பித்தார் போஸ். "டேய் முந்துனா என்னடா பெட்" என்ற ஓசைக்கு திரும்பிக்கொண்டு "மேரேஜ் அன்னைக்கு கன்டிப்பா நான் உனக்கு மிலிட்டரி சரக்கு வாங்கி தாரேன்" என ஓடினார். "ஆக மொத்தம் என்னை குடிக்க விட கூடாது இதுதானே உன் திட்டம் ட்ரை பன்னி பாக்குறேன்" என தன் தொப்பையை தூக்கி ஓட துவங்கினார் சன்முகம்.

"அன்பு!!! நான் அப்புடி கூப்பிடலாம்ல?" என நிறுத்த 'இவனுக்கு மனைவியாகபோகிறேன் என்று எவ்வளவே உரிமை இவனுக்கு' என மனதில் ராட்சசி வெளிபட்டாலும் தந்தையின் கன்டிப்புக்கு மரியாதை கொடுத்து "ம்ம்" என கூறிவைத்தாள்.

"ஒரு தேவதை என்னை இந்த பூமியில் வந்து இறக்கிவிட்டுச்சு யாருன்னு கேட்கமாட்டியா" என அவளை பார்க்க

அவளோ கண்களை இமைக்காமல் முன்னால் எரிந்து கொண்டிருந்த வண்ணவிளக்குகளை பார்த்துகொண்டே "அம்மா" என்றாள்.

"யூ ஆர் ரைட்...அவங்க கூட ரொம்ப சந்தோஷமா விளையாடிட்டு இருந்தேன். அந்தநாள் வரைக்கும்!!!" என நிறுத்தும்போது அவனது குரலில் உயிர் இல்லை கண்ணில் நீர் ததும்பியது.

அவனை பார்க்க இவளும் உள்ளூர கலங்கிவிட்டாள் அந்த ராட்சசி. "முன்றாம் வகுப்பு அன்னைக்கு அன்னையர் தினம் நான் ஸ்கூல்ல இருந்து அம்மாவுக்கு சாக்லெட் வாங்கிட்டு வந்திருந்தேன் ரொம்ப ஹாப்பியா" மீண்டும் குரலில் தொய்வு ஆனால் இந்தமுறை கண்ணீர் கரையை கடந்திருந்தது.

"ரோட்டுக்கு அந்தப்பக்கம் அம்மா இருந்தாங்க நான் வேகமா ஓடி வந்தேன் தினமும் நடக்குறதுதான். ஆனால் அன்னைக்கு ஒன்னு

*புதுசா நடந்துச்சு. ரோட்டுல பாதிய கடந்திருப்பேன். ஒரு வெள்ளை கார் என்னை பாத்து வந்துச்சு. என் அம்மா ஓடி வந்து என்னை தள்ளிவிட்டுடாங்க." அவனால் அதற்குமேல் சொல்லமுடியவில்லை.*

*அன்பரசியின் கண்ணிலும் நீர்நிலைகள் இருந்தன.*

*"நான் எழுந்திருச்சு பாக்கும்போது அவங்க இரண்டு சக்கரத்துக்கும் நடுவில் இருந்தாங்க. அந்த கண் என்னைத்தான் பாத்துகிட்டு இருந்துச்சு ஆமா அவங்களுக்கு உயிர் இருந்துச்சு ஆனா அந்த டிரைவர் பதட்டத்துல வண்டியோட ஆக்ஸலேட்டர மிதிச்சுட்டான் பின்னாடி சக்கரமும்..." என அவன் முடிக்கும் முன் அவள் அவனது வாயை பொத்தினாள் தன் மென் கரங்களால். மற்றோரு கை அவனது கண்ணீரை துடைத்துவிட்டது. கண்ணீர் திரையை விலக்கிவிட்ட பிறகு அவளது கண்ணில் கண்ணீர் இருப்பதை உணர்ந்தான்.*

*'இந்த சின்ன வயசுல எந்த அளவுக்கு காயபட்டுருக்கான் ஆனா இவனால் சிரிக்க முடியுது. எல்லாம் வெளியுலக தோற்றம்தான்' என நினைத்தாள். அவளது கண்ணீரும் துடைக்கபட்டது அவனது கையால். அடுத்ததாக அவன் கூறபோவது அன்பரசியின் இதயத்தை மாற்றும் என்பதை அறியாமல் கேட்டுகொண்டிருந்தாள்.*

## அத்தியாயம் - 12

தன் நீண்டநாள் தன் தாயை பிரிந்துபடும் இதயபாரத்தை தனக்கான உயிரிடம் இறக்கி வைத்த நிம்மதியுடன் தொடர்ந்தான். "ஏய் அன்பு நான் உன்னை ரொம்ப கஷ்டபடுத்திட்டேன?. நான் ஒரு மடையன் அம்மாவ பத்தி பேசிகிட்டே இருப்பேன்" என தலையில் அடித்தாகொண்டான். அவனை ஆச்சரியமாக பார்த்துக்கொண்டிருந்தாள் அன்பரசி.

"கடவுள் ஒன்றை எடுத்தா இன்னொனு கொடுப்பார்னு சொல்லுவாங்க அதுவும் நடந்தது அது என்னனு தெரியுமா?" என கண்ணாடியை திருப்பினான் அவளை நோக்கி. அதில் அவள் முகம் தெரிந்தது. "என்ன நானா?" என வாய்திறந்து பேசிவிட்டாள்.

அன்று...

சந்துருவின் தாய் காவேரி இறைவனடி சேர்ந்து ஒரு மாதம் ஆகியிருந்தது. சந்துரு தன் தாயின் புகைபடத்தை கட்டி அனைத்துகொண்டு மெத்தையில் படுத்திருந்தான். தினமும் தன் தாயை கட்டி அனைத்து உறங்கினால் தான் தூக்கம் வரும் என்ன ஒரு வித்தியாசம் அன்று சிரித்துகொண்டே தூங்குவான் இன்று கண்கள் சிரிக்கின்றன கண்ணீரால்.

அது ஒரு மாலை பொழுது "திடீரென தன் தாயின் ஓசை வீட்டின் மேல் மாடியில் இருந்த அவனுக்கு கேட்க அப்படி ஒரு ஆனந்தம் புகைபடத்தைகீழே வைத்துவிட்டு வேகமாக படியிறங்கி வந்தான்

சந்துரு. ஆனால் ஏமாற்றம் அது அவன் தாய் இல்லை. மாறாக இருவர் தன் தந்தையுடன் பேசிக்கொண்டிருந்தனர்.ஒன்று ஒரு மீசைகாரர் மற்றொன்று தன் தாய்போன்ற ஓர் பெண். அவன் எண்ணியது சரிதான் அவள் இவனை ஓடி வந்து தூக்கி கொண்டாள். அன்று நடந்த உரையாடல்கள் இவனுக்கு புரியவில்லை இருந்தாலும் நினைவைவிட்டு அகலவில்லை.

"எப்போடா ஆச்சு" அந்த மீசைகாரர்.

"பையனை கூப்பிட ஸ்கூல்க்கு போகும்போதுடா போஸ்" என தன் தந்தை அழுதது நினனைவில் வந்தது.

"பார்டர்ல இருந்த வர லேட் ஆகிருச்சுடா " என ஒருமாதம் தாமதமாக வந்ததுக்கு காரணம் தெரிவித்து கொண்டிருந்தார்.அந்த மிலிட்டரிகாரரர்.

"இல்ல விடுடா அவளே போய்ட்டா இந்த குடி மட்டும் இல்லாம இருந்திருந்தா இன்னைக்கு அவ இருந்திருப்பாடா... எப்பவும் நான்தான் போவேன் இந்த குடியை தொட்டதுல இருந்து அவதான் போனா ஒரே அடியா போய்ட்டா" என அழுதார்.

"டேய் விதின்னு இருந்தா அப்புடி தான்டா" என தேற்றினார்.
"அழாதிங்க அண்ணா " என சந்துரு வை சுமந்திருந்த பெண்மணி தேற்றினார்.

"என்னடா விதி... நான் பொறுப்பில்லாம இருந்தேன் அவள் சின்னதா ஒரு ஸ்பின்னிங்க் யூனிட் ஆரம்பிச்சா இப்போ அது மில்லா வளர்ந்து நூறுபேர் வேலை செய்றாங்க. இப்போகூட என்னால அதை காப்பாத்த முடியாம போயிடும் போல" என அழுதார்.

"ஏன்டா என்ன ஆச்சு"

"புது யூனிட்க்கு கடன் வாங்கி இருக்கா அவ செத்தும் பஞ்சு ஸ்டாக் நிறுத்திட்டாங்க என்ன பன்றதுன்னு தெரியலை. அவள் நியாபகமா இருக்குறது அந்த மில் மட்டும்தான் " என தன் துன்பத்தை தன் தோழனிடம் இறக்கி வைத்தார்.

தன் தோழரின் கண்ணீரை போஸால் தாங்கமுடியவில்லை. இயந்திரமனிதனின் இதயத்திலும் ஈரம் இருக்கும் அல்லவா தன் தோழனுக்கு பொறுப்பு வந்ததை உணர்ந்தார். அதுவரை குடிமகனாக சூற்றியவர் முதல்முறை குடும்ப பொறுப்பாளியாக பேசிகொண்டிருப்பதை கண்டு சிறிது மகிழ்ச்சி என்றாலும் காவேரியின் மரணம் அதை உணர்த்தியிருக்கவேண்டாம்.

"டேய் அழாதடா எல்லாம் சரி ஆகிடும்டா" என போஸ் கூற "ஆமா அண்ணா அன்னி நம்ம கூடத்தான் இருக்காங்க" என பார்வதி சமாதானம் செய்தார். பார்வதியின் கையில் இருந்த சந்துருவோ எதுவும் புரியாமல் தன் தாயின் அரவனைப்பைபோல உணர்ந்து அவளது முகத்தை பார்த்து கொண்டிருந்தான்.

"எல்லாம் என்னாலதான்டா நான்தான் அங்க போயிருக்கனும் இந்த குடியாலதான்டா அவள் போறமாதிரி ஆகிடுச்சு. நான்தான் போயிருக்கனும் நரகத்துக்கு" என மேலும் குலுங்கி அழ ஆரம்பித்தார்.

"அழாதடா புது யூனிட்க்கு வாங்குன கடன் எவ்வளவுடா மீதம் இருக்கு?!" என போஸ் வினவினார். "அது பத்து லட்சம் இருக்குடா " என மேலும் அழுதார்.

"டேய் அழாத உன் மகன் வேற இருக்கான் நீதான் தைரியமா இருக்கனும் அவன் வாழ்கையை பாக்கனும் நான் சொல்றத கேளுடா" என்ற நண்பனின் வார்த்தைக்கு கண்ணில் நீர் வடிய நிமிர்ந்துபார்த்தார் சன்முகம்.

"சரி பஞ்சு ஆர்டர் எடுக்க எவ்வளவு செலவு ஆகும்" என தீவிரமாக கேட்க "பழைய பாக்கி எல்லாம் சேர்த்து புதுசா எடுக்க மூன்று லட்சமாவது வேணும்டா அவ்வளவு பணம் என்னால முடியாதுடா நான் வாழ்ந்த வாழ்கை அப்படி" என தலையில் அடித்துகொண்டார்.

அதை அமைதியாக கவனித்த போஸ் தன் மனைவியை பார்க்க பார்வதியோ மறுவார்த்தை இல்லாமல் தன் கழுத்திலிருந்த அனைத்து நகையையும் கழற்றினார். "தங்கச்சி என்னமா பன்றா" என்று அதிர்ந்தார் சனமுகம்.

"டேய் நீ வாய மூடுடா எதுவும் பேசாத " என கன்டிப்புடன் கூறினார் மிலிட்டரி மேன். ஆனாலும் அந்த செயல்களால் சற்று அதிரிந்துபோயிருந்தார் சன்முகம்.

"இங்க பாருடா இதை வச்சிகோ போய் பஞ்சு ஆராடர் எடு இது உன் நகை சரியா...அப்புறம் இந்தா " என ஒரு முப்பதாயிரத்தை கையில் திணித்தார். "இது ஏன்டா" என சன்முகம் வினவ. "இந்த நகை எப்படிடா பத்தும் அதான் வீட்டுலேயே தாலிய கழட்டி அடகு வச்சுருக்கேன் அந்த பணம்தான இது."

அப்போதுதான் பார்வதியின் கழுத்தை பார்த்தார் சன்முகம் அதில் ஒரு மஞ்சள் கிழங்கு மட்டுமே தொங்கிகொண்டிருந்தது.

"டேய் இந்த பணம் வேண்டாம்டா போய் தங்கச்சியோட தாலிய திருப்பு" என கன்டிப்புடன் கூறினார் சன்முகம் தன் கண்ணீரை துடைத்துகொண்டு. "ஏய் இடியட் நான் சொல்றத மட்டும் கேளுடா" என ஆத்திரமானார் போஸ். தன் அதிகப்படியான உணர்வுகளை மனதுக்கு நெருங்கியவர்களிடம் மட்டும்தானே வெளிபடுத்தமுடியும் அது அன்பும் சரி ஆங்காரமும் சரி.

அடுத்த வார்த்தைகள் எப்படியும் தன் நண்பனின் காதில் விழாது என உணர்ந்த சன்முகம் அமைதியாய் இருக்க "மெட்டீரியல் ஆர்டர் எடு லோன் அடைச்சு தங்கச்சி பேர்ல காவேரி மில்ஸ்னு நெறைய கம்பெனி ஆரய்பிச்சு நிறையபேருக்கு வேலை கொடு அப்போதான் தங்கச்சி ஆத்மா சாந்தி அடையும் அதுதான் தங்கச்சியோட

லட்சியம்" என போஸ் கூறியது சன்முகத்திற்கு வியப்பை ஏற்படுத்தியது. மனதில் ஓர் புதிய புத்துணர்வை அழிக்க தொழிலாளர்களுக்காக வாழ முடிவு செய்தார்.

"டேய் போஸ் எனக்கு இன்னொரு உதவி செய்றியா?" என சன்முகம் சோகமாக கேட்க. "டேய் உதவின்னு கேட்ட பல்லு ஒடைஞ்சுடும் பாத்துக்கோ என்ன செய்யனும்னு மட்டும் சொல்லு"

"என் பையன் அம்மா நியாபகமாவே இருக்கான். ரொம்ப தனியா ஃபீல் பன்றான்னு நினைக்குறேன் ஒரு மாதம் உன்கூட வச்சுகிறியா. அதுக்குள்ள நான் தொழில் பிரச்சனைகளை முடிச்சுடாலாம்னு நினைக்குறேன்" என சன்முகம் கூறவே பார்வதியோ " அண்ணா நாங்க இவனை அழைச்சிட்டு போகத்தான் வந்தோம் எங்க அம்மா இறந்தப்போ நான் எவ்வளவு கஷ்டபட்டேன் தெரியுமா! இவன் என் புள்ளை அண்ணா!" என கண்ணீர் விட்டாள். அதற்குள் மடியில் தலை சாய்த்து உறங்கியிருந்தான் சந்துரு.

அதன்பின் சந்துருவுக்கு நினைவில் இருந்தவை அந்த பழைய பேருந்தின் இன்ஜின் சத்தமும் தன் தாயின் குரலும் மட்டும்தான்.

காலையில் சூரியன் மஞ்சள்மழையென கதிர்களை வீச துவங்கியிருந்தது. லேசாக கண்ணை திறந்தான். குளிர் சிறிது அதிகமாகவே இருந்தது. தன் மீது போர்த்தியிருந்த போர்வையை இருக்க மூடி கொண்டான்.

திடீரென அதை யாரோ வெடுக்கென பிடுங்கினர். அதிர்ச்சியுடன் பார்த்தவனுக்கு இது தன் வீடு இல்லை என்பது தெரிந்தது எதிரில் ஒரு பெண்.

அரைகை சட்டை கனுக்கால் வரை பாவாடை. ஒல்லிகுச்சி தேகம் நல்ல வெள்ளை நிறம். வர்ணிப்புக்கு அப்பாற்பட்ட சந்துருவின் வயதை ஒத்த உருவம். முறைத்துகொண்டே நின்றிருந்தாள்.கோபத்திலும் அழகாகத்தான் இருந்தது முகம் எல்லா பெண்களுக்கும் உள்ள இயல்புதான் இது பார்ப்பவரின் கண்களை பொறுத்து.

"இது என் போர்வை நீ எதுக்கு இதை எடுத்த?" என கோபத்தில் கண்களை உருட்டினாள்.

"ஏய் அரிசி அங்க என்னடி சத்தம்" இது சந்துருவின் கற்பனை ( தற்போதைய ) தாய் பார்வதியின் குரல்..

## அத்தியாயம் - 13

"அரிசி என்னடி கத்திகிட்டு இருக்க?" என்று சமையலறையிலிருந்து வந்த சத்தத்திற்கு தன் கையில் பேர்வையை சுற்றிக்கொண்டு சந்துருவை முறைத்துகெண்டிருந்தாள் அந்த அரிசி. சந்துருவோ காலையிலேயே பேய் அறைந்தார்போல் அமர்ந்திருந்தான். தாயின் நினைவுவேறு காலையில் எழுந்தவுடன் வந்துவிடும். தாயின் கையில் பெட் காஃபி அருந்தி எழுந்தவன் யாரோ ஒருவரின் கோபத்திற்கு ஆளானான்.

"ஒன்னும் இல்லைமா இந்த பையன் என் போர்வையை வச்சு தூங்குறான்" என இரவில் திடீரென முளைத்த காளானாக தன் வீட்டில் பூத்திருந்த சந்துருவின் மேல் கோபம் போகவில்லை அன்பரசி எனும் அரிசிக்கு. இரவில் அவசரமாக வீட்டிற்கு வந்து அவளது போர்வையில் சந்துருவை உறங்கவைத்த நியாபகம் இப்போதுதான் வந்தது பார்வதிக்கு. 'ஐயோ தப்பு பன்னிட்டோமே' என நாக்கை கடித்தவள். தன் பாட்டி வீட்டிற்கு உறங்கசென்றிருந்த அரிசி இந்த அளவுக்கு சண்டை பேடுவாள் என எதிர்பார்த்திருந்தாள்.

"ஏய் சந்துருவை தொந்தரவு பன்னாத உனக்கு வேற போர்வை வாங்கி தாரேன் அவன்கிட்ட கொடு தூங்கட்டும்" என மிரட்டும் தொனியில் கூறினாள்.

"போமா இது அப்பா எனக்கு வாங்கி வந்தது யாருக்கும் குடுக்கமாட்டேன்" என உதட்டை குவித்து இடம் வலமாக ஆட்டினாள். அவள் இவனை பார்த்து ஒழுங்கு காட்டிவிட்டு செல்ல எழுந்த அமர்ந்தான். தன் தாயின் குரல் வரும் வழியை தேடி

நடந்தான் தன் பிஞ்சு கால்களுடன். இறுதியாக பாதயாத்திரை முடிய சமையல் அறையை அடைந்தான். பார்வதி சந்துருவுக்கு பூஸ்ட் போட்டு வைத்திருக்க அதை அவனிடம் கொடுத்தாள்.

"அம்மா " என கூறிவிட்டு சுற்றிலும் பார்த்தான். இது தன் வீடு இல்லை எங்கோ நரகத்தில் இருக்கிறேன் என நினைக்கும்போது அந்த ராட்சசி அங்கு வந்தாள். தான் தன் தாய் என்ற தேவதையின் அருகில் இருப்பதால் பாதுகாப்பு என நினைத்திருந்தான். அப்போது அவனருகில் வந்தவள் பூஸ்ட் போடப்பட்டிருந்த டம்ளரை பிடுங்கிவிட்டு "அம்மா என்னை மட்டும் பல்லு வெளிக்கிட்டு வரசொன்ன இவனுக்கு மட்டும் பூஸ்ட் தார அதுவும் இல்லாம இப்போதான் எந்திருச்சான் தூங்குமூஞ்சி" என கீழே வைத்தாள் டம்ளரை. கையுடன் ஒரு வேப்பங்குச்சியையும் கொண்டுவந்திருந்தாள்.

இவளது பேச்சினை பார்வதியால் பார்க்க மட்டுமே முடிந்தது. அதற்கு காரணமும் இருந்தது. அரிசி அப்பா பொண்ணு. ஒருநாள் பார்வதி கேசரி செய்து தவறவில்லை என்று அம்மன் கோவிலில் சென்று அமர்ந்துகொண்டாள். இறுதியில் மிலிட்டரி மேனிடம் விசாரனை செல்லவே அது அரிசியின் பக்கம் தீர்ப்பாகியது. தண்டனை பார்வதிக்கு இரண்டு அடி முதுகில் பலமாக அதற்கு அரிசி பயன்படுத்திய யுக்தி "வீட்டுக்கு வந்தாலே அம்மா அடிச்சுகிட்டே இருக்கு " என்பதாகும். அதனால்தான் இன்று இந்த குட்டி ராட்சசியின் வார்த்தைகளை கேட்டு அமைதியாக இருக்க வேண்டிய சூழல் இருந்தாலும் குரல் கொடுத்தாள். "ஏய் சந்துருவ தொந்தரவு பன்னகூடாது அவன் உன் பிரண்ட்" என்பதற்கு

"போம்மா மலை மட்டும்தான் என் பிரன்ட் " என மலர் மலையாகியிருந்தாள். அன்பரசியான அரிசி. அரிசியின் பெயருக்கு ஒரு சுவையான நிகழ்ச்சியும் உள்ளது பிறகு கூறுகிறேன்.

"இந்தாடா குச்சி பல்லு வெளக்கு " என நீட்டினாள். சந்துருவோ இதை பார்த்தே இல்லை. அதை வாங்கியவன் "இதை எப்புடி யூஸ் பன்றது" என கேட்டான்.

அதை பிடுங்கி வாயில் வைத்து கடித்தாள்.நல்லவேலை அரசியின் தாய் கருவேப்பிலை பிடுங்க வெளியே சென்றிருந்தார். "இப்புடி நல்லா கடிச்சு முடிமாதிரி ஆக்கி வெளக்கனும் " என தன் வாயில் நான்கு கடி கடித்துவிட்டு கொடுத்தாள். அதை சற்று தயக்கத்துடன் வாங்கினான்.

அதை பார்த்தவள் "நான் பல்லு வெளக்கிட்டேன் அதனால கிருமி இருக்காது நீ தைரியமா வெலக்குடா" என மிரட்டும் தொனியில் கூற சட்டென பேயறைந்தவன் போல முடிந்த அளவு கடித்து பார்த்தான். அதற்குள் வெளியே போஸ் வந்தருந்தார். கையில் பிரஸ் மற்றும் கேபால் பல்பொடியுடன்.

"அப்பா வந்துட்டாங்க" என அரிசி தன் தந்தையின் காலினை கட்டி அனைத்துகொண்டாள். அவளை தூக்கியவர். சந்துருவையும் தூக்க வாயிலிருந்த வேப்பங்குச்சி வெளிச்சத்திற்கு வந்தது. "என்ன சந்துருபையா இந்த பழக்கம் எல்லாம் இருக்கா" என வேப்பங்குச்சியை தன் கையால் அவனது வாயிலிருந்து எடுத்தார்.

*"அப்பா எல்லாம் என் டிரயினிங்" என பெருமை வெளிப்பட்டது அரிசியிடம் இருந்து. ஆனால் அந்த குச்சியில் சந்துருவின் செங்குருதி இடம் பெற்றிருந்தது அவன் எந்த அளவுக்கு மென்மையானவன் என்பதை காட்டியது. உடனே அதை எடுத்து கீழே போட்டவர் பிரஸ்ஸையும் பொடியையும் கொடுக்க ஆனந்தமாக வாங்கிகொண்டு வெளியே சென்றான்.*

*"ஏய் பார்வதி என்னடி பன்ற சந்துருவுக்கு எதுக்கு வேப்பங்குச்சி கொடுத்த" தன் மனைவியின் மீது கோபம் "எல்லாம் உங்க பொண்ணுதான் அவனை எழுந்திருச்சதில இருந்து டார்ச்சர் பன்றா பாருங்க பூஸ்ட் கூட குடிக்க விடமாட்டேங்குறா" என எதிர்வாதம் புரிந்தாள்.*

*"அப்போ அவளை இரண்டு அடி போட வேண்டியதுதானே" என்ற வார்த்தை பார்வதியை திகைக்க வைத்துவிட்டது."நான் திட்டுனாளே அம்மன் கோயில்ல போய் உட்காந்துகிறா இதுல அடிக்க வேற செய்யனுமாக்கும்" என கடுகை எண்ணெயில் போட வெடித்து சிதறியது.*

*சரி சின்ன புள்ளைங்க அப்படிதான் இருக்கும் இருந்தாலும் சந்துரு மனசு கஷ்டபடகூடாது. அப்படி கஷ்டபட்டுட்டா காவேரி ஆத்மா ரொம்ப கஷ்டபடும் என நினைத்துகொண்டு "அன்பு அன்பு!! இங்க வாம்மா" துப்பாக்கி துப்பிய தோட்டா என வந்து நின்றாள். "என்னப்பா.?!"*

"மலர் உனக்கு என்ன வேணும்" என கேட்க "ஓ மலையா அவ என்னோட பிரண்ட்" என அழகாக சிரித்தாள். "இனி சந்துருவும் உன்னோட பிரண்டுதான் சரியா அவனை ஒழுங்கா பத்துகனும்" என தந்தை கூற காதில் விழுந்ததா என தெரியவில்லை "சரிப்பா... அம்மா பூஸ்ட்" என ஓடினாள். அதற்குள்ளாகவே சந்துருவும் வந்திருந்தான் சமையலறைக்கு.

அடுத்த குருச்சேத்திரப்போர் ஆரம்பித்தது. என்ன வித்தியாசம் அது பாஞ்சாலிக்காக இது பார்லிஜிக்காக.

"ஏய் சந்துருவுக்கும் கொடுடி" என தாயின் வார்த்தைகள் கோபத்தை ஏற்படுத்த அதை சந்துருவிடம் காட்டினாள். தன் பார்லீஜியில் பங்குகேட்டவன் இவன்தான் என்பதால். இறுதியாக ஆண் பெண் சம உரிமை தீர்மானம் நிறைவேற்றப்பட்டது அரிசியின் மனதில் ஒரு பார்லீஜி அவனுக்கு ஒதுக்கப்பட்டது.

"ஏண்டி ஒரு பாக்கெட் முழுசா நீயேவா திங்கனும் பாதி அவனுக்கு கொடுடி " என சபாநாயகர் பார்வதி மசோதாவில் அடிகோடிட்டார். அன்பரசியின் முகம் கோபமாக மாறியது. "எனக்கு காஃபியும் வேணாம் ஒன்னும் வேணாம்" என ரொட்டியை ஒரு மூலையில் தூக்கி எறிந்துவிட்டு எழுந்து ஓடினாள்.

"ரொம்ப கொழுப்புடி உனக்கு " என அந்த ரொட்டியை எடுத்தவர் சந்துருவிடம் வைத்துவிட்டு "நீ சாப்பிடுப்பா அவ அப்படிதான்" என கூறவே "இல்ல அம்மா நான் ரொட்டி சாப்பிட மாட்டேன்" என

மழலை குரலில் கூறினாலும் வீட்டில் சந்துருவுக்கு என்று விலையுயர்ந்த வெளிநாட்டு பிஸ்கட்டுகள் கேட்பாரற்றுகிடக்கும் என அனைவரும் அறிந்ததே.

அவன் அம்மா என்று அழைத்தது பார்வதியின் கண்ணில் நீரை சுரக்க செய்திருந்தது. வெங்காயத்தால் வந்தது என தன் மனசாட்சியையே ஏமாற்ற முயன்றாள். திடீரென அந்த சம்பவம் அவளது கண்ணீரை மாற்றியது.

"ஏண்டி பூஸ்ட் டப்பாவை எங்கடி" என பார்வதி கத்தினார்.

கதவின் பின்னால் ஒளிந்துகொண்டு இரு கண்கள் சமையலறையை கண்காணித்தபடி கையிலிருந்த சிகப்பு பாட்டிலிருந்து வாயிலிட்டு மென்று கொண்டிருந்தது.

"இப்போ டப்பா இங்க வரலைனா நாக்குல சூடு வச்சுடுவேன் பாத்துக்கோ" என பார்வதி செல்லகோபம் காட்டினாள்.

இந்த நினைவுகளை அன்பரசியிடம் சந்துரு புரட்டிகொண்டிருந்தநேரம் ஓட்டபந்தயத்தின் எல்லையாக தோழர்கள் இருவரும் காரினை வந்து அடைந்தனர்.

## அத்தியாயம் - 14

போஸ் முதலில் காரின் அருகே வந்து நிற்க சன்முகம் மூச்சுக்காற்றை நுரையீரலில் வேகமாக பாய்ச்சிகொண்டே காரின்மீது இருகையையும் வைத்து நின்றார். கார் தடம்புரண்டு விடும் என்று நினைத்தார் போலும். அதுவரை தன் மனதை பறிமாறிகொண்டிருந்த இருவரும் விலகி கொண்டனர். எதுவும் தெரியாதவர்கள் போல.

"ஐயோ என்னடா இப்புடி மிலிட்டரி சரக்க விட்டுகொடுத்துட்ட" என போஸ் சிரிக்க "அட போட இப்புடி கஷ்டபட்டு அந்த சரக்கே எனக்கு வேணாம்" என மூச்சிறைக்க கூறினார். அதற்குள் சந்துருவின் கைமீதிருந்த அன்பரசியின் கைகள் நகர்த்தபட்டன. அதை கவனித்த சந்துரு. "அரிசி உனக்கு எதுவுமே நியாபகம் இல்லையா?" என கேட்டான். அது அவளது இதயத்தை மிகவும் நெருக்கமாக தாக்கியிருக்கவேண்டும். உடனே தலையில் கைவைத்து கொண்டாள். "என்ன ஆச்சு அரிசி?!" என பதட்டத்துடன் கேட்டான்.

"என்ன அப்புடி கூப்டாத எனக்கு ஏதோ பன்னுது ரொம்ப தலை வலிக்குது" கண்கள் கலக்கியிருந்தன. தலையை பிடித்து கொண்டே சந்துருவின் மீது சரிந்தாள். "ஏய் அன்பு அன்பரசி என்ன ஆச்சு" என கன்னத்தில் தட்டினான். அவனது பதட்டமான குரல் வெளியே சென்றடைய தோழர்கள் இருவரும் உள்ளே நுழைந்தனர். "என்ன மாப்ள ஆச்சு?" என போஸ் கேட்க. "இல்ல மாமா நான் பேசுறத

கேட்டுகிட்டு இருந்தா திடீர்னு தலைவலிக்குதுனு சொன்னா நான் உங்களை கூப்பிடுறதுக்குள்ள மயங்கிட்டா" என சந்துருவின் பதட்டம் அவனது குரலில் தெரிந்தது. "சந்துரு வண்டிய ஹாஸ்பிட்டல் விடுடா" என தந்தையின் கட்டளையை தொடர்ந்து "அட சும்மா இருடா இந்த கழுத இப்படிதான் நடிப்பா அன்னைக்கு நடந்தமாதிரி" என போஸ் கோபத்தில் கத்தினார். "என்னடா உளறிகிட்டு இருக்க; சந்துரு நீ எடு டேய் நீ வண்டியில ஏறு" என சன்முகத்தின் அதிகாரம் முதல்முறையாக தன் நண்பனிடம் செல்லுபடியாக வாகனம் தன் நான்கு கால்களை கொண்டு ஓடி ஒரு நவீன மருத்துவமனையை அடைந்தது (அந்த இடத்தில் இருந்த ஒரே நரம்பியல் மருத்துவமனை அதுதான்). காரின் சாவியை கூட எடுக்காமல் அன்பரசியை கையில் ஏந்தி கொண்டு ஓடினான் சந்துரு. உள்ளே ஒரு வயதானவர் அமர்ந்திருக்க அருகிலிருந்த ஓர் பெட்டில் படுக்க வைத்தான். அந்த அறையை பார்த்து இது மருத்துவமனையா என்றசந்தேகம் அவனுக்கு உங்களைபோலவே!. ஆனால் கோயில் மூலவர் போல திருச்சபையின் கர்த்தர் போல மருத்துவர் வந்தார் சற்று வயது முதிர்ந்தவர். நரம்பியல் படித்துவிட்டு சேவை நோக்கமாக உள்ளார் என்பது புலப்பட்டது. 'என்னடா இங்க இருக்குற யாருக்குமே பணம்னா பிடிக்காதா?!' என்ற சந்தேகம் சன்முகத்திற்கு.

கையில் ஒரு டார்ச் லைட்டுடன் வந்தவர் அன்பரசியின் கையினை பிடித்துபார்த்துவிட்டு முகத்தில் தண்ணீர் தெளித்து எழுப்பினார். அப்பொழுதும் அவள் தலையை பிடித்துகொண்டு அமர்ந்திருந்தாள். "தலையில் எங்கெல்லாம் வலிக்குது!?" என அவர் சிரித்துகொண்டே கேட்க அவரது புன்னகையே பல நோய்க்கு மருந்தாகும் என்பது போல இருந்தது. அவளும் சில இடங்களை அறிதியிட்டு கூறினாள்.

அதை கேட்டுவிட்டு சிறிது யேசித்தவர். "எத்தனை நாளா இப்புடி இருக்கு?!" என அடுத்தஸகேள்வியை வைத்தார். "இல்ல டாக்டர் இன்னைக்கு தான்" என சமாளித்தாள். அந்த வயதான மனிதர் சிரித்துகொண்டே "இது உண்மைனு நான் நம்பலாமா " என அவளை பார்க்க தலையை பிடித்துகொண்டு அழ ஆரம்பித்தாள். தலை வலியால் அல்ல தன் மனவலியால். "இவங்க ரொம்ப எமோசன் ஆனா மயக்கம் போட்டு விழுந்துருபாங்களே!" என டாக்டர் மற்ற மூவரையும் பார்க்க.

"ஆமா சார் இப்போ ஈவ்னிங் கூட மயங்கிட்டா " என சந்துரு கூறினான். "சார் அவ நடிக்குறா சார் சரியான கல்லூரலி மங்கி ஒன்னு போட்டா சரி ஆகிடுவா " என போஸ் பொரிந்தார்.

"இல்ல சார் இவங்க நடிக்கல ரொம்ப நாளாக நீங்க கவனிக்காம விட்டுருக்கீங்க. மெமரி மிஸ் அலைன்மென்ட் இவங்களுக்கு இருக்கு" என மருத்துவர் கூற மூவரும் ஒருவரை ஒருவர் பார்த்து விழித்தனர். அதற்குள்ளாகவே மருத்துவர் ஒரு ஊசியை எடுத்துகொண்டு வந்து அன்பரசியின் கையில் குத்தவிட்டு "இது தூங்குறதுக்காக மட்டும்தான் கொஞ்சம் ரெஸ்ட் எடுத்தா தலைவலி சரி ஆகிடும் " என அன்பரசியை தூங்க வைத்தார்.

"சார் மெமரி மிஸ் அலைன்மென்ட்னா எந்தமாதிரி இதுனால அன்பரசிக்கு எதாவது?!" என சந்துரு சோகமாக இழுத்தான். "இல்ல இது பிசிக்கல் பிராப்ளம் இல்லை மென்டலிதான் வீக்கா இருக்காங்க மெரி மிஸ் அலைன்மென்ட்னா சில விசயங்கள நாம சீக்கிரம் அக்சப்ட் பன்னிக்கமாட்டோம் அந்த மாதிரி" என டாக்டர்

கூற சந்துரு விழித்தான் மேலும் தொடர்ந்தார் "இப்போ நீங்க மதியம் தூங்கி ஈவ்னிங் எழுந்தீங்கனா அந்த இருட்டை பார்த்து அடுத்தநாள் ஆகிருச்சோ அப்புடின்னு நினைப்பீங்கள்ள நம்ம போதாத நேரம் மணியும் 6 னு காட்டும்" என மருத்துவர் கூற "ஆமா சார் நானும் ஃபீல் பன்னிருக்கேன்" என சந்துரு உணர "அப்போ உங்களுக்கு குழப்பத்துல லேசா தலை வலிக்கும் ஆனா இவங்களுக்கு கொஞ்சம் அதிகமா இருக்கு அது மட்டும் இல்லை.." என டாக்டர் நிறுத்த "வேற என்ன சார்" தந்தையும் மகனும் பதட்டத்துடன் "இவங்களுகககு சின்ன வயசுல தலையில அடி பட்டிருக்கனும் அதை நீங்க கவனிக்காம விட்டிருக்கனும் அதான் மென்டலி ரொம்ப வீக்கா இருக்காங்க சின்ன சென்டிமென்டுக்கே அழுதுடாவாங்க" என மருத்துவர் கூறுவதை மூவரும் கேட்டுகொண்டிருந்தனர். போஸின் மூளையோ தன்னிடம் இருந்த வீடியோ காட்சிகளின் தொகுப்பில் ஒன்றை எடுத்து ஓடவிட்டார்.

ஊரின் ஓரத்தில் இருக்கும் ஓர் அழகிய குளம் நாரைகளும் கொக்குகளும் கிளிகளும் தாகம் தீர்க்கும் ஓர் புன்னிய நீர். அதன் அருகில் பல முனிவர்களை கண்டு பூகம்பம் தாங்கி புயல் கடந்த ஓர் பழைமையான ஆலமரம் அதன் அடிமரம் எனும் கோட்பாடு விழுதுகளால் மூடி மறைக்கபட்டிருந்தது. அதன் ஒரு கிளை மட்டும் குளத்தை நோக்கி இருந்ததால். அந்த கிராம வாலில்லா வானரங்களுக்கு நீச்சல் டைவிங் போர்டு அதாதான்.

"ஏய் மலை தள்ளுடி நான் எப்புடி குதிக்குறேன்னு பாருடி டைவ் அடிக்கவா?" என மேலே நின்றுகொண்டிருந்தாள். கீழே இருந்த மலை எனும் மலர்விழி "குதிக்காதடி நான் இடம் சொல்றேன் அங்க

குதி" என உயரம்தாண்டுதலும் நீளம் தாண்டுதலும் சேர்ந்து கொண்டது.

ஆனால் மலர் குறித்த இடம் வழக்கமான இடத்தைவிட ஒரு அடி தூரமாக இருந்தது. அதனால் நமது வீராங்கனை சற்று பின்னாலிருந்த ஓடி வந்து பாய்ந்தாள். சிறுதவறு நேரவே காற்றினால் அந்த ஒல்லி உடம்பு அரிசியின் இலக்கு இழந்தாள்

"நீ தோத்துட்டடி நான் சொன்ன இடம் இது இல்ல " என மலை கிண்டல் செய்ய அதை அரிசியால் ஏற்றுகொள்ள இயலவில்லை. "இருடி நான் மறுபடியும் தாவுறேன்" என வெளியே சென்று மரத்தில் ஏறினாள். அவளுக்கு முன் ஒரு சிறுவன் ஏற முயற்சி செய்து கொண்டிருந்தான். அவனை பின்னால் இழத்துபோட்டவள். "டேய் சின்ன பசங்க எல்லாம் பேய் ஓரமா விளையாடுங்கடா இது பொண்ணுங்க இடம் " என மரத்தில் ஏறினாள். இப்பெழுது என்றுமில்லாமல் சற்று பின்னாலிருந்து ஓட துவங்கினாள்.

காற்றின் வேகம் சீராக இருப்பது அவளது சிக்கலான ஈராமான முடி காற்றில் அசைவதால் அறியமுடிந்தது. உடலில் ஒட்டியிருந்த நீர் கால்களின் பாதங்களை அடைய பளபளப்பாக மின்னியது. முதல் அடி ஓர் சிறுத்தையென பாய்ந்தாள். இரண்டாம் அடியில் கிளையின் கால்தூரத்தை கடந்திருந்தாள். "யேய் அரிசி உங்க அம்மா பிரம்ப எடுத்துட்டு வாராங்கடி" ஒரு புளியங்காவுக்காக பேட்டியில் பயன்படுத்திய உத்தி அதன் விளைவு மூனாறாம் அடி (அரிசிக்கும் அடி சறுக்கும்) காலின் ஈரபதமும் கவனசிதறலும் ஒன்றினைந்தது சிறுதி வினாடிகள் கழித்து அவள் உணர்ந்தது "அரிசி...." என்ற தன்

தோழியின் கூச்சலும் முப்பது அடியில் பாதியை கடந்துவிட்டோம் என்பது மட்டுமே. அடுத்த நொடி காத்துவதற்கு வாயை திறக்கும் முன் தரையை அடைந்திருந்தாள். கண்கள் மூடியிருந்தன.

"அரிசி அரிசி கண்ண தொறடி" என தோழி அன்பரசியை உழுக்கினாள். எந்த பயனும் இல்லை. சிறுவர்கள் சூழ்ந்து கொள்ள புள்ளை பிடிக்கும் ஊர் தாத்தா வந்து அன்பரசியை தூக்கிகொண்டு நடந்தார். ஒழுங்காக குழந்தைகள் சாப்பிடவேண்டும் என அந்த பெரியவர் புள்ளைபிடிக்கும் தாத்தா என தாய்மார்கள் கூறுவதுண்டு.

அன்பரசியை ஒரு தின்னையில் கிடத்தி மார்பில் அழுத்தினார். சிறுது நேரத்திலேயே மூச்சுவிட துவங்கினாள். இந்த புள்ளை பிடிக்கும் தாத்தாவை கண்டு பயந்து எழுந்து ஓட முயன்றாள். ஆனால் தலைசுற்றல் காரணமாக அன்பரசியால் நிற்க முடியவில்லை. உலகமே சுற்றியது. பொத்தென விழுந்தாள். அந்த கனம் இந்த கால வாட்ஸ்அப் தோற்கும் அளவிற்கு பாட்டிகளின் புரளி ஆப் வேகமாக செயல்பட்டதின் விளைவு பார்வதி வந்து சேர்ந்தார். பிறகு ஐயனார் கேவிலுக்கு அன்பரசி கெண்டுசெல்லபடவே தன் செல்ல சுட்டி குழந்தையான அரிசியை வேப்பிலையால் மந்திரித்து கொண்டிருந்தார் பூசாரி. இருவரும் அந்த அளவுக்கு நெருக்கம் பொங்கல்சோறுக்காக!.

கோயிலின் வெளியே "என்னடி புள்ள வளக்குற" என்ற குரலுடன் பார்வதி கன்னத்தில் கைவைத்து நின்றாள். அவளின் எதிரில் போஸ் கோபத்துடன் நின்றிருந்தார்.

*உள்ளே கோயிலை சுற்றிலும் பார்த்தவள் தலையை பிடித்துகொண்டு "யார் நீங்க" என பூசாரியை பார்த்து கேட்டாள்.*

## *அத்தியாயம் - 15*

*"தாத்தா எனக்கு பொங்கல் எங்கே?!" என்ற அதிகாரதோரணையுடன் குட்டை பாவாடை அணிந்த ஒரு குச்சி வந்து நிற்க "அய்யோ தீந்துடுச்சுமா சீக்ககரம் வந்துருக்கலாமே" என பூசாரி கூற "தாத்தா குழைந்தையும் தெய்வமும் ஒன்னுதானே" வேடிக்கையான கேள்வி "ஆமா பாப்பா" எதார்த்தமான பதில் "அப்போ சாமிகிட்ட இருக்குல்ல அதை எடுத்து குடுங்க" மாட்டிக்கொண்டார் அந்த வயதான அய்யனார் கோவில் பூசாரி.*

*இறுதியாக சாமியிடம் இருந்த இனிப்பு அரிசியின் கையில் வரவே "ஏய் மலை மணி ராமு முட்டகன்னி எல்லாம் ஓடி வாங்க பொங்கல் கிடைச்சுடுச்சு" என்ற குரலில் ஒலிக்க கோவில் மணி தோற்றுவிட்டது.*

*மடையை திறந்துவிட்ட வெள்ளம் என ஒரு சிறுவர் பட்டாளம் சூழ்ந்து கொள்ள அவர்கள் கலையும் போது அந்த வாலையிலையை திரும்பவும் மரத்திலேயே ஒட்டிவிடலாம் என்னும் அளவிற்கு*

இருந்தது. "சரி தாத்தா நாங்க வாரோம்" என வாண்டு நிற்க "நீ சாப்பிடலயாமா?" என பூசாரி அன்பரசி பொங்கல் சாப்பிடாததை கண்டுவிட்டார். "இல்ல தாத்தா என் ஃபிரண்ட்ஸ் சாப்பிட்டாங்கல்ல அதுவே போதும் " அப்படியே தந்தையின் குணம். "உங்க அப்பா யாருமா?" என பூசாரி கேட்கவே அருகில் இருந்த மலர் "இவள் மிலிட்டரிகாரர் பொண்ணு" என சிரித்தாள். "பேர் என்னமா?!" அடுத்து ஆவலில் கேட்க மீண்டும் தொடர்ந்தாள் மலை "இவ அன்பரசி " என கூறும்முன்னே மலரின் கையில் கிள்ளினாள் அரிசி "ஏன்டி கிள்ளுற?"

முறைத்தாள் அரசி. "தாத்தா என் பேர் அரிசி" என ஓடிவிட்டாள். சிறுவர்களின் குறும்பை கடவுளும் பணிகலைப்பை போக்க வந்தமர்ந்து ரசிப்பார்போலும் என சிரித்துகொண்டே விபூதி தட்டை எடுத்துகொண்டு கோயிலினுள் புகுந்தார். அன்றிலிருந்து அன்பரசிக்கென்று ஒரு பொங்கல் ஒதுக்கீடு இருக்கும் என்றும் பூசாரி தாத்தாவினிடத்தில்.

ஆனால் இன்றோ "நீங்கள் யார் " என அவள் கேட்டது பூசாரியின் மனதை காயபடுத்தியிருந்தாலும். அந்த ஆலமரத்தில் குழந்தையில்லாத ஏக்கத்தால் தூக்குபோட்ட ரஞ்சிதம் தான் பேயாக அன்பரசயின் உடலில் இருக்கிறாள் என நம்பவே அந்த மனு பார்வதியிடமும் போஸிடமும் சென்றடைந்தது. அதன்பின் சில சம்பிரதாயங்கள் நடந்தேறவே பின் உறங்கசென்ற அன்பரசி விடியும் போது இயல்புநிலைக்கு திரும்பினாள். ஆனால் அரிசி என இவளை யாராவது அழைத்தாள் லேசான குழப்பம் ஏற்படும் "யார் அந்த அரிசி" என்று.

அந்த நாளின் நினைவுகளை புரட்டிகொண்டிருந்த போஸின் எண்ணம் தன் இறப்புக்கு முன் மகளின் மாங்கல்யத்தை பார்க்கவேண்டும் என்பது மட்டுமே. "மாப்பிள்ளை இவ இப்படிதான் கழுத சரியா சாப்பிடாம மயங்கிவிழுறா வாங்க வீட்டுக்கு போகலாம்" என உத்தரவிட்டார். அதை மறுக்க முடியாத சந்துரு டாக்டரின் கையில் வண்ணகாகிதங்களை திணித்துவிட்டு அவரிடமிருந்து ஒரு விசிட்டிங் கார்டை எடுத்துகொண்டு கிளம்பினான் அன்பரசியை தூக்கிகொண்டு.

காரில் ஏற்றியதும் மெதுவாக கீயர்களை உயர்த்தினான். கூடவே தைரியமும் சிறிது உயர்ந்தது. "மாமா இப்போ இவ்வளவு அவசரமா கலாயானம் தேவையா?" என கேட்கவே பதில் வந்தது போஸிடமிருந்து அல்ல மாறாக தன் தந்தை சன்முகத்திடமிருந்து "டேய் மாமாவ எதுத்து பேசுற அளவுக்கு பெரிய மனுசனா நீ. உங்க வாழ்கை எப்படி இருக்கனும்னு எங்களுக்கு தெரியும்டா பேசாம ரோட்டை பார்த்து வண்டி ஓட்டு" என முதல்முறையாக கோபத்தை காட்டினார். அதற்குள் அந்த நாய் குறுக்கே விழ வண்டியும் இரண்டாவது கியருக்கு சொல்ல தைரியமும் கூடவே சென்றது.

ஆனால் போஸ் மட்டும் எதுவும் பேசாமல் அமைதியாக ஜன்னலை வெறித்துகொண்டு மகளை தோளில் சாய்ந்துகொண்டு அமர்ந்திருந்தார். "அம்மா நான்தான் சொல்றேன்ல பொட்டைபிள்ள தான் பிறக்கும்" என அழுத்தமாக பதட்டத்துடன் அமர்ப்திருந்தார் போஸ். "அட பேடா நம்ம ஏழு தலைமுறையில் ஆண்வாரிசுதான்டா அதுனால இதுவும் ஆம்பளைபிள்ளைதான் உன்னை மாதிரியே

ஊருக்கு அடங்காம திரியும்" என போஸின் தாய் குமட்டில் குத்த பிறந்தாள் அன்பரசி இருவரின் எதிர்பார்ப்பையும் மீறாமல். பெண் வாரிசாகவும் ஊருக்கு அடங்காமலும். ஆனால் அவளும் பெண்தானே காதல் என்பது பெண்மையின் இயல்புதானே. அந்த சம்பவமும் ஒரு நாள் அரங்கேறியது.

"ஏன்டா அன்பு இந்த ரூம் குள்ளேயே அடைஞ்சிகிடக்க? " என உள்ளே வந்தார் போஸ் கையில் சாப்பாட்டுடன். அன்பரசியின் முகத்தில் சிறிதும் பொழிவு இல்லாமல் கண்கள் கலங்கியிருந்தன. "ஏன்டா அன்பு அழற?" பதறினார் போஸ். ஆனால் அவளோ எதுவும் பேசாமல் அழுதாள்.

பாரதியின் புதுமை பெண்ணின் கண்ணில் நீரா என பார்த்து வியந்த போஸ் எதுவும் கேட்காமல் அமைதியாக சாப்பாட்டை பிசைந்து அன்பரசிக்கு ஊட்டினார். முதலில் மறுத்தவள் பின் அன்பின் பிடியில் உண்ண தெடங்கியிருந்தாள். பின் அப்படியே உறங்கிபோனால். அதன்பின் அவளது அறையில் நடந்த தேடுதல் வேட்டையில் சிக்கிய ஆவணங்கள் கண்ணீருக்கு காரணம் காதல் என காட்டியது. இறுதியாக சிக்கிய அந்த போட்டோவை பார்த்ததும் போஸின் இதயமே நின்றுவிட்டது. தான் பெரிய தவறு செய்துவிட்டதாக எண்ணி வேதனைப்பட்டார். அது ரத்தபுற்றுநோயை ஊக்குவிக்கவே போஸின் ஆயுட்காலமும் குறைய துவங்கியது.

இறுதியாக வீட்டினை அடைந்தனர். அன்பரசியை அரை தூக்கத்தில் கைத்தாங்கலாக நடக்கவைத்து ரூமில் சேர்த்தாகிவிட்டது. வாயில் விரல் வைத்துகொண்டு தூங்கியவளை தோளில் சுமந்தகாலம்

நினைவில் வந்து போஸின் கண்ணில் நீரை வரவழைத்தது. சந்துருவின் அறையின் பெட்டில் சாய்க்கபட்டாள். அவளருகில் அமர்ந்த போஸ். "அன்பரசி நீ தான் என் இளவரசி இன்னும் நீ எனக்கு சின்ன குழந்தைதான். ஆனா நீ உன் மனசுக்குள்ள எவ்வளவு ககஷ்டம் வச்சிஉருக்கேனு எனக்குமட்டும்தான் தெரியும். உன்னைகூடத்துக்கு அனுப்பிவிட்டு நான்தான் அதிகமா கண்ணீர் விட்டேன். அது யாருக்கு தெரிய போகுது. ஆனால் எனக்கு சின்ன குழந்தையா தெரிஞ்ச நீ திடீர்னு வளந்துவந்து நிக்குற அதனால உன்னை பாதுகாக்க நான் கொஞ்சம் கன்டிப்பா நடந்திருந்தா மன்னிச்சிடுடா. கடைசியா ஒன்னு பன்னபோறேன்டா எப்படி உன் நல்லதுக்காக உன்னை ஸ்கூல்க்கு நீ அடம்புடிச்சாலும் அடிச்சு அனுப்புனேனோ அதுமாதிரி நீ மனசால வேதனை பட்டாலும் இந்த கல்யாணம் நடக்கும். நான் இல்லாதப்போ நீ சந்தோஷமா இருக்கனும்டா" என கண்ணில் நீரை வடித்தார். பின் ரூமைவிட்டு சிரித்துகெண்டே வெளியே வர உள்ளே அன்பரசியின் கண்ணிலும் நீர் வெளிவரதுவங்கியிருந்தது. மருந்தும் அந்த டாக்டர் போல பழையது போல.

வெளியே நின்றிருந்த சந்துரு வானத்தை வெறித்துகொண்டிருந்தான். சன்முகம் தன் மகனின் அருகில் வந்து அமர்ந்தார். "என்னப்பா யோசனை இந்த கல்யாணம் உனக்கு பிடிக்கலையாப்பா?!" என கண்களை பார்த்து கேட்க "அப்பா அன்பரசி எனக்கு தெய்வம் மாதிரி அவ என்கூட இருந்தாலே உலகத்தையே ஜெயிச்சுடுவேன். ஆனால்..." என இழுத்தான்.

*"காதல்....?!" என சன்முகம் கூற "ஆமா டாட்" என பதிலளித்தான் சந்துரு. அதிர்ச்சியில் திடுக்கிட்டார் சன்முகம். ஐயோ அவசரத்தில் உளறிவிட்டேமே என நினைத்துகொண்டு "அன்பரசியோட காதல்ப்பா... அவ யாரையோ லவ் பன்றானு நினைக்குறேன்" என சந்துரு கூறவே*

*"ஆமா சந்துரு அவ லவ் பன்னா ஆனா இப்போ நினைவுகளோட மட்டும்தான் வாழுறா" என வெளியே வந்த போஸ் விடையளித்தாள். இருவரும் போஸை பயந்ததுபோல் பார்க்க.*

*"அவன் செத்துட்டான் " என அன்பரசியின் காதலின் நிலையை முடித்தார் போஸ்.*

## *அத்தியாயம்* - 16

*"அவன் செத்துட்டான்" என கூறிக்கொண்டே வெளியே வந்த போஸை இருவரும் கண்இமைக்காமல் பார்த்தனர். "என்னடா சொல்ற?!" அதிர்ந்தார் சன்முகம்.*

"ஆமா வேற என்ன சொல்ல அந்த பையன் என் கண்முன்னாடிதான் வேற ஒரு பொண்ணு கழுத்துல தாலி கட்டினான். ஆனா இவ அவனையே நினைச்சுகிட்டு இவ வாழ்கையை கெடுத்துகிறா. நீ சொல்லுடா என் பொண்ணு நல்லா இருக்கனும்னு நான் நினைக்குறது தப்பாடா?!" என கூறும்போதே குரலில் தழும்பல் ஏற்பட அதை சமாளிக்க நிலவை பார்த்தார். கண்ணீரை வெளியே வராமல் இருக்க உத்தி அது.

நண்பனின் நிலையை உணர்ந்த சன்முகம் அமைதியாக இருக்க "எப்போ??" என கேட்டான் சந்துரு. சன்முகம் சந்துருவை வெறுமையான பார்வையுடன் பார்க்க அமைதிகாக்க முடிவு செய்தான். அதற்குள் தன்னை சமாதானப்படுத்தி கொண்ட போஸ் தொடர்ந்தார் "அது ஒரு இரண்டு வருசத்துக்கு முன்ன இதுதான் அவன்" என அந்த போட்டோவை சந்துருவிடம் கொடுத்தார்.

இப்படி ஒரு அன்பான பெண்ணை விடுத்து செல்ல அவனுக்கு எப்படி மனது வந்தது யார் அந்த முட்டாள் என நினைத்து கொண்டு அதை திருப்பினான். அதில் ஓர் இளைஞன் கையில் பூங்கொத்துடன் மண்டியிட்டு நிற்க அவனெதிரில் அன்பரசியோ அதை ஏற்கும் விதத்தில் வெட்கத்துடன் நின்றிருந்தாள் சுற்றிலும் புல்வெளிகள் நிறைந்த இடத்தில். நிச்சயம் இந்த புகைப்படம் எடுத்தது அவளுக்கு தெரிந்திருக்க வாய்ப்பில்லை அவளது முகத்தில் அது நன்றாகவே தெரிகிறது. ஆனால் அவன் அவளை சந்தோஷப்படுத்த இவ்வாறு செய்திருக்கிறான் ஆனால் அன்பரசயின் கண்ணில் தெரிந்த அந்த உணர்வை சந்துருவால் உணரமுடிந்தது.

அன்று

கேன்டீனில் இருந்து தப்பி ஓடினான் ராஜேஷ். அவன்மீது கொலைவெறியுடன் இருந்தாள் அன்பரசி. "டேய் நில்லுடா உன்னை கொல்லாம விட மாட்டேன்" என கத்திகொண்டிருக்க அனைவரும் அவளையே பார்த்துகொண்டிருந்தனர். மீண்டும் அந்த பாட்டி இவளை உரசிக்கொண்டு அந்த வண்டியை தள்ளிக்கொண்டு நடந்தாள். "இந்த கெளவி வேற என்னை ரொம்ப டார்ச்சர் பன்னுதே" என தலையில் கைவைத்துகொண்டு அங்கிருந்த ஒரு இருக்கையில் அமர்ந்தாள்.

"என்னடி இன்னைக்கு எவன் சிக்கினான்" நக்கலான முகத்துடன் ஜெனி அன்பரசியின் தோளில் கை வைத்தாள். அவளை திரும்பி பார்த்த அன்பரசி. "என்னடி சொல்ற" என்றால். "பின்ன என்னடி நீ கத்துற கத்துல இந்த கட்டடமே இடிஞ்சு விழுந்துடும் போல நான் கிரவுண்ட்ல இருந்தேன் அங்க இருந்து இங்க வாரேன்" என கிண்டலாய் கூறினாள்.

"ஏன்டி நீ வேற என்ன கலாய்குறியா" என அன்பரசி சங்கீதாவை பார்த்தாள். அன்பரசி யின் குறும்பை ரசிக்கும் ஒரே ஜீவன் ஜெனிதான் அதிலும் தன் வெண்ணிற ராசியான சுடிதாரை மையால் வர்ணம் பூசிய ராட்சசியை மன்னிப்பதே பெரிய விசயம் இதில் ரசிக்கிறாள் என்றால் அறிதுதான். ஏனென்றால் அன்பரசியிடம் இருக்கும் குழந்தை மனதை அறிந்தவள் ஜெனி மட்டுமே ராஜேஷையும் லிஸ்ட்ல வச்சுக்கோங்க.

"சரி என்னடி பிரச்சனை ஏன் கத்திகிட்டு இருந்த?!...அண்ணா ரெண்டு காஃபி" என ஆர்டரும் கொடுத்தாள். அன்பரசி அவளை முறைத்து பார்க்க "அண்ணா ஒரு டீ ஒரு பூஸ்ட் " என ஆர்டர் மாற்றப்பட்டது ஆம் அன்பரசிக்கு பூஸ்ட்தான் விருப்பம். மீண்டும் முறைத்தாள் அவள் கோபத்திற்கு காரணம் ஜெனிக்கு தெரிந்ததுதான். சற்றுமுன்.

"டேய் ஏன்டா ஓடுற" கேன்டீனை நோக்கி நடந்துவந்த சங்கீதா கேட்க. "அட என்மா நீ வேற இன்னும் ஒரு நொடி நான் நின்னுருந்தாலும் அந்த ராட்சசி என்னை கொன்னுடுப்பா அதான் கடல் மேல ஓடுற மாதிரி ஓடி வந்துட்டேன்" என மூச்சுவாங்கிகொண்டே பதிலளித்தான் ராஜேஷ். "அப்புடி என்னடா பன்ன நீ" என அன்பரசியின் மேல் குற்றமிருக்காது என்பதைபோல கேட்டாள்.

"அட ஏன்மா நானாவது அவளை சும்மா பாத்துகிட்டு இருந்தாவது சந்தோஷமா இருந்தேன் உன் பேச்சை கேட்டு லவ்வ சொன்னா என்னை அடிக்க வர்ரா" என சிரித்துகொண்டே கூறினான்.

"இரு நான் போய் பேசி பாக்குறேன்" என ஜெனி கிளம்ப "போமா அப்புடியே அவ கையில ஒரு கத்திய கொடுத்துவிட்டுடு மொத்தமா குளோஸ் பன்னாட்டும்" என சிரிக்க "போடா லூசு" என ராஜேஷின் முதுகில் செல்லமாக அடித்துவிட்டு கேன்டீனை நோக்கி நடக்க அங்கே பத்திரகாளி வேசத்தில் இருந்தாள் அன்பரசி.

"ஏன்டி கோபமா இருக்க நீ இப்புடி மூஞ்சிய வச்சுக்கிட்டா சிரிப்புதான் வருது. நல்லா கொழந்தை கோபபடுறமாதிரி இருக்கு" என சிரிக்க துவங்கினாள் ஜெனி. "ஏன்டி சொல்லமாட்ட எல்லாம் உனக்கு வந்தாதான் தெரியும்" என அன்பரசி திசையை மாற்றினாள்.

"என்ன எனக்கு வரனும் புரியுறமாதிரி சொல்லுறியா" என கேட்கவே "அந்த ராஜேஷ் தான்டி என்னை லவ் பன்றான்னு சங்கீதாகிட்ட சொல்லிருக்கான்" என கோபத்துடன் கூறினாள்.

"ஓ உனக்கு அதுதான் பிரச்சனையா வேணும்னா ராஜேஷை என்கிட்ட விட்டுடு நான் பாத்துக்கிறேன்" என ஜெனி சீன்டினாள். "என்னடி சொல்லுற " ஒரு வியப்பு தெரிந்தது அன்பின் முகத்தில்.

"நீ தான்டி சொன்ன எல்லாம் உனக்கு வந்தால்தான் தெரியும்னு அதான் ராஜேஷை நான் லவ் பன்னிகிறேன் அப்புறம் அவன் உன்னை தொந்தரவு பன்ன மாட்டான்" என சிரித்தாள் ஜெனி. இப்போது அன்பரசியின் முகத்தில் ஒரு வாட்டம் தெரிந்தது சோகமாக அந்தவட்ட மேஜையை வெறித்தாள் அன்பு.

"என்னடி டல் ஆகிட்ட நான் சும்மா விளையாட்டுக்கு சொன்னேன்" என சமாதானம் செய்தாள் ஜெனி.

"இல்லடி ராஜேஷ் என்னை லவ் பன்றான் எனக்கும் அவனை ரொம்ப பிடிக்கும் ஆனா அவன் அதை ஒரு மூனாவது மனுசிகிட்ட சொல்லி அனுப்புறான் அதுவும் அந்த சங்கீதாகிட்ட அதான்டி எனக்கு ரொம்ப கோவமா வருது." என முகத்தில் சோகத்தை காட்டினாள்.

'அட பாவி டேய் உன்னை அன்புகிட்ட நேரடியாதானே லவ்வ சொல்ல சொன்னேன் நீ எதுக்குடா சங்கீதாகிட்ட சொன்ன இருடா உன்னை வச்சுகிறேன்' என மனதிலேயே ராஜேஸை திட்டினாள். அன்பரசியின் விசயத்தில் ஒரு மூன்றாவது நபர் தலையிடுவதை அவள் விரும்பமாட்டாள். ஆனால் சூழ்நிலை அவ்வாறு அமைந்துவிட்டதே என் செய்வது.

"சரி விடுடி எல்லாம் சரி ஆகிடும்" என அன்பை சமாதானம் செய்துகொண்டே தன் கைபேசியில் குறுஞ்செய்தியை பறக்கவிட்டாள் ஜெனி. அது நேராக ராஜேஷின் கைபேசியில் அடைக்கலம் தேடியது.

'ஜெனி எதுக்கு கேன்டீன் வர சொல்லறா அதுவும் இல்லாம இப்ப தானே அங்கிருந்து தப்பிச்சு வந்தோம் சரி என்ன நடக்குதுன்னு பாக்கலாம்' என நினைத்துகொண்டு நடந்தான்.

அங்கே சூடான டீயும் பாலும் வந்து சேர்ந்தது இருவரும் பருக துவங்கியிருந்தனர். ராஜேஷும் அங்கு வந்து சேரவே "டேய் போய் பில் பே பன்னிட்டு வா" என ஜெனி கூற இவள் யாரை

சொல்லுகிறாள் என அன்பரசி திரும்பிபார்த்தாள். அங்கே ராஜேஷ் கவுண்டரை நோக்கி நடந்து கொண்டிருந்தான்.

"இவன் ஏண்டி இங்க வந்தான். நீயே அவன்கூட பேசிக்கோ நான் கிளம்புறேன்" என அன்பரசி எழுந்தாள். "நான் உன் ஃபிரண்ட்னா உட்காருடி " என ஜெனி அதட்டினாள். நட்பு எனும் வலையில் அன்பை வீழ்த்துவது எளிது.

அவனும் அவர்கள் அருகில் வந்தான் ஆனால் அமராமல் நின்றுகொண்டிருந்தான். "உனக்கு என்ன தங்கத்துலயா சேர் போட முடியும் உட்காருடா" என ஜெனி மிரட்ட 'இருந்தாலும் இது ரொம்ப ஓவர் ஜெனி' என நினைத்துகொண்டு அமர்ந்தான் அன்பரசியோ முகத்தை திருப்பிகொண்டு அமர்ந்தாள்.

"ஹலோ அன்பு இவர் ராஜேஷ் உங்க கிளாஸ்தான் கொஞ்சம் பணகாரவீட்டு பையன் கொஞ்ச நாளா உன்னை சைட் அடிக்குறாரு உன்னை பிடிச்சிருக்காம்" என நக்கலாக கூறினாள். அன்பரசி ஜெனியை முறைத்து பார்த்தாள்.

"அப்புறம் ராஜேஷ் இவங்க அன்பரசி நீங்க இவங்களை பாக்குறது இவங்களுக்கு ஏற்கனவே தெரியும் இந்த மேடமும் உங்களை லவ் பன்றாங்க ஆனா சொல்ல மாட்டாங்கலாம். அதுவும் இல்லாம நீங்க இவங்ககிட்ட நேரடியா சொல்லாம தூது அனுப்புனதால உங்க மேல செம்ம கோவத்துல இருக்காங்க" என ஜெனி கூறவை அன்பரசி ஜெனியின் தொடையை கிள்ளினாள்.

"ஏன்டி கிள்ளுற உண்மையை தானே சொன்னேன். இப்புடியே கடைசிவரைக்கும் ஒருத்தரை ஒருத்தர் பாத்துக்கிட்டே இருக்க போறீங்களா? பேசுனா தாண்டி தெரியும் என்ன இருக்குன்னு" என அன்பரசியிடம் கூறினாள்.

காதல் ஜோடிகள் மௌனம் காக்கவே "அட யப்பா சாமி நான் கிளம்புறேன் இனி நீங்களாவது உங்க காதலாவது எனக்கு தெரியாது " என ஜெனி தன் புத்தகத்தை எடுத்துகொண்டு கிளம்பினாள்.

ராஜோஷோ பதட்டத்தில் எச்சிலை விழுங்க அன்போ தன் விரல் கிரீடங்களை கடித்து கொண்டிருந்தாள். பேச ஆயிரம் இருந்தும் மௌனம் ஏனோ மொழியாக இருவரிடத்திலும் எண்ணங்களும் மனதும் இணைந்ததுபோல ஓர் அமைதி நிலவியது.

## அத்தியாயம் - 17

ராஜேஷ் மேஜையையும் அன்பரசியோ அந்த பால் குவளையையும் வெறித்துகொண்டிருக்க ஜன்னலின் வழியே "ஏய் ஒழுங்கா பேசி தொலைங்கப்பா" என ஜெனி கூறிவிட்டு நகர்ந்தாள். ஆனாக முதலில் துவங்கலாம் என நினைத்து நிமிர்ந்தான் ராஜேஷ் ஆனால் அவள்

விழியில் தோற்றான் தலைகுனிந்தான். நீ வாயாடி தான இப்ப ஏன் பேசாம இருக்க என மனது அன்பரசியை தூண்டிவிடவே அவனது முகத்தை பார்த்தாள். இதழ்கள் வார்த்தைகளை சிந்த தயாராகின. அதற்குள் அவன் எழுந்துவிட்டான்.

"போறியா?!" என ஏக்கமாக கேட்டாள். குரலில் அவ்வளவு பலம் இல்லை

"என்ன?!" காதில் சரியாக விழாததால் கேட்டான்.

"என்னை விட்டு போகபோறியானு கேட்டேன்" மீண்டும் முகத்தில்

வாட்டம்

தெரிந்தது. அதுவரை அவளது முகத்தை அப்படி கண்டதில்லை. அவனது இதயத்தில் ஏதோ செய்யவே அவன் தன்னை அறியாமல் அமர்ந்தான். "இல்ல சொல்லு" என ராஜேஷ் கூறினான்.

"நீயே சொல்லு" முதல்முறையாக வாயாடியின் வாயிலிருந்து குறைவான வார்த்தைகள் உதிர்ந்தன. இந்த அன்பரசியை ராஜேஷ் எதிர்பார்க்கவில்லை. பாய்மரத்தை திருப்பினான்.

"ஹேய் என்ன பேய் எதுவும் பிடிச்சுருச்சா உனக்கு நீ இப்படி எல்லாம் பேசமாட்டியே" என நக்கலாக சிரித்தான். மீண்டும்

மலையேறினாள் ராட்சசி "ஆமாண்டா நீ பன்ன வேலைகது நான் உன்னை கொல்லாம்னுதான் வந்தேன் ஏதோ ஜெனி சொன்னதால நீ தப்பிச்ச" என குழந்தை முகத்தில் கோபத்தை காட்டினாள்.

"ஏய் உன்னை லவ் பன்றேன்னு சொன்னது தப்பா பிடிச்சிருந்தா பிடிச்சுருக்குனு சொல்லு பிடிக்கலைனா அமைதியாக இரு நானாவது தூரத்துல இருந்து உன்னை பாத்துக்கிட்டே வாழ்கையை ஓட்டிருவேன்ல" என மீண்டும் சிரித்தான். அவள் மீண்டும் முறைக்கவே "அப்போ என்னை ரொம்ப பிடிச்சிருக்கு அப்படிதானே?!" என ஊடல் தொடங்கினான்.

"ஆமா இவரு பெரிய மைசூர் மகாராஜா இவரை பிடிச்சுருக்க போகுது. டேய் கோபமா இருக்கேன் அப்புறம் அடிச்சுடுவேன் பாத்துக்கோ"

"அம்மா தாயே மைசூர் ராஜா எல்லாம் செத்துட்டாங்க அந்த அளவுக்கு தகுதியா நான் மட்டும்தான் இருக்கேன்." என கூறிவிட்டு "எனக்கு ராஜா கெட்அப் போட்டா நல்லா இருக்குமா?" என அவளை பார்த்து கேட்டான். அதற்கும் முறைத்தாள்.

"என் பட்டத்து ராணியை ஏன் இந்த கோபம்; உங்கள் இதழ்களில் புன்னகைவரவைக்க நான் என்ன செய்யவேண்டும். என் தவறு என்னவோ" என செந்தமிழ் என முயற்சி செய்து தோற்றான்.

"என்னை லவ் பன்றேன்னு என்கிட்ட சொல்லாம ஏன்டி அந்த சங்கீதா கிட்ட சொன்ன" என ஆழ்மனதை திறந்தாள். அந்த வாயாடியிடம் ரகசியங்கள் ஓட்டைபானையில் இட்ட தேநீர் போல்தான்.

"ஓ அதுதான் கோபமா. அது என் தப்பில்லையே" என தப்பிக்கநினைத்தான் "அப்போ யாரு தப்பு" என்பதைபோல் முறைத்தாள். கண்ணாலயே பேசுறாளே என நினைத்துகொண்டு "அம்மா தாயே நீ காதுல ஹெட்போனை மாட்டிகிட்டு லூசு மாதிரி தலை ஆட்டிகிட்டு இருந்தா நான் சொல்றது எப்புடி உனக்கு கேட்கும் அதுவும் இல்லாம உன் டேபிள்க்கு அடியில் லட்டர் எழுதிவச்சா அதை டிஷ்யு பேப்பர் மாதிரி பெஞ்ச் தொடைச்சு வீசிட்ட திருப்பிகூட பாக்கலை. சரி உன் புக்ல முதல் பக்கத்துல எழுதி வச்சேன் அந்த புக்கை நீ திருப்பிகூட பாக்கலை புதுசா வச்சுருக்க ஆனா எப்புடி தான் பாஸ் ஆனியோ தெரியலை" என தலையில் கைவைத்தான்.

அன்பரசி பிடித்துக்கொண்டது ஒரே பாயின்ட்தான் "நீ அந்த சங்கீதாகிட்டதான சொன்ன என்கிட்ட சொல்லலைல உன்கூட பேசமாட்டேன் போடா" என லேசாக சிரித்தாள் அவன் கவனகக்காதவாறு.

"சரி இந்த பொண்ணு சரியா வரமாட்டா நமக்கு அந்த சங்கீதா தான் கரெக்டா இருப்பா ஓகே அன்பு பாய் " என எழுந்தான். அடுத்த நொடி சரமாரியாக தன் மென்கரங்களால் அடித்தாள். கோபத்தையும்

அன்பையும் ஒருசேர காட்ட அவளுக்கு வழி தெரியவில்லை போலும்.

"ஏய் லூசு சுத்தமா வலிக்கவே இல்லடி நல்லா குச்சி கைய வச்சுகிட்டு ஏன்டி இந்த ஸ்டன்ட்லாம் ட்ரை பன்ற " சிரித்தான்.

"உனக்காக வெயிட் பன்னேன்ல நான் லூசுத்ன்டா. என்னைவிட்டுட்டு இன்னொருத்தி கூட போயிடுவியா இருடா உன்னை" என மேலும் வேகமாக அடித்தாள். பட்டென அவளது இரு கைகளையும் பிடித்துகொண்டு அவள் எதிரில் அமர்ந்தான். அவள் அவனது பிடிக்குள் வந்தாள்.

"விடுடா" என கையை இழுத்தாள் ஆனால் மனது 'என்னை விட்டுடாதடா' என கூறியது. அவளது கண்களை பார்த்து அதை உணர்ந்தவன். "நான் என்னைக்குமே உன்னை விடமாட்டேன்டி ராட்சசி" என அவளது கண்களுக்குள் ஊடுருவினான். இருவரது கண்களும் ஒன்றை ஒன்று பறிமாறிகொண்டிருந்தன.

"டம்..டம்" என சத்தம் கேட்கவே நிஜ உலகிற்குள் வந்தனர். மேஜையிலிருந்த இரண்டு குவளைகளையும் அந்த வண்டியில் பாட்டி எடுத்துபோட்டதால் வந்த சத்தம் அது. அவர் அமைதியாக அந்த வண்டியை தள்ளிக்கொண்டே சென்றார். அன்பரசியின் கோபமோ அந்த பாட்டியின் மீது திரும்ப ராஜேஷோ சிரித்துகொண்டிருந்தான்.

*அதை பார்த்ததும் இவன் பக்கம் கோபத்தை திருப்பினாள். நமது அனைத்தே உணர்வுகளையும் நமக்கு பிடித்தவர்களின்மீதுதானே காட்ட முடியும்.*

*"டேய் இப்ப ஏண்டா சிரிக்குற" என முறைத்தாள். "என்னடா இந்த சுதந்திரநாட்ல சிரிக்க கூட* 144 *போட்டுருக்கா என்ன?" என அவளை சீண்டினான். அவள் முறைத்து கொண்டே அவனை அடிக்க கை ஓ ஓங்கினாள். சுதாரித்துகொண்ட அவனோ எழுந்து ஓட அவளும் பின் தொடர்ந்தாள்.*

*சிறிது தூரம் ஓடியவன் சட்டென நின்றான். அங்கிருந்த மரத்தின் மீது எதையோ அவன் எடுதிருந்தான். அவன் சட்டென நிற்பான் என எதிர்பார்க்காத அன்பரசி அவன்மேல் மோதினாள்.*

*தன் முதுகில் மோதி கீழே விழபோனவளை சட்டென தாங்கிபிடித்தான். பின் அவள் நிற்க அவள் முன் மண்டியிட்டு அந்த பூங்கொத்தை அவளிடம் நீட்டினான். அதை சிறிதும் எதிர்பார்க்காதவள் கைகளால் தன் மலர் முகத்தை வெட்கத்தாலும் ஆச்சரியத்தாலும் மறைக்க முயன்றாள். அவளது கண்கள் விரிய சுற்றிலும் இருந்த பசுமை வெளிகளில் சூரியனின் கரங்கள் பட்டு எதிரொலித்து ஊடுருவியது. காதலும் அலைகற்றையாக பூங்கொத்தின் வழியே கண்களில் இருந்து கண்களுக்குள் கடந்து சென்றன. இருவரும் செய்வதறியாது அப்படியே சிலையாக நின்றன.*

"ஸ்மைல் ப்ளீஸ்" என ஒரு குரல் கேட்க கையில் ஒரு சிறிய புகைப்பானுடன் நின்றிருந்தாள் ஜெனி. அதற்குள் அன்பரசி வெட்கத்தால் விலகி நிற்க முயன்றாள். "ஏய் நடிக்காதீங்கப்பா நீங்க ஓடி வந்தது கீழ விழுந்து ரொமான்ஸ் பன்னது புரபோஸ் பன்னது எல்லாம் இதுக்குள்ள இருக்கு" என கேமிராவை காட்டினாள்.

அதை பிடுங்க அன்பரசி முயன்றாள். சுதாரித்த ஜெனி. "ஹேய் ராஜேஷ் இவளை பிடிச்சுகோ" என கூறவே அவன் இவளது கைகளை கட்டினான் தன் கைகளால். "ஜெனி வேணாம்டி அத குடுடி" என செல்லமாக கேட்டாள்.

"ஏய் நான் இதை போட்டோ எக்ஸிபிசன்ல வைக்காலாம்னு இருக்கேன்" என ஜெனி கூற "உன்னை கொன்னுடுவேன்டி" என செல்லகோபம் மீண்டும்.

"நான் சும்மா சொன்னேன்டி.. ராஜேஷ் அடுத்தவாரம் நான் இதை கழுவி கொடுத்துடுறேன் எத்தனை காபி வேனும்" என அவள் கேட்க பதிலுக்கு "ஒரு லட்சம்" என ராஜேஷ் கூற "ஏன்டா அவ்வளவு" என ஜெனி கேட்டாள்.

"என் ரூம் புல்லா இதை ஒட்டி வச்சு இந்த நொடியை நினைச்சுகிட்டே இருக்கனும் அதான்" என சிரித்தான். "சரிடா " என ஜெனி அங்கிருந்து அகன்றாள்.

என்னை உனக்கு அவ்வளவு பிடிக்குமா என அவனது கண்களை பார்த்தவள் அவனுள் கரைய அவனது தோளில் முகம் புதைத்து கொண்டாள். அந்த தருணத்தையும் தூரத்தில் இருந்த உள்வங்கினாள் அந்த புகைப்பட விரும்பி ஜெனி.

அந்த நிமிடத்தின் நினைவை தான் சந்துரு இன்று கைகளில் வைத்து பார்த்து கொண்டிருந்தான். உள்ளே அன்பரசியோ மருத்துவரின் வேதிபொருட்களின் தயவால் உறங்கிகொண்டிருந்தாள். இல்லை மயக்கநிலையில் இருந்தாள்.

"சரி சாப்பிடவாங்க " என பார்வதி அழைக்கவே மூவரும் தங்கள் கவலைகளையும் ரகசியங்களையும் பார்வதியிடம் மறைக்க நினைத்து பட்டிமன்றத்தின் தலைப்பை மாற்றினர். "இல்லடா நாளைக்கு நிச்சயம் வச்சுகிட்டு இன்னும் யாரையும் கூப்பிடல அதான் யோசிக்குறேன்" என போஸ் கூறினார்.

"என் சைட்ல யாரும் இல்லடா" என சன்முகம் கூற "டேய் நாம் எல்லாம் ஒரே குடும்பம்டா" என தன் தோழனிடம் கூறவே.

"சரிங்க சாப்பிட்டு போய் கூப்பிட்டுகலாம் முதல்ல வந்து சாப்பிடுங்க" என கூறினார்.

"இல்ல பார்வதி சந்துருவுக்கு சாப்பாடு போடு அப்புறமா நாங்க சாப்புட்டுகிறோம். போய் ஊருக்குள்ள சொல்லிட்டு வந்துடுறேன்." என இருவரும் கிளம்பினர்.

"ஏய் அன்பரசி மாப்பிள்ளைக்கு சாப்பாடு வைடி எங்க போனா இவ" என திட்டினாள்.

"அத்த அவளுக்கு உடம்பு சரியில்லை தூங்குறா விடுங்க" என சந்துருகூறவே தன் மகள்மீது அவன் வைத்திருக்கும் பாசம் புரிந்தது. மனதில் பார்வதிக்கு ஒரு மகிழ்ச்சி ஏற்படவே அமைதியாக சென்று சூடான சாதத்தை எடுத்து வந்தார்.

அன்பரசியோ அமைதியாக உறங்கிகொண்டிருக்க கனவில் ராஜேஷின் முகம் வந்துசென்றது. தோழர்கள் இருவரும் நிச்சயம் பற்றி தெரிவிக்க ஊருக்குள் சென்றிருந்தனர். நாளை நடக்கபோகும் விபரீதத்தை அறியாமல்...

## அத்தியாயம் -17

அதிகாலை சேவலையும் வம்புக்கு இழுக்கும் அன்பரசியோ அமைதியாக உறங்கிகொண்டிருக்க ஆதவனோ தன் கடமையென

அவளை ரசிக்க வந்துவிட்டான். எல்லாம் அந்த மாத்திரைகளின் வீரியத்தின் விளைவுதான். இன்று அவளை தொந்தரவு செய்யக்கூடாது என அதிகாலையிலேயே எழுந்தவன் தன் அத்தையுடன் கோலமிடுதல் என வீட்டையே ஒரு கலக்கு கலக்கி விட்டான். "அன்பரசிக்கு கோலம்போடுற வேலை மிச்சம் மாப்ள" என்ற பாராட்டுவேறு கிடைத்தது. அதற்குமேல் சமையலறையிலும் கைவரிசையை காட்டிகொண்டிருந்தான். திடீரென அவனது முகத்தில் சோகம் ஏற்பட்டது எல்லாம் அந்த கைபேசியின் திரையை பார்த்தால்தான். அதில் இருந்த தவறிய அழைப்புகள் சுவேதாவிடம் இருந்து வந்திருந்தன.

"இவ தூங்கவே மாட்டாளா? எந்த இளிச்சவாயனாவது கிடைச்சா நைட்புல்லா கடலை போடுறதே வேலையா போச்சு சே. அன்பரசி எவ்வளவு அடக்கமா இருக்கா அன்பு எங்க சுவேதா எங்க"என தனக்குள் எடைபோட்டு கொண்டு மௌனமாக நின்றான்.

"என்ன சந்துரு யோசனை" என பார்வதி கேட்கவே "ஒன்னும் இல்ல அத்த அன்பரசி முன்மாதிரி இல்லையே அதான் எனக்கு வருத்தமா இருக்கு " என அமைதியாக சென்று வெளியே சென்று அமர்ந்தான்.

சந்துருவுக்கு சிறுவயதில் இருந்த ஒரே நெருக்கமான தோழன் தனிமை மட்டுமே. அதனால்தான் என்னவோ தனிமையும் அவனும் பேசிகொள்ளாத விசயங்கள் இல்லை. ஆனால் இன்றும் நினைவில் நீங்காமல் சந்துரு என்றுமே உச்சரிக்கும் ஒரே வாக்கியம் அன்பரசி(அரிசி) என்பது மட்டுமே. ஒலிம்பிக் வீரர்களின் வெற்றிபடியில் ஏற்றவேண்டும் என்றால் சந்துருவின் மனதில்

முதலில் தன் தாயையும் இரண்டாவது அன்பரசியையும் மூன்றாவது பார்வதியையும் ஏற்றிவிட்டு வான். தன் தந்தைக்கு ஆறுதல் பரிசு மட்டும்தான். முதலிடத்தை பிடிக்க அன்பரசிக்கு வெகுதூரம் இருக்கபோவதில்லை என்பதை புவியின் சுழற்ச்சி உறுதியாக கூறிவிட்டும்.

"அப்படி என்னதான் டா பான்னா அவ உன்னை" என தனிமை இவனிடம் சளைக்காமல் மீண்டும் கேட்கவே அந்த தேய்ந்த கதையை ஓட்டினான்.

அன்று

"ஏய் அரிசி வெளியே வாடி இன்னைக்கு கோனார் தோட்டத்துல மாங்காய் காய்ச்சுருக்குடி" என வெளியில் நின்று கத்திகொண்டிருந்தாள் மலை ஒரு குட்டை பாவாடை அணிந்து மேல் சட்டையுடன். அன்பரசி (மன்னிக்கவும்) அரிசியையும் மலையையும் புதிதாக பார்க்கும் நபர்கள் சகோதரிகள் என்று குழம்புவது வழக்கம்.

"அடி களவானிகளா இருங்கடி அப்பா வரட்டும் உங்க தோளை உறிக்க சொல்லுறேன்" என பார்வதி அரிசியின் கையிலிருந்த பூஸ்ட் பாட்டிலை பிடுங்கினார். திருட்டு மாங்காய் ருசியானது தான் ஆனால் அந்த விசயம் தன் பெரியம்மாவுக்கு தெரிந்தாள் கசப்பு தான். அதிலும் போஸ் பெரியப்பாவிற்கு தெரிந்ததால் முதுகு பழுத்துவிடும் என மலைக்கு தெரியும். அதனால் "இல்ல பெரியம்மா

நாங்க கோனார் தோட்டத்துல பக்கத்துல விளையாடபோறோம்" என பார்வதியை குழப்பினாள்.

"ஏய் நான் கோனார் கிட்ட கேட்பேன். எதாவது புகார் வந்துச்சு தொலைச்சுபுடுவேன்" என வெளியே வந்து பார்த்தார் பார்வதி.

அவரை பார்த்து பயந்த மலை "இல்ல பெரியம்மா நாங்க விளையாடதான் போறோம். ஆமா இன்னைக்கு பூஸ்டா உங்க வீட்டுல நல்லா மனக்குது. ஆமா எப்புடி பெரியம்மா நீங்க மட்டும் நல்லா சமைக்குறீங்க எங்க ஆத்தாவுக்கு அந்த இட்லியவிட்டா எதுவுமே தெரியலை" என பார்வதியின் தலையில் பெரிய இமயமலையை தூக்கி வைத்தாள்.

அதில் உருகி போன பார்வதி "சரிடி வா காஃபி குடிச்சுட்டு போங்க" என மலையை உள்ளே அழைக்க அங்கு அவளை பார்த்ததும் அமர்ந்திருந்த சந்துரு எழுந்து நின்றான். அவனது மனதில் பயம் இன்னும் விட்டு அகலவில்லை. "அந்த கோப்பைல இருக்குடி ஊத்தி குடி " என பார்வதி வெளியே சென்றார்.

கோப்பையில் இருந்த காஃபியை ஊற்றி கொண்டே "யாருடி இது " என தன் தோழியிடம் விசாரித்துகொண்டிருந்தாள். "எனக்கு என்னடி தெரியும் அவன்கிட்டயே கேளு" என அன்பரசி ஒரு டம்ளரை எடுத்து வைக்க மலையின் காஃபி பகிரபட்டது.

"டேய் உன் பேரு என்னடா" கண்களில் தீவிரவாதியை விசாரிப்பது போன்ற தோரணையில் கேட்டாள் மலை. "சந்துரு" என மெதுவாக கூறினான்.

"டேய் சத்தமா பேசுடா" என தன் தோழியுடன் ரேகிங்கில் இனைந்தாள் அரிசி. பயந்துபோனவன் "சந்துரு " என்று சற்று அழுத்தமாக கூறவே "என்னடா சந்து பொந்துனு பேர் வச்சுருக்க" என இரண்டு தோழிகளும் சிரிக்கவே சந்துருவுக்கு தன் தாய் மடியில் சாய்ந்து அழதோன்றியது.

"ஏய் இவனுக்கு ஒரு பேர் வைடி" என மலை கூறவே பட்டப்பெயர் புலவர் அரிசி தன் கன்னத்தில் வைத்துகொண்டு யோசிப்பதுபோல பாசாங்கு காட்டினாள். விண்வெளி ஓடத்தின் கட்டமைப்புக்கு கூட இவ்வளவு யோசித்திருக்கமாட்டார்கள்.

"ஆளு பாக்க ஒல்லியா இருக்கான். உயரமும் கம்மியா இருக்கான்.ம்ம்ம். பேசாம ஓலைபட்டாசுனு கூப்பிடலாம்" என இருவரும் சிரிக்கவே சந்துரு அவர்களை கண்கள் கலங்க பார்த்துகொண்டிருந்தான்.

"ஏய் ஏற்கனவே அந்த பேர் வச்சாச்சுடி வேற எதாவது சொல்லு" என மலை நினைவுபடுத்தினாள். "அப்போ குக்கர்னு கூப்பிடலாம் " என மீண்டும் சிரித்தனர். இப்போது சந்துரு அழுதேவிட்டான். "ஏய் இவன் அழறான்டி இவனுக்கு பேர் எல்லாம் வேணாம் சீ லூசுபையன்" என இருவரும் பலிப்புகாட்டினர். அந்த நொடி பார்வதி

உள்ளே வரவே அம்மா என கட்டிக்கொண்டு அழ ஆரம்பித்தான். அவனது மனதை உணரமுடிந்த பார்வதி தனிமையால்தான் இப்படி இருக்கிறான் சிறுவர்களுடன் விளையாடினாள் சரியாகிவிடுவான் என நினைத்துகொண்டு " ஏய் மலர் நில்லுடி சந்துருவையும் கூட்டிட்டுபோங்கடி தனியா இருந்தா அழுவான்" என கூறவே "சரி வாடா" என அன்பரசி அவனது கைகளை பிடித்து இழுத்துகொண்டு சென்றாள். அதில் இன்னைக்கு நீ செத்தடா என் பார்லீஜியையா பங்குகேக்கற என்ற தொணி இருந்தது.

முதலில் மூவரும் சந்தித்த இடம் கோணாரின் மாங்காய் தோப்பு. "டேய் ஒலைபட்டாசு அந்த மரத்துல ஏறி நான் சொல்லுற மாங்காய பிடுங்கி போடுடா" என சந்துருவுக்கு உத்தரவிட அதில் கோணார் வந்தால் சந்துருவை மாட்டிவிட்டு ஓடிவிடலாம் என்ற திட்டம் பலமாக இருந்தது.

"எனக்கு மரம் ஏற தெரியாது" என சந்துரு கூற அன்பரசி சிரித்து விட்டாள். "டேய் பெரியவங்க கிட்ட மரியாதையா பேச உங்க அம்மா சொல்லிதரலையா" என சந்துருவின் தலையில் கொட்டு வைத்துவிட்டு "அக்கானு கூப்பிடுடா" என மிரட்டினாள். அதற்குள் புகுந்து கொண்ட அன்பரசி "ஏய் நீ எத்தனாப்புடா படிக்குற" என கேட்டாள்.

"நான் தேர்ட் கிளாஸ் " என கூற "அப்புடினா?" என மலை குறுக்கிட்டாள். "தேர்ட்னா மூனாப்புடி" என மலையும் அரிசியும் ஒருவரை ஒருவர் பார்த்து கொண்டனர். அதன் பொருள் இந்ததோழிகள் சந்துருவைவிட ஒருவயது சிறியவர்கள்

என்பதால்தான். ஆனாலும் சந்துருவை அண்ணா என்று கூப்பிட அவர்களுக்கு விருப்பம் இல்லை. அதனால் "சரிடா சந்துரு நீ என்னை மலைன்னு கூப்பிடு இவளை அரிசின்னு கூப்பிடு" என ஒப்பந்தத்தில் கையொப்பமிட்டனர்.

அதற்குள்ளாக அரிசி மரத்தின் மேல் ஏறியிருந்தாள். அந்த காட்சியை பார்த்துக்கொண்டிருந்த சந்தருவோ தன் கவலைகளை சிறிது மறந்திருந்தான். "ஏய் அந்த மாங்காய் வேணாம்டி ரொம்ப புளிக்கும் அங்கிட்டு இருக்குபாரு அதை பிடுங்கு" என உத்தரவிட்டாள் மலை.

"ஏய் கத்தாதடி கோணார் வந்துரபோறாரு" என வசைபாடினாள் அரிசி. "அதை நான் பாத்துகிறேன்டி நீ நல்ல மாங்காயா பாத்து புடுங்கு" என ஆறுதல் கூறினாள்.அதற்குள்ளாக மோட்டார் ரூமில் இருந்து ஒரு ஓசை.

"ஏய் யாருடா அங்க மாங்கா மரத்துகிட்ட" என கோணாரின் குரல் கேட்டது. அழுக்கு பனியனுடன் அழுக்கு வேட்டியுடன் கையிலிருந்த மண்வெட்டியை கீழே வைத்துவிட்டு கையில் ஒரு பெரிய வேப்பங்குச்சியுடன் வந்தார். "அரிசி கோணார் வந்துட்டாருடி ஓடிரு" என மரத்தில் இருந்தவளுக்கு ஓட்டபயிற்ச்சி நடத்தினாள். அரிசியோ பதறிகொண்டு நிற்க மலை குப்பையாக கொட்டபட்டிருந்த தேங்காய் குவியல்களை பயன்படுத்தி கம்பிவேலியை தாண்டினாள்.

அரிசியோ மரத்தில் இருந்து இறங்கும் அவசரத்தில் கிழே பொத்தென்று விழுந்தாள். அன்பரசி வரட்டும் என சந்துரு

*அங்கேயே நின்றிருந்தான். கீழே விழுந்தவளுக்கு காலில் சுளுக்கிகொண்டது. "அய்யோ அம்மா டேய் தூக்கி விடுடா" என சந்துருவை கேட்டாள். அவன் தூக்கிவிட கோணார் அங்கு வந்து சேர்ந்தார்.*

*"மாங்காயா களவாடுறீங்க " என அரிசியை பிடித்தநேரம் சந்துருவை பார்த்தார். உடனே அரிசியை விட்டுவிட்டு சந்துருவின் முன் அமர்ந்தார். "உன் பெயர் என்னப்பா?" என கேட்க "சந்துரு" என்றான்.*

*"அப்பா பேர் ?" கேள்விக்கு "சன்முகம்" என கூறினான். "மில் வச்சுருக்காங்களே அவங்கதான?" என கேட்க "ஆமா" என உறுதிசெய்தான்.*

*சந்தருவின் தாய் இறந்தது கோணாருக்கு தெரியும் அதுவும் இல்லாமல் இந்த மரத்திற்கும் கேணாருக்கும் காவேரிக்கும் இருந்த தொடர்பும் கோணார் மனதில் நீங்காத ஒன்று. சிறுவயதில் பார்த்த காவேரி நினைவுக்கு வரவே சந்துருவும் அதேமாதிரி இருந்ததால் அவனை அப்படியே தூக்கிகொண்டார். அரிசியோ பதட்டத்துடன் நின்றாள். பின் மோட்டார் ரூம்க்கு இருவரையும் அழைத்து சென்று தேன் என தித்திக்கும் மாங்காய்களை கொடுத்தார்.*

*"தாத்தா வேணாம்" என மறுத்தான் சந்துரு. "அட பொடி பயலே இந்த மரம் உங்க அம்மாவோடதுதான் அம்மா குடுத்தா வாங்கிக்க மாட்டியா?" என கோணார் கூறியதும் அதை வாங்கிகொண்டான்.*

பின் விடைபெற்று வெளியே இவர்கள் செல்ல கோணார் கண்ணீருடன் அவர்களை பார்த்துகொண்டு நின்றார்.

வெளியே "என்னடி கோணாரு தோளை உறிச்சுட்டடாரா?" என மலை கேட்க "அடி போடி லூசு சந்துருவும் கோணாரும் பிரண்டுபோல இந்தா மாங்காய் கொடுத்தார் பாரு" என ஒரு மாங்காயை மலையின் கையில் தினித்தாள்.

"ஏய் என்னடி சொல்லுற" என மலை வியப்பாய் கேட்க "ஆமாடி இனிமே சந்தருவும் என்னோட பிரண்டுதான்" என சத்தமாக கூறவே மலைக்கு ஆத்திரமாக வந்தது. "அப்பதான்டி தினமும் மாங்காய் கிடைக்கும்" என மலையின் காதில் ரகசியமாய் ஓதினாள் அரிசி. ஆனாலும் மலைக்கு திருப்தி இல்லை. சந்துருவின் மீது பொறாமையாய் இருந்தது. பின்ன இத்தனை வருட நட்பை கேவலம் ஒரு மாங்காய் பிரித்து விட்டதே என எண்ணி.

"சரி சந்துரு நீ என் போர்வைய வச்சுக்கோ நான் அம்மா பீரோல்ல வச்சருக்க அந்த புதுபோர்வையை எடுத்துகிறேன்" என மாங்காயை கடித்துகொண்டே சந்துருவுக்கு விட்டுகொடுத்தாள் அரிசி.

"அதான் உங்க அம்மா வெளியவே எடுக்கமாட்டாங்கனு சொன்ன?!" என மலை கேட்க. "ஆமா சரி சந்துரு நாம ஒரே போர்வை வச்சுக்கலாம்" என கூற மலை கலகலவென சிரித்தாள்.

"ஏய் ஏன்டி சிரிக்குற" என அரிசி கேட்க "அந்த பனியாரம் விக்குற பாட்டி சொன்னது நியாபகம் இல்லையா?!" என மலை மீண்டும் சிரித்தாள்.

"ஆமாடி ஒரே போர்வைகுள்ள படுத்தா குட்டி பாப்பா பிறந்துடும்ல" என அரிசி கூறவே. அது அந்த பாட்டி இளைமறைகாயாக "பாட்டி பாப்பா எப்புடி வருது" என அரிசியின் கேள்விக்கு அளித்த பதில்.

"அது தாலி இருந்தாதாண்டி குழந்தை பொறக்கும்" என தன் அறிவியல் தியரியை முன் நிறுத்தினாள் மலை. சிறிது யோசித்த அரிசி "அப்புறம் எப்புடிடி அந்த மேகலா அக்கா கிட்ட சிண்டு இருக்கான். அவங்கலுக்குதான் கல்யாணமே ஆகலையே" என மலை தியரியில் குற்றம் கண்டாள் அரிசி.

"அதுவா ராமாயனத்துல ஒரு அக்கா அப்புடிதான் சூரியனை கும்பிட்டு கொழந்தை பெத்தாங்காலாம் அதுமாதிரி இருக்கலாம் எங்க தாத்தா சொன்னாரு" என மலை மீணாடும் தியரியை நிறுபித்தாள். அதை கேட்டு சந்துரு சிரிக்க ஆரம்பித்தான்.

"ஏன்டா சிரிக்குற" என மலை கேட்க "அது ராமயனம் இல்ல மகாபாரதம் அந்த அக்கா பேரு குந்தி நான் ஒரு கார்டூன்ல பாத்துருக்கேன்" என சந்துரு கூறவே அரிசியும் சேர்ந்து சிரித்தாள். மலைக்கு ஆத்திரமாக வந்தது.

பின் மலை சோகமாக "ஆமாடி நம்மலும் அந்த அக்கா மாதிரி கொழந்தை பெத்துகலாம் கல்யாணம் பன்ன வேற ஊருக்கு அனுப்பி வச்சுடுவாங்க உன்னை எல்லாம் விட்டுட்டு நான் எப்புடிடி இருப்பேன்" என சோகமாக கூறினாள்.

"அடி போடி எங்க அம்மா கூட வேற ஊர்ல இருந்துதான் வந்தாங்கலாம். எங்க போனாலும் சரிடி அங்க ஒரு மாங்காய் மரம் இருந்தா போதும்" என இறுதியாக இருந்த மாங்கொட்டையை பற்கள் கூசும் அளவிற்கு கடித்துகொண்டிருந்தாள் அன்பரசி.

மாங்கொட்டை முழுவதும் தன் சாறை இழந்திருக்க தூக்கி எறிந்தாள். அது மூன்றுமுறை தண்ணீரால் பட்டு தாவ அதிலிருந்த தவளைகள் சிதறி ஓடின. ஒரு ஆலமரகிளை குளத்தை நோக்கி இருக்க குளிக்க ஆயத்தமாகினர். அவர்களின் பொழுதபோக்கே இங்கு குளிப்பதும் கும்மாலம் போடுவதும் தான்.

இரண்டு தோழிகளும் மரத்தில் ஏறவே "சந்துரு நீயும் ஏறுடா" என மலை கூற "அடி லூசு அவனுக்கு மரம் ஏற தெரியாதுடி" என அரிசி நினைவுபடுத்தினாள். இவர்களை பார்த்துகொண்டே கரையில் அமர்ந்திருந்தான் சந்துரு. இருவரும் ஒரு எல்லையை வகுத்துகொண்டு குதிக்க அரிசியே எப்போதும் முன்னிலை வகித்தாள். ஒரு முறை மலை முன்னிலை வரவே.

"எப்புடி குதிச்சேன் பாத்தியா?!" என மலைகூறவே "அடி போடி நான்தான் ஜெயிச்சேன்" என அரிசி வாதிட்டாள். இருவரது சண்டை

தொடர முடிவில் செம்பில்லாத நாட்டாமையாக சந்துருவிடம் கேட்டனர். "டேய் யாரு ஜெயிச்சா சொல்லுடா" என கேட்க.

அவன் நெருங்கிய தோழி அன்பரசிக்கு ஆதரவு தெரிவித்தான். மலைக்கு ஆத்திரம் அதிகரிக்க அரிசியோ அடுத்த ரவுண்டுக்கு மரத்தில் ஏறி இருந்தாள். மலையோ சந்துருவை பிடித்து இழுத்து குளத்தில் தள்ளி விட்டு மேலே ஏறினாள். சந்துரு அதை எதிர்பார்க்கவில்லை. தண்ணீரில் விழுந்து தத்தளித்தான். கையையும் காலையும் மேலும் கீழுமாக ஆட்டினான். குளத்தின் மாசான நீர் அவனது வாய்க்குள் செல்ல துவங்கியிருந்தது. கண்களை மூடி மயக்கமடைந்தான். நீரில் போட்ட கடப்பாறை போல உள்ளே சென்றான்.

"ர்ர்ர்ர்ர்ர்ர்ர்ர்ர்ர்ர்" "ர்ர்ர்ர்ர்ர்ர்ர்ர்ர்ர்ர்" "ர்ர்ர்ர்ர்ர்ர்ர்ர்ர்ர்ர்" .........

என சந்துருவின் கைபேசி சினுங்க சுய உலகிற்கு வநதான். அதற்குள் அன்பரசி குளித்து ரெடியாகியிருந்தாள். அட சே அவ எந்திரிக்கும்போது பெட் காஃபி கொடுக்கலாம்னு பாத்தா எல்லாம் போச்சா என நினைக்கும்போது. ஊர் பெரியவர்கள் மற்றும் பலர் அன்பரசியின் வீட்டை நோக்கி வந்துகொண்டிருக்க நிச்சயம் துவங்கபோகிறது என உறுதியானது.

அந்த நேரம் முப்பது விலை உயர்ந்த கார்கள் வரவே அருகில் நின்றிருந்த தன் தந்தையை சந்தேகமாக பார்த்தான். "நான் ஆடிட்டர்

கோபிகிட்ட மட்டும்தான்டா சொன்னேன்" என சன்முகம் மலுப்பிகொண்டே நகர்ந்தார்.

அப்போது மீண்டும் கைபேசி சினுங்க அதில் இருந்தது வெறும் மூன்று இலக்க எண் மட்டுமே.

"ஹலோ யாரு மீ சந்துரு" என கூற

"ஹாய் சந்துரு உனக்கும் அன்பரசிக்கும் கல்யானமா?!. ஹாப்பி மேரிட் லைஃப்" என எதிரில் பேசியவன் சிரித்தான்.

"நீங்க யாருங்க" என மீண்டும் கேட்க

"உன் வருங்கால மனைவியை வெள்ளை புடவை கட்ட வைக்கபோறவன். அந்த அன்பரசிக்கும் புத்தி வரனும்ல" என மீண்டும் பலமாக சிரித்துவிட்டு இனைப்பு துண்டிக்கபட்டது.

## அத்தியாயம் - 19

சந்துருவுடன் அந்த மனிதனின் இனைப்பு துண்டிக்கபட்டதும் சந்துருவின் மூளையோ தன் மனதில் உள்ள அனைவரையும்

வரிசைப்படுத்தி பார்த்தது. 'நமக்கு சொல்லிகிற அளவுக்கு யாரும் எதிரி இல்லையே ஒரு நிமிடம் இரு ஒருத்தன் இருக்கானே பூபதி ஆமா அவனாதான் இருக்க முடியும் அவனோட லவ்வ பிரிச்சதால இப்போ என்னை டார்கெட் பன்றானா. என்னை எதுவேனாலும் பன்னட்டும் ஆனா அன்பரசிக்கு எதாவது பிரட்சனை கொடுத்தா' என நினைத்துகொண்டு தனது கைபேசியை இருக்கமாக மூடினான். அதற்குள் காரிலிருந்து சந்துருவின் பிஸினஸ் நண்பர்கள் இறங்கிவரவே அவர்களை வரவேற்றான்.

அத்தனை கார்களையும் நிறுத்த அன்பரசியின் இல்லமுற்றம் இடமளிக்கவில்லை. அதனால் அந்த தெருவை கடன் வாங்கி கொள்ள அதை பார்த்தவன் "ஏன் கோபி அண்ணா இப்புடி" என தன் அருகில் நின்ற ஆடிட்டர் கோபியை பார்த்தான்.

கோபி சிரித்துகொண்டே "சந்துரு கல்யானமாவது மண்டபத்துல வைடா இல்லைனா கார் நிறுத்த இந்த ஊரை பத்தாது" என சந்துருவின் முதுகில் தட்டிகொடுத்துவிட்டு சன்முகத்திடம் சென்றார்.

போஸும் இதற்கு சிறிதும் சளைக்கவில்லை. சிறிது நேரத்தில் பந்தல் இருக்கைகள் என வந்து சேர்ந்தன. விரிப்புகள் விரிக்கபட்டன. அன்பரசிக்கோ உள்ளே அலங்காரம் நடைபெற்றுகொண்டிருந்தது. சந்துரு வெளியே தன் நண்பர்களுடன் பேசிக்கொண்டிருந்தான். சிறிது நேரத்திலேயே வீடே விழாகோலம் பூண்டிருந்தது.

"சரிப்பா தட்டு பழம் எல்லாம் எடுத்து வந்து வைங்கப்பா" என அந்த ஊரின் தலைவர் கூறவே அன்பரசியின் தாய் இல்லை இல்லை சந்துருவின் அத்தை சிரித்த முகத்துடன் வந்து சில தட்டுகளை வைத்தார். "மாப்பிள்ளை வீட்டு சைடு எங்கப்பா?" என கேட்க அதையும் பார்வதியே எடுத்துவந்து வைத்தார். "என்னமா நீயே வைக்குற" என கேட்டனர். "காவேரி போனதுக்கு அப்புறம் நான்தான அவனுக்கு அம்மா" என பார்வதி கூறவே சந்துருவின் கண்களில் நீர் வர நினைத்தது ஆனால் மறைத்தான். கூடவே கோபி கொண்டுவந்த விலையுயர்ந்த வெள்ளி தட்டுகளும் பட்டுபுடவையும் என அனைத்தும் காரில் முடக்கபட்டன. "வேணாம் கோபி அன்னா எங்க அம்மா வச்சுட்டாங்க அதுவே போதும்" என குரல் ததும்ப கூறினான்.

உள்ளே "ஏன்டி இன்னைக்காவது கொஞ்சம் சிரிடி" என ஓர் செல்லகுரல் அது மலைதான் இல்லை மலர்தான்.

அன்பரசியின் முகத்தில் சிறிதும் புன்னகை இல்லை. "என்னடி ஆச்சு?!" என பதட்டத்துடன் கேட்டாள். அன்பரசியோ தன் தோழியின் வயிற்றில் முகம் பதித்து அழுதாள். "ஏய் லூசு ஏன்டி அழற" என கேட்டுவிட்டு அங்கிருந்த பெண்களை "நீங்க வெளியே வெயிட் பன்னுங்க நான் ரெடி பன்னி கூட்டிட்டு வாரேன்" என தனிமையை உருவாக்கினாள். தனிமைதான் பல புதிர்களுக்கு விடை அல்லவா!

"இன்னைக்காவது வாய தொறந்து சொல்லுடி என்ன உன் பிரச்சனை" என அன்பரசி யின் முகத்தை நிமிர்த்தி கண்களை

துடைத்துவிட்டாள். விசும்பிகொண்டிருந்தவள் "என்னால அவனை மறக்க முடியலடி ஆனா சந்துரு ரொம்ப நல்லவன் என்னை அவங்க அம்மா மாதிரி நினைக்குறான் நான் அவனுக்கு என்ன பன்னேன்னு தெரியலை. அதான் உள்ள ஒன்னு வச்சுகிட்டு சந்துரு கூட நான் எப்புடி வாழுவேன் கன்டிப்பா என்னால முடியாதுடி" என தோழியிடம் மனம் திறந்தாள்.

"அடி பைத்தியகாரி உலகத்துல யாருமே பன்னாததையா நீ பன்ன போற அதுவும் இல்லாம சந்துரு மாதிரி ஒருத்தர் உனக்கு கிடைக்கவே மாட்டாரு" என மலர் பேசிக்கொண்டே கண்ணீர் வடிந்த தடயத்தில் வெண்மையை பூசிகொண்டிருந்தாள்.

"அது இல்லடி " என அன்பு ஆரம்பிக்க இதற்குமேல் விட்டாள் இவள் சரியாக வரமாட்டாள் கடிவாளம் போடவேண்டும் என எண்ணிய மலர். "ஒழுங்க சந்துருவோட தாலிய ஏத்துகோ அப்புறம் எதுனாலும் பேசிக்கலாம் சும்மா பொளம்பிகிட்டு இருந்த கன்னம் பழுத்துடும் பாத்துக்கோ"என அன்பரசியை மிரட்டினாள்.

அதற்குள் "பொண்ண வர சொல்லுங்க" என்ற குரல் வரவே சில பெண்களும் சிறுமிகளும் வந்து அன்பரசியை அழைத்துசென்றனர். இரண்டடி கண்ணாடி முன் நின்றிருந்த மலரின் முகத்தில் கண்ணீர் துளிகள் தவழ்ந்தன. 'அன்பு என்னை மன்னிச்சுடுடி இதுவரைக்கும் நான் உன் வார்த்தைய மீறுனது இல்ல உன் வாழ்கை நல்லா இருக்கனும் அதான் டி அப்படி பேசிட்டேன்.என்னை மன்னிச்சிடு' என மனதில் நினைத்தாள். பின் கண்ணீரை துடைத்துகொண்டே "சந்துருதான்டி உனக்கு புருசன் இதுல எந்த மாற்றமும்

வரவிடமாட்டேன்" என கிளம்பினாள் மலர். தன் தோழியின் வாழ்கையை பற்றி மலருக்கு நிறையவே அக்கறை இருந்தது.

அன்பரசி வெளியே வந்து தலைகுனிந்து நின்றாள். அவளை பார்ததும் அனைவரும் வாயில் கைவைக்கும் அளவிற்கு அமர்ந்திருந்தனர். "டேய் சந்துரு புடிச்சாலும் புளியங்கொம்பா பிடிச்சுருக்கடா!" என கோபி கிண்டல் செய்தார். அதற்கு அடுத்து தட்டுகள் மாற்றபடவே தேதி குறிக்கப்பட்டது. அதை வாசித்ததும் அன்பரசிக்கு இதயத்தில் ஒரு வலி ஆம் இன்னும் ஒருவாரத்தில் கல்யானம். சன்முகத்திறுகும் அதிர்ச்சி அளிக்கவே தன் நண்பனை பார்த்தார்.

"ஏன்டா இவ்வளவு சீக்கிரமா?" என கேட்டார். "டேய் நான் எது செஞ்சாலும் ஒரு காரணம் இருக்கும்டா" என போஸ் சன்முகத்தின் வாயை அடைந்தார்.

சிறிதுநேரத்தில் சம்பிரதாயங்கள் முடிய அனைவரும் கலைந்து சென்றனர். "சரிடா நாங்களும் கிளம்புறோம்"என சன்முகம் கூற "சரிடா போய்ட்டு ஃபோன் பன்னு" என போஸ் கூறவும் சந்துரு ஆச்சரியத்துடன் பார்த்தான். "என்னப்பா அப்புடி பாக்குற" என பார்வதி சந்துருவிடம் கேட்டார்.

"இல்ல அத்த ரெண்டு அன்றைக்கு வெளியே தங்குறோம்னு சொன்னதுக்கு திட்டுனாங்களே இன்னைக்கு கிளம்புறேன்னு சொன்னதுக்கு சரின்னு சொல்லிட்டாரு" என கேட்டான்.

"ஆமா மாப்பிள்ளை வீட்டுக்காரங்க நிச்சயத்துக்கு அப்புறம் பொண்ணு வீட்ல தங்க மாட்டாங்க இந்த ஊர் வழக்கம் அது" என பார்வதி கூறவே சந்துரவின் திட்டம் அனைத்தும் தவிடுபொடி ஆனது. சந்துருவுக்கு ஒரு ஆசை இருந்தது. (அது என்னனு அப்புறம் சொல்லுறேன்.)

சந்துரு காரின் அருகே செல்ல ரோட்டை பிளந்துகொண்டு ஓர் கார் அன்பரசியின் இல்லத்தை நோக்கி வந்தது. அதிலிருந்து ஒரு பெண் இறங்கினாள். டீசர்ட் ஜீன்ஸ் என நவீன கிராமத்துபெண்போல இருந்தாள். இடுப்பிற்கு சற்றுமேல்வரை முடி இருந்தாலும் லூஸ் கேரில் வந்திருந்தாள். கூடவே இரண்டு ஆண்களும் மற்றோரு பெண் சேலையில் மங்கலகரமாகவும் இறங்கினார்கள். சந்துரு அவர்களை பார்த்துகொண்டிருந்தநேரம் இரண்டு ஆண்களும் சந்துருவின் அருகில் ஓடி வந்து பலமாக தாக்கினர்.

"ஏன்டா நாங்கலாம் உனக்கு நியாபகமே இல்லையா நிச்சயத்துக்கு ஒரு ஃபோன் கூட பன்ன மாட்டியா" என வயிற்றில் ஒருவன் குத்தினான்.

"டேய் மச்சி எனக்கே தெரியாதுடா திடீர்னு நடந்துருச்சுடா" என தப்பித்தான் சந்துரு.

"எனடா திடீர்னு நடந்துச்சு தாவுச்சுனு கதை விடுறியா" என மற்றொருவன் கழுத்தில் கையால் சுற்றினான்.

"யேய் சுகு நிஜமாதான்டா சொல்றேன் தெரிஞ்சிருந்தா அன்னைக்கே சொல்லிருக்கமாட்டேனா" என கத்தினான். அந்தநேரம் சன்முகமும் போஸும் வெளியே வரவே சந்துரு விடுவிக்கபட்டான். "டேய் உன் மாமா முன்னாடி உன்னை அடிக்ககூடாதுனுதான் அமைதியா இருக்கேன் " என பாலாஜி சந்துருவின் காதில் கிசுகிசுத்தான்.

அந்த இரண்டு பெண்களும் அருகில் வர அதில் ஜீன்ஸ் தேவதை சந்துருவை முறைத்து கொண்டே சன்முகத்தின் அருகில் சென்றாள். பின்னாடி வந்த புடவை பெண்ணை பார்த்து "வா மஞ்சு ஆளே மாறிட்டியே" என வரவேற்றான்.

"இப்புடி ஐஸ் வச்சு ட்ரீட் குடுக்காம தப்பிகலாம்னு பாக்காத. இரு நான் அண்ணியை பாத்துட்டு வந்துடுறேன் " என கிளம்பினாள். "அண்ணியா?" என சந்துரு கூறவே "உன் ஒயிப்பைதான் சொல்லுறா" என பாலாஜி சந்துருவிடம் கூறியபடி முதுகில் வலிக்காமல் ஒரு அடி அடித்தான்.

அங்கே சன்முகம் "வாம்மா சுவேதா எப்புடி இருக்கீங்க ஓ மஞ்சு நீயும் வந்துருக்கியா! தீடீர்னு ஏற்பாடு ஆகிடுச்சு அதான் சொல்லமுடியல" என மன்னிப்பு கோரிகொண்டிருந்ததார்.

"இருக்கட்டும்பா அன்னிய பாக்கலாமா?!" என மஞ்சு கேளியாக கூற "அன்பு அன்பு " என சத்தமிட்டார் போஸ். "இருக்கட்டும் அன்கில் நாங்க உள்ளே போய் பாத்துகிறோம்."என இரண்டு பெண்களும் உள்ளே நுழைந்தனர். அங்கு தந்தை அழைத்த அவசரத்தில் எழுந்து வந்து கொண்டிருந்தாள் காதில் அரைகுறையாக கழற்றிய தோடுடன்.

"ஐயோ அன்பு இருங்க நாங்கதான் கூப்பிட்டோம் " என சுவேதா தடுத்தாள். அன்பரசியை பார்த்த மஞ்சு அப்படயே நின்றாள். "நீங்கதான் சந்துருவுக்கு நிச்சயம் பன்ன பொண்ணா?!"

"ம்ம்" என அன்பிடம் இருந்து குரல் வரவே மஞ்சுவின் மனதில் 'கிழிஞ்சதுபோ' என வாக்கியம் வந்துசென்றது.

## அத்தியாயம் - 20

"சந்துரு அண்ணா நீ மட்டும் எப்புடிடா இப்புடி விளையாடுற" என எதிர்ப்புறம் பத்துமுறை தோல்விகண்டும் கஜினி முகமது போல அமர்ந்திருந்தாள் மஞ்சுளா எனும் மஞ்சு சந்துருவின் எதிர்புறத்தில்.

"என்னைவிட நீ நல்லாதான் விளையாடுற என்ன சின்னசின்ன மிஸ்டேக் பன்ற அவ்வளவுதான்." என சந்துரு கூறிகொண்டிருந்தான்.

"நீங்க யாரு ஸ்டேட் செகன்ட் உங்களை தொடமுடியுமா அண்ணா" என மஞ்சுளா கூற "அடிக்கடி நியாபகபடுத்துமா எனக்கே மறந்துபோயிடுது" என சந்துரு சிரித்தான். இரண்டாவது வருபவர்களை நியாபகம் வைத்துகொள்ள மாட்டார்கள் என்பது உண்மைதான்போல.

"இந்த வருசம் ஏன் அண்ணா நீங்க கலந்துக்கல?" என கேட்க சிரித்துகொண்டே "அதான் என்னோட தங்கச்சி கலந்துக்க போறாளே அது போதும் எனக்கு. நீ கோப்பைய ஜெயிச்சுட்டு எனக்கு தரமாட்டியா என்ன?!" என சிரித்தான் சந்துரு.

"என்ன அண்ணா இப்புடி சொல்லிட்டீங்க நான் ஜெயிச்சா அந்த கோப்பை கண்டிப்பா உங்களுக்குதான்" என கூறிவிட்டு காய்களை அடுக்கினாள்.

"நான் சும்மாதான்மா கேட்டேன்" என கடிகாரத்தை இயக்கினான். "ஆனா நான் சும்மா சொல்லல அண்ணா" என யானை மிதித்த காலப்ந்து போல இரண்டு கட்டங்கள் தாண்டி நின்றது அந்த சிப்பாய். சந்துருவும் சிரித்துகொண்டே "சென்டர் ஆஃப் போர்ட் உனக்கு தேவைபடுறதே இல்லையா. சரி எப்புடியோ போ அடுத்தவாரம் மதுரையில ஒரு ஓபன் சேம்பியன் லீக் நடக்குது அதுல ஜெயிச்சுட்டுவா" என குதிரையை ஊசியால் குத்த சீறிபாய்ந்தது. பின் கடிகாரத்தின் தலையில் ஒரு கொட்டு வைத்தான். அது மஞ்சுளாவை

முறைதத்து பார்த்தது. சிறிதுநேரத்தில் கஜினிபடையெடுத்து வென்றதை போல இருவரும் சமநிலை அடைந்தனர்.

சில நாட்களுக்கு பிறகு.

"ஏய் தங்கச்சி என்ன ஆச்சு " என சந்துருவின் சத்தம் கேட்கவே ஒரு மரத்தின் பின் ஓடி ஒழிந்தாள். "நான் இல்லைனு சொல்லு" என மரத்தின் அருகில் நின்றிருந்த தன் தோழி சுவேதாவுக்கு சைகை செய்தாள்.

சந்துரு அவளை தேடிக்கொண்டு வரவே சுவேதா அவன் முன்னால் நின்றாள். சற்று திமிர்தான் இருந்தாலும் அவளுக்கு அது நன்றாகவே இருந்தது. "மஞ்சுளா இங்க வந்தாளா?" என சந்துரு கேட்க கையிலிருந்த சிகரெட் நெருப்பு விரலை சுடவே கீழே போட்டாள் சுவேதா. "இல்லையே அவ இங்க வரலையே" என கூறும்போதே சிகரெட்டின் வாசம் வீசியது. "சரி வந்தா நான் போன் பன்ன சொன்னேனு சொல்லுங்க" என கூறிவிட்டு நடந்தான். அவன் சென்றுவிட்டானா என பார்த்துவிட்டு வெளியே வந்தாள்.

"ஏன்டி இவனை பார்த்து ஓடி ஒழியுற இவன்லாம் ஒரு ஆளா? என்ன பிரச்சனை"என சுவேதா கேட்டாள். "ஏய் அப்புடியே வாயிலேயை ஒன்னு போட்டேனா தெரியும் மரியாதை இல்லாமல் பேசற" என கோபமடைந்தாள்.

"ஓ உன் லவ்வரா" என சுவேதா மஞ்சுளாவின் தோள்மீது கைபோட்டாள். "அட ச்சீ ஒரு பையனும் பொண்ணும் பழகுனா உடனே லவ்வு இல்லைனா தப்பான விசயம்பன்றாங்கனு அர்த்தமா. அவர் நம்ம சீனியர்டி அண்ணன் மாதிரி" என மஞ்சு வாதாடினாள். "அடி போடி பைத்தியகாரி யூ மேட்; பசங்க பழகுறதே அந்த விசயத்துகாகதான்டி வேலை முடிஞ்சுதும் கழட்டி விட்டுடுவாங்க" என சுவேதா கூற "உன்கிட்ட பேசமுடியாதுடி. ஆமா சிகரெட் புடிச்சியா" என ஆத்திரமானாள் மஞ்சு. "ஆமாடி சிகரெட் புடிச்சேன் ஃபாரின் பிராண்ட் வேனுமா" என கேட்டாள்.

"ஏன்டி இப்புடி பன்ற எத்தனை தடவை சொன்னாலும் நீ கேக்கமாட்ட என்னமோ போ" என சுவேதாவின் கையை தட்டிவிட்டாள். "ஏய் டியர் எனக்கு புடிச்சிருக்கு நான் பன்றேன் புடிச்சத பன்றது தப்பா?" என சுவேதா தன் பக்க நியாயத்தை விளக்கினாள்.

"ஆனா எனக்கு பிடிக்கலடி நீ இப்புடி நடந்துகிறது நீ எப்ப விடுறியோ அப்போ என்கிட்ட வந்து பேசு" கோபமாக மஞ்சு கிளம்ப அடுத்த சிகரெட்டை எடுத்து லைட்டரை ஆன்செய்தாள்.

மஞ்சுவோ கோபத்தில் வேகமாக நடக்க அங்கு நின்றிருந்த சந்துருவை கவனிக்கவில்லை. "ஏய் கத்தரிக்கா மாட்டுனியா எதுக்கு இப்ப ஓடி ஒளியுற?" என சந்துரு முன்னால் வந்து நின்றான். அவனை பார்த்து நாக்கை கடித்தாள்.

"ஏய் இத நான் பல படத்துல பாத்துட்டேன் என்ன ஆச்சுன்னு சொல்லு" என சந்துரு முற்றுலும் அடைத்தான்.

"அத ஏன் அண்ணா கேக்குற செஸ் காம்படீசன் போனேன்ல" என இழுத்தாள். "ஆமா அதுக்கு என்ன பிளைட் டிக்கெட் கூட நான்தானே ஸ்பான்சர் பன்னேன்" என சந்துரு கூறினான்.

"அங்க நிறையபேர் வந்திருந்தாங்க நானும் கடைசிவரை ஜெயிச்சுகிட்டுதான் வந்தேன்"

"அப்புறம் என்ன ஆச்சு" என ஆர்வமாக கேட்டான்.

"கடைசியா ஒருத்தி வந்தா அப்புடியே உன்னை மாதிரியே விளையாடுனா என்னால சமாளிக்கவே முடியலை. நீயா இருந்தா கன்டிப்பா ஜெயிச்சிருப்ப" என உதட்டை பிதுக்கினாள். "அப்புறம் என்ன ஆச்சு" என மீண்டும் கேட்டான்.

"அப்புறம் என்ன நானும் ஆல்டரின் கட்சில சேந்துட்டேன்" என சிரித்தாள். "அது யாரு ஆல்டரின்?!" என சந்துரு

குழம்ப

"அதான் ஆம்ஸ்ட்ராங்ககூட போனாரே அவருதான்" என சிரித்தாள். "அடிப்பாவி செகண்ட் வந்தத இப்புடி சொல்றியா " என தலையில் செல்லமாக கொட்டினான்.

"ஆனா ஒன்னு அந்த பொண்ணு உன்கூட விளையாடுறத நான் பாக்கனும் நீ அவளை ஜெயிக்கனும் அப்பதான் என் ஆத்மா சாந்தி அடையும்" என சிரித்தாள். "உனக்கு ஆத்மாலாம் இருக்கா " என சிரித்துகொண்டே "ஈவ்னிங் பிராக்டீஸ் வந்துடு" என கிளம்பினான் சந்துரு.

"என்னடி ஈவ்னிங் பிராக்டீசா " என அவளருகில் வந்து நின்றாள் சுவேதா ஒரு உருளையை முழுவதும் கொழுத்திவிட்டு.

அந்த சதுரங்க ராணியை நேரில் பார்த்த அதிர்ச்சியில் மஞ்சு உறைந்து நிற்க சுவேதாவோ "அழாக இருக்கீங்க சந்துருவ நல்லா பாத்துகோங்க" என குரல் ததும்ப கூறிகொண்டிருந்தாள் சுவேதா. கூடவே தன்னுடன் கொண்டு வந்திருந்த தங்கமோதிரமும் அன்பரசியின் கைக்கு மாறியது.

"ஐயோ இது வேணாம்" என அன்பரசி கூறவே "நீங்க சும்மா இருங்க இது உங்களுக்காக இல்லை சந்துருவுக்காக அப்புறம் அவன் ரொம்ப நல்லவன் ப்ளீஸ் எனக்காக நல்லா பாத்துக்கோங்க அவன் குழந்தைய மடியில் வச்சு கொஞ்சனும்னு ஆசைதான் ஆனா அதுவரைக்கும் நான் இருப்பேனானு தெரியலை" என அழுதிருந்தாள்.

"ஏய் சுவேதா ஏண்டி " என மஞ்சு சமாதானம் செய்தாள். அந்த நேரம் சுகுவும் பாலாஜியும் சந்துருவை தள்ளிக்கொண்டு இல்லை தூக்கிகொண்டு அன்பரசியின் முன் வந்து நின்றனர்.

"இங்க பாருமா தங்கச்சி இவன் இத்தனை நாளா எங்களை வச்சு பாடாய் படுத்துனான் இப்போ நீ வந்துட்ட நீதான் எங்களை காப்பாத்தனும்" என பாலாஜி நக்கலடித்தான்.

"ஆமா சார் நல்லவர் மாதிரியே பில்ட்அப் பன்னுவாரு ஆனா ரொம்ப ரொம்ப நல்லவன் நான் சொல்லுறது புரிஞ்சுதா"என சுகு கூற அன்பரசியோ சிரிக்க வேண்டும் என லேசாக புன்னகை செய்தாள்.

தோழர்கள் தன் வருங்கால மனைவியிடம் தன் திருபாவையை பாட சந்துரு செய்வதறியாது நின்றான். அதற்குள் சுற்றத்தையும் நட்பையும் வழியனுப்பி விட்டு உள்ளேவந்த பார்வதி "வாங்கப்பா வாங்கமா என்ன சாப்புடுறீங்க" என கேட்டார்.

பாலாஜி சுகுமாரை காட்டி "இவன் எதுபோட்டாலும் சாப்புடுவான்மா" என கூற சுகுவும் "ஆமாமா இவனும் என் இனம்தான் அதனால நாங்க மூனுபேரும் எதுபோட்டாலும் சாப்புடுவோம்" என மற்ற இருவரையும் தன் கட்சியில் நேர்த்தியாக சேர்த்தான்.

"அட ஏன்பா அப்படி சொல்றீங்க " என பார்வதி கேட்க அந்த நொடி சுவேதா மஞ்சுவின் தோளில் சாய்ந்துகொண்டு "போகலாம்டி என்னால முடியல" என அழுதாள். எனவே "இல்லை ஆண்டி நாங்க சாப்பிட்டுதான் வந்தோம் கல்யாணத்துல சாப்பிட்டுகிறோம்" என மஞ்சு கூறினாள். கூடவே பாலாஜியை பார்த்து சைகை செய்தாள். அவன் சுவேதாவை பார்க்க அவள் அழும் நிலையில் இருந்தாள். "ஆமா ஆண்டி நிறைய ஒர்க் இருக்கு நாங்க ஒரே அடியா கல்யாணத்துல சாப்பிட்டுகிறோம்" என நால்வரும் வெளியே சென்று சன்மமுகத்திடம் விடுப்பு வாங்கி காரில் பறந்தனர்.

பார்வதிக்கோ போஸிடம் "வந்தவங்களுக்கு ஒரு டீ போடகூட நேரம் இல்லையா" என திட்டு கிடைத்தது.

அடுத்த சிறிது நேரத்தில் சன்முகம் காரில் அமர சந்ததுருவோ அன்பரசியின் அருகில் வந்தான். "நான் உனக்கு போன் பன்றேன் கொஞ்சம் பேசணும் நீ சொல்லுற பதில்லதான் என்னோட அடுத்த முடிவு இருக்கு" என அன்பரசியின் கையில் அந்த டைரியை கொடுத்துவிட்டு பறந்தான் இறக்கை இல்லாத குதிரையில்.

அன்பரசியோ உடைகளை மாற்றிக்கொண்டு தன் அறையில் சென்று அமர்ந்தாள் அந்த கனனி முன். அருகில் இருந்த மொபைலை பார்த்தாள். அது சந்துருவை நினைவுபடுத்தியது. தன் வாழ்வில் என்ன நடக்கிறது என்றே தெரியவில்லையே என்ற கவலையுடன் அன்பரசி அமர்ந்திருக்க மனதோ ஒரு முடிவை எடுக்க வலியுறுத்தியது. காலத்தால் எல்லாம் மாறவேண்டும் அல்லவா அதுதானே இயற்கையின் நியதி.

'மனதில் ஒன்றை வைத்துகொண்டு வெளியே வேறு ஒரு வாழ்க்கை வாழ முடியாது. ஆனாலும் சந்துரு ரொம்ப நல்லவன் அவனது வாழ்க்கையையும் என்னால் கெட்டுபோககூடாது. எவ்வளவு கனவோட இருப்பான். எல்லாம் நீ இருக்குறதாலதான அனபு நடக்குது. பேசாம செத்துட்டா எல்லாம் சரி ஆகிடும். கொஞ்ச நாள்ல மறந்துடுவாங்க' என ஒரு முடிவு செய்தவளாய் ஒரு கத்தியை எடுத்து மணிகட்டின் அருகில் கொண்டு சென்றாள்.

## அத்தியாயம் - 21

கூரிய முனையுடைய கத்திகளோ அன்பரசியின் ரத்தநாளங்களை குறிவைத்து நின்றன. அவள் வாழ்ந்த தருணங்களை தனக்குள் அசையிட்டுகொண்டிருந்தாள் கண்களில் நீர் நிறைந்திருந்தது. எச்சிலை விழுங்கினாள். கைகள் கத்தியை ஏந்தி பிடித்து முன் செலுத்தின. தற்கொலை செய்துகொள்ளும் தைரியம் ஒரு வினாடிதான் இருக்கும் என்பார்கள் அந்த தருனம் இதுதான்.

"ஏய் அன்பு என்னடி பன்ற" என முதுகில் ஒரு பலமான அடி படவே கண்ணீருடன் திரும்பி பார்த்தாள். அவளது தோழி மலர்தான். அவளை கட்டிகொண்டு அழுதாள். மலருக்கும் என்ன ஆறுதல் சொல்வதென்று தெரியாமல் மௌனமாக நினாறாள். மலரின் கையிலிருந்த பிரியா அன்பரசியின் முகத்தை தொட்டது. அவளது கண்ணீரை துடைக்க நினைத்திருக்கும் போலும். அதற்குள்

அன்பரசிக்கும் பிரியாவிற்கும் ஓர் பந்தம் ஏற்படடிருந்தது. அந்த குழந்தையின் முகத்தை பார்த்ததும் அன்பயரசியின் சோகங்கள் காணமல் போனது. சென்று கட்டிலில் அமர்ந்தாள்.

குழந்தையை அவள் மடியில் வைத்த மலர் "இங்க பாரு அன்பு உனக்கு சந்துருவ பிடிக்கலையா சொல்லு" என கேட்டாள் தன் தோழியின் கண்ணில் இருந்த நீரை துடைத்துகொண்டே.

"அது இல்ல கடந்தகாலத்த என்னால மறக்கமுடியலடி அதான் என்னால யாரும் கஷ்டபடவேணாம்னுதான் இந்த முடிவ எடுத்தேன்" என அழுதாள்.

"ஏய் லூசாடி நீ. நீ செத்துட்டா எல்லாம் சரி ஆகிடுமா. உங்க அப்பாதான் பொண்ணுக்கு பிடிக்காத கல்யானத்த ஏற்பாடு பன்னி பொண்ண கொண்ணுட்டாருனு சொல்லமாட்டாங்க. சரி அதை விடு சந்துருவோட நிலைமையை யோசிச்சு பாத்தியா அவன் உன்னை குலசாமியா நினைச்சுகிட்டு இருக்கான் டி" என மலர் கூறவே திடுக்கிட்டு நிமிர்ந்து பார்த்தாள் அன்பு.

"என்னடி பாக்குற அவனுக்கு நான் கால் பன்னிருந்தேன். அவன் என்ன சொன்னான் தெரியுமா" என மலர் தொடரும்போதே மேஜையில் இருந்த அந்த டைரி சிக்கியது.

"இந்த டைரி எப்புடிடி உன்கிட்ட வந்துச்சு?!" என மலர் கேட்க "அவர்தான் கொடுத்துட்டு போனாரு" என அன்பரசி சந்துருவின் மீது மரியாதையாக இருந்தாள்.

"அடி பைத்தியகாரி இத மொதல்ல திறந்துபாரு." என கிளம்பினாள் பிரியாவை அங்கேயே விட்டுவிட்டு. பிரியாவையே பார்த்துக்கொண்டிருந்த அன்பரசியை பார்த்து "என்னடி பாக்குற பிரியா உன்கிட்டயே இருக்கட்டும் அப்போதான் நீ இந்த முடிவெல்லாம் எடுக்கமாட்ட. அப்புறம் இன்னொரு விசயம் நான் கொஞ்சம் செல்ஃபிஸ்தான் என் பிரண்டு வாழ்கை நல்லா இருக்கனும்னு நினைக்குறேன் அவ்வளவுதான்" என சென்றாள்.

அன்பயசியோ என்ன செய்வது என்று தெரியாமல் சுவரை வெறித்துகொண்டிருக்க பிரியாவோ தவழ்ந்து வந்து அன்பரசியின் மடியில் ஏறி விளையாடினாள். தன் அம்மா என்று நினைத்திருப்பாள் போலும். சிறுவயதில் பெரியவர்களே குழம்பியபோது சிறுகுழந்தை என்ன செய்யும்.

கவலைகள் அனைத்தும் தீயிலிட்ட சருகாய் மாறிப்போனது அன்பயசியின் மனதில் அந்த தீ பிரியாதான். அவளை மடியில் இருத்திகொண்டு டைரியை திறந்தாள். சந்துருவின் மனதையும் திறந்தாள் என்பதே உண்மை.

முதல் பக்கத்தில் சிறுவயதில் சிறிய இரட்டை ஜடையுடன் ஒரு அரைகை சட்டை ஒரு நீலபாவடை அணிந்த அரிசியின் புகைபடம்.

அதை பார்த்ததும் இது நான்தானா என்ற குழப்பம் அன்பரசிக்கு. அவளது மூளையில் சில திரவங்கள் தங்கள் வேலைபாட்டை தொடர்ந்திருந்தன.

தன் மென் கரங்களால் அடுத்த பக்கத்தை வருடினாள். அதில், நான் சந்துரு சுருக்கமா சொல்லனும்னா ஒலைபட்டாசு என் பெயர். ஆமா எனக்கும் அது இப்போ பிடிச்சிருக்கு.

நான் எதாவது நோட்டுகள் எழுதும்போது முதல் இரண்டு பக்கத்தை விடுவதுண்டு. அது என் தாயை பார்த்துதான் கற்றுகொண்டேன். இது சிறுவயது பழக்கம். அதுவும் நல்லதுக்குதான் இல்லையென்றால் பல வருடத்திற்கு பிறகு இந்த டைரியை முன்னுரை இல்லாமல் எழுதியிருக்கமுடியுமா.

ஆம் இது என் அன்னைக்காக நான் எழுதியிருக்குற டைரி தான். எனக்கு மொத்தம் மூன்று அம்மா. உடனே எங்க அப்பா பக்கம் திரும்ப வேணாம். முதல் அம்மா என்னை பெற்றவள் காவேரி. நான் அவங்களை ரொம்ப மிஸ் பன்றேன். மூனாவது என் அத்தை பார்வதி. இரண்டாவது யாருனு தெரியனுமா உள்ளே பாருங்க என முடிந்திருக்கவே உள்ளே திறந்தாள்.

உள்ளே மழலை மொழியில் பதிந்திருந்தது.

எதாவது நடந்துச்சுனா எங்க அம்மா எழுதிவைக்க சொல்லிருக்காங்க இப்போ நான் எழுதுறேன் நீ வந்து படிம்மா என இரண்டு நீர்துளிகளின் தடம் இருந்தது.

நானு அரிசி மலை மூனுபேரும் குளத்துக்கு போனோம்மா அப்போ நான் உள்ள விழுந்துட்டேன். எனக்குத்தான் நீச்ச தெரியாதே நீதான் அடுத்தமாசம் சொல்லிதாரேன்னு சொன்ன அடுத்த மாசம் வந்திருச்சு மீண்டும் இரண்டு துளிகள் இருந்தன.

ஆமா பெரிய ஆலமரம் அரிசிதான் வேகமா ஓடி வந்து குதிச்சா மலையும் பின்னாடியே ஓடி வந்தாளா ரெண்டு பேரும் சண்டை போட்டாங்க ஏன்னு தெரியலை. நான் அரிசிதான் வின்னர்னு சொன்னேன். அப்போ மலை என்ன தண்ணீல இழுத்துபோட்டுடா. என்று வாசித்தவுடன் அன்பரசியின் மனதில் ஒழிந்திருந்த அரிசி சிறிது எட்டிபார்த்தாள். இந்த முறை தலையில் வலிகள் இல்லை மாறாக ஓர் இனம்புரியாத மகிழ்ச்சி இருந்தது. தன் சிறுவயது புகைப்படங்களை புரட்டிபார்க்கும் குமாரிகள் போல. அந்த நாளும் நினைவுக்கு வந்தது.

"ஏய் மலை ஓலை பட்டாசு எங்கடி" என அரிசி கேட்க "அவ வீட்டுல இட்லி தின்னுகிட்டு இருப்பாடி" என மலை சிரித்தாள்.

"பழைய ஓலைபட்டாசு இல்லடி புது ஓல பட்டாசு!" என விளக்க "தெரியலடி இங்கதான் உட்கார்ந்திருந்தான் வீட்டுக்கு போயிட்டான் போல" என சமாளித்தாள். அப்போது தண்ணீரில் இருந்து குமிழ்கள்

வரவே "யேய் அவன் தண்ணீல விழுந்துடான்டி" என சிறுத்தையை விட வேகமாக ஓடினாள் அரிசி அந்த ஆலமர கிளையிலிருந்து தாவினாள்.

காற்றை கிழித்து பறக்கும் இயந்திரபறவைபோல நீரை கிழித்து முன்னேறினாள். என்றும் அவள் இவ்வளவு ஆழத்தை அடைந்ததில்லை. இறுதியாக சந்துருவை தொட்டாள். அவனது முடியை பிடித்துகொண்டு மேல இழுத்தவந்தாள். ஆனால் தண்ணீரிலிருந்து கரைக்கு அவனை தூக்கமுடியவில்லை.

"ஏய் மலை தூக்குடி" என கூறவே அவளும் கால்களை பிடிக்க ஒருவழியாக மேலே ஏற்றினர். "என்னடி ஆச்சு" என பதறினாள் மலை.

"போச்சுடி எங்க அம்மா என்னை கொண்ணுடும்" என அன்பரசி பயந்தாள். "படத்துல காட்டுற மாதிரி வயித்த அமுக்குடி" என மலை கூற இருவரும் முயற்ச்சி செய்து நீரை வெளியேற்றினர். அதிகநேரம் நீரில் இல்லாததால் சற்று மயக்கம் தெளிந்து எழுந்தான் சந்துரு.

"நீ எதுக்குடா தண்ணீல எறங்குன" என அரிசி கோபமடைந்தாள். "வழுக்கிடுச்சு " என மலையை காப்பாற்றினான். "நீச்சல் தெரியாத உனக்கு?!" என கேட்கவே "எங்க அம்மா சொலலிதாரேன்னு சொன்னாங்க" என சந்துரு அழுதான்.

"அவங்க சொல்லிதரலையா" என கேட்டாள். "அவங்கள கார் அடிச்சிடுச்சு" என மீண்டும் அழுதான். சிறுவயதிலும் அன்பரசிக்கு தாய்மை என்பது இயல்பிலேயே இருந்தது. "சரி நான்வேனா சொல்லி தரவா" என அரிசி கூறினாள்.

சந்துருவின் மனதில் தன் தாயை சிறுகுழந்தையென பார்த்தான். அதே கண்டிப்பு பாசம் கோபம் அன்பு எல்லாம் இவளிடம் இருந்தது. "ம்ம் " என தலையாட்டினான்.

"சரி சொல்லிதாரேன் ஆனா நீ என் பார்லீஜியை கேட்கக்கூடாது சரியா " என முதலாளி மகனுக்கே தொழில் கற்று கொடுத்தாள். சந்துரு வை பொறுத்தவரை தன் அன்னை அருகில் இருந்தாள் மட்டுமே போதும் அவனும் சம்மதித்தான்.

"சரி வா இங்கிட்டு ஆழமா இருக்கும். நாம அந்த படிகட்டுகிட்ட போகலாம்" என மூவரும் இடம்பெயர்ந்தனர். கடைசியாக போஸ் தன் மகளுக்கு நீச்சல் பழகிகொடுக்கும்போது இங்கு வந்தவள் இப்போது இவளே ஆசானாக வருகிறாள்.

"சட்டைய கழட்டுடா" என உத்தரவிட்டாள். அவனும் கழட்டவே இரண்டு தோழிகளும் நீரில் பாய்ந்தனர். உள்ளே இருந்துகொண்டு "தாவுடா ஆழம் எல்லாம் இல்லை" என கூற அவள் வார்த்தையை ஏற்று குதித்தான்.

*சற்று ஆழம்தான் ஆனாலும் கழுத்து வரை என்பதால் சமாளித்தான். "இந்தா நாங்க நீந்துரோம் பாரு அதுமாதிரி கையையும் காலையும் ஆட்டு" என ஆட்டிக்கொண்டே நடுகுளத்திற்கு சென்றனர். இவன் அவர்களை பார்த்துகொண்டே நின்றான்.*

*தண்ணீரில் தனியாக நின்றிருந்த அவன்முகத்தில் தனிமையில் இருப்பதை போல ஒரு வருத்தம் இருக்கவே அதை பார்த்த அன்பரசிக்கு மனதில் ஏதோ தோன்ற மீண்டும் அவனை நோக்கி வந்தாள். அந்த உணர்வு டைரியின் முன் அமர்ந்திருந்த அன்பரசிக்கு அப்படியே ஏற்படவே சந்துருவின் அருகில் செல்லவேண்டும் என்ற ஆசை ஏற்பட்டது.*

*அப்போது "அம்ம..." என ஒரு குரல் பிரியாவிடம் இருந்து அன்பரசியைநோக்கி வந்தது.*

## *அத்தியாயம்* - 22

*மடியின் மீது ஏறிகொண்டு பிரியாவோ "அம்ம" என்று இவளை அழைக்க உணர்ச்சிமிகுந்தவளாய் பிரியாவை தூக்கி முத்தமிட்டாள் பின் அனைத்துகொண்டாள். பின் மீண்டும் டைரியை (அல்ல) நினைவுகளை புரட்டினாள்.*

சந்துருவின் அருகில் வந்த அரிசியோ "டேய் சந்துரு ஓடுடா" என கத்த ஏன் என்று புரியாமல் விழித்தான். அப்போதுதான் கவனித்தான் அங்கு பார்வதி கையில் இரண்டங்குல நன்கு விளைந்த மூங்கில் குச்சியுடன் வந்தார். அதற்குள் இரண்டு தோழிகளும் காற்றில் கரைந்து மறைந்தனர். "என்னடி ஓடுறையா எப்புடி இருந்தாலும் வீட்டுக்குதான வரணும் வா உனக்கு இருக்கு உனக்கு" என திட்டிக்கொண்டே தண்ணீரில் நின்ற சந்துருவின் அருகில் வந்தார். "நீ எதுக்குபா சந்துரு தண்ணீல இறங்குன" என கேட்க "இல்ல அத்த வழுக்கி விழுந்தும் டேன்" என அரிசியை காப்பாற்றினான்.

"சரி வா" என அவனை தூக்கியவர் தன் முந்தானையால் தலையை துவட்டி விட்டார். "இனிமே தண்ணீல விளையாடகூடாது சரியா " என பார்வதி கூறவே தலையாட்டினான். ஆனாலும் தன் இரண்டாவது அன்னை நீச்சல் கற்றுதருவதாக சொல்லியிருக்கிறாள் அல்லவா.

சந்துருவை வீட்டிற்கு அழைத்துவந்து தலையை துவட்டி உடையை மாற்றிவிட்டார் பார்வதி. பின் அன்பரசிக்காக வாங்கி பீரோவில் அடுக்கபட்டிருந்த பொம்மைகள் தரையிறங்கின சந்துருவுக்காக. "அவளுக்கு பொம்மைய வாங்கிகொடுத்தா ரெண்டே நாள்ல உடைச்சிடுவா இந்த நீ விளையாடுப்பா" என எடுத்து நீட்டினார் பார்வதி. அதை வேறு வழியில்லாமல் வாங்கிகொண்ட சந்துரு ஒரு கார்பொம்மையை எடுத்து விளையாட ஆரம்பித்தான்.

அதற்குள் சமையலறையில் மசால் தடவி எண்ணெயில் பெரிக்கபட்ட கோழிகளும் ஆட்டின் ரத்தபொறியலும் கறிகுழம்பும் தயாராகி

வீட்டையே நிரம்பின. அந்த வாசம் துறவிகளையும் எச்சில் ஊறவைத்து இழுத்துவரும் அளவிற்கு இருக்கும். பார்வதியின் கைபக்குவம் அப்படி போன பிறவியில் நிச்சயமாக சமையல் கலை வல்லுநராக பிறந்திருப்பார்போலும் இல்லை இல்லை அரிசியின் பாட்டி கொடுத்த பயிற்ச்சி அப்படி.

சூடாக இறக்கபட்ட ரத்தபொறயலை ஒரு தட்டில் வைத்து அதன் உஷ்னத்தை குறைத்தார் பார்வதி. பின் "சந்துரு " என அழைக்க "உர்ர்ர்" என காரினை ஓட்டிகொண்டே உள்ளே வந்தான். "இந்தா சாப்பிடு" என பார்வதி கொடுக்க ஒருவாய் எடுத்து வாயிலிட்டான். "இது என்னது அத்த" என கேட்க "ரத்தபொறியல்ப்பா" என பார்வதி கூறியதுதான் தாமதம் உடனே ஓடிச்சென்று வாந்தியெடுத்தான். அவன் பின்னாடியே ஓடி வந்த பார்வதி "என்னப்பா ஆச்சு" என பதறினார்.

"இல்ல நான் கறி சாப்பிடமாட்டேன்" என சந்துரு கூற தன் கல்யாணத்தில் இலையில் கறியை வைத்தால் என்ன செய்வது என்று தெரியாமல் விழித்துகொண்டிருந்த காவேரியின் முகம் கண்முன்னே தோன்ற கண்களில் கண்ணீரும் உதட்டில் சிறிய புன்னகையும் தேன்றியது.

"அவதான் சுத்த சைவம்னாலும் பிள்ளையையும் அப்படிதான் வளத்துவச்சுருக்கா" என மனதினுள் திட்டிக்கொண்டே சந்துருவின் முகத்தை கழுவினாள்.

ஆம் காவேரி காதல் திருமணம் செய்ததால் அவளது வீட்டு சொந்தங்களே அவளை ஒதுக்கிவைத்தன. இருந்த ஒரே சொந்தம் தன் கனவன் சன்முகம் மட்டுமே சிறிது பணக்காரர் என்றாலும் சொந்தங்களில் அவர் மதிப்பெண் குறைவுதான். சன்முகத்திற்கு ஆறுதல் போஸ் மட்டுமே.

போஸிற்கும் அன்று திருமனம் தன் அத்தை மகளுடன்(பார்வதி). இது அரேஞ்ச் மேரேஜ் மாதிரி தெரிந்தாலும் லவ் மேரேஜ்ங்க. அப்போது உறவுகளால் கைவிடபட்ட தம்பதிகளாய் இருந்த காவேரியும் சன்முகமும் ஜோடியாக கலந்துகொண்ட விசேசம் போஸ் பார்வதியின் திருமணம்தான்.

"டேய் ஒழுங்கு மரியாதையா சாப்பிட்டு போடா" என போஸ் மிரட்டிகெண்டிருந்தார். அந்த நேரம் சிரிங்கசார் என பழைய ஃபிலிம் கேமிராவைகொண்டு ஒருவர் நின்றுகொண்டிருக்க சற்று பெரிய விசேசம்தான்.

"டேய் இல்லடா வயிறு ஃபுல்லா இருக்குடா நாங்க இன்னொருநாள் கன்டிப்பா வந்து சாப்பிடுறோம்டா" என சன்முகம் போஸின் காதில் கிசுகிசுத்தார்.

"நீ சரிபட்டு வரமாட்ட தங்கச்சி சாப்பிட்டுபோங்க இல்லைனா நான் இவன்கூட பேசமாட்டேன் பாத்துக்கோங்க"என போஸ் கூறவே காவேரியோ சன்முகத்திடம் கெஞ்சுவதைபோல முகத்தினை வைத்துகொள்ளவே சன்முகம் சம்மதித்தார்.

பின் இருவரும் பந்தியில் அமர சாதமும் பின் இறைச்சிகளும் வைக்கபட்டன. அதை காவேரி கவனிக்கும் முன் ஒரு இளைஞன் காவேரியை கடந்து மூன்று இலைகள் தாண்டி சென்றிருந்தான்.

காவேரியோ செய்வதறியாது திகைத்தாள். "ஏங்க " என சன்முகத்தை அழைக்க சன்முகமோ கையில் ஒரு எலும்பை வைத்துகொண்டு "இதுக்குதான் நான் அப்போவே சொன்னேன்" என காவேரியின் முகத்தை சோர்வாக பார்த்தார். இவளது முகத்தை தூரத்தில் இருந்து கவனித்துவிட்டார் பார்வதி. பின் போஸின் காதில் ஏதோ கிசுகிசுக்க அடுத்த நிமிடம் காவேரிக்கு வேறு இலைகள் விரிக்கப்பட்டு சுவையான ரசம் பரிமாறப்பட்டது.

பின் புதுதம்பபதிகளிடம் இருவரும் வரவே "என்ன அன்னி நீங்க சைவம்னு எனக்கு தெரியாது" என பார்வதி கூறினாள். "இல்லங்க பரவாயில்லை" என காவேரி கூறவே.

"காவேரி பத்தி இவங்களுக்கு ஏற்கனவே தெரியுமா" என சன்முகம் போஸிடம் கேட்க "அத ஏன் அண்ணா கேக்குறீங்க எப்போ பாத்தாலும் உங்கள பத்திதான் பேச்சு இவருக்கு" என பார்வதி போஸை இழுத்துவிட்டாள். "அதுசரி" என சன்முகம் நக்கலாக கூறினார்.

"இதுக்கே இப்புடி சொல்றீங்க உங்க கல்யாணத்துக்கு நடந்த கூத்துஇருக்கே" என பார்வதி போஸை பார்த்து சிரித்தாள்.

"என்னமா சொல்ற என் கல்யாணம் வரைக்கும் தெரியுமா" என வியந்தார். "ஆமான்னா நான் இவர் சொன்னதகேட்டு அழுதேன் அப்போ இவரு சொல்றாரு இங்கபாரு எனக்கு நீயா இல்லை என் நண்பனானு ஒரு சூழ்நிலை வந்துச்சுனா நான் நண்பன்தான்னு சொல்லுவேன் அப்புடின்னு சொல்லிட்டு கிளம்பிட்டாரு. உசுர கையில பிடிச்சுகிட்டு இருந்தது எனக்குதானே தெரியும்" என பார்வதி பெருமூச்சு விட்டார் அந்த கல்யானகோலத்தில்.

அதற்குள் தம்பதிகளின் செல்ல விளையாட்டுகள் ஏற்பாடு செய்யபடவே "சரிடா நாங்க கிளம்புறோம்" என சன்முகம் கூற "இருடா அப்புறம் போகலாம் " என போஸ் தடுத்து பார்த்தார். "அங்க பாருடா அவள ஒரு பயத்துலேயே இருக்கா அதான் சொல்றேன்" என சன்முகம் தன் மனைவியை காட்டிசொல்ல. "நீங்க போய்ட்டுவாங்க அண்ணா கன்டிப்பா இன்னொரு நாள் வரனும்" என பார்வதி வழியனுப்பி வைத்தார்.

அதிகம் யாருடனும் பேசாத குணம்.அடுத்தவர் விருப்பத்திற்காக எதையும் விட்டுக்கொடுக்கும் மனம். பார்த்தவுடன் மனதை கொள்ளை அடிக்கும் முகம் என காவேரியை அப்படியே உரித்து வைத்திருந்தான் சந்துரு.

மனதில் ஓடிய காட்சிகளில் இருந்து வெளியே வந்த பார்வதி சந்துருவுக்கென தனி உணவுகளை தயாரிக்க துவங்கியிருந்தாள்.

அதற்குள் வெளியே ஒரு உருவம் அங்கிருந்த வேப்பமரத்தை பிடித்துகொண்டு நின்றிருந்தது. முழுவதும் ஈரமாக இருந்த அந்த உருவம் அரிசிதான். பார்வதியின் கைபக்குவ வாசனை அவளை இழுத்துவந்துவிட்டது என்றுதான் கூறவேண்டும்.

மந்திரவாதிபோல அடுத்த நொடி சற்று அருகில் வரவே சந்துரு அதை கண்டுகொள்ளாமல் தனக்கு கிடைத்த காருடன் கனவுலகில் பயனித்துகொண்டிருந்தான். அதற்குள் அந்த உருவம் வாசலின் அருகே வந்து நிலையை பிடித்துகொண்டு முகத்தை அப்பாவியாக வைத்துகொண்டது.

"உள்ள வந்த தோள உறிச்சுபுடுவேன்" என பார்வதியின் ஓசை சமையலறையிலிருந்து வந்தது. ஆனால் அரிசியோ தன் பொம்மை சந்துருவிடம் இருப்பதால் அதை மீட்க எல்லைதாண்டமுடியாமல் தவித்தாள்.

மீண்டும் தலையை குணிந்துகொண்டே கால்களால் அந்த கல் படிக்கட்டுகளில் கோலமிட்டாள் கதவின் நிலையில் சாய்ந்துகொண்டே. அவள்மீதிருந்து நீர் சொட்டிகொண்டிருக்க அவளை பார்த்தான் சந்துரு. "அத்த அரிசி." என இழுத்தான்.

"சந்துரு அவகிட்ட பேசாத உன்னையும் கெடுத்துடுவா " என பார்வதி பொறிய சந்துரு செய்வதறியாது தினறினான்."அம்மா " என இழுத்தாள் அன்பரசி. "என்னடி அம்மா. உன்னை குளத்துக்கு போககூடதுன்னு சொல்லிருக்கேன்ல இரு அப்பா வந்தவுடனே உன் காலை ஒடிக்க சொல்றேன். சந்துருவையும் தண்ணீல தள்ளிவிட்டுருக்கீங்க" என பார்வதி கூறவே.

அன்பரசயின் மனதில் 'தள்ளிவிட்டாங்களா யாரு' என நினைத்தாள். பின் சந்துருவை பார்க்க அவன் அமைதியாக இருந்தான். "அந்த தயிர்கார பொம்பளை பாத்துட்டு சொல்லுச்சு அதான்டி ஓடி வந்தேன் இனி தண்ணில விளையாடுறத பாத்தேன் அப்புடியே முக்கி கொண்ணுபுடுவேன்" என பார்வதி பொறிந்து கொண்டிருந்தார் சட்டியில் இருந்த கடுகுகளும் இசைந்தன பார்வதியின் கோபத்திற்கு.

"அம்மா பசிக்குதும்மா" என அடுத்த ஆயுதத்தை பயன்படுத்தி பார்த்தாள். "உனக்கு இன்னைக்கு சாப்பாடு கிடையாதுடி" என கேடயமிடபட்டது.

சிறிது நேரத்திலேயே சந்துருவுக்கு சூடான தோசைகள் வைக்கப்பட்டு தக்காளியும் மிளகாயும் சேர்த்து தாளிக்காமல் இடப்பட்ட சுவையான சட்டினியும் பறிமாற படவே. அவன் சாப்பிடாமல் அமர்ந்திருந்தான். அன்பயரசிக்கோ நாக்கு நாட்டியமாடியது.

"அத்த அரிசியும் சாப்பிடட்டும் " என சந்துரு உண்ணாவிரதம் போல அமைதியாக இருந்தான். அதற்குள் அன்பரசிக்கு தட்டில் விருந்து ரெடியாக இருந்தது. "போய் டிரஸ் மாத்திட்டு வாடி " என பார்வதி கூறவே. குடுகுடவென உள்ளே ஓடி வந்தாள். அப்படியே சமையலறைக்குள் புகுந்தவள் தட்டை எடுத்துகொண்டு ஓடினாள்.

"ஏய் உன்னை டிரஸ் மாத்த சொன்னேன் " என பார்வதி பின்னாலயே அரிசியை அடிக்க வர அவளோ சந்துருவின் முன்னால் அமர்ந்துகொண்டு சாப்பிட ஆரம்பித்திருந்தாள்.

வெளியிலிருந்து போஸும் உள்ளே நுழைய பார்வதி அமைதியாக திரும்பசென்றார்.

"ஏன்டா நீ கறி சாப்பிடமாட்டியா" என அரிசி தன் முத்துபற்களால் ஒரு கோழியின் காலை கடித்து கொண்டே கேட்க "எங்க அம்மா சாப்பிட மாட்டாங்க அதான் நானும் சாப்பிடமாட்டேன்" என சந்துரு சோகமாக கூறவே. பார்வதியும் போஸும் அப்படியே சிலையாக நின்றனர்.

## அத்தியாயம் - 23

"அம்மா நான் அம்மன் கோயிலுக்கு போயிட்டு வாரேன்" என நின்றாள் அரிசி தூரத்தில் இருந்த வேப்பமரத்தில் தலைகீழாக தொங்கி கொண்டிருந்தாள் மலை.

"கால ஒடிச்சுபுடுவேன்; வயிறு நறைஞ்சுருச்சுல அதான் இந்த ஆட்டம்" என பார்வதி பத்திரகாளியானார். "அம்மா அம்மா" என கெஞ்சினாள் வெளியல் இருந்த மலை மீதும் ஒரு கண் வைத்திருந்தாள். "ஏய் சந்துரு தனியா இருப்பான்டி இன்னைக்கு இரு" என தாய் காரணம் கூறினார்.

"வேணுமானா அவனையும் கூட்டிட்டுபோறேன்" என அரிசி முன்மொழிந்தாள். "எதுக்கு அந்த ராஜிக்கு மண்டைய ஒடைச்சமாதிரி இவனுக்கும் பன்றதுக்கா" என கூறவே அரிசி சோர்வாக அமர்ந்தாள்.

வெளியே நின்றிருந்த மலை கையால் சைகைகாட்ட அரிசியும் பதிலுக்கு சைகை செய்தாள். இருவருக்கும் இடையில் இருக்கும் ரகசிய மொழிபோல. இவளது சேட்டையை கவனித்த பார்வதி "மொதல்ல அந்த மலர் கால ஒடிச்சுவிடனும் அப்போதான் நீ அடங்குவ" என அரிசியை பார்த்துகூறவே. அதற்குள் சைகையிலேயே போட்ட திட்டங்கள் நிறைவேறும்விதமாக மலை வந்து நின்றாள்.

"பெரிம்மா அரிசியை பாட்டி வரசொல்லுச்சு" என நிற்க "என்னடி நாடகம் போடுறீங்களா " என பார்வதி அவளையும் விடுவதாய் இல்லை "இல்லை நிஜமாதான் பெரிம்மா அவளுக்கு

எள்ளுஉருண்டை செஞ்சு வச்சுருக்காங்களாம்." என அன்பரசியை பார்த்து கண்ணடித்தாள்.

"இப்புடியே பொய் சொல்லிட்டு அங்கபோயி சின்ன புள்ளைங்கள எல்லாம் அடச்சுடுறீங்க அவங்க அம்மா என்னை வந்து திட்டிகிட்டு இருக்காங்க என்னமோ பன்னுங்கடி" என அலுத்துகொண்ட பார்வதியின் மனதில் எள்ளுருண்டை வைத்திருந்த தன் மாமியார் நினைவு வந்தது. பார்வதிக்கு இருந்த ஒரே வருத்தம் தன் மாமியார் மாரியம்மாள்தான். தன் தாய் மாரியம்மாளை எதிர்த்துஅல்லவா போஸ் தன் காதலி பார்வதியை திருமணம் செய்துள்ளார்.

அதனால் தனித்து இருந்துதோட்டத்தில் தங்கிகொண்டார் போஸின் தாய் மாரியம்மாள். அவர்களுக்கு இருக்கும் ஒரே தொடர்பு அன்பரசி மட்டுமே. அன்பரசியும் தன் பாட்டியை சாக்காக வைத்தே பார்வதியிடம் இருந்து தப்பி விடுவார். பார்வதிக்கும் தன் மாமியார்மீது பயம் உண்டு. அதனால் இப்போது அன்பயசிக்கு பர்மிஷன் கிராண்டெட்.

இரண்டு தோழிகளும் தயாராக அப்போது சந்துருவோ அந்த காரில் கைவைத்தான். அதை அரிசி எதிர்பார்க்கவில்லை. உடனடி திட்டம் நிறைவேறியது. "சந்துரு நீயும் வாடா எள்ளுஉருண்டை சாப்பிடலாம் நல்லா இருக்கும்" என நாக்கில் எச்சில் ஊறியதைபோல சைகை செய்தாள்.

சந்துரு தன் அத்தையை பார்க்க "சரி நீயும் போய்ட்டுவா; ஏய் சந்துருவ பத்தரமா பாத்ததுக்கோ இல்லை" என பார்வதி கூறும்போதே "சரிம்மா" என அலுத்துகொண்டே கிளம்பினாள்.

சிறிதுநேர நடைக்குபின் அம்மன் கோயிலை அடைந்தனர். மிகவும் பெரிய கோயில் இல்லை மொத்தமே பத்துக்கு பத்ததடி சதுரமாக இருக்க உள்ளே ஒரு கல்லை அழகாக வடிவமைத்திருந்தனர். அதன் அருகில் இருந்த இடத்தில் பல குழந்தைகள் வயது வித்தியாசம் இல்லாமல் விளையாடிக்கொண்டிருந்தன. அதில் சாமியின் அருகிலும் சில குழந்தைகள் தவழ்ந்து கொண்டு அம்மன் மீதிருந்த பூக்களை பிய்த்து விளையாடிகொண்டிருந்தனர்.

நிறைய குழந்தைகள் தாயை சுற்றி விளையாடி கொண்டிருந்ததாள் அந்த அம்மனது அலங்காரத்தால் மிகவும் மகிழ்ச்சியாக சிரித்துகொண்டிருந்தது. ஊரையே அரவனைக்கும் அம்மன்தாய் இந்த குழந்தைகளை பார்த்துகொள்வாள் என்ற நம்பிக்கையில் அருகில் எந்த பெரியவர்களும் தென்படவில்லை. அல்லது அந்த அம்மன் இதெல்லாம் என் குழந்தைகள் என்று தத்தெடுத்துகொண்டாளா தெரியவில்லை. அதில் இன்று சந்துருவுக்கும் இடம்கிடைத்தது.

அந்த கோயிலின் பின்புறம் இருந்த இடத்தில் சில சிறுவர்கள் கையில் ஒரு அடிகுச்சியும் தரையில் இரண்டு அங்குலத்தில் இருபுறமும் கூர்மையாக்கபட்ட கில்லியும் கிடக்க அதை அடித்து எழுப்பி சாதனைகள் நிகழ்த்திகொண்டிருந்தனர். அதில் சில கிளவிகளின் மண்டைகள் உடைந்ததும் கின்னஸ் ரெக்கார்டில் எழுதப்பட்டுள்ளது. அதுவும் இல்லாமல் அருகில் இருந்த ஒரு பெரிய

வேப்பமரத்தில் பல சிறுவர்கள் ஏறிகொண்டிருக்க கிழே ஒரு சிறுவன் வட்டத்தில் ஒரு குச்சியை இட்டு பாதுகாத்துகொண்டிருந்தான். அந்த கனம் ஒரு சிறுவன் மரத்திலிருந்து பொத்தென விழுந்த அந்த குச்சியை வாயில் கவ்வினான். அந்த ஏமாளி சிறுவனின் முகத்தில் வாட்டம் தெரிந்தது.

ஒருவர் மீது மற்றொருவர் ஏறிக்கொண்டு கையில் பலகைபோன்ற கற்களைவீசி வ ளையாடிகொண்டிருந்தனர். சில கோழிகுண்டுகளும் அங்கும் இங்குமாக உருண்டுகொண்டிருந்தன. பம்பரத்தின் ஆணிகள் மற்ற பம்பரங்களை முத்தமிட்டபடி இருந்தன.

சில குழந்தைகள் தரையில் கட்டங்களையிட்டு ஒற்றைகால்களால் மான் என தாவிகொண்டிருந்தனர். அந்த இடத்தை ஒரு மருட்சியுடன் நோட்டம்விட்டான் சந்துரு.

"ஏய் இது எங்க இடம்டா நீ எதுக்கு இங்க வந்த" என அரிசி கத்திகொண்டிருந்தாள். "அதான் சொல்றாள்ள கிளம்புடா" என மலைகூறவே சந்துரு என்ன நடக்கிறது என்று பார்த்துக்கொண்டிருந்தான்.

தாங்கள் கில்லி விளையாடும் இடத்தை அந்த மணி பிடித்துகொண்டதாள் வந்த பாக்கிஸ்தான் இந்திய பணிபோர் இது.

"நீ எதுக்குடி லேட்டா வந்த அதான் நாங்க விளையாடுறோம் போ நீ போய் நொண்டி விளையாடு" என அந்த கில்லியை தரையிலிருந்து மேலே எழுப்பினான்.

அதை லாவகமாக பிடித்துகொண்ட அரிசி "இது இல்லாம எப்புடிடா விளையாடுவ" என அதை தன் சட்டைபையில் போட்டுகொண்டாள்.

"ஏய் ஒழுங்கா குடுடி" என ஆத்திரமடைந்தான் மணி "அப்போ எங்க இடத்தை விடுங்க" என அரிசி அரசியாக கட்டளையிட்டாள்.

"எங்க அம்மாகிட்ட சொல்றேன் இரு" என அழதுவங்கினான் மணி. அதை இரண்டு தோழிகளும் பார்த்து சிரித்துவிட்டு "போ போய் சொல்லு உங்க அம்மாவுக்கு என்ன கொம்பா முளைச்சிருக்கு" என நக்கலடித்தனர்.

அவன் அழுதுகொண்டே நிற்க மணியின் சித்தப்பா மகன் வந்தான். "சரி அக்கா நாம எல்லாரும் விளையாடுவோம்" என யோசனை சொல்ல சிறுது யோசித்த அரிசி சரியென ஒத்துகொண்டாள். அதன்பின் அரிசி அணியும் மணி அணியும் மோதலை துவங்கின.

தனது அதிகாரத்தால் முதலில் பேட்டிங் தேர்வு செய்துவிட்டாளா சந்துருவை வைத்து ஆழம் பார்த்தனர்.

"அரிசி என்க்கு விளையாட தெரியாது" என சந்துரு அவளை பார்க்க "நீ வேஸ்டுடா தள்ளு " என அவனை ஒதுக்கிவிட்டு அந்த குழியில் அந்த கில்லியை வைத்தாள். பின் வேகமாக விசையை கொடுக்க அது எதிரணியின் மூவரையும் தாண்டி விண்ணில் பறந்தது.

அடுத்ததாக கில்லியை அடிக்கும் படலம் அதற்கு இடையூராக இருப்பவற் மணி. அந்த சகாப்தம் முடிவுக்கு வந்த நேரம் இது ஆம் அரிசி அடித்த அடியில் அந்த கில்லி மணியின் மண்டையை பிளந்துவிட்டது. "ஏய் ஓடுடி" என அரிசியும் மலையும் சந்துருவை இழுத்துக்கொண்டு தங்களின் பாதுகாப்பு கோட்டைக்குள் புகுந்தனர் அது தன் பாட்டியின் வீடு.

இப்படிதான் அரையாண்டு விடுமுறைக்கு கிடைத்த பத்துநாள் விடுமுறையிலேயே ஊரில் பலகலவரங்களை நிகழ்த்தும் வல்லமை பெற்றிருந்தாள். அந்த ரவுடி அணியில் இப்போது சந்துருவும் இணைக்கபட்டிருந்தான்.

அங்கே அரிசியின் பாட்டி திண்ணையில் அமர்ந்துகொண்டு வெற்றிலையை மென்றுகொண்டிருந்தார். "ஐ பாட்டி" என ஓடினாள் அரிசி. அவளை பார்த்ததும் "வாம்மா அப்பா என்ன பன்றான்" என கேட்டாள். "நல்லா இருக்காங்க பாட்டி"

"ஆமா அவனுக்கு பொண்டாட்டிதான் முக்கியம் பெத்த அம்மாவ பார்க்கக்கூட நேரமில்லை" என அரிசியின் முகத்தில் இருந்த

வேர்வையை துடைத்தார். எப்படியும் அரிசிக்கு இந்த வயதில் இது புரியாது என புளம்பினார்போலும்.

"ஏய் மலர் உள்ள தூக்குவாளில எள்ளுஉருண்டை இருக்கு எடுத்துட்டுவா" என உத்தரவிட அவள் அதை சாப்பிடும் ஆவளில் வேகமாக எடுத்துவந்தாள். அரிசியோ தன் பாட்டியின் மடியில் அமர்ந்து கொண்டாள்.

இருவரும் தன் பங்கினை எடுத்துகொள்ள அப்போதுதான் பார்த்தார் மாரியம்மாள் சந்துருவை.

"யாரும்மா இது புதுசா இருக்கு" என அரிசியிடம் கேட்க அவளோ கைநிறைய வைத்திருந்த எள் உருண்டையை கடித்தபடி "எங்க வீட்டுக்கு வந்திருக்கான் பாட்டி லீவுக்கு" என கூறினாள்.

"வீட்டுக்கு வந்துருக்கானா". என யோசித்துவிட்டு "உங்க அப்பா யாருப்பா" என கேட்டுகொண்டே சந்துருவுக்கு சிறிது எள் உருண்டையை எடுத்துகொடுக்க கைகள் நீண்டது. அவனோ "சன்முகம் " என கூறவே எள் உருண்டையை கொடுக்க முன்னாள் நீண்ட கை வெடுக்கென பின்னால் வந்தது. "உங்க ஆத்தா காவேரியா?!" என சத்தமாக கேட்டார். "ம்ம்" என்பதைபோல தலையாட்டினான்.

ஆத்திரமடைந்தார் மாரியம்மா பாட்டி "அன்பு இவனை போய் வீட்டுல விட்டுட்டு வா இங்க எதுக்கு இவன் வந்திருக்கான்" என தன் பாட்டியின் கோபத்தை முதலில் பார்த்தாள். மூவரும் அதிர்ச்சியில் உறைந்து நின்றனர்.

## அத்தியாயம் - 24

பாட்டியின் முகத்தில் கோபம் இருந்தது அந்த கோபத்தின் காரணங்களாய் அரங்கேறிய சமபவங்கள் மாரியம்மாளின் மூளையில் சிதறி கிடந்தது.

பார்வதி போஸின் தந்தைவழி முறைப்பெண் ஆனால் மாரியம்மாளுக்கோ தன் அண்ணன் பெண் செண்பகத்தை திருமணம் செய்து வைக்கும் ஆசையில் இருந்தாள். விதி வலியது தான் போஸிற்கு என்னவோ தன் தாய்வழி சொந்தங்களின் மீது அவ்வளவு நாட்டம் இல்லை. பார்வதியின் குணமும் அழகும் போஸை ஈர்த்துகொள்ளவே திருமனத்தில் அறங்கேறி முடிந்தது. தன் மருமகள் மீது மாரியம்மாளுக்கு எப்போதும் சிறிது கசப்பு இருந்துவந்தது. ஆனால் பார்வதியும் தன்னால் முடிந்தவரை வேலைகளை செய்து வந்தாள்.

மாமியார் உடைத்தால் மண்சட்டி மருமகள் உடைத்தால் பொன்சட்டி என சொலவாடைக்கு ஏற்றார்போல் பார்வதி செய்யும் அனைத்துவேலைகளிலும் குற்றம் கண்டு கொண்டிருந்தார் மாரியம்மாள். தாயின் ஆசையை நிறைவேற்ற தடையாய் இருந்தவள் என்பதாலோ என்னவோ.

"என்னடி குழம்பு வச்சுருக்க ஒரு உப்புகூட ஒழுங்கா போடதெரியலை உன்னை யெல்லாம் என் பையன் எப்புடிதான் கல்யாணம் பன்னானோ அப்புடி என்னதான் கண்டான் உன்கிட்ட" மறுவார்த்தை பேசாமல் உப்பை கலக்கினாள் பார்வதி. "உப்பு போட சொன்னா மொத்தமா அள்ளி தட்டிடுறதா வேணும்னா அய்யாசாமி மாட்டுவண்டில போயி தூத்துகுடில ஒரு வண்டி உப்பு அள்ளிகிட்டு வந்து தட்டு" என திட்டினார்.

பார்வதியோ எதுவும் கூறாமல் மௌனமாக நின்றாள். "போடி போய் வேலைய பாரு இடிச்சு வச்ச புளிமாதிரி நிக்குற" என திட்டிமுடிய அமைதியாக சென்று சமையலறையில் தஞ்சம்புகுந்தாள்.

தன் மாமியார் பற்றி பார்வதி அறிந்ததுதான் அதிலும் போஸ் "அம்மாவிடம் கொஞ்சம் அன்பா நடந்துக்கோ அப்பா இல்லாம வளத்தாங்க அப்போவும் சொந்தகாரங்க யாரும் நாங்க கஷ்டபட்டப்போ முன் வரல அதனால உங்க அப்பா மேல கோவமா இருக்காங்க; ஆனா நாங்க கொஞ்சம் நல்ல நிலைக்கு வந்ததும் எங்க தாய்மாமன் அம்மாகிட்ட பேச்சுவார்த்தை வச்சுகிட்டு எனக்கு அவங்க பொண்ண கட்டலாம்னு பார்த்தாங்க ஆனா எனக்கு உன்னதான் பிடிக்கும் அதான் உன்மேலயும் கோபபடுவாங்க

கொஞ்சம் அனுசரிச்சு நடந்துக்கோ" என போஸ் கூறியிருந்தார். அதனால்தான் பார்வதி அமைதியாக இருந்தாள். அதிலும் பெரியவர்களை மதிக்கும் குணமும் இயல்பிலேயே உண்டு.

மாரியம்மாளும் கோபம் இருக்கும் இடத்தில்தான் குணமும் இருக்கும் என்பதுபோல தன் மருகமகளுக்காக "டேய் டவுன்ல போய் சுத்திட்டு வாரியே அவளையும் கூட்டிட்டு போய்ட்டு வாடா;"

"அவ தலையில ஒரு முழம் பூ வாங்கி வைக்ககூட உனக்கு நேரம் இல்லாம போச்சா"

"டேய் அவ உன்னை நம்பிதான் வந்துருக்கா சும்மா எப்பவும் போல ஊர்சுத்தாம சீக்கிரம் வீட்டுக்கு வந்துசேரு உனக்கு கல்யாணம் ஆகிறுச்சு நியாபகம் வச்சுக்கோ" என பார்வதிக்காக தன் மகனிடம் வாதிடவும் செய்வார். ஒரே மனவருத்தம் போஸின் இந்த முடிவுதான்.

மாமியார் உப்பிற்காக சண்டையிட்ட நேரம் "போஸ் போஸ்" என ஒரு குரல் கேட்க வெளியில் வந்தாள் பார்வதி. அங்கு சன்முகமும் காவேரியும் வந்து நின்றனர்.

"வாங்க அண்ணா வாங்க அண்ணி அவுக வெளிய போயிருக்காங்க" என கூறிகொண்டிருந்ததாள். "அங்க யாருகூடடி பேசிக்கிட்டு இருக்க வேலைய பாக்ககாம" என உள்ளே இருந்து மாமியாரின் குரல்.

"சண்முகம் அன்னா வந்திருக்காங்க அத்த" என பார்வதி குரல் கொடுத்தாள். "யாரு போஸோட பிரண்டுதான" என கேட்டார். "ஆமா அத்த" என முடித்தாள்.

மாரியம்மாள் மனதில் தோன்றும் எழுத்துகளை சங்கிதமாக மாற்றிவிடும் வாய் கொண்டவர். "ஆமா அவனுக்காதான இப்போ கல்யாணம் முடிஞ்சுதே அவன்தான" என திருவிளையாடல் துவங்கியது.

"நீங்க உள்ள வாங்கன்னா" என பார்வதி அழைத்துகொண்டிருக்க இருவரும் முன்னேறினர்.

"ஆமா அந்த பொண்ணுகூட அந்த *** ஜாதி பொண்ணுதான" என முடித்தார் மாமியார். காவேரியின் கால்கள் சிலையாக நின்றன கண்கள் கலங்கின.

காவேரியின் குடும்பம் செல்வத்தில் குறைவில்லை என்றாலும் ஜாதிகளின் அடிப்படையில் பின்தங்கியிருந்தது. "ஏம்பா சன்முகம் நம்ம ஜாதில உனக்கு பொண்ணே கிடைக்கலையா" என காவேரியின் காதில் படும்படியே பேசி சென்றவர்கள் பலர். அதனால்தான் தன் கணவனின் மதிப்பு குறையகூடாதென பல இடங்களில் அமைதியாகவே இருந்தாள். இருவருக்கும் இருந்த ஒரே அரவணைப்பு போஸும் பார்வதியும் மட்டுமே ஆனால் இன்று இந்த வார்த்தை காவேரியின் மனதை மேலும் காயபடுத்தியது.

அடுத்து என்ன சொல்லபோகிறார்கள் என்பதை காவேரியின் மனம் அசைபோட துவங்கியது அவள் பல இடங்களில் கேட்ட வாசகங்கள் அல்லவா எப்படி எதிரொலிக்காமல் இருக்கும் "தண்ணி குடுக்காதடி அவ கீழ் ஜாதி பொண்ணு; இவகூடலாம் பழகாத; வீட்டுகுள்ளலாம் கூட்டிகிட்டு வராதடி" என பல வாசகங்கள் காவேரியின் மனதில் இருந்தன. அதில் சிலவற்றை மாரியம்மாளின் வாயில் இருந்து வரும் என எதிர்பார்த்தாள் காவேரி. அதனால் கண்கள் கலங்கின. சன்முகம் அவளை தோளில் சாய்த்து கொண்டு "ஏய் அழாதடி இப்போ என்ன நடந்துருச்சு சின்னபுள்ளையாட்டம் அழாத" என சமாதானம் செய்தார். பார்வதியோ மதில்மேல் பூனையாக செய்வதறியாது நின்றிருந்தாள்.

சன்முகத்தின் தோளில் சாய்ந்து அழுது கொண்டிருந்த காவேரி "போலாங்க" என குரல் கொடுத்தாள் அது சன்முகத்திற்கு மட்டுமே கேட்டிருக்க முடியும். "சரி நீ அழாத" என சமாதானபடுத்திவிட்டு "சரிம்மா தங்கச்சி போஸ்கிட்ட எதுவும் சொல்லவேணாம் வருத்தபடுவான் நான் இன்னொரு நாள் வாரேன்" என வாசலில் இருந்தபடியே தன் மனைவியை அழைத்துக்கொண்டு நடந்தார். இருவரது முகத்திலும் கவலை தென்பட்டது. பார்வதியின் இதயத்தில் ஓர் வலியுணர்வு ஏற்பட்டது.

எதுவும் செய்யமுடியாமல் வீட்டினுள் நுழைந்தாள். "சன்முகம் எவ்வளவு நல்ல பையன் இவகிட்ட எப்புடி போய் மாட்டுனான்" என கேட்டாள் மாமியார். பனிமலையும் வெடிக்கும் அல்லவா வெடித்தாள் பார்வதி. "அத்த உங்களுக்கு இப்போ என்ன பிரச்சனை

சும்மா எதாவது பேசிகிட்டே இருப்பீங்களா யாரு யாரு கட்டுன உங்களுக்கு என்ன?" என கிளம்பினாள்.

ஆனால் மாரியாம்மாளின் மனதில் அந்த கடைசி வார்த்தைகள் "உங்க பையன் என்ன கட்டுனதால உங்களுக்கு என்ன பிரச்சனை" என்பது போல பதிந்தது. வாய்க்கும் காதுக்கும் உள்ள தூரம் இதுதான்போல.

உடனே மாரியம்மாள் அழுதுகொண்டே "என் அண்ணன் பொன்னுனா இப்புடி பேசிருப்பாளா! கண்ட நாயெல்லாம் மருமகளா ஏத்துகிட்டேன்ல அதான்டி நான் பன்ன தப்பு எனக்கு இது தேவைதான் " என கண்ணீரை துடைத்துகொண்டே சில புடவைகளை எடுத்து ஓர் பையில் வைத்தார்.

"அத்த அப்புடி நான் என்ன சொன்னேன்" என தன் மாமியாரை சமாதானப்படுத்த முயன்றார்.

"போதும்டி பொண்டாட்டி வந்ததும் ஆத்தால மறந்துட்டான்ல நான் இனிமே இங்க வரமாட்டேன். எனக்கு என் புருசன் வச்ச தென்னை மரம் இருக்கு தோட்டத்துல அங்கேயே போய் இருந்துகிறேன். இனி எனக்கு அதுங்கதான் புள்ளைங்க" என வேகமாக நடக்க "அத்த என்ன மன்னிச்சுடுங்க" என மறிக்க "நீ எந்த காட்டு சிறுக்கிடி என்ன அத்தனு கூப்புடுற இனி என்ன அப்புடி கூப்பிட்ட அவ்வளவுதான்" என கிளம்பிவிட்டார். சில கிழவிகள் அவரை சமாதானம் செய்வதுபோல "மருமக வந்தாலே இப்புடிதான்" என புரளி கிளம்பியது. பார்வதி அழுதுகொண்டே வீட்டினுள் சென்றுவிட்டார்.

சில நேரதுளிகள் கழித்து வந்த போஸ் "அம்மா எங்க" என கேட்க பார்வதி அழுதுகொண்டே அமர்ந்திருந்தாள். அதற்குள் சிலர் வந்து "உன் பொண்டாட்டிதான்பா அடிச்சு விரட்டிட்டா" என தன் பங்கினை ஆற்றினர். "எல்லாம் என் தலை எழுத்துடி உன்கிட்ட நான் படிச்சு படிச்சு சொன்னேன்ல" என பார்வதியிடம் ஆத்திரமாக பேசிவிட்டு தன் தாயை பார்க்க சென்றான் ஆனால் தாய் வரசம்மதிக்கவில்லை.

போஸும் தன் புதுமனைவியிடம் பேசாமலேயே இருந்தார் ஒருவாரகாலமாக. ஆனாலும் தன் தாய்க்கு தேவையான பணமும் மளிகை பொருட்களும் அண்ணாச்சி கடைமூலம் பயனித்துகொண்டிருக்கிறுது. அதை அண்ணாச்சியே கொடுப்பதை போல ஒரு மாய பிம்பம் ஏற்படுத்திகொண்டார் போஸ். இல்லை என்றாள் தன் தாய் நிச்சயம் மறுத்துவிடுவாள்.

தன் அன்பானவர்களின்மீது கோபம் இருந்தாள் அது மூன்றாவது மனிதன் மீது பாயும் என்பதைப்போல தன் மகனை பிரித்தவள் அந்த காவேரிதான் என்ற எண்ணம் படிப்படியாக வளர்ந்திருந்தது அந்த தனிமையில் மாரியம்மாவுக்கு.

அதன் எதிரொலிப்பாய்தான் சந்துரு பாதிக்கபட்டான். "எங்க உன் ஆத்தா என்னை கொல்ல சொல்லி அனுப்புனாளா?" என்று மீண்டும் கொட்டினாள் மாரியம்மாள் சந்துருவை பார்த்து.

"அவங்கள கார் அடிச்சிடுச்சு" என கண்ணீருடன் கூறினான் மாரியம்மாவுக்கு தூக்கிவாரி போட்டது. ஆனாலும் சந்துரு அடுத்த தாக்குதலையும் நிகழ்த்திவிட்டான்.

"பாட்டி அம்மா உங்ககிட்ட மன்னிப்பு கேட்க சொன்னாங்க" என கூறினான்.

"எதுக்குப்பா" என பாட்டியின் குரல் ததும்பியது. "தெரியலை ஒரு பாட்டி தோட்டத்துல இருப்பாங்க அதுக்கு நான்தான் காரணம் அவங்கள நீ பாத்தா சொல்ல சொன்னாங்க" என மழலை குரலில் முடித்தான்.

அத்துடன் பீரங்கியால் தகர்ந்த சுவர்போல மாரியம்மாளின் ஜாதி எண்ணம் தூள்தூளானது. கண்ணீருடன் சந்துருவை கட்டியனைத்தார் அவர்களுக்கு இடையே அரிசியும் மாட்டிகொண்டாள். "நான்தான்பா தப்பு பன்னேன் காவேரி ரொம்ப நல்லவபா நான்தான் கெட்டவ" என அழுதாள் மாரியம்மாள்.

"பாட்டி மூச்சுமுட்டுது என்னைய இறக்கி விட்டுட்டு அவன கொஞ்சு" என அரிசியின் குரல் இடிபாடுகளுக்கு நடுவில் இருந்து வந்தது.

உடனே அவனை விடுவித்துவிட்டு வீட்டை பூட்டினார் மாரியம்மாள். மூவரையும் அழைத்துகொண்டு தன் மருமகளின் இல்லம் நோக்கி நடந்தார்.

அங்கே வீட்டை நெருங்கியதும் மணியின் தாய் பார்வதியுடன் சண்டையிட்டுகொண்டிருந்தாள். "என்னடி புள்ளை வளக்குற நல்லா பொம்பளைபுள்ள ஊர்மேயுது. இங்கபாரு என் மகன் மண்டைய ஒடைச்சு விட்டுருக்கா அந்த பிசாசு" என சரமாரி தாக்குதல்கள் நடந்தன. பார்வதியும் எதுவும் பேசமுடியாமல் அமைதியாக கேட்டுகொண்டிருந்தார். கூட்டமாக நின்று பலரும் ரசித்துகொண்டிருக்க.

"ஏய் என்னடி இங்க கத்திகிட்டு இருக்க" என மாரியம்மாவின் ஓசை வரவே மணியின் தாய் திரும்பிபார்க்க அரிசி தன் பாட்டியின் பின்னால் ஒளிந்துகொண்டாள்.

ஆனால் மணியின் தாயோ மாரியம்மாவை பார்த்து பயந்தபோய் "இங்க சும்மா மகன் அரிசி" என புலம்பிகொண்டே நகர்ந்தார். "இங்க என்னடி வித்தையா காட்டுறாங்க போங்கடி" என கூட்டத்தை களைத்துவிட்டார் மாரியம்மாள்.

"இளிச்சவாயன் சிக்குனா அப்புடியே மொளகா அறச்சிடுவாளுக நீ ஏன்டி அங்கேயே நிக்குற உள்ள வா" என அதிர்ச்சியில் உறைந்திருந்த தன் மருமகள் பார்வதியை அழைத்தார்.

பின் போஸ் வந்ததும் ஒரு பாசமலரே படமே ஓடி முடிந்தது. இதற்கெல்லாம் சந்துரு தான் காரணம் என மாரியம்மா ஒரே வார்த்தையில் முடித்துவிட்டார்.

இரவு பாட்டியின் கைவரிசையில் உணவுகள் தாயிரிக்கபட்டு பறகமாறபடவே கூட்டுகுடும்பமாய் உண்டு மகிழ்ந்தனர்.

தன் வீட்டில் உள்ள அனைவரும் சந்துருவின்மீது பாசமாய் இருப்பதை பார்த்து அரிசிக்கும் அவனை பிடித்துவிட்டது. அனைவரும் உறங்கவே அன்று கூட்டுகுடும்பத்தை பௌர்ணமி நிலவு அடைகாத்தது.

தூங்கும்போது சந்துருவோ தனது போர்வையை விரித்து படுத்திருந்தான் ஆனால் தலையில் தலையனை இல்லை குளிரில் புளூவென சுருண்டிருந்தான். அப்போது ஏனோ தெரியவில்லை அன்பரசி விழித்துகொண்டாள். அவன் நடுங்குவதை பார்த்து தன் போர்வையை அவனுக்கு போர்த்தி விட்டாள்.பின் தன் தலையனையை எடுத்து அவனுக்கு வைத்தவள் அந்த தீபத்தின் வெளிச்சத்தில் சென்று தன் தாயின் சேலை ஒன்றை எடுத்து வந்து தன்னை போர்த்திக்கொண்டு படுத்தாள்.

அரிசியின் இரவு கவசங்கள் மீது கைவைத்தால் மூன்றாம் உலகபோர்தான் என்பதை நன்கு அறிந்திருந்த போஸ் சற்றுமுன் நடந்தகாட்சியை பார்த்து வியப்புடன் மனதில் மகிழ்ந்தார் உறங்குவதுபோல நடித்துகொண்டே.

சந்துருவும் தன் தாய் என்றும் போர்த்தி விடுவது போல கனவில் தோன்ற "அம்மா " என முனங்கிகொண்டே போர்வையை

இருகமூடிகொண்டு உறங்கினான். அந்த வார்த்தை அன்பரசிக்கும் கேட்காமல் இல்லை.

## அத்தியாயம் - 25

அதிகாலை எழுந்து கொண்ட சேவல்கள் அரிசியின் துயிலை தொந்தரவு செய்யவே "காலங்காத்தல கூவி எழுப்பிவிடுறீங்களா இருங்க இன்னைக்கு உங்கள்." என மறதிற்குள்ளே அறிக்கை விடுத்துவிட்டு தன்மீது கிடந்த போர்வையை இழுத்து போர்த்தி கொண்டாள். அதிகாலையில் உறக்கம் வராமல் எழுந்து கொண்ட சந்துருவோ தன் மீதிருந்த போர்வையை குளிரில் படுத்திருந்த அரிசிக்கு போர்த்திவிட்டு பார்வதியின் பின்னாலயே நடந்து கொண்டிருந்தான். கோலமிடுதல் பாத்திரங்கள் அடுக்குதல் என உதவிகள் செய்தவண்ணம் இருந்தான்.

"ஏய் இன்னுமாடி தூங்குற பாரு சந்துரு சீக்கிரமா எழுந்துட்டான் அவன் புள்ள நீயும் இருக்கியே" என திட்டிகொண்டிருக்க அதை காதிலேயே வாங்கிகொள்ளாமல் கேட்டுக்கொண்டிருந்தாள்.

"பூஸ்ட் வேணுமானா எந்திருச்சு வா இல்லைனா இன்னைக்கு உனக்கு பூஸ்ட் கிடையாது" என பார்வதி கூறவே ஏழாம் அறிவு செயல்பட்டு எழுந்து கொண்டாள். பின் ஒரு வீட்டின் முன்னால்

இருந்த வேப்பமரத்தில் ஏறினாள். அவள் கீழே விழுந்துவிடுவாளோ என்ற பயத்துடன் சந்துரு அவளையே பார்த்துகொண்டிருந்தான். அவனின் இதயதுடிப்பும் அதிகமாக இருந்தது.

"ஆமா ஏன் மேல ஏறிருக்க" என சந்துரு கேட்க "பல்லு விளக்கவேணாமா பல்லுவிளக்காம அம்மா பூஸ்ட் தராது" என முகத்தை சுருக்கினாள். "அப்போ வா அதான் மாமா பல்பொடி வாங்கிதந்தாங்கள்ள அதில விளக்கலாம்" என ஓடி சென்று அந்த தகரடப்பாவை எடுத்து வந்தான். "ச்சீ எனக்கு இது வேணாம் இது மனுசனோட எலும்புல இருந்து செய்வாங்கலாம்" என கண்கள் விரிய கூறிகொண்டிருந்தாள். அது போஸ் ரசாயனம் பற்றி விளக்க முயன்றபோது அரிசியிடம் தெரியாமல் கூறிய வார்த்தை.

"ஐய்யோ நான் தினமும் இதுலதான் வெளக்குறேன்" என சந்துரு கூற "இனிமே இதுல விளக்கு " என அவனுக்கும் சேர்த்து ஒரு குச்சியை ஒடித்துவந்தாள். அதற்கு காரணம் இருந்தது.

பின்ன சந்துருக்கு சூடான பூஸ்ட் கிடைத்துவிடும் பல்துலக்கி தாமதமாக வரும் அரிசிக்கு சூடு இல்லாமல் போய்விடும் அல்லவா. அதனால் தான் சந்துருவை இரண்டாம் முறையாக பற்களுடன் சண்டையிட செய்தாள் அந்த ராஜதந்திரி.

பார்வதி சந்துருவுக்காக பூஸ்டை ஒரு டம்ளரில் கொண்டுவரவே "நீ தான் பல் வெளக்குனியே" என பார்வதி கேட்டார். "அரிசி விலக்குதுல அதான் நானும்" என முடித்தான். திட்டம்

நிறைவேறியது. "சரி சீக்கிரம் வாங்க சூடு பன்னிதாரேன்" என கிளம்பினார் பார்வதி.

அவசரமாக அரிசியோ அரைகுறையாக துலக்கிவிட்டு ஓடவே "சந்துரு வரட்டும் இருடி" என்பது தாயின் உத்தரவு 'என்னடா இது வம்பா போச்சு' என நினைத்துகொண்ட அரிசி வெளியே சென்று சந்துருவை பார்க்க அவன் இப்போதுதான் மென்று கொண்டிருந்தான். "நீ வெலக்குனது போதும்" என அவன் வாயிலிருந்த குச்சியை பிடுங்கி வீசிவிட்டு தயாரானாள்.

பார்லிஜியும் சமமாக பிரிக்கபடவே சந்துருவுக்கு ஒப்பந்தம் நினைவு வந்தது. "எனக்கு வேணாம்" என அரிசிக்கு விட்டுகொடுத்துவிட்டான். எதையும் ஆழமாக ரசித்து உண்ணும் அரிசி நீண்டநேரம் அப்படியே அமர்ந்திருந்தாள்.

"ஏய் இன்னுமாடி குடிச்சுகிட்டு இருக்க சீக்கிரம் குடிச்சிட்டு பரண்மேல இருக்குற அண்டாவை இறக்குடி" என தாய் கூறவே முதலை விழுங்குவதை போல விழுங்கிவிட்டு பரணை நோக்கி சென்றாள்.

"இதுக்கு அது கீழயே இருந்திருக்குமே நீதான மேல வைக்க சொன்ன இப்போ மறுபடியும் இறக்க சொல்ற" என அலுத்து கெண்டு அந்த ஜன்னல் கம்பிகளை தாவி பிடித்தாள். "சந்துரு தள்ளி நில்லுடா" என கூறிவிட்டு அப்படியே ஜன்னல் கம்பியில் ஒரு காலும் மதில் சுவற்றில் ஒருகாலும் வைத்து உடலை திருப்பினாள். பின்

சுவற்றின் மீது ஏறியிருந்தாள். சந்துருவின் மனதில் இவள் கிழே விழுந்துவிடுவாளோ என்ற பயம் மட்டுமே இருந்தது. "அரிசி பாத்து ஏறு" என கீழே இருந்து ரிங் மாஸ்டர்போல உத்தரவு அளிக்க "நீ பேசாம இருடா எனக்கு தெரியும்" என மேலே அடுக்கபட்டிருந்த மரபலகைகளில் காலை வைக்க அது உடைவதுபோல சத்தம் ஏற்படுத்தியது.

பாத்திரங்கள் குவிந்து கிடந்த அந்த அந்தரகுடோனில் புகுந்து நடுவில் நின்றாள். அப்போது பார்வதி அங்கு வந்து நின்று கொண்டு "அன்னைக்கு போட்டோம்ல பித்தளை அண்டா அதை எடு" என கூறினார்.

மேலே எதையோ தடவிய அரிசி சட்டென ஒரு எலியை வாலை பிடித்து தூக்கினாள். "இங்க பாருமா ஒரு எலி குடும்பமே இருக்கு" என அதை கீழே தூக்கி போட அது சந்துருவின் பக்கம் வந்து விழுந்து ஓடியது சந்துரு பயந்துபோய் தன் அத்தையை கட்டிகொண்டான்.

"ஏய் என்னடி சேட்டைபன்னிகிட்டு இருக்க" என பார்வதி

திட்ட

"இங்கபாருமா" என ஒரு பெரிய இரும்பு கரண்டியை எடுத்து ஒரு பாத்திரத்தில் அடிக்க அது பலத்தமணியோசை எழுப்பியது. அதில் பயந்த சுண்டெலிகள் தெரித்து ஓடின. சில அன்பரசியின் மீதும் ஏறி

ஓடின. அவளோ யாரோ கிச்சமூட்டுவதை போல சிரித்துகொண்டிருந்தாள்.

"இப்போ நீ சொன்ன வேலைய செய்யபோறியா இல்லையா" என பார்வதி ஆத்திரமானார். அதற்குள் அரிசி ஒரு பானையை இறக்கினாள். "ஏய் இது சில்வர் அண்டாடி மேல பித்தளை இருக்கும்பாரு"

ஒரு வழியாக தேடுதல் பணி முடிவடைந்து பித்தளை அண்டாவை இறக்கினாள். "அம்மா இங்க அந்த ரிமோட் கார் இருக்கு கீழ இறக்கவா?!" என அரிசி கூற "நீ ஒன்னும் இறக்கவேணாம் மரியாதையா இறங்கு" என முடித்தவுடன். "சந்துரு இது உனக்கு வேணுமா" என அந்த காரை தூக்கி காட்டினாள். அதை பார்த்தவன் "எங்க வீட்டாலயும் இது இருக்கு" என கூற காரணம் காவேரி தன் மகனுக்கு பொம்மை வாங்கும்போது அன்பரசிக்கும் சேர்த்து வாங்கினாள் என்பதால்தான்.

"இப்போ நீ இறங்களைனா பாரு" என பார்வதி கூற மேலே இருந்து தொப்பென குதித்தாள். அதில் அவளது சட்டையின் கை ஆணியில் மாட்டிகொள்ள சட்டை கிழிந்தது. "கிழுச்சுட்டியா சேட்டைடி உனக்கு என்னமோ பன்னு நீயாச்சு உன் அப்பாவாச்சு" என பார்வதி அண்டாவை எடுத்துகொண்டு நகர்ந்தார்.

கீழே விழுந்தவள் எழாமல் அமர்ந்திருக்க மேலே ஒரு எலி வேலையைகாட்டியது. அரிசியின் தலையில் ஒரு அட்டை விழவே

அதை தொடர்ந்து சில சிறிய மரதுண்டுகளும் விழுந்தன. அவள் பழைய நீராவி எந்திரத்தில் கரி அள்ளிபோடுபவள் போல காட்சியளித்தாள். அதை பார்த்த சந்துரு சிரிக்கவே. "ஏன்டா சிரிக்குற" என கேட்க "இல்லை சும்மாதான்" என அமைதியானான்.

அத்துடன் சந்துருவின் கண்கள் அந்த மரதுண்டுகளை நோக்கி சென்றன. அதை பார்த்த அரிசியும் "ஐ செஸ் வா விளையாடலாம்" என அந்த போர்வீரர்களை கையில் அள்ளினாள்.

பின் வீட்டின் நடுவில் அந்த அட்டை விரிக்கபட்டு காயாகளை அடுக்கினாள் அரிசி. "டேய் சந்துரு வெளியே போய் ரெண்டு ஜல்லிகல் எடுத்துட்டுவா கருப்பு யானை இல்லபாரு" என அரிசி கூறவே ஓடிசென்று எடுத்து வந்தான். பாவம் அவனுக்கு கருப்புதான் ஒதுக்கபட்டது. கேட்டால் நான் வெள்ளையா இருக்கேன் நீ கொஞ்சம் கருப்பா இருக்க என சமாளித்து விட்டாள். உண்மையான காரணம் நொன்டி யானைகளை வைத்து எப்படி விளையாடுவது என்பதுதான்.

அப்போது கவனித்தான் சந்தரு "அரிசி அங்க பாரு ராணிய தப்பா வச்சுருக்க " என போர்டில் வரையபட்டிருந்த படத்தை பார்த்து கூறினான். "நான் வச்சதுதானாடா கரெக்ட்" என தன் பக்கம் தவறே இல்லை என வாயாலயே சாதித்தாள். சந்துரு டைரியில் இதை மிகமுக்கிய தருணமாக எழுதியிருக்கவே. அவன் அன்று விளையாடும்போது காய்களை தவறாக வைத்துவிட்டு "எனக்கு இப்புடிதான சொல்லி கொடுத்தாங்க" என கிண்டல் செய்தது

நினைவுக்கு வரவே டைரியை வாசிக்கும் அரிசி (அன்பரசிக்கு) புன்னகை மலர்ந்தது. ஆம் அவனது குரு அரிசிதான்.

இறுதியில் காய்கள் தவறாக அடுக்கிய நிலையிலேயே சந்துருவுக்கு பாடம் நடத்தப்பட்டது.

"இங்க பாரு இது ராஜா இது ராணி அப்புறம் இது குதிரை இது யானை முன்னாடி நிக்குறது சுவர் சரியா" என கூற சந்துருவும் ஆர்வமாக கவனித்துகொண்டிருந்தான்.

"இந்த குதிரை இருக்குல இது நேரா போகும்" என குதிரைக்கு யானை பலம் கொடுக்கப்பட்டது.

"அப்புறம் கருப்புராணி ஒரு கட்டம்தான் நகரும் ஆனா வெள்ளைராணி எத்தனை கட்டம்வேனா நகரும்" என தன் அணிக்கு வலிமை சேர்த்தாள்.

ஒரு வழியாக தன் சொந்த விதிமுறைகளால் சந்துருவுக்கு பாடம் கற்றுகொடுத்து ஆட்டம் ஆரம்பித்தது. அப்போது மலை அங்கு நுழையவே "ஏய் சந்துரு ராணி தப்பா வச்சுருக்கடா" என திருத்த அரிசி அவளை முறைத்து பார்த்தாள்.

"ஏய் மலை நீ சும்மா இருடி விளையாடும்போது பேசக்கூடாது" என தன்குட்டு வெளிப்படாமல் மறைத்தாள். "சந்துரு இவ உன்னை ஏமாத்துறா" என மலை கூறவே சந்துரு திருதிருவென விழித்தான். அவனது அழகிய கண்கள் நினைவுக்கு வரவே டைரியில் கண்ணீர் சிந்தியது.

'உன்னை ஏமாத்த கூடாதுனு தான் சந்துரு நான் சாகபோனேன் நீ ஏன் என்ன மறுபடியும் தேடி வந்த' என கண்கள் வலியை விழியில் காட்டின.

அதைபார்த்த பிரியா "அம்ம" என கூறிவிட்டு அன்பரிசியின் கண்ணத்தில் கைகளை வைத்தாள். அந்த டைரியில் கடைசிபக்கத்தில் ஒரு வரி இருந்தது. "வாழ்கைனா என்னனு எனக்கு புரியவச்சதே நீதான் அன்பு; அது என்னனா!" என மேலும் தொடரும்போது.

"அன்பு அப்பாவோடா பைக்சாவிய எடுத்துட்டு வா" என பார்வதி அழைக்க கண்ணீரை துடைத்துகொண்டு பிரியாவையும் தூக்கிகொண்டு வெளியே சென்றாள்.

சாவியை கொடுத்துவிட்டு மீண்டும் நுழையும்போது அன்பரசியின் கைபேசி அவளை அழைத்தது. "நான் கால் பன்றேன் உன்கூட கொஞ்சம் பேசணும்" என சந்துரு கூறியது நினைவுக்கு வரவே மூளையோ வேண்டாம் என்று தடுத்தது ஆனால் அன்பரசியின் மனதில் ஒளிந்திருந்த அரிசி குதித்தோடி சந்துருவை அனைக்க சொன்னாள்.

ஆர்வமாக சென்று ஃபோனை பார்த்தால் வெறும் மூன்று இலக்க எண் மட்டுமே இருந்தது.

"ஹலோ யாரு"

"நான் யாருங்கிறது இருக்கட்டும் நீ அன்பரசிதான?!"

"ம்ம்"

"உன் புருசன் சந்துரு ஐ ம் ரைட்?!"

"..." அமைதியாக இருந்தாள்.

"ஓ சாரி இன்னும் கல்யாணம் ஆகலைல மறந்துட்டேன்"

"யாருடா நீ" அரிசியாய் மாறினாள் அன்பரசி.

"யாருடா இல்லமா யாருடி குரல் மாத்திபேசுறதால அப்புடி கேடகுதா இப்போ பாரு" என பெண்ணின் குரல் சற்றுமுன் கேட்ட நியாபகம் இருந்தது.

"எதுக்குடி போன் பன்ன என் நம்பர் எப்புடி உனக்கு தெரியும்"

"இதையேதான் சந்துருவும் கேட்டான்"

"ஏய் என்ன திமிராடி உனக்கு ஃபோன் பன்னிட்டு ஓவரா பேசுற"

"ஹா ஹா ஹா. நான் கொஞ்சம் ஓவராதான் பேசிட்டேனோ சரி விடு விசயத்தை சொல்லிடுறேன். உனக்கும் சந்துருவுக்கும் கல்யாணம் நடந்த அடுத்த நாள் நீ வெள்ளை புடவையோடதான் இருக்கனும் ஹா ஹா" என இனைப்பு துண்டிக்கப்பட்டது.

## அத்தியாயம் - 26

கைபேசியை குழப்பத்துடன் பார்த்துகொண்டிருந்தாள் அன்பரசி. அவளது கையில் இருந்த பிரியோவோ இவளையே பார்க்க மனது அமைதியானது. யாரோ விளையாடுறாங்க என நினைத்துகொண்டு பிரியாவை கொஞ்சியபடி உள்ளே சென்றாள். அப்போது மலர் அங்கு வரவே அன்பரசியின் முகத்தில் முன்னால் இருந்த கலக்கம் இல்லை. "என்னடி சரி ஆகிட்டியா இப்போ எப்புடி இருக்கு மனசு" என கேட்க "சந்துரு ரொம்ப நல்லவர்டி ஆனா " என இழுக்க.

"அம்மா தாயே சந்துரு நல்லவரு நீ மட்டும் என்ன கெட்டவளா சும்மா புலம்பிகிட்டே இருக்காதடி உன் கடந்த காலம் என்னனு எனக்கு தெரியாது உன் மனசுல இருக்குறதையும் சொல்லமாட்டேங்குற சரி அதை விடு உனக்கு என்னடி பிரச்சனை" என மலர் கேட்டுமுடித்தாள்.

அன்பரசியின் மனதில் இருந்த நினைவுகள் வெளியே வரும் தருணம் நெருங்கியது. தன் தோழியிடம் கூறலாம் என வார்த்தைகளை தயார்செய்தாள். ஆனாலும் அவளால் கூற இயலவில்லை அதற்கு காரணமும் இல்லாமல் இல்லை.

அன்பரசியின் முகத்தில் இருந்த குழப்பத்தை பார்த்த மலர் "ஆரம்பிச்சுட்டியா எனக்கு ஒரு முடிவ சொல்லு சந்துருவ உனக்கு பிடிச்சுருக்கா இல்லையா" என மலர் கேட்க வெட்கத்துடன் "ம்ம்" என கூறவே "அடி லூசு மனசுல அப்போ ஆசை இருக்கு உனக்கு" என மலர் அன்பரசியின் இடுப்பை கிள்ளினாள்.

"அப்படி இல்லடி சந்துரு அம்மா இல்லாம வளந்தவர்டி அந்த டைரி வாசிச்சதும்தான் எனக்கே புரிஞ்சுது என்ன அவங்க அம்மா மாதிரி நினைச்சிருக்காருடி நான் அவர்கூட இருந்த சந்தோஷமா இருப்பாரு" என அன்பரசி கூறவே "அப்போ உனக்காக நீ கல்யாணம் பன்னல?!" என மலர் முறைத்தாள்.

"எனக்குனு இனி என்னடி இருக்கு வாழ்கைல காதலிச்சேன் அதுவும் இல்லாம போச்சு. நான் ஆசைப்பட்டது எதுவுமே எனக்கு நிலைச்சது இல்லை. அதான் அடுத்தவங்க ஆசைக்காக வாழ்ந்துகிட்டு இருந்தாலே போதும்டி" என அன்பரசியின் கண்ணில் நீர்துளிகள் வழிந்தன. "ஏய் ஏன்னடி லூசு மாதிரி அழுதுகிட்டு " என அவளை அறைக்குள் அழைத்துசெனறாள். "அம்ம" என அன்பரசியின் கண்ணீரை பிரியா துடைத்துவிட குழந்தைகள் முன் அழகூடாது என உணர்ந்தவள் தன்னை நிதானபடுத்திகொண்டாள்.

"யாருடி அவன் உன்னை விட்டுட்டு போனது சுத்த முட்டாபயலா இருப்பான் போல" என மலர் ஆத்திரமாக கேட்கும்போது அன்பரசி அவளின் வாயை பொத்தி "அவர் நல்லவர்டி அவர் என்னை விட்டுட்டு போகல நான்தான் அவரை விட்டுட்டேன்" என சுவற்றில் மாட்டியிருந்த ஓவியத்தை பார்த்துக்கொண்டே கூறினாள். மீண்டும் அழகூடாது என்ற உத்தி அது.

"என்ன நீ விட்டுட்டியா ஏன்?!" என மலர் கேட்க "அவர் என்ன கல்யாணம் பன்னிருந்தா வாழ்கையில தோத்துருப்பாருடி ஆனா இப்போ நல்லா இருக்காரு அதுவே எனக்கு போதும்" என கண்ணீர் வழிந்தது அது ராஜேஷின் நிழலை கண்ணில் இருந்து அழிக்க நினைத்திருக்கும் போலும் ஆனாலும் தோல்விதான்.

"என்னடி லூசு மாதிரி பேசற காதல்ல ஜெயிச்சு வாழ்க்கையிலும் ஜெயிக்கனும்டி" என அறிவுரை வழங்கியவளை பார்த்து "குடும்பமா இல்ல காதலானா நீ எத முடிவு பன்னுவ" என தன்தோழியடம் கேட்க மலர் சிறது யோசித்தாள். "காதல்தான்" என கூற வாயை

திறக்கும்போது "நான் குடும்பம்னு சொன்னது உன்னோட குடும்பம் இல்ல உன் காதலனோட குடும்பம்" என அன்பரசி நிறுத்தினாள்.

"என்னடி சொல்ற" என மலர் விழித்தாள். "நீ சொல்லு எதை தேர்ந்தெடுப்ப" என மீண்டும் கேட்டாள். "உண்மையான லவ் பன்னிருந்தா அவன்தான் நல்லா இருக்கும்னு நினைப்பேன்" என மலரின் வாயிலிருந்து வார்த்தைகள் வந்தன.

"நான் யாருகூடயாவது பொய்யா பழகி பாத்துருக்கியா" என அன்பரசி கூறவே "இல்லை" என்றாள். "அது மாதிரிதான் என் காதலும்" என மலரை பார்க்க அவளும் மௌனமாக இருந்தாள். பேச பல வார்த்தைகள் இருந்தும் இருவரும் அமைதியாக இருக்க பிரியாவின் சத்தம் மட்டுமே கேட்டுகொண்டிருந்தது.

அறையின் அமைதியை கலைக்கும் பொருட்டு அன்பரசியின் கைபேசி மீண்டும் சினுங்கியது. மீண்டும் அதே மூன்று இலக்க எண்.

கைகள் நடுங்க முகத்தில் பயம் தொற்றிகொள்ள எடுத்தாள் அன்பரசி. "ஹலோ உனக்கு என்ன வேணும்" என அன்பரசி ஆத்திரமடைய மலர் அவளை குழப்பமாக பார்த்தாள்.

"ஹலோ அன்பரசி மேடம் கூல்டவுன் கொஞ்சம் பொறுமையா கேளுங்க " என சிரித்தாள் அந்த மர்ம பெண்.

"நீ யாருனு தெரியாம என்னால உன்கூட பேசமுடியாது" என காதிலிருந்து செல்போனை எடுக்க முயன்றாள்.

அதற்குள் "ஜெனிய தெரியும்னு நினைக்குறேன்" என அந்த பெண்கூறவே அன்பரசியின் கண்கள் தானாக கண்ணீரை சிந்தின. "பாவம் பன்னாலும் ஒரு நியாயம் இருக்கனும் எனக்கு தேவை ஒரு உசுரு அது நீயா இல்லை சந்துருவானு முடிவு பன்னிக்கோ நாளைக்கு நான் கால் பன்றேன் ஹா. ஹா. ஹா" என சிரித்துவிட்டு இனைப்பு துண்டிக்கப்பட்டது.

அன்பரசி பதட்டத்துடன் மீண்டும் அந்த எண்ணிற்கு முயற்சி செய்தால் "தாங்கள் டயல் செய்த எண்ணை சரிபார்க்கவும்" என வந்தது. "என்னடி எதுவும் பிராப்ளமா" என மலர் அன்பிடம கேட்டாள்.

"ம்ம் ஜெனி " என கூறிவிட்டு தன் தோழியின் தோளில் சாய்ந்து அழ ஆரம்பித்தாள். "ஜெனியா யார் அது" என குழம்பிகொண்டே தன் தோழியின் முதுகில் தட்டிக்கொடுத்து சமாதானம் செய்தாள்.

மீண்டும் கைபேசி ஒலிக்கவே அன்பரசியோ பயந்துகொண்டு கண்களை இறுக மூடிக்கொண்டாள். ஆனால் மலர் எடுத்து ஆன் செய்தாள். "ஏய் அன்பு யார்கூட பேசிக்கிட்டு இருந்த லைன் பிஸினு வருது" என சந்துரு விமானநிலையத்தில் நின்றுகொண்டு பேசினான். " நான் மலர்" என அவள் கூறியதும்.

"அன்பரசி இல்லையா நான் கொஞ்சம் பேசணும்" என சந்துரு கேட்டான். ஆனால் அன்பரசியோ அழுதுகொண்டே இருந்ததால் "நீ அப்புறமா கால் பன்றியா அவ கொஞ்சம் டிஸ்ட்ரப்டா இருக்கா" என மலர் கூற சந்துரு "சரி" என கூறினான் ஆனால் மனமோ 'அன்பரசிக்கு என்னை பிடிக்குதா இல்லை வீட்டில் சொன்னதால் கல்யாணம் பன்ன சம்மதிச்சாளானு கேட்கலாம்னு பாத்தா அவ என்கூட பேசக்கூட தயாரா இல்லை அப்படினா என்னை பிடிக்கலையா இல்ல வேற யாரையாவது லவ் பன்றாளா? சரி அப்படி லவ் பன்னா இந்த கல்யாணத்த நிறுத்திடலாம்' என மனதில் ஓடி முடிய.

"அப்பா எனக்கு கல்யாணத்துக்கு என்ன அவசரம்" என தந்தையை பார்த்துகேட்டான். "ஏன்டா இப்புடி கேக்குற" என சன்முகம் கேட்டார்.

"ஒன்னு சொன்னா கோவிச்சுக்கமாட்டீங்களே" என இழுத்தான். "இந்த கல்யாணம் வேண்டாம் அப்படீங்குற வார்த்தைய தவற எதுவேணாலும் சொல்லு" என சன்முகம் வழியை அடைத்தார்.

"ஒன்னும் இல்லைப்பா" என சந்துரு கூறிவிட்டு முன்னே நடந்தான் ஆனால் அவன் மனசாட்சியோ 'நீ என்ன செல்ஃபிஸா உனக்கு வாழ்கைனா என்னனு புரிய வச்சவடா அன்பரசி உனக்கு தாய் மாதிரி; உன் அம்மாக்கு பிடிக்காம எதாவது நீ பன்னிருக்கியா; இப்பமட்டும் ஏன் பிடிக்காத ஒரு விசயத்தை பன்ன நினைக்குற; ஒரு

பொண்ணுக்கு யாரு துணையா வரனும்னு அவ முடிவெடுக்க உரிமை இல்லையா; அன்பரசி மனசுல நீ இல்லை' என முடிந்தது.

கைபேசியை எடுத்தான் "ஹலோ டேவிட் எப்புடி இருக்க" என சோர்வாக கேட்டான்.

"ஐ எம் ஃபைன் டியூட் ஒய் யுவர் வாய்ஸ் காட் சேட்ஃபிலிங்" என கேட்டான் டேவிட்.

"ஒன்னும் இல்லடா அந்த சாஃப்ட் டெக் கம்பெனி ஒகே பன்னிரு"

"ஏய் இடியட் அதுல சைன் பன்னா நீ அமெரிக்காலதான் இருக்கனும் ஒன் இயர்க்கு நல்லா யோசிச்சு முடிவு பன்னு" என டேவிட் அதிர்ந்தான்.

"இல்ல டியூட் எனக்கு இங்க மேரேஜ் பிக்ஸ் பன்னிருக்காங்க" என சந்துரு முடிக்கும் முன்னே "கங்காராட்ஸ் டியூட்" என டேவிட் கூற "ஹே எனக்கு அதுல இஸ்டம் இல்லடா ஆர் யூ அன்டர்ஸ்டேன்ட்" என கூறினான்.

"ஓ ஒகே ஒகே அதனாலதான் நீ அமெரிக்கா வந்து என்ஜாய் பன்னலாம்னு பாக்குற சரியா?!" என சிரித்தான்.

"ஆமா சீக்கிரம் முடிச்சிட்டு சொல்லு இன்னும் மூனு நாளுக்குள்ள நான் அங்க இருக்கனும்" என கூறவே "இட்ஸ் மை டியூட்டி" என டேவிட் கூறியதும் இனைப்பு துண்டிக்கபட்டு அன்பரசியின் பிறந்தநாள் அன்று எடுத்த புகைப்படம் முகப்பில் இருந்தது. தனது தெடுதிரையை தடவியவனின் முகப்பில் சிறிதுநேரத்தில் சந்துருவும் சுவேதாவும் சேர்ந்து எடுத்திருந்த படத்துக்கு மாறியது. சன்முகமும் சந்துருவும் விமானத்தில் ஏறவே "சார் மொபைல் சுவிட்ச் ஆப் பன்னிடுங்க" என்ற பணிபெண்ணின் உத்தரவுக்கு இனங்க மொபைலை அனைத்தான். தனக்கு ஒதுக்கப்பட்ட இருக்கையின் அருகே ஒரு பெண் அமர்ந்திருந்தாள்.

"ஏய் சுவேதா நீயும் இந்த ஒபிளைட்தானா" என சந்துரு சென்று அமர்ந்தான். "பின்ன மதுரையில என்ன ஆயிரம் பிளைட்டா ஓடுது" என போலியாக சிரித்தாள்.

"சரி அதை விடு மஞ்சுளாவும் அந்த ரெண்டு மாடுகளும் வரலையா?" என சந்துரு கேட்க "சுகுவையும் பாலாஜியையும் கேக்குறியா?!" என சந்துருவை பார்த்தாள். " ம்ம்" என்றான்.

"மஞ்சுளாவோட வீடு மதுரையிலதான இருக்கு அங்க பேயிருங்காங்க" என அவள் கூற "ஏன் நீ போகலையா?" என்றான். சுவுதாவுக்கு மனம் முழுவதும் கனத்திருக்க இதுவே சந்துருவும் சுவேதாவும் தனியாக இருந்தாள் அவனை கட்டியனைத்து அழுதிருப்பாள். அனைத்துகவலைகளும் அவளது முகத்தை சுருக்கி காட்டின.

"சரி உன் ஒயிஃப் அழகா இருக்கா" என சுவேதா திசைதிருப்பினாள். "நீ கூடதான் அழகா இருக்க" என்றான் சேகமாக.

"என்னடா ஆச்சு ஏன் சோகமா இருக்க"

"ஒன்னு சொல்றேன் யாருகிட்டயும் சொல்லவேண்டாம்" என சந்துருகூற "சொல்லு" என்றாள்.

"இந்த கல்யாணம் நடக்காது நான் அமெரிக்கா போறேன்" என சந்துரு கூறவும் விமானம் ஓடுதளத்தில் ஓடி வின்னில் புகுந்தது.

"ஏன்டி என்னடி பிரச்சனை சந்துரு கூட ஏன் பேசமாட்டேங்குற" என மலர் கேட்க அன்பரசி மலரின் தோளில் இருந்து எழுந்தாள்.

"என்னடி சொல்ற"

"ஆமா இப்போ ஃபோன் பன்னது அவன்தான்" என மலர் கூறவே "சந்துருவா என்கிட்ட அப்போவே சொல்லிருக்கலாம்லடி" என சிறிது கோபம் தெரிந்தது.

"இருடி மறுபடியும் ஃபோன் பன்னலாம் கோபபடாத" என டயல் செய்தால் ஆனால் சுவிட்ச் ஆஃப் என வந்தது.

## அத்தியாயம் -27

சந்துருவின் கைபேசியை அன்பரசியின் அலைகள் அடையமுடியவில்லை. அவன் என்ன நினைத்திருப்பான் என சோகமாக அமர்ந்தாள். "விடுடி ஃப்ளைட்ல போயிகிட்டு இருப்பாங்க அப்புறமா ட்ரை பன்னு" என மலர் ஆறுதல் செய்தாள் அன்பரசியின் மனமோ வேதனையால் கனத்தது. "ஆமா உனக்கு யாரு அப்போ போன் பன்னது நீ ஏன் அழுத" இது மலரின் கேள்வி.

"யாரோ ஒருத்தி பேசுனா மலர்; எனக்கும் சந்துருவுக்கும் கல்யாணம் நடந்தா ரெண்டுபேத்துல ஒருத்தர கொண்ணுடுவேன்னு சொன்னா நான் செத்தாலும் பரவாயில்லை ஆனா சந்துரு" என மலரை பார்த்ததாள்.

"ஏன்டி நீ சின்ன வயசுல பன்ன வாலுதனத்துக்கு யாராவது உன்னை கலாயக்க ட்ரை பன்னிருப்பாங்கடி நீ ஃபீல் பன்ற அளவுக்கு ஒன்னும் இருக்காது" என மலர் சிரிக்க "அது இல்லடி அவ ஜெனின்னு சொன்னா"

"ஜெனின்னா யாருடி"

"இல்ல விடுடி நீ சொன்ன மாதிரிதான் யாராவது பன்னிருக்கனும்" முடித்தாள் அன்பரசி. இவள் எதையோ மறைக்கிறாள் என்பதை மட்டும் மலரால் உணரமுடிந்தது. ஆனால் கேட்டாள் சொல்லமாட்டாள் அழுத்தகாரி என்பது மலருக்கு நன்கு தெரியும். சரி அவளாக கூறுவாள் என விட்டுவிட்டாள்.

விமானம் இறக்கையை அசைக்காமல் வின்னில் பறந்துகொண்டிருக்க இருக்கையில் சாய்ந்து அமர்ந்திருந்தனர் இருவரும். "ஏய் சுவேதா அந்த நாள் எல்லாம் திரும்ப வராதுல" என அவளை பார்க்க "ஆமா அந்த நாட்களை நான் மறக்க முயற்சி செய்யுறேன்" இது சுவேதாவின எண்ணம்.

"ஏன் அப்புடி சொல்ற"

"எனக்குனு ஒரு ஸ்டைல் எனக்குனு ஒரு வாழ்கை அப்படின்னு சந்தோஷமா இருந்தேன் அது எனக்கு பிடிச்சது ஆனா மஞ்சுளா மூலமா நீ என்கிட்ட வந்த நீ என்ன மாத்துன மன்னிச்சிடு நான் உனக்காக மாறுனேன் ஆனா இந்த விதிய பாத்தியா தப்பு செய்யும்போது தண்டனை கொடுக்காம திருந்துனதும் தண்டனை கொடுக்குது." என முகத்தில் தன் வேதனையை காட்டினாள்.

அவளது துயரத்தை உணர்ந்தவன் "சுவேதா எனக்காக ஒன்னு பன்னுவியா நாம்மளோட அந்த நாட்கள அடுத்த மூனுநாள் எனக்காக திரும்ப தருவியா ஏன்னா நான் அமெரிக்கா போயிட்டா கன்டிப்பா திரும்ப வரமாட்டேன்" என அவளது கண்களை பார்த்தான்.

"டேய் நான் சாகுரவரைக்கும்கூட உனக்காக வாழ ரெடிடா" என சந்துருவின் கண்களை பார்த்தாள். இரண்டு கண்களுக்குள்ளும் காட்சிகள் ஓடதுவங்கின கடந்தகாலம் எனும் திரையில்.

"ஏண்டி செஸ் கோச்சிங் செஸ் கோச்சிங்னு சொல்லிகிட்டு நீ அந்த சந்துருவோட சுத்திகிட்டு திரியுர ஒரு நாள் பாரு நியூஸ் போப்பர்ல ஹெட் நீயூஸா வரப்போற பாரு" என சுவேதா தன் தோழியை எச்சரிக்கை செய்தாள் கையில் வெள்ளை பவுடரை தட்டிகொண்டே.

"சந்துரு எனக்கு அண்ணண்டி; ஏய் என்ன பத்தி விடு இது என்ன கையில" மஞ்சு அதிர்ந்தாள்.

"கோகுல் சாண்டல் பவுடர் நீ பூசுனது இல்லையா" என நக்கலாக கூற மஞ்சு அவளை முறைத்தாள். "சரிடி முறைக்காத இது அபின் நீதான சொன்ன இனிமே சிகரெட் பிடிக்ககூடாதுனு அதான் கொஞ்சம் சேஞ்ச் பன்னிட்டேன்" என கண்ணடித்தாள்.

"ஏன்டி உடம்ப கெடுத்துகிற" என அதை தட்டிவிட்டாள். "என்னடி நீ லைப்ப சந்தோஷமா வாழனும்டி அதான் இப்புடி ஆனா நீ இதுக்கும் தடை போடுற சரி விடு நீ ஒரு கிராம் ட்ரைபன்னி பாக்குறியா சும்மா ஜிவ்வுன்னு இருக்கும் அப்புறம் உன் பாய்பிரண்ட்கூட நல்லா ரெமான்ஸ் பன்னலாம்" என சந்துருவை சுட்டிக்காட்டும் விதமாக கூறினாள்.

"ஏய் லூசாடி நீ சந்துரு எந்த பொண்ணையும் தப்பான எண்ணத்துல பாக்கமாட்டார்டி நீயா எதுவும் உளறாத" மஞ்சுளாவின் தீர்கமான எண்ணம் இது.

"ஓ அப்புடியா உனக்கு ஆம்பளைங்க சைக்காலஜியே தெரியலடி இன்னைக்கு நானும் உன்கூட வாரேன் உனக்கு புரிய வைக்குறேன்"

"நீயா வேணாம்டி நீ பன்னதே போதும்" என மஞ்சு கூற "அதான பாத்தேன் லவ்வர்ஸ்குள்ள எதாவது தனியா பன்னிப்பீங்க நடுவுல நா எதுக்கு" என சுவேதா திரும்பி நின்றாள்.

இவள் திருந்தமாட்டாள் சரி சந்துருவின் குணத்தை நிறுபிக்க இதுதான் தருணம் என நினைத்துகொண்டு "சரிடி நீயுமா வா ஆனா இந்த போதை பொருள் எல்லாம் போடாம வரனும் சரியா"

"டீல் அக்செப்டெட்" என சுவேதா கூறனாள்.

*மாலை நேரம் மைதானத்தில் கால்பந்து பயிற்சி கிரிகெட் வலை பயிற்சி ஹாக்கி டென்னிஸ் என நிரம்பி வழியவே சில ஜாம்பவான்கள் உடலை கட்டமைக்க ஜிம்முக்கு பயனமாகிகொண்டிருந்தனர்.*

*சுவேதாவும் மஞ்சுவும் அவர்களை கடந்த வண்ணம் வரவே ஒரு கட்டிடத்தின் தலையில் குதிரையின் சிலை இருக்க அதை நோக்கி நடந்தனர்.*

*"ஏய் ஒரு நிமிசம் டி" என மஞ்சுவின் துப்பட்டாவை சிறிது கீழே இறக்கி விட்டாள். "ஏய் என்னடி பன்ற" என பயந்தவள் மீண்டும் மேல ஏற்றிவிட்டாள்.*

*"இருடி அவன் கண்ணு இங்கதான் போகும் பாரு" என மீண்டும் கீழே இறக்க முயற்சித்தவளை தடுத்துவிட்டு "எதுவா இருந்தாலும் நீயே பன்னிகோ என்ன வச்சு ஆழம் பாக்காத" என கூறவே "ஒருநாள் தாண்டி" என இறக்கி விட்டாள்.*

*பின் மூவரும் உள்ளே நுழைய தூரத்தில் ஒரு பலகையை உற்று பார்த்தபடி அமர்ந்திருந்தான் சந்துரு. இருவரும் வரவே லேசாக நிமிர்ந்து பார்த்துவிட்டு. மீனுடும் பலகையில் கவனம் செலுத்தினான்.*

*"அண்ணா ஆரம்பிக்கலாமா?" என மஞ்சு கூறவே. "என்ன சொன்ன?!" என நிமிராமல் கேட்டான்.*

"விளையாட ஆரம்பிக்கலாமானு கேட்டேன்" என மஞ்சுகூற "அதுக்கு முன்னாடி ஒரு வார்த்தை சொன்னியே" என்றான். சிறிது யோசித்தவள் "அண்ணா " என இழுத்தாள். பட்டென எழுந்தவன் மஞ்சுவின் கன்னத்தில் பளாரென ஒரு அறை அறைந்துவிட்டு "என்னடி ட்ரஸ் பன்னிட்டு வந்துருக்க" என சுவேதாவை முறைத்து கொண்டே கேட்டான் அது இந்த அறை உனக்கு விழவேண்டியது என்பதைப்போல இருந்தது. மஞ்சுவோ கன்னத்தில் கைவைத்துகொண்டே தலைகுனிந்து நின்றாள். சுவேதாவிற்கு கால்கள் நடுங்க ஆரம்பித்திருந்தது.

"போ போய் சரி பன்னிட்டு வா" என சந்துரு கூற இருவரும் வெளியே செல்ல முயன்றனர். "ஹலோ மேடம் நீங்க இருங்க" என சுவேதாவை கைகாட்டினான்.

அவள் அப்படியே நிற்க மஞ்சு மட்டும் டிரஸிங் ரூமை நோக்கி நகர்ந்தாள்.

"இங்க பாருமா எனக்கு கூட பொறந்தவங்கனு யாருமே இல்ல சரியா என்ன அண்ணானு உண்மையிலேயே கூப்பிடுறது மஞ்சுதான் நானும் அவள சொந்த தங்கச்சியாதான் நினைக்குறேன். அவளுக்கு எதாவது ஆச்சு பாத்துக்க" என கோபமாக சந்துருவின் ஆட்காட்டி விரல்கள் சுவேதாவை பார்த்து நின்றன. அடுத்த சில நொடிகளில் மஞ்சு ஆடைகளை சரி செய்துவிட்டு வந்தாள். பின் கருமை படையின் பின்னே அமர "என்ன இன்னைக்கு அந்த பக்கம்

*உட்கார்ந்துட்ட கோபமா" என சந்துரு அமரவே சுவேதா பேயறைந்ததுபோல நின்றாள்.*

*மஞ்சு மௌனமாகவே இருக்கவே "அப்போ நான் மூனாவது மனுசன்தான உனக்கு" என சந்துரு சிப்பாயை நகர்த்தினான். மஞ்சு மீண்டும் அமைதியாக அவளும் சிப்பாயை நகர்த்தினாள்.*

*அப்போது நின்றிருந்த சுவேதாவை பார்த்து "உட்காருங்க ப்ளீஸ்" என ஒரு சேரை நகர்த்தவே அவள் பயத்திலேயே அமர்ந்து கொண்டாள்.*

*"சரி மஞ்சுளா நான் பன்னது தப்புதான் உன் சுதந்திரத்துல எனக்கு என்ன உரிமை இருக்கு இனிமே நான் உன் கண்ணுலயே படமாட்டேன் குட் பாய்" என வெள்ளை ராஜாவை கீழே சாய்த்துவிட்டு எழுந்தான்.*

*அடுத்த நொடி சந்துருவுக்கு சில அடிகள் விழுந்தன. "ஏய் வலிக்குதுடி போதும் நிறுத்து" என சந்துரு கூறவே. "என்ன கோபம் பேயிருச்சா"*

*"எனக்கு உன் மேல கோபமே வராது; விளையாடும்போது பேசகூடாதுனு நீதான சொன்ன அதான் அமைதியா இருந்தேன்" என கண்களை சுருக்கி கொண்டு சிரிப்பதுபோல பளிப்பு காட்டினாள்.*

"அப்போ நான் உன்ன அடிச்சதால உனக்கு கோவமே வரலையா"

"நான் உன்ன என் சொந்த அண்ணாதான் நினைக்குறேன் இப்போ எனக்கு ஒரு அண்ணன் இருந்தா என்ன பன்னிருப்பான் அததான நீயும் பன்ன சரி ராஜாவ ஆட்சில உட்கார வச்சு போர தொடரு " என அமர்ந்தாள்.

"உனக்கு கோபம் இல்லைல" என அமர்ந்தான்.

"யாரு சொன்னா கோபம் இருக்கு அது போகனும்னா எனக்கு நீ மூனு சுடிதார் எடுத்து தரணும்" என சிரிக்க "மூனு என்ன முப்பது வாங்கிக்கோ" என விளையாட்டு துவங்கியது.

சுவேதாவோ அதிர்ச்சியிலிருந்து மீளாமல் சிலையென அமர்ந்திருந்தாள். சந்துருவும் மஞ்சுவும் பலமுறை மோதல்களை புரிந்தனர். சந்துருவே அனைத்திலும் வெற்றியடைய இறுதியாக மஞ்சு வெற்றியடைந்தாள்.

"ஐ நான் ஜெயிச்சுட்டேன்." என மகிழவே சந்துரு "சரி வா அடுத்த மேட்ச்ல பாத்துகலாம்"

"போதும்னா நான் ஜெயிச்ச சந்தோஷத்துலயே கிளம்புறேன்." என மஞ்சு கூற சரி என பலகைகளை எடுத்து ஸ்டோர் ரூம் கொண்டு சென்றான்.

"சரி வாடி போகலாம்" என மஞ்சு சுவேதாவிடம் கூற "நீ போடி நான் சந்துரு கிட்ட கொஞ்சம் பேசணும் " என்றாள். சுவேதாவின் கண்களில் இன்று ஒரு ஒளி தெரிந்தது. எதையோ உணர்ந்து கொண்டாள் என்பது தெரியவே மஞ்சு அங்கிருந்து சென்றாள்.

சந்துருவோ ஸ்டோர் ரூமில் இருந்து வெளியே வரவே சுவேதா மட்டும் நின்றிருந்தாள். அவளை கண்டுகொள்ளாமல் சந்துரு நடந்தான்.

"ஒரு நிமிசம் சந்துரு நான் உன்கிட்ட ஒன்னு சொல்லனும்" சந்துரு திரும்பினான்.

அந்த கல்லூரியின் குட்டிசுவர் அது அதில் மூன்று பெண்கள் அமர்ந்திருந்தனர். இவர்களின் வருகைக்கு முன்னால் அது ஆண்களுக்கு உரித்தான இடம் ஆனால் இந்த புது பெண்படையின் அணிவகுப்பால் விட்டுக்கொடுக்க பட்டாருந்தது. அதில் நடுவில் இருந்தவள் அன்பரசி. இறுதியாண்டு மாணவிகள் என்பதால் சற்று திமிர் அதிகமாகவே இருந்தது.

முதலாமாண்டு மாணவிகள் அந்த சுற்றை கடந்துதான் விடுதிக்கு செல்லவேண்டும். அவர்களை வழிமறித்து விழிபிதுங்க செய்வதே இன்றைய நோக்கம்.

"ஏய் இங்க வாங்கடி" அன்பரசியின் குரல் ஒலிக்கவே மூன்று ஜூனியர் பெண்கள் வந்து நின்றனர்.

"ஏய் குதிரவாலு நீ முன்ன வா" என நீளமாக முடயிருந்த பொண்ணை பார்த்து கூறினாள்.

அந்த பெண்ணும் பயந்துகொண்டே வரவே "இது ஒட்டுமுடியாடி" என்றாள்.

"இல்லக்கா நிஜமுடிதான்" என நடுங்கிகொண்டே கூறினாள். "ஏன்டி அக்காவ பாத்து பயபடுற ஜாலியா இரு" என சுவற்றிலிருந்து இறங்கி அந்த பெண்ணின் அருகில் வந்துநின்றாள் அன்பரசி.

"சரிக்கா" என இயல்புநிலைக்கு வர முயன்றாள்.

"சரி உன் லவ்வர் என்ன பன்றான்"

"ஐயோ அக்கா அப்படிலாம் யாரும் இல்ல"

"ஏய் சும்மா சொல்லுடி இந்த முடிக்கே பின்னாடி பல பேர் சுத்திருப்பானுக" என அன்பரசி சிரிக்கவே.

"ஊருல எலக்ட்ரீசியன்க்கா" என முகம் சிவந்தாள் அந்த பெண்.

"அடி பாவி காலேஜ் வரதுக்கு முன்னாடியே பிக்கப்பா"

"டென்த்லயே அக்கா" என்றாள்.

"ஓஓஓ" என வாயில் கைவைத்தவள்.

"யாரு மொத சொன்னது"

"அவுகதான்க்கா" என அந்த பெண்ணின் கால்கள் தரையில் கோலமிட்டன.

"எப்புடி சொன்னாக லட்டரா இல்ல ரோஸ் வாங்கி கொடுத்தா இல்ல இந்த முத்தம்" என அன்பரசி இழுக்க

"அத நான் சொல்றேன்" என ராஜேஷ் பின்னால் வந்து நின்றான்.

அவனை பார்த்து அன்பரசி ஓட முயன்றாள்.

## அத்தியாயம் - 28

ராஜேஷை பார்த்த அன்பரசியோ ஓடினாள். "ஏய் சின்ன புள்ளைங்கள மட்டும்தான் ரேகிங்க பன்னுவியா" என ராஜேஷ் சிரித்தான்.

அதற்குள் எதிர்புறமிருந்து ஜெனி வந்தாள். ஓட முயன்ற அன்பரசியை பிடித்தாள் ஜெனி. "ஏன்டி ஓடிக்கிட்டு இருக்க?!"

திரும்பி பார்க்க ராஜேஷ் நின்றிருந்தான். "என்னடா லவ்பன்ற பொண்ணுகிட்ட அராஜகம் பன்றியா" ஜெனி சிரித்தாள்.

"அட ஏன்மா நீ வேற நான் அராஜகம் பன்றேனா இல்ல இவ பன்றாளானு கேளு" என அன்பரசியின் பக்கம் தராசை கீழிறக்கினான்.

"அப்புடி என்னடி பன்ன?" என ஜெனி கேட்கவே "நான் எதுவும் பன்னலடி" என விழித்தாள். அதற்குள் ராஜேஷ் "ஆமா இவ சின்ன குழந்தை வாயில விரல் வச்சா கூட கடிக்க தெரியாது. ஜூனியர் பொண்ணுங்கள நிறுத்தி வச்சு ரேகிங் பன்னிகிட்டு இருக்கா அதுலையும் அந்த பொண்ணுங்களோட லவ் மேட்டர் தான் கேப்பாளாம்"

"டேய் இதுல என்னடா இருக்க ரேகிங் நாரமல்தான" என ஜெனி முடித்தாள். "நானும் அதை தப்பு சொல்லல என்ன ரேகிங் பன்னுவானு ஒரு ஆசையில வந்தேன் ஆனா இவ ஒடிட்டா" என ராஜேஷ் உதட்டை பிதுக்கினான்.

"ஏன்டி ரேகிங் தான சும்மா பன்னிவிடுடி" ஜெனியின் செல்ல அதட்டல். "இவன நம்பாத ஜெனி ரேகிங்னு சொல்லிட்டு முத்தம் கொட்க்க வருவான் அதான் ஓடுரேன்" அன்பரசி தன் மயில் விழிகளை சுருக்கினாள்.

"உங்கள திருத்த என்னால முடியாதுப்பா இது உங்க பிரச்சனை இதை நீங்களே பாத்துக்கோங்க என்ன ஆள விடுங்க" ஜெனி நழுவ முயன்றாள். போகும்போது அன்பரசியை ராஜேஷிடம் ஒப்படைத்துவிட்டு சென்றாள்.

"ஏன்டி நம்ம லவ்பன்னி ஒரு வருசத்துக்கு மேல ஆச்சு எங்கயாவது என்கூட வெளியே வந்துருக்கியா இல்ல ஒருமணிநேரம் முழுசா

பேசிருக்கியா அட்லீஸ்ட் ஃபோனலயாவது பேசிருக்கியா" என அவளை பார்த்து கேட்டான்.

"வெளியே சுத்துரது போன்ல பேசுரது இதுதான் வவ்வா ராஜேஷ்" என அவனது விழியை பார்த்தாள். அவனும் அவளது விழியை பார்க்க இருவரது விழித்திரையும் விரிவடைந்தன.

"கண்டிப்பா அது லவ் இல்ல அன்பு ஆனா அதெல்லாம் காதலோட சுகமான தருனங்கள். எதிர்காலத்துல நம்மகூட வரப்போற நினைவுகள். அது நீ எனக்கு தரகூடாதா" என அன்பரசியின் ஒரு கையை தன் கையால் பற்றிக்கொண்டு விரலுக்கு சொடுக்கிட்டான்.

"நான்தான் என்னையே உனக்கு தரபோறேனே இந்த நினைவுகள்தான் உனக்கு முக்கியமா" என மற்றொரு கையையும் அவனுக்கு பரிசளித்தாள்.

"இன்னும் மூனு மாசம் தான் இருக்கு நம்ம காலேஜ் லைஃப் முடிய அதான் கேக்குறேன் எனக்கான உன் நேரத்தை குடுடி" என அவளது விழிகளை பார்த்து மோதிரவிரலில் சொடுக்கிட்டான்.

"ஏய் இன்னும் கொஞ்சநாள் தான்டா பெருத்து கோ" என சமாளித்தாள்.

"இங்க பாருடி நீ டீச்சர் ஆகனும்னு ஆசைபடுற ஆனா எனக்கு ஒரு டிகிரி வேணும் அதுக்காகத்தான் படிச்சேன் அப்புறம் எங்க அப்பாவோட பிஸினஸ்தான் ரன்பன்ன போறேன் அதனால்தான் சொல்றேன் வேலை பிஸில உன்ன பாக்க முடியாம போயிடுமோனு பயமா இருக்குடி" என சுண்டு விரலில் சொடுக்கிட்டான்.

"பயப்படாதடா எங்க வீட்டுல வந்து கேளுடா என் அப்பா ரொம்ப நல்லவர்டா இன்னொரு குழந்தை பெத்தா அன்ப பிரிக்கனும்னு எனக்காகவே வாழ்ந்துகிட்டு இருக்காரு கண்டிப்பா என் விருப்பத்துக்கு உறுதுணையாதான் இருப்பாரு"

"அது இல்ல அன்பு இப்போ எங்க அப்பா பிசினஸ் அவ்வளவு நல்லா போகலை நிறைய கடன் இருக்கு எனக்கும் ஒரு டீச்சர் ஆகனும்னு தான் ஆசை ஆனா என்ன பன்றது" என ராஜேஷின் குடும்ப சூழ்நிலை அவனது கண்ணில் வெளிப்படுத்தினான்.

முதல்முறையாக தன்னவன் தன் மனதின் துக்கமான பக்கத்தை வெளிகாட்டுகிறான். இதுவரை அன்பரசியை சிரிக்க வைக்கவேண்டும் என்றே முகத்தில் பொய் சிரிப்பினை உதிர்த்துகொண்டிருந்தான்போலும். ஆனால் இன்று அவனது விழியோரத்தில் நீர் வழிந்தது.

"ஏண்டா அழற" அனபரசியின் கண்களும் கலங்கியது. "அன்பு ஒரு ரெண்டு வருசம் பொறுத்துகோட அதுக்குள்ள நான் நல்ல நிலைக்கு என் குடும்பத்த கொண்டு வந்துட்டு உன்ன அதுல சேத்துகிறேன்"

*என அன்பரசியின் கன்னத்தில் கைகளை வைத்தான். அவளது கண்ணீர் ராஜேஷின் விரலை தடமாக எண்ணி வெள்ளமென ஓடியது.*

*"நான் காத்துருக்கேன்டா இந்த ஜென்மம் உனக்கு மட்டும்தான் இது உன்மேல் சத்தியம்" என அவனுக்கு வாக்களித்தாள்.*

*கண்கள் கலங்க ராஜேஷோ "நான் உன்ன கஷ்டபடுத்துறேனா?!"*

*"ஏய் ச்சீ ஏன்டா அப்புடி நினைக்குற அழாத " என அவனது கண்களை துடைக்க இவனோ "நீ மட்டும் ஏண்டி அழற" என அவளது கண்களை துடைத்துவிட்டான். இன்னும் அழ கண்ணீர் நிறைய வேண்டும் என இறைவன் நினைத்திருப்பான் போலும். அந்த புயலும் வீச காத்திருந்தது.*

*அந்த சதுரங்க அறையில் சுவேதாவின் ஓசையால் திரும்பினான் சந்துரு. அவனருகில் வந்தவள் "உன்கிட்ட கொஞ்சம் பேசலாமா?!" என கேட்கவே சந்துருவின் இயல்பான குணம் "சரி" என தலையாட்ட வைத்தது.*

*அங்கிருந்த ஒரு மேஜையில் இருவரும் எதிர்எதிரே அமர்ந்தனர். சந்துருவோ கைகட்டி அமர்ந்தான் ஏளனமாக. சுவேதா தன் பையிலிருந்த போதைப்பொருட்களை எடுத்து மேஜை மீது வைத்தாள். சந்துரு அதிர்ந்துவிட்டான்.*

"ஏய் என்ன இதெல்லாம்"

சுவேதா மேஜையில் தன் முகம் பதிக்க அவளது கூந்தல் அவளை மூடியது. சிறிதுநேரம் என்ன நடக்கிறது என்று புரியாதவன் அவளது உடல் குலுங்குவதை பார்த்து அழுகிறாள் என்பதை உணர்ந்தான்.

"ஏய் சுவேதா அழாத நான் மஞ்சுவுக்காகதான் அப்படி நடந்துகிட்டேன் நான் எல்லா பொண்ணுங்களுக்கும் பாதுகாப்பாதான் இருக்கும்னு நினைப்பேன் எதாவது தப்பா பேசிருந்தா மன்னிச்சிடு" என பெண் என்று பாராமல் கூட மன்னிப்புகேட்க அவன் தயங்கவில்லை.

சிறிதுநேரம் அவள் அழுதுவிட்டு எழுந்திருக்க அவளது முகத்தை பார்த்தான். அதில் அவளது வலி தெரிந்தது. அவனது முகத்தை பார்த்தவள் "உன் உணர்வ பகிர்ந்துகிறதுக்கு ஒரு உயிர் இந்த பூமில இல்லைனா என்ன பன்னுவ" என்றாள்.

"என்ன?" என்றான்.

"ஆமா என்னோட சந்தோஷத்தையும் துக்கத்தையும் பகிர்ந்துக்க இந்து உலகத்துல இந்த பவுடரை விட்டா எதுவும் இல்லை" என அந்த அபினை காட்டினாள்.

அதை அவள் வெளியே போட்டுவிட்டு தன்னிடம் பேசுவதால் அவளது நம்பிக்கைக்கு உரியவனாய் தன்னை நினைத்திருக்கிறாள் என்பதை உணர்ந்தான். உடனே அந்த போதை பொருட்களை கையில் எடுத்தான் அடுத்த நொடி அது குப்பையில் கிடந்தது.

"உனக்கு ஏன் யாரும் இல்லைனு நினைக்குற நான் இருக்கேன் உனக்கு என்ன பேசனும்னு தோனுனாலும் என்கிட்ட சொல்லு" என்று அவளுக்கு ஆறுதல் அளித்தான்.

அப்போது மேஜையின் மீதிருந்த அவனது கையில் தன் கையை வைத்தாள். இதுவே வேறு சூழ்நிலை என்றால் சந்துருவின் கை மிகவேகமாக அவன்பக்கம் வந்திருக்கும் ஆனால் இந்த சூழலில் அவனால் கையை எடுக்க முடியவில்லை. அவனது கையில் முகம் புதைத்து அழுதாள் சுவேதா.

அவளுக்குள் இத்தனை வருடமாக இருந்த மொத்த கவலைகளையும் சந்துருவிடம் கொட்டிவிடவேண்டும் என்று நினைத்தால் போலும்.

சந்துருவும் அமைதியாக இருந்தான். அவளாக கூறட்டும் என்று.

அந்த நாள் நினைவுகள் விமானத்தை ஊடுருவி இருவரது மூளையிலும் ஓடி கொண்டிருக்க சந்துருவின் விரல்களில் விரல்

கோர்த்திருந்தாள் சுவேதா. விமானத்தில் யாரும் பார்த்துவிடுவார்கள் என்ற ஐயம் அவர்களுக்கு இல்லை.

சந்துருவை பார்த்த சுவேதா "அந்த நாள் திரும்ப வருமா" என்றாள். "இன்னும் மூனு நாளைக்கு நாம் அதைதான் வாழபோறோம்" என அவளை பார்த்து சிரித்தான். அவளும் சிரித்துகொண்டே சந்துருவின் தோளில் சாயவே விமானம் தரையிறங்கியது.

## அத்தியாயம் - 29

விமானத்தின் இதயதுடிப்பு அடங்கியதும் அனைவரும் இறங்கி நடக்க துவங்கினர். சந்துருவும் சுவுதாவும் வெளியே வரவே முன்னால் அமர்ந்திருந்த சன்முகம் வெளியே சென்று சந்துருக்காக காத்திருந்தார். "சுவேதா நீயும் இந்த ஓபிளைட்லதான் வந்தியா"

"ஆமா அன்கிள் சந்துருக்கு பக்கத்து சீட்டுதான்" என்றாள். "மஞ்சு சுகுமார் எல்லாம் வந்தாங்களே" சன்முகத்தின் கேள்வி. "அவங்க மூனுபேரும் மதுரையில் மஞ்சு வீட்டுக்கு போயிருக்காங்க அன்கிள்" என்றவளை பார்த்து "ஏன் நீ போகலையாம்மா?!" என்றார். "இல்ல அன்கிள் இன்னும் மூனு நாளைக்கு எனக்கு முக்கியமான வேலை இருக்கு" என சந்துருவை பார்த்தாள்.

"சரிம்மா நாளைக்கு ஃபிரியா இருந்தா வீட்டுக்கு வா" என சன்முகம் கூறும்போது சுவேதா கார்பார்கிங்கில் நின்றாள். அவள் நின்ற இடத்தில் ஓர் ஆடி கார் வந்து நிற்கவே "சரி அன்கிள் நான் வாரேன் பாய் சந்துரு" என கூறிவிட்டு சந்துருவை பார்த்து போன் பன்னு என கையால் சமிக்கை கொடுத்தாள். அவனும் புரிந்துகொண்டு தலையாட்டினான்.

கையில் ஃபேனை எடுத்தவன் ஆன்செய்தான். "ஹலோ சிதம்பரம் நாங்க வந்துட்டோம் இங்க பார்கிங் வாசல்லதான் இருக்கோம்" என சந்துரு கூறவே ஓர் விலையுயர்ந்த கார் வந்து நின்றது. உள்ளே இருந்து டிரைவர் சன்முகத்தை பார்த்து "என்ன ஐயா பிரயானம் எல்லாம் எப்புடி இருந்துச்சு" என கேட்க "நல்லா இருந்துச்சு சிதம்பரம்" என அமைதியானார்.

"தம்பிக்கு கல்யானம்னு சொன்னாங்க போன இடத்துல பேசிமுடிச்சுட்டீங்களோ ஆடிட்டர் சொன்னாரு " என ஆதங்கபட்டார்.

"ஆமா சிதம்பரம் என்னோட பிரண்டு நான் இன்னைக்கு இந்த நிலைமையில இருக்கேன்னா அவன்தான் காரணம் இப்போ அவன் பொண்ணையும் எங்க வீட்டுக்கு குடுக்க சம்மதிச்சுட்டான் வேற என்ன வேணும் எனக்கு இந்த ஆயிசுக்கும் அவனுக்கு என்னால நன்றிகடன அடைக்க முடியாது" என முடித்துவிட்டு "சாரி சிதம்பரம் திடீர்னு முடிவாகிருச்சு அதான் உன்னை கூப்பிட முடியலை தப்பா எடுத்துகாத" என்றார் சன்முகம்.

"அட ஐயா நீங்கபோய் ஏன்யா மன்னிப்பு கேட்டுகிட்டு நான் உங்கவீட்ல டிரைவரா இருக்குதே நீங்க போட்ட பிச்சை" என முதலாளியிடம் தன்னிலை உணர்த்தினார்.

வேலையாட்களை தன் குடுமபம் என நினைப்பவன் சந்துரு; சிதம்பரம் இப்படி கூறியதற்கு இந்தநேரம் "அண்ணே நீங்க அப்படி நினைச்சீங்கன்னா என்கிட்ட பேசாதீங்க நம்ம எல்லாம் ஒரே குடும்பம்னே" என திட்டியிருப்பான். ஆனால் இன்றோ மூடபட்ட கண்ணாடியில் எதையோ வெறித்துகொண்டு வந்தான். கண்கள் திறந்திருந்தாலும் மனத்திரையில் பல நிகழ்வுகளை ஓட்டிகொண்டிருந்தான்.

பெரிய இரும்பு கதவு திறக்கபடவே பளிங்கு கற்களால் இழைத்தெடுக்கபட்ட மஹால் என ஒரு வீட்டில் நுழைந்தது அந்த ரதம். சந்துருவின் வருகையை பார்த்து அனைவரும் ஆச்சரியடவே உள்ளூர மகிழ்ச்சியும் அடைந்தனர். அதிலும் தன் முதலாளிக்கு கல்யானம் என்றாள் அவர்களுக்கு இரட்டிப்பு மகிழ்ச்சி தான்.

"அம்மா இனி உங்ககூட சமையலறையில சண்டைபோட ஒருத்தி வரபேறா" என சிரித்துகொண்டே சொல்வான் என்று எதிர்பாரத்தாள் முனியம்மாள். ஆனால் ஏமாற்றமே மிஞ்சியது அவனோ அமைதியாக எதையோ யோசித்துகொண்டே தன் அறையை நோக்கி நடந்தான்.

சரி பயனகலைப்பு என விட்டுவிட்டு "தம்பி பூஸ்ட் போட்டு எடுத்துட்டு வரவா" என்றாள். "இல்லமா நான் கொஞ்சம் தூங்குறேன் கொஞ்சம் தலை வலிக்குது" என உதட்டை பொய்யாக அசைத்துவிட்டு நகர்ந்தான்.

தன் அறையில் சென்று கட்டிலில் தன் கைபேசியை வீசினான். அப்படியே தலையனையை முதுகில் வைத்துகொண்டு சிந்தனையில் ஆழ்ந்தான். எதிரில் மாட்டியிருந்த காவேரியின் புகைபடம் தன் மகனிடம் "ஏண்டா கவலையா இருக்க" என கேட்பதை போல இருந்தது. அவனருகில் இருந்த அன்பரசியின் சிறுவயது புகைபடம் அவனை ஏக்கமாக பார்க்க அவனோ தன் மனதின் அந்தநாளை மீண்டும் திருப்பினான்.

சந்துருவின் கைகளை பற்றிக்கொண்டு அழுது கொண்டிருந்தாள் சுவேதா. அவளது கவலைகள் தீரும் வரை அழட்டும் என சந்துருவும் பெறுமை காத்தான்.

"சந்துரு நீ என்ன எந்தமாதிரி பாக்குற" என கேட்டாள் சுவேதா சற்று நிதானமடைந்து

"எந்தமாதிரினா என்ன சொல்லுற?" என எந்த பதில் கூறினாலும் தவறாக முடியும் என நினைத்துகெண்டு கேள்வியை அவளிடமே திருப்பினான்.

"இல்ல ஒரு பெண்ணுனா இப்புடிதான் இருக்கனும்னு நீ மஞ்சுகிட்ட நடந்துகிட்டத வச்சே நான் புரிஞ்சுகிட்டேன் அதான் உன் பார்வையில நான் எல்லாம் ஒரு பொண்ணே இல்லதானே" என கண்ணீரை துடைத்தாள்.

"இங்க பாரு சுவேதா மொதல்ல அழறத நிறுத்து. இந்த உலகத்துல எல்லாரும் அவங்க்வங்களுக்கு பிடிச்ச மாதிரிதான் நடந்துகிறாங்க சரியா இதுல அடுததவங்க அதுல தலையிடகூடாது" என கூறினான்.

"அப்போ மஞ்சுகிட்ட மட்டும் நீ ஏன் அப்படி நடந்துகிட்ட?! அப்புறம் என்ன சரிபன்னும்னு உனக்கு தோனலையா"

"லுக் சுவேதா நான் ஒன்னு சொல்லவா; உனக்கு என்ன எப்போ இருந்து தெரியும்?!"

"அன்னைக்கு மஞ்சுவ தேடி நீ வந்தியே அப்போதான் உன்ன பாத்தேன் அதுக்கு முன்ன மஞ்சு உன்னபத்தி நிறைய சொல்லிருக்கா"

"ஓ அப்புடியா எனக்கு உன்ன நீ இங்க வந்த முதல் நாள்ள இருந்தே தெரியும். ஆமா அன்னைக்கு நீ ரெட் கலர் சர்ட் புளூ ஜீன்ஸ் போட்டுருந்த; எந்த பயமும் இல்லாம ஒரு பெண் சிங்கம் மாதிரி வரண்டால நடந்துவந்த" என்றான். சுவேதா அவனையே கண் இமைக்காமல் பார்த்திருந்தாள்.

"ஆமா எனக்கு சின்ன வயசுல ஒரு பிரண்ட் இப்புடிதான் தொளதொளனு அவங்க அப்பா சட்டைய போட்டுகிட்டு சேட்டை பன்னிகிட்டு. ரொம்ப தைரியமானவ அழகானவ நல்லா அன்பா இருப்பா நீ அவதானு நினைச்சேன்" என தன் மனதில் சிறுவயதில் இருந்த அரிசியை முன்னிருத்தினான்.

"அதுக்கு அப்புறமா தான் உன்னபத்தி விசாரிக்க ஆரம்பிச்சேன் ஆனா கலேஜே உன்னபத்தி சொன்னது சுவேதா திமிர்பிடிச்சவ! மச்சி அவளால் பொண்ணே இல்லடா! அது ஒரு மாதிரிடா அப்புடினுதான் சொன்னாங்க ஆனா நான் யாரையும் தப்பா நினைக்கமாட்டேன். அவங்க என்ன சூழ்நிலையில இருப்பாங்கன்னு பாப்பேன்." என சந்துரு வெளிப்படுத்தினான்.

"ஆமா சூழ்நிலை!! நீ சொன்னது சரிதான் சந்துரு அந்த சூழ்நிலைதான் எனக்கு சரியா அமையால " என கண்ணில் நீர் வடித்தாள்.

"சுவேதா என்னால உன் கஷ்டத்த உணர முடியுது ஆனா அது என்னனு எனக்கு தெரியல என்ன நீ நம்புனா சொல்லு" என அவள் மனதருகில் நெருங்கினான்.

பெண்களின் மனதை திருடவேண்டிய அவசியம் எல்லாம் இல்லை ஆறுதல் தருமாறு கூட இருந்தாலே போதும். சந்துரு அதைதான்

செய்தான். குரல் தழும்பியது கைகால்கள் நடுங்க ஆரம்பித்தன சுவேதாவுக்கு குளிரால் நடுங்குவதை போல. வாயிலிருந்து வார்த்தைகள் வந்தன.

"உன் அம்மாவ ஒருத்தன் உன் கண்ணு முன்னாடியே சாட்டையால் அடிச்சு கொண்ணா என்ன பன்னுவ?!" என சுவேதா அழ ஆரம்பித்தாள். சந்துருவுக்கோ இதயமே நின்றதுபோல இருந்தது. ஆம் அவனால் காவேரியையும் சரி அரிசியையும் சரி அந்த நிலையில் வைக்க முடியவில்லை.

"என்ன?" என மீண்டும் ஏதேர்ச்சையாக கேட்டுவிட்டான்.

அவள் "அபிநயா என் அம்மா என் கண்ணுமுன்னாடியே செத்தாங்க" என கூறி அழாதுகொண்டே எழுந்து சென்றாள். சந்தருவுக்கும் தன் தாய் இறந்த அந்த நொடி கண்ணில் வந்து சென்றது. ஆனால் அரிசியின் சிரிப்பை தன் மூளையில் பூட்டி வைத்திருந்ததால் சிறிது நேரத்தில் மீண்டான்.

அன்பரசியின் கண்ணிலும் நினைவுகளை ஓட்டிகொண்டிருக்க கைபேசியோ கேட்பாரில்லாமல் கிடந்தது. அன்று ராஜேஷின் கண்ணீரை துடைத்தவள். "நான் காத்துருக்காம யாருடா காத்திருக்க பேறா நீ நாம்மளோட குடும்பத்தோட நிலைய சரிபன்னிட்டு என்ன பொண்ணு கேளுடா" என அவனது குடும்பத்துடன் தன்னை இனைத்திருந்தாள்.

"சரிடி பொண்டாட்டி" என அவளை சிரிக்க வைத்தான் ராஜேஷ். இருவரும் கைகோர்த்து கேட்டின் அருகே வந்தனர்.

"ட்ரிங் ட்ரிங் ட்ரிங்" என சைக்கிளின் மணியோசையை எழுப்பிகொண்டு "இந்த லவ்பேர்ட்ஸ் கொஞ்சம் வழிவிட்டு பறந்தீங்கன்னா நல்லா இருக்கும்" என ஜெனி இருவரின் பின்னாடியும் சைக்கிளில் வந்தாள்.

"ஏம்மா உனக்குத்தான் அவ்வளவு இடம் இருக்குள்ள" என ராஜேஷ் சிரிக்க "ஏய் ஜெனி நீதான் அப்போவே கிளம்பிட்டியே ஆனா இப்போ எங்க பின்னாடி வந்துகிட்டு இருக்க" என சந்தேகமாக கேட்டாள் அன்பரசி.

அன்பரசி யின் கைகளை பிடித்திருந்த ராஜேஷோ "அவ ஆசிக்கை கொஞ்சிட்டு வந்திருப்பா" என ராஜேஷ் சிரித்தான். "என்ன ஆசிக்கா? யாரு அந்த கெமிஸ்ட்ரி டிபார்ட்மென்டா?" என அன்பரசி கேட்கவே

"ஆமா அந்த ஆசிக் முகமது தான் " ராஜேஷ் கூறும் முன் ஜெனி இவர்களை கடந்து ஒரு ஐம்பது அடி சென்றிருப்பாள்.

உடனே அன்பரசி "ஏய் ஜெனி நீ கூட லவ்பேர்ட் தானா" என கத்தினாள் மகிழச்சியில். அன்பரசியின் ஓசை ஜெனியின் காதினை

அடைய அவள் சைக்கிளை ஓட்டியபடியே தன் தோழியை திரும்பிபார்த்து சிரித்தாள்.

"ஜெனி........." என அன்பரசியின் தொண்டையிலிருந்து பலத்த குரல். அந்த நொடி ஜெனியின் எதிரில் வந்த ஒரு அம்பாசிடர் காரிலிருந்து ஒரு கைவெளியே வந்து ஜெனியின் கழுத்தில் வருடவே. அதன் விரல்களுக்கு இடையே கூர்ந்த பிளேட் இருந்தது.

ஜெனியின் பூபோன்ற கழுத்தில் சிகப்பு குருதி பீறிடவே அவளது சைக்கிள் அவளை பிரிந்து ஓரமாகவிழ அதிலிருந்த கேமிராவின் கண்ணாடி கீழே விழுந்து உடைந்தது. ஜெனியோ ரோட்டின் நடுவில் விழுந்தாள்.

குரல்வளையில் வெட்டபட்டதால் ஜெனியால் கத்தமுடியவில்லை தான் உயிருடன் இருப்பதை உணர்ந்த தன் கைகளை மண்டியிட்டபடி தூக்கி காட்டினாள். கழுத்தில் ரத்தம் வெள்ளமாய் ஓட ராஜேஷும் அன்பரசியும் அவளை நோக்கி ஓடினர்.

மண்டியிட்டிருந்த ஜெனியோ கையால் கழுத்தை பிடித்து குருதியை தடுக்க முயன்றாள். ஆனால் பின்னால் வந்த அந்த லாரி அவள் மீது ஏறி சென்றது. அன்பரசியின் முகத்தில் தன் தோழியின் ரத்தம் தெறிக்கவே பேயறைந்தவள் போல நின்றாள்.

ராஜேஷோ அந்த அம்பாசிடரை பார்க்க அதிலிருந்து வெளிப்பட்ட கை கட்டைவிரலை கீழே காட்டி தோல்விகுறி காட்டி மறைந்தது. அந்த லாரி டிரைவரும் அதே குறியை காட்டி மறைந்தனர்.

ராஜேஷ் அம்புலன்ஸுக்கு ஃபோன் செய்தான். அவர்கள் வந்தாலும் ஜெனியின் உடல் ஏற்றப்பட்டது அமரர் ஊர்தியில் தான்.

ஜெனியின் மரணம் மீண்டும் நினைவில் வரகூடாது என்பதால் என்னவோ அன்று சந்துரு தன் தாயின் இறப்பை பற்றி கூறும்போது அவனது வாயை பொத்தினாள்.

ஆனால் இன்றோ அந்த ஃபோன் கால் ஜெனியின் மரணத்தை நினைவுபடுத்திவிட்டது. அந்த ரத்தக்கறை முகத்தில் இருக்கவே அன்பரசி அப்படியே மயங்கி விழுந்தாள். ராஜேஷ் தன்னிடம் இருந்த தண்ணீர் பாட்டிலை எடுத்து அவளது முகத்தில் தெளித்து எழுப்பினான். அதற்குள் அந்த இடத்தைசுற்றி கூட்டம் கூடியிருந்தது.

தெம்பில்லாமல் விழுந்தவளை கையால் அணைத்துபிடித்திருந்தான் ராஜேஷ். கண் விழித்தவள் "ஐய்யோ ஜெனி இல்ல இல்ல நீ சாகல. திரும்ப வந்துடி ஜெனி. நீ இல்லாம யாருடி என்ன ஃபோட்டோ எடுப்பா ஐய்யோ ஜெனி" என மீண்டும் மயங்கும் நிலைக்கு சென்றாள். மனதினை திடமாக வைத்திருந்த ராஜேஷ் அனபரசியை அங்கிருந்து சற்று தூரம் தள்ளி கூட்டிசென்றான். அதற்குள் ஆம்புலன்ஸ் வரவே அங்கு நின்றிருந்த சங்கீதாவிடம் அன்பரசியை பார்த்து கொள்ளுமாறு கூறிவே சங்கீதாவும் அழுது

கொண்டிருந்தாள். ஜெனிக்கு நட்பு வட்டம் மிகவும் பெரியது சங்கீதாவும் அதில் இருந்ததில் ஆச்சரியம் இல்லை.

ராஜேஷ் எழுந்திருக்கவே அன்பரசியின் கைபேசி ஒலித்தது. அவள் பிரம்மை பிடித்தவள் போல அமர்ந்திருக்க எடுத்து "பேசுடி" என அவள் காதில் வைத்தான். "ஹலோ" என சக்தியே இல்லாமல் கூறினாள்.

மறுமுனையில் உள்ள நபர் என்ன கூறினாரோ தெரியவில்லை மீண்டும் மயங்கினாள். குழப்பமடைந்த ராஜேஷ் போனை காதில் வைத்து "ஹலோ சொல்லுங்க" என கூற மறுமுனையில்.

"சார் அன்பரசியோட பாட்டிய பாம்பு கடிச்சிடுச்சு இறந்துட்டாங்க கொஞ்சம் சீக்கிரம் வீட்டுக்கு கூட்டி வாங்க" என ஒருவர் பேசவே ராஜேஷுக்கு நிலைமை விளங்கியது.

"சங்கீதா அன்ப அவ வீட்டுக்கு கூட்டி போங்க அவங்க பாட்டி இறந்துட்டாங்கலாம். இங்க நான் பாத்துக்கிறேன்" என அனுப்பிவைத்தான். துக்கத்தில் மேலும் துக்கம் சொன்ன செல்ஃபோன் என்றால் அன்பரசிக்கு ஒருவித பயம் தொற்றிகொண்டது. சந்துரு வாங்கிகொடுத்தபேதும்கூட அவள் தயங்கியதின் காரணம் இதுதான்.

சிறுவயதில் இருந்து தன்னை தூக்கி வளர்த்த பாட்டியின் உடலின் அருகில் அமர்ந்து அழுது கொண்டிருந்தாள். அவளது கண்கள் ஜெனிக்காகவும் சேர்த்து அழுதன. ஜெனியின் இறுதி ஊர்வலத்தில் கலந்துகொள்ளும் கொடுப்பினை கூட இல்லாமல் பேனால். அவளது மனமோ ஒருதிரையில் இரட்டை நினைவுகளை சுமந்தது.

"ஏண்டி காசு கொண்டு வரலைனா என்கிட்ட சொல்லமாட்டியா இப்புடி சாப்பிடாம கிடப்பியா இந்தா தோசை வாங்கி வந்துருக்கு மரியாதையா சாப்புடு. அந்த தேவி வந்து சொல்லிட்டு போறா" என கையில் ஒரு பார்சலுடன் நின்ற ஜெனிபர்.

"ஏய் அரிசி இந்தாடி காசு உங்க அப்பனுக்கு தெரியாம கலப்பு கடையில் போய் கறி வாங்கிதிண்ணுடி உங்க ஆத்தா விரதம் அது இதுன்னு சொல்லி உன்னைய ஒல்லி ஆக்கிடுவா" என தேட்டத்தில் பேத்திக்கு காசுகொடுத்த மாரியம்மாள்.

"ஜெனி எங்க வீட்டுக்கு நீ எப்போ வரப்போற " என்ற அன்பிடம் "உனக்கும் ராஜேஷுக்கும் எப்போ கல்யானம்னு சொல்றியோ அப்போ உங்க வீட்டுக்கு நான் கன்டிப்பா வாரேன்டி "- ஜெனி.

"பாட்டி வீட்டுக்கு ஏன் வரமாட்டேங்குற" என்ற அன்பிடம் "உன் கல்யாணத்துக்கு தாண்டி வருவேன் " என கன்னத்தை கிள்ள "போ பாட்டி நீ வரவே வேணாம் நான் கல்யாணம் எல்லாம் பன்னிக்கமாட்டேன்" என துள்ளிக்குதித்து ஓடிய நினைவுகள்.

"ஏய் ரோட்டுல போகும்போது பராக்கு பாக்காம போடி. எல்லா விசயத்துலையும் அசால்டா இருக்காத தனியா விழுந்ததால தப்பிச்ச எதாவது கார் வந்திருந்தா என்னடி பன்னிருப்ப" என சைக்கிளில் போகும்போது கீழே விழுந்த அன்பரசியை திட்டிய ஜெனியின் உயிர் இன்று ரோட்டிலேயே பிரிந்தது ஏனோ.

"ஏய் தென்ன ஓலையில என்னடி விளையாட்டு அங்க போகாத ரொம்பநாளா பாம்பு சுத்திக்கிட்டு இருக்கு அந்த கந்தன கூப்பிட்டு சுத்தம் பன்ன சொல்லனும்" என அன்பரசியிடம் முதல்முறையாக கோபம்கொண்ட தருணம்.

"பாட்டி இன்னைக்கு காலேஜ்ல டான்ஸ் காம்படீசன் நான்தான் பர்ஸ்ட்" என ஒரு மாதத்திற்கு முன் ஓடி வந்தவளிடம் "ஐ என் தங்கத்துக்கு கண்ணு பட்டிருக்கும்" என நெட்டிமுறித்து நூறு ரூபாய் கொடுத்த மரியம்மாளின் நினைவாக அன்பரசியிடம் இருந்த இறுதி தருணம் நேற்று இரவில் நடந்த அந்த பேச்சுவார்த்தைதான்.

"பாட்டி அது என்ன நட்சத்திரம்" என அன்பு கேட்க. "அதுதான் குட்டி அருந்ததி நட்சத்திரம். கல்யாணம் பன்ற பொண்ணு அருந்ததி மாதிரி இருக்கும்னு அதை காட்டி சொல்லுவாங்க. ம்ம்ம் என் கடைசி ஆசை எல்லாம் இந்த கட்டை வேகுறதுக்குள்ள என் குட்டியோட கல்யாணத்தை பாத்துடனும் அவ்வளவுதான்" என மாரியம்மாள் கூற "பாட்டி இன்னொரு தடவை சாகுறேன் அது இதுன்னு பேசுன அப்புறம் உன்கூட பேசவே மாட்டேன் பாத்துகோ" என கேபமடைந்தவள். அது நிஜமாக மாற யாரிடம் கோபமடைய என்று தெரியாமல் கண்ணீர் வடித்து கொண்டிருந்தாள்.

தன் பாட்டியின் இறுதிச்சடங்குகள் முடிய பாட்டியின் நினைவுகள் வராமல் இருக்க தேட்டத்திற்கு செல்வதை நிறுத்தினாள். வீட்டிலும் தன்னை ஒரு தனி அறையில் அடைத்துகொண்டாள். அதில்தான் இன்றுவரை இருக்கிறாள்.

கைபேசியின் ஓசை கேட்டாலே அன்பரசியின் முகத்தில் பயமும் பதட்டமும் தொற்றிகொள்ளவே அதை கவனித்த பார்வதி "வயசு பொண்ணுக்கு என்ன செல்போனு" என வாங்கி பீரேவில் பூட்டினார்.

தனியாகவே இருந்து ஜெனியின் நினைவுகளும் பாட்டியின் நினைவும் வாட்டியெடுக்க தனியாக அழுதாள். அதை கவனித்த போஸ் "ஏம்மா காலேஜ் போகலையா" என அதட்டவே தன் நண்பர்களைபார்த்தாள் கொஞ்சம் ஆறுதல் தரும் என போஸ் நினைத்தார்.

தந்தையின் கட்டுபாட்டு வளையத்தில் முதல்முறையாக நுழைந்தாள் அரிசியிலிருந்து அன்பரசியாக. பின் கல்லூரிக்கு செல்லும் வழியில் ஜெனியின் உடல் வெள்ளை வண்ண சுன்னாம்பால் தீட்டபட்டிருக்க மீண்டும் அந்த நாள் நினைவுக்கு வரவே அங்கு வந்த சங்கீதா அவளது அழுகையை தடுத்து விட்டாள்.

"ஏய் அன்பரசி காலேஜ் வந்துட்ட போல" என அவளை நிதானத்துக்கு கொண்டுவர முயன்றாள். ஆனால் அன்பரசி "அந்த கார்காரனை பிடிச்சுட்டாங்களா?" என்றாள்.

சங்கீதாவோ அன்பரசியின் தோளில் கையால் அனைத்து கொண்டு "அது ஆக்ஸிடெண்ட் அப்புடின்னு கேஸை முடிச்சுட்டாங்க கழுத்துல இருந்த வெட்டு மார்சுரில விழுந்துன்னு கேஸை மூடிட்டாங்கடி" என அவளை அனைத்து கொண்டு நடந்தாள்.

அன்பரசி யின் மனம் குமுற "ராஜேஷ் எங்க" என்றாள்.

"ஹே நிறைய எழுதவேண்டியிருக்குடி நீ அதுவும் இல்லாம நம்ம காலேஜ் பங்ஷன் வேற வருதுடி"-சங்கீதா.

"பேச்சை மாத்தடி ராஜேஷ் எங்க" - அன்பு

"வாடி கிளாஸ்க்கு போகலாம் பூஜா உன்ன பாக்கனும்னு சொன்னா" என சங்கீதா மீண்டும் சமாளித்தாள்.

"ராஜேஷ் எங்கடி" என மீண்டும் கேட்டாள் அன்பரசி.

"பச்ச் அவனை பத்தி பேசாதடி நீ அவன மறந்துடு அவன் இப்புடி பன்னுவான்னு நான் எதிர்பாக்கலை" என அன்பரசியை பார்த்தாள்.

## அத்தியாயம் - 30

ராஜேஷ் என்ற வார்த்தையை கேட்டதும் எரிச்சலடைந்தாள் சங்கீதா. "ஏன்டி என்னடி ஆச்சு" இது அன்பு.

"என்ன சொல்றது நீ அவன உண்மையாதான காதலிச்ச! ஆனா அவன் அப்புடி இல்லடி அவனுக்கும் அவன் அத்தை பொண்ணுக்கும் நிச்சயம் பன்னிட்டாங்க அதுமட்டுமில்ல காலேஜ் முடிஞ்சதும் கல்யாணம். எல்லாம் பணத்தாசைடி. பணத்துக்கு முன்னாடி காதல் எல்லாம் ஒன்னுமே இல்லடி இந்த ராஜேஷ் மாதிரி ஆளுங்களுக்கு எல்லாம்"

ஜெனி இருந்திருந்தால் இன்று தட்டிகேட்டிருப்பாள். கையறுநிலையை புத்தகத்தில் படித்திருந்த அன்பரசி அதை இன்று உணர்ந்தாள். ஜெனி இல்லாத வேதனை மனதை ரணபடுத்தினாலும் ராஜேஷை பற்றி சங்கீதா கூறியதை அன்பரசியின் மனம் ஏற்றுக்கொள்ளவில்லை. ஆனாலும் சங்கீதாவோ அரிச்சந்திரன் போன்றவள். அவளது தகவலை சோதிப்பது என்பது இயலாத காரியம். அன்பரசியின் இதயத்தில் அந்த வலியோ மீண்டும் பூண்டு கொள்ள ராஜேஷை தேடியது மனது.

கோபமாக கண்ணில் நீர் நிறைந்திருக்க வகுப்பினுள் நுழைந்தாள். கண்களை நீரில் மிதக்கும் கப்பலென உலாவவிட்டாள். அவன் அங்கு இல்லை. சட்டென வெளியே செல்ல ஆயத்தமானாள்.

அப்போது வாயிலின் அருகே நின்றிருந்தாள் பூஜா. அன்பரசியை பார்த்து "அன்பு உன்கூட கொஞ்சம் பேசணும்" என்றாள். பூஜா அதிகமாக யாரிடமும் பேசியது கிடையாது. ஆனால் இன்று அவளாக முன் வருகிறாள் என்றால் அன்பரசி சிறிது கேட்கத்தான் வேண்டும்.

"சொல்லு பூஜா" கண்ணிலிருந்த நீர் தரையில் விழுந்தது. "யார தேடுற? ராஜேஷா?!"

"ம்ம்"

"எதுக்குன்னு தெரிஞ்சுக்கலாமா?" பூஜா இந்த அளவுக்கு பேசுவாலா என்ன என்றது அன்பின் மனது.

"நான் அவன்கிட்ட ஒன்னு கேட்கனும்" என கண்ணை கசக்கி கொண்டே கூறினாள் ஆனால் பார்வையோ வேறு எங்கேயோ பார்த்துகொண்டிருந்தது.

"என்ன உன் காதலை கேட்க போறியா?" என்றாள் பூஜா. அன்பரசி அதிர்ந்தாள். 'என் காதலனிடம் என் காதலை கேட்கபோகிறேன் இவளுக்கு என்ன?!' என மனம் பறிதவித்தது.

"நான் ராஜேஷ் அண்ணாவோட தூரத்து சொந்தம் அவங்க அப்பா எங்க குடும்பத்துக்கு நிறைய உதவி பன்னிருக்காங்க. ஆனா இன்னைக்கு அந்த குடும்பத்தோட நிலமை வார்த்தையால் சொல்லமுடியாத அளவுக்கு இருக்கு"

அன்பரசி சிலையாக நின்று உள்வாங்கிகொண்டிருந்தாள். "ஆமா அன்பு ராஜேஷ் அப்பாவோட பிசினஸ் ரொம்ப டல் ஆகிருச்சு அதனால ஜெனிக்கு அடிபட்ட அன்னைக்கு அவருக்கு நெஞ்சுவலி அதான் ராஜேஷ் ஜெனியோட கேஸ்ல இன்வால்வ் ஆகமுடியல அதான் எதுக்குடா தலைவலின்னு போலிஸ் கேஸை ஆக்சிடன்ட்னு மூடிட்டாங்க; ராஜேஷ் வீட்டுக்கு போனப்பதான். அவங்க அப்பாவோட தங்கச்சி அதான் ராஜேஷ் அண்ணாவோட அத்தை ரொம்ப நாள் சண்டைக்கு அப்புறம் வந்திருந்தாங்க; சின்ன வயசுலேயே அவங்க பொண்ணுக்கு ராஜேஷை பேசி முடிச்சிருந்தாங்கலாம். அதனால் அவங்க கல்யானத்துலேயே குடும்பத்த இனைச்சுகலாம்னு ராஜேஷ் அப்பா ஆசைபட்டார். அதான் அன்னைக்கு பேசி முடிச்சிட்டாங்க" என பூஜா முடித்தாள்.

அன்பரசிக்கு அடுத்த முடிவு என்ன எடுப்பது என்றே தெரியவில்லை. ஜெனியில்லாத வருத்தத்தை உணர்ந்தாள்.

"அன்பு எங்கள வாழவச்ச குடும்பத்துக்காக உன்கிட்ட ஒரு பிச்சை கேட்குறேன்டி" என அன்பரசியின் இருகைகளையும் பற்றினாள்.

"ஏண்டி இப்படிலாம் பேசற" என குரல் கனக்க கூறினாள் அன்பு.

"இல்லடி இந்த கல்யானம் நடந்திருச்சுனா ராஜேஷ் பிசினஸ் டெவலப் பன்ன வரதட்சனையா நிறைய காசு கிடைக்கும்டி. அதும்ட்டும் இல்ல ரொம்ப வருசமா பிரிஞ்சிருந்த குடும்பம் ஒன்னு சேரும். ராஜேஷோட அப்பா நிம்மதியா இருப்பாரு அன்பு." என அனபரசியின் முகத்தை பார்த்தாள்.

இறுகிய முகத்துடன் அன்பரசி "சரி பூஜா எனக்கு ராஜேஷ் சந்தோசமா இருக்கனும்" என அழுதாள்.

"அன்பு இன்னொரு விசயம் ராஜேஷ் மனசுல நீ மட்டும்தான் இருக்க அவனுக்கு இந்த கல்யாணம் பிடிக்கலடி. உன்ன கூட்டிட்டு எங்காவது கண்காணாத இடத்துல வாழனும் இல்லைனா செத்துடனும் அப்புடின்னு அவன் ஃபிரண்ட்ஸ்கிட்ட பேசிக்கிட்டு இருந்தான்டி. ராஜேஷ் வாழ்கை உன் வாரத்தையிலதாண்டி இருக்கு ராஜேஷ் மனசை நீதான் மாத்தனும் நான் வேனா உன் கால்ல விழறேன்" என அழுதுகொண்டே விழபோன பூஜாவை தடுத்து எழுப்பிவிட்டு கண்ணீரை துடைத்துவிட்டாள் அன்பரசி.

"ராஜேஷோட அத்த பொண்ணு நல்ல பொண்ணா ராஜேஷை சந்தோசமா பாத்துப்பாளாடி" என பூஜாவிடம் கேட்க "அவள் தங்கம்டி உன்னை மாதிரியே உனக்கு ஒரு தங்கச்சி இருந்தா எப்புடி இருப்பாலோ அந்த மாதிரி பாத்துப்பாடி " என அழுதுகொண்டே பூஜா மனமகள் பெயரை கூறினாள் நிச்சயம் அது அன்பயசி என்று

இல்லை. அதானால் அன்பரசியின் இதயத்தில் முள்கிரீடம் வைத்ததை போல இருந்தது.

"எப்புடிடி நீ காலேஜ் பர்ஸ்ட் வர்ர ஆமா உங்க அப்பா இல்லை அப்புறம் உனக்கு யாரு ஃபீஸ் கட்டுறா?" என கேட்கும் தோழிகளிடம் "கயவுள்டி" என கூறிவிட்டு பூஜா ராஜேஷ் இருந்த திசைநோக்கி பார்த்ததின் விஸ்வாசம் இன்றுதான் உணரமுடிந்தது அன்பரசியால்.

"நீ அழாத பூஜா நான் பாத்துகிறேன்" என கண்ணீரை துடைத்துகொண்டவள் கேன்டினை நோக்கி நகர்ந்தாள். செல்லும் வழியில் அன்பரசியின் மனசாட்சி அவள் காதலுடன் போட்டியிட்டது.

'ஏண்டி அன்பு நீ செல்ஃபிஸ்டி ஏதோ ஒரு மூனாவது மனுசி உன் காதலனோட வாழ்கை நல்லா இருக்கனும்னு உன் கால்ல விழறா அதுவும் படிக்க உதவி செஞ்சுக்கே. ஆனா நீ அவனையே காதலிச்சுட்டு அவனோட அப்பா செத்தாலும் பரவாயில்லை குடும்பம் நடுதெருவுக்கு வந்தாலும் பரவாயில்லை. அவன் மட்டும் வேனும்னு நினைக்குறியே நீயெல்லாம் ஒரு பொண்ணா இதுக்கு விபச்சாரிங்களே மேல்டி' இதயத்தை குடைவதைபோல இருந்தது. குடைந்து உள்ளே ஒளிந்திருந்த காதலெனும் செல்லபிராணியை வெளியே எடுத்தாள்.

"ராஜேஷ் எனக்கு உன்னோட நினைவுகள் மட்டும் போதும்டா நான் அதோடயே வாழ்ந்துடுவேன் நீ நல்லா இருக்கனும் உன் குடும்பத்த பாரு. ஆமா இனி அது நம்குடும்பம்னு என்னால சொல்லமுடியாதுடா என்னோட உயிர் உனக்காக துடிச்சுகிட்டே இருக்கும்டா" என செல்லபிராணியின் இதயத்தில் கத்தியை இறக்கினாள்.

அது துடித்துகொண்டே அன்பரசியின் மனசாட்சியை பார்க்கவே இவளால் அழுகையையும் உணர்ச்சியையும் கட்டுபடுத்த முடியவில்லை. தரைதளம் இடிக்கபட்ட கட்டிடம் போல கேன்டீனில் ஜெனியின் சாட்சியாக முதலில் காதல் தெரிவித்த இடத்தில் சரிந்து அமர்ந்தாள். அவளது இதயம் அந்த காதலெனும் செல்லபிராணியை காப்பாற்ற மனசாட்சியின் காலில் விழுந்து கதறிகொண்டிருந்தது. அன்பின் மனமும் சிறிது கரைந்து கொண்டிருக்க காதல் துடித்தது.

அப்போது அந்த எக்ஸ்பைரி ஆனா பாட்டி வந்து அன்பயசியின் எதிரில் அமர்ந்தார். அவரை பார்க்க தன் இறந்த பாட்டி எதிரில் வந்து அமர்ந்ததை போல இருந்தது அன்பிற்கு.

"ஏம்மா அழுதுகிட்டு இருக்க நீ அழுதா நல்லாவே இல்ல வழக்கம்போல என்ன எதாவது திட்டுமா அது என் மகள் திட்டுறது மாதிரியே இருக்கும்மா" என அவர் கூற அவரது அந்த வண்டி அருகில் நிறுத்தப்பட்டிருந்தது.

மேஜையில் தலைசாய்த்திருந்த அன்பரசி யின் கார்கூந்தல் அவளது முகத்தை மூடியிருக்க பாட்டியின் குரல் கேட்டதும் நிமிர்ந்தாள்.

"ஐய்யோ குட்டி அழுவாதடா என்ன பிரச்சனை? பாட்டிகிட்ட சொல்லு உனக்கு மனசு லேசா ஆகிடும்" என்றார்.

அன்பரசியும் அழுதுகொண்டே பாட்டியின் கையைப்பிடித்து முகம் புதைத்து அழுதாள். தனக்கு ஆறுதலாக தற்போது இருக்கும் ஒரே ஜீவன் இந்த எக்ஸ்பைரி ஆனா பொருள்தான்.

"லவ் பிரட்சனையாம்மா?" என்றார். அன்பரசியும் அழுதுகொண்டே நடந்தவற்றை கூற "ஆமாம்மா அழகான குட்டி தேவதை மாதிரி சுத்திக்கிட்டு இருப்பா" என ஜெனியின் மரணம் பற்றி கூறியதும் கண்ணில் நீர் வடித்தார் அந்த பாட்டி.

ராஜேஷ் சம்பந்தமான தன் முடிவை பற்றி பாட்டிக்கு அன்பரசி வெளிபடுத்தவே துடித்துக்கொண்டிருந்த செல்லக்கிளி இறுதி மூச்சினை சுவாசித்து கொண்டிருந்தது.

பாட்டி தன் சோகத்தையும் வாழ்க்கையையும் பகிர நினைத்தார். அது அன்பின் வாழ்கைக்கு ஓர் வழிகாட்டும் என நினைத்திருப்பார் போலும்.

"இங்க பாரும்மா நானும் தாத்தாவும் லவ் மேரேஜ்தான். அவரு பன்னையாருக்கு கீழ வேலை செஞ்சுக்கிட்டு இருந்தாரு. அந்தாளு மூட்டைய தூக்கிட்டு வரும்போது அவ்வளவு கம்பீரமா இருப்பாரு.

அதுமட்டுமா ஜில்லாவுலேயே யாரும் அடங்காத பன்னையார் காளையை அந்த மனுசன் தான் அடுக்குனாரு அதுவும் எனக்கு பட்டுப்புடவை எடுத்துகொடுக்கனும்னு ஒரே காரணத்துக்காக தான். அந்த புடவைய கொடுத்துதான் என்னை மடக்கிட்டாரு. நாங்களும் காதலிச்சோம். கண்ணாலேயே நலம் விசாரிச்சுகுவோம். அப்போ நான் அழாகா இருந்தேனோ தெரியாது. என்ன தேவதை இளவரிசின்னு புகழுவாரு. என்ன அவரு கீழ் ஜாதி நான் கொஞ்சம் மேல்ஜாதி நான் ஒரு படிக்காத கழுத. அவரு எங்க கூப்பிட்டாலும் என்னனு கேட்காம பேயிடுவேன். ஒருநாள் அப்புடிதான் தலையில ஒரு முண்டாசு கட்டிகிட்டு வந்தாரு. வழக்கம்போல மலைமேல இருக்குற கேயிலுக்கு போனோம் அப்போ திடீர்னு தாலி கட்டிட்டாரு. எனக்கு அவ்வளவு சந்தோஷமா இருந்துச்சு. அப்போதான் முண்டாசை நான் கழட்டி பாத்தேன் தலையில ஒரு வெட்டுக்காயம் இருந்துச்சு. 'நீ இல்லாம என்னால வாழமுடியாதுடி வா நாம எங்கயாவது பேயிடலாம்னு' கூப்புட்டாரு என் புருசன் சொன்னதுக்கு அப்புறம் எனக்கு என்ன இருக்கு ரெண்டு பேரும் மாட்டுவண்டி கட்டிகிட்டு ஊரைவிட்டு கிளம்புனோம். அப்போ எங்க ஜாதி ஆளுங்க வந்து வண்டிய மறச்சாங்க அவரு என்ன அங்க ஓடிக்கிட்டு இருந்த ஆத்துல தள்ளி விட்டுட்டாரு அப்போ அவரை அரிவாளால்.." என பாட்டியின் குரல் ததும்பியது.

அன்பரசி பாட்டியையே பார்க்க "அதுக்கு அப்புறம் நான் இங்கவந்துட்டேன்மா கொஞ்சநாள் பைத்தியம்போல சுத்திக்கிட்டு திரிஞ்சேன். இப்போ பஸ்ஸடாப் இருக்குற இடத்துல பிச்சையெல்லாம் எடுத்தேன். ஒரு வழியா கொஞ்ச வருசம் கழிச்சு இந்த காலேஜ் பசங்க இங்க இருக்குற அனாதை ஆசிரமத்துல

சேத்துவிட்டாங்க அப்புறம் இங்க வேலை செஞ்சு ஆசிரமத்துக்கு என்னால முடிஞ்ச உதவிய பன்னிகிட்டு இருக்கேன்."

அன்பரசி பாட்டியை வியப்பாக பார்க்க "நீ ஏன் அப்புடி பாக்குறேன்னு புரியுதும்மா; நீங்க ஏன் கல்யானம் பன்னிக்கலை அப்படிதான? ம்ம்ம் அந்த ஆளு கட்டுன தாலி என் முந்தானையிலேயேதான் இருக்கு அவரோட நினைப்பு மட்டும் போதும்மா நான் சாகுற வரைக்கும் இருந்துடுவேன் உன்ன பாத்த அவரு ஆசைப்பட்டு என்கிட்ட கேட்ட மகள் ஜாடையில் இருக்க அதான் என் மனசில் இருக்குறத உன்கிட்ட சொல்லனும்னு தோனுச்சு அதான் சொன்னேன். எந்த கஷ்டம் வந்தாலும் நாம நினைக்க சந்தேஷமான அந்த சில நொடிகள் போதும்மா" என பெருமூச்சு விட்டபடி எழுந்து அந்த வண்டியை தள்ளிக்கொண்டே நடந்தார்.

அன்பரசியின் இதயகூட்டில் இருந்து எடுக்கப்பட்ட காதல்கிளி தன் உயிரை விட்டிருந்தது. அந்த இடத்தில் முழுவதும் ராஜேஷின் நினைவுகளால் நிரபபினாள்.

கேன்டீனின் வெளியில் சலசலப்பு சில தோழர்கள் பேசிக்கொண்டு வருவதை போல தெரிந்தது. "மச்சி டேய் அழாதடா ஜெனி நம்மகூடதான் இருக்கா" இது ராஜேஷின் ஆறுதல் வார்த்தை.

ஜெனியின் மரணம் தாக்கியது அன்பயசியை மட்டும் அல்ல ஆசிக்கும் பாதிக்கபட்டிராந்தான். அவனது மனதை திடபடுத்தவே

தோழர்கள் முயன்று கொண்டிருந்தனர். "என்ன விடுங்கடா நான் ஜெனி கூடவே போயிடுறேன்" ஆசிக்கின் ஆதங்கம்.

"டேய் ஏன்டா லூசுமாதிரி பேசற நீ சாகுறத ஜெனி விரும்புவாளா? சொல்லு நீ நல்லா வாழுரத உன்கூடயே இருந்தா பாப்பாடா அததான் அவ ஆசைப்படுவா" ராஜேஷ் சமாதானபடுத்திகொண்டே வர உள்ளே அன்பரசியை பார்த்தான்.

அவன் வந்ததை அன்பரசியால் உணரமுடியவே அவளோ அவனுக்கு முதுகை காட்டி அமர்ந்திருந்தாள். தன் கையிலிருந்த கைக்குட்டையால் தன் கண்ணீரை முழுவதும் துடைத்துகொண்டாள். அவள் முகத்தில் ஜெனிக்கான வருத்தம் மட்டுமே இருந்தது.

"டேய் கொஞ்சம் இருங்கடா அன்பரசிட்ட பேசிட்டு வந்துடுறேன்" என அன்பரசியை நோக்கி நடந்தான்.

அவன் வருவதை உணர்ந்தவள் "உங்க பாட்டி இறந்துட்டாங்கனு கேள்விப்பட்டேன் என்னால வரமுடியலடி சாரி" என்றான் அன்பரிசியின் எதிரில் அமர்ந்துகொண்டு. அவனது கண்களை பார்க்கமுடியாதவள் எழுந்து நடக்க ஆரம்பித்தாள். அவள் முகத்தில் சிறு கோபம் இருக்கிறது என உணர்ந்தான்.

"ஏய் நில்லு அன்பு ஏன் என்மேல கோபமா" அவள் எதுவும் பேசாமல் நடந்துகொண்டே இருந்தாள். அவனும் எழுந்து

பின்னாலயே நடக்க ஆரம்பித்தான். அவள் முகத்தைகூட திருப்பாமல் நடந்து கொண்டிருந்தாள்.

"இப்போ உனக்கு என்ன பிரச்சனை?" என்று கையை பற்றினான். அவனிடமிருந்து கையை உதறியவள் அனலாக முறைத்தாள். "இந்தாடா சொடுக்குபோடு" என எப்போதும் கைகளை நீட்டுபவள் இன்று இவன் தொட்டதற்கே கோபமடைகிறாள். வேறு ஒரு பெண்ணிற்கு உரிமையானவனை தீண்டகூடாது என்ற அவளது மனது அது. ராஜேஷோ குழப்பத்தில் நின்றான்.

'இவ மனசுல என்னதான் இருக்கு ' என தனக்குள் கேள்விகேட்ட நேரம் தன் நிச்சயதார்த்தம் நினைவுக்கு வந்தது. ராஜேஷ் அதை பற்றிதான் அன்பிடம் பேசாலாம் என்று வந்தான்.

சுதாரித்தவன் ஓடி சென்று அன்பின் முன் நின்றான். "ஏய் எனக்கு நிச்சயமாயிடுச்சு அதுதான உன் பிரச்சனை; என்ன பாரு அன்பு " எனவே குனிந்துகொண்டே இருந்தாள்.

"நான் எல்லாம் பிளான் பன்னிட்டேன் நாம காலேஜ் முடிஞ்சதும் சென்னைக்கு போறோம். அங்க என் பிரண்டு கிட்ட எல்லாம் பேசிட்டேன். அவனுக்கு தெரிஞ்ச ஸ்கூல்ல நாம ரெண்டு பேருக்கும் வேலை வாங்கிட்டேன். நாம யாருக்கும் தெரியாம கல்யானம் பன்னி சந்தோஷமா இருக்கலாம்டி எனக்கு நீ உனக்கு நான் இந்தா ஆர்டர் காப்பி" என ஒருதாளை கையில் நீட்டினான்.

அவனை நிமிர்ந்துபார்க்க தைரியம் வரவழைத்தவள் அவனது கண்களை பார்க்காமல் நிமிர்ந்தாள். "இதெல்லாம் எதுக்கு ராஜேஷ் பன்ற" என்றாள்.

"நீ என் பொண்டாட்டி டி நான் பன்னாம வேற யாரு பன்னுவா" என்றான். "பொன்டாட்டியா அந்த உரிமைய உணக்கு யாரு கொடுத்தா?"

"என்ன அன்பு உளர்ர நீ ஜெனி செத்ததால டிஸ்ட்ரப்டா இருக்கேன்னு நினைக்குறேன் ஆனா நான் தெளிவா இருக்கேன்"

"லுக் ராஜேஷ் ஜெனி சொன்னால்தான் உன்ன லவ் பன்றமாதிரி நடிச்சேன் அப்போதான் நீ என்ன தொந்தரவு பன்னாம இருப்பனு சொன்னா அதுமட்டுமில்ல என் படிப்புக்கு எந்த பாதிப்பும் வரகூடாது அதான் அப்புடி நடிச்சேன்" என மனதில் இருந்த காதல் கிளிக்கு சாமாதி எழுப்பி கொண்டிருந்தாள்.

ராஜேஷுக்கு இதயத்தில் ஓர் வலி ஏற்பட்டது. உலகமே இருண்டுது போல தோன்றியது. "என்ன அன்பு சொல்ற?" என்றான்.

"நான் என்னடா சொல்லனும் நீ கௌம்புறியா ஜெனியே செத்துட்டா அவகுடுத்த அறிவுரை மட்டும் எனக்கு எதுக்கு?" என கண்ணீர் விழிக்குள்ளேயே கட்டுபடுத்த பட்டது.

"இப்போ முடிவா என்ன சொல்ற"

"எனக்கும் உனக்கும் செட் ஆகாது சரியா நீ உன் லைஃப்பை பாத்துகிட்டு போ" என கத்திகொண்டிருந்தாள் அன்பரசி.

"நீ தாண்டி என் லைஃப் உன்னை விட்டுட்டு எபடிடி இருக்க முடியும்"

"பைத்தியாமா நீ"

"ஆமாடி உன்னை லவ் பன்னேன்ல நான் பைத்தியம்தான்"

"லவ்வா?! ஆனா நான் உன்னை லவ் பன்னலையே "

"என்ன லவ் பன்னலையா அப்போ என்கூட பழகுனது எல்லாம் பொய்யா"

"பச்ச். நான் எப்போதாவது உன்னை லவ் பன்றேன்னு சொல்லிருக்கேனா?"

சற்று சிந்தித்தவன் "இல்லை " என தலைகுணிந்தான்.

"பின்ன ஏன் என்னை டார்ச்சர் பன்ற"

"நீ பழகுனது எல்லாம் பொய்யா"

அன்பரசியின் கண்கள் சிவந்தன "டேய் நான் உன்கூட பழகுனது ஒரு ஃபிரண்டாதான் அதுமட்டுமில்லாம எனக்கு செலவு பன்ன ஒருத்தன் தேவைபட்டான் போதுமா அதான் உன்கூட பழகுனேன்" என முடித்தாள்.

"ச்சீ நீ இவ்வளவு கேவலமான பொண்ணா.. காசுக்காக என்ன வேணாலும் பன்னுவியா நான் உன்னை இப்படி எதிர்பாக்கலைடி. இனி உன் மூஞ்சிலேயே முழிக்க மாட்டேன். த்தூதூ! இந்தா அப்பார்ட்மெண்ட் ஆர்டர் உன்கூட பழகுன பாவத்துக்கு உனக்கு இதையாவது பன்றேன்" என அந்த ஆர்டரை அவளது முகத்தில் பறக்கவிட்டான் கோபத்துடன் செல்ல அன்பரசி அங்கேயே அமர்ந்த தன் மடியில் தானே தலைசாய்த்து அழுதாள்.

அவளுக்கு ஆறுதல் சொல்ல யாரும் இல்லை. மனதோ "ராஜேஷ் போடா நீ என்ன தப்பா நினைச்சாலும் பரவாயில்லை நீ நல்லா இருக்கனும்டா உன்ன என் வார்த்தைகள் கஷ்டபடுத்தியிருந்தா என்ன மன்னிச்சிடுடா" என குமுறி கொண்டு அழுதாள். அவர்களது காதல் சாட்சியாக இருந்த மரம் அன்பரசியின் தோளுக்கு இடம்

கொடுத்துகொண்டிருந்தது அதில் சாய்ந்துகொண்டு தலை கவிழ்த்தி கண்ணீர் வடித்தாள்.

கல்லூரி நாடகளில் அன்பரசி ராஜேஷை பார்ப்பதை தவிரத்தாள். சிலநாட்கள் உடல்நிலை சரியில்லை என விடுமுறைகளும் எடுத்துகொண்டாள். ஒரு வழியாக சில நாட்களில் கல்லூரி தேர்வுகள் முடிவடையவே அனைத்து பறவைகளும் பிரிந்தன பறந்தன.

இரண்டு மாதங்கள் கடந்திருந்த நிலையில் சற்று இயல்பு நிலைக்கு திரும்பியிருந்தாள் அன்பரசி. தன்னவன் இல்லை ராஜேஷ் தனக்கு கொடுத்த இறுதி பரிசான கடிதத்தை பார்த்தாள். இன்னும் ஒரு வார்த்தில் ஜாயினிங் டேட். அதை எடுத்து தன் ஃபைலில் வைத்துக்கொண்டாள்.

"அன்பு கிளம்புமா அது வேற ஏன்டா லேட்டுனு கத்தபோறான் நீயும் சீக்கிரம் கிளம்புடி சும்மா இப்போதான் புது பொண்ணு மாதிரி ஜோடிச்சிட்டு இருப்பா" என குடும்பமே பரபரப்பாக கிளம்பிகொண்டிருந்தது.

ஆம் விதியின் விளையாட்டு சதுரங்கத்தை விட சற்று சிக்கலானதுதான். போஸின் நண்பர் தான் ராஜேஷின் அப்பா. போஸுக்கு தெரியாதவர்கள் யாரும் சுற்றுகிராமங்களில் இருக்க வாய்ப்பில்லை. இன்று ராஜேஷின் திருமணம். அதற்குத்தான் அனைவரும் கிளம்பிகொண்டிருக்கின்றனர்.

"நான் வரலைப்பா" என அன்பரசி எவ்வளவோ முயற்சித்தும் "பாட்டி செத்ததுல இருந்து வீட்டுக்குள்ளேயே கிடக்க நாலு மனுசங்கள பாத்தாதான் மனசுக்கு லேசா இருக்கும்" என போஸும் "என்னடி பொட்டபுள்ளைக்கு திமிரு கிளம்புடி அப்பா பேச பேச எதிர்பேச்சு பேசறா" என பார்வதியும் சேர்ந்து சமாளிக்க வைத்துவிட்டனர்.

வேறு வழியில்லாமல் கிளம்பிகொண்டிருந்தாள். இறுதியாக கல்யான மன்டபத்தை அடைந்தனர். செல்லும் வழி எல்லாம் எதிரில் வந்த நண்பர்களை விசாரித்து கொண்டும் வணக்கம் வைத்துகொண்டும் நடந்துகொண்டிருந்தார் போஸ். தன் தந்தையின் செல்வாக்கை அப்போதுதான் உணர்ந்தாள் அன்பரசி.

"வாங்க வாங்க மிலிட்டரி காரரே" என ராஜேஷின் அப்பா போஸின் கையை பிடித்து அழைத்துசென்றார். அப்போது ராஜேஷ் தன் தந்தையிடம் ஏதோ கூறுவதற்காக வந்தான். அப்போது அங்கு நின்றிருந்த அன்பரசியை பார்த்தான் அவனது கண்கள் கலங்கின. அவளது கண்களும் கலங்கவே கைக்குட்டையால் கண்ணை துடைத்துகொண்டாள்.

"ஏய் யாருப்பா அது இந்த லைட்ட கொஞ்சம் ஆஃப் பன்னுங்கப்பா சும்மா கண்ணு கூசுது" என ராஜேஷின் அப்பா திட்ட ஒருவன் வயரை அவிழ்த்துவிட்டான். அதற்குள் அன்பரசியின் முகத்தை பார்க்க தெம்பில்லாமல் ராஜேஷ் அங்கிருந்து நகர்ந்தான்.

அன்பரசியோ ராஜேஷின் கண்ணுக்கு தெரியாமல் ஓர் இருக்கையில் அமர்ந்தார். "என்ன மருமகளே இது நம்ம வீட்டு கல்யாணம் முன்னாடி வாம்மா" என ராஜேஷின் தந்தை அழைத்தார். அவர்கூறியது அன்பரசியின் மனதை மேலும் தாக்கியது.

"இப்போ மட்டும் மருமகன்னு சொல்லு பிசினஸ் ஆரம்பிச்சாலும் ஆரம்பிச்ச ஊர்பக்கமே தலை காட்டுறது இல்ல" என போஸ் அவரை அன்பாக திட்டிக்கொண்டே முன் இருக்கையில் அமர்ந்தார். அன்பரசியும் வேறு வழியில்லாமல் சென்று அமர்ந்தாள்.

இரண்டு தோழர்களும் பேசிக்கொண்டிருக்க ராஜேஷின் தாய் வந்து அவனது தந்தையின் காதில் ஏதோ கூற அவரது முகம் சோகமாக மாறியது. அதை கவனித்த போஸ்.

"என்னடா எதுவும் பிரச்சனையா?" என்றார்.

பின் அவர் சுற்றிலும் பார்த்துகொண்டு தன் தோழனின் அருகில் சோகமாக அமர்ந்தார். "சொல்லுடா என்ன பிரச்சனை" மீண்டும் போஸ் கேக்க.

"என் மவனுக்கு இந்த கல்யாணத்துல இஸ்டம் இல்லையாம்" என்றார். போஸ் அதிர்ந்தார்.

"ஆமடா அவனுக்கு மொத இருந்தே விருப்பம் இல்லடா காலேஜ்ல யாரையோ லவ் பன்னானாம் ஆனா ஒரு வழியா அவனே இந்த கல்யாணத்துக்கு சம்மதித்தான். ஆனா இன்னைக்கு என்ன ஆச்சுன்னு தெரியலைடா மறுபடியும் பிரச்சனை பன்றான்" என தலையில் கைவைத்து அமர்ந்தார். அதை கேட்டுக்கொண்டிருந்த அன்பரசியின் மனதில் 'ஐய்யோ நான் இங்க வராமலேயே இருந்திருக்கனும் இப்போ என்ன பாத்துதான் இவன் இப்படி பன்றான்' என மனதில் குமுறினாள்.

"வாடா நான் என்னனு பாக்குறேன்" என போஸ் கூறவே இருவரும் மனமகன் அறைக்கு நுழைந்தனர். அவர்கள் செல்வதை அன்பரசி பார்த்துகொண்டு அமர்ந்திருந்தாள் ஒரு குற்ற உணர்வுடன்.

"அதான் சொல்றென்லம்மா இந்த கல்யானத்த நிறுத்துங்க எனக்கு விருப்பம் இல்லை நீங்க பிசினஸ் வளக்குறதுக்கு என வாழ்கைதான் கிடைச்சதா?" என தன் மனதில் இருந்த காதல் அவனை பேச வைத்தது.

"டேய் இந்த கல்யாணம் நடக்கலைனா நம்ம குடும்பம் சேராமயே போயிடும்டா" என அவன் தந்தை கூறவே.

"அதெல்லாம் ஒன்னும் வேணாம்ப்பா என்ன தொந்தரவு பன்னாதீங்க" என்றான்.

"சரிடா நீ லவ் பன்ற பொண்ணு யாரு சொல்லு அவளையே கல்யாணம் பன்னி வச்சுடுறோம்" என அவன் தாய் கூறினாள். அப்போது அங்கு நின்றிருந்த போஸை பார்த்தவனுக்கு அவர்மீது ஊர் வைத்திருந்த மரியாதை தெரியும் ஆனால் அவர் அன்பரசியின் தந்தை என்பது இப்போதுதான் தெரியும் அவனுக்கு வார்த்தைகள் வரவில்லை. "அவ செத்துட்டா போதுமா நான் அவளை நினைச்சே வாழ்ந்துக்குறேன்" என கத்தினான்.

போஸிற்க்கு நிலைமை புரிந்தது. பளாரென்று அவனுக்கு அறை வைத்தவர் "ஏன்டா நீ எடுக்குற முடிவுல ஒரு பொண்ணோட வாழ்கையை நினைச்சு பாத்தியா? உன்னையே நினைச்சுகிட்டு இருந்தவ மேடையில வந்து கல்யாணம் நின்னா அவளை யாருடா கல்யாணம் பன்னிப்பா? நீ ஒரு பையனா உனக்கு பரவாயில்லை ஆனா ஒரு பொண்ணா அவ என்ன பன்னுவா தொலைச்சுபுடுவேன் ராஸ்கல்" என மனப்பென்னை மனதில் வைத்து பேசினார்.

ராஜேஷின் காதல் அணை பெண்ணின் வாழ்கை என்ற மதகால் அடைக்கப்பட்டது. சிறுதுநேரத்தில் மணமேடையில் அமர்த்தபட்டான். அன்பரசியோ அவனை பார்க்க முடியாமல் தலையை குனிந்து கொண்டாள். அவனும் அவ்வாறே இருந்தான். "மாப்பிள்ள சிரிங்க" என்ற போட்டோகிராபரின் வார்த்தையால் போலியாக சிரிக்க முயன்றான்.

அடுத்ததாக மனப்பெண் மேடையில் அமர்த்தபட்டாள். அவள் அன்பரசியை பார்த்து "என்னடி ஓகேவா?!" என்பதுபோல சைகை காட்டினாள்.

ஆம் மேடையில் மாலையுடன் அமர்ந்திருந்தது மலர்விழி எனும் மலை. அன்பரசியின் உயிர்தோழி. தங்கை எனும் அந்தஸ்த்தை பெற்றவள்தான்.

அன்பரசி துக்கத்தை கண்ணில் மறைத்துக்கொண்டு தன் தோழியை பார்த்து சிரித்தாள் போலியாக. அந்த நாள் நினைவு அது.

"ஏய் மலர் காதல்னா என்ன நினைக்குற" இது மலர்.

"அது ஒரு வரம்டி அவருக்காக நானும் எனக்காக அவரும் வாழுறது" என ராஜேஷை நினைத்துகொண்டு கூறினாள் அன்பு.

"என்னடி ரொம்ப ஃபீல் பன்னி சொல்ற யாரையும் லவ் பன்றியா" என இடுப்பை கிள்ள செல்லமாக சிணுங்கினாள். " யாருடி அது" என்றாள் மலர்.

"அது காலேஜ்லடி! நான் உனக்கு நேர்ல ஒருநாள் காட்டுறேன். சரி நீ ஏன் காதலை பத்தி திடீர்னு கேக்குற உன் வலையில யாரும் விழுந்துட்டானா?" என்று தன் தோழியை சீண்டினாள்.

"இப்போ இல்லடி என் மூனு வயசுலேயே என் மாமா பையனுக்கு என்ன பேசி முடிச்சுட்டாங்கடி அப்புறம் ஏதோ சண்டைனு சொல்லி ரெண்டு குடும்பமும் பிரிஞ்சுட்டோம். எனக்கு அவரை பாக்கனும்னு ஆசையா இருக்கு. எங்க கல்யாணத்தால எங்க குடும்பம் ஒன்னு சேரனும்டி" என கண்கள் விரிய கூறிய மலர் அன்பின் முன் இன்று தன் மாமாவுடன் மனப்பெண்ணாக.

பூஜாவின் அந்த வார்த்தைகள் "அவ உன் தங்கச்சி மாதிரிதாண்டி. அவ வேற யாரும் இல்லை உன் உயிர்த்தோழி மலர்விழிதான்." இதுதான் அன்பரசியின் காதல் கிளியை இதயகூட்டிலிருந்து வெளியே எடுத்தது.

அன்பரசியின் கையிலிருந்த மலர்கள். தன் தோழி மலரின் மீது விழ அவள் கழுத்தில் மாங்கல்யம் சூட்டப்பட்டது. கண்ணீருடனும் தன் தோழிக்கு கிடைக்கப்போகும் அன்பான வாழ்க்கையையும் எண்ணி மகிழ்ந்து அங்கிருந்து கிளம்பினாள். வீட்டில் தன் அறையில் வந்து அழுதவள் அப்படியே உறங்கி போக அவளருகில் கிடந்த ராஜேஷின் புகைப்படம் போஸின் கையில் சிக்கியது. தன் தோழிக்காக தன் காதலையே விட்டுகொடுத்திருக்கிறாள் என எண்ணும் போது போஸின் கண்களில் நீர் வடிந்தது.

தன் மகளின் மனதை இதற்குமேல் கஷ்டபடுத்தகூடாது என நினைத்த போஸ் தன் அன்பை சற்று கட்டுப்பாடாக மாற்றி தன் மகளுக்கு ஒரு நல்ல வாழ்கையை தேடினார் தான் இறப்பதற்கு முன்.

இந்த வீட்டில் தன்னை பிரிந்த பலரின் நினைவுகள் சுற்றுவதால் "அப்பா எனக்கு சென்னையில வேலை கிடைச்சிருக்கு" என ஊரிலிருந்து கிளம்பி வெகுதூரம் செல்ல நினைத்தாள்.

"பொம்பளபுள்ள அவ்வளவு தூரம் போக வேணாம் இங்க வீட்டுல இரு இல்ல உனக்கு ரொம்ப போர் அடிக்குதா சொல்லு பக்கத்து ஊர்ல இருக்குற ஸ்கூல்ல வேலைக்கு பேசுறேன் வெளியூர்லாம் போகவேணாம்" என தடுத்தார் அதில் தன் மகள் தன் கண்பாராவையிலிருந்து மறைந்தாள் தன் கவலைகளை நினைத்து அழுதுகொண்டே இருப்பாள் என்ற பாசம் இருந்தது. பின் அவரின் செல்வாக்கை பயன்படுத்தி அங்கு வேலை வாங்கி கொடுத்துவிட்டார்.

பிரியாவை பஸ்ஸில் பார்த்ததும் அவளது முகத்தில் ராஜேஷின் சாயல் தெரிய தன்னை அறியாமல் தன் தோழி மலரிடம் இருந்து அவளை தூக்கிகொண்டு கொஞ்ச ஆரம்பித்திருந்தாள். ராஜேஷும் அன்பரசியை பார்த்தால் அழுதுவிடுவான் எனவே ஊர்பக்கம் வராமலேயே வேலை என சமாளித்தான். ஆனால் மலர் தன் பெரியப்பா போலை பார்த்துதான் பயப்படுகிறார் தன் கனவர் என நினைத்துகொண்டாள். கல்யான மண்டபத்தில் ராஜேஷிக்கு விழுந்த அறையை ஒளிந்திருந்து பார்த்தால் அல்லவா!.

பிரியாவும் தனக்கு அன்னையாக வந்திருக்க வேண்டியவள் அன்பரசி தான் என உணர்ந்திருப்பாள் போலும் அதனால்தான் என்னவோ அன்பரசியை பார்த்து முதலில் "அம்ம" என்று அழைத்திருந்தாள்.

பள்ளிக்கு முதல்நாள் சென்ற அன்பரசியின் நினைவில் அகலாத அந்த தருனமும் காத்திருந்தது...

## அத்தியாயம் - 31

சோகங்களை தாங்கிகெண்டு நகர்ந்திருந்தாள் அன்பரசி அந்த பள்ளியை நோக்கி. அங்கு கிடைத்த புது தேழிகளும் மழலைகளும் அன்பரசியின் காயத்தின் வலிக்கு மருந்துபோட்டன. ஆனாலும் அதை ஆற்றுவதோ மறக்கசெய்வதோ இயலாத காரியம்தான். அதை செய்யவும் ஒருவன் வந்தான். அவளது நீண்டநாள் இரவு அழுகையை மூட்டைகட்டினான். அது அன்பரசிக்கு புதிய தெம்பினை அளித்தது.

சில வருடங்கள் கண்ணீரில் நீந்தி கரையேறவே அந்த தருணம் வந்தது. தலைமை ஆசிரியர் மனேரமா அமர்ந்திருக்க இந்திரா அன்று விடுப்பு எடுத்திருந்தார். மிகவும் கடினமான வேலை அன்பரசியின் தலையில் வந்து விழுந்தது. ஆம் பள்ளியில் இன்று ஒன்றாம் வகுப்பு மாணவர் சேர்க்கை தினம்.

"அன்பரசி அந்த ஃபைல் கிளியர் பன்னிடுங்க அப்புறம் சர்டிபிகெட் இருந்தா அந்த டேட் போடுங்க இல்லைனா ஏப்ரல் ஜீன் இந்த

ரெண்டு மாசத்துல எதாவது பாத்து டேட் ஆஃப் பர்த் போட்டுகோங்க" என மனேரமா பரபரப்பாக பேசிக்கொண்டிருந்தார்.

"சரிங்க மேடம்" என அன்பரசி ஆவணங்களை நிரப்பி கொண்டிருந்தாள். அன்பரசியின் ராசியோ நட்சத்திரமோ தெரியாது அவள் வந்த நேரம் இந்த பள்ளியில் சேர்க்கை மழைதான். இழுத்து மூடும் நிலையில் இருந்த இந்த பள்ளி தன் பழம்பெருமையை வைத்தே ஓடிகெண்டிருந்தது. அன்பரசியின் சில அறிவுரைகள் அந்த நிலையை மாற்றியிருந்தன.

பள்ளியை பயத்துடன் பார்த்துகெண்டே உள்ளே வரும் மழலைகளை பார்த்து புன்னகைத்து அன்பாக பேசி பயத்தை பேக்கிகொண்டிருந்தாள் அன்பரசி. பின் பெயர் வயது என பதிவிடுவது வேலை. அதன் பின் தலைமை ஆசிரியர் கேட்கும் குழந்தைத்தனமான கேள்விக்கு பதில் கூறவேண்டும். குழந்தைகளுக்கு குழந்தை தனமாகதானே கேட்க முடியும்.

ஒவ்வொருவராக கடந்து செல்ல " மிஸ் இந்தாங்க" என கையிலிருந்த சாக்லெட்டை ஒரு சிறுவன் மேஜையில் வைத்தான். அதை பார்த்தவள்.

"எதுக்குப்பா சாக்லெட்?" என்றாள். "அதுவா நான் இன்னைக்கு முதல்ல ஸ்கூலுக்கு வாரேன்ல அதான்" என சிரித்தான். அந்த சிரிப்பு அன்பரசிக்கு எதையோ உணர்த்தியது.

அன்று "இந்தாடி சாக்லெட்" என மேஜையில் அமர்ந்திருந்த அன்பயசியின் முன் வைத்தாள் ஜெனி.

"எதுக்குடி சாக்லெட்?" என அன்பரசி கேட்க "அதான் நாம செகன்ட் இயர் வந்துட்டேம்ல அதான்" என சிரித்தாள் ஜெனி.

"அப்போ ஏண்டி காலேஜ் சேந்தப்போ தரலை?" என வக்கில் வண்டுமுருகனாக மாறினாள் அன்பரசி. "அப்போ தந்திருந்தா இதுல விசம் தடவிருக்கியானு நீ சாப்பிடாமல பேயிருப்ப" என கண்ணடித்தாள்.

"நீ பேசறத பாத்தா..! ஏய் இதுல விசம் எதுவும் இல்லையே" என சந்தேகமாக பார்த்தாள். "ஆமாடி நீ ஒரு ஆளு உன்னையெல்லாம் கொல்றதுக்கு நான் தீவிரவாதிகிட்ட பேயி சைனைடு வாங்கிட்டு வந்து சாக்லெட்ல தடவி கொடுக்க பேறேன் ஏண்டி காமெடி பன்ற நல்லா கொசு மாதிரி இருக்க அப்புடியே நசுக்கி கொண்ணுட மாட்டேன்" என பேலியாக அன்பரசியின் கழுத்தை பிடித்தாள்.

"நீ செஞ்சாலும் செய்வடி! நீ சைனடு எல்லாம் வாங்கவேணாம். நீ ரெடிபன்ன சாம்பார் எடுத்துட்டு வந்தா போதும் அம்புட்டு தீவிரவாதியும் குளோஸ்டி" என மேலும் வம்பிழுக்க "ஏய் என் சமையல கிண்டல் பன்னாதடி" என முறைத்தாள்.

"ஆமா மெக் டொனால்ட்ல உன்ன கூப்பிடுறாங்க போ" என சிரித்தாள். "ஒருநாள் இல்ல ஒருநாள் என்னையும் என் சமையலையும் பிரிஞ்சு கஷ்டபடபோற அப்போ தெரியும்டி" என அன்பரசியின் தலையில் கொட்டினாள்.

"ஏய் வலிக்குதுடி லூசு." என அன்பு தலையை தடவிகொண்டிருக்க ஜெனியோ தன் புகைப்பட ஆல்பத்தில் மேலும் போட்டோகளை சேர்க்க துவங்கியிருந்தாள்.

"ஏய் என்னடி புது பிட்டா எங்க குடு நான் பாக்குறேன்" என ஜெனியிடம் இருந்து பிடுங்கினாள்.

"ஏய் இது நீயா ஜெனி சின்ன வயசுல இப்புடியா இருந்த அடையாளமே தெரியலைடி" என சிலிர்த்தாள் அன்பரசி. "இருந்தாலும் மேல சட்டை போட்டுருக்கலாம்" என ஜெனியின் மூன்று வயது புகைபடத்தை பார்த்து கிண்டல் செய்தாள்.

அன்பரசியின் தோளில் செல்லமாக தட்டிய ஜெனி "ஏய் அடுத்த பக்கம் திருப்பு டி" என வெட்கப்பட்டாள்.

"ம்ம்ம் பத்து வயசுலயே யாரையோ புரோபோஸ் பன்ன கையில பூவோட நிக்குற" என பெருமூச்சு விட்டாள். "அம்மா தாயே அது சும்மா ஸ்டில்லுக்காக நின்னது" என ஜெனியே அடுத்த பக்கம் புரட்டினாள்.

"என்னடி வெள்ள டிரஸ்ல அப்புடியே தேவதை மாதிரி இருக்க நீ அழகுடி" என தன் தோழியை மெச்சினாள் அன்பு. "அது சர்ச்ல ஞானஸ்நானம் வாங்கும்போது எடுத்ததுடி" என்றாள். "அப்புடினா?" இது அன்பு. "அடுத்த வாரம் சர்ச்சுக்கு வா நேர்ல காட்டுறேன்" என்றாள். "ஐய்யோ அம்மா அடிப்பாங்க நா வரலைடி" என சேம்பேறிதனத்தை வெளியே காட்டாமல் சிரித்துகொண்டு அடுத்த பக்கத்தை புரட்டினாள்.

"ஏய் இது யாருடி உன்கூட உன்ன மாதிரியே" என்று கேட்டாள். "அது என் அக்கா மேரி" என்று கன்னத்தில் கை வைத்தாள். "உனக்கு அக்காலாம் இருக்காங்களா?" என கேட்டாள்.

"ஆமாடி ஆனா இப்போ கல்யானம் ஆகிடுச்சு இப்போ மூனு வயசுல ஒரு பையன் இருக்கான். அவ கொஞ்சம் பிடிவாத காரி எங்க அப்பா கூட சண்டை போட்டுட்டு உங்க வீட்டு வாசபடிய மிதிக்க மாட்டுன்னு பேயிட்டா. பாவம் மாமாதான் இப்போ தூது புறா. நான் அடிக்கடி போய் என் மகன கெஞ்சுவேன்" என கண்கள் சுருங்க கூறானாள்.

"ஏய் கல்யாணம் ஆகாமலேயே மகனா! நீ பன்னாலும் பன்னிருப்படி" என அன்பரசி மீண்டும் சீண்டவே "ஏய் லூசு என் அக்கா மகன் எனக்கும் மகன்தான வேணும் அதை சொன்னேன்டி" என திட்டிவிட்டு "சரி அவனை பாக்குறியா" என கடைசி பக்கத்தை புரட்டினாள்.

அதில் ஒரு குழந்தை தவழ்ந்துகெண்டு வாயில் கிழுகிளுப்பையை கடித்து கொண்டிருந்தான். "அழகா இருக்கான்டி " என அன்பரசி கூற "ம்ஹூம்ம படு வாலுடி சேட்டை புடிச்ச பையன் ஆனா அவனுக்காக தான் நான் நேத்து எங்க அக்கா கூட சண்டை போட்டேன் ஏய் இவன் என் பையன் நான்தான் வளர்ப்பேன் எனக்கு எழுதிகொடுத்துடு அப்புடின்னு ஆனா எங்க மாமா வந்ததால அமைதியாயிட்டேன் இல்லைனா இவன் இப்போ எங்க வீட்டுல இருந்திருப்பான்" என ஜெனி கையிலிருந்த தன் அக்கா மகனின் (மன்னிக்கவும் ஜெனியின் மகனின்- இல்லைனா ஜெனி கோபபடுவா அதான்) போட்டேவை இதனைத்தாள்.

"இதுதான் கடைசியா எடுத்த போட்டேவா?!" என அன்பரசி கேட்க "ஆமாடி நேத்து எடுத்தது." என ஆல்பத்தை மூடி பையில் வைத்தாள். உள்ளே இருந்த தன் காதலன் ஆசிக்கின் படத்தை அன்பரசி பாக்ககூடாது என நினைத்திருப்பாள் போலும்.

"ஏய் நான் நடுவுல இன்னும் பாக்கலைடி" என அன்பரசி கேட்கவே "அது ஜெனியோட சீக்ரட் யாரும் பாக்ககூடாது" என சிரித்துகொண்டே பையை எடுத்து கீழே வைத்தாள்.

"நீ செல்றத பாத்தா சரி இல்லையே" என அன்பு ஏரகண்ணால் பார்க்க "போதும்டி இப்போவே இந்த ஓட்டு ஓட்டுற அந்த போட்டோவெல்லாம் நீ பாத்த நான் தெலைஞ்சேன்" என சிரிக்க தோழிகள் இருவரும் அடுத்த டாப்பிக்குக்கு சென்றனர்.

ஜெனியின் அதே உணர்வும் வேகமும் இந்த சாகலெட் சிறுவனிடம் காணபடவே "உங்க அம்மா எங்க" என்றாள் அன்பரசி.

"அம்மா நடந்து வர்ரதுககுள்ள பள்ளிகூடமே முடிச்சிட்டும்" என அந்த சிறுவன் கூறவே "சற்று மேடிட்ட வயிருடன் ஒரு பெண் வந்தார். அந்த சிறுவனுக்கு வயிற்றில் ஒரு தம்பி பாப்பா ரெடியாக இருந்தது விளையாட.

அந்த பெண் அன்பரசியை பார்த்தவுடன் "நீ அன்பரசிதான?" என்றார். "ஆமா நீங்க?!" என்றாள்.

"நான் ஜெனியோட அக்காமா அவ எப்போவும் உன்னபத்திதான் பேசிகிட்டு இருப்பா! ஆனா இப்போ அந்த ஆண்டவர்கிட்ட உன்னபத்தி பெருமையா சொல்ல போயிட்டா" என கண்கள் கலங்கியது.

"ஐயோ அக்கா ஜெனி நம்மகூடதான் இருக்கா அழாதிங்க" என தன் மனதின் சோக எரிமலையை அடக்கிகொண்டு ஜெனியின் அக்கா மேரிக்கு ஆறுதல் சொன்னாள்.

"ஆமா அன்பரசி இந்த குழந்தை ஜெனிதான் என்கூட தான் இருக்கா" என வயிற்றில் கைவைத்து தடவினார். "ஆமாக்கா இது ஜெனிதான்" என சற்று சோர்வாக கூறினாள். ராஜேஷுக்கும்

தனக்கும் பிறக்கபோகம் குழந்தைக்கு ஜெனி என பெயர் வைக்கவேண்டும் என இருவரும் காதலிக்கும்போதே பேசிவைத்திருந்தனர். காதலை சேர்த்து வைத்தவள் அவள் அல்லவா?!. ஆனால் அன்பரசியின் அனைத்து ஆசைகளும் இன்று பொய்யாய் நின்றது. இறுதியாய் இருந்த ஜெனி என்ற பெயரும் பறிபோனது.

சற்று பெருமூச்சு விட்டு நிதானபடுத்திகொண்டவள் "சரி உன் பேரு என்னடா கண்ணா" என மேரியின் (ஜெனியின்) மகனிடம் கேட்டாள்.

"என் பேரு சஞ்சீவ்" என முடித்தான்.

தன் தோழியின் அக்கா மகனை தன் மகனாக நினைத்தாள் அன்பரசி அதனால்தான் என்னவோ அவள் கொடுக்கும் செல்லத்தால் சஞ்சீவ் இரண்டாம் வகுப்பின் ஆயுதப்படை தலைவன் என பதவி உயர்வு பெற்றுள்ளான். அன்பரசிக்கும் அவனது செயல்கள் ஜெனியை நினைவூட்டுவதால் எதுவும் கூறாமல் ரசிப்பாள். சஞ்சீவ் மீது இவள் அதிக பாசமாக இருப்பதின் காரணம் ஓடி முடிய நினைவுகளை திருப்பிகொண்டிருந்தவளுக்கு சஞ்சீவை பார்க்கவேண்டும் போல் இருந்தது. நிகழ்காலத்திற்கு வந்தாள். அப்போது அவளது கைபேசி எதிரில் படவே சந்துருவுக்கு ஃபோன் பன்னவேண்டும் என்ற ஆசையும் நினைவும் வந்தது.

கைபேசியை எடுத்தாள்.

## அத்தியாயம் - 32

அன்பரசியின் கைபைசியிலிருந்து கற்றைகள் காற்றில் கடுகி சென்று சந்துருவின் வீட்டை அடைந்தன. அதன் எண்ணம் சந்துரு எங்கே என்று இருக்க சந்துருவின் அறையை தேடின. மிகவும் ஆர்வமுடன் சந்துருவின் கைபேசியை பார்க்க அவனோ வேறு யாருடனோ உரையாடி கொண்டிருந்தான். அதை கண்ட அலைகற்றைகள் வருத்தத்துடன் திரும்பி சென்று "நீங்கள் அழைக்கும் நபர் வேறு ஒருவருடன் தொடர்பில் உள்ளார். தயவுசெய்து பின்னர் முயற்சிக்கவும்" என்ற தகவலை அன்பரசியின் காதில் சேர்த்தன. மீண்டும் முயற்சித்தாள் அன்பரசி அவளின் காதில் ஒலித்த பதிலில் எந்த மாற்றமும் இல்லை.

அடுத்தமுறை முயற்ச்சி செய்ய முயன்றாள் அதற்குள் "அன்பு இங்க வாம்மா" என்ற பார்வதியின் குரல். வேறு வீட்டிற்கு செல்லபோகிறாள் என்றதும் தனது வார்த்தைகளிலேயே பாசத்தை காட்டினாள் பார்வதி இந்த திடீர்மாற்றத்துடன்.

"என்னம்மா" என எழுந்து சென்றாள் அன்பரசி. வழக்கமான அறிவுரைகள்தான் "இங்க இருக்குற மாதிரி அங்க நடந்துக்க கூடாது பொண்ணுங்களுக்கு புகுந்தவீடுதான் பிராதனம் சரியா" என சமையலறையல் வாழ்கைகான பாடம் நடத்த துவங்கினார் பார்வதி. அன்பயசியும் கேட்டுகொண்டே தாய்க்கு உதவி செய்தாள். அவளது

செய்கையை பார்த்த பார்வதிக்கு தன் மகளுக்கு கல்யாணகலை வந்துவிட்டது என மகிழ்ந்து கொண்டே மேலும் அறிவுரைகளை தொடர்ந்தாள்.

"அம்மா நான் ஸ்கூல்ல போய் சொல்லிட்டு வந்துடவா" என சஞ்சீவை பார்க்கும் ஆவலில் கூறினாள். "அப்பாகிட்ட கேளுமா" என்றாள் அன்பரசி. பார்வதியோ என்றுமே தந்தையிடம் உரிமையாக சண்டையிடும் அன்பரசி இன்று தன்னை தூதுக்கு அனுப்புகிறாளே என்ற எண்ணம். ஆம் அன்பரசியை இந்த நிச்சயம் மாற்றிதான்விட்டது.

அப்போது வந்த போஸ் "என்ன வழக்கம்போல ஆரம்பிச்சுட்டியா" என பார்வதியை பார்த்து கேட்டார். அதற்கு காரணம் இருந்தது. ஆம் ஊரில் இருந்து கல்யாணம் ஆகி செல்லும் பெண்களுக்கு அறிவுரை வழங்கி அறுக்கும் உறுப்பினரில் ஒருவராக இருந்தார் பார்வதி. தன் மகள் திருமணம் என்றால்சொல்லவா வேண்டும் அதனால்தான் தன் மகளை பார்வதி என்ற சிறையிலிருந்து மீட்க முயன்றார்.

"இல்லைங்க புகுந்த வீட்டுக்கு போகபோறால்ல அதான் எப்புடி நடந்துகனும்னு சொல்லிகிட்டு இருக்கேன்ங்க" என்று சமாளித்தார் பார்வதி.

"அவ போஸோட பொண்ணு டி அதெல்லாம் அவளுக்கே தெரியும் நீ ஒன்னும் சொல்ல வேணாம்" என தன் மனைவியின் கன்னத்தை கிள்ளினார்.

"இப்புடி சின்ன வயசுல நீங்க செல்லம் குடுத்ததுதான் ஊரையே மேய்ச்சுட்டு வந்தா அப்புறம் காலேஜ்ல..!" என பார்வதி கூறும்போதே இவள் அன்பின் காதலை பற்றி கூறுவாள் என்பது நன்றாக தெரிந்ததால் போஸ் கண்ணாலையே "சும்மா இருடி" என்பது போல உருட்டினார் போஸ்.

"அதாங்க காலேஜ்லயும் வாலுதனம் பன்னி கிட்டு இருந்தா" என முடித்தார் பார்வதி.

"அதெல்லாம் சந்துருவோட பிரட்சனைடி அவன் பாத்துப்பான். அன்பரசிய நாம சமாளிக்க முடியாதுனு தானே அவன் தலையில் கட்டிவைக்குறோம். இனி சந்துருவாச்சு இல்ல சன்முகமாச்சு நமக்கு என்ன. என்னம்மா அன்பு நான் சொல்றது சரிதான?" என்ற தன் மகளிடம் கேட்டார்.

அன்பரசியின் மனதில் 'இல்லப்பா சந்துரு அம்மா இல்லாம வளந்தவரு என்க்குதான் நான் ஆசைபட்டது எதுவுமே நிலைக்கல அதான் சந்ததுருவுக்கு ஒரு தாயாக இருக்கும்னு முடிவு பன்னிதான் இந்த கல்யாணத்துக்கு சம்மதித்தேன். அவருக்கு ஒரு நல்ல மனைவியா என்னால இருக்க முடியுமானு தெரியலைப்பா' என மனதில் புழுங்கினாள்.

அவளது முகத்தில் குழப்பத்தை பார்த்த போஸ் "சரிம்மா நான் போய் ஸ்வீட் பழம் எல்லாம் வாங்கிட்டு வந்துடுறேன் ஸ்கூலுக்கு ஒரு

எட்டு போயிட்டு வந்துடுவோம். மலரும் வாரேண்ணு சொன்னா பார்வதி அவளையும் கூப்டுறு" என்றதும் அன்பரசி யின் முகத்தில் சிறிது மகிழ்ச்சி தெரிந்தது. அதற்கு காரணம் "உன் கல்யாணத்தோட முதல் பத்திரிக்கை எனக்குதான்" என்று ஜெனி கூறியதுதான். ஆனால் இன்று ஜெனியும் இல்லை பத்திரிக்கையும் இல்லை. அவளது மகனிடமாவது கூறலாம் என்ற ஆவலுடன் இருந்தாள் அன்பரசி.

"என்ன மேடம் எப்புடி இருக்கீங்க" இது சந்துரு.

"ஆமா சார் என்ன பாத்து பத்து வருசம் ஆச்சுல விசாரிக்குறாரு இப்போதான ஏர்போர்ட்டல பாத்தோம்" இது சுவேதா.

"சரி எதுக்கு ஃபோன் பன்ன" என்றான் சந்துரு.

"நீ டயர்டா இருக்கியா"

"இல்லையே"

"நாம எங்கயாவது வெளிய போகலாமா எனக்கு தனியா இருக்குறது ஒருமாதிரி இருக்கு" என்றாள்.

"ம்ம் போகலாம் நீ வீட்ல இரு நான் கார் எடுத்துட்டு வாரேன்" என்றான். "ஏய் நீ என்ன சொன்ன அன்னைக்கு" என்றாள். "நான் ஒரு டாக் இட் இவ் பர்சன் கொஞ்சம் அதிகமாகவே பேசுவேன் நீ என்னைக்குனு கொஞ்சம் தெளிவா சொல்றியா?!" என்றான்.

"ஒரு நாள் இந்த ஆடம்பரம் அது இது கமிட்மெண்ட் இதெல்லாம் இல்லாம பிடிச்சவங்கூட மனசுல நிம்மதியா ஊர் சுத்தனும்னு சொன்னீல" என்றாள்.

"ஆமா சொன்னேன்"

"அப்போ நான் உனக்கு மனசுக்கு பிடிக்கலையா" என்ற குரல் கேட்கும் போதுதான் அன்பரசி தூது அனுப்பிய கற்றைகள் வந்து நோட்டம் பார்த்து சென்றன.

"ஏய் லூசு உன்ன பிடிக்காதவங்க யாருடி இருக்க முடியும்" என்று சமாதானபடுத்தினான்.

"என்ன யாருக்குமே பிடிக்காதுடா" என்ற குரல் அழுகை கலந்து கேட்டது. சுவேதாவின் குழந்தை மனது அது.

"இப்போ நான் அங்க வந்தேன் நீ என்கிட்ட உதவாங்குவ சும்மா நீயே எதாவது நினைச்சுக்காதடி"

சுவேதா எந்த பதிலும் தரவில்லை.

"சரி நீ விட்டா ஃபீல் பன்னிகிட்டே இருப்ப நான் ஒரு ஆட்டோ எடுத்துட்டு அங்க வாரேன் நீ ரெடியா இரு" என்று கிளம்பினான்.

"ம்ம் சரிடா" என இனைப்பை துண்டித்தாள்.

சிறிதுநேரத்தில் சுவேதா வாங்கிகொடுத்த டீசர்ட்டும் ஜீன்ஷும் அணிந்துகொண்டு கண்கண்ணாடியை எடுத்தான். அவனது மனம் அதை கீழே வைக்க சொன்னது. பின்னர் தனது பர்சை பார்த்தான். அதில் பத்தாயிரத்திற்கு மேல் பணமும் சில வங்கிகளின் அட்டைகளும் இருந்தன.

ஒரு சாதாரண மனுசன் எவ்வளவு செலவு பன்னுவான் என யோசிக்கும்போது தன் வீட்டு தோட்டகார் "என்ன தம்பி ஒரு நாளைக்கு முன்னூறு ரூபாய் இருந்தா வயித்துக்கு பஞ்சம் இல்லாம என் குடும்பம் சாப்பிட்டுரும் அப்புறம் மாசத்துக்கு ஒருவாட்டி வெளியே போவோம் கல்யான ஆன புதுசுல இருநூறு ரூபாய் எடுத்துட்டு என் பொண்டாட்டிய கூட்டிட்டு போவேன் இப்போ எப்புடியும் கல்யாணம் ஆனவங்க போகனும்னா ஒரு ஆயிரம்ரூபாயவது வேணும் தம்பி. இப்போ புள்ள குட்டினு ஆகிடுச்சு அவ்வளவா வெளிய போறது இல்ல" கூறியது நினைவுக்கு வரவே அதிலிருந்து இரண்டு ஐநூறு ரூபாயை உருகினான்.

'அவ எதாவது கேட்டா என்ன பன்றது' என ஒரு கார்டையும் எடுத்துக்கொண்டான். ஆனால் இது அவளுக்காக மட்டுமே என்று மனதில் உறுதி எடுத்து கொண்டான்.

அவனது கைபேசியை பார்த்தான். பின் அதையும் நிராகரித்துவிட்டு நடந்தான்.

அறைக்கு வெளியே வரவே விலை உயர்ந்த சூக்களும் செருப்புகளும் இருக்க அதை பார்த்து சிறிதுநேரம் யோசித்துவிட்டு வெறுங்காலுடன் கிளம்பினான்.

"என்ன தம்பி செருப்புகூட போடாம கிளம்பிட்டீங்க" என முனியம்மாள் வந்தார்.

"இல்லமா கொஞ்சம் மனசு சரியில்லை அதான் அப்புடியே வாக்கிங் போகலாம்னு" என்றான். காலையில் வாக்கிங் என்றாலே கும்பகர்ணனை எழுப்புவது போல்தான் இருக்கும் ஆனால் இன்று இந்த வெயிலில் போகிறானா என்று யோசித்த முனியம்மாள்.

"தம்பி வெளிய வெயில் அதிகமாக இருக்குப்பா செருப்பு போட்டுட்டு போங்க" என்றார்.

"இல்லமா இருக்கட்டும் அப்புறம் அப்பா எழுந்திருச்சா சொல்லிடுங்க" என நடக்கதுவங்கினான். அவனை பார்க்கும்போது முனியம்மாவுக்கு காவேரியின் நியாபகம் வந்தது. காவேரியும் மனது சரியில்லை என்றால் முனியம்மாவை அழைத்துகொண்டு அப்படியே நடந்து செல்வது வழக்கம். ஆனால் சந்துரு தனியாக செல்கிறான்.

ஏசியில் ஸ்பரிசத்தை பாதுகாத்தவனை வெயில் சற்று கிரங்கதான் செய்தது. கால்களில் சூட்டினை உணர்ந்தான். இருந்தாலும் நடக்கலாம் என்று நடந்தான்.

சிறிது தூரம் சென்றதும் ஒரு சிறு பெண் "அண்ணா அண்ணா பசிக்குதுனா எதாவது குடுங்க" என்று நின்றாள். அவளை பார்த்ததும் மூளையில் இருந்த அன்புதான் அது. அவன் தன் பையை பார்க்க அதில் இரண்டு ஐநூறு ரூபாயே இருந்தது.

பணம் இருந்தால் இதை அப்படியே குடுத்திருப்பான் ஆனால் சுவேதாவுக்கு என்ன செய்வது என்று யோசித்தவன் அந்த சிறை பெண்ணை தூக்கிகொண்டான். பின் சிறிது தூரம் சென்றதும் ஒரு கடை வந்தது.

"அண்ணே இந்தாங்க " என ஐநூறு ரூபாயை நீட்டினான். "இதுல நூறு ரூபாய்க்கு இந்த பாப்பாக்கு எதுனா குடுத்துட்டு நானூறு ரூபாய் தாங்க" என்றான். அந்த கடைக்காரர் இவனை சந்தேகமாக பார்த்தார்.

பின்ன டீசர்ட் ஜீன்ஸ் அணிந்துகொண்டு அதுவும் பேரம்பேசி வாங்கும் நகரில் சில்லரை இல்லாமல் ஒருவன். அதிலும் நூறு ரூபாய் தானம் செய்கிறான் என்றால். இது கண்டிப்பாக கள்ள நோட்டுதான் என்பது அவரது சந்தேகம்.

அவனிடமிருந்து வாங்கியவர் அதில் பல சோதனைகளை நிகழ்த்தினார். ரூபாயை அச்சடித்தவர்கள்கூட இந்த அளவிற்கு சோதனை செய்திருக்க மாட்டார்கள். புதிய நோட்டுகளின் புழக்கத்திற்கு அப்புறம் கள்ளநோட்டுகள் நிறையவே கலந்ததன் அடிப்படை பயம் அது. இறுதியாக அந்த வங்கி மேலாளரிடம் நல்ல நோட்டு என பரிந்துரை அளிக்கபடவே அதை ஒரு டப்பாவில் போட்டார். பின் சந்துருவுக்கு நானூறு ரூபாய் கிடைத்தது.

"பாப்பா எதுவேணுமோ கேட்டு வாங்கிக்கோ" என சந்துரு கூற "சரி அண்ணே " என சிரித்தாள். சந்துரு நடக்கதுவங்கினான்.

இதற்குமேல் அவனது கால்கள் தாக்குபிடிக்க வில்லை சிறிய நிழல் கிடைக்கும் இடத்தில் எல்லாம் ஒதுங்கினான். இவனது செய்கையை தூரத்திலாருந்த ஒரு ஜீவன் கவனித்துகொண்டிருந்தது. அந்த குழந்தையை தூக்கி வந்தது முதல் இவனது நீளம் தாண்டுதல் பயிற்ச்சி வரை.

"தம்பி நில்லுப்பா" என்றது அந்த உருவம்.

*"என்னங்க ஐய்யா" என்றான் சந்துரு. தனக்கு முன் செருப்புகளை தைத்துகொண்டிருந்த அந்த முதியவரை பார்த்து.*

*"இந்தாப்பா இந்த செருப்ப போட்டுட்டு போ"என்றார். "இல்ல ஐயா என்கிட்ட பணம் இல்லை" என்றான். சந்துருவின் எண்ணம் காலனிகள் என்றால் குறைந்தது ஐயாயிரம் இருக்கும் என்றுதான். அதனால் அவ்வாறு கூறினான்.*

*"ஏம்பா நான் பணம் கேட்டேனா?! உன்ன பாத்துட்டுதான்பா இருக்கேன் ஒரு பிச்சகார குழந்தை பக்கத்துல நிக்குறதையே யாரும் விரும்பமாட்டாங்க ஆனா நீ அந்த குழந்தைய தூக்கிட்டு வந்ததும் இல்லாம உன்கிட்ட இருந்த காலெல்லாம் கொடுத்துட்ட! அதான்பா நான் இதுகூட செய்யக்கூடாதா" என்றார்.*

*"இல்ல ஐய்யா நீங்களே வெயில்ல உட்காந்து வியாபாரம் பன்றீங்க இப்புடி சும்மா குடுத்தா..!" என இழுத்தான்.*

*"உங்க தாத்தா குடுத்தா வாங்க மாட்டியாப்பா" என்றார். அடுத்த நொடி அது சந்துருவின் காலில் இருந்தது.*

*பின் அவரிடமிருந்து விடைபெற்று சென்றான். இப்போது நீளம் தாண்டுதல் பயிற்ச்சி அவனுக்கு தேவை படவில்லை. இதுவரை இந்த வழியில் பலமுறை காரில் கடந்திருப்பான். இந்த முதியவரை ஒரு*

நொடி திரும்பி பார்க்கக்கூட நேரம் இல்லை ஆனால் இன்று இவர் அன்பில் கடவுளாக தெரிந்தார்.

அன்பு என்பது ஓர் அழகான மொழி அதை உணர அன்பால் மட்டுமே முடியும் அனைத்து உயிர்களையும் கட்டி அணைப்பது அதுதான் என சிந்தித்தவனின் மனதில் அன்பரசி நின்றாள். அந்த அன்பால் அனைவரையும் ஆளும் அரசி அன்பரசி. அவளது பெயரை எண்ணி சிலிர்த்தான்.

"சார் ஆட்டோ வேணுமா!?" என்ற குரல். இதுவே மற்றநாளாக இருந்திருந்தால் அந்த ஆட்டோ சந்துருவின் டிராவல்ஸ் சர்விஸில் இணைந்திருக்கும்.

"ம்ம் ஆமாண்ணா" என ஏறி சென்றான். இறங்கும்போது சந்துருவின் வீட்டை ஒத்த அதே பிரம்மாண்ட வீட்டின் எதிரே ஆட்டோ நிற்க இறக்கிவிட்டு ஒரு நூறு ரூபாயை எடுத்துகொடுக்கவே பால்கனியில் நின்று ஒரு பெண் சந்துருவை பார்த்ததும் குதித்தாள்.

அதை பார்த்த ஆட்டோ டிரைவர் "என்ன சார் உங்க ஆளா கலக்குறீங்க போங்க" என ஆட்டைவை முறுக்கி கொண்டு கிளம்பினார்.

சிறிது நேரத்தில் சுவேதா ஓடி வந்தாள் அவளை பார்த்ததும் சந்துரு "ஏய் என்னடி இப்புடி வந்துருக்க?!" என்றான்.

## அத்தியாயம் - 33

வெளியே ஓடி வந்த சுவேதாவை பார்த்து "என்னடி இப்புடி வந்துருக்க இன்னைக்கு மெண்டல் ஆகிட்டியா?!"என கேட்டான் சந்துரு.

"ஏன்டா பிடிக்கலையா?!" இது சுவேதா ஏக்கமாக.

"அழகா இருக்கடி அதான் சொல்றேன் என்னாலையே நம்ப முடியலை" என்றான். அதற்கு காரணமும் இருந்தது. ஆம் சுவேதா முதல் முறையாக புடவை கட்டி தலையை வாரி ஜடை பின்னி பார்க்கவே மங்கலகரமாக இருந்தாள். ஹைடெக் பெண்ணின் இந்த திடீர் மாற்றம் சந்ததுருவை நிலைகுலைத்திருந்தது.

"நிஜாமா அழகா இருக்கேனா" முதல்முறை புடவை கட்டும் பெண்களின் மனதில் ஏற்படும் கேள்விதான். என்னதான் சுவேதாவின் குணம் அப்படி இருந்தாலும் அவளும் பெண் என்பதை அந்த கேள்வி எடுத்துக்காட்டியது சந்துருவுக்கு.

"சத்தியமா அழகா இருக்க; ஆமா ஏன் இந்த திடீர் மாற்றம்" என்றான். "அதான் அன்பரசிய பாத்தேன்ல அவங்கள மாதிரி இருக்கனும்னு எனக்கு ஆசை வந்திருச்சு அப்போதான உனக்கு பிடிக்கும்; அவங்க எவ்வளவு அழகா இருந்தாங்க புடவைல இன்னும் என் கண்ணுலயே இருக்காங்க; நீ ஏன் அவங்கள பத்தியே பேசிக்கிட்டு இருந்தேனு இப்போதான் எனக்கு புரியுது" என்று மெச்சினாள். பார்ப்பவர் கண்ணுக்குள் ஒளிந்துகொண்டு கண்ணாமூச்சி ஆடுவது அன்பரசியின் குணம்.

"ம்ஹூம் அன்பு உன்னவிட சின்ன பொண்ணுதான் அவங்க இவங்கனு சொல்லி பெரிய மனுசி ஆக்கிடாத" என இருவரும் நடக்க துவங்கினர்.

"ஏய் நீயே நிறைய தடவை அவங்க இவங்கனுதான சொல்லிருக்க" என சந்துருவை நக்கலாக பார்த்தாள்.

அன்பரசிக்கு தாய் அந்தஸ்தை கொடுத்திருந்தவன் அப்படி பேசியிருந்தால் அதில் எந்த ஐயமும் இல்லை. "அப்புறம் இன்னொரு விசயம் நீ காலையில பார்த்தது அன்பரசிய மட்டும்தான். சின்ன வயசுல இருந்த அரிசிய நீ இன்னும் பாக்கலையே! பாத்திருந்தா இப்புடி பேசமாட்ட"

"அப்புடி என்ன பன்னாங்க" ஆர்வமானாள் சுவேதா.

"என்ன பன்னாங்களானு கேக்குறியா. சொல்றேன் இரு" என பெருமூச்சுவிட்டான்.

"சொல்லுடா" என சுவேதா கேட்க அந்த நாள் நினைவு படுத்தினான்.

அது அந்த கன்மாயை ஒட்டியுள்ள ஒரு புளியமரம் மூவரும் தொப்பென நனைத்திருந்தனர். சந்துருவுக்கோ குளிரில் நடுக்கம் ஏற்பட்டது. ஆனாலும் ஏதோ கடப்பாறை நீச்சலில் இருந்து அடுத்த கட்டம் முன்னேறிவிட்டோம் என்ற ஓர் கர்வம். ஆனால் அவன் நீச்சல் அடித்தது இடுப்பளவு தண்ணீரில்தான்.

எப்படியும் பார்வதியிடம் அடி கண்டிப்பாக உண்டு என்ற அறிந்த தோழிகள் இருவரும் சந்துருவை கேடயமாக பயன்படுத்தி தப்பிக்கலாம் என்ற திட்டத்துடன் வீட்டை நோக்கி மூவரும் நடந்ததுகொண்டிருந்தனர்.

"ஏய் அரிசி இன்னைக்கு உங்க வீட்டுல உனக்கு முதுகுல தோசை சுட போறாங்கடி பெரியம்மா" என்றாள் மலை.

"ஆமாடி" என முகத்தை சோகமாக வைத்துகொண்டு "சந்துரு உனக்கு நீச்சல் சொல்லிதரதானே தண்ணியில குதிச்சேன். இப்போ அம்மா அடிப்பாங்க என்ன" என்றாள் சோகமாக.

"நான் அத்தைகிட்ட சொல்லிகிறேன் அரிசி நீ பயப்படாத" சந்துருவின் மொழி.

"அம்மா அடிச்சிச்சுனா அப்புறம் உன்கூட பேசமாட்டேன் பாத்துக்கோ" என்று நீண்டநாட்களாக செய்யும் தவறுக்கு இன்று ஒருநாள் மட்டும் சந்துரு வை வைத்து வாய்தா வாங்கிக்கொள்ளலாம் என்று தீர்மானித்தாள் அந்த குறும்பு பெண்.

"நான்தான் சொல்றேன்ல அரிசி" சந்துருவின் பேச்சிலேயே அவர்கள் நெருங்கியிருப்பது புரிந்தது.

திடீரென "ஏய் மலை அங்க பாருடி" என்றாள் அன்பு. "ஐய்யோ ஆமாடி நானும் ரொம்பநாளா கண்ணு வச்சுகிட்டுதான் இருக்கேன்" என் வானத்தை பார்த்தனர் இருவரும்.

ஆனால் இடையில் இருந்த புளியங்காய்தான் அவர்களின் குறிக்கோள். சற்று இல்லை இல்லை அதிக உயரத்தில் தான் இருந்தது.

"இருடி நான் பறிக்குறேன்" என மரத்தில் ஏறினாள் அரிசி. அப்போது அதிலிருந்த அரைகுறையாக வெட்டப்பட்ட ஒரு கிளை அரிசியின் சட்டையில் ஒரு கையை கிழித்துவிட்டது. அந்த மாநிற தோளிலும் சிறிது காயம்தான் அது சந்துருவுக்கும் வலித்தது.

ஆனால் கீழே இருந்த மலையின் குறிக்கோள் அந்த புளியங்காய் மட்டுமே "ஏறுடி சீக்கிரம்" என்று கத்தினாள். "ஸ்ஸ்ஸ் ஆஆ இருடி கையில கீறிவிட்டுருச்சு" என எச்சிலை தொட்டு அந்த கீறல் மீது தடவினாள். இதுவே சந்துருவுக்கு என்றால் ஒரு மினி ஹாஸ்பிட்டலே உருவாகியிருந்திருக்கும்.

உலகில் குரங்கிலிருந்து உருவான முதல் மனுசியின் பெயர் லூசியாம். அதில் எந்த ஐயமும் இல்லை ஆனால் முதலில் தோன்றிய குரங்கின் பெயர் அரிசி என்றுதான் இருந்திருக்கவேண்டும். ஆம் அவள் ஏறிசென்ற விதம் அப்படி. சிறிது நேரத்தில் இரண்டு பெரிய புளியங்காய் கீழே விழுந்தது. அதன் பின் அரிசியும் இறங்கினாள் இல்லை விழுந்தாள் குதிதாள் எதுவேனாலும் சொல்லலாம்.

மலைக்கு ஒரு முழு புளியங்காய் ஒதுக்கபடவே சந்துருவுக்கும் அரிசிக்கும் இடையில் ஒதுக்கீடு பணி முடிய சந்துருவுக்கு சிறிது ஒதுக்கப்பட்டது. ஆர்வமாக எடுத்து அப்படியே வாயில் போட்டு கடித்தான்.

அப்போது சந்துருவின் முகத்தை பார்கனுமே சுவேதாவிடம் கூறும்போது அதே முகபாவனையில் இருந்தான். "நான் இனிக்கும்னு நினைச்சு வாயில போட்டுட்டேன் அதுபுடி புளிச்சது சுவேதா" என அதே முகபாவனையை காட்ட சுவேதா சிரித்துகொண்டே "ஹா ஹா ஹா அப்புறம் என்ன ஆச்சு" என்றாள்.

"அப்புறம் என்ன பன்றது பாவம் கையல எனக்காக அடிபட்டு பறிச்சுட்டு வந்தா அதான் அப்புடியே முழுங்கிட்டேன்"

"ஏய் அரிசி இவன் முழுங்கிட்டான்டி விதையோட" என்றாள் மலை. சந்துரு புரியாமல் திருதிருவென முழித்தான்.

"போச்சு சந்துரு உன் வயித்துல மரம் வளந்துடும்" என அரிசி சந்துருவை பயமுறுத்தினாள். ஆம் சந்துரு அழுது விட்டான். அதன்பின் "பொண்ணுங்க சாப்பிட்டாதான்டி மரம் முளைக்கும் பசங்களுக்கு இல்ல" என அரிசி அவனை தேற்றி இன்னும் சிறிது புளியங்காய் கொடுத்தாள்.

பாவம் சந்துரு அதை சாப்பிடலாமா வேணாமா என குழப்பத்தில் கையிலேயே வைத்துக்கொண்டான்.

மூவரும் நடக்கதுவங்கினார். "அரிசி என்னடி ஒரு கைய காணோம்?!" என மலை அரிசியின் சட்டையை பார்த்து கிண்டல் செய்தாள்.

"அதான் மரம் கிழிச்சுவிட்டுருச்சுடி எல்லாம் உன்னாலதான்" என்றாள்.

"நீயெல்லாம் என்ன சுவேதா மார்டன் டிரஸ் போடுற அன்னைக்கு அரிசிய பாக்கனுமே ஒரு கை சட்டை நல்லா நினைச்சுகிட்டு சட்டையில் பையும் கிழிஞ்சு தொங்குச்சு அந்த முட்டிங்கால் வரைக்கும் பாவாடைய வேட்டிமாதிரி மடிச்சு கட்டியிருந்தா அப்போதான் நல்லா மரம் ஏற முடியுமாம்" என சந்துரு கூற கூற சுவேதா சிரித்துகொண்டே வந்தாள்.

"ரொம்ப குறும்பு பன்னுவாங்க போல" என்றாள்.

"இதுக்கேவா அடுத்து ஒன்னு நடந்துச்சு சுவேதா அதுதான் மெயின்" என்றான்.

சுவேதா மேலும் ஆர்வமானாள். "சொல்லுடா" என அவள்முகத்தில் சிரிப்பு இருந்தது.

சந்துருவும் ஆரம்பித்தான்.

மூவரும் நடந்து கொண்டிருக்க "ஏய் மலை அங்க பாருடி இன்னைக்கு இத ஒரு வழி பன்னிடனும்" என அரிசி வேகமாக ஓடினாள்.

"ஆமாடி நம்ம ஊரு கோயில் மாட்ட கடிச்சிடுச்சுடி இன்னைக்கு இத கொல்லனும்" என மலையும் ஓடவே சந்துரு குழப்பத்தில் இருந்தான்.

சிறிது நேரத்தில் ஒரு பாம்பு புற்று அதனுள் நுழைந்து தப்பிக்க எண்ணிய ஒரு பாம்பின் வால் அரிசியிடம் அகப்பட்டு கொண்டது.

"ஏய் மலை இழுடி ஓடிரபோகுது" என்ற பாம்பின் வாலை பிடித்துகொண்டு கத்தினாள். மலையும் அன்பரசியின் வயிற்றை பிடித்துகொண்டு பின்னால் இழுத்தாள்.

சந்துரு சிறிதுதூரம் தள்ளி நின்றான் (சிறிது தூரம் என்றால் நீங்களே யோசித்துகொள்ளுங்கள்)

பாவம் அந்த பாம்பு எவ்வளவு வலியை தாங்கும் அது பொருமை இழந்து புற்றின் வேறு வழியாக தலையை நீட்டியது. "ஏய் இங்க வந்துருச்சுடி" என வாலை விட்டுவிட்டு அதன் தலையை பிடித்து இழுத்தாள். பாம்பும் வெளியே வந்தது.

சரியாக அரிசியின் உயரம் இருந்தது அந்த நாகம். "ஏய் இது நல்லபாம்புடி கோயில் மாட்ட கடிச்சது விரியன் பாம்பாம் அந்த டாக்டர் சொன்னாங்க கேக்கலியா?" என்றாள் மலை.

"அடி லூசு எல்லா பாம்பும் ஒன்னுதான் இத விட்டா புதுசா வந்துருக்குற மாட்டையும் கடிச்சிடும்" என தொலைதூர சிந்தனையுடன் யோசித்தாள் அரிசி. அந்த பாம்போ "அடிபாவிகளா நான் உனக்கு என்னடி கெடுதல் பன்னேன்" என அரிசியை பார்த்துக்கொண்டிருக்க அதன் கழுத்தை பிடித்திருந்தாள்.

"ஏய் சந்துரு இங்க வா படம் காட்டுறேன் " என பாம்பின் கழுத்தை காலால் மிதித்து கொண்டு அதன் தலையை கையால் விரித்தாள் அதில் பாம்பின் S வடிவ படம் இருந்தது. அவன் அதை கார்டூனில்தான் பார்த்திருக்கிறான்.

"சீக்கிரம் கொல்லுடி வீட்டுக்கு போகலாம்" இது மலை. ஆனால் சந்துரு அந்த பாம்பை பாவமாக பார்த்தான். காவேரியை போன்ற மனம் அவனுக்கு. அதை அரிசி இல்லை அன்பரசி உணர்ந்தாள் போலும்..

அருகில் இருந்த சிறிய கல்லை எடுத்து அதன் பற்களை உடைத்துவிட்டாள் "இனி எப்புடி கடிப்பேனு பாப்போம்" என அதனுடன் சாவால்வேறு போட்டுகொண்டாள். பின் காலை எடுக்க "என்ன விடுங்கடா சாமி" என அந்த பாம்பு சந்துருவை நோக்கி வரவே அவன் பயத்தில் தாவிகுதித்து அன்பரசியின் மேல் விழுந்துவிட்டான். பாவம் பட்டகாலிலே படும் என்பதைப்போல கையில் கீறல் இருந்த இடத்தில் சிராய்ப்பும் சேர்ந்து கொண்டது. மீண்டும் எச்சில் வைத்தியத்தான்.

சந்துரு சிரித்துகொண்டே "பாத்தியா சுவேதா இதுதான் அரிசி நல்லபாம்புக்கு பல்லு மூனு மாசத்துல முளைச்சிடும்னு தெரியாம கோயில் மாட்ட காப்பாத்திட்டேன்னு பெருமையா சுத்திகிட்டு திரிஞ்சா" என சந்துரு சிரிக்க.

"உன்னை ரொம்ப படுத்திருப்பாங்க போல" என சுவேதா சிரிக்க அந்த ஆட்டோ ஸ்டான்டை அடைந்தனர்.

"அண்ணே பீச்சுக்கு போகனும்" என்றான் சந்துரு. அந்த ஆட்டோக்காரர் சுவேதாவின் கழுத்தை பார்த்தார். தாலி இல்லை. எல்லாம் கலிகாலம்டா என சொல்லிக்கொண்டு ஆட்டோவை எடுத்தார். ஆட்டோ சிறிது நேரத்தில் கடற்கரையை அடைந்தது.

அப்போதுதான் காதல் ஜோடிகள் பீச்சை மெதுவாக நிரப்பி கொண்டிருந்தனர். சூரியனும் தன் தாக்கத்தை சிறிது குறைத்திருந்தான். அவனும் காதல் செய்பவன் தானே அதனால் காதலை புரிந்துகொண்டான்.

சந்துருவும் சுவேதாவும் சென்று கடற்கறையில் அமர்ந்தனர். சுற்றிலும் இருந்த ஜோடிகளின் பல செயல்கள். முத்தம் தலைகோதிவிடுதல்; செல்ல சண்டை; மடியில்தூங்குதல்; கண்களில் எதையோ தேடுதல் என இடமே காதலின் கற்றையைபரப்பிகொண்டிருந்தது.

சற்று தூரத்தில் அமர்ந்திருந்த ஒரு ஜோடி இதழில் தேனை பருக அதை பார்த்த இருவரும் ஒருவரை ஒருவர் பார்த்தனர். சுவேதா சந்துருவின் கண்ணை பார்த்து எதையோ தேடினாள். அவனும் அவ்வாறே இருந்தான். சுவேதா லேசாக புன்கைத்தாள். அவனது இதழ்களும் புன்னகைக்க "தம்பி பொண்ணுக்கு பூ வாங்கி குடுப்பா வெறும் தலையோடு இருக்கா" என அந்த பாட்டி நிற்க

சுவேதா சற்று மௌனமாக சிரித்தாள். சந்துருவும் பூவை வாங்கிகொண்டான். அவள் இதுவரை பூவே வைத்திருக்க வாய்ப்பில்லை ஹேர்ஸ்பிரே ஒன்லி. அதனால் சந்துருவே வைத்துவிட்டான் அந்த அழகான மல்லிகை பூவை.

"வேற எதாவது வேணுமாடி" என கேட்க அவனது கண்களை பார்த்தாள். "பஞ்சு மிட்டாய் வாங்கி குடுடா ஆசையா இருக்கு" என்றாள்.

சுற்றிலும் பார்த்தான். பஞ்சு மிட்டாய் தென்படவில்லை. "ஏய் கிடைக்குறதா கேளுடி "

"அப்போ ஐஸ்கிரீம் வாங்கி குடு " என்று மெனு சேஞ்ச் ஆனது.

அப்பாடா அருகிலேயே இருக்கிறதே என ஓடிசென்று வாங்கி வந்தான். "ஏய் உனக்கு வாங்கலையாடா" என்றாள்.

"இல்லடி நான் வேற ஐட்டம் வச்சுருக்கேன்" என மாங்காயையும் பொடியையும் வாங்கி வந்திருந்தான். எச்சில் ஊற "இத சாப்புடனும்னு ரொம்ப நாள் ஆசைடி " என எடுத்து லேசாக கடித்தான்.

"ஏய் குடுடா எனக்கும் ஆசையா இருக்கு " என அதையும் பறித்துகொண்டாள். கைக்கு எட்டுனது வாய்க்கு எட்டலையே என சந்துரு பார்த்தான். ஆனாலும் சுவேதாவுக்காக என்ன வேணாலும் செய்யலாம்.

அவள் குழந்தைபோல ஐஸ்கிரீமை சாப்பிட வாயை சுற்றி அதன் சுவடுகள் இருக்க "லூசு ஒழுங்கா ஒரு ஐஸ் கூட திங்க தெரியல பாரு குழந்தையாட்டம்" என இதழ்களை துடைத்து விட்டான்.

அதன்பின் கையிலிருந்த மாங்காயை சாப்பிட்டதுவங்கினாள். "நல்லாதான் சாப்புடுற ஆனா உடம்பு ஒன்னும் ஏறலையே நல்லா ஒல்லிகுச்சியாட்டம்" என்றதும். "இப்போ நான் உடம்பு ஏத்தி என்னடா பன்னபோறேன்" என்றாள் சோகமாக.

"ஆமா உனக்கு புடவையெல்லாம் கட்டதெரியுமா" என்றான். "இல்லடா அம்மா கட்டிவிட்டாங்க"

"என்ன அம்மாவா?!" என அதிர்ச்சியடைந்தான்.

"ஹேய் நந்தினி அம்மா கட்டிவிட்டாங்க நியாயமா பாத்த அபி இதெல்லாம் எனக்கு சொல்லிகுடுத்துருக்கனும்" என தாயின் நினைவு வந்தது அவளுக்கு.

"சரிடி நீ விட்டா ஃபீல் பன்ன ஆரம்பிச்சுடுவ கிளம்பு போகலாம்" என்றான்.

"என்னடா கடல்ல விளையாடிட்டு போகலாமே" என்றாள்.

"ஏய் லூசு இப்போதான் ஐஸ் தின்னுருக்க அதுவும் இல்லாம மாங்காய் வேற இப்போ கடல்ல குளிக்குறேன்னு சொல்லுற உடம்புக்கு எதாவது ஆகிடும்டி" என்றான். தொப்பென்று நனைந்துகொண்டு புளியங்காய் சாப்பிட்டுவிட்டு பார்வதியை ஹாஸ்பிட்டல் கூட்டிசென்ற சுகமான தருனம் கண்ணில் வந்தது. அப்போதும் அரிசி அவனை கிண்டல் செய்துகொண்டுதான் இருந்தாள்.

அதுமாதிரி சுவேதாவுக்கு காய்ச்சல் வந்துவிடும் என பயந்தான். ஆனால் இவன் யோசித்து முடிப்பதற்குள் கடலில் இறுஙகியிருந்தாள்.

"ஏய் நில்லுடி சொன்னா கேளு" என இவனும் பின்னால் செல்லவே இவனையும் இழுத்து போட்டால் அலையெனும் மெத்தையில்.

இருவரும் விளையாடிகொண்டிருக்க ஒரு காவல் நண்பர் வந்து "ஏய் இங்க இறங்ககூடாதுனு சொல்லிருக்குள வெளிய வா" என கையில் குச்சியுடன் நின்றார்.

குச்சயால் அடிக்காத குறைதான் அனைவரையும் விரட்டிகொண்டிருந்தார். சந்துருவும் சுவேதாவும் மூச்சு வாங்க ஓடிவந்து ஒருவரை ஒருவர் பார்த்து சிரித்தனர்.

"சரி போலாம்டி" என்றான்

"ம்ம் சரடா" என கிளம்பினர்.

அப்போது கால் இல்லாத ஒரு பெண் சில பாசிகளால் செய்யப்பட்ட செயின்களை விற்றுகொண்டிருந்தாள்.

"பாப்பா நீங்க ஸ்கூலுக்கு போகலையா?!" என கேட்டான்.

"இல்லனனே என் பாட்டி தம்பி நான் மட்டும்தான் இருக்கோம் பாட்டிக்கு உடம்பு சரியில்லை தம்பி பள்ளிக்கூடத்துல மதியம் சாப்பாடு வாங்கி பாட்டிக்கு குடுத்துடுவான். நான் பத்து பாசியாவது வித்தாதாண்ண நைட்டு சோறு" என்றாள் அந்த காலில்லாத சிறுமி.

அவளை பார்த்தும் சுவேதாவின் கண்ணில் நீர் நிறைந்திருந்தது. சந்துருவின் தோளில் சாய்ந்து கொண்டாள்.

"அன்னே அன்னிக்கு ஒன்னு வாங்கிகோங்கண்ணே " என கெஞ்சினாள்.

"ஏய் நீ ஃபில் பன்னாத சுவேதா" என முதுகில் தட்டிக்கொடுத்து விட்டு "ஒன்னு எவ்வளவு பாப்பா" என்றான்.

"ஒன்னு பத்து ருபான்னே" என்றாள். தன் பையினை பார்த்தான். அதில் ஒரு ஐநூறு ரூபாயும் நூறு ரூபாயும் மட்டுமே இருந்தது.

"சரி இரண்டு குடு பாப்பா" என இரண்டு பாசிகளை வாங்கி ஒன்றை சுவேதாவின் கையில் கொடுத்துவிட்டு மற்றொன்றை அவளது கழுத்தில் மாட்டிவிட்டான். அது வெள்ளை நிறத்தில் அழகாக சிரித்தது சுவேதாவின் கழுத்தில். அந்த புடவையில் கிரீடம் வைத்தது போல அவ்வளவு அழகாக இருந்தது.

"அக்கா அழகா இருக்கீங்க " என கண்ணாடியை எடுத்துகாட்டினாள் அந்த சிறுமி.சுவேதாவின் கண்களை அவளாலேயே நம்பமுடியவில்லை. வைரமும் தங்கமும் கால் தூசியென இருந்த சுவேதாவை இந்த பாசி முற்றிலும் மாற்றியிருந்தது. மொத்தமாக மாறியிருந்தாள்.

கண்ணில் கண்ணீருடன் அந்த சிறுமியின் நெற்றியில் முத்தமிட்டாள். "ரொம்ப தாங்கஸ்டா குட்டி."

சந்துரு சுவேதாவை பார்த்து சிரித்துகொண்டே தன்னிடமிருந்த ஐநூறு ரூபாயை எடுத்து கொடுத்தான் .

"அண்ணே சில்லரை இல்லன்னே" என்றாள். "பாட்டியின் டாக்டர்கிட்ட கூட்டிட்டு போடா" என சந்துருவும் சுவேதாவும் அங்கிருந்து நகர்ந்தனர்.

"ஏய் பானிபூரி சாப்புடுறியாடி"

"அப்புடினா?!"

"வா வாங்கி தாரேன்" என்று அழைத்துச்செல்ல வடக்கிலிருந்து வந்த பையன் போல சூடான சூப்புகள் ஆவி பறக்க முன்னால் பல சிறிய அப்பல பொறிகளை வைத்துகொண்டு வித்தைகாட்டி கொண்டிருந்தான்.

ச்நதுருவை பார்த்ததும் "தோ பிளேட்?" என்றான். சந்துரு தலையாட்டவே அடுத்த நொடி இரண்டு மசால் பூரி வநுது சேர்ந்தது.

அதை ஒரு மாதிரி பார்த்தாள் சுவேதா. "என்னடி பாக்குற சாப்பிட்டு பாரு" என்றான். அவளும் அந்த பிளாஸ்டிக் ஸ்பூனில் ஒரு வாய் எடுத்து வைக்க சுவையில் மெய் மறந்தாள்.

எந்த அளவுக்கு என்றால் "சந்துரு இன்னொரு பிளேட் வாஙகுடா" என கெஞ்சினாள். அதை வாங்கிகொடுத்துவிட்டு சந்துரு நூறு ரூபாயை கொடுக்க மீதம் நாற்பது ரூபாய் இருந்தது.

தன் பையினை தடவிபார்த்தான். அந்த வங்கி அட்டை கடலால் நனைக்கபட்டிருந்தது. மீதம் உள்ளே சில்லறையாக ஒரு நாற்பது ரூபாய் கிடைத்தது.

'ஆட்டோல போகனும்னா நூறு ரூபாய் ஆகுமே இவளை நடக்கவைக்ககூடாதே' என மனம் திண்டாடியது. அந்த வேதனையை அவன் உணர்ந்தான். ஏழ்மை காதலர்கள் என்ன செய்வார்கள் என யோசித்தான்

அதற்குள் சுவேதா வரவே "போகலாமா" என சிரித்தான்.

"நீ இங்கேயே நில்லு" என அவளை நிற்க வைத்துவிட்டு ஆட்டோ ஸ்டான்டை நோக்கி நடந்தான். சிறிதுநேரம் வாக்குவாதம் நடந்தது. அவனது பிஸின்ஸ் விசயமாக கூட யாரிடமும் இந்த அளவுக்கு நேரம் பேசியது இல்லை. இறுதியாக ஒரு ஆட்டோவை வரவைத்து விட்டான். சுவேதா அதில் ஏறிகொண்டு சந்துருவின் தோளில் சாய்ந்துகொண்டு அந்த பாசியை கைகளால் தடவி ரசித்தாள் ஆட்டோவில் இருந்து முன் கண்ணாடி வழியாக.

சன்முகம் எழுந்திருக்கவே முனியம்மா கையில் காஃபியுடன் வந்தார். காஃபியை வாங்கியவர் "சந்துரு எழுந்துட்டானாமா?!" என்றார்.

"தம்பி அப்போவே எழுந்து வெளியே போயிடுச்சு அண்ணே"

சிறிது யோசிவர் "சரிம்மா நீ போ " என கூறிவிட்டு காபியை கீழே வைத்தார். பின் மெதுவாக படியில் ஏறி சந்துருவின் அறைக்கு சென்றாள்.

அங்கு காவேரியின் புகைப்படம் பெரியதாக மாட்டப்பட்டிருந்தது. அதை பார்க்கும்போது மனம் சற்று கனத்தது. "நீ இருந்திருந்தா அன்பரசி நமக்கு மறுமகளா வர்ரத நினைச்சு எவ்வளவு சந்தோஸ பட்டுருப்ப" என கண்கள் கலங்கினார்.

பின் சந்துருவின் கட்டிலில் அமர்தார். அதில் மேஜைவிளக்கின் பக்கத்தில் சிறுவயது அன்பரசியின் புகைப்படம் இருந்தது. "இன்னும் கொஞ்ச நாள்ல மாலையும் கழுத்துமா போட்டோ இங்க இருக்கபோகுது" என மனதில் நினைக்கும்போது அவருக்கு ஆனந்தும் பீறிட்டது.

சிறுதுநேம் சிந்தித்து விட்டு அறையிலிருந்து வெளியே வந்தார். எதிரில் சந்துரு நின்றிருந்தான்.

"அப்பா" என்றான்.

சனமுகம் அவனை பார்க்கவே "உன் அம்மா உன்ன தூங்கும்போது பாத்து ரசிச்சுகிட்டே இருப்பா அவ நியாபகம் வந்துச்சு அதான் நீ தூங்குறியானு பாக்க வந்தேன்" என கண்கள் கலங்க கூறினார். அவருக்கு சந்துரு தூங்கும்போது காவேரி அருகில் அமர்ந்திருப்பாள் என்ற ஆசை.

"இல்லப்பா எனக்கு தூக்கம் வரல அதான் வெளிய போயிட்டு வந்தேன்" எனும்போது சந்துருவின் கைபேசி கூப்பிட்டது.

"அப்பா நீங்க கீழ இருங்க நான் வந்துடுறேன்" என அவன் உள்ளே நுழைய சன்முகம் கீழே இறங்கிசென்றார்.

ஃபோனில் அமெரிக்க நண்பன்தான் "டேய் மூனுநாள்ள புராசஸ் பன்ன சொன்னியே உன் பாஸ்போர்ட் நம்பர் சொன்னியாடா நான் எவ்வளவு நேரம் உனக்கு ஃபோன் பன்றது" என திட்டினான்.

"இருடா சொல்றேன் என டிராயரை இழுத்தான்" அதில் அந்த புத்தகம் இல்லை. "நான் உனக்கு கால் பன்றேன் டா " என வைத்தான் சந்துரு.

அடுத்த டிராயரையும் திறந்தான் ஏமாற்றமே கண்களை மூடிக்கொண்டு "அப்பா" என கூறினான்.

## அத்தியாயம் - 34

அயல்நாட்டு நுழைவுசீட்டினான பாஸ்போர்ட் அவன் வைத்த இடத்தில் இல்லை. நிச்சயமாக தெரியும் அப்பாதான் அதை எடுத்துள்ளார்.

வேகமாக படியிலிருந்து கீழே இறங்கினான். சன்முகமோ ஹாலில் சோபாவில் அமர்ந்திருந்தார். அவர் எதிரில் இருந்த மேஜையில் சந்துருவின் பாஸ்போர்ட் இருந்தது.

"அப்பா!" என்றான்.

சன்முகம் மெதுவாக நிமிர்ந்துபார்த்தார்.

"பாஸ்போர்ட்..!" என இழுத்தான்.

லேசாக நிமர்ந்து ஒரு ஏமாற்ற பார்வையுடன் சிரித்தவர் "எம்பா பூனை கண்ண மூடிருச்சுனா உலகமே இருண்டுருமாப்பா?!" என்றார் சன்முகம்.

"என்னப்பா சொல்றீங்க" என்றான் அமைதியான குரலில்.

"நீ ஏர்போர்ல உன் பிரண்ட்கிட்ட பேசுனத நான் கேட்டேன்ப்பா! ஏன் இந்த கல்யாணத்துல உனக்கு விருப்பமில்லையா?"

"அப்படி இல்லப்பா இன்னும் கொஞ்சநாள் கழிச்சு பன்னிக்கலாம்னு..."

"அன்பரசிய உனக்கு பிடிக்கலையா இல்ல கிராமத்து பொண்ணு உனக்கு லைஃப் பார்ட்னரா வர்ரது இஷ்ட் இல்லையா" என்றார் சந்துரு எதுவும் பேசாமல் அமைதியாக நின்றான்.

அவனது அமைதியை சம்மதம் என எடுத்தார் தான்கேட்ட கேள்விக்கு அந்த நொடி சன்முகத்தின் கண்ணில் விரிந்தது அந்த காட்சிகள்.

கைக்குழந்தையாக சந்துரு இருக்க பார்வதி பிரசவத்திற்காக மருத்துவமனையில் சேர்த்திருந்தார். போஸ் பதட்டத்துடன் வெளியில் அமர்ந்திருக்க இருவரும் போஸின் அருகில் சென்றனர்.

"டேய் எதுவும் பிரச்சனை இல்லையே?!" என்றார் சன்முகம்.
"இல்லடா எந்த பிரட்சனையும் இல்ல சுகபிரசவம்தான் அதான் அவ கஷ்டபடுறத என்னால தாங்க முடியலடா அதான் மனசு ஒரு மாதிரி இருக்கு" என்று இரும்பு மனிதனின் இதயத்தில் இருந்த ஈரம் வெளிப்பட்டது. காவேரி போஸை பார்த்து "பயப்படாதீங்க அன்னே அன்னிக்கு எதுவும் ஆகாது" என ஆறுதல் கூறவே கையிலிருந்த சந்துருவும் போஸை ஏக்கமாக பார்த்தான். அவனது பார்வை போஸின் மனதில் சிறிது நம்பிக்கை அளித்தது.

சிறிதுநேரத்தில் பார்வதியின் குரல் கேட்கவே போஸின் கண்ணில் கண்ணீரே வந்துவிட்டது. அதை பார்க்க முடியாமல் சன்முகம் வேதனைப்பட்டார். காவேரியோ இருவருக்கும் ஆறுதல் சொல்லமுடியாம்ல முகத்தை சுருக்கிகொண்டு இருந்தாள்.

அன்பரசி குறும்புகாரிதான் பிறக்கும்போதே பார்வதியை படாதபாடு படுத்திவிட்டாள். பார்வதியின் அலறல் சத்ததுடன் புதிதாக ஒருகுரலும் கேட்க அன்பரசி உதித்த நாள் அன்று. அவளது அழுகையை கேட்டதும் சந்துருவும் கோரஸ் பாட ஆரம்பித்துவிட்டான்.

"குழந்தைய பட்டினாயா இருக்கான்போல காவேரி" என்றார் சன்முகம். உடனே காவேரி தனித்துசென்றாள். போஸும் சன்முகமும் அந்த பிரசவ அறையின் வெளியே நிற்க வந்தார் டாக்டர்.

"தம்பி மகாலட்சுமி பொறந்துருக்கா இரண்டுபேரும் நல்லாதான் இருக்காங்க என்ன பார்வதிதான் கொஞ்சம் கஷ்டபட்டுட்டா அதான் ரொம்ப களைப்பா இருக்கா கொஞ்சம் ரெஸ்ட் எடுக்கட்டும். குழந்தைய சிஸ்டர் எடுத்துட்டு போயிருக்காங்க இன்னும் ஒரு மணிநேரம் வெயிட்பன்னுங்களேன் " என்றார் மருத்துவர் ஆம் அவர் போஸின் தூரத்து சொந்த சகோதரி அதனால்தான் உரிமையாய் சொல்லிவிட்டு சென்றார்.

சிறிதுநேரத்தில் காவேரி தன் மகனின் பசியை அமர்த்திவிட்டு வந்து சன்முகத்தின் தோளில் கை வைக்க "ஒரு மணிநேரம் வெயிட் பன்ன சொல்லிருக்காங்க காவேரி" என்றதும் அமைதியானாள்.

சிறிதுநேரத்தில் ஒருமணிநேரம் வந்தாலும் மூவருக்கும் அது ஒரு யுகம் அந்த யுகம் முடியவே கட்டவிழ்த்துவிட்ட குதிரைபோல மூவரும் உள்ளே நுழைந்தனர். பார்வதி போஸை பார்த்து சிரித்தார்.

"அன்னி அழாகா இருக்கா உங்களமாதிரியே" என காவேரி குழந்தையின்முன் மன்டியிட்டாள். அவளை தூக்க ஆசையாக இருந்தது ஆனாலும் மாரியம்மாள் பேசிய வார்த்தைகள் கண்ணுக்குள் வந்து நிற்கவே ஜாதியின் அடிப்படையில் விலகி மண்டியிட்டபடி அமர்ந்தாள்.

ஆனால் சந்துரு கைகளை நீட்டி அன்பரசியை தொட்டு பார்த்துவிட்டான். அவளோ தூங்கிக்கொண்டிருந்தாள்.

"உங்களமாதிரியே அன்புக்கே அரசியா இருப்பா அன்னி" என் காவேரி கூறினாள்.

பார்வதி காவேரியின் தயக்கத்தை உணர்ந்தாள். "அன்னி அப்போ அன்பரசினே வச்சிடலாம்" என பெயர்சூட்டபட்டது. "சரி உங்க மருமகளுக்கு பேர்வசசாமட்டும் போதுமா பேர் வச்சவங்க ஒரு முத்தம் கொடுங்க" என காவேரியின் ஏக்கத்தை விரட்டினாள். சன்முகமோ தன் மகனை வாங்கிகொண்டு "சும்மா தூக்கு இவளும் உன் குழந்தைதான்" என கூறவே போஸ் "தூக்குமா தங்கச்சி அண்ணன் குழந்தைய தூக்குறதுல உனக்கு என்ன தயக்கம்?" என அனைவரும் அனைகட்டவே கைகளை ஆவலாக கொண்டு சென்றாள்.

அப்பொழுது கதவு திடீரென திறக்கபடவே காவேரி விலகி நின்றாள். காவேரியை முறைத்து கொண்டே உள்ளே நுழைந்தார் மாரியம்மாள். அவரை பார்த்ததும் காவேரிக்கு பயம் தொற்றிகொள்ளவே விலகி நின்றாள்.

"ஏன்டா உன் நான் ஒருத்தி இருக்குறதே உனக்கு தெரியலைல அப்போ நான் செத்தா போயிட்டேன்" என பொரிந்து எடுத்தார்.

சன்முகம் எதுவும் கூறாமல் அமைதியாக நின்றார். அப்போது காவேரிக்கு பயத்தில் முகம் மாறியது எங்கே தன்னை மீண்டும் எதாவது சொல்லிவிடுவார்களோ என்று அதை காவேரியின் காதலன் உணர்ந்தார்.

"டேய் சரிடா நாங்க இன்னொரு நாள் வாரோம் மில்லுல ஒர்க் அப்புடியே இருக்குடா!" என்றார் தன் நண்பனின் காதில் சன்முகம்.

"டேய் இருடா என்ன அதுக்குள்ள கிளம்புற" என்றார் போஸ்.

"நீ வேனா போடா தங்கச்சி இங்க இருக்கட்டும்" என்றார் கோபமாக.

"அவளுக்குதான்டா வேலை இருக்கு சொன்னா புரிஞ்சுக்கோடா" என சன்முகம் ஏதேதோ பேச இறுதியில் அரை மனதுடன் அனுமதித்தார் போஸ். காவேரியோ அன்பரசியை தொடக்கூட முடியவில்லையே என்ற ஏக்கத்துடன் கிளம்பினாள்.

போகும் வழியெல்லாம் அன்பரசியின் புராணம்தான் "ஏங்க அழகா இருக்கால அன்பரசி"

"ம்ம்"

"அன்னி என்ன சொன்னாங்கனு கவனிச்சீங்களா!"

"என்ன சொன்னாங்க"

"என்னோட மருமகனு சொன்னாங்கல்ல?!" என சிரித்தாள் சன்முக்ததை பார்த்து.

"ஆமா அவ உனக்கு மருமகதானே கரெக்டாதான் சொல்லியிருக்காங்க"

"நம்ம பையனுக்கு தருவாங்களா அன்னி எவ்வளவு பாசமா இருக்ககாங்க நம்ம மேல அதுமாதிரி அன்பரசிய பாத்துகலாம்ங்க" என ஆசையாக கூறினாள்.

"அதுக்கு என்ன போஸாகிட்ட இப்போவே பேசிடுவோம் முடியாதுனு சொல்லிடுவானா அவன்"

இப்போது காவேரியின் முகத்தில் கவலை குடிகொண்டது. "ஏங்க நான் அந்த ஜாதில இல்லாம இருந்திருந்தா அன்பரசிய தொட்டுருக்கலாம்ல?!" என்று கண்ணின் ஓரத்தில் கண்ணீர் இருந்தது.

"நம்ம பையனுக்கு அனபரசியதான் கல்யாணம் பன்னனும் அதுக்கு நான்தான் தடைன்னா நான் வேனா செத்துடட்டுமா?!" என்று அழுதாள்.

அந்த தருணம் சன்முகத்தின் மனத்திரையில் ஒடவே சந்துருவின் மௌனமும் அவரை வாட்டவே கண்ணில் நீர் வந்தும் அடக்கிகொண்டார்.

"சொல்லுடா அன்பரசிய உனக்கு பிடிக்கலையா?!" என்று குரலில் அழுத்தம் இல்லை.

"அதில்லப்பா.." என சந்துரு கூறும்முன்னே "இங்க பாரு இந்த வீட்டுக்கு அன்பரசி வரனும் அதுதான் எனக்கு முக்கியம் கல்யாணம் பன்னிட்டு அவளை இந்த வீட்டுக்கு அரசியாக்கிட்டு நீ எங்கவேணா போய்க்கோ எனக்கு பிரச்சனையில்லை" என காவேரியின் ஆசையை நிறைவேற்ற தீர்மானித்தார்.

"இல்லப்பா அன்புக்கு.." என சந்துரு கூறும் முன் காவேரியின் புகைப்படம் ஒன்றை எடுத்து அந்த பாஸ்போர்ட்டின் மீது வைத்து "அன்பு இங்க வந்து வாழனும் அதுதான் உங்க அம்மாவோட விருப்பம் அதுல உனக்கு மாற்று கருத்து இருந்தா உங்க அம்மாவோட போட்டோவ கிழிச்சு போட்டுட்டு பாஸ்போர்ட்ட எடுத்துட்டு போ" என்று தன் அறைக்குள் சென்றுவிட்டார்.

சந்துருவுக்கோ என்ன செய்வது என்றே தெரியவில்லை தன் அன்னையின் கண்களை பார்த்தான். அந்த சிரிப்பு இவனுக்கு அழுகையை வரவழைத்தது. அமைதியாக தன் அறைக்கு சென்றான். உள்ளே சென்று ஃபோனை எடுத்தவன் "டேய் நான் சந்துருடா"

"சொல்லுடா பாஸ்போர்ட் நம்பர் சீக்கிரம் சொல்லு"

"இல்லடா நான் அமெரிக்கா வரலைடா"

"ஏன்டா என்ன ஆச்சு"

"இல்லடா எங்க அம்மாகூடதான் எனக்கு வாழ குடுத்துவைக்கல எங்க அம்மாவுக்கு பிடிச்ச பொண்ணையே கல்யானம் பன்னிக்க போறேன்"

"ஹேய் என்னடா பேசற நீ அடுத்தவங்களுக்காக எப்புடி தான் வாழுறாங்களோ உங்க நாட்டுல" என்று ஃபோனை வைத்தான்.

தொடுதிரையை மனதில் இருந்த குழப்பத்துடன் தொட்டுபார்க்கும் போதுதான் கவனித்தான். அதில் அரிசி 8 missed call என இருந்தது.

"அன்பு போகலாமா?!" என்று போஸ் கேட்க மூவரும் பள்ளியில் தகவல் தெரிவிக்க ஆயத்தமாக கிளம்பினர்.

"போகலாம்பா!" சஞ்சீவை பார்க்கப்போகும் ஆவலில் அன்பரசி.

"கொஞ்சம் இருங்க இந்த பின் குத்திட்டு வந்துடுறேன்" இது பார்வதி.

"கால்யண பொண்ணே வந்துட்டா இவ இன்னும் சீவிசிங்கரிச்சுட்டு இருக்கா ஏன்டி நான் உன்ன பொண்ணு பாக்க வந்தமாதிரி நீ என்ன என்னை மாப்பிள்ளை பாக்கவா போற சீக்கிரம் வாடி" என காலில் சக்கரம் கட்டி நின்றார்.

சிறிதுநேரத்தில் மூவரும் ஒரு ஆட்டோவில் ஏறி கிளம்பினர். அங்கு சென்று தலைமை ஆசிரியரிடம் சென்றனர்.

"வணக்கம் அம்மா" என போஸ் முன்னாடி நின்றார். "ம்ம் போஸ் வாங்க என்ன விசேஷம்" என்றார் அப்போது பின்னாலயே தட்டில் சில பழங்களும் இனிபுபுகளும் வைத்துகொண்டு நின்றார் பார்வதி. பார்வதியின் பின்னால் ஒளிந்திருந்தாள் அன்பரசி.

"அன்புக்கு கல்யாணம் பிக்ஸ் பன்னிருக்கோம் நீங்க கன்டிப்பா வரனும்" என போஸ் கூறவே மனோரமாவோ "ஏய் புதுபொண்ணு இங்க வாங்க" என்றார்.

அன்பரசி வழக்கமான மரியாதையுடன் வந்து நிற்க "புதுபொண்ணாதும் வெட்கம் வந்துடும்மா" என பார்வதியை பார்த்தார். பார்வதியும் சிரித்துகொண்டே நின்றார்.

பின் தன் பையிலிருந்து விபூதியை எடுத்தவர் தனக்கு பிடித்ததெய்வமான மதுரை மீனாட்சி அம்மனை வணங்கிவிட்டு அன்பரசியின் நெற்றியில் வைத்துவிட்டு தன் பையிலிருந்து ஒரு புது பேனாவையும் ஒரு புத்தகத்தையும் கொடுத்தார். அதை அன்பரசி வாங்கிகொண்டாள்.

பார்வதி அந்த தட்டினை மனோரமா முன் வைக்க அங்கு நுழைந்தார் டீச்சர் இந்திரா. "என்ன அன்பு புது செயின் கலக்குறியே தங்கமா?!" என தடவி பார்த்தாள் சுவேதா கொடுத்த அந்த சங்கிலியை.

"அன்பு இப்போ கல்யாண பொன்னுமா" என மனோரமா கிண்டல் செய்ய "அப்புடியா காங்கராட்ஸ் அன்பு" என அன்பின் தோளில் செல்லமாக தட்டினாள் இந்திரா.

பின் "ட்ரீட் இருக்கா அன்பரசிமேடம்" என கூற "கல்யாணத்துக்கு வாங்க டீச்சர் விருந்தே வைக்குறோம்" என போஸ் சிரித்தார்.

"கன்டிப்பா வந்துடுறேன் சார் என் தங்கச்சி கல்யானமல்ல நான் இல்லாம எப்புடி" என்றாள் இந்திரா. அனைவரும் சிரிக்க "மேம் நான் கிளாஸ்ல சொல்லிட்டு வந்துடுறேன்" என மெதுவாக வாய் திறந்தாள் அன்பரசி அப்போதானே சஞ்சீவை பார்க்க முடியும்.

"ஆமா மேடம் நானும் போயிட்டு வந்துடுறேன்" என இந்திராவும் அன்பும் அந்த வகுப்பை நோக்கி படையெடுத்தனர்.

அங்கே காலையிலிருந்து வராத தங்கள் அன்பு தேவதை வந்ததும் அனைவரும் கூச்சலிட்டனர்.

"ஏய் எருமைங்களா அமைதியா இருங்கடா ஏய் சஞ்சீவ் நீ உன் இடத்துல உட்காரவே மாட்டியா?! ஏய் ராஜேஷ் நீ ஏன் கீர்த்தி கூட பேசிக்கிட்டு இருக்க" என திட்டிதீர்த்தார் இந்திரா.

ஒரு வழியாக வகுப்பு அமைதியடைய "ஏய் எல்லாரும் கேட்டுகோங்க உங்க டீச்சருக்கு அடுத்தவாரம் கல்யாணம் இனி வரமாட்டாங்க" என கூற அனைவரின் முகத்திலும் இருந்த சிரிப்பு காணாமல் போனது.

"என்னடா அமைதி ஆகிட்டீங்க உங்க டீச்சருக்கு விஷ் பன்னுங்க டா" என்றாள் இந்திரா.

முகத்தில் சோகமாக "ஹாப்பி பர்த்டே டீச்சர்" என்றனர் கோரஷாக.

இந்திரா சிரித்துகொண்டே "இதுகளுக்கு இந்த ஹாப்பிபர்த்டே விட்டா எதுவுமே தெரியாது. ஏய் ஹாப்பி மேரிட் லைஃப்னு சொல்லுங்கடா" என்றார்.

முன்னர் இருந்த சத்தமும் குறைந்திருந்தது இந்தமுறை வாழ்த்தில்.

பின் சில அறிவுரைகளை கூறிவிட்டு "நான் போயிட்டு வாரேன் பசங்களா சமத்தா இருக்கனும் சரியா" என சோகமாக கிளம்பினாள் அன்பு.

அப்போது வெளியில் ஓடி வந்தான் சஞ்சீவ். "டீச்சர் இனி நீங்க வரமாட்டீங்களா?" என்றான் சோகமாக. அது என்ன விட்டு போறியா அன்பு என ஜெனி கேட்பதைபோல இருந்தது.

அவனது உயரத்திற்கு ஏற்ப மண்டியிட்டு அமர்ந்தாள். "ஆமா சஞ்சீவ்! நீ சமத்தா இருக்கனும் எப்பவும் போல பர்ஸ்ட் ரேங்க் எடுக்கனும் யாருகூடயும் சண்டைபோடாத சரியா" என்றாள்.

"சரிங்க டீச்சர் " என அழுதான். அவனை கட்டி அனைத்துகொண்டாள்.

பின் அவன் சோகமாக "நான் கிளாஸ்க்கு போறேன் நீங்கதான் என்ன விட்டுட்டு போறீங்கள்ள" என திரும்பி சோகமாக நடக்கதுவங்கினான். அன்பரசியோ மண்டியிட்டபடியே என்ன செய்வது என்று தெரியாமல் அமர்ந்திருந்தாள்.

"ஏய் அன்பு சின்னபுள்ளையாட்டம் என்னடி இது" என இந்திரா தூங்கிவிட்டார்.

அந்த நேரம் போஸும் பார்வதியும் தலைமை ஆசிரியரிடம் விடைபெற்று வெளியே வந்தனர். "சரி அன்பு போகலாம் நாங்க வர்ரோம்மா" என இந்திராவிற்கு கூறினார்.

"சரிங்க அப்பா கல்யாணத்துல ட்ரீட்" என்றாள்

"கன்டிப்பாமா" என மூவரும் நடந்தனர்.

இறுதியாக வீட்டை அடைய அன்பரசியோ அனைவரையும் பிரியபோகும் ஏக்கத்துடனும் அந்த ரோட்டில் குலுங்கி குலுங்கி பயனித்ததாலும் சோர்வுடன் இருந்தாள்.

தன் அறையில் சென்று அமர அவளது கைபேசி ஒலித்தது. அது சந்துரு தான்.

"ஹலோ அன்பரசி?!" என்றது எதிர்முனை.

"ம்ம்" என்றாள்.

"நான் சந்துரு"

அன்பரசியின் மனதில் பட்டாம்பூச்சிகள் பறந்தன. "சொல்லுங்க" என்றாள் மெதுவான குரலில்.

"இல்ல மிஸ்ட் கால் பன்னிருந்தீங்க?!" என்றான். "அன்பு; உன்னதான்; உனக்கு; மேடம்(நக்கலாக)" என்று கூப்பிட்டவன் இப்போது வாங்க போங்கன்னு கூப்பிடுவது அவளது இதயத்தில் உறுத்தியது.

"இல்ல நீங்க என்கிட்ட பேசனும்னு சொன்னீங்கல்ல அதான் ஃபோன் பன்னேன்"

என்றாள்

.

சந்துருவின் நினைவில் "ஏய் சந்துரு போச்சுடா நீ அம்மாகிட்ட அடிவாங்க போற" ;" உன் வயித்துல மரம் முளைக்கும் டா" என்று உரிமையோடு கிண்டல் செய்த அரிசியை தேடினான் அந்த குரலில்.

"நான் ஒன்னு கேட்கலாமா நீங்க தப்பா எடுத்துகலைனா?" என்றான்.

'டேய் நான் உன் அம்மா மாதிரிடா என்கிட்ட என்னடா தயக்கம்' என்று திட்டவேண்டும் என்று தோன்றியது. ஆனாலும் "ம்ம் சொல்லுங்க" என்று முடித்தாள்.

"நீங்க யாரையாவது காதல்..!" என தெரியாமல் கேட்டுவிட்டார் சந்துரு. ஆணாகளின் இயல்பான குணம் அது மனதில் எதையும் குழப்பாமல் கேட்டுவிடுவார்கள்.

எதிர்புறமோ அன்பரசியின் இதயம் பலமாக அடித்து கொண்டிருந்தது. செயற்கை கோள்களோ அவள் அடுத்துகூறபோகும் வார்த்தையை எண்ணி வானில் மிதந்துகொண்டிருந்தன.

"ஆமாங்க ரெண்டு பேர்" என்றாள்.

அனபரசியின் இந்த பதிலை சந்துருவால் தாங்கிக்கொள்ள முடியவில்லை. "என்ன?!" என்று மீண்டும் உறுதி செய்ய ஏதோ தொலைதொடர்பில் குறை இருப்பதை போல கேட்டான்.

"ஆமாங்க இரண்டுபேர லவ் பன்னேன்" என்றாள். சந்துரு அமைதியாக இருக்கவே "அமைதியாகிட்டீங்க அதுல ஒருத்தருக்க கல்யாணம் ஆகிடுச்சு" என ராஜேஷை கூறிவிட்டு. "இப்பையும் ஒருத்தர லவ் பன்றேன்" என கூறியவளின் மனதில் 'டேய் அது நீதான்டா ஏன்டா மரமண்டை' என உள்ளிருந்த அரிசி கத்திகொண்டிருந்தாள்.

"என்ன லவ் பன்றீங்களா அப்போ இந்த கல்யாணத்துல உங்களுக்கு விருப்பம் இல்லையா?" என்றான் சந்துரு.

*உள்ளே சந்துரு சந்துரு என்று கீச்சிட்டுகொண்டிருந்த அரிசியினை அறிவியல் ஆசிரியர் பிரம்பால் அடித்து அமைதியாக்கியதுபோல துவண்டு அமைதியானாள். அதிலும் சந்துரு அடுத்து கூறபோகும் வார்த்தை உள்ளே இருக்கும் அரிசியின் இதயத்தில் கத்தியை இறக்கபோகிறது என்று அறியாத மடந்தைபெண் இதயம் படபடக்க ஃபோனை காதில் வைத்திருந்தாள்.*

*"நானும் ஒரு பொண்ண லவ் பன்றேங்க அவள மறந்துட்டு உங்ககூட வாழமுடியாது"*

## *அத்தியாயம்* - 35

*சுகு தனக்குள் ஒளிந்திருந்த கணினி திறமையால் இனையத்தில் சலித்தெடுத்துகொண்டிருந்தான் அந்த மர்ம பெண்ணை.*

*அன்பரசிக்கோ அந்த காரின் வழியே சைகை செய்த நியிபகமும் ஜெனியின் மரணமும் கண்ணில் வந்து சென்றது. அந்த கையில் இருந்தது ஓர் மோதிரம் அது அன்பரசியின் கண்ணில் வந்தது. நிச்சயம் அது ஒரு பெண்ணின் கைதான். அவளை பலிவாங்க வேண்டும் என்று அன்பரசி எண்ணியது அனைவருக்கும் ஏற்படும் ஓர் இயல்பான எண்ணம்தானே.*

சந்துருவின் மனமோ வேறுவிதமாக சென்றது. 'அவள் ஏன் எழிலை கொன்றாள்?!. இப்போது சுவேதாவின் பெயரையும் கூறுகிறாள். என் மீது கோபம் என்றால் நேரடியாக என்னை கொன்று விடலாமே. நான் அன்பு செலுத்தும் அனைவரையும் ஏன் கொள்கிறாள். இப்போது அன்பரசியும்!' என நினைவுகளும் அடைத்துகொண்டது அவனுக்கு.

அவள் யார் என அறிய தன் மூளைக்குள் பின்னோக்கி சென்று பார்த்தான். அன்று சுவேதா சந்துருவிடம் கேட்டாள். "சந்துரு உங்க அம்மாவ ஒருத்தன் அடிச்சு கொண்ணா நீ என்ன பன்னுவ?!"

அதற்கு சந்துருவிடம் பதில் இல்லை. சுவேதாவோ தன் மனதில் இருக்கும் பாரத்தை சந்துருவிடம் இறக்கலாம் என நினைத்தாள் போலும்.

அவளுக்கு மூச்சு சீராக இல்லை. சந்துரு அளளுக்கு ஆறுதல் சொல்ல அவளது கையில் கை வைத்தான். அவள் அவனை நிமிர்ந்து பார்த்தாள்.

சுவேதாவின் ஏழு வயது அவளது தாய் அபிநயா அழகான பெண் நடிகையாகும் கனவுடன் பட்டினம் வந்தவர். வாய்ப்புகள் இல்லை அப்போது அவளுக்கு ஆதரவு தனசேகர் மட்டுமே. அவளுக்கு

வேண்டிய பணங்களை வாரி இறைத்தார். ஆனால் இறுதியாக அவர் கேட்டது அபநயாவின் வாழ்கையை புரட்டிபோட்டது.

"ஹலோ மேடம் உங்களுக்கு நான் எவ்வளவு செலவு பன்னிருக்கேன் தெரியுமா?!" என்ற வார்த்தை தனசேகரிடம் இருந்து வந்து விழுந்தது. அபிநயா திகைத்து நின்றாள். அது தனசேகர் மீது அபிநயாவிற்கு காதல் பூத்துகொண்டிருந்த நேரம்.

"என்னங்க சொல்றீங்க?!"

"இல்ல நான் ஏன் உனக்கு செலவு பன்றேன்னு தெரியுமா?!"

"நான் நல்ல நடிகையா ஆகனும்னுதான்"

"ஓ கங்ராட்ஸ் மேடம்"

"என்ன இன்னைக்கு ஒரு மாதிரி பேசறீங்க குடிச்சிருக்கீங்களா" என்றாள்.

"ஆமாங்க மேடம் ஆமா இந்த வீட்டோட விலை என்ன தெரியுமா?!" என்றான்.

அபி முழித்துகொண்டே நின்றாள்.

"சரி விடு நான் நேராகவே சொல்லிடுறேன் எனக்கு நீ வேணும்"

"என்னங்க பேசறீங்க போய் தூங்குங்க காலையில பேசிக்கலாம்" என அவனை சமாதானம் செய்ய முயன்றார்.

ஆனால் அந்த மதுவின் ஆட்டம் மாதுவை ஆட்கொள்ள நினைத்தது. அவன் அவளை தூக்கிகொண்டு மெத்தையில் கிடத்தினான்.

அவன் மீதிருந்த காதலால் அபிநயாவும் எதுவும் தடுக்கவில்லை. எப்படியும் கல்யானத்துக்கு பிறகு நடக்கவேண்டியதுதானே என்று விட்டுவிட்டாள்.

இரவில் விளக்கு வெளிச்சம் மிதமாக இருக்க அவன் இதயத்தில் கைவைத்து கொண்டு கேட்டாள். "ஏங்க என்ன அவ்வளவு பிடிக்குமா"

அவன் எதுவும் பேசவில்லை.

"நானும் உங்கள காதலிச்சேன் அத சொல்றதுக்கு முன்னாடியே நீங்க இப்புடி பன்னிட்டீங்க. சரி விடுங்க கல்யாணத்துக்கு அப்புறம் நடக்குறதுதான" என்றாள்.

எரிச்சலடைந்தான் அவன் "ப்ச்ச் இங்க பாரு அபி! என் பொண்டாட்டி போனவாரம் தான் செத்துபோனா"

"என்னங்க சொல்றீங்க" அபியின் இதயத்தில் ஓர் அடி.

"ஆமாடி நான்தான் கொண்ணேன்!" அபி அவன்மீதிருந்து கையை எடுத்தாள் போர்வையுடன் எழுந்து அமர்ந்தாள்.

"அப்போ என்ன ஏன் ஏமாத்துனீங்க" என்று அழுதாள்.

தனசேகர் சிரித்தான்.

"என்ன கல்யாணம் பன்னிகோங்க ப்ளீஸ்" என்று அழுதாள்.

"ஹலோ உன்ன கட்டிகிட்டு என்ன பிச்சை எடுக்க சொல்றியா என் பொண்டாட்டியோட தங்கச்சி ஒருத்தி இருக்கா அவள்தான் கல்யாணம் பன்னபோறேன். அவள் கட்டுனாதான் எனக்கு சொத்து கிடைக்கும். என் மாமனுக்கு இருந்ததே இரண்டு பொண்ணுங்கதான். மாமனையும் கொண்ணாச்சு என் பொண்டாட்டியையும் கொண்ணாச்சு இப்போ சொத்துக்கு வாரிசு அவ தங்கச்சி மட்டும்தான் அவள நான் கட்டிகிட்டா எல்லாம் ஓவர்டி. அத

விட்டுட்டு உன்ன கட்டிகிட நான் என்ன முட்டாளா?" என்று சிரித்தான்.

அபியோ அழுதுகெண்டே "அப்புறம் எங்க என்னோட வாழ்கைய அழிச்சீங்க?!" என்று அழுதாள்.

"நீ ஏன்டி அழாகா பொறந்த அது உன் தப்பு எனக்கு உன் உடம்பு வேணும் அவ்வளவுதான். நீ எனக்கு கிளி மாதிரிடி அதான் இந்த மாளிகைய உனக்கு கூண்டாக செஞ்சு உன்ன வச்சுருக்கேன். ஆமா இன்னொரு விசயம் மறந்துட்டேன் நான் சொல்லாம எவனும் உனக்கு சினிமால சான்ஸ் குடுக்க மாட்டான்டி. நீ எப்போவுமே என்னோட கிளிதான்" என கன்னத்தை கிள்ளிவிட்டு எழுந்து நடந்தான். கட்டிலில் தன் வாழ்கையை இழந்து அழதுகொண்டிருந்தாள் அபிநயா.

அவளது சிறை வாழ்கையில் அவளுக்கு சிறிது மகிழ்ச்சு அளிக்க பிறந்தாள் சுவேதா.

அபி கர்பமாக இருந்தபோது அவளை அனுபவிக்க முடியாமல் பெல்டால் தோலை உறித்துவிட்டான். ஆனாலும் தன் குழந்தைக்காக அதை பொறுத்துகொண்டாள். இறுதியாக வீட்டின் குளியலறையில் நந்தினியின் உதவியுடன் சுவேதா அவதரித்தாள்.

அந்த குழந்தையை பார்த்ததும் தான் பட்ட கஷ்டங்கள் மறைந்து கண்ணில் ஓர் மகிழ்ச்சி தெரிந்தது.

ஆனாலும் தனசேகர் அங்கு வந்தால் குழந்தை நந்தினியின் கையில்தான் இருக்கும். பள்ளி செல்லும் வயதில் சுவேதா தனி அறையிலேயே உறங்குவாள். பல கனவுகள் அவளை வாட்டி எடுக்கும். அவள் அழுதுகொண்டே போர்வையை இறுக மூடிக்கொண்டு உறங்குவாள்.

தனசேகர் வீட்டிற்கு வராத நாட்களில் அபியோ சுவேதாவின் தலையை வருடிகொடுத்து கண்ணீருடன் பார்த்துக்கொண்டிருப்பாள்.

"சுவேதா நல்லா படிச்சு வெளிநாட்டுக்கு போகனும் சரியா" இதுதான் அபியின் அறிவுறை தனசேகரின் நடத்தையால் தாய்நாட்டையே வெறுத்திருந்தாள் அபி. "போம்மா நான் உன்கூட தான் இருப்பேன்" என கட்டிகொள்வாள் சுவேதா அந்த ஏழு அகவையில் அவளை அணைத்துகொண்டு கண்ணீருடன் அழுவாள் அபி.

"அம்மா அழாத நான் ஸ்கூலுக்கு போயிட்டு வரும்போது உனக்கு சாக்லெட் வாங்கிட்டு வாரேன்" என்று கண்ணீரை தன் குழந்தை துடைக்க அப்போது முகத்தில் இருந்த சாட்டை காயத்தின் மீது கை படவே.

"ஸ்ஸ்ஸ் " என்றாள் அபி.

"என்னமா புன்னு இருக்கு" என்று பார்த்தாள்.

"அது நான் ரூம் கதவ தொறந்தேனா அப்போ கன்னத்துல இடிச்சிருச்சுடா" என்று சமாளித்தாள்.

அபியின் உதட்டை தடவியவள் "இங்கேயும் அடி பட்டுருக்குமா" என கூறினாள். பின் சுற்றிலும் பார்க்க கை முதுகு என தெரிந்த இடங்களில் எல்லாம் காயம் இருந்தது.

சுவேதா அழுதுகொண்டே "அம்மா வலிக்குதா!" என்றாள். அபியும் கண்ணீருடன் "இல்லடா அம்மாக்கு வலிக்காது" இதயத்தில் இருக்கும் வலியை விடவா அது பெரியது என நினைத்துகொண்டு கூறினாள்.

"அம்மா இதெல்லாம் எப்பமா அடிபட்டுச்சு" என சீருடை அணிந்த சிறுமியாக கேட்டாள்.

"அம்மா படியில இருந்து தவறி விழுந்துட்டேன்டா குட்டி. வேணும்னா நந்தினி அம்மாகிட்ட கேளு" என்று சிரிக்க கையில் பையுடன் நந்தினி நின்றிருந்தாள்.

"இனிமே பாத்து நடங்கம்மா!" என கூறிவிட்டு நந்தினியை பார்த்தவள் "அம்மாக்கு வலிக்கும் சித்தி ஏதாவது மருந்து இருக்கா" என்று கேட்டாள்.

நத்தினியோ சோகமாக "நான் மருந்து போட்டுவிடுறேன் நீங்க சமத்தா ஸ்கூலுக்கு போவீங்களாம்" என வழியனுப்பி வைக்க "டாடா" என மறைந்தாள் குட்டி தேவதை சுவேதா.

அவள் சென்றதும் மொத்த அழுகையும் வெளிவர நிலைகுலைந்து சரிந்தாள் அபி. நந்தினி அவளை தாங்கிபிடித்து "என்ன அக்கா இது குழந்தை முன்னாடி அழுதுகிட்டு வாங்க சாப்பிடுங்க" என்றாள்.

"இல்லமா இந்த காயம் வலிக்கும்னு அவளுக்கு தெரியுது. எப்புடி வந்துச்சுனு கேக்குறா நான் என்ன சொல்றது?!" என அழுதாள்.

"சரி விடுங்கக்கா சுவேதா முன்னாடி அழாதீங்க அவ மனசு பாதிச்சிடும்" என்று ஒரு வழியாக சமாதானம் முடிந்தது.

அன்று இரவு அந்த சம்பவம் அறங்கேறியது. சுவேதா தன் அறையில் தனிமையில் உறங்கிகொண்டிருந்தாள். அவள் கனவில் வந்தது அந்த குண்டு மிஸ் "ஏய் சுவேதா என்னடி சோகமா இருக்க நாளைக்கு வரும்போது உங்க அம்மா இல்லைனா அப்பாவ கூட்டிட்டு வா?" என்று திரும்ப திரும்ப வந்தது கூடவே அந்த டீச்சர் கையில் பிரம்பால் அடித்ததும் தோன்றி வலித்தது.

மற்ற ஆசிரியர் என்றால் நந்தினியை அழைத்துசென்று சமாளித்து விடலாம் ஆனால் இந்த குண்டு மிஸ் கிட்ட எதுவும் பன்ன முடியாது. நாளைக்கு கூட்டிட்டு போகலைனா கை சிவநதுடும். பயத்தில் எழுந்து அமர்ந்தாள். வியர்வை நெற்றியில் இருந்து வழிந்து கழுத்தை அடைந்தது.

கடிகாரமோ மணி இரண்டை காட்டியது நல்ல இருள் சூழ்ந்திருந்தது. சுவேதாவுக்கு தன் அன்னை மடியில் உறங்க வேண்டும் போல இருந்தது. மெதுவாக தன் அறை கதவை திறந்தாள். அவள் கையில் அந்த டெடிபியர் அதையும் இழுத்துக்கொண்டே மாடிமீது ஏறினாள்.

தன் தாயின் அறையை பார்த்தாள் விளக்குகள் எரிந்து கொண்டிருந்தன ஆனால் படிகள் இருளாக இருந்தது.

தன் தாய் தனக்காக விழித்திருக்கிறாள் என எண்ணி அந்த வெளிச்சத்தை நோக்கி வேகமாக முன்னேறினாள். அந்த கதவின் அருகில் நின்றாள்.

'நீ தான எங்க அம்மாவோட கன்னத்துல இடிச்ச நான் வளந்ததுக்கு அப்புறம் உன்ன எரிச்சுடுறேன் இரு' என மனதுக்குள் பேசிகொண்டே அந்த கதவை தள்ளினாள். அது பூட்டியிருந்தது.

சாவி துவாரங்களின் வழியே கண்களின் ஒளியை செலுத்தினாள். ஆனால் சுவேதாவின் கண்ணில் நீர் நிரம்பிவிட்டது.

அங்கே அபியின் உடலை விளக்கொளி ரசிக்கும்படி அவள் அந்த கட்டிலில் கட்டிவைக்கபட்டிருந்தாள். உதட்டில் காலையில் இருந்த இடத்தில் இருந்து ரத்தம் வடிந்து கொண்டிருந்தது. சிகையோ கலைக்கபட்டிருந்தது.

வெளியில் சுவேதா பார்த்தகாயங்களைவிட அதிக காயங்கள் இருந்தன. அருகில் தன் தந்தை கையில் சாட்டையுடன் தன் தாயை அடித்துகொண்டிருந்தான். அபி சுவேதாவை என்றுமே தனசேகரிடம் அனுப்பியது இல்லை. தூரத்தில் இருந்து பார்த்திருக்கிறாள் அவ்வளவுதான். தனசேகர் வந்தவுடன் சுவேதா தன் அறைக்கு சென்று தாழிட்டு கொள்ள வேண்டும் இதுதான் அபியின் உத்தரவு.

ஆனால் ஏன் இன்று வெளியே வந்தாளே தெரியவில்லை. அவள் பார்த்துகொண்டிருக்கும்போதே சாட்டையால் தன் தாய்க்கு அடி விழுந்தது. சுவேதாவுக்கும் அந்த வலியை உணரமுடிந்தது. கண்ணிலிருந்த நீர் கழுத்திலிருந்த வியர்வை துளிகளுடன் கலந்தது.

"ஏண்டி அந்த குட்டி பிசாசு வேணாம்னு சொன்னேன் நீ கேட்டியாடி?!" என மறுபடியும் ஒரு அடி அடித்தான்.

"இங்க பாருங்க நீங்க என்ன என்னவேணாலூம் பன்னீகோங்க சுவேதா நல்லா வாழனும் ப்ளீஸ்" என அழுதாள்.

"பாக்கலாம்டி அந்த பிசாச ரூம்குள்ளேயே நீ எத்தனை நாள்தான் ஒளிச்சு வைக்குறேன்னு. அதோட கழுத்தை திருகி நான் கடல்ல வீசுறேன்டி" என சாட்டையால் அடிக்க அது அபியின் உதட்டில் ஏற்கனவே காயம் இருந்த இடத்தில் பட்டது.

"அம்மா அம்மா.." என அழ ஆரம்பித்தாள்.

சட்டென திரும்பிய தனசேகர் கதவை திறக்க குட்டியாக இருந்த சுவேதா காலில் புகுந்து ஓடினாள்.

அங்கே கிடந்த தாயின் புடவையை எடுத்து அபியை மறைத்தாள். அடுத்து அவளது கட்டுகளை அவிழ்க்க முயன்றாள். பிஞ்சு கையால் அது முடியவில்லை.

"அம்மா வலிக்குதா" என அழுதுகொண்டே ரத்தத்தை துடைத்தாள். அதற்குள் தனசேகர் நெருங்கவே.

"சுவேதா ரூம்குள்ள ஓடுமா வெளியே வராத ஓடு" எனாறாள்.

"போம்மா நானும் உன்கூடயே இருக்கேன்" என்று அழுதாள். அந்த நொடி சாட்டை சுவேதாவின் முதுகையும் பதம்பார்த்தது. "அய்யோ அம்மா " என்று அலறினாள்.

தனசேகர் தன் ஒற்றை கையில் சுவேதாவை தூக்கினான். அவளோ அவனது கையை கடித்தாள்.

வலியில் அவன் விடவே பொத்தென விழுந்து தாயை பார்த்தாள்.

"அம்மா சொன்னா கேப்பியா மாட்டியா ஓடுடி" என்றாள். உடனே ஓடிசென்று தாழிட்டு கொண்டாள்.

அந்த டெடிபியர் மட்டும் தன் தாயின் அறையை காவல்காத்துகெண்டிருந்தது.

"ஏண்டி ஆத்தாலும் புள்ளையும் சேர்ந்து நாடகமா ஆடுறீங்க" என்ற வசனத்தை தொடர்ந்து சாட்டையின் ஓசை பலமாக சுவேதாவின் அறையை அடைந்தது.

அவள் இரவெல்லாம் உறங்காமல் அழுதுகொண்டே இருந்தாள். அவளது வாயில் வந்த வார்த்தை "அம்மாவுக்கு வலிக்கும் அம்மா அம்மா வலிக்கும் மா" என்பதை மந்திரம்போல் சொல்லிகொண்டிருந்தாள் சுவேதாவின் அறை கதவுக்கு பின்னால் இருந்து.

இரவுமுழுவதும் அந்த அடிகளின் ஓசையை கேட்டுகொண்டும் ஒருதுளிகூட கண்கள் மூடவில்லை. கடிகாரமுள்ளும் சுவேதாவை பார்த்துக்கொண்டே முன்னேறியது. காதை உண்ணிப்பாக வைத்திருந்தாள். காலை அறு மணி அளவில் கதவு திறக்கும் சத்தம் அதை தொடர்ந்து காலடி சத்தம். பிறகு கார் கிளம்பும் சத்தம்.

கதவை திறந்துகொண்டு ஓடினாள். அந்த டெடிபியர் அவளது காலில் மிதிபட்டது. கட்டிலில் இருந்து போர்வையை எடுத்து தாயை மூடினாள். பின் தன் பால்பறகளால் அந்த கயிற்றை அவிழ்த்தாள். இது நந்தினி என்றும் செய்வது. ஆனால் தன் மகள் வருவாள் என சிறிதும் எதிர்பார்க்கவில்லை.

கண்ணில் நீர் ஓட சுவேதாவை கட்டி அணைத்து முத்தமிட்டாள் அபி. அவளது ரத்தம் சுவேதாவின் கன்னத்தில் ஒட்டியது.

"அம்மாக்கு வலிக்கும் அம்மா அம்மா" மீண்டும் அதே சொல்லிகொண்டிருந்தாள்.

சந்துருவிடம் பேசும்போதும் அதே கூறினாள். "அம்மாக்கு வலிக்கும் சந்துரு அம்மா அம்மா வலிக்கும்" அவள் உடலில் வித்தியாசம் தெரிந்தது.

அவள் சுயநினைவில் இல்லை. "அம்மா அம்மா வலிக்குதாம்மா" என்றாள். அவள் கையிலிருந்த அபிநயாவின் புகைப்படம் கீழே விழுந்தது. சுவேதாவும் அந்த இருக்கையிலிருந்து கீழே விழுந்தாள். சந்துருவின் கைகளில் இருந்து விடுவிக்க பட்டாள்.

கீழே விழுந்தவளின் உடலில் உதறல் ஏற்பட்டது. சுற்றிலும் பார்த்தான் சந்துரு. அருகில் இருந்த ஒரு இரும்பு நாற்காலியை பிடிமானமாக கொடுத்தான். வலிப்பு நிற்கவில்லை.

சந்துருவின் கைபேசி பதறியது. "ஏய் சந்துரு எங்கடா இருக்க இன்னும் செஸ் பில்டிங்க்ல இருந்து வரலையா மஞ்சு சொன்னா?"

"சுகு சீக்கிரம் இங்க வாடா எமர்ஜென்சி சுவேதாவுக்கு வலிப்பு வந்துடுச்சு"

சுகுவும் மஞ்சுவும் அந்த கட்டிடத்தை நோக்கி ஓட துடங்கினார்.

## அத்தியாயம் -37

மஞ்சுவும் சுகுவும் உள்ளே ஓடி வரவே அங்கு சுவுதா துடித்துகொண்டிருந்தாள். ஒரு வழியாக போராடி அவளது வலிப்பை சரிசெய்து விட்டனர். ஆனாலும் சுவேதா மயக்கநிலையில் இருந்தார்.

"சுகு நீ போய் என் கார எடுத்துட்டு வா" என சாவியை கொடுக்க சிறிது நேரத்தில் ஓர் கார் வந்து அந்த குதிரை கட்டிடத்தின் எதிரில் நின்றது.

சுவேதாவை கைகளில் ஏந்திகொண்டு காரில் கிடத்தினான். மஞ்சு சுவேதாவுடன் பின் இருக்கையில் அமர்ந்து அவளை கைகளால் பிடித்துகொண்டாள். சுகு வாகனத்தின் சாரதியாக இருக்க சந்துரு அருகில் அமர்ந்தான்.

வேகமாக கார் சென்று கொண்டிருந்தது. "மஞ்சு ஏற்கனவே இந்த மாதிரி வலிப்பு வந்துருக்கா இவளுக்கு?!" என்றான் சந்துரு.

"ம்ம் ரொம்ப எமோஷனாலா பேசும்போது வந்துருக்கு அதுனாலதான் ட்ரக்ஸ் எடுத்துகிறா ஆனா இப்ப நேரத்துக்கு ட்ரக்ஸ் எடுக்கலைனா கூட ஃபிக்ஸ் வந்துடுது" என்று சுவேதாவை தோளில் சாய்த்துகொண்டு நெற்றியில் கைவைத்து பிடித்திருந்தாள்.

காரின் வேகம் சட்டென சுழியை அடைந்தது. மஞ்சுவின் கைகள் முன்னால் இருந்த சீட்டில் மோதின. கையில் சிறிய சிராய்ப்பும் ஏற்பட்டது. ஆனால் சுவேதா ஃஸேப்.

"ஸ்ஸ்ஸ் ஆ ஏன் இப்புடி ஓட்டுறீங்க" என்றாள்.

"ம்ஹூம் என்ன ஏன்மா சொல்ற அங்க பாரு"

முன்னால் ஒரு குடிமகன் கையில் ஒரு குச்சியை எடுத்துகொண்டு வழிமறைத்தான்.

"சைடு போட்டு ஓட்டுடா சும்மா குடிச்சுட்டு டிஸ்டர்ப் பன்னிகிட்டு இருப்பானுக" எரிச்சலானான் சந்துரு.

வாகனத்தை திருப்ப அங்கேயும் வந்து நின்றான். பொறுமை பறிபோனது சுகுவுக்கு. "டேய் எருமை மாட்டுக்கு பதிலா நீ போகவேண்டியது இருக்கும் பாத்துக்கோ"

காரின் அருகில் வந்தவன் ஒய்யாரமாக ஜன்னலில் கை வைத்தான். "ஹலோ பாஸ் இந்த பஸ் பாண்டிச்சேரி போகுமா?!" என்று கண்களை சுருக்கினான்.

"இத பாத்தா உனக்கு பஸ் மாதிரியாடா தெரியுது?!" இது சுகு.

"பொண்ணுங்களும் குடிக்க ஆரம்பிச்சுட்டீங்களா உங்ககூட பான்டிசேரி வர்ராங்க?" என்றான் உள்ளிருந்த பெண்களை பார்த்து.

சந்துரு சிரித்தான். "அவங்க உன்னவிட எக்ஸ்பீரியன்ஸ் அதிகம்டா ஒன்லி ட்ரக்ஸ்" என்றான் சுகு. மஞ்சு முறைத்து பார்த்தாள். "அவங்க அவங்க கஷ்டம் அவங்களுக்கு மட்டும்தான் தெரியும்" என்று முறைப்பது கண்ணாடி வழியே தெரிந்தது.

"சார் இது பாண்டிச்சேரி போற பஸ் இல்ல பின்னாடி மஞ்சள் கலர்ல ஒரு ரயில் வருது அதுல கேளுங்க" என பின்னால் வந்து ஆட்டோவை கோர்த்துவிட்டான்.

பின் கார் கிளம்பி ஒரு பெரிய மருத்துவமனையின் முன் நின்றது. அதற்குள் சுவேதா விழித்திருந்தாள். அவளால் சிறிது நடக்க முடிந்தது. மஞ்சுவின் மீது கைகளை போட்டு நடந்தாள். அவளது மறுகையை பிடித்து சுகுவும் உதவி செய்தான். சுவேதாவின் உடல் போதை நேரம் தவறியதால் நடுங்க துடங்கியது.

"மஞ்சு என்னால முடியலடி" சுவேதா புளம்பினாள். "கொஞ்சம் பொறுத்துகோடி" என்றாள் மஞ்சு.

டாக்டரிடம் சென்றனர். சுவேதா ஒரு அறையில் துயில்கொள்ள செய்தனர். மருத்துவர் சன்முகத்திற்கு தெரிந்தவர் அதனால் சந்துருவும் சம செல்வாக்கை பெற்றிருந்தான்.

சுவேதாவின் கையில் ஏற்கனவே தழும்புகள் இருந்த இடத்தில் மேலும் ஒரு ஊசி ஏற்றப்பட்டு உயரத்திலிருந்து நீர் குமிழிகள் சென்று கொண்டிருந்தன.

மருத்துவர் அழைக்கவே மஞ்சுவும் சந்துருவும் அவரின் அறைக்கு சென்றனர். சுகு சுவுதாவின் அருகில் அமர்ந்திருந்தான்.

"ஏன்டி உனக்கு என்னதான்டி பிரச்சனை ஏன் இப்புடி பன்ற உனக்கு எத்தனை தடவ சொல்லியிருக்கேன் உனக்காக தான்டி அந்த லோகுகூட சண்டை போட்டேன்" என உறங்கிகொண்டிருந்த சுவேதா விடம் பேசினான் சுகு.

அவளால் எதுவும் பேசமுடியாதல்லவா ஓர் பொம்மை போல உறங்கிகொண்டிருந்தாள். சுகுவின் கண்ணில் கண்ணீர் இருந்தது. "நீதானடி சொன்ன என்ன லவ்பன்றேன்னு நான் சொல்ற எதையாவது நீ இதுவரைக்கும் கேட்டுருக்கியா.! சிகரெட் குடிக்காதடா கேன்சர் வரும்னு சொன்ன ஆனா நீ ஊசிபோட்டுகிட்டு இருக்க. நான் செத்தா எப்புடி உன்னால தாங்கமுடியாதோ. அது மாதிரிதான்டி நானும் ஏன் நீ புரிஞ்சுக்க மாட்டேங்குற" என்றழுதான் சுகு.

மயக்கத்திலும் அவனது குரலை கேட்ட சுவேதாவின் கண்ணில் கண்ணீர் வரவே அதை துடைத்து விட்டு அவளையே பார்த்துகொண்டிருந்தான்.

"சந்துரு நான் சொல்றது உனக்கு புரியும்னு நினைக்குறேன்" இது டாக்டர்.

"அப்போ அந்த ட்ரக்ஸ்தான் இதுக்கு காரணம்னு சொல்றீங்களா" சந்துரு

"ஆமாம்பா சுவேதா மனசுக்குள்ள எதையோ வச்சுகிட்டு அதை யாருகிட்டயும் சொல்லமுடியாம மறக்கனும்னு நினைச்சு ட்ரக்ஸ் எடுத்துகிறா அங்கதான் பிரட்சனை அவ ரொம்ப நாளா ட்ரக்ஸ் சாப்புடுறா. இப்போ ஊசி போட்ட தடயமும் இருக்கு" என்று டாக்டர் கைகளை முறுக்கினார்.

"ஆமா சந்துரு அவ ப்ளட் சாம்பில்ல பாத்தாலே தெரியுதே அதுவுமில்லாம ஊசி போடுற அளவுக்கு அவ உடம்பு ஒத்துகுதுனா சிகரெட் மாத்திரை அது இதுன்னு கொஞ்சம் கொஞ்சமா போயிருக்கா"

மஞ்சு இறுகிய முகத்துடன் "அப்போ டாக்டர் மஞ்சுவோட லைஃப் அவ்வளவுதான?" என்றாள்.

"இல்லமா எனக்கு தெரிஞ்சு ஒரு மறுவாழ்வு மையம் இருக்கு தனஞ்செயன்னு ஒருத்தர் நடத்துராரு அவரு ஒரு காந்தியவாதி இப்போ இந்த ஹோம் நடத்துராரு நீங்க அங்க கூட்டிகிட்டு போங்க

நிறையபேர குணபடுத்திருக்காங்க இது அந்த அட்ரஸ்" என ஒரு கார்டை தேடி எடுத்தார்.

"ஒகே சார் நாங்க பாக்குறோம்" என கார்டினை எடுத்து தனது மணிபையில் வைத்தான் சந்துரு.

"ம்ம் சந்துரு ட்ரிப்ஸ் ஏறிமுடிஞ்சுதும் ஒரு ஒன் ஹவர்ல முழிச்சுடுவாங்க நீங்க கூட்டிட்டு போங்க" என்றார்.

சரி என சந்துருவும் மஞ்சுவும் சுவேதா இருக்கும் அறையின் அருகில் வந்தனர். அவர்களின் காலணி சத்தத்தை உணர்ந்த சுகு தன் கண்களை துடைத்துகொண்டு சுவேதாவின் கண்களையும் துடைத்து விட்டான். பின் எழுந்து ஜன்னலின் அருகில் சென்று நின்றான். அது தன் மனதை சிறிது நிதானம் செய்வதற்காக.

ஆனால் சுவேதாவின் கண்களில் நீர் மீண்டும் வந்ததது. மஞ்சுவோ சந்துருவிடம் கண்களாலேயே பேசினாள். அவளது கண்கள் சுகுவையும் சுவேதாவையும் இனைப்பதுபோல பார்த்தன. சந்துரு புரிந்துகொண்டான்.

அவன் நிதானமாகட்டும் என்று அமைதியாக நின்றான் சந்துரு. சிறிது நேரத்தில் திரும்பிய சுகு "என்னடா மந்திரவாதி மாதிரி திடீர்னு வந்து நிக்குறீங்க" என கிண்டல் செய்தான் தன் மனதை மறைத்தான்.

"ஆமா கேராளால நம்பூதரிகிட்ட படிச்சுட்டு வந்தேன். போடா இவனே! இப்புடி கதவ தொறந்து போட்டு இருந்தா உள்ள வராம என்ன செய்வாங்களாம்" என சந்துர முடித்தான்.

சிறிதுநேரம் மூவரும் பேசிக்கொண்டிருக்க சுவேதா கண் விழித்தாள். அந்த மேஜையில் பிரட் பால் என வைக்கபட்டிருந்தது. சுவேதா சாய்ந்து அமர்ந்தாள்.

"சரிடா டாக்டர் எட்டு மணிக்கு வரசொன்னாரு நாங்க போயிட்டு வந்துடுறோம்" என இருவரும் அவர்களை கழட்டிவிட்டு கிளம்பினர்.

"ஏய் நீ மதியமும் சாப்பிடலை ஒழுங்கா நாங்க வர்ரது குள்ள சாப்பிட்டுடு" என மஞ்சு சுவேதாவை திட்டிவிட்டு கிளம்பினாள்.

"ஏய் ஏண்டி ஒழுங்கா சாப்புட மாட்டியா" இது சுகு.

அவள் அவனை பார்த்தாள். "நல்லா தெம்பா சாப்புட்டாதானே அடுத்து அபின் அது இதுன்னு சாப்புடலாம்" என திட்டினான்.

அவள் அவனை பார்க்க முடியாமல் தலைகுணிந்து அமர்ந்தாள். அதற்குள் சந்துரு பிரட்டையும் பாலையும் எடுத்து வந்து ஊட்டிவிட்டான். அவள் எதுவுமே பேசாமல் சாப்பிட்டாள்.

"ஏன்டி என்ன இப்புடி படுத்துற உனக்கு என்னதான்டி பிரச்சனை" என்றான். அவள் அவனது கைக்குள் தன் கையை கொடுத்தாள். அவன் பற்றிகொண்டான்.

இருவரது கண்களும் ஒன்றின் அழகை ஒன்று ரசித்தன. சுவேதாவின் கண்களில் நீர் வரவே சுகுவின் கண்களும் அதை பிரதியெடுத்தன.

அவன் அவளது கண்களை துடைத்துவிட்டான் "எதாவது கேட்டா சின்னபுள்ள மாதிரி அழவேண்டியது" என்றான். அவள் அவனது கண்களை துடைத்தாள். "சரி சாப்பிடு" என ஊட்டினான்.

"இல்லடா போதும்" என்றாள்.

அவன் மார்பில் சாய்ந்து கொண்டாள். "இங்க பாரு சுவேதா நான் கஷ்டபடுவேன்னு நீ என்கிட்ட எதையோ மறைக்குற எதுனாலும் சொல்லு" என்றான்.

அவள் அவன் முகத்தை பார்த்தாள் அதில் உண்மை இருந்தது. அவள் மனதில் 'என்ன பத்தி சொல்லி யாரையும் கஷேடபடுத்த கூடாதுனுதான் போதையால கொஞ்சநேரம் மறகக் முயற்ச்சி பன்றேன் ஆனா நீ கேக்குற. யாரையுமே கஷ்டபடுத்தகூடாதுன்னும்போது உன்ன எப்புடிடா' என பார்த்தாள்.

இருவரும் அப்படியே இருக்க கதவு தட்டும் சத்தம் கேட்டது "டேய் கதவ தொற" இது சந்துரு.

கதவு மூடாமல்தான் இருந்தது. "தொறந்து தான்டா இருக்கு உள்ள வா" என்று கூறு விலகி அமர்ந்தான் கையில் ஒரு புத்தகத்தை எடுத்துக்கொண்டான்.

சுவேதாவோ அரை டம்ளர் பாலை எடுத்து கையில் வைத்துகொண்டாள்.

உள்ளே வந்த சந்துரு "சரி போகலாம்டா" என கூற நால்வரும் கிளம்பினர். மஞ்சுவும் சந்துருவும் முன்னே நடக்க வேறு வழியில்லாமல் சுகுதான் அவளை கைதாங்கலாக அழைத்து வந்தான்.

காரில், "மஞ்சு சுவேதாவோட வீடு எங்க?! ரொம்ப இருட்டாகிடுச்சு போய் விட்டுட்டு வந்துடலாம்" என்றான் சந்துரு. இந்த முறை சாரதி சந்துரு. சுகு சுவேதாவின் அருகில் இடமாற்றம் செய்யபட்டிருந்தான்.

இருவரும் ஒருவரை ஒருவர் தொடாமல் அமர்ந்திருதனர். வீடு என்ற வார்த்தையை கேட்டவுடன் "மஞ்சு வீட்டுக்கு வேணாம்டி ப்ளீஸ்" என்றாள் அவளது உடலில் நடுக்கம் இருந்தது அது காரினால் ஏற்பட்ட அதிர்வு இல்லை.

"ம்ம் சரிடி என் ரூம்க்கு போகலாம்! சந்துரு என் ரும் தெரியும்ல அங்க வண்டிய விடு" என்று வண்டி மஞ்சுவின் ருமுக்கு சென்றது.

அங்க சில தோழிகள் சுவேதாவை வரவேற்றன. சுவேதா போகும்போது ஜாக்கிரதை டி என கண்ணாலேயே சொன்னான் சுகு.

பின் இருவரும் கிளம்பி சென்றனர் தங்கள் இல்லத்திற்கு.

மறுநாள் காலை விடிய மஞ்சுவும் சுவேதாவும் மஞ்சள் நிற சுடிதார் அணிந்திருந்தனர். சுவேதா மிகவும் அழகாக இருந்தாள். அது மஞ்சுவின் சுடிதார் என்பதால் மேலும் அழகாக இருந்தது.

காலையில் ஹோம்க்கு செல்வதற்காகதான் இந்த ஏற்பாடு "என்ன சுவேதா புதுசா சுடிதார்" என்றான் சுகு அவளிடமிருந்து கண்களை விலக்க முடியாமல்.

"ஆமா இவ வேற என்ன வச்சுருக்கா?! ஒன்லி சுடிதார்தான்" இது சுவேதா.

"இதுல நீ அழகாதான இருக்க இனிமே சுடிதார்தான் சரியா" என காதல் ஆணை பிறப்பித்தான் சுகு. அது அவரகளுக்கு மட்டும்தான் தெரியும் என நினைத்திருந்தனர். அதை கவனித்த சந்துரு வும் மஞ்சுவும் ஏளன சிரிப்பு வீசினர்.

ஒருவழியாக மகாத்மா இல்லம் என பலகையிடபட்ட இடத்தை அடைந்தனர். அங்கு ஒரு சன்முகத்தின் வயதையொட்டிய ஒருவர்

வந்து "நான் தனஞ்செயன் உங்களபத்தி டாக்டர் சொன்னாருப்பா உங்க அப்பா இங்க நிறைய பொருளுதவி பன்னிருக்காங்க" என சந்துருவை பார்த்து சிரித்தார்.

தன் தந்தையை எண்ணும்போது சந்துருவுக்கு வியப்பாக இருந்தது.

"சார் இது.!" என சந்துரு கூறும்போதே "இவங்கு சுவேதா இவங்க மஞ்சுளா இவரு சுகுமார் கரெக்டா! டாக்டர் என்கிட்ட நேத்தே ஃபோன் பன்னி சொல்லிட்டாரு" அப்போது ஒரு அழகான பெண் அங்கு வந்தாள். அவளது கால்கள் ஒரு இடத்தில் நிற்காமல் நாட்டியம் ஆடியது. ஹோமில் உள்ள எல்லா முதியவர்களையும் பார்த்துகொள்கிறாள் அல்லவா அதனால் அப்படி.

"இது என் பொண்ணு எழிலரசி" என கூறும்போதே அவள் வணக்கம் வைத்தாள்.

"நல்லா பொம்மை மாதிரி அழகா இருக்கீங்கக்கா ரெண்டு பேரும்" என இரு மஞ்சள் தோழிகளையும் கூறினாள். "அண்ணா அப்பா ஏன் இப்போல்லாம் இங்க வரமாட்டேங்குறாங்க அடுத்த தடவை வரலைனா அவங்க அனுப்புற காசு ரிட்டன் பன்னிடுவேன்" என சந்துருவிடம் உரிமையாக சண்டை போட்டாள். பின்ன சன்முகம் எங்கு சென்றாலும் பாடும் புராணங்களில் சந்துருதான் பிள்ளையார் சுழி.

"அப்போ நான் வந்தா ஏத்துக்மாட்டியா தங்கச்சி" என்றான் சந்துரு பதிலுக்கு.

அனைவரும் சிரித்தனர். சந்துரு எழிலரசியை முதலில் பார்த்த நாள் அன்றுதான்.

அவளது அந்த சிறிய கண்களும் நாட்டியமாடும் கால்களும் வேடிக்கையான பேச்சும் நினைவில் சந்துருவுக்கு என்றுமே அகழாதவை

அந்த தருணத்தை அசைபோடும் போதே சந்துருவின் கைபேசி ஒலித்தது. "சொல்லுடா சுகு என்ன ஆச்சு"

"டேய் அவளோட பெயர் ஜான்சிடா அப்புறம் சேகர்னு ஒரு பேரும் காட்டுதுடா வேற ஹின்ட் இல்லடா அதுக்குள்ள என் லேப்டாப் யாரோ ஹேக் பன்னிட்டாங்கடா" என்றான்

ஒரு மூன்றாவது குரல் கேட்டது "வெல்டன் பாய்ஸ் பரவாயில்லையே சீக்கிரம் கண்டுபிடிச்சுட்டீங்களே ஆமா நான் ஜான்சி என் தம்பி சேகர். இப்போ அது முக்கியம் இல்லை இங்க உங்க ரெண்டு பேருக்கும் புடிச்ச ஒரு உயிர் இருக்கு அதுக்கு சுவேதானு பெயர். உனக்கு திருமனபரிசா அவளை பார்சல் பன்னிடுறேன் சந்துரு" என துண்டிக்கபடவே.

"ஏய் சுவேதாமேல கை பட்டது உன் தலைய எடுத்துட்டு வேண்டி"என சுகு புலம்பிகொண்டிருந்தான்.

"சுகு கோபபடாம யோசிடா" என்றான் ச்நதுரு "ம்ம் கரெக்ட்தான் மச்சி நீ வை" என இனைப்பை துண்டித்தனர்.

மறுநாள் விடியலுடன் அன்பின் வீட்டில் கல்யாணபந்தல் போடும் வேலை துவங்கியது.

## அத்தியாயம் - 38

சந்துருவுக்கு அந்த பெண்கூறிய 'சுவேதாவை பார்சல் பன்னிடலாம்' என்ற வார்த்தை அடிக்கடி கேட்டது. கூடவே எழிலரசி இறந்த காட்சியும் மாறி மாறி வந்து சென்றது. கூடவே அவள் கூறிய பெயர்களையும் நினைத்து பார்த்தான். எழில், சுவேதா, பார்வதி, அப்புறம் மாமா, அப்புறம் அப்பா, கடைசியா அன்பு.

சந்துருவுக்கு நன்றாக விளங்கியது. தன் மனதில் பாசமாக வைத்திருப்பவர்களை கொல்கிறாள். அப்படி என்றால் என்மீது தான் கோபம். இனிமேல் யாரையும் சாகவிடமாட்டேன் என சிந்தித்து கொண்டே ஃபோனை எடுத்தான்.

"சொல்லுடா சந்துரு என்ன எதுவும் பிராப்ளமா நீயும் சுகுவும் ஏதோ ரகசிய மாநாடு போட்டுறீக்கீங்களா என்ன! இங்க என்னடான்னா சுகு மந்திரிச்சுவிட்ட மாதிரி திரியுறான்" வழக்கமான கிண்டலுடன் மஞ்சு.

"நான் சொல்றத மட்டும் கேளு மஞ்சு" என் கூறியவனின் மனதில் 'நாம் எது பேசுனாலும் அவள் கேட்டுகிட்டு இருப்பா' என இனைப்பை துண்டித்தான். பின் காரை எடுத்துகொண்டு கிளம்பியவன் அருகிலிருந்த ஒரு டெலிபோன் சென்டருக்கு சென்று மீண்டும் அழைத்தான். இம்முறை தன் கைபேசிக்கு விடுப்பு வழங்கியிருந்தான்.

"டேய் என்னடா ஆச்சு உனக்கு ஏன் ஏதோ லேன்ட் லைன்ல இருந்து கூப்புடுற" சற்று பதட்டமானால் மஞ்சு.

"மஞ்சு நான் சொல்றத மட்டும் கேளு; நீங்க எல்லாரும் கார் எடுத்துட்டு அன்பரசியோட விட்டுக்கு போங்க"

"ஏண்டா அன்னா!?"

"அட யம்மா அவளுக்கு கல்யாணத்துல எல்லாருக்கும் வர்ர மாதிரி தனிமையா ஃபீல் பன்றாலாம். அவதான் சொன்னா அப்புறம் சுவேதாவும் நானும் கூட வர்ரோம் அந்த கம்பெனி கன்ஸ்ட்ரக்ஸன் ஆரம்பிக்கனும்ல" என்றான்.

"டேய் அண்ணா போதும் போதும் நம்பிட்டேன். உனக்கு அண்ணிய பாக்காம இருக்க முடியல அதான் ஏதேதோ பிட்டு போடுற நீ நடத்து"

"ஏன் உனக்கு கல்யாணம் ஆகும்போதும் பாலாஜி இப்புடிதான் பன்னானா?!"

"எங்க லவ் தெய்வீகமானது அதபத்தி பேசாதே" என சிரித்தாள்.

"ம்ம் பாத்தோம் பாத்தோம் கோயில்ல ஓடிபோய் தாலி கட்டிகிட்டத நான்தான் பாக்காமலா இருந்தேன்" என வழக்கம்போல் பேச ஆரம்பித்தான்.

"அப்போ நீயும் ஓடிபோய் கல்யாணம் பன்னிகோ அன்பு அண்ணிய. அதுல ஒரு சுவாரஸ்யம் இருக்குடா" என்று சிரித்தாள்.

"ஏண்டி ஆனா நீ கடைசி வரைக்கும் நல்ல புள்ள மாதிரியே இருந்துகிட்டு நீதாண்டி மொதல்ல ஓடிபோய் பன்னிகிட்ட"

"தாங்கயூ யுவர் ஹானர்" என்றாள்.

பக்கத்தில் இருந்திருந்தாள் தலையில் செல்லமாக ஒரு கொட்டு வாங்கியிருப்பாள். ஆனால் ஃபோனில் முடியாதல்லவா 'ஓ ஆமா

ஃபோன் ஃபோன்ல இவ்வளவே நேரம் பேசிகிட்டு இருக்கேனே' என தலையில் அடித்தவன் "உன்கூட பேசுனாலே இப்புடிதான் எதாவது சொல்லிகிட்டே இருப்ப ஒழுங்கா சீக்கிரம் கிளம்புங்க" என சந்துரு கூறும்போதே

"ஏய் சுகு சந்துரு தான் பேசுறான்" என ஃபோனை கொடுத்து ஓடிவிட்டாள்.

"சுகு நான் சொல்றத மட்டும் கேளு! நீங்க எல்லாரும் என் மாமா வீட்டுக்கு போயி கல்யாணவேலைய பாருங்க நானும் வந்துடுறேன். அங்க என் மாமாவ மீறி எதுவும் நடக்காது."

"ம்ம் சரிடா அதுவும் கரெகட்தான்"

என இனைப்பை துண்டித்தான்.

அதன்பின் நேராக சுவேதாவின் வீட்டிற்கு வண்டியை செலுத்தினான்.

"ஏய் என்னடா சர்பிரைசா இருக்கு காலங்காத்தால வந்துருக்க ஒரு ஃபோன் பன்னிருக்கலாமே! இன்னைக்கே அமெரிக்கா கிளம்பிட்டியா?!" என கேளிவிகளை அடுக்கினாள்.

நந்தினி அம்மா அங்கு வந்தார். "வாப்பா சந்துரு" எனீறு கூற சந்துருவும் பதிலுக்கு சம்பாஷனை செய்தான்.

"அம்மா சுவேதாவ அன்பரசியோட வீட்டுக்கு அனுப்புறீங்களா?!"

"ஏன்டா எதுவும் பிரச்சனையா?!" முந்தினாள் சுவேதா.

"இல்ல அவளுக்கு கொஞ்சம் தனியா ஃபீல் ஆகுதாம்" என்றான்.

"அப்போ பக்கத்துல இருக்குற காட்டுக்குள்ள பேய் ஒரு பாம்ப பிடிச்சு பார்சல் பன்னி அனுப்பு விளையிடிட்டு இருப்பாங்க" என சிரித்தாள்.

"ஏய் லூசு, அது சின்ன வயசுல பன்னதுடி" என்றான்.

"நான் தனியா போகமாட்டேன்பா" என்று விளையாடினாள். "தனியா யாரு போக சொன்னா நானும் வாரேண்" என்றான்.

"அதான பாத்தேன் என்னடா சூரியன் மேற்க உதிக்குதுனு" என்று நந்தினி அம்மாவின் தோளில் கழுத்தை வைத்துகொண்டு சிரித்தாள்.

நந்தினி அவளது கன்னங்களை தன் கைகளால் அனைத்து கொண்டு "ஏண் சுவேதா அதான் சந்துரு கேக்குறான்ல போயிட்டு வா" என்றார். பின் சம்மதம் வழங்கபடவே ஒரு வாரத்துக்கு தேவையான துணிகள் எடுத்து வைக்கபட்டன.

"என்னடி டீசர்ட் ஜீன்ஸ்னு எடுப்பீனு பாத்தா ஒரு சேலையும் சுடியுமா எடுத்து வைக்குற?!"

லேசாக வெட்கத்துடன் அவனை பார்த்தவள் "சுகுவும் வர்ரான்ல அதான்" என்றாள்.

"அது சரி! ஆமா உனக்கு யாரு சொன்னா?" என்று அதிர்ந்தான்.

"இப்பொதான் மஞ்சு ஃபோன் பன்னா எல்லாரும் கிளம்ப போறாங்களாம்" விசயத்தின் விபரீதம் புரிந்தது. சுவேதாவை காப்பாற்றதான் இவ்வளவு ஏற்பாடும். ஆனால் இந்த தோழிகள் இப்படி செய்வார்கள் என்று இவன் சிறிதும் எதிர்பார்க்கவில்லை.

சுவுதாவை உயரத்தில் இருக்கும் பூந்தொட்டிபோல் பாதுகாக்க வேண்டும் என்பது புரிந்தது. அப்போது அருகில் இருந்த நந்தினி அம்மாவை பார்த்து.

"அம்மா உங்க ஃபோன் குடுங்க என்னோடது சார்ஜ் போட்டுருக்கேன்" என்றான்.

"இந்தாப்பா " என அவர் கொடுக்க தன் மாமாவை தொடர்பு கொண்டான். நவீன யுகத்திலும் இத்தனை எண்களை நினைவில் ஆழ்த்துவது சந்துருவால்தான் முடியும்.

ஆனால் மேஜையின் மீதிருந்த ஃபோனை அன்பரசிதான் எடுத்தாள். சந்துரு என்ற பெயர் மிகுந்த ஆர்வத்துடன் அதை எடுக்க தூண்டியது.

"ஹலோ சொல்லுங்க"

ஒற்றை குரலில் கண்டுபிடித்துவிட்டான். "ம்ம் அப்பா இல்லைங்காளா?" என்றான். 'அன்புனு கூப்பிடுடா செல்லமா அரிசினாவது கூப்பிடுடா' என ஏங்கினாள்.

"இல்ல வெளியே போயிருக்காங்க"

"இல்லைங்க என்பிரன்ட்ஸ் உங்கள புரிஞ்சு இருக்க முடியலையாம். அதான் கல்யாணம் வரைக்கும் உங்க வீட்டுல தங்கிகிறேன்னு சொன்னாங்க"

"சரிங்க நான் அப்பாகிட்ட சொல்றேன்" என வாயால் கூறிவிட்டு 'இது உன் வீடுடா ஏன்டா என்கிட்ட பர்மிஷன் கேக்குற' என்று மனம் ஏங்கியது.

"இல்ல புதுமில்லுக்கு இடம் வாங்குனோம்ல அங்க கன்ஸ்ட்ரக்ஸன் ஒர்க் ஸ்டார்பன்னலாம்னு இருக்கோம் நீங்கதான் உங்க கையால..!" என இழுத்தவன் "அப்புடியே கல்யாணம் முடியுர வரைக்கும் அங்கேயே தங்கலாம்னு இருக்கோம்" என்றான்.

"ம்ம் யாரு மா?!" போஸ் வந்துவிட்டார்.

"அவங்கதான்பா உங்ககிட்ட பேசனுமாம்" என ஃபோனை கொடுத்துவிட்டு ஓடியவளின் மனதில் 'அவன் என்ன பாக்கதான் வர்ரான்' என்ற ஆசையும் பிம்பமாக வந்து சென்றது.

போஸிடம் பேசி சம்மதம் வாங்கிவிட்டான் எப்படியோ. சந்துருவின் எண்ணம் எல்லாம் அனைவரையும் ஒரு புள்ளியில் சேர்த்துவிட்டால் அந்த ஜான்சியிடம் இருந்து காப்பாற்றிவிடலாம் என்பதுதான்.

சிறிது நேரத்தில் சுவேதாவை அழைத்துகொண்டு காரில் தன் வீட்டிற்கு சென்றான். சன்முகம் சுவாதாவை பார்த்து "வாம்மா என்ன பெட்டியெல்லாம்?! ஒரு வழியா சம்மதிச்சுட்டியா?" என்றார்.

"இல்லப்பா இவளாவது சம்மதிக்குறதாவது. நான் இவ கால்லயே விழுந்து பாத்துட்டேன். இப்போ மட்டும் ஒத்துகுவாளா என்ன?" என்றான்.

"ஏன் சுவேதா என்ன பிரச்சனை உனக்கு?!" என்று திட்டினார் சன்முகம்.

"ஒன்னுமில்லை அன்கிள் சும்மாதான்" என சோகமாக தலையை கீழே குணிந்துகெண்டாள்.

அவள் முகம் வாடுவதை பார்த்தவன் "சரி விடுங்கப்பா" என கண்ணால் சைகை காட்டினான்.

அவரும் புரிந்துகொண்டு "சரி பெட்டியோட எங்க கிளம்பியாச்சு" என்றார்.

"நாங்க மட்டும் இல்லப்பா நீங்களும் வர்ரீங்க"

"எங்கடா"

"மாமாவையும் அத்தனையையும் பாக்க!"

"இல்ல அன்கிள் பொய் சொல்றான். இவன் அன்பு அன்னிய சைட் அடிக்க தான் கூப்பிடுறான்" தன் பங்கை செம்மையாக செய்தாள் சுவேதா. அவளது முதுகில் அடித்தவன். "இல்லப்பா சும்மா சொல்றா"

சன்முகத்திற்கு சிறிது புன்னகை வந்தது. அவர் மனதில் அன்பரசி இந்த வீட்டின் மகாராணி ஆகவேண்டும் அவ்வளவுதான்.

"அங்க மில் கன்ஸ்ட்ரக்ஸன் ஆரம்பிச்சுடலாம்னு இருக்கோம் கல்யானத்துக்கு முன்னாடி அடிக்கள் நாட்டிரலாம்பா"

"ம்ம் சரி சந்துரு" இது சன்முகம்.

"அன்கிள் அந்த அடிகள் யாரு நாட்ட போறான்னு தெரியுமா உங்க மருமகதான் அதான் என் அண்ணி" என்று சிரித்தாள்.

"ஏய் வாயாடி நீ வேணுமா பன்னு அன்பு ஒன்னும் சொல்லமாட்டா"

"அப்போ அப்பா பர்மிஷன் தேவையில்லை அன்னி பர்மிஷன்தான் வேணும்?!" என்று கண்களை செல்லமாக விரித்தாள்.

அவளது கேலிபேச்சுகள் சந்துருவின் முகத்தில் புது கல்யாண மாப்பிள்ளை உணர்வை ஏற்படுத்தின.

"அப்பா இவள பாருங்கப்பா" என்றான். முதல்முறையாக அடுத்தவரை பற்றி குறை கூறுகிறான் சந்துரு அதுவும் செல்லமாக.

"ஆமா சந்துரு போஸ்கிட்ட கேட்டுட்டியா?!" என்றார்.

"ம்ம் சொன்னேன்பா தாத்தாவோட கல்லுவீடுனு எதோ சொன்னாரு. என்னையும் சுகு பாலாஜிய அங்க தங்க சொன்னாரு. மத்தவங்க மாமா வீட்டாலயே இருக்க சொல்லிட்டாரு"

சந்துருவுக்கு அன்பரசி மீது ஆசை இல்லாமலா அவன் அறையில் எங்கு பார்த்தாலும் அன்பரசியின் நினைவுகளால் நிரப்பியிருந்தான். அதிலும் புளியங்காய் தினத்தின் நினைவாக அந்த சட்டையின் ஒரு கையை தன் லாக்கரில் பத்திரமாக வைத்துள்ளான் பொக்கஷமாக.

"எப்பேடா கிளம்புறோம்" ஆர்வமானாள் சுவேதா.

இன்னைக்கு கிளம்பினாள் ஆபத்துதுதான் என உணர்ந்தான் சந்துரு.

"இன்னைக்கு இங்க தங்கிக்கோ நாளைக்கு காலையில கிளம்புறோம்" என கூற "அப்போ நாளைக்கே வந்து என்ன கூப்பிட்டுருக்கலாமே" என்றாள்.

"இன்னைக்கு எனக்கு போர் அடிக்குது அதான் உன்னை கூட்டிட்டு வந்தேன்" என சிரித்தான். "போடா லூசு" என சுவேதா பெட்டியை இழுத்துகெண்டு நடந்தாள்.

அனைவரையும் தன் பாதுகாப்பு வளையத்துக்குள் சுருக்கிகெண்டது சந்துருவுக்கு சற்று அமைதி தந்தது.

"பார்வதி மாப்பிள்ளை வர்ராங்களாம் நீ போயி அப்பாவோட வீட்டு சுத்தம்பன்னி ரெடி பன்னி வை" என போஸ் கூற தன்னவன் தங்கும் இடத்தை சுத்தம் செய்ய ஆசை கெண்டு தாயுடன் கிளம்பினாள்.

"நீ எங்கடி வர்ர?" இது பார்வதி "இல்லமா அப்பா தாத்தா விட்ட சுத்தமாபன்ன சொன்னாங்கள்ள அதான் நானும்" என்றாள்.

"கல்யாணபொண்ணு ஆட்டம் போடாதடி வீட்டுலயே இரு அப்புறம் உனக்கு கால்ல முள்ளு குத்ததுனா கூட உங்க அப்பா என்ன தொலைச்சுபுடுவாரு அதுவுமில்லாம நிச்சயமான பொண்ணு வெளியே சுத்தகூடாதுடி எதாவது காத்து கறுப்பு அண்டிரும்" என்று அனுமதி மறுத்து சென்றார் பார்வதி.

அன்பரசி சோகமாக வந்து தன் அறையில் அமர்ந்தாள்.

ஓர் குரல் அவளை உற்சாக படுத்தியது. "என்னம்மா நீ போகலையா?!"

"அம்மா வேணாம்னு சொல்லிட்டாங்கப்பா"

"ஏன்?!"

"காத்து கருப்பு அடிச்சிடுமாம்" என்று கிளிப்பிள்ளை போல் ஒப்பு வைத்துவிட்டாள்.

"அந்த மேரேஜ் அட்வைஸ் சங்கத்த மொதல்ல கலைக்கனும்!." என்று புலமாபியவர். "அவ தனியா கஷ்டபடுவா நீ போயி உதவி பன்னுமா எதாதவது சொன்னா என்கிட்ட சொல்லு நான் பாத்துக்கிறேன்.ஓடுங்க போயி சந்துருவுக்கு வீடட ரெடி பன்னுங்க " என செல்லமாக கூற அன்பரசியோ கூட்டிலிருந்து வெளிப்பட்ட பட்டாம்பூச்சி ஆனந்தமாக சிறகை விரிப்பதை போல பறந்தாள் அந்த வீட்டை நோக்கி.

## அத்தியாயம் - 39

" நீ ஏண்டி வந்த " என்ற தாயிடம் தன் தந்தையிடம் வாங்கி வந்திருந்த அனுமதி கடித்ததை ஒப்பித்தாள். " மறுபடியும் உனக்கு செல்லம் குடுக்க ஆரம்பிச்சுட்டாரா அவரு! கேட்டா என் பொண்ணுக்கு நான் செல்லம் குடுப்பேன் உனக்கு என்னடி? அப்புடினு சொல்லி என்னை வேற கட்சில சேத்துவிட்டுருவீங்க அப்பாவும் மகளுமா சேந்துகிட்டு சரி வா " என ஒரு வழியாக அழைத்து சென்றார். அன்பரசியும் உள்ளே இருந்த அரிசியும் ஆடிகொண்டெ வந்தனர்.

ஊரின் நடுவில் இருந்த தாத்தாவின் வீட்டை அடைந்தனர். சிறுவயதில் இங்கு மலையுடன் சேர்ந்து ஆட்டம் போட்ட தருணங்கள் அவளால் மறக்கமுடியாதவை. அந்த நினைவுகளுடன் நின்றிருந்தாள்.

"என்னடி பறாக்கு பாத்துகிட்டு நிக்கிற போய் அம்மாசி பாட்டிகிட்ட துடைப்பம் வாங்கிட்டு வாடி " என்று அவளது கனவை கலைத்தார் பார்வதி. " அம்மா நீயே போம்மா அந்த பாட்டி நான் சின்னபுள்ளையா இருந்த்தப்போவே எனக்கு கல்யானம் பன்னி வைக்கனும்னு சொல்லும் இப்போ.! போம்மா நான் போகலை. " என்று வெட்கபட்டாள். அந்த சுட்டி பெண்களின் ஆட்டம் தாங்காமல் கூறிய கூற்று அது. அதை நினைத்து இன்று வெட்கபடும் மகளை பார்த்த பார்வதிக்கு தன் மகள் வெட்கபடுகிறாளா என்று உள்ளம் பூரித்துபோனார்.

"சரிடி இந்தா சாவி கதவ தொறந்து உள்ள போ. நான் போயி வாங்கிட்டு வந்துடுறேன்" என பார்வதி செல்ல தன் கையிலிரந்த

அந்த இரும்பு ஆதிகால கடவுச்சொல்லை பார்த்தாள். சிறுவயதில் அந்த சாவியை கொண்டு கதவுடன் மலையும் அரிசியும் செய்த நினைவுகள் ஏராளம்.

"அன்பு நீயும் மலையும் போயி அந்த ஏணி எடுத்துட்டு வாங்க;! அன்பு தாத்தா வீட்டுல போயி இத வச்சுடு குட்டி; அன்பு அங்க ஒரு போட்டோ இருக்கும் அதை எடுத்துட்டு வாங்க" என்று போஸ் கூறுமபோதெல்லாம் அவர்களுக்கு மிட்டாய் வாங்க காசு கொடுப்பது போஸின் வழக்கம். ஆனால் இந்த அடங்கா தோழிகளுக்கு இருக்கும் ஒரே பிரச்சனை அந்த பெரிய ராட்சசன் தான். வெள்ளை கருப்பு காலத்திலிருந்து இன்றுவரை தாங்கி உழைக்கவைண்டும் என்றால் அவ்வளவு வலிமை தேவைதான். நல்ல தேக்கில் கலைவண்ணத்துடன் இழைத்து அந்த கதவினை செய்திருந்தார் அரிசியின் தாத்தா.

போஸ் மறக்காமல் சாவியையும் கொடுத்து விடுவது வழக்கம். ஒருமுறை தோட்டத்து சாவி இல்லை ஆனால் பம்பு போடனுமே என்று கதவில் தீமூட்டியவர்கள்தானே இவர்கள். நல்லவேளை மாரியம்மாள் வந்ததால் கதவு தப்பித்தது. அதனால் இந்த பாரம்பரிய வீட்டின் சாவி வேலையுடன் சேர்த்தே வழங்குவது போஸின் வழக்கம்.

அந்த சாவியை திறக்கமுடியாமல் இரண்டுபேரும் அந்த கதவின் முன் பல குரளி வித்தை செய்வர். இருவரும் கயிறு கட்டி அந்த சாவியில் தொங்குவது. இல்லை என்றால் ஒருவர் தோளில் ஒருவர் ஏறிகொண்டு வாயால் கடித்து திறக்கிறேன் என்று அரிசிக்கு

சிறுவயது பல்கொட்டும் அத்தியாயம் ஆரம்பித்த கதையும் உண்டு. சாவியில் நேரடியாக தலைகீழாக தொங்கி சாவியும் துவாரத்திலிருந்து நழுவி இருவரும் கீழே விழுந்து சிராய்த்துகொண்ட சுகமான தருணங்கள் அன்பரசிக்கு சிரிப்பை வரவைத்து. கூடவே அந்த பல் இருந்த இடத்தை நாக்கால் தடவி பார்த்தாள். நல்ல வேளை புதிய பல் முளைத்துவிட்டது. அது தெரிய தலையில் டித்து கொண்டே சிரித்தவள் சாவியை எடுத்தது கதவின் இதயத்தில் புகுத்தினாள்.

நீண்ட நாளாக அன்பரசியை பார்க்காத கதவு "ஏய் சுட்டி பொண்ணு இத்தனை நாள் என்ன பாக்காம எங்க போன?! போ நான் உன்கூட சண்டை" என்பது போல் பூட்டில் துருபிடித்து அவளை திறக்க விடாமல் செய்தது.

தன் பால்கரங்கள் சிவக்கும் அளவுக்கு முயற்சி செய்து பார்த்தால் அவளால் முடியவில்லை. அம்மா திட்டுவாங்களே என்ற பயமும் தொற்றிகொள்ள விழித்தாள். மீண்டும் முயற்சி செய்து பார்த்தாள். உள்ளிருந்த அரிசியோ "ஐயோ லூசு வாயால கடிச்சு தொறடி ஏற்கனவே தொறந்துருக்கியே" என திட்டினாள்.

இந்த வாண்டு பேச்ச கேட்டா சந்துருமுன்னாடி சிரிக்க முடியாமயே போயிரும்டி என பல்லை மீண்டும் சரிபார்த்தாள்.

"என்னடி நீ இன்னுமா நின்னுகிட்டு இருக்க தொறக்கவே இல்லையா" என கையில் ஒரு துடைப்பானுடன் நின்றார் பார்வதி.

"அம்மா தொறக்க முடியலமா! தாத்தா உள்ள இருந்து சாவிய சுத்தவிடாம பிடிச்சுகிறாருனு நினைக்குறேன்" என மனதில் நினைத்ததை வெளியில் எப்படி சொன்னாள் என்று தெரியவில்லை.

"ஆமாடி என் மாமனாருதான் வந்து இங்க உட்காந்துகிட்டு இருக்குறாரு அவரு இன்னாரம் இந்த உலகத்துல மறுபடியும் பொறந்து உன் வயசுல இருப்பாரு" என சாவியை வாங்கினார்.

"இருடி வாரேன்" என சாவியை எடுத்துகெண்டு மீண்டும் எங்கோ கிளம்பினார். அன்பரசி வீட்டின் வாசலில் அமர்ந்தாள்.

சிறிது நேரத்தில் திரும்பிய பார்வதியின் கையில் ஒரு விளக்கென்னை பாட்டில் இருந்தது. பின்னர் அதை சாவியில் தடவி ஒருவழியாக திறந்தார்.

அதை பார்த்த அன்பரசி "ஏம்மா நீ ஏன் இஸ்ரோக்கு அபளே பனனகூடாது" என்றாள். அதுக்கு பார்வதி "அப்புடினா என்னமா?!" என்றாள். அதற்குமேல் எதுவும் பேசுவதற்கு இல்லை.

திடீரென தன் நாட்டுக்குள் படையெடுத்த இரண்டு பெண்களை பார்த்த உயிரினங்கள் தெரிந்து ஓடின. ஒட்டைகளும் எலிகளும் பல்லிகளும் புகுந்து விளையாடி இருந்தன. அதில் இரண்டு தேள்களும் சேரத்து கொள்ளுங்கள்.

அன்பரசி உள்ளே நுழைய பரணில் இருந்த ஒரு எலி பயத்தில் ஓட வழியில்லாமல் அன்பரசியின் தலையில் குதித்து ஓடியது.

"ஐய்யோ அம்மா எலி..." என கத்திகொண்டே தன் தாயின் பின்னால் ஓடி ஒழிந்து கொண்டாள். சாரைபாம்பை கழுத்தில் சுற்றிக்கொண்டு வந்து "அம்மா நீதான சொன்ன இந்த பாம்ப கையால உருகி விட்டா நல்லா சமையல் வரும்னு அதான் உனக்காக வைக்கோல் போர்ல இருந்து பிடிச்சுட்டு வந்தேன். நேத்தகூட ரசம் நல்லா இல்லைனு அப்பா திட்டுனாரு. நீ வைக்குற தேங்காய் சட்டினியும் வரவர சரியில்லை. இந்தா இதை பிடி" என கழுத்திலிருந்த பாம்பை தூக்கி போட பார்வதி பயந்துபோய் போஸின் பின்னால் ஒழிந்தாள்.

"ஏங்க அவள பாருங்க"

"எனக்கு தெரியாதுப்பா நீதான் சொல்லிருக்கு சமையல் நல்லா பன்னும்னா சாரைபாம்ப பிடிக்ககனும்னு இனி நீயாச்சு உன் பெண்ணாச்சு என்னை ஆள விடுங்க" என்று நழுவியதும். ஒரு வழியாக அரிசியை மிரட்டி தப்பித்தாள் பார்வதி.

அப்படி இருந்த தன் பொண்ணு ஒரு எலி மேலே குதித்தற்கே இநத துள்ளு துள்ளளுகிறாள். ஓ இதுதான் பெண்மையின் இயல்பா என சிந்தித்து கொண்டு "அது உன்ன என்னடி பன்னுச்சு சும்மா கத்திகிட்டே இருக்காத" என திட்டும்போது தன் குழந்தையின்

முகத்தில் சிறிய வாட்டம் கானவே பார்வதிக்கு சிரிப்பு வந்துவிட்டது. அதை கட்டுபடுத்திகெண்டார்.

"சரிடி இந்த இந்த ஒட்டடையெல்லாம் அடி" என்று பார்வதி கூறவே ஆயுதத்தை எடுத்துகொண்டு புறப்பட்டாள். பார்வதியோ உடைந்து கிடந்து பொருட்களை எடுத்து வைத்து குப்பையாக மாற்றிகொண்டிருந்தார்.

"அம்மா உயரமா இருக்கு எட்டமாட்டேங்குது" சிறுவயது அரிசி என்றால் நீங்களே யூகித்து கொள்ளுங்கள். "நீ எட்டற வரைக்கும் அடிடி" என்று கூறிகொண்டிருக்கும்போது இரண்டு சிறுவர்கள் ஓடி வந்தனர். அவர்கள் அந்த அம்மாசி பாட்டியின் சாயலில் இருந்தனர்.

அன்பரசியின் அருகில் வந்த அரை டவுசர் அணிந்திருந்த ஒருவன் "அத்தை குடுங்க நான் பாத்துக்கிறேன்" என்றான். தன்னை அத்தை என்று ஒருவன் அழைப்பதை அன்றுதான் பார்த்தாள். சிறிது மகிழ்ச்சியாகவே இருந்தது. இப்போதுதான் புரிந்தது பார்வதி ஏன் சந்துரு சந்துரு என்று கிடக்கிறாள் என்று அன்புக்கு.

பல பொருட்கள் நொருங்க சில சத்தங்களும் ஏற்பட்டன. மணிமுள் வேகமாக சுற்றி நின்றது. அன்பரசி வேலை தீவிரத்தில் மதிய சாப்பாட்டை மறந்தாள்(ஆமா அவள் என்னைக்குதான் சாப்பிட்டுருக்கா). அந்த முட்களின் ஓட்டத்திற்கு இனங்க பல எலிகளும் இரு தேள்கள் பல்லிகள் என சொர்கத்திர்கு பார்சல் செய்யப்பட்டன அந்த சிறுவர்களால். அதை பார்க்கும்போது

அன்பரசிக்கு சிறிது வேதனையாக இருந்தது. இருந்தாலும் சந்துருவுக்காக பொருத்து கொண்டாள்.

ஒருவழியாக பத்துமணி நேர போராட்டத்தின் பயனாக அந்த வீடு இயல்புநிலைக்கு திரும்பியது. அந்த இடைவெளியில் போஸ் மூன்று கட்டில்கள் ஏற்பாடு செய்து உள்ளே போட்டுவிட்டு கல்யாண வேலையாக சென்றுவிட்டார்.

"இதுக்கு ஒரு புது வீடே கட்டிருக்கலாம்மா" என நெற்றியை துடைத்தாள் அன்பு. அவளது சேலை வியர்வையால் ஊறிபோயிருந்தது. கூடவே முகமோ கரிபூசி இருந்தது. தலையில் முழக்க தூசி தான். உடலளவில் அரிசியாக நின்றிருந்தாள்.

பின் வீட்டிற்கு சென்று குளித்துவிட்டு உடல் அசதியால் துயில் கெண்டாள். பெரிய பெண் ஆனதுக்கு அப்புறம் அதாவது அரிசியிலிருந்து அன்பரசியானபிறகு இவ்வளவு வேலை செய்ததில்லை. எலும்புகள் வரை அந்த அசதி எதிரொலித்தது. மெத்தையில் சரிந்து உறங்கி விட்டாள். இரவு சாப்பாட்டை அரை தூக்கத்துடன் விழுங்கிவிட்டு மீண்டும் உறங்கினாள்.

மறுநாளும் விடிந்தது. வாசலில் இருந்த பந்தல்கள் அன்பரசியை சைட் அடிக்கும் சூரிய ஒளியை தடுத்தன. "இவ சந்துரவோட சொத்து" என்று கூறியிருக்கும்போல சூரியன் சோகமாக இருந்தான்.

"ஏண்டி ஒருநாள் வேலை செஞ்சதுக்கே இவ்வளவு நேரம் தூங்கிட்ட போற வீட்டுல இப்புடி தூங்கி வழியாதடி" என அசோசியேசன் மெம்பர்சிப் வேலை செய்தது.

அரை தூக்கத்தில் எழுந்தவர் "அம்மா வேண்மனா நீயும் என்கூட இலவசமா வந்துடுமா நான் தூங்குவேனாம் நீ சமையல் பன்னிடுவியாம்" என மெதுவாக கூறினாள். அவள் சந்துருவை மனதில் வைத்து சிறிது சிறிதாக அரிசியாக மாறிகொண்டிருந்தாள். இல்லை அன்பரசி என்ற முகமூடியை கழற்றி கொண்டிருந்தாள்.

"உன் அத்தை இருந்துருக்கனும்டி நல்லா வாயிலையே குத்தி வேலை வாங்குறதுக்கு" என தன் மாமியாரை நினைத்துகொண்டு கூறினாள்.

அப்போது வந்த போஸ் "ஆமா தங்கச்சி இருந்திருந்தா இவளுக்கு இன்னும் செல்லம் குடுத்திருக்கும் வேலையே செய்ய விட்டிருக்காது" என காவேரியை நினைத்து கூறி பீரோவில் இருந்து பணத்தை எடுத்தார்.

'எல்லாரும் காவேரி காவேரிங்குறாங்க அவங்களை பாக்கதான் எனக்கு குடுத்து வைக்கல' என மனதில் நினைத்தாள்.

"ஆமாங்க காவேரி இருந்தா இப்போ எவ்வளவு சந்தோஷமா இருந்துருக்கும் இனிமே பாக்கவே முடியாது" என வருந்தினார் பார்வதி அன்பரசிக்கு பூஸ்ட் கலக்கிகொண்டே. மகள் வேறு

வீட்டிற்கு செல்லும்போது தாய்களுக்கு ஏற்படும் இயல்பான பாசம் இது.

"அதான் சந்துருவ பாக்குறியே குணத்துலேயும் சரி உருவத்துலேயும் சரி அப்புடியே காவேரி தான்" என்று போஸ் கிளம்பினார். அன்பரசிக்கோ சந்துருவின் வடிவில் காவேரியை பார்க்க ஆசையாய் இருந்தது. அவன் எப்போது வருவான் என்று காத்திருந்தாள் தலையனையில் கிடந்தஅந்த டைரியுடன்.

மதுரை விமானநிலையம் சந்துரு சன்முகம் சுவேதா மூவரும் வந்திரங்க அங்கே மஞ்சு சுகு பாலாஜி இருந்தது சந்துருவை சற்று வாரியது.

சுகுவை தனியாக இழுததவன் "டேய் நான்தான் உங்கள நேத்தே போகசொன்னேனடா ஏண்டா இன்னும் போகாம இருக்கீங்க" என்று சுவேதாவின் மீது ஒரு கண் வைத்துக்கொண்டான்.

பின்னாலிருந்து ஒட்டுகேட்ட மஞ்சு "நான் சொன்னேன் அன்பு தனியா இருக்கா வாங்க போய் கம்பெனி கொடுக்கலாம்னு ஆனா இந்த சுகுதான் வரமாட்டேன்னு சொல்லிட்டான்" என்றுகூறவும் தங்களது ரகசிய மாநாடு ஏன் விமானநிலையத்தில் பொய்த்துபோகிறது என யோசித்தான் சந்துரு.

சரி யாருக்கும் எந்த பிரட்சனையும் இல்லை என்று நிம்மதி அடைந்து காரை எடுத்து கிளம்பினர்.

கார் அன்பரசியின் இல்லத்தை அடைந்தது. அனைவரையும் வரவேற்றார் பார்வதி.

அன்பரசியோ பூஸ்டை ருசித்துகொண்டிருந்துநேரம் காரும் புகுந்தது. பதட்டத்தில் அன்பரசிக்கு ஒரு பூஸ்ட் மீசை வரையபட்டது. சந்துரு சிரித்துகொண்டே பார்த்தான் அரிசியை.

"ஐய்யோ அரிசி இப்புடி பன்னிட்டீயடி" என்றுது மனது.

சிறிதுநேரம் அனைவரும் பேசிக்கொண்டிருக்க சந்துரு மட்டும் வெளியில் சென்று பந்தல் கட்டுமானத்தை வியந்து பார்த்துக்கொண்டிருந்தான்.

அப்போது அன்பரசி "அம்மா உங்கள சாப்பிட கூப்பிட்டாங்க"

"அப்போ நீங்க கூப்பிடமாட்டீங்க என்றான் சந்துரு.

## அத்தியாயம் -40

" அப்போ நீங்க கூப்பிட மாட்டீங்களா? " என்ற சந்துருவை மருட்சியாக பார்த்தாள் அன்பு. அதை புரிந்துகொண்ட சந்துரு. "இங்க ஃபோன்ல " என்பது போல சைகைகாட்டி தப்பித்தான். " நீங்க போங்க நான் பின்னாடியே வந்துடுரேன் " என அவளை அனுப்பிவிட்டு பெருமூச்சு விட்டான். ‘ டேய் சந்துரு ஜஸ்ட் எஸ்கேப்டா வாய்தாண்டா உனக்கு முதல் எதிரி’ என தனக்குள் திட்டி கொண்டிருக்க அனபரசியோ " சே அவரை நான்தான கூப்பிட்டுருக்கனும் உனக்கு அறிவே இல்லடி " என தன்னையே திட்டிகொண்டு நகர்ந்தாள்.

சந்துரு அமைதியாக உள்ளே வரவே அனைவரும் அமர்ந்திருந்தனர். அன்பும் பார்வதியும் சேர்ந்து சமையல் பாத்திரங்களை தூக்கிவவே சுவேதாவும் இணைந்துகொண்டாள். " நீ போய் உட்காருமா " என்ற பார்வதியிடம் " அன்பும் நானும் ஒன்னா சாப்பிடுறோம் ஆண்டி " என்று கூற " இல்ல நீங்க சாப்பிடுங்க நான் சாப்பிட லேட் ஆகும் "

" அப்போ நான் சாப்பிடவும் லேட் ஆகும் " இது சுவேதா.

அன்பரசி தன் தாயின் முகத்தினை பார்த்தாள் அனுமதிக்காக. அதை கவனித்த சுவேதா " ஹலோ அன்னி இப்போ நீங்க எங்க வீட்டு பொண்ணு அத்தைகிட்ட வாங்குற பர்மிசன் எல்லாம் செல்லாது " என்று கூற பார்வதி சிரித்துவிட்டார். " ஆமாம்மா முடிஞ்சா

இன்னைக்கே கூட்டிட்டுபோயிடுமா இவ தொல்லை தாங்கமுடியலை " என்ற தாயை பார்த்தாள் அன்பு.

"அதுல இருந்து உங்கள காப்பாத்ததான் நாங்க வந்துருக்கோம் ஆண்டி! எது எப்படியோ நீங்க தப்பிச்சுட்டீங்க பாவம் என் அண்ணன்தான் மாட்டிகிட்டான். " என்று இருவரும் சேர்ந்து அன்பரசியை செல்லமாக தீண்டினர். அவளோ எதுவும் பேசமுடியாமல் நின்றாள்.

" அன்பு அண்ணி நான் ரொம்ப கலாயகுறேன்னு கல்யாணத்துக்கு அப்புறம் என்னை வச்சு செஞ்சுராதீங்க. நான் சரண்டர் "

" இல்ல " என்ற அன்பரசியின் கூற்றை " சரி வாங்க சாப்பிடலாம் எதுக்கு காமெடி பன்னிகிட்டு எனக்கு வேற ரொம்ப பசிக்குது " என்று அனபரசியையும் கையோடு இழுத்துகொண்டு சென்றாள்.

சந்துரு அமர்ந்திருக்க அவனருகில் அன்பரசியை அமர வைத்துவிட்டு அவர்கள் இருவருக்கும் பரிமாற துவங்கினாள். " ஐயோ நீங்க ஏங்க இதெல்லாம் செய்றீங்க?! " என்றவளை பார்த்து "நீங்க அமைதியா சாப்புடுங்க அண்ணி! எதாவது பேசனும்னு தோனுச்சுனா உங்க பக்கத்துல சந்துருனு ஒரு ஜீவன் இருக்கு அதுகூட பேசுங்க " என்று வாயை அடைத்தாள்.

" ஆமா இவளே ஒழங்கா சாப்பிட மாட்டா இதுல அடுத்தவங்களுக்கு அட்வைஸ் பன்றா " என்ற சுகுவை 'ஏண்டா' என்பதுபோல வெட்கத்துடன் பார்த்தாள்.

சந்துருவோ அன்பு அருகில் இருந்த்தாள். எதுவும் பேசாமல் கோழி தவிட்டை விழுங்கியதுபோல விழுங்கி கொண்டிருந்தான். அந்த நேரம் வந்த பார்வதி சுவேதாவை சாப்பிட வைத்தது தனிக்கதை.

ஒரு வழியாக அனைவரின் வயிறும் நிரம்பவே பார்வதி தனியாக சமையலறையில் அமரந்து சாப்பிட துவங்கினார். " ஆண்டி! அண்டி! " என உள்ளே வந்தனர் சுவேதாவும் மஞ்சுவும்.

தனியாக அமர்ந்து சாப்பிட்ட பார்வதியை பார்த்து " அம்மா நான்தான் இருக்கேன்ல " என்று ஆத்திரமானாள். சுவேதா. அவளுக்கு தன் தாய் அபிநயா கையில் அடிபட்டிருந்த போது மிகவும் சிரம்பட்டு சாப்பிட்டார். அப்போது அழுதுகொண்டே தன் தாய்க்கு ஊட்டிவிட்டாள். அந்த பிஞ்சு. அந்த நியாபகத்தில்தான் இன்று கத்தினாள். " ஏய் சுவேதா கூல் " என்ற மஞ்சுவின் வார்த்தை அமைதியாக்கியது அவளை. அனைவரிடமும் அம்மா என்ற ஸ்தானத்தை பார்வதி எளிதில் பெற்றுவிடுகிறார்.

பின்பு பார்வதியை வலுகட்டாயமாக அழைத்துசென்று ஹாலில் அமரவைத்தவள் தானே தன் தாய்க்கு பறிமாற துவங்கினாள். அவளது சைகையை பார்த்த பார்வதி இவளுக்கும் சந்துருவைபோல

தாய் இல்லை என்பதை உணர்ந்து தன் இரணாடாவது மகளின் பாசத்தால் மகிழ்ந்தார்.

" டேய் தங்கச்சிய கூட்டிட்டு எங்கயாவது வெளிய போயிட்டு வாடா " என்று ஆரம்பித்திருந்தான் பாலாஜி.

" டேய் நீ நினைக்குற மாதிரி இது சிட்டி இல்லடா " இது சந்துரு. நண்பர்களின் உரையாடல்களுக்கு நடுவே " என்னப்பா ரகசியம் பேசுறீங்க " கம்பீரமான குரல் போஷினுடையது.

" இல்ல அன்கிள் சந்துரு அன்புகூட தனியா பேசனுமாம் " வற்றி வைத்துவிட்டான். அப்போது ஜன்னல் துவாரத்தின் வழியாக ஒழிந்து சந்துருவை ரசித்து கொண்டிருந்த ஒரு உருவம் ஓடியதை போஷ் கவனிக்க தவறவில்லை.

" அன்பு! "

" என்னப்பா " என்று ஆர்வமுடன் ஓடி வந்தாள்.

" மாப்பிள்ளையும் நீயும் பிள்ளையார் கோவில் வரைக்கும் போயிட்டு வாங்க; பூசாரி சித்தப்பா வர சொன்னாருமா " என சாதுர்யமாக இருவரையும் அனுப்பி வைத்தார்.

" சரிப்பா " என அன்பு கூறவே இருவரும் கிளம்பினர்.

இன்றைய யுகத்தில் காதலர் பேசவே

காத்துகிடக்கும் தொலைஅலை கம்பிகள்

மின்கலனும் தூங்கிவிடும் பொழுதும்

தூங்காத இரவில் விளையாடும் பேச்சுகள்

நேரில் சந்திக்க துடிக்கும் வழிகள் சந்திக்க

கிடைக்கும் வாய்ப்பில் கட்டி தவழும்

காதலர்களுக்கிடையே..........

நெஞ்சில் ஆசைகளை சுமந்து இருவரும்

அருகிருந்தும் மௌனமே மொழியாய்

இருவருள்ளும் இடைவளி விட்டு

இந்த பயனம் தொடர்ந்தது.

சந்துருவே முதலில் ஆரம்பித்தான். "ஏங்க இந்த குளத்துல தண்ணி வத்தவே வத்தாதா? நானும் சின்ன வயசுல இருந்து பாரக்குபறேன் " என்று தான் தவறி விழுந்த குளத்தினை பார்த்து கேட்டான். அவனுக்கு அந்த பயம் இன்னும் போகவில்லை.

" ஆமாங்க இப்போ தண்ணி வத்தாது " என அன்பு கூற " இந்த வாங்க போங்கன்கூப்பிடாம சந்துருனு கூப்பிடலாமே "

" இல்ல கல்யாணம் பன்ன போறவவகல பேர் சொல்லி கூப்பிடகூடாதுங்க "

" ஓ அப்பபடியாங்க சரிங்க " என்றான் சந்துரு

" ஐயோ நான் உங்களை சொல்லல நீங்க என்னை பேர் சொல்லியே கூப்பிடலாம் " என்று தன்னவன் தன்னை செல்லமாக அழைக்கமாட்டானா என்று ஏங்கினாள்.

" அப்போ உங்க நானும்தான் உங்களை கல்யானம் பன்னிக்க போறேன் அது மட்டும் ஓகேவா "

" இல்லைங்க பொண்ணுங்கதான் கூப்பிடகூடாது "

ஏய் சந்துரு இங்க வாடா அம்மாகிட்ட சொன்ன அப்புறம் உனனை ஆரமரத்துல கட்டி வச்சுடுவேன் பாத்துகோ என்று சணடையிடும் ராட்ச்சியை எதிர்பார்த்தான் சந்துரு. அவனுக்கு ஏமாற்றம்தான்.

" சரிங்க " என்று சந்துரு கூற அன்பு அவனை பார்த்தாள். " ஓகே ஓகே அன்புனே கூப்புடுறேன் சரியா " என்று சமாளித்தான்.

அவள் மௌனமாக தலைகுனிந்து சிரித்தாள் அவன் கவனிக்காதவாறு. பின் கோயிலுக்கு சென்ற இருவரும் சாமியுடன் சேர்த்து சித்தப்பாவின் அனுகிரகத்தையும் அனுபவித்து விடைபெற்றனர்.

" கொஞ்ச நேரம் உட்காரலாமா " இது சந்துரு.

இருவரும் சேர்ந்து அந்த ஆலமரத்தின் கிளைக்கு அடியில் அமர்ந்தனர். புத்தருக்கு போதிமரம்போல இவர்களின் காதல் சின்னமல்லவா அந்த ஆலமரம். ஆம் பின்ன சந்துரு தவறி விழுந்த போது மனதில் ஏற்பட்ட ஒரு வலி அரிசிக்கு மட்டுமே தெரியும். இருவரது கால்களும் நீரை தொட்டுகொண்டிருந்தன.

" அன்பு நான் ஒன்னு சொல்லவா " என தன் மனதில் என்றும் வசிப்பது நீதான் என கூற நினைத்தான். ஆனால் அவள் விழியை பார்த்ததும் அவனது தைரியம் காணமல் போனது. அவளோ உன் காதலி நான்தான் என்று கூறமாட்டாயா என ஏக்கமாக பார்த்தாள்.

அவனது வாய் உளறி உண்மையை கூறிவிட்டது. " அன்னைக்கு நான் தண்ணில எப்புடி விழுந்தேனு தெரியுமா?" அவன்கூற கண்கள் விரிய பார்த்தாள்.

"அதான் உன் பிரண்டு மலை இருக்காங்கல்ல அவங்கதான் நான் உனக்கு சாதகமா தீர்ப்பு சொன்னதால கொஞ்சம் கோவபட்டுட்டாங்க. அப்புறம்தான் தெரியுமே ஒரு மேடம் வந்து என் உயிரை காப்பாத்திட்டாங்க " என்று சந்துரு கூறியதும் உள்ளிருந்த அரிசி மலையின் மீது ஆத்திரம் கொண்டாள். இதனால் மலைக்கு தண்டனையாக அரிசி ஒரு ஏற்பாடு செய்திருந்தாள். அதை அப்புறமா சொல்றென்.

"என்னங்க சொல்றீங்க " அன்பின் ஆத்திரம் புரிந்தது சந்துருவுக்கு.

" சரி அதை விடுங்க அது பழைய கதை! இந்த குளத்த பத்தி சொல்லுங்க " என்றான். சந்துரு.

அவளது மௌனம் கலைக்கபட்டது ஊர் பெருமையை கூறபோகிறாள் அல்லவா.

"இதுக்கு எரிச்சம் பிள்ளையார் குளம்னு பேரு; இந்த பிள்ளையார் எரிச்சம் பிள்ளையார். எங்க தாத்தா சின்ன புள்ளையா இருந்தப்போ ஊர்ல மழையே இல்லையாம். ரொம்ப பஞ்சமா இருந்துச்சாம்; அதனால எல்லாரும் ஊர காலிபன்னிட்டு போகலாம்னு முடிவு பன்னிட்டாங்கலாம். "

" ஐயோ அப்புறம் என்ன ஆச்சு? "

" கொஞ்ச நாளைக்கு வெளியூர்ல போயி பஞ்சு, முளகாய், கடலை வாங்கி வியாபாரம் பன்னி புழைக்கலாம் அப்புடின்னு ஊர் பெரியவங்க சொல்லிட்டாங்கலாம். அதேமாதிரி வியாபாரம் பன்னிட்டு வந்திருக்காங்க. அப்போ ரெண்டு பேரு ஒரு ஊருக்கு வத்தல் வியாபாரம் பன்ன போயிருக்காங்க, அங்கதான் இந்த புள்ளையார பாத்தாங்கலாம். அவருக்கு கொஞ்சம் முளகாய் வச்சிட்டு போனாங்கலாம். அன்னைக்கு வியாபாரம் அருமையா நடந்திருக்கு, ஒரு மணிநேரத்துல எல்லாம் முளகாயும் வித்துபோயிடுச்சு. அப்ப அதுல ஒரத்தர் சொன்னாராம் 'டேய் இது ரொம்ப சக்தி உள்ள பிள்ளையார்டா இத நம்ம ஊருக்கு கொண்டு போயிட்ட மழை வந்துடும்னு. உடனே அந்த காலியான மிளகாய் சாக்குல பிள்ளையார போட்டு தூக்கிட்டு வந்துட்டாங்கலாம். "

" அப்போ இது திருட்டு பிள்ளையார " என சிரித்தவனை முறைத்தாள். அவளை பார்த்தும் அமைதியானான். " ரொம்ப பவர்

*உள்ள பிள்ளையாருங்க அப்புறம் கண்ண குத்திடுவாரு" என்று பயமுறுத்தினாள்.*

*" சாரிங்க அப்புறம் என்ன ஆச்சு "*

*" அப்புறம் என்ன ஐய்யோ எரியுதுடா எரியுது அப்புடின்னு பிள்ளையார் கத்திகிட்டே வந்தாராம் "*

*"ஏன்? "*

*" அதான் மிளகாய் சாக்குல இருக்காரே! உங்களை மிளகாய் சாக்குல வச்சா தெரியும் வலி " என்று சிறிது உணர்ச்சி வசபட்டாள். அந்த பிள்ளையார் மீது அன்புக்கு மிகுந்த பாசம் உள்ளது.*

*" சரி சரி கோவபடாம சொல்லுங்க " என்று வாயில் விரல் வைத்தான் சிறுகுழந்தைகள் டீச்சருக்கு முன் செய்வதைபோல பவ்யமாக.*

*அன்பரசி லேசாக சிரித்துகொண்டே தொடர்ந்தாள். " அப்புறம் என்ன அந்த புள்ளையார இந்த குளத்துல தூக்கிபோட்டுட்டு 'நீயே குளத்துல தண்ணி வரவச்சு எரிச்சலை போக்கிக்கோ' அப்புடின்னு சொல்லிட்டாங்கலாம். "*

" ம்ம் அப்புறம் " என வாயை எடுக்காமல் கூறினான்.

" அப்புறம் அந்த மாசம் சரியான மழையாம்; அது மாதிரி இந்த குளத்துல தண்ணி வத்துற மாதிரி இருந்துச்சுனா இந்த புள்ளையார் மழை பெய்ய வச்சுடுவாறு " என்று கண்கள் விரிய கூறிவளை பார்த்து அவன் அப்படி சொல்லியிருக்ககூடாது. "

" அப்போ புள்ளையார்கூட உங்களை பாத்து பயந்துதான் இருக்காரு " என்றவனை தன்னை மறந்து மென்கரங்களால் அடித்தாள். சந்துரு எதிர்பார்த்தது இதைதான். இந்த அரிசியைதான்.

பின் நிலமையை உணர்ந்து தலைகுணிந்து அமர்ந்தாள். அரிசியை இந்த மாதிரி என்றுமே சந்தோஷமாக வைத்துகொள்ள வேண்டும் என்பதுதான் அவன் விருப்பம்.

அவளது அழகையும் வெட்கத்தையும் சிறிது ரசித்தான். அவனது மனதில் இவள் இதயம் உனக்கில்லை அப்படியிருக்கும்போது அழகை மட்டும் ஏன் ரசிக்கிறாய் என்ற கேள்விகனைகளை கொடுக்கவே இதற்கு மேல் இருந்தால் அன்பு நீ யார நினைச்சுகிட்டு இருந்தாலும் பரவாயில்லை ஆனா நான் உன்னை நினைச்சுதான் வாழ்ந்தேன் வாழ்கிறேன் வாழ்வேன். என்று கூறிவிடுவான்.

அதனால் "சரி கிளம்பலாங்க" என்றான் சந்துரு.

*அவளும் மௌனமாக எழுந்து நடந்தாள் இருவரது காலடி ஈரசுவடுகளும் ஜோடி சேர்ந்தன.*

*வீட்டிற்கு சென்றதும். "ஹலோ அண்ணா ஒன்லி லேடிஸ் மட்டும்தான் இங்க அலவுட் பாய்ஸ் எல்லாருக்கும் ஊருக்குள்ள ஏதோ பேய் பங்களா இருக்காம் அங்க போங்க" இது சுவேதா.*

*"எது பேய் பங்களா வா?!" சந்துருவுக்கு பயப்படவா சொல்லிக்கொடுக்க வேண்டும்?!*

*"ஆமா நீ இங்கேயே இருந்து அண்ணிய கரெக்ட் பன்னலாம்னு பாக்குறியா!? எல்லாம் கல்யாணத்துக்கு அப்புறம் பாத்துகலாம் கிளம்பு" என்று உறுதியாக சொல்லிவிட்டாள்.*

*"சரி அத்தை எங்க?!"*

*"அவங்க சுகுவையும் பாலுவையும் கூட்டிட்டு போயிருக்காங்க"*

*"அப்போ நான் எப்புடி அங்க போறது உனக்கு வீடு தெரியுமா சுவேதா"*

*"எனக்கு தெரியாதுப்பா வேணும்னா அண்ணிய கூட்டிட்டு போ "*

அன்பரசிக்கு இன்னும் சிறிதுநேரம் சந்துருவுடன் நடப்பதில் ஒரு சுகம். அதனால் சம்மதித்து நடந்தாள். ஆனாலும் வழியில் எதுவும் பேசவில்லை.

வீடு வந்தது அனைவரும் உள்ளே அமர்ந்து பேசிகொண்டிருந்தனர். அன்பரசி அவர்கள் முன் நிற்க "உட்காருங்க " என்றான் சுகு.

"இல்லைங்க பரவாயில்லை"

தன் மகள் பெயருக்கு ஏற்றார்போல் அன்பாக இருப்பாள் என்பது தெரியும் இப்போது பணிவும் சேர்ந்து கொண்டதை எண்ணி மனம் மகிழ்ந்தார் பார்வதி.

சந்துருவோ வீட்டை சுற்றி பார்க்க சென்றான். ஒவ்வொரு அறையாக பார்த்தான். ஆனால் ஒரு அறை மட்டும் இந்த பகலிலும் மிகுந்த இருளாக காணபட்டது. உள்ளே யாரோ ஒரு பெரிய உருவம் இருப்பதாய் தோன்றியது. ஆனால் சரியாக தெரியவில்லை.

கண்களை அகல திறந்து பார்த்தான். புராணகதைகளில் வரும் பூதம் போன்ற உருவம் அது. சிறுவயதில் தன் தாய் கூறிய ஒரு கதை நியாபகம். கிராமத்துல வீட்டுல பூதம் எல்லாம் வளப்பாங்கப்பா என்று காவேரி கூறும்போது கண்கள் விரிய பார்த்திருப்பான்.

இன்று செல் போனின் விளக்கினை ஏற்றவே அந்த பூதத்தின் தலையில் அமர்ந்திருந்த இரண்டு குள்ள மனிதர்கள் சந்துருவின் மீது பாய்ந்தன.

"அம்மா பேயி...."

## அத்தியாயம்-41

சந்துரு பயந்துகொண்டு வெளியே ஓடி வந்தான். அன்பரசியின் தாத்தாவும் சிறிது காலம் மாந்திரீகம் என்று சுற்றிதிரிந்தவர்தான். அதனால் பார்வதியும் "என்னப்பா ஆச்சு " என்று உள்ளே சென்று பார்த்து சிரித்துவிட்டார்.

"அட என்னப்பா இதுக்குபபோய் பயந்துகிட்டு " என்று மேரும் சிரிக்க அனைவரும் புரியாமல் வழித்தனர். பின் சுகு உள்ளே சென்று பார்த்தான். இந்தமுறை அதிக வெளிச்சத்துடன். அங்கே ஒரு குலுக்கை இருந்தது.ஆம் கிராமபுறங்களில் அன்று இருந்த ஒரு பொருள் இது.

அனைவரும் சிரிக்க சந்துருவுக்கு மிகவும் வெட்கமாக போனது. அன்பரசிக்கோ சந்துருவை அனைவரும் கேலி செய்வதில் வருத்தம். அது அவள் முகத்தில் தெளிவாக தெரிந்தது சோகமாக இருந்தாள். அதை கவனித்த சுகு பாலாஜியின் கையை பிடித்து அழுத்தினான். நண்பர்களுக்கிடையேயான கோட்வேர்ட். உடனடியாக செயல்படவே அனைவரும் சிரிப்பை அடக்கிகொண்டனர்.

சுகு அரம்பித்தான். "என்ன சித்தி இது பெரிய பானை மாதிரி இருக்கு?" என்று அந்த அறையின் பாதி இடத்தை அடைத்துகொண்டு வீட்டின் கூறையினை முட்டும் அளவு உயர்ந்த குடுவை வடிவ பெரிய இரும்பு ராட்சசன் அது. கிழே கதவு போன்ற ஒரு திறப்பும் இருந்தது. மூவர் சேர்ந்து கட்டி அணைத்தாள்கூட கைக்குள் அடங்காது. திருமலை நாயக்கர் மஹால் தூண்களை விட பெரியதுதான். அனைவரும் அதை கண்டு வியந்து நின்றனர்.

"இதுக்கு பேரு குலுக்கைப்பா!"

"அப்புடினா சித்தி?"

"இது பழைய வீடுங்கல்ல இருக்கும்; விவசாயம் பன்னி கிடைக்குற தானியங்கல்ல நல்ல தரமான நெல், தினை, வரகு, கம்பு, சோளம் இதெல்லாம் விதைக்குன்னு இதுல்ல போட்டு வச்சிடுவாங்க. அப்புறம் ஆடி மாசம் வந்ததும் இந்த கதவ திறந்து வெளிய எடுத்து விதைக்கு தயார் பன்னுவாங்க"

*“அப்போ இது அந்த காலத்து கோல்டு ஸ்டோலேஜ்னு சொல்லுங்க” என்றான் பாலாஜி.*

*“சரி சித்தி இந்த எலிங்க இந்த விதைய நாசம் பன்னாதா?”*

*“அதுக்கு நிறைய பூனை வளப்பாங்கப்பா அதுவும் இல்லாம இவ்வளவு உயரத்துல பூனை ஏறாதுப்பா”*

*“ஓ அப்புடியா சித்தி; ஆமா நீங்க எத்தனை பூனை வளத்தீங்க?”*

*“நாங்க பூனைலாம் வளக்கலப்பா”*

*“ஏன் சித்தி?”*

*“ஒரே ஒரு குறும்பு பூனை வளத்தோம். அதுக்கு இன்னும் கொஞ்ச நாள்ள கல்யானம் ஆக போகுது; அதான் என்ன பன்றதுன்னு தெரியலை” என்றார் பார்வதி.!*

*“அது என் தங்கச்சி அன்பரசிதான சித்தி?” என்று கூற இந்த முறை சிக்கியது அன்பரசி. ஆனால் சந்துருவும் சேர்ந்து சிரித்தான். அவனது சிரிப்பை பார்த்த அன்பு வெட்கபட்டு கொண்டு தன் தாயின்*

பின்னால் மறைந்துகொண்டாள். ஆதவன் இல்லாத நேரத்தில் தலைகுணிந்துகொள்ளும் சூரியகாந்தி போல தலையும் கீழ்நோக்கி.

தன் தாய்க்கு மட்டும் கேட்கும்படி “ஏன்மா” என்றாள். அவள் முகம் சிவந்திருப்பதை பார்வதி கவனிக்காமல் இல்லை. “சரிங்க தம்பி உங்க்கூட பேசிகிட்டு இருந்தா நேரம் போறதே தெரியாது. எதுன்னா வேணும்னா அன்புக்கு ஃபோன் பன்னுங்க சரி நாங்க கிளம்புறோம்” என அவர்கள் கிளம்ப சந்துரு அவர்கள் கண்ணில் இருந்து மறையும் வரை வாலில் நின்று பார்த்தான்.

வீதியின் ஓரத்தில் செல்லும்போது அன்பு இவனை திரும்பிபார்க்க அவனோ காதில் ஃபோனை வைத்து திரும்பிகொண்டான். அவளோ இவன் முகத்தை காணமுடியாமல் ஏக்கமாக நடந்தாள்.

பின் அவள் சென்ற வழியில் அவளது சுவடை நினைவில் கண்டவன் பெருமூச்சுடன் வீட்டினுள் சென்றான். அப்போது அவன் எடுத்துகொண்ட சபதம்; இது என்ன குலிகையா? இல்லை இல்லை குலுக்கை அந்த அறை பக்கம் மட்டும் போகவே கூடாது என்பதாகும்.

அனபரசியோ வீட்டில் நுழைய அங்கே காத்துகொணாடிருந்தனர் மஞ்சுவும் சுவேதாவும்.

“என்ன அண்ணி எங்க அண்ணன சைட் அடிச்சே தேச்சுடுவீங்கபோல போனா சீக்கிரம் வரமாட்டீங்களா” என்றாள்.

“இல்லைங்க” என இழுத்துகொண்டே தன் தாயினை பார்த்தாள் அன்பு; சப்போர்ட்டுக்கு வருவார் என்று நினைத்திருப்பாள்போலும். கல்யானத்துக்கு முன் கிடைக்கும் ஒரு பெரிய சுகம் தோழிகளின் கிண்டல் பேச்சுதான். அதை இன்று நினைத்தாலும் பார்வதிக்கு வெட்கமாக இருக்கும். அதை தன் மகளும் சிறிது அனுபவிக்கட்டும் என்று “நீயாச்சு உன் பிரண்ட்ஸ் ஆச்சு என்னை ஆள விடுங்க” என்று அனபை கழற்றிவிட்டார்

“இல்லைங்க அம்மாதான் லேட் கொஞ்சம் அது வந்து” என உளறினாள்.

“ஹலோ அரிசி மேடம் என்ன வெட்கமா?” என்றாள் சுவேதா. அன்பரசியோ திடுக்கிட்டாள் உள்ளுக்குள் சிறிது மகிழ்ச்சி வேறு பூத்துகொண்டது. “என்ன அண்ணி அப்புடி பாக்குறீங்க நான் அப்புடி கூப்பிடலாமுல இல்ல அந்த சந்துரு மட்டும்தான் அப்புடி கூப்பிடனுமா?”

“அந்த பேர் எப்புடி உங்களுக்கு?” என இழுத்தாள்.

“கிழிஞ்சதுபோங்க! உங்களோட போட்டோவதான் சாமியா வச்சு கும்பிட்டுகிட்டு இருக்கான் அது மட்டுமா எப்பபாத்தாலும் உங்க

புராணத்தையே பாடிகிட்டு இருந்தா உங்க பேர் தெரியாம இருக்குமா இன்னொரு விசயம் சொல்ல மறந்துட்டேனே அவனோட ரோல் மாடலே அரிசிதான்ல கடைசில நீங்களே அவனுக்கு லைப் பார்ட்னரா வந்துட்டீங்க இனி அவன் ஆட்டம் தாங்காது" என்று கூறினாள்.

அன்பரசிக்கு தன்னவன் தன்மீது வைத்திருக்கும் மதிப்பு புரிந்தது. ஆனால் அவளுக்கு தேவை காதல் அல்லவா.

பேசிகொண்டே மூவரும் அன்பின் அறைக்குள் சென்றனர்.அந்த சிறிய அறையின் சுத்த நேர்த்தியாக அடுக்கபட்டிருந்த புத்தகங்களையும் கண்டு வியந்தாள். அதிலும் அங்க தொங்கிய மெடல்கள் கண்ணை கவர்ந்தன.

"ம்ம் ரூம் நல்லா அழகாதான் வச்சுருக்கீங்க" என்று அன்பரசியின் ரூமினை நோட்டம் விட்டாள். பின் அந்த கட்டிலில் அமர்ந்தாள் சுவேதா. அவளை அடுதது மஞ்சுவும் அமர்ந்தாள்.

"வாங்க அண்ணி உட்காருங்க சும்மா பேசலாம்" என்று அரிசியை அழைத்தாள். "இல்லைங்க இருக்கட்டும்" என்று மறுத்தாள்.

"ஐயோ அண்ணி இந்த வாங்க போங்கன்னு சும்மா! எனக்கா ஏதோ பெரிய மனுசிமாதிரி ஃபீல் ஆகுது. நான் உங்க பிரண்டுனு சொன்னீங்கள்ள அப்புறம் பிரணட்ஸ்குள்ள இப்புடியா

கூப்பிடுவாங்க?! சும்மா சுவேதான்னே கூப்பிடுங்க" என்று சிறிது கோபமாதான் பேசினாள்.

"சரிங்க" என்றாள். "மறுபடியும் பார்டா" என்று முறைத்தாள் சுவேதா. அன்பரசியோ அமைதியாகவே இருந்தாள்.

"சரி அப்போ அரிசிய பாக்க முடியாது விடுங்க! ம்ம் அது என்ன கம்பும் மெடலும் குவிஞ்சிருக்கு பெரிய அத்தலெட்டா?"

அவள் அப்புடி கூறியதும் அருகிலிருந்த மஞ்சு "அய்யோ சுவேதா இந்த மெடலுக்குதான் நானும் அன்பும் சண்டை போட்டோம்" என்றதும் மற்ற இருவரும் விழித்தனர்.

"அப்போ அன்பு என்னை நியாபகமே இல்லையா உங்களுக்கு" -இது மஞ்சு.

அன்பரசியோ இல்லை என்பதை போல பார்த்தாள். "அட போங்கப்பா ராணிய குடுக்குற மாதிரி குடுத்துட்டு ரெண்டு யானைய வச்சு என் ராஜாவை ரவுண்டு கட்டுனீங்களே மதுரை ஓப்பன் சேலஞ்ச் டோரனமன்டு ஃபைனல்" என்று நினைவுபடுத்திபார்த்தாள்.

"சாரிங்க எனக்கு நியாபகம் இல்லை அன்னைக்கு நான் வேற ஒரு நியாபகத்துல இருந்தேன். ஆக்சுவலா அன்னைக்கு எனக்கு

விளையாட இன்டரெஸ்டே இல்லை. என் பிரண்டு ஜெனி தான் என்னை போர்ஸ் பன்னா அதான் விளையுடுனேன்" என்று முடித்தாள்.

மஞ்சுவுக்கு தூக்கிவாரிப்போட்டது. முழுகவனமும் இல்லாமலே ஜெயிக்க முடியுமா என்று நினைத்தவள். "ஆமா நீங்க ஜெயிச்சதும் ஒரு பொண்ணு வந்து கட்டி புடிச்சாங்களே அவங்கதான் ஜெனியா!?"

“ம்ம் அவதான்” அன்பின் குரலில் சிரத்தை இல்லை.

“நல்ல பிரண்டுதான்; ஆமா அவங்க என்ன பனாறாங்க? கல்யானம் ஆகிடுச்சா அவங்களுக்கு”

“அவ இறந்துட்டா” குரலில் வேதனை தெரிந்தது.

சுதாரித்தாள் மஞ்சு. “சரி விடுங்க இப்போ நாம ஒரு மேட்ஜ் ஆடலாமா?” என்று திசை மாற்றினாள். “அம்மா தாயே ஆரம்பிச்சுட்டியா உன் ஆனந்த் மூளைய; நீங்க விளையாடுங்க நமக்கும் இதுக்கும் செட் ஆகாது” நகர்ந்தாள் சுவேதா. “அம்மா அம்மா” என்று கிளம்பினாள் பாரவதியை தேடிகொண்டு.

இங்கு மஞ்சு ஒருவழியாக அனபரசியை அமர வைத்து விளையாட்டை துவங்கினாள். “சந்துருகூட பெரிய பிளேயர் தெரியுமா” என்று தன் குருவின் பெருமையைபாட ஆரம்பித்தாள் மஞ்சு. அன்பரசிக்கு லேசாக சிரிப்பு வந்தது. அன்று அவன் தோற்றதை நினைத்திருப்பாள்போலும்.

“ஏங்க சிரிக்குறீங்க அவன் ஸ்டேட் லெவல்ல ப்ரைஷ் வாங்கிருக்கான்” என்று மஞ்சு சொன்னதும் அன்பிற்கு திக்கென்று ஆனது. “என்னங்க சொல்றீங்க “ என்று கேட்டுவிட்டாள்.

“ஆமா அன்னைக்கு அவன் போட்டிக்கு வந்திருந்தா இந்த கப் அவன் வீட்டுல இருந்திருக்கும் இப்போ ஒன்னும் கெட்டு போகலை இப்போவும் அங்கதான வரபோகுது” என்று சிரித்தாள்.

தான் வெற்றி பெற வேண்டும் என விட்டு கொடுத்திருக்கிறான் பொறுக்கி என மனதினுள்ளிருந்த அரிசி அவனை செல்லமாக திட்டினாள். “ஓலைபட்டாசு ஓலைபட்டாசு” என லேசாக முனங்கினாள்.

பின் இருவரும் விளையாட துவங்கினர். அன்பரசியின் வேகம் சிறிதும் குறையவில்லை. அதை மஞ்சு நன்றாப உணர்ந்தாள். “இதுக்கெல்லாம் சந்துருதான் சரியா வருவான்னு நினைக்குறேன்” என பத்தாவது முறையாக தோற்று எழுந்தாள் மஞ்சுளா.

“நீங்க நல்லாதானே விளையாடுறீங்க ஆனா கொஞ்சம் கவனமா இருந்தா கரெக்டா இருக்கும்” என்று மஞ்சுவினிடம் சிறிது திணறிய அரிசி கூறவே “அப்பாடா ஒரு வழியா பேசிட்டீங்க; சரி எனக்கு கொஞ்சம் தலை வலிக்குது” என்றாள் மஞ்சு.

“இருங்க நான் டீ எடுத்துட்டு வாரேன்” என்று எழுந்தாள். “இல்ல நான் கொஞ்ச நேரம் தூங்கனா சரியா வரும்” என்று சென்றாள்.

“இந்த அரிசி” என கையில் ஒரு கின்னத்துடன் வந்தாள் சுவேதா. “இது என்னங்க”

“இந்த வாங்க போங்கனு கூப்பிட்டா நான் ஊருக்கு கிளம்பி போயிடுவேன்” என்று மீண்டும் கோபமடைந்தாள். “சாரி சுவேதா ஓகேவா” என்றாள் அரிசி. சுவேதாவும் சிரித்துகொண்டே “ஏதோ புட்டுனு அம்மா சொன்னாங்க” என்று நீட்டினாள்.

“அம்மாவா?” அனபரசயின் மனதில் அப்போ இவள் சந்துருவ சும்மாதான் அண்ணா அப்புடின்னு கூப்பிடுறாளா என்ற எண்ணம்.

“ஆமா அரிசி அவங்கள பாத்தா எனக்கு எங்க அம்மா நியாபகம் வருது. நான் ஒன்னுகேட்டா தப்பா எடுத்துக்கமாட்டீங்களே” என்று அனுமதி கேட்டாள்.

நீ சந்துருவை தவிர எது கேட்டாலும் சரி என நினைத்துகொண்டு "நான் ஒன்னும் நினைக்க மாட்டேன் சொல்லுங்க" என்றாள் அன்பு.

"இல்ல நான் எங்க அம்மாகூட ரொம்ப நாள் வாழ கொடுத்துவைக்கல அதான் எங்க அம்மாவ எங்க வீட்டுக்கு கூட்டிட்டு போயிடவா அப்பாவையும் சேர்த்து. நான் நல்லா பாத்துப்பேன் அன்பு ப்ளீஸ்" எனும்போது கண்ணில் அடமழை பெய்ய காத்திருந்தது.

சுவேதாவின் மூச்சு சீராக இல்லை. "சுவேதா என்னங்க ஆச்சு" என்று பதறினாள் அன்பு. அந்த நேரம் மஞ்சுவும் எதர்ச்சையாக வந்தாள். சுவேதாவை பார்த்ததும் ஓடி சென்று தலையை பிடித்தாள். சுவேதாவின் உடலில் உதறள் துவங்கியது. கட்டிலில் துடிக்க ஆரம்பித்தாள். வீட்டிலிருந்த அனைவரும் வரவே அன்பரசி சுவேதாவின் காலகளை தேய்த்தவிட்டாள். பார்வதி வந்து கைகளை தேய்த்துவிடவே மஞ்சு தலை ஆடாமல் பிடித்துகொண்டாள்.

ஒரு வழியாக சுவேதா கண்முழிக்க சுகு சோகமாக எதிரில் நின்றான். சந்துருவோ "மாத்திரை போடலையாடி லூசு" என்று திட்டினான். பார்வதியோ தன் கையில் மாரியம்மன் திருநீறு என எடுத்து வரவே. "அம்மா எனக்கு சாமின்னா பிடிக்காது" என்று தடுத்தாள். "நீ சும்மா இரும்மா நல்ல சக்தியுள்ள சாமிமா இன்னையோட நீ நல்லா ஆகிடுவ அம்மா சொல்றேன்ல கேளு." என்று அதட்ட அவரது அனபில் சாமியையும் விரும்பினாள்.

பின் அனைவரும் வெளியே சென்றனர். அன்பும் மஞ்சுவும் மட்டும் காவலுக்கு இருக்க. “மஞ்சு நான் அன்புகூட தனியா பேசனும்” என்றாள். சுவேதாவின் கண்ணில் நீண்ட நாளாக பூட்டி வைத்திருந்த விஷயத்தை அரிசியிடம் கூற வேண்டும்போல இருந்தது. அதை தாங்கும் சக்தி அந்த குறும்பு பெண் அரிசிக்குதான் உள்ளது என்று நினைத்தாள் போலும். மஞ்சுவும் அதை புரிந்துகொண்டு ‘இன்னைக்காவது உன் மனசுல இருக்குறத சொல்லுடி’ என்பதுபோல எழுந்துசென்றாள். சுவேதா மயக்கமாக இருக்கும்போது சுகு புழம்பியது அன்பரசிக்கு நினைவுக்கு வந்தது. “ஏண்டி மனசுக்குள்ள எதையோ வச்சுகிட்டு கஷ்டபடுற” என வாய் திறந்து அழுதுவிட்டான். பின் சந்துருதான் அவனை சமாதானம் செய்தான்.

அப்போ சுவேதா மனசுக்குள்ள ஏதோ வச்சுகிட்டு இருக்குறதாலதான் வலிப்பு வருது. அதை சொல்லிடாங்கனா கொஞ்சம் கொஞ்சமா சரியாகிடுவாங்க என நினைத்தவள்.

“சுவேதா உங்களுக்கு என்ன பிரட்சனை?” என அன்பரசி கேட்கவும் “ஒரு தீபம் எறிய எத்தனை தீக்குச்சி எரியனும் அன்பு?” என சுவேதா கேட்கவும் ஒரே நேரம் எடுத்துகொண்டது.

இருவரும் சிறிதுநேரம் அமைதியாக இருந்தனர்.

## அத்தியாயம் - 42

கையில் அந்த சிறிய கோப்பை இடம் பிடித்திருக்கவே தன் அன்னையிடம் ஓடி வந்தாள் சுவேதா. தன்னை நினைத்து தன் தாய் பெருமைபடுவார் என சுவேதா ஓடி வந்தாள். அது அவள் எட்டாம் வகுப்பின் துவக்க தருணம் தான் ஒரு முழு பெண்ணாக மாறி இரண்டு மாதங்களே ஆகியிருந்தன. அந்த தருணத்தில் அபிநயாவின் ஆசை எல்லாம் தன் மகளுக்கு சடங்குகள் நடத்தி அவவை அழகு பார்க்க வேண்டும் என்பது மட்டுமே. ஆனாலும் அதற்கு கொடுத்துவைக்கவில்லை.

“அம்மா வயிறு வலிக்குதும்மா” என்று துடித்தாள் மகள். அபிக்கோ தன் மகளை நினைத்து மகிழ்ச்சி. நந்தினி வந்து சுவேதாவினை அழைத்தாள். ஆனால் அது சரியான தருனமாக இல்லை.ஆம் அப்போது தனசேகர் வருகையும் சரியாக நிகழ்ந்தது. அபி பயந்துகொண்டே “நந்தினி சுவேதாவ ரூம்குள்ள கூட்டிட்டு போயிடு” என்றாள். நநதினியும் அவளை ரூமில் வைத்து அடைத்தாள்.

சுவேதாவோ நந்தினியின் “குட்டிமா நான் வரர வரைக்கும் சத்தம் போடாம இந்த கதவுகிட்டயே இருக்கனும். அம்மா வந்து மத்த ஏற்பாடு பன்றேன் சரியா சத்தம் போடாம் இருடா செல்லம். வயிறு ரொம்ப வலிச்சதுன்னா பொறுத்துகோடா அம்மா சீக்கிரம் வந்துடுவேன் சரியா” என்று செல்ல சுவேதாவோ வலியால்

துடித்தாள். ஆனாலும் அந்த குப்பை தொட்டியின் அருகிலேயே அமர்ந்திருந்தாள். அவளது ரத்தமே அவளை பயமுறுத்தியது. மிகவும் கலைப்பாகவேறு இருந்தாள்.

அபியை தன் தந்தை திட்டுவதும் அடிப்பதும் காதில் ஒலித்துகொண்டே இருந்தது. வலியும் அதிகமாகவே இருந்தது சுவேதாவுக்கு நந்தினியின் வார்த்தையால் பல்லை கடித்துகொண்டு பொருத்துகொண்டாள். உடுத்தியிருந்த துணிகள் கறை படிந்தன. ஆனால் தனசேகர் இரண்டு நாட்களாக அங்கேயே அமர்ந்துகொண்டு அபியை துன்புறுத்தி கொண்டிருந்தான். ஆனாலும் அபிக்கு தன் மகளின் வலியை நினைக்கும்போது இந்த வலி பெரிதாக இல்லை. தனசேகரின் அன்றைய செயல்கள் மது மற்றும் சாட்டைஎனவே இருந்தன தொழிலில் ஏற்பட்ட நஷ்டத்தை இங்கே காண்பித்துகொண்டிருந்தான். அவன் கண் அசந்த நேரத்தில் நந்தினியால் ஒரு பிரட் பாக்கெட்டை மட்டுமே சுவேதாவின் அறைக்கு அனுப்ப முடிந்தது.

சுவேதாவுக்கு இது பழக்கமான ஒன்றுதான். ஆனால் இந்த வலியும் ரத்தமும் புதிதாக இருந்தது. இரண்டு நாட்களிலலும் பிரட்டை மட்டும் சாப்பிட்டாள். அவளது இந்தமாற்றத்தால் வயிறு அதிகமாக பசித்தது. ஆனாலும் வாய் திறந்து கேட்க முடியவில்லை. பல்லை கடித்துகொண்டு நத்தை கூட்டில் சுருண்டுகொள்வது போல சுருண்டு படுத்திருந்தாள். மூன்றாவது நாள் தனசேகர் கிளம்பவே இரு தாய்களும் தன் மகள் அறைக்கு ஓடினர். அங்கே சுவேதா மயக்கமாக கிடந்தாள். அவளது நிலையை பார்த்த அபி அவளே கட்டி அனைத்துகொண்டு “ஏன்டி என் வயித்துல வந்து பொறந்து கஷ்டபடுற” என்று அழுதாள். சுவேதாவோ அரைமயக்கததில்

“அம்மா பசிக்குதும்மா” என்று முனுமுனுத்தாள். இரண்டு தாய்களும் கண் கலங்கி நின்றனர்.

நந்தினி வேகமாக ஓடிசென்று பழரசம் எடுத்துவந்து சுவேதாவினை தோளில் சாய்த்துகொண்டு ஊட்டினார். அதை குடிக்ககூட தெம்பில்லாமல் பாதி முகத்தில் வடிந்தது. முடிந்தவரை விழுங்கினாள். பின் சிறிது தெளிச்சியாகவே நந்தினி அவளை அழைத்துசென்று மஞ்சள் பூசி குளிக்கவைத்தார். பின் ஒரு பட்டு புடவையை எடுத்து கட்டிவிட்டார் அழகுசிலையாக இருந்தாள் சுவேதா. அவளை பார்க்கும்போது அபியின் கண்கள் கலங்கின.

“என் செல்லம்!” என தன் மகளுக்கு முத்தம் வைத்தவர் கைகளை முகத்துக்கு அருகில் வைத்து நெட்டிமுறித்தார் (கண்ணுபட்டுருமாம்). சுவேதாவிற்கு என்ன நடக்கிறது என்று புரியவில்லை. அதன்பின் நந்தினி சுவேதாவை அவள் அறைக்கு அழைத்துசென்று சிறிதுநேரம் பேசவே சற்று புரிந்தாள். “அம்மா பசங்களுக்கெல்லாம் இப்புடி வராதா” என்று கேட்க நந்தினி சிரித்துகொண்டே “குட்டிமா இது பொண்ணுங்களுக்கு மட்டும்தான்” என்றார்.

அப்போ அதனால்தான் ஆண்களுக்கு இந்த வலி புரிவதில்லை. பொண்ணுங்கள துன்புறுத்துறாங்களா என மனதில் பதிந்தது அவளுக்கு. அதுவரை தன் தந்தையின்மீது மட்டும் வெறுப்பு கொண்டவள். இந்த சம்பவத்தால் மொத்த ஆண்களையும் வெறுத்தாள்.

அதன்பின் ஏழாம் வகுப்பு முடித்து. எட்டாம் வகுப்பில் நுழைந்தவளை பல்வேறு போட்டிகளில் பங்கெடுக்க வைத்தார் நந்தினி. அதில் பெண்கள் முன்னேற்றம் என்ற பேச்சுபோட்டியில் கிடைத்த முதல் கோப்பையைதான் ஆர்வமாக கொண்டுவந்தாள். "அம்மா அம்மா நான் கப் வாங்கிட்டேன்" என வரவே நந்தினி வாசலில் நின்றுகொண்டு "குட்டிமா அப்பா இருக்காரு சமத்தா உள்ள போங்க" என்றதும் சோகமாக தன் அறைக்குள் சென்று அழுதாள்.

அழும்போதுதான் தைரியமும் பிறக்கும் என்று கூறியதுபோல கண்ணிருடன் சேர்ந்து "பட்டுமா நீ இப்போ பெரிய பொண்ணு சரியா அதனால அமைதியா ஒழுக்கமா இருக்கனும் அப்புறம் யாரையும் உன்ன தொடவிடகூடாது. சரியா. ஸ்கூல் முடிஞ்சதும் வீட்டுக்கு வந்துடனும்" என்ற கூற்றும் "வலிமையானவங்க தட்டிகேப்பாங்க" என்ற ஆசிரியரின் மொழியும் சேர்ந்து "பெரியங்க தட்டி கேட்பாங்க" என்றானது. நானும் பெரிய பொண்ணுதான் நானும் தட்டி கேட்கலாம் என கண்ணிரை துடைத்துகொண்டு எழுந்தாள்.

தன் அறை கதவை திறந்தாள்; தன் அன்னையின் அறைக்குள் சென்றாள். ஒரு சாட்டை சத்தம் கேட்டது. 'அம்மா இதுதான் உன்மேல விழிகுற கடைசி அடி' என நினைத்துகொண்டு கதவினை திறந்தாள். அவளது சபதமும் நிறைவேறியது. "நீ ஏன்டி இங்க வந்த?" என்பதுபோல பார்த்தாள். அதற்கு காரணம் இருந்தது. கடந்த சில மாதங்களாக தனசேகர் தனக்கு இரையாக கேட்பது சுவேதாவைதான்.

சிறுவயது பெண்ணுடன் கலந்தால் ஆயுள் கூடுமாம் அதுவும் இல்லாமல் தொழில் லாபம் கிடைக்கும் என யாரோ ஒருவரின் பேச்சினை கேட்டு சுவேதாவின் மீது மோகம் ஏற்பட்டது. அதனால்தான் வயதெட்டிய தன் மகளை மிகவும் கண்ணாக காத்து வந்தார் பார்வதி. ஆனால் இப்போது?

“ம்ம் கண்ணுல காட்டாமயே நல்லா நச்சுனு வளத்துருக்கடி உன்னைவிட அழகுதான் என் செல்லம்” என்று அருகில் வந்தான். அவனது கன்னத்தில் ஒரு அறை வைத்தாள் அந்த சிறிய பெண். அவன் உள்ளிருந்த மது அவனை முழு மிருகமாக மாற்றியிருந்தது. அவளது கைகளை எடுத்து தன் கன்னத்தில் வைத்து தேய்த்தான். சுவேதாவுக்கு அறுவறுப்பாக இருந்தது. கைகளை இழுத்துகொண்டு மறுபடியும் அறைய முற்பட்டாள். ஆனால் அவன் அவளது இரு கைகளையும் பிடித்துகொண்டு சுவற்றில் அவளை தள்ளினான். அவளது முகத்தின் அருகே வந்து முகர்ந்து பார்க்க சுவேதா செய்வதறியாது திணறினாள்.

அப்போது அவனது தலையில் ஒரு கம்பியால் அடித்தாள் அபி. சுவேதா விடுவிக்கபட்டாள். “இங்க இருந்து போ” என்றாள் அபி. ஆனால் சுவேதா நகரவில்லை. அபியோ அவனது கால்களைபற்றி கொண்டு “என்னை மன்னிச்சிடுங்க அவ உங்க பொண்ணு அவளை விட்டுடுங்க” என கெஞ்சினாள். அவனோ தலையில் வழிந்த ரத்தததை துடைத்துவிட்டு அபியின் முகத்தில் எட்டி மிதித்தான். சுவேதா பயந்து ஓடினாள். அவன் அவளது அந்த பள்ளி சீருடையை இழுக்க அது கிழிந்தது தடுமாறி படியில் உருண்டாள். பின் சுதாரித்துகொண்டு

தன் அறைக்குள் சென்று பூட்டினாள். வெளியே அவன் ஒரு இரும்பை எடுத்துகொண்டு கதவை உடைக்க முயற்சிசெய்தான்.அதற்குள் அபி வந்து அவனை இழுத்துபோட கீழே விழிந்தான். மது கோபத்தை அபியின் பக்கம் திருப்பியது.

கையிலிருந்த கம்பியால் அபியை அடித்தான். “ஆஆ சுவேதா” என்று அளறினாள். சுவேதாவோ கதவை திறக்க முயன்றாள். “பட்டுமா வெளிய வந்துடாதடா” என மனதில் வலியுடன் கூறினாள். சுவேதா என்ன செய்வதென்று தெரியாமல் மீண்டும் சாவி துவாரத்தின் வழியே பார்த்தாள். ஆனால் இந்த முறை மேலும் அதிர்ச்சி.

அவன் தன் பெல்ட்டை எடுத்து தன் தாயின் கழுத்தினை நெறித்து கொண்டிருந்தான். அபியின் கண்கள் தன் மகளை நினைத்துகலங்கின. அந்த பூட்ட பட்ட கதவினை பார்த்துகொண்டே உயிரை விட்டாள் அபி. அதை பார்த்த அபிக்கு மூச்சு தினறியது. தலை சுற்றியது. அழ கண்ணீரும் இல்லை அவளிடம்.

ஆனால் மீண்டும் அவன் கதவை தட்டவே சுவேதாவின் இதயம் படபடத்தது. அவளுக்கு என்ன செய்வது என்றே தெரியவில்லை. பதிமூன்று வயது பென்னால் என்ன செய்ய முடியும்.

அப்போது ஒரு குரல் கேட்டது “வேணும்னா என்னை எடுத்துகோடா குட்டிமாவை விட்டுரு” இது நந்தினியின் குரல். தன் மகளை காக்க தன் கற்பை இழக்க தயாரானாள். நந்தினி பிச்சை எடுத்துகொண்டிருக்கும் போது அவளை அழைத்து நல்வாழ்கை

அளித்தவள் அபி. அது சினிமாவுக்காக தீவிரமாக இயங்கிகொண்டிருந்த நேரம். அந்த சுவேதா பிறக்கும்போது நந்தினிக்கு பதினெட்டு வயதுதான். இப்போதுதான் நந்தினியை ஒருவர் விரும்புவதாகவும் அபி அதற்கு திருமன ஏற்பாடுகளும் செய்து கொண்டிருந்தாள். ஆனால் இந்த நாள் அந்த முப்பது வயது மங்கை தன் வளர்ப்பு குழந்தையின் கற்பை காக்க தன்னை அற்பனிக்க முடிவு செய்தாள்.

அவனும் போதைமயகத்தில் நந்தினியிடம் தன் வக்கிரத்தை காட்டி வெளியேறினான். நந்தினி அபியின் இடத்தை பிடித்திருந்தாள். அவனிடமுன் சரி சுவேதாவிடமும் சரி. அபிக்கான சாட்டை இவளையும் பதம் பார்த்தது. ஆனால் இவளுக்கு மகிழ்ச்சிதான் குட்டிம்மாவுக்கு எதுவம் ஆகவில்லை என்று.

கதவின் பின் சரிந்து அழுதகொண்டிருந்தவளின் கால்களை அபியின் ரத்தம் வந்து சேர்ந்தது. அதில் ஸ்பரிசம் பட்டதும் சுவேதாவின் உடல் நடுங்கியது. அப்போதுதான் முதலில் வந்தது அந்த வலிப்பு.

கதவுக்கு பின்னே ஒரு தாய் இறந்து கிடக்க; மேலே இன்னொரு தாய் அந்த மிருகத்திடம் காயபட்டுகொண்டுருக்க சுவேதாவொ யாருமே இல்லாமல் வலிப்பால் துடித்து அப்படியே மயங்கினாள்.

அந்த நாளை நினைக்கும்போதெல்லாம் இந்த வலிப்பு வந்துவிடும். அதுவுமில்லாமல் தன்னை எந்த ஆணும் ரசிக்க தேவையில்லை என தன் உடைகளை மாற்றிகொண்டாள். அந்த நினைவுகளை மறக்க

கல்லூரியில் அவளுக்கு போதை அறிமுகம் ஆனது. ஆனால் சிறிதுகாலம் மறக்க உதவி செய்துவிட்டு அந்தவலிப்பை இரண்டுமடங்கு வீரியமாக்கியது அந்த போதை பழக்கம்.

இதை அன்பரசியிடம் கூறும்போது சுவேதாவின் உடல் நடுங்க துவங்கியது. அன்பரசி அவளை கட்டி அனைத்துகொண்டு "ஒன்னும் இல்லைங்க அண்ணி " என அவள் முதுகில் தட்டி ஆறுதல் தந்தாள். அரிசியின் கண்கள் கலங்கின.

வெளியில் நின்று கேட்ட சுகு அழுதுகொண்டிருந்தான். "இவ்வளவு வலியையும் வச்சிகிட்டு சிரிச்சிட்டு எப்புடிடா இருந்தா" என சந்துருவின் தோளில் சாய்ந்து அழுதான்.

அந்த காதல் ஜோடிகளை இந்த காதல் ஜோடிகள் ஆறுதல் செய்ய முயன்றனர். "அன்னி நான் உங்க மடில படுத்துகலாமா" என்றாள் சுவேதா அழுத கணாகளுடன்.

உள்ளே இருந்த அரிசி வெளியே வந்து அவளது கண்ணீரை துடைத்து தன் மகளென நினைத்து மடியில் கிடத்தினாள். தன் அன்னை மடியில் இருக்கும் பாதுகாப்பு உணர்வில் உறங்கிபோனாள் சுவேதா.

## அத்தியாயம்-43

தன் மடியில் உங்கிபோன சுவேதாவின் தலையைகோதிவிட்டாள் அன்பு. வயதில் மூத்தவள் என்றாலும் நீண்ட நாட்களுக்கு பிறகு கிடைத்த அன்னை மடியை யாரும் விட்டுகொடுக்க மாட்டார்கள். சுவேதாவும் அப்படியே. சில நாழிகை உறங்கினாள். அன்பரசி அப்படியே ரசித்துகொண்டிருந்தாள். பின் சுவேதா சோகமாக எழுந்து அமர அவளை பார்த்து லேசாக புன்னகைத்தாள் அன்பு.

“ஐயோ அன்னி ரொம்ப நேரம் தூங்கிட்டேனா? ஸாரிங்க கால் வலிக்குதா?” என்றாள். “அப்படியெல்லாம் இல்லைங்க அன்னி நீங்க வேனுமுனா தூங்குங்க” என்றாள்.

“அட போ அன்பு நான தூங்கி நீ பாத்தது இல்லையே அப்புறம் நீ உன் கல்யானம் வரைக்கும் இப்புடிதான் உட்காந்துகிட்டு இருக்கனும். அப்புறம உனகூட ரொமான்ஸ பன்ன முடியலைனு சந்துரு என்னை திட்டுவான இது எனக்கு தேவையா” என்றாள் சிரித்துகொண்டே.

சுவேதாவின் குழந்தை மனம் பிடித்துபோனது அன்புக்கு. “இப்போ மனசு எப்புடி இருக்கு அன்னி” என்றாள். பரவாயில்லையே ஒரு வழியா அன்னினு கூப்பிட்டுட்ட!” என்றுகூற அன்பு அப்போதுதான் உணர்ந்தாள். “நீங்க என் பக்கத்துல இருக்கும்போது எனக்கு எதுவும் வராது அன்னி” என்று அன்பரசியின் கன்னத்தை கிள்ளி கொஞ்சிவிட்டு தன் தாய் பார்வதியை தேடி நகர்ந்தாள்.

அன்பரசியின் மனம் லேசாக கனத்திருந்தது. தன் சிறுவயது வாழ்கைக்கும் சுவேதாவின் வாழ்கைக்கும் உள்ள வித்தியாசத்தை உணர்ந்தாள். “இவங்களுக்கு இதுக்குமேல கஷ்டத்தை கொடுக்காதே என ஆண்டவனை வேண்டி எழுந்தாள். தன்னை அறியாமலேயே சுவேதா அன்பின முதல் குழந்தையாக மாறியிருந்தாள். என்ன தாயைவிட மகளுக்கு ஒரு வயது அதிகம். இருந்தாலும் மனதளவில் அவள் குழந்தைதான்.

மெதுவாக எழுந்து வந்த அன்பு சமையலறையில் நுழைய அங்கு பார்வதியின் அருகில் நின்றிருந்தாள் சுவேதா. அவளிடம் கவலை இல்லை. “அன்னி உங்களுக்கு சமைக்க தெரியுமா?! அம்மா நல்லா சமைக்குறாங்க வாசனையே ஆளை தூக்குது.” என்று முகர்ந்துகொண்டே கூறினாள். “ம்ஹூம் உங்க அன்னிய நீதான் மெச்சிகனும்” என்றார் பார்வதி.

“ஏன் அம்மா” என்றாள் சற்று எதிர்பார்ப்புடன் அன்பின் குறும்புகதை கிடைக்கும் என்று அது பொய்யகவில்லை.

“எனக்கு தலை வலியா இருக்குமா அப்பாவுக்கு நீபோய் டீ போட்டு வா அப்புடின்னு சொல்லிட்டேன்” என்று பார்வதி கூறும்போது “எப்போ அம்மா?” என்று குறுக்கிட்டாள் சுவேதா.

“அது ஒரு பத்து வருசம் இருக்கும்மா”

“ம்ம் அப்போ ஜாலிதான் மேல சொல்லுங்க அம்மா” என்றாள் சுவேதா ஆர்வமாக.

“அப்போதான் டீ போட்டு எடுத்துட்டு வந்துட்டா! எனக்கே ஆச்சரியமா போச்சு. அவங்க அப்பாவும் நல்லா இருக்குனு சொல்லிட்டு போயிட்டாரு! சரி நம்ம மக முதல்ல போட்ட டீ எப்புடி இருக்குனு ஒரு ஆர்வத்துல அந்த கோப்பைல மீதி இருந்த டீய போட்டுட்டு நான தெரியாம குடிச்சுட்டேன். ஐயோ” என பார்வதியின் முகம் அஸடகோனலாக மாறியது.

“என்ன அம்மா சீனிக்கு பதிலா உப்ப போட்டு வச்சுட்டாங்களா? நான்கூட ட்ரை பன்றேன்னு அப்புடிதான் பன்னிட்டேன் அதுல இருந்து கிச்சன் பக்கமே நந்தினி அம்மா என்னை அலோ பன்றது இல்ல” என்று சிரித்தாள்.

“உப்பனாகூட பரவாயில்லையே! இவ கோலம்போட வச்சிருந்த மாவ எடுத்து தட்டி வச்சுருக்கா! பாவம் அந்த மனுசன் எப்புடிதான் அத குடிச்சாரோ” என மீண்டும் முகம் மாறியது பார்வதிக்கு.

“என்ன அன்னி நான் படிச்ச ஸ்கூல்ல நீங்க ஹெட்மாஸ்டரா இருப்பீங்க போல! சரி விடுங்க அன்னி உங்க நிலமையாவது பரவாயில்லை சந்துரு நல்லா சமைப்பான். ஆனா நான் என்ன பன்றது.” என்று சிரித்தாள்.

“எது மாப்பிள்ளை சமச்சு இவ நல்லா உட்காந்து சாப்பிடுவாளா ராணியாட்டம் தோலை உறிச்சுபுடுவேன்” என்று திட்டினாள் பார்வதி.

“ஓ அப்புடியா அம்மா அப்போ எனக்கு சமைக்க கத்துகொடுங்க நான் அன்னிக்கு சமைச்சுபோட்டுகிறேன். எங்க அன்னிய நாங்க சமைக்கலாம் விட மாட்டோம். என்ன அன்னி நான் சொல்றது.” என்று அமைதியாக நின்றிருந்த அரிசியை பார்த்தாள்.

“இல்ல அன்னி நான் கொஞ்சம் சமைப்பேன அம்மா சும்மா சொல்றாங்க” என்று கூறினாள் அன்பு.

“அன்னி இந்த கோலம் போடுற போட்டிக்கு நான் வரலை” என வயிற்றை பிடித்தாள். “இல்லமா அவ இப்போ கொஞ்சம் சமைப்பா! நானும அப்பாவும் எங்கயாவது கோயிலுக்குபோனா உங்க அன்னிதான சமைச்சு ஸ்கூலுக்கு எடுத்துட்டு போவா” என்று விவாதத்தை முடித்தார்.

“ஆமா ஆண்டி ஒன்னு கேக்கனும்னு நினைச்சேன். சின்ன வயசுல அன்னி ரொம்ப வாலுனு கேளிவிபட்டேன் உண்மையா?!” என்று எதாவது சுவாரஸ்யமாக இருக்கிறதா என்று பார்த்தாள்.

"ஆமா கொஞ்ச ஆட்டமா போடுவா அதுலையும் இவங்க பாட்டிசெல்லம் வேற இவங்க அப்பா இவளை நான் அடிச்சுட்டா என் கன்னம் பழுத்துடும். அதுனாலயே ஓவர் செல்லம்." என கூறிவிட்டு எதையோ நினைத்து சிரித்தார்.

"ஏம்மா சிரிக்குறீங்க?"

"அந்த தோட்டத்துல அன்னைக்கு இவ பன்ன கூத்து இருக்கே" என்று சிரித்தார். "சொல்லுங்க அம்மா" என கெஞ்சினாள் சுவேதா. அதற்குள் "ம்ம் நாளைக்கு மாப்பிள்ளை நம்ம ஊர்ல மில் கட்டுறதுக்கு பூஜை பன்ன போறாங்கலாம் அதனால சீக்கிரமா ரெடியாகுங்க சும்மா எப்பயும்போல லேட் பன்ன கூடாது." என்று கூறிகொண்டிருந்தார். அருகில் இருந்த சன்முகம் "அட ஏன்டா நீ சும்மா எல்லாரையும் மிரட்டிகிட்டு! ஒன்னும் அவசரம் இல்லைமா இவன் இப்புடிதான் சொல்லிகிட்டு இருப்பான்" என்று தன் நண்பனை பார்த்தார்.

"டேய் உன் தங்கச்சிய பத்தி தெரியாதே உனக்கு படத்துக்கு போகலாம்னு சொன்னா படம் முடிஞ்சாலும் ரெடி ஆகமாட்டா நீ என்னடான்னா இப்புடி பேசிகிட்டு இருக்க" என்று தன் பக்க நியாயத்தை வைத்தார்.

"நீ சும்மா சொல்லாதடா உனக்கு தெரியாது என் தங்கச்சி மாதிரி இல்லடா உன் தங்கச்சி" என்று பாச சண்டை புரிந்துகொண்டிருந்தனர். "சரி சரி விடுங்கப்பா அப்போ காவேரி

*மில்ஸ் இங்கயும் ஆரம்பிச்சாச்சு ஐ ஜாலி அப்போ சந்துரு இங்கயே டேரா போட்டுருவான்" என்று கூறிய சுவேதாவுக்கு அதிர்ச்சி காத்திருந்தது. கூடவே அன்புக்கும்*

*"இது காவேரி மில்ஸ் இல்லமா! சுவேதா அன்பரசி மில்ஸ், நீங்கதான் இதுக்கு இன்சார்சாம் ரொம்ப ஸ்டிரிக்டா சொல்லிட்டான்" என கூற போஸ் முதல் அன்பு வரை அனைவரும் அதிர்ச்சியில் உறைந்தனர்.*

*"டேய் என்னடா சொல்ற அவளுக்கு என்னடா தெரியும்" இது போஸ்.*

*"இதுக்கே இப்புடி சொல்ற! இங்க ஒரு வீடு கட்ட போறானாம். ஏன்டானு கேட்டேன் அதுக்கு அன்பு அத்தைய பிரிஞ்சு இருக்க மாட்டாளாம் அதனால இங்கயே தங்கிக்கலாம்னு சொல்றான். எதுன்னா பிரட்சனைனா நீ வேனா அங்க தங்கிக்கோப்பா அப்புடின்னு சொல்றான் நான் என்ன செய்றது?" என்றார் சிரித்துகொண்டே.*

*"மாப்பிள்ளைகிட்ட நீ சொல்லுடா"*

*"எனக்கு தெரியாதுப்பா நீயாச்சு சந்துருவாச்சு என்னை விடுங்க" என்று நழுவினார் சன்முகம்.*

“ஐ அப்போ அன்னிதான் எனக்கு பிஷினஸ் பார்ட்னரா” என்று துள்ளி குதித்தாள் சுவேதா. ஆம் அபி நிறுவனங்களும் காவேரி நிறுவனங்களும் இப்போது இனைந்துதான் செயல்படுகிறது. அதில் அன்பையும் இனைத்திருந்தான் சந்துரு.

மாப்பிள்ளையை கேட்க மனமில்லாமல் இருந்தார் போஸ். மறுநாளும விடிந்தது. பூஜைகள் முடிய முதல் கல்லினை நாட்ட அழைத்தான் சந்துரு.

“சுவேதா வா! அன்பு நீயும் வா! அத்தை வாங்க “ என அனைவரையும் அழைத்தான் சந்துரு. அன்பரசியோ தன் தாயினை பார்த்து அனுமதிக்கு நின்றிருந்தாள்.

“அன்னி சும்மா அம்மாவ பாத்து பயப்படாதீங்க சந்துரு இருக்கான் அவன் பெரிய ரவுடியாக்கும் அவன் பாத்துப்பான் சும்மா வாங்க” என கிண்டலடித்தாள்.

அனைவரும் கைவைக்க அன்பு தன்னவனின் மீது ஒருகை வைக்க அவனோ மற்றோரு கையை அவள்மீது வைத்தாள். சுவேதா இருவரின் கைகளும பிரியாதவாறு அனைத்துகொண்டாள்.அனைவரின் ஆசியுடன் முதல்கல் அடியெடுத்து வைத்தது அதுதான் அவர்கள் மன வாழ்கைக்கு அச்சானி.

அதன்பின் அனைவரும் வீட்டிற்கு வரவே சுவேதா போராடி இருவரையும் தனியே அனுப்பிவைத்தார். “நல்லா ஊர சுத்திட்டு வாங்க அப்புறம் அன்னி எனக்கு புளியங்கா வேனும் சரியா” என சந்துருவை பார்த்து நக்கலாக கேட்டாள்.

“இன்னும் மூனுமணி நேரத்துக்கு உங்களை இந்த வீட்டுபக்கமே பாக்ககூடாது” என்பது சுவேதாவின் உத்தரவு வேறு வழியில்லாமல் அந்த கன்மாய் அருகில் நடந்தனர்.

“இந்த பாம்பு புத்து நியாபகம் இருக்கா?” என்றான். அவள் மௌனமாக சிரித்தாள். அன்று அந்த பாம்பு படாதபாடு பட்டுச்சோ இல்லையோ இவன் ரொம்ப கஷ்டபட்டுட்டான்.

“பரவாயில்லையே நீ சிரிக்ககூட செய்வியா?” என அவன்கூற வெட்கத்தில் முகம் சிவந்தாள்.

“ஆமா சுவேதா கேட்டது நியாபகம் இருக்கா?”

அவள் “என்ன?” என்பதுபோல இவன் முகத்தை பார்த்தாள்.

“புளியங்கா புளியங்கா!” என்றான்

மீண்டும் வெட்கி குனிந்துகொண்டாள்

அந்த சிரிப்பை ரசித்தான் சந்துரு. இருந்தாலும் 'நான் அவளுடைய மனதினைன் அலங்கரித்தவன் இல்லை. பின் ஏன் அன்பிடம் அன்பை எதிர்பார்க்கிறேன்" என மனதில் ஒரு வலி வந்தது. அதன்பின் மௌனமாக நடந்தான்.

அதுவரை நன்றாக பேசிகொண்டிருந்தவனின் குரலை ரசித்து வந்தவளை இவனது தற்போதைய மௌனம் நிலைகுலைய செய்தது. ஏக்கமாக அவன் முகத்தினை பார்த்தாள் தாயிடம் இரைக்கு ஏங்கும் குஞ்சுகள்போல அன்பு எனும் இரைக்காக அன்பானவல் எதிர்பார்த்தாள்.

அவனது மௌனம் அவளது மனதிலும் ஒரு விதை விதைத்தது. 'பாவம் சந்துரு அம்மா இல்லாம கஷ்டபட்டான் இப்போ அவன் காதலிச்ச பொண்ணும் அவன்கூட இல்ல அவள நினைச்சுகிட்டே வாழுறான். அவன் மனது முழுக்க அவள்தான இருப்பா! எனக்கு அங்க இடம் இல்லையே நான அவர் மனைவியாகலாம் ஆனா அவர் நேசிக்குற பொண்ணா ஆக முடியாதே! பின்ன ஏன் அவர் அன்புக்கு ஏங்குறேன்.' என மனதில் ஓட அழவேண்டும்போல இருந்தது.

"அன்பு நான ஒன்னு சொல்லட்டுமா? நீ என்ன தப்பா நினைச்சாலும் பரவாயில்லை" என்றான்.

"ஐயோ இல்லைங்க" என்று பதறினாள்.

“நான் யார லவ் பன்றேன்னு உனக்கு தெரிஞ்சாகனும்! நான் அதை சொல்லிடுறேன் என்னால முடியல மனசு வலிக்குது. அத கேட்டுட்டு எல்லாம் உன் விருப்பம்” என அவள் கண்களை பார்த்தான்.

அவளிடம் அது என்ன என்ற ஆர்வத்தைவிட, அது நானா இருக்ககூடாதா என்ற ஏக்கம் இருந்தது. அந்த பளிங்க கண்ணை பார்த்தான்.

“எனக்கு உன்னை பிடிக்கலை அன்பரசி” என்றதும் அவள் இதயம் நொருங்கியது.

“ப்ளீஸ் அரிசி என காதலை ஏத்துகோ!” என்று அவள் கண்ணை பார்த்தான் கையில் அவளுக்கு தெரியாமல் பறித்த அந்த ரோஜாவேறு! அரிசிக்கு திருட்டு மாங்காய் பிடிக்கும் அல்லவா. அதனால திருட்டு ரோஸ்.

அவனது வார்த்தையை கேட்டவள் கண்கள் கலங்கின. “சாரி அன்பு நான் எதாவது தப்பா பேசிருந்தா என்னை மன்னிச்சிடு! நான் எப்போவுமே லவ் பன்னது பன்றது எல்லாமே அந்த குறும்புகாரி அரிசியதான்!” என்றான்

அடுத்த நொடி அன்பரசி தன்னவனை கண்ணீருடன் கட்டியனைத்தாள். அந்த ரோஜா கீழே விழுந்து இவர்களை

படம்பிடித்தது. காதல் படம் எடுக்க ஜெனி இல்லை அல்லவா!. (ஆனா இந்த ஜெனி இருக்கா)

## அத்தியாயம் - 44

அன்பரசி தன்னவனை கட்டிகொண்டு நின்றாள் ஒரு குழந்தையின் கையில் சிக்கிய டெடிபியர் போல. அவனுக்கும் இப்போதுதான் புரிந்தது அன்பு தன்னைதான் நினைத்துகொண்டு இருக்கிறாள் என்று. அவனது கைகளும் அவளை நோக்கி முன் வந்தன. தன்னவளுடன் சிறிது விளையாட ஆசை அவனுக்கு.

“ஹலோ மேடம் நான் மறுபடியும் சொல்றேன் எனக்கு அந்த அரிசிதான் வேனும் நீங்க இல்லை! நீங்க வேற யாரோன்னு நினைச்சு என்னை கட்டி புடிச்சிட்டு நிக்குறீங்க”

அவ்வளவுதான் அடக்கி வைத்திருந்த அன்பை கொட்டினாள் அவன் நெஞ்சில். தனது மென் கைகலால் சரமாறியாக தாக்கினாள். “போடா

ஒலைபட்டாசு இத சொல்ல இவ்வளவு நாளா?” என்று அடித்த இடத்தில் வலிக்கும் என மீண்டும் தலை சாய்த்தாள்.

“இதுதான் என் அரிசி!” என்று அனைத்துகொண்டான் தன்னவளை. “டீச்சர் டீச்சர்” என்று ஒரு குரல் ஒலித்தது. சட்டென இருவரும் விலகிகொண்டனர். அங்கே ஒரு சிறுவன் மரபொந்தில் ஒலிந்துகொண்டிருந்தான். அவனது கண்கள் மட்டுமே புலபட்டது வெளியே.

“ஸ்கூலுக்கு போகலையாடா” என்று தன் பதவியை வைத்து தன் தவற்றினை சரி செய்ய முயன்றாள். “நான் எங்க தாத்தா செத்துபோயிட்டாருனு லீவு எடத்துட்டேன் டீச்சர்.” என்றான் தெளிவாக. “இரு உங்க அப்பாகிட்ட சொலறேன்” என அவள்கூற “நானும் உங்க அப்பாகிட்ட சொல்றேன் இந்த சார கட்டிபுடிச்சீங்கன்னு” என்றான் பதிலுக்கு. அந்த வகுப்பில் அதிக செல்லம் கொடுத்தால் வந்த விளைவு இது. சந்துருவோ நக்கலாக சிரித்துகொண்டே நின்றான். ‘இது உன் பிரட்சனை நீயே சமாளி’ என்பதுபோல.

அவளோ என்ன காப்பாத்துடா பல்ல காட்டாத எனபதுபோல பார்த்தாள். இது ஹீரோ ரிவன்ஜ் டைம். ஹீரோயின் ஆபத்துல இருக்காங்க அல்லவா. “தம்பி இங்க வாடா” என்றதும் வந்தான் அந்த சிறுவன். “என்ன சார்?”.

“உனக்கு டீச்சர் வீடு தெரியுமா?”

“ம்ம் ஊருக்கே தெரியுமே மிலிட்டரி பெரிப்பா வீடுதான”

“சரி நீ போய் இந்த அக்கா ஒரு மாமாவ கொஞ்சிகிட்டு இருக்காங்கனு சொல்லு இந்தா சாக்லெட்” என அன்புக்கு வாங்கி வைத்தருந்த சாக்லெட்டை கொடுக்கவே திரி கொழுத்திய ராக்கெட் வெடிபோல மின்னலென பறந்தான்.”ஐயோ அவன் சொல்லிட போறாங்க” என பயந்தாள்.

“சொல்லட்டுமே எனக்கு பிரட்சனை இல்லை உனக்கு எதாவது பிராப்ளமா?” என்று அவளை பார்த்தான். அவள் மீண்டும் வெட்கம் என்ற கொழுசில் மௌனம் எனும் திருகானியை மாட்டிகொண்டாள்.

“ஓய் அரிசி உனக்கு வெட்கம் எல்லாம்பட தெரியுமா?” என்று அவன் கேட்க மேலும் வெட்கம் வந்து அவளை மேலும் சிவக்க செய்தது. அந்த கன்மாய் கரையில் நடந்தனர். “அன்பு புளியங்கா கிடைக்குமா?” என்றான்.

அவளது கண்ணில் ஒரு சிறிய சோகம். “என்ன ஆச்சு அரிசி” என்றான். “அந்த புளிய மரத்துல தீ வச்சுட்டாங்க அது நான் ஸ்கூலுக்கு போயிட்டு வர்ரதுக்குள்ள எரிஞ்சிடுச்சு” என கண்ணின் ஓரம் நீர்துளி எட்டிபார்த்தது. “ஹே லூசு இதுக்குபோய் ஏன் அழுற” என்றான் அவளை சமாதான படுத்த. “அது இந்த ஊரோட

செல்லபுள்ளை மாதிரி அதான்" என அழ அவளது கண்ணீரை துடைத்தான்.

"சரிங்க டீச்சர் உங்க மேல சில என்குவரி இருக்கே!" என்று கூற அழுத விழிகளுடன் "என்ன" என்பதுபோல நிமிர்ந்து பார்த்தாள். "நீங்க ஒரு பாடம் நடத்துனா முழுசா சொல்லிகுடுக்க மாட்டீங்களாம்"

"இல்லையே" என்றாள் அழுத்தமாக கணகள் மட்டும் அந்த மரத்தின் பிம்பத்தில்."இல்ல எனக்கு ஒரு டீச்சர் நீச்சல் சொல்லி குடுத்தாங்க ஆனா நான் இன்னும் கோர்ஸ் கம்ப்ளீஷன் சர்டிபிகட் வாங்கல அதான் சொன்னேன்" என்று கூற "அதான் சொல்லி குடுத்தேனே" என்றாள்,

"எப்புடி என்னைய முழங்கால் அளவு தண்ணில விட்டுட்டு நீங்க ஆழமான இடத்துல விளையாடுனீங்களே அப்புடியா டீச்சர்" என கூற சந்துருவின் அழகான நினைவுகளை எண்ணி சந்தோஷபட்டாள். "அது நீங்க முங்குனா அம்மா என்னை கொண்ணுபோட்டுரும் அதான் அப்புடி விட்டுட்டு போனோம்." என்றாள் அந்த அரிசி.

"சரி அப்போ இப்ப சொல்லிகுடுங்க"

"போங்க சந்துரு நீச்சல் தெரியாமயா இருக்கீங்க"

“நிஜமா பழகல அரிசி’ கத்துகிட்டா உன்கிட்டதான்னு விட்டுட்டேன்”

“சும்மா சொல்லாதீங்க மாமா”

என அவர்கள் வார்த்தைகளில் அவர்கள் நெறுங்கினர். அதை அவர்கள் உணர்திருக்கவில்லை. சுவேதாவுக்குதான் நன்றி சொல்ல வேண்டும். “ஐயோ அரிசி எங்க அம்மா எனக்கு பொய் சொல்ல கத்துதரல”

“நான் நம்ப மாட்டேன்பா”

“அடி கிறுக்கி எனக்கு தெரிஞ்ச ஒரே நீச்சல் கடப்பாறை நீச்சல்தான் வேனுமனா அடிச்சு காட்டவா” என்றான்.

அவள் சிரித்துகொண்டே அவனை பார்த்தாள். “நீ போங்கு ஆட்டம ஆடுற அரிசி இது சரிபட்டு வராது. நான் குடுத்த பீஸ் எனக்கு திரும்ப வேனும்” என்று திட்டவட்டமாக கூறினான்.

“பீஸா அப்புடின்னா?”

*“அதான் அத்தை எனக்குனு கொடுத்த பார்லீஜிய நீதான சாப்புட்ட நம்ம அக்ரிமன்ட்படி அது நீ எனக்கு நீச்சல் கத்துகொடுக்குறதுக்கு பீஸ் அது எனக்கு இப்போ வேனும்”*

*“அது இப்போ எப்புடி வரும்?”*

*“அதெல்லாம் எனக்கு தெரியாது அரிசி! எனக்கு வேனும் அவ்வளவுதான்” என்ற அடுத்த நொடியே அவளால்தான் தரமுடியும் தன்னவனின் கன்னத்தில் முத்தம் பதித்துவிட்டு ஆதவன் மறைந்தவுடன் தலைகுனியும் ஆதவமலர்கள் போல வெட்கி தலைகுனிந்தாள். சந்துருவோ சிலையென ஆனான்.*

*அவளது செய்கையில் அமைதியானவன் அவளை ரசித்தான் ஆனால் அவளது மௌனம் மட்டும் தடையாய் இருந்தது. “அப்போ நீச்சல் கத்துகுடுக்க சொன்னா இதுதான் கிடைக்குமா? சரி அதான் நான் தண்ணில விழுந்தா என்னை காப்காத்த நீ இருக்கீல அதுவே போதும்! என்ன அரிசி காப்பாத்துவீங்கல்ல?” என்றான்.*

*“ம்ம்” என்றாள் அவன் கேட்டதின் அர்த்தம் புரிந்துகொண்டு.*

*“சரி போகலாமா” இது சந்துரு*

*“இன்னும் கொஞ்சநேரம் இருக்கலாமே!” என மனம் கூறினாலும் “ம்ம் போலாங்க” என்றாள் வாய் வார்த்தையாக. பின் இருவரும்*

எழுந்து நடக்க ஆதவன் உச்சியில் இருந்து அவர்களை ரசித்துகொண்டிருந்தான்.

“இப்போ இருக்கறது யாருனு தெரிஞ்சுகலாமா?” என்றவனை குழப்பமாக பார்த்தாள். “இல்லைங்க அரிசியா இருந்தா அந்த மாங்காய் பரிச்சு தருவா அதான் கேட்டேன்” என காய்கள் நிறைந்த ஒரு மாங்காய் மரத்தை காட்டினான்.

அவள் இவனை பார்த்துவிட்டு ‘ஐயோ ஆசையா கேக்குறாங்களே சின்ன புள்ளையா இருந்திருந்தா இன்னாரம் எறிருக்கலாம்’ என்று நினைக்கும்போது உள்ளிருந்த அனபு “ஏறுடி சும்மா உன்னால முடியும்”; “போடி சந்துரு இருக்காரு அப்புறம் சிரிச்சா வெட்கமா போயிடும் நான் மாட்டேன்பா” என சண்டை நடந்தது.

“இருங்க நான் அந்த தாத்தாகிட்ட கேட்டு வாங்கி தாரேன்” என்றாள்.”அட போங்கப்பா எனக்கு திருட்டு மாங்காய்தான் வேனும்” என்று கெஞ்சினான். அவளும் வழியில்லாமல் அந்த கம்பிகளின் அருகில் நின்றுகொண்டு ஒரு குச்சியை எடுத்தாள். தன்னால் எட்டியவரை தாவி பார்த்தாள். சந்துருவோ சிரித்துகொண்டே அருகில் நின்று அவளை ரசித்தான்.

மூச்சு வாங்க அவளால் முடிந்தது அந்த சிறிய பிஞ்சு மட்டுமே. “நான் ஹெல்ப் பன்னட்டுமா” என்றான். அவள் அந்த குச்சியை அவளிடம் கொடுத்தாள். அதற்குள் அவன் அவளை தூக்கினான். “இப்போ பறி

அரிசி" என்றான். அவளது உடல் தன்னவனின் கை பட்டதால் சிலிர்த்தது. "மாமா இறக்கிவிடு யாராவது பாத்துட போறாங்க"

"நீ பறிச்சுபோடு நான் பாத்துகிறேன்"

பதட்டத்துடன் ஒரு மாங்காயை பறித்தாள். அவள் இறங்கியதும் "அது என்ன மாமா? எப்பவும் சந்துரு வாடா போடானுதான கூப்பிடுவ?" என அவன் கூற "அம்மாதான் சொன்னாங்க" என தாயை மாட்டிவிட்டாள்.

"ஓ நீ அத்தையோட்ட பேச்ச கேட்டு நடக்குற பொண்ணா? எனக்கு தெரிஞ்சு நீ அத்தை பேச்ச கேட்டதே இல்லையே! சரி அப்போ நான் அத்தைகிட்டயே கேட்டு பாத்துடுறேன்" என்று மாங்காயை எடுத்துகொண்டு நடந்தான்.அவள் பதறிகொண்டே பின்னால் ஓடிவந்து அவன் கையை பிடித்துகொண்டாள். "இல்ல மாமா நானாதான் கூப்பிட்டேன் அம்மா சொல்லல" என்றாள்.

"அட அரிசி" என அவளது தோளை அனைத்துகொண்டு நடந்தான்.இருவரும் நடந்து வந்து வீடு சேர்ந்தனர். அங்கே வாசலில் சுகு ஃபோன் பேசிகொண்டுருந்தான்.

"இப்ப என்னங்க சுவேதாதான டார்கெட் இந்த கல்யானம் முடிஞ்சதும் நான் அவளை பேக் பன்னிடுறேன். சரிங்க இப்போ

வச்சிடுங்க யாராவது பாத்துடபோறாங்க" என பதட்டத்துடன் காலை வைத்தான் சுகு.

சந்துரு சுகு எனும் நிலையத்தில் இறங்கிகொள்ள அன்பு மட்டும் அந்த மாங்காயை கொண்டு சுவேதாவை தேடி நகர்ந்தாள்.

"என்ன சுகு ஏதோ பேக்கிங்னு பேசிகிட்டு இருந்த" என்றான் சந்துரு. சுகுவின் முகத்தில் ஒரு அதிர்ச்சி அலை தோன்றி மறைந்தது. பின் நிதானித்துகொண்டான். "இல்லடா அப்பா ஃபேக்டரில பேக்கிங் டிபார்ட்மன்ல ஸ்ட்ரைக்காம் அதான் விசாரிச்சுட்டு இருந்தேன்" என்று அவனிடம் சமாளித்தான். "சரிடா நான் பெரிய வீட்டுக்குபோறேன் ரொம்ப டையார்டா இருக்கு" என நகர்ந்தான்.

"டேய் சாப்பிட்டு போடா"

"இல்லடா நான் சாப்பிட்டேன்" என்று வேகமாக நடந்தான். அப்போது வெளியே வந்த பார்வதி "அந்த தம்பி ஏன் சாப்பிடாம போறாங்க" என்றார். சந்துருவுக்கு ஏதோ தோன்ற "இல்ல அத்த அவனுக்கு தலை வலிக்குதாம் அதான் தூங்க போறான்" என்று சமாளித்துவிட்டு உள்ளே நுழைந்தான்.

"என்ன அரிசி மேடம் ஒரே ரொமான்ஸாம்" என்று வம்பிழுத்தனர் மஞ்சுவும் சுவேதாவும்.

“இல்ல அன்னி”

“அந்த சின்ன பையன்தான் புட்டுபுட்டு வச்சானே. எங்க டீச்சர் அக்கா ஒருமாமாவ கட்டிபுடிச்சாங்கனு” என்று சுவேதா வாசல்படியில் அமர்ந்துகொண்டு அன்பையும் அமர வைத்து பின்னாலிருந்து கட்டி அனைத்துகொண்டாள். அந்த அளவுக்கு நெருக்கம் ஆகிவிட்டனர்.

“சும்மா சொல்லுங்க அன்னி” என காதில் கிசுகிசுத்தாள். அன்போ வெட்கத்தில் இருக்க சந்துரு நுழைந்தான். அவனை பார்த்ததும் எழுந்திருக்க முயற்சி செய்தாள் அன்பு. ஆனால் சுவேதாதான் கட்டிபோட்டிருந்தாள் அல்லவா

“அன்னி நீங்க ஏன் எழுந்திருக்கறீங்க உட்காருங்க” என்று மிரட்டினாள் செல்லமாக.

அதன் பின்னால் வந்த பார்வதி “ஏனடி மாப்பிளை நிக்குறாரு நீ உட்காந்துகிட்டா இருக்க எந்திரிச்சு உள்ள போடி” என்றார். அன்பின் முகம் வாடியது. அதை பார்த்த சுவேதா “அம்மா இது ரேகிங்மா உங்களுக்கு தெரியாது மாப்பிளை பையன இப்புடி பன்னனும் அது சிட்டில ஒரு சம்பிரதாயம்மா” என சுவேதா சமாளித்தாள்.

“என்ன சிட்டியொ” என பார்வதி நகர “ஹலோ சந்துரு இப்ப அன்னிய இம்பிரஸ் பன்னுங்க” என்றாள் சுவேதா.

## அத்தியாயம் -45

ம்ம் அன்னிய இம்பிரஸ் பன்னுங்க" என சுவேதா கூற அன்பரசி "வேணாம் அன்னி என்று பதறினாள். சந்துருவோ "ம்ம் சரி நான் பன்னுறேன்! ஆனாஙஎன்ன கிப்ட் கொடுப்காங்க உங்க அன்னி" எனறான்.

"எங்க அன்னியே உனக்கு கிப்ட்தான்டா அண்ணா! அதுக்குமேல என்ன வேனும்" என்று அன்பின் கன்னத்தை கிள்ளினாள்.

"இது போங்குப்பா எதாவது பந்தயம் இருக்கனும்" என்று அவன் விடுவதாய் இல்லை.

"சரி என்ன வேணும் சொல்லு எங்க அன்னி பன்னுவாங்க"

"ம்ம்" என சிறிது யோசித்தவன்."உங்க அன்னி என்கூட டான்ஸ் ஆடனும் சரியா டீல் ஒகேவா?!" என தன்னவன் கூற அன்பின் உள்ளம் உள்ளூர மகிழ்ந்தாலும் சிறிய தயக்கம் அவளை தொற்றிகொள்ளவே வேண்டாம் என வாய் திறந்தாள். அதற்குள் "சரிடா மேரேஜ் அன்னைக்கு உன்கூட ஆடுவாங்க" என சுவேதா முழுவதுமாக மாட்டிவிட்டாள் அன்பை.

“ஐயோ அன்னி” என பதறினாள்.

“அதெல்லாம் முடியாது நாங்க பழைய அரிசிய பாக்கனும் அதான் இந்த திட்டம்” என சுவேதா கண்ண்டித்தாள். ‘ஆக இதெல்லாம் திட்டமிட்டு நடந்த சதியா’ என மனதில் நினைத்துகொண்டு வெட்கபட்டாள்.

“சரிடா ஆரம்பி” என்பது சுவேதாவின் உத்தரவு.

அவனோ அன்பின்முன் மண்டியிட்டான். அவள் தலைகுணிந்து அமர்ந்திருந்தாள். “அரிசி” என அழைத்தான். அவள் வெட்கத்தை சிந்தினாள்.”நீச்சல் கத்து தர்ரீங்களா மிஸ்” என கன்னத்தை தடவிகொண்டே கேட்க அதை புரிந்த அவள் சுவேதாவின் கட்டில் இருந்து பறந்த பறவையாக நாணம் எனும் சுத்தியால் தகர்த்துவிட்டு ஓடினாள் அவள் அறைக்கு.

“டேய் என்னடா அது நீச்சல்” என்றாள் சுவேதா அங்கு நடந்தவற்றை பார்த்துவிட்டு. “அது அவளுக்கும் எனக்கும் மட்டும் தெரிந்த ரகசியம் அதான் உனக்கு சுகு இருக்கான்ல அவன்கிட்ட கேட்டு தெரிஞ்சுக்கோ” என்று வாய் தவறி சொல்லிவிட்டான்.

“என்னடா சுகுவா அவனுக்கு என்ன” சமாளித்தாள் சுவேதா.

“அம்மா என தங்கச்சி எனக்கு எல்லாம் தெரியும் இதுக்குமேலயும் சமாளிக்க வேணாம். சும்மா சிங்கிள் அப்புடின்னு ரெண்டுபேரும்ஊர ஏமாத்திட்டு சுத்துரீங்களா” என தலையில் கொட்டினான்.

“எப்புடிடா கண்டுபிடிச்ச”

“ஆமா இதுக்கு டிடக்டிவ் வப்பாங்களா! நீங்க ஹாஸ்பிட்டல்ல பன்ன ரொமான்ஸ்தான் ஊரே பாத்துச்சே. இந்த மேடம் சாப்புடலைனு அந்த சார் அழுவாறாம் அப்புறம் ஊட்டிவிடவாராம். அவங்க அழுதுட்டே சாப்புடுவாங்களாம். அப்புறம் யாருக்கமே அடங்காத என தங்கச்சி அந்த சுகு திட்டும்போது அமைதியா இருப்பாங்களாம் இது போதாதா! ஏன் எங்க்கிட்ட சொல்ல என்ன தயக்கம்.”

“என்னடா எல்லாம் தெரிஞ்சும் நீ இப்புடி கேக்குற” என சோகமாக மாறினாள்.

அருகிலிருந்த மஞசு அவளுக்கு வயிற்றில் கூச்சம் ஏற்படுத்திவிட அவளோ நெளிந்தாள்.”ஏய் சும்மா இருடி மஞ்சு ஹா ஹா..” என சிரித்தாள்.

“பின்ன என்னடி எப்ப பாத்தாலும் சோகம்தானா அதான் சுகுவ லவ் பன்றேல்ல அப்புறம் என்னடி நீ சந்தோஷமா இருந்தாதாண்டி நாங்க நிம்மதியா இருப்போம்” என மேலும் கூச்சம் ஏற்படுத்தினாள்.

இவர்களின் அரட்டை சத்தம் வீட்டின் சுவற்றில் முட்ட பார்வதி வெளியே வந்து “சரி அரட்டை அடிச்சது போதும் வந்த சாப்பிடுங்க” என கூறிவிட்டு “யேய் அன்பு வந்து பாத்திரத்த எடுத்துவைடி” என்று சத்தமிட “அம்மா அன்னிய வேலை வாங்காதீங்க நான் எடுத்து வைக்கறேன் வா மஞ்சு” என அவளையும் துனைக்கு அழைத்துகொண்டாள். பின் சந்துருவும் அதில் கலந்துகொள்ள தாமதமாக வந்த அன்பரசிக்கு வேடிக்கை பார்க்கும் வாய்ப்பு மட்டுமே கிடைத்தது.

அன்பும் பார்வதியும் பறிமாற துவங்கினர். ஒருவழியாக திருமன ஜோடிகளை கலாய்த்துகொண்டே சாப்பிட்டு முடித்தனர். பின் சந்துரு கிளம்பி செல்ல ஜன்னல் வழியே பார்த்துகொண்டு நின்றாள். அவன் திரும்பிகூட பார்க்காமல்போனது வருத்தம்தான் அவள் முகத்தில் கவலை குடிகொண்டது.

அவளை பின்னாலிருந்து ஒருகை உசுப்பியது “என்ன அரிசி ஃபீலிங்கா! அவன் இப்போ உனக்கு ஃபோன் பன்னுவான் பாரு” என சுவேதா கூறிய வார்த்தை பொய்க்கவில்லை. அடுத்த நொடியே அழைத்தான். எடுத்துபேச ஆரம்பித்தாள்.

சுவேதாவோ “இதுக்குதான்பா இந்த லவ் பன்றவங்க கூட இருக்ககூடாது” என தலையில் அடித்துகொண்டு தன் ஆறாம் விரலான மொபைலை எடுத்தாள். அடுத்த நொடி அதில் சுகுவின் எண்.

"ம்ம் சொல்லுங்க"

"என்ன அரிசி நான் உனக்கு ஊட்டிவிடலாமுனு பாத்தேன் ஆனா நீ பறிமாறுறேன்னு கெடுத்துட்டியே!"

"ஐயோ அம்மா இருக்காங்க"

"நான் அத்தைகிட்ட ஏற்கனவே சொல்லிட்டேன் அதுக்கு அவங்க அவ சாப்புடுற கிளி சாப்பாட்டுக்கு நீ ஊட்டிவேற விடனுமாக்கும் அப்புடின்னு சொல்லிட்டாங்க ஆமா நீ ஏன் ஒழுங்கா சாப்புட மாட்டேங்குற?"

"இல்லைங்க நான் நல்லாதான் சாப்புடுறேன்"

"அன்னைக்குதான் பாத்தேன்ல என கன்னு முன்னாடிதான டிபன்ல இரண்டு இட்லிய எடுத்துட்டு போன நல்லவேலை உங்க மாமா அதான் என் அப்பாதான் இருந்து உன்னை சாப்பிட வச்சாரு"

அன்புக்கு என்ன சொல்வது என்று தெரியவில்லை.

"இனிமே நீ ஒழுங்கா சாப்புடாம இரு உன்னை வச்சிகிறேன்" என அவன்கூற "டேய் கட்டிக்க போறவள வச்சிகிறேன்னு சொல்லுற"

என அரிசி ஆட்டம்போட்டாலும் அன்பு அதை வெளியே சொல்லாமல் தடுத்தாள்.

“பக்கத்துல யாராவது இருக்காங்கலா” என்றான் ரகசியமாக அவள் சற்று ஏக்கத்துடன் “ம்ஹூம்” என்றாள் மெதுவாக.

“அப்புறம் ஏன்டி லூசு இப்புடி காசுகுடுத்தாதான் பேசுவேன் அப்புடிங்குற மாதிரி பேசற” என திட்டினான்.

அவன் திட்டம் செயல்பட்டது “யாரு நானா அப்புடி பேசறேன் நீதான் ஒருத்தி லவ் பன்றான்னு தெரியாம இருந்துகிட்டு ஏதோ இங்க சாமிகும்பிட வந்த மாதிரியே சுத்துன இதுல பிறந்தநாளுக்கு கேக் வேற வாங்கிகொடுத்துட்ட. அத ஊட்டிவிடனும்மாதும் தோனுச்சா! இந்த லட்சனத்துல இவரு அம்மா முன்னாடி சாப்பாடு ஊட்டிவிடுறாறாம்” என்று பொறிந்து தள்ளவே அலைகற்றையின் அடுத்தபுறம் இருந்த சந்துருவின் சிரிப்பு சத்தம் இவளை அடைந்தது.

“ஏன்டா சிரிக்குற ஓலைபட்டாசு”

“ஒன்னும் இல்லைடி சும்மாதான் எனக்கு முப்பத்திரண்டு பல்லுனு சொன்னாங்க அதான் சரியா இருக்கானு எண்ணிபாக்குறேன்”

“நான் வந்து எண்ணிவிடட்டுமா?” என்றாள் மீண்டும் முழுதாக மாறிவிட்டாள் அரிசியாக அதை சந்துரு ரசித்துகொண்டுருந்தான்.

“இல்லடி நானே எண்ணிட்டேன் சரியாதான் இருக்கு நீ போ போய் அந்த ரூம்குள்ள அடஞ்சிக்கோ” என்றான்.

“ஆமா வேற எங்க போறதாம்”

“ஏண்டி ஒருத்தன் உன்னையே நினைச்சு வாழ்ந்துட்டு வந்தானே. சரி அத்த பொண்ணு இருக்கானு இங்க ஃபேக்டரியே கட்ட முடியாத இடத்துல நான் கட்டியே தீருவேன்னு வந்தானே அவன்கூட நாலு வார்த்தை பேசவேணாம். ஒரு சின்ன சிரிப்ப அதுகூட இல்ல சரி அத விடு ஏதோ திருடன் வந்த மாதிரி ஏண்டி என்ன அப்புடி பாத்த”

“இத்தன நாள் ஒருஃபோன் கூட பன்னாம இருந்துட்டு இப்போ வந்து கேக் வாங்கிகுடுத்து ஃபேகடரி கட்டுனா மயங்கிடுவாங்கலாக்கும்.” என்றாள் அவள் தன்னவனின் அரவனைப்பில் தன்னை மறந்து பேசிகொண்டிருந்தாள்..

“அப்போ நான் உன்ன பாக்க வராம இருந்திருந்தா என்னடி பன்னிருப்ப?” என அவன் கேட்டதும் அவளால் நினைத்துகூட பார்க்கமுடியவில்லை. சந்துரு அந்த அளவுக்கு அவளை மாற்றியிருந்தான்.

“அப்புடியெல்லாம் பேசாதீங்க” என மீண்டும் ங்க சேர்த்தாள் அன்பரசி.

“சரிங்க அன்பு மேடம் அரிசி வந்ததும் சொல்லுங்க நான் கிளம்புறேன்” என வைத்தான். அதற்கு முன் ஒரு முத்தம் வந்துசேர்ந்தது அவளிடமிருந்து அதை அவன் எதிர்பார்க்கவில்லை.

பதிலுக்கு ஒருமுத்தம் கொடுக்க நினைத்து பார்த்து திரும்ப அருகில் ஒரு பாட்டி நின்றுகொண்டு குறுகுறன்னு பாத்துகிட்டு இருக்க “என்ன பாட்டி” எனறான்.

“இல்ல ஒன்னுமில்லைபா” என நடந்தார்.போகும்போது திரும்ப திரும்ப வேறு பார்த்துகொண்டார். ‘என்னடா அச்சு இந்த ஊருக்கு’ என்று நடக்கும்போதுதான் தெரிந்தது அந்த பாட்டி இவன் தனியாக பேசியதை பார்த்து பச்சை சட்டைகாரன் என நினைத்திருக்குமென்று.

தலையில் மெதுவாக தட்டிகொண்டு அப்படியே தலையை கோதிகொண்டு அழகாக நடந்தான். அங்கிருந்த சில மங்கைகளின் கண்கள் அவனை ரசிக்காமல் இல்லை. நல்லவேலை அரிசிக்கு தெரியாது.(நீங்களும் சொல்லிடாதீங்க)

தாத்தா வீட்டினை அடைய அங்கு சுகு உறங்கிகொண்டிருந்தான். இல்லை நடித்துகொண்டிருந்தான். அருகில் இருந்த கைபேசியில் முப்பது மிஸ்ட்டுகால். ஆனால் அந்த கைபேசியின் ஒலி பறிக்கபட்டிருந்தது.அதனால் அவனுக்கு தெரியவில்லை.

அந்த மொபைலை எடுக்க அதில் முப்பதும் சுவேதாதான். பார்த்துகொண்டிருக்கும்போதே மீண்டும் ஒலித்தது. “டேய் சுகு சுவேதா கால் பன்றாடா” என்று அவளை எழுப்பினான்.

“அவகிட்டக்காடா லூசு நீ போய் வேற வேலைய பாருடா” என கண்களை திறக்காமல் புரண்டு படுத்தான்.

சந்துருவுக்கு மனம் பொறுக்கவில்லை. “ஹலோ” என்றான்.

“ஏன்டா ஃபோன் கட் பன்ற எதாவதுகோபம்னா வந்த அடிச்சிறுடா அத விட்டுட்டு இப்புடி பேசாம இருந்தா நான் அபி அம்மாகிட்ட போயிடுவேன்! இப்ப என்ன நீசொல்றத நான் கேக்கனுமா! சரிடா நீ சொன்ன மாதிரியே செய்றேன் ஆனா சாவுகூட சந்துரு அண்ணா கல்யானத்துக்கு அப்புறம்தான் செய்வேன்” என்றுபேசும்போதே அழுதாள்.

“சுவேதா நான் சந்துரு! ஆமா என்ன பிரட்சனை உங்களுக்கு”

“இல்லனா ஒன்னும் இல்லை சும்மா சாதாரன சண்டைதான்” என கட் செய்தாள். எதுவாக இருந்தாலும் பட்டென கூறும் சுவேதா ஏதோமறைக்கிறாள்.என்பதுமட்டும் சந்துருவால் ஏற்கமுடியவில்லை.அவளாக கூறுவாள் என போய் அமர்ந்தான்.

# அத்தியாயம் - 46

கடிகார முள்ளோ தன் விளையாட்டை துவங்கிவிட்டது. அந்த ஆதவனும் இந்த காதலை பார்த்து ரசிக்க சில தினங்கள் வந்துபோய்விட்டான். அன்பரசியோ ஆசையாக அந்த நாட்காட்டியை தன் மென்கரங்களால் கிழித்தாள். இரவில் தன்னவனுடன் பேசிகலைத்ததாள்.மன்னிக்கவும் அவன் மட்டும்தான் பேசினான். அந்த மயக்கத்தில் உறங்கிபோனவள் அதிகாலை சேவலுக்கு பதிலாக சுவேதாவின் சுவையான பூஸ்ட் வாசனையில் எழுந்தாள்.

“அரிசி அரிசி எழுந்திருங்க” சூடான பூஸ்ட் காத்துகொண்டிருக்க எழுந்தவள் பதறினாள்.

“ஐயோ அன்னி நீங்க எனக்கு” என்றாள்.

“ஹலோ கல்யான பொண்ணு இது உங்க ஆளோட உத்தரவு நியமா பாத்தா அவன்தான் வந்து தரனும் ஆனா அவனால முடியாதே அதான் என அண்ணாவுக்கு பதிலா நான்” என்று அவள் கையில் திணித்தாள்.

“ஐயோ அன்னி இருங்க நான் பிரஸ் பன்னிட்டு வாரேன்” இது அன்பு

“ஐய்யோடா! சும்மா குடிங்க அரிசி இந்த பூஸ்ட்டுக்கு தான என் அண்ணாவ வேப்பங்க்குச்சில பல்லு விளக்க வச்சு வாய புண்ணாக்குனீங்க” என்று தலையில் செல்லமாக கொட்டினாள்.

‘ஐயோ இன்னும் என்னல்லாம் சொல்லிருக்காரோ’ என வெட்கபட்டாள்.

பின் வேகமாக எழுந்து வெளியே ஓடிவந்தாள் கையில் ஒரு பிரஸ். வந்தவளுக்கு இன்ப அதிர்ச்சி பந்தல் அலங்காரம் துவங்கியிருந்தது. அனைவரும் அன்பரசியையே பார்ப்பதுபோல அவளுக்கு ஒரு உணர்வு. சந்துருவின் பின்னால் மறைந்துகொள்ளவேண்டும் என தோன்றியது

திரும்ப வீட்டினுள் வர நினைத்து கால்களை வைத்தாள். அப்போது பின்னாலிருந்த ஒரு உருவம் அவளது கண்களை பொத்தியது. “சந்துரு விடுங்க எல்லாரும் பாக்குறாங்க” என நெளிந்தாள்.

“அடிபாவி என்னவிட அந்த ஓலைபட்டாசுதான் முக்கியமா போயிட்டானா?” என்று குரல் கேட்க “சே மலர் நீயா” என்றாள்.

“என்னது சே மலரா?! என்னடி ஆச்சு உனக்கு” என்றாள் மலை.

“ஒன்னமில்லடி இப்போதான் எந்திரிச்சேன் அதான்” என்றாள் அன்பு

“அப்போ நைட் புல்லா ஒரே ரொமான்ஸ்னு சொல்லடி” என்று அவளது தோளில் கைவைத்து அழைத்துசென்றாள். அந்த பளிங்குபோன்ற நீரின் அருகில் சென்றதும் தன் தோழியின் முகத்தை கழுவினாள். இது உள்ளருந்து பார்த்த பார்வதிக்கு சிறுவயது தோழிகளை பார்த்ததுபோல இருந்தது இன்னும் சில நாட்களிலேயே ஒரு குழந்தைக்கு தாயாகபோகும் தன் குழந்தையை எண்ணி பூரித்தார்.

“என்னடி பதிலையே காணோம்” மலை விடுவதாய் இல்லை.

“அத ஏன் கேக்குறீங்க அக்கா! இந்த பொண்ணு எங்க அண்ணா கனவுல வந்து தூங்கவேவிடமாட்டேங்க்குதாம் பாவம் புலம்புறான் என்னனு கேட்டு சொல்லுங்க! அதுக்குமுன்னாடி இத குடி அரிசி” என அந்த பூஸ்டை நீட்டினாள்.

அதை வாங்கிய அரிசி தன் தோழிக்கு ஒரு டம்ளரில் ஊற்றினாள். “சந்துரு உங்க அண்ணாவா” என்றாள் மலை.

“ஆமா அக்கா” இது சுவேதா

“அப்புறம் ஏன் என்ன அக்கானு கூப்புடுறீங்க” என்றாள் மலை.

“பின்ன எப்படிக்கா கூப்புடுறது” என்றாள் சுவேதா சந்தேகமாக.

“அன்ப எப்புடி கூப்புடுவீங்க”

“அரசின்னு!” என கூறியவள் நாக்கை கடித்துகொண்டு “ஐயோ அன்னி மன்னிச்சுடுங்க, அன்னினு கூப்பிடுவேன்”

“என்னது அரிசியா” என்றாள் மலை.

“ஆமா அது எங்க அண்ணாவுக்கு ரொம்ப பிடிச்ச பேரு” என அன்பை பார்த்தாள். அவள் தனக்கு கிடைத்த பூஸ்டை ரசித்துகொண்டிருந்தாலா இல்லை கனவில் இருந்தாளோ தெரியவில்லை.

“அரிசிகூட ஒரு வானரம் சுத்திகிட்டு இருந்திருக்குமே அதபத்தி உங்க அண்ணா சொல்லலையா” என்றாள் மலை.

“ஆமா மலைதான! அவங்களதான் நான் தேடிகிட்டு இருக்கேன் அவங்க கால்ல விழுந்து அந்த வித்தையெல்லாம் கத்துகனும்!

அட்லீஸ்ட் மரமாவது ஏற கத்துகனும் எங்க அன்னி சொல்லிதரமாட்டேங்குராங்க கேட்டா நான் கெட்டுபோயிடுவேனாம்" என்று அன்பின் கன்னத்தில் கிள்ள அப்போதுதான் சுயநினைவுக்கு வந்தாள்.

"கன்டிப்பா கத்துதாரேன் ஒரு அப்லிகேஷன் போட்டு சேந்துகோங்க" இது மலை.

"அப்போ நீங்கதான் அந்த மலையா சாரி சாரி மலர்விழியா" என்றாள்

"மலைனே கூப்பிடுங்க நான் தப்பா எடுத்துங்கமாட்டேன் என்னடி அரிசி நான் சொல்றது" என அவளது முகத்தில் இருந்த பூஸ்ட் மீசையை துடைத்துவிட்டாள் மலை. "ஒழுங்க காஃபிகூட குடிக்க தெரியலடி அரிசி உனக்கு" என்று மீண்டும் முகத்தை கழுவினாள்.

அந்த பாசத்தில் சந்துருதான் நினைவுக்கு வந்தான் "ஒழுங்கா ஒரு ஐஸ் சாப்புட தெரியுதாடி உனக்கு முகம் புல்லா" என துடைத்துவிடுவான். அதனால் அன்பரசி அதிஷ்டமானவள் என நினைத்துகொண்டாள்.

"என்னடி மந்திரிச்சுவிட்டமாதிரி திரியுர! கல்யான கலை வந்துடுச்சுடி உனக்கு" என தன் தோழிக்கு நெட்டிமுறித்தாள் சுவேதாவுக்கு தன் அன்னை அன்று செய்த நியாபகம் வந்தது கண்களின் ஓரத்தில்

கண்ணீரும். ஆனால் அவள் கண்ணீரை மறைக்கும் வித்தையில் தேர்ச்சிபெற்றவள் அல்லவா.

“ஏய் கொஞ்சம் ஒழுக்கமா இருடி இப்புடி வெளிய நின்னுகிட்டு அரட்டை அடிச்சிட்டு இருக்க” என்று திட்டினார் பார்வதி இருவரும் மௌனமாக இருக்க வக்காலத்து வாங்கும் சுவேதாவை அழுகை பேசவிடாமல் செய்ய அவளும் மௌனமாக இருந்தாள்.

“ஏண்டி இன்னும் ரெண்டுநாள்ள கல்யானத்த வச்சுகிட்டு இப்புடி வெயிலடிக்குற வரைக்குமா தூங்குவ; மாப்பிள்ளை வீட்டுல என்ன நினைப்பாங்க ஒழுங்கா போய் குளிடி முதல்ல” என திட்டிவிட்டு “உங்க ரெண்டுபேத்துக்கும் தனியா சொல்லனுமா வந்து காஃபி குடிங்க” என்றதும் சுவேதாவும் மலரும் கோழிபின்னால் போகும் குஞ்சுகள்போல அமைதியாக நடந்துசென்றனர். பார்வதியோ லேசாக சிரித்துகொண்டே சென்றார்.

அன்பரசியோ ஏதோ நினைவில் குளியலறைசெல்ல அந்த கதவை தட்டினாள் சுவேதா. “அரிசி குளிச்சிட்டு உள்ளயே தங்கிடுறதா முடிவுபன்னிட்டீங்களா”

“ஏன் அன்னி?” உள்ளிருந்து குரல்மட்டும் வந்தது.

*“டிர்ஸ் எடுக்காம போயிட்டீங்களே அதான் கேட்டேன்.” என மூன்று செட் துணிகளை எடுத்து நீட்டினாள். “அன்னி இது எங்க அம்மாவோட பட்டு புடவைங்க!” எனறாள்.*

*“அட அம்மாதான் குடுக்க சொன்னாங்க எனக்கு தெரியதுப்பா” என ஓடிவிட்டாள்.*

*ஐயோ அவர் நினைப்புல டிரஸ்ஸகூட மறந்துட்டேனே என தலையில் அடித்துகொண்டு அந்த திரையை விலக்க அவளுக்கு அதிர்ச்சி. “நீங்க எப்புடி இங்க” என்று அவள்கூறும் முன்னே இதழோடு இதழ் பதித்தான். அவள் அவனை தடுக்க முடியவில்லை. அப்படியே வேகமாக மூச்சினைவிட்டாள். உடலில் ஒருவித நடுக்கம். கண்கள் அகல விரிந்தன.மேலும் தன்னவளை மிக இருக்கமாக கட்டியனைத்தான்.*

*‘மங்கையவள் தன்னவளாய் மாறிய*

*காலம் மதிமுகம் தன்னை*

*கவர எண்ணி ஒழிந்தவன்*

*அந்த குளிர்மேனி காணுமறைதனில்!*

*கண்டது அவள் கார்கூந்தல்*

*தடுமாறிய மனதின் காதல் ரீங்காரம்*

*ஆசையாய் ஒரு ஓசை அனைத்தான்*

*அவள் செவ்விதழை*

*இசைந்தாள் அந்த மங்கை*

*இருக்கத்தில் காதலை காட்டினான்!*

*காந்த விழியழகி ஈர்த்தாள் அவன் காதலை*

*அவனை தள்ளிவிட்டு வெட்கி*

*தலைகுணிந்து நின்றாள்.”*

*“சந்துரு என்ன பன்ற முதல்ல வெளிய போ” என்றாள் அவனோ சிரிக்க மட்டுமே செய்தான்.*

“அம்மாவ கூப்பிட்டுவேன்” என்றாள் வெட்கத்துடன்

“சரி கூப்பிடு” என்று கைகட்டி அவள் அழகை ரசித்துகொண்டு நின்றான்.

“நான் குளிக்கனும் நீ போ” என்று சினுங்கினாள்.

“நான் குளிக்க வைக்குறேனே” என அவள் கன்னத்தை கிள்ளினான்.

“அம்மா திட்டுவாங்க நீங்க போங்க” என்று தலைகுனிந்தவாறே கூறனாள்.

“அப்போ எனக்கு நீச்சல் சொல்லிகுடு” என்று உதட்டை தடவிடானான்.

அவள் உதட்டு அசைவில் அவளுக்கு இருந்த வெட்கம் புரிந்தது. “கல்யானத்துக்கு அப்புறம்தான்” என்றாள்.

“சரி கல்யானத்துக்கு அப்புறம் நீ குடு இப்போ நான்” என மீண்டும் அவனருகில் வர அங்கிருந்த தண்ணீரை முகந்து அவன்மீது ஊற்றினாள். அவனும் கானலாக தண்ணீரில் மறைந்தான்.

‘கல்யான கலை நாணம்

ஆசை மையல் கொண்டது

அவன்மீது திருடன்

திருடுகிறான் இவளை கனவில்

கள்ளமுத்தம் அவனாக தர ஆசை

காமமில்லா காதல் அரவனைப்புக்காக

ஏங்கும் காதலி கலை கல்யானகலை

கானலாக மறைந்தான் கள்வன்’

“என்ன அண்ணி யாருகூட பேசிகிட்டு இருக்கீங்க; கல்யானத்துக்கு அப்புறம் என்ன குடுக்க போறீங்க என அண்ணாவுக்கு” என்று கேலியாக கூறினாள். அவள் இன்னும் அங்கிருந்து போகவில்லை.

“இல்ல அன்னி சும்மா பாட்டு பாடிட்டு இருந்தேன்” என சமாளித்தாள் வெட்கி நாவை கடித்த பிறகு.

“ஆமா நாங்க பிறந்ததுல இருந்து பாட்டே கேட்டதில்லைல நல்லா சமாளிக்குறீங்க அரிசி சரி சீக்கிரம் வாங்க இன்னும் ஒரு நாளைக்கு அண்ணாவ பாக்க முடியாது. இப்போ வந்தா ஒருதடவ பாத்துகலாம்” என்றாள்.

அப்போதுதான் அன்புக்கு நேரத்தின் முக்கியதுவம் தெரிந்தது. அவனை ஒருமுறை பார்க்க நினைத்து வேகமாக தண்ணீரை ஊற்றினாள். அந்த நீரும் அவளை ஏக்கமாக பார்த்தது.

அவசரமாக வெளியே வந்தாள். ஆனால் அவளுக்காக காத்திரிந்தது மலர் மட்டுமே. அனைவரையும் தேடினாள். “என்னடி தேடுற” இது மலை.

“எல்லாரும் போயிட்டாங்களா”

“ஆமாடி போயிட்டாங்க உனக்கு துனையாதான் என்ன இருக்க சொன்னாங்க” என்றாள் அந்த ஆப்பிளை கொறித்துகொண்டே. அன்பின் முகம் சோகமாக மாறியது. வேகமாக ஓடிசென்று கட்டிலில் அமர்ந்துகொண்டாள்.

அப்போது அங்கு வந்த மலர்விழி அன்பின் கைபேசியை எடுக்க ஏக்கமாக பார்த்தாள் அன்பு. “மலர் கொஞ்சநேரம்டி ப்ளீஸ்” என்றாள்.

"ஐயோ ஆத்தா உங்க அம்மாவுக்கு தெரிஞ்சா அவ்வளவுதான். பேசாம இரு அன்பு" என்றாள்.

"பத்துநிமிசம்டி" என கெஞ்சினாள். தனக்காக எதையும் செய்யும் தோழி சகோதரி இப்படி சோகமாக கெஞ்சுவதை மலரால் தாங்க முடியவில்லை. இருந்தாலும் ஊரின் கட்டுபாட்டை மீறமுடியவில்லை. ஓர் பாச போர் நிகழ்ந்தது.

"சரிடி நான் ஃபோன வச்சுருக்கேன் அவகளா பத்துநிமிசத்துல கால் பன்னா தரேன் இல்லைனா இல்லை" என்று அவளருகில் அமர்ந்தாள்.

தாத்தாவின் வீட்டில் வைத்து ஊர்கூடி சம்பிரதாயங்கள் துவங்கின. இது மாப்பிளைக்கு காப்புகட்டும் தினம். திருமனத்திற்கு 45 நாட்கள் முன்னால் செய்ய வேண்டிய சம்பிரதாயம். இதுவே மாப்பிளை வெளியூர் என்றால் ஒருதினத்திற்கு முன் காப்பு கட்டிவிடுவர். அதில் விரதம்வேறு மேற்கொள்ள வேண்டும் அதிலும் கடுமையானது இல்லை கொடுமையானது என்னவெனாறால் பொண்ணும் பையனும் காப்பு கட்டியபிறகு பார்க்கவோ பேசிகொள்ளவோ கூடாது.

அன்பரசி ஃபோனை பார்த்துகொண்டே இருந்தாள். அவளுக்கு அழுகை வந்தது. "ஏய் அன்பு ஏண்டி அழற ஒருநாள்தானடி

நானும்தான் அவரை பாக்காம 45 நாள் இருந்தேன் தெரியுமா” என சமாதானபடுத்த முயன்றாள். ஆனால் முடியவில்லை.

“என்னடா சொல்ற” பதறினான் சந்துரு.

“ஆமா மச்சி ரொம்ப கஷ்டபட்டு கண்டுபிடிச்சேன் ரெண்டு கிளவிங்க பேசிகிட்டு இருந்துச்சுங்க”

“ஐயோ இருடா நான் அன்புகிட்ட பேசிட்டு வந்துடுறேன்”

“உன் மொபைல உங்க மாமாதான் வச்சுருக்காரு பாரு” என அவன் கூற அது போஸின் அருகில் இருந்தது.

“சரிடா பாலு ஒன்னு பன்னு! நீ எனக்கு ஃபோன் பன்னி சந்துருட்ட முக்கியமான விஷயம் பேசனும்னு சொல்லு” என்றான்.

அதற்குள் போஸ் சந்துருவை அழைத்து. “இந்தாங்க மாப்பிள்ளை அன்புகிட்ட எதுன்னா பேசனுமனா பேசிக்கோங்க இனி கல்யானத்துக்கு அப்புறம்தான்!” என குடுத்துவிட்டு “யாருகிட்டயும் சொல்லாத்தீங்க ஏதோ பிசினஸ் பேசுற மாதிரி வெளிய போய் பேசுங்க” என்றார்.

*உடனே வெளியில் உயிரில்லாத ஃபோனை எடுத்து காதில் வைத்துகொண்டு கிளம்பினான். வெளியில் வந்ததும் கான்டக்டில் தேட நேரமில்லாமல் வேகமாக தட்டினான். தன் இதயத்திலிருந்து வந்த எண்களை.*

*அன்பரசி ஏக்கமாக பாத்துகொண்டிருக்க அடித்தது காதல்மணியோசை.*

## *அத்தியாயம்* - 47

*தாயின் வருகைக்கு காத்துகொண்டிருந்த கன்றுகுட்டிபோல அவனது அழைப்பு வந்ததும் தன் தோழியிடமிரிந்து அதை வாங்கினாள். பறித்தாள் எனபதே உண்மை.*

*"ஹலோ அரிசி?"*

*அவனது குரல் கேட்ட மயக்கத்தில் "ம்ம்" என்றாள்.*

“என்ன மம். எதுக்கு நீ இங்க வரலை உன்ன நான் எவ்வளவு தேடுனேன் தெரியுமா?” என்று கூற “இல்லைங்க நான் வந்து மலை” என பிதற்றினாள்.

“ஐயோ அரிசி இன்னும் ஒருநாளைக்கு நான் உன்ன நினைக்க மட்டும்தான் முடியும் ப்ளீஸ் எதாவது பேசுடி நானும் உன் குரல கேக்கனும்” என்றான்

“அது வந்துங்க” என இழுக்க “அட போ அன்பு நான் ஃபோன வைக்குறேன்” என சோகமாக கூறினான். அந்த சோகம் இவளை சூழ்ந்து இவளது இதயத்தை கனக்க செய்தது.

“டேய் இருடா வச்சுடாத”

“அப்பாடி அரிசி பேக் டூத பார்ஃம் ஐ ஜாலி” என்று கத்த அங்கிருந்த கூட்டம் அவனை பார்த்தது. “மாப்பிளை என்ன காட்டிகொடுத்திடாதீங்க” எனபதுபோல பார்த்தார் போஸ். அதை புரிந்துகொண்டவன் “இல்ல மாமா என் பழைய பிரண்ட பாக்கபோறேன் அதான்” என்று சமாளித்தான். அந்த பழைய சினேகம் அரிசி என போஸுக்கும் சந்துருவுக்கும் மட்டுமே தெரிந்த ரகசியமாகும். ஆனால் போஸின் அருகிலிருந்த பார்வதி “ஏங்க ஊருகாரங்களுக்கு தெரிஞ்சுடபோதுங்க” என தன் கனவனை கன்டித்தாள்.

*“ஆமா நான் காப்பு கட்டி இருந்தப்போ பம்புசெட் பக்கம் வந்து சைட் அடிச்சது யாரு?! அவளோட பேர் பார்வதின்னு நினைக்குறேன்” என பார்வதியை கிள்ள “ஏங்க நீங்களே புள்ளைங்கல கெடுத்துடுவீங்க போல” என கன்டித்தார் பார்வதி.*

*ஆனால் அங்கிருந்த பலரும் எதையோ எண்ணி சிரித்துகொண்டிருந்தனர். அவர்களுக்கு என்ன வசந்தகால நினைவுகலோ! கேட்டாள் எதுத்துபேசாதடி அப்புடின்னு சொல்லுவாங்க நமக்கு எதுக்கு வம்பு.*

*“பரவாயில்லடி வாடா போடான்னு கூப்பிட ஆரம்பிச்சுட்ட” என்றான்*

*“ஐயோ மன்னிச்சிடுங்க”*

*“ஏய் எனக்கு இது பிடிச்சுருக்குடி அப்புடியே கூப்பிடு”*

*“இல்லைங்க வேணாம் நான் ஏதோ தெரியாம சொல்லிட்டேன்” என அவள்கூற “அம்மா திட்டுவாங்க அதான?” என்று முடித்தான்.*

*அவள் “ம்ம்” என்றாள்.*

“சுத்தம்! சரி விடு ஆமா உங்க ஊர்ல என்ன இது விசித்திரமான சம்பிரதாயமா இருக்கு எல்லாரும் மாப்பிளையையும் பொண்ணையும் கடைசிநாளைக்கு முன்னாடி நல்லா பேசிக்க சொல்லுவாங்க ஆனா இங்க எல்லாம் தலைகீழா இருக்கு” என்றான்.

“அது ஊர் சம்பிரதாயம் அத கிண்டல் பன்னாதீங்க”

“அதுசரி வேணும்னா தோப்புகரணம் போடவா?” என்றான் கிண்டல் கலந்த குரலில் மறுமுனையில் லேசான சிரிப்பு சத்தம் வந்தது அவளிடமிருந்து.

அதை ரசித்தவன் “சரி என்னமா அது சம்பிரதாயம் சொல்லுகேப்போம்” என்று ஃபோனை ஒருகாதிலிருந்து மறுகாதுக்கு மாற்றினான்.

“இப்போவா?” என்றாள்.

“ஆமாங்க மேடம் பின்ன இதுக்கு என்ன மேடையா போடனும்! வேணும்னா அதையும் செஞ்சிடலாம்” என்று சிரித்தான்.

தன்னவன் காதலுடன் பேசுவான் என்று எதிராபார்த்தால் ஆனால் காதலன் தன்னிடம் அந்த குறும்பு அரிசியின் வார்த்தையை விரும்புகிறான் என்று புரிந்தது.

“அது வந்துங்க முன்னாடி இங்க ஒரு ராஜா இருந்தாராம்” என ஆரம்பித்தாள்.

“ஓ இது ராஜா காலத்து சம்பிரதாயமா?” என்றான்

“டேய் அமைதியா கேளுடா இல்லைனா நான் சொல்லமாட்டேன்” என சினுங்கியவள் ஒரு வேகத்தில் டேய் என கூறியது நினைவுக்கு வர “ஐயோ தெரியாம சொல்லிட்டேங்க சாரி” என்றாள்.

“அத விடுங்க ஐயோ அரிசியா அன்பானு தெரியலையே” என்று சிரித்தான்

“அரிசிதான்” என்றாள் வெட்கத்துடன்.

“சரி மேல சொல்லுங்க அன்பு”

அவளுக்கு மனதில் ஒரு வலி “போடா நான் வைக்குறேன்” என்றாள்.

“ம்ம் இதுதான் மைடியர் அரிசி இப்ப சொல்லு”

அவள் கள்ளத்தனமாக சிரித்துகொண்டே "அந்த ராஜாவுக்கு இங்க ஒரு பொண்ண பிடிச்சுபோயிடுச்சாம்."

"அது எப்புடிடி" என்றான்

"அவர் ஊர சுத்திபாக்க மாறுவேசத்துல வந்தாராம் அப்போ பாத்துருக்காரு"

"ஓ அவர் சைட் அடிக்க வந்தாருன்னு சொல்லு"

"டேய் ஒதவிழும் அப்போ நீ சைட் அடிப்பியா" என்று கோபமானாள்.

"ஆமா சைட் அடிச்சுருக்கேன்டி"

அதைகேட்டு அரிசி அமைதியாக இருந்தாள். "ஹலோ யாரன்னு கேக்க மாட்டியா"

"ம்ம் சொல்லவேணாம் ப்ளீஸ்" என்று மறுத்தாள்.

"ஹே அவ உன்னவிட அழகா இருப்பாடி"

“அப்போ நீ அவளையே கட்டிக்கோ எனகூட பேசாத” என்று கோபமானாள்.

“ஐயோ அந்த ஒருகை சட்டை போட்டுகிட்டு பைகிழிஞ்ச சட்டை, அப்புறம் வாயில அந்தபுளியங்கா, அதுலையும் அந்த பாவாடைய வேட்டிமாதிரி மடிச்சுகட்டியிருந்தா பாரு அய்யோ அததான் நான் முதல்ல சைட் அடிச்ச பொண்ணு அதுக்குஅப்புறம் யாரும் அந்த அளவுக்கு அழகு இல்லடி” என பனிமலையை தூக்கி வைத்துவிட அவள் உருகிபோய்விட்டாள்.

“இன்னும் நியாபகம் இருக்காடா” என்றாள் குறும்பாக.

“சரிங்க மேடம் நம்ம கதையவிடுங்க அந்த ராஜா டாவ் அடிச்சிட்டு அப்புறம் என்ன பன்னாரு”

“ம்ம் அந்த பொண்ண் அவ்வளவு அழகா இருப்பாங்கலாம் அன்னைக்கு தண்ணி எடுக்க போனப்போ அந்த ராஜா பாத்துருக்காரு, அப்புறம் நல்லா சீரோட வந்து பொண்ணுகேட்டுருக்காங்க”

“பார்டா அப்புறம்”

“ஊர்ல எல்லாருக்கும் சம்மதமாம் ஒரு வழியா நிச்சயம் முடிச்சுட்டாங்களாம்”

“ம்ம் அப்புறம் என்ன ஆச்சு கல்யானம் பன்னிகிட்டு சந்தோஷமா இருந்தாங்களா”

“குறுக்க பேசாதடா”

“சரிங்க அரிசி மேடம்”

“அப்போ ஒருநாள் அந்த ராஜாவும் அந்த பொண்ணும் குளத்துகரையில சந்திச்சு பேசிட்டு இருந்துருக்காங்க! அவங்க பேசினதுல நேரம் போறதே தெரியலையாம். அப்போ அங்க ஒரு புறா ஒன்னு வந்துச்சாம்.”

“ம்ம்”

“அத ராஜா எடுத்து பாக்க அதுல ஒரு தூது அனுப்பிருந்தாங்களாம். அத எடுத்து படிச்சா ஒரு பெரிய மன்னர் இந்த நாட்டுமேல போர் தொடுத்து வரபோறதா ஓலையில இருந்துச்சாம். அப்போ அந்த விசயத்த தன்னோட காதலிகிட்ட சொல்லிருக்காரு.”

“ஐயோ அப்புறம்”

“அந்த மன்னர்கூட போர் செஞ்ச யாரும் உயிரோண இருந்தது இல்லை. அந்த பொண்ணு அழுதுச்சாம். உனக்கு வேற கல்யானம் ஏற்பாடு பன்றேன் பொண்ணி. அப்புடின்னு அவர் எழுந்திரிக்க. அவ நான் சுமங்கலியா செத்துடுறேன் அப்புடின்னு அந்த ராஜாவோட கத்திய எடுத்து குத்திகிட்டாலாம்”

“அச்சச்சோ!”

“ஐயோ பொண்ணி ஏன்டி இப்புடிபன்ன நான் சும்மா உன்கூட விளையாடினேன்டி அப்புடின்னு அழுதாறாம் அப்போதான் அவ தப்பு பன்னிடானு தெரிஞ்சதாம்.அவ செத்துபோயிட்டா, அந்த கவலையில மன்னர் தனக்கு கீழ இருக்குற ஊர எல்லாம் மக்களுக்கு செப்பு பட்டயத்துல எழுதி குடுத்துட்டு ஒரு ஆத்துல போய் கல்ல கட்டிகிட்டு குதிச்சுட்டாராம்”

“அய்யோ ஜோடிய பிரிச்சுட்டியே அரிசி”

“என்ன?”

“ஒன்னுமில்ல சொல்லு”

“அதுல இருந்துதான் இந்த கட்டுபாடு எங்க ஊர்ல” என முடித்தாள். அவனோ கேளியாக சிரித்தான்.

“ஏன்டா சிரிக்குற”

“இல்ல நல்லா கத சொல்லுறப்பா! நான் இங்க உங்க அப்பாகிட்ட கேட்டேன் அவரு வேறமாதிரி சொன்னாரு” என அவன்கூற நாக்கை கடித்தாள்.மனதில் ஐயோ எங்க அப்பா ஊர் மானத்த வாங்குறாரே

“என்ன சொன்னாரு” என்றாள்.

“அதயும் உன் வாயால ஒருதடவ கேக்கனும்னு ஆசையா இருக்கு நீயே சொல்லிடு” என்றான்.

வேறு வழியில்லாமல் மாட்டிகொண்டாள். “சரிப்பா மன்னர்லாம் இல்ல ஆனா பொண்ணி உண்மை”

சந்துருவின் மனதில் ‘அட நான் சும்மாதான போட்டு வாங்குனேன் இது என்ன இப்புடி ஒரு பூதம் கிளம்புது’ என ஓடியது. அவளோ கூற ஆரம்பித்தாள்.

“பொண்ணினு ஒருத்தங்க இருந்தாங்களாம். நல்ல அழகா இருப்பாங்க ஆனா கருப்பு அதனால யாரும் பொண்ணுகேட்டு வரலையாம். அப்போ ஏதோ மந்தாகினி இலையாம் அத அரைச்சு குளிக்க வச்சுருக்காங்க. அப்புடியே சிவாஜிபட ரஜினி மாதிரி

பளிச்சுனு ஆகிட்டாங்கலாம்." அப்போ நிறைய பன்னைகாரங்க வந்துபொண்ணு கேட்டுருக்காங்க. அதுல ஒருத்தருக்கு பேசி முடிச்சுருக்காங்க"

'ம்ம் சொல்லு"

"சந்துரு சிரிக்காத"

"நான் சிரிக்கலப்பா நீ சொல்லு" என வாயை பொத்திகொண்டான்.

"ம்ம்! ஆனா அந்த பொண்ணி குளிக்குறதுக்கு முன்னாடி அவரு வந்து பாத்துட்டு! அந்த பொண்ணுகிட்டயே பொண்ணி இல்லையானு கேட்டுருக்காரு பாவம். அவ அவரு கால்ல விழுந்து அழுதாலாம். அப்பறம் அவரு சத்தம்போட்டு கல்யானத்த நிறுத்த அந்த பொண்ணு அவர் நினைப்புலேயே கடைசிவரைக்கும் வாழ்ந்து இறந்துட்டாங்கலாம். பாவம்ல அவங்க!" என்று பறிதாப்பட்டாள்.

"நான்தான் பாவம்னு நினைக்குறேன்! சும்மா உங்க்கிட்ட போட்டு வாங்குனேன் ஹா ஹா! உங்க அப்பாகிட்ட நான் தைரியமா பேசி நீ பாத்துருக்கியா அப்புறம் எப்புடி இத கேட்டுருப்பேன் கொஞ்சமாவதுயோசிக்கமாட்டியா. என அரிசினா எவ்வளவு சார்ப்பா இருப்பா தெரியுமா?"

“அரிசிதான் வேனும்னா என்ன ஏனடா கட்டிக்குற” லேசான கோபம்

“நீதானடி அந்த அரிசி! இந்த கோபம் அவளோடதுதான்! சரி அதவிடு நீயாவது ஒரிஜினல் கலரா இல்ல எதுவும் மந்தாகினியா” என்றான்

“ஏன் நான் கருப்பா இருந்தா கட்டிக்கமாட்டியா”

“இல்ல கல்யானத்துக்கு சிகப்பு சேலை வாங்கிவச்சுருக்கேன். நீ கலர மாத்திகிட்டா வேற எடுக்கனும் அதான்”

மௌனமாக இருந்தாள்.

“என்னம்மா பேச்சயே காணோம்” என்றான். “ஒன்னமில்லை” குரல் கனத்தது. அவன் புரிந்துகொண்டான்.

“ஏய் லூசு எனக்கு பிடிச்சதே அந்த அழுக்கா எல்லாரையும் அழ வைக்குற அரிசியதான் நான் அவகிட்ட அழக எதிர்பாக்கல. சின்ன வயசுல எனக்கு அழகு தெரியலடி உன் மனசுதான் தெரிஞ்சது. அதுதான் எனக்குவேணும். நீ எப்புடி இருந்தாலும் உனக்கென நான் எனக்கென நீதான்டி லூசு கண்ண தொட” என்றுகூறும்போது சந்துருவுக்கும் லேசாக கண்கள் கலங்கின.

“மாப்பிள்ளய கூப்பிடுங்க” என ஒருவர்கூற “சரிடி அழாத நான் வைக்குறேன்” என கிளம்பினான்.

அவள் ஏக்கமாக அந்த மொபைலை பார்க்க மலர் வந்து அதை வாங்கிகொண்டாள். “என்ன அரிசி பேசிட்டியா”

“ம்ம்டி” என கூறிவிட்டு தன் அறையில் போய் அடைந்துகொள்ள மலை அவள் பக்கத்தில் வந்து அமர்ந்துகொண்டு தன் தோழியின் அழகை ரசித்துகொண்டிருந்தாள்.

“ஏய் அரிசி நீ இவ்வளவு அழகாவாடி இருப்ப பட்டுசேலையில”

அன்பு மௌனமாகவே அமர்ந்திருந்தாள். தன்னுடைய கல்யான நியாபகமும் வந்து சென்றது மலருக்கு அவளும் இந்த மாதிரி கனவிலேயேதான் அமர்ந்திருந்தாள். அதிலும் தன்னவன் நினைப்பில் கழுத்தின் அணிகலனை காலிலும் கொழுசை கழுத்திலும் மாட்டி நடக்க ஊறவினர்கள் செய்த கிண்டலை அவளால் எப்படி மறக்கமுடியும்.

“சரி அன்பு நான் வெளிய உட்காந்துருக்கேன் எதுன்னா வேனும்ன கூப்பிடு” என தன்னவன் எண்ணை கைபேசியில் பதிவிட்டு கிளம்பினாள் ஹலோ மாமா பாப்பா என்ன செய்யுறா” என்று

அவள் போனதும் "எனக்கு உன்ன எப்புடி இருந்தாலும் பிடிக்கும்டி" என சந்துரு கூறியது திரும்ப திரும்ப எதிரொலித்தது. அவளுக்குள் உள்ளுக்குள் ஓர் இனம் புரியாத மகிழ்வு. தனக்காக ஒரு உயிர் உள்ளது என நினைக்கும்போது ஆனந்தம்தானே. அதுவும் உயிரினும் மேலான காதல் கள்வன்.

"எங்கப்பா பொண்ணு அவதான்பா இந்த காப்ப எடுத்து குடுக்கனும்" என்று ஒருவர்கூற. "அவளுக்கு கூச்ச சுபாவம்ங்க அதான் வரலை பெரிப்பா வேணும்னா நம்ம வளர்மதி சந்துருக்கு முறைமதான அவள எடுத்துகுடுக்க சொல்லுங்க" என போஸ் கூற.

"சரிப்பா" என அந்த பெரியவர்கூற ஒரு பெண் சந்துருவை ஓர கண்ணால் ரசித்தபடி வந்தாள். பாவாடை தாவணி அணிந்திருக்க அவளுக்கு பதினேழு வயது இருக்கலாம். சந்துருவின் கண்களை பார்க்கவே தயங்கினாள். 'அரிசிய போய் கூச்ச சுபாவம்னு சொல்லிட்டீங்களே மாமா' என மனதில் கூறினான். ஆனால் அவள் வந்து இருந்தால் எல்லாரும் கிண்டல் செய்தே அவளை கிறங்க வைத்திருப்பர் என்பது போஸிக்கு தெரியும். அதுவுமில்லாமல் பொண்ணின்மீது அடுத்து நடக்கபோவதை பாருங்கள்.

"அந்த பெண் சந்துருவின் அருகில் வந்து நின்று அந்த காப்பை எடுத்து சந்துருவின் தங்கையான சுவேதாவின் கையில் கொடுத்த அடுத்த நொடி அங்கிருந்த அனைவரும் அவள்மீது சந்தனத்தை எடுத்து பூசினர். அதில் ஒரு பெண் ஒரு சிறிய பாத்திரத்தில் எடுத்து வந்த மஞ்சள்நீரை ஊற்றி அந்த வளர்மதியை நனைய செய்தனர்.

அதன் பின் சுவேதாவின் கையில் சில பழங்களைகுடுத்து அவளுக்கு ஊட்ட கூறினர். சுவேதாவும் புரியாமல் ஊட்ட ஒரு கையில் காப்பு மறுகையில் பழமிருக்க அனைவரும் அவளையும் நன்றாக சந்தனகுளியல் செய்தனர். பாவம் ஏமாந்துவிட்டாள். சந்துருவோ சிரித்துகொண்டே நிற்க.

“டேய் அண்ணா என்ன பாத்தா காமடியா இருக்கா” என்று கூறிவிட்டு அவனுக்கும் அப்பிவிட்டாள்.

அடுத்து வந்த பெண்கள் சிலர் வளர்மதியையும் சுவேதாவையும் பிடித்து பழங்களை வாயில் திணிக்க அவள் தின்றினாள். இந்த சுற்றம் சூழ்ந்த அன்புதொல்லையை அவள் சிரித்துகொண்டே ரசித்தாள். பின் “தங்கச்சி அண்ணாவுக்கு காப்பு கட்டிவிடுமா” என குரல் கேட்க சந்துருவின் கைகளில் கட்டிவிட்டாள்.

“மாப்பிள்ள தங்கச்சி காப்பு கட்டிருக்க அது கைலதான் குழந்தைய முதல்ல குடுக்கனும்” என ஒருவர்கூற

“என் அண்ணாவோட குழந்தைய வளக்கபோறதே நான்தான்” என கூற அனைவரும் சிரித்தனர். அந்த இடமே மகிழ்ச்சி வெள்ளத்தில் மிதந்த்து..

சுவேதா சந்துருவின் அருகில் வந்து “டேய் நானும் சொந்தங்களோட இருந்துருந்தா எனக்கும் இப்புடி சந்தோஷமா கல்யானம் நடக்கும்ல” என்றாள்.

“அப்புடியே ஒன்னு போட்டா தெரியும் சொந்தம் இல்லையாம். நீயும் என பொண்ணுதான்டி” என பார்வதி அவளை செல்லமாக அதட்ட “அம்மா” என அவளை கட்டிகொண்டாள் சுவேதா. “இனி அப்புடி சொல்லகூடாது” என தன் புது மகளின் தலையை கோதிவிட்டாள்.

“சரிப்பா பொண்ணுவீட்டுக்கு கிளம்பலாம்” என ஒருவர் கூற பல்ரும் மாப்பிள்ளைக்கு அறிவுரை வழங்கி கலைந்து சென்றனர். அன்பரசியின் இல்லத்தை நோக்கி.

அங்கே அன்புக்கு வளையல் பூட்டி சந்தனம் பூசி சடங்குகள் அரங்கேறின. இடை இடையே வந்த அந்த கிண்டல் பேச்சுகளில் முகம் சிவந்தாள் அன்பு.” அரிசிக்கு வெடெகத்த பாருங்கப்பா” என சுவேதா தன் அன்னியை மேலும் சிவக்க செய்தாள்.

பின் அன்பு அந்த அறையில் அடைக்கபட்டாள். அவளுக்கு காவலாக சுவேதாவை நியமித்தனர். நாத்தநாரை காத்துகருப்பு அண்டாம பாத்துகனுமாம். “அன்னி எதுன்னா வேணும்னா கேளுங்க நான் இங்கதான் இருப்பேன்” என்று குரல் கொடுத்து ஒரு சேரை எடுத்து அமர்ந்துகொண்டாள்.

மற்ற அனைவரும் கல்யான வேலையாக பறந்தனர். போஸும் சன்முகமும் ஊரில் இருக்கிறார்களா என்றே தெரியவில்லை. சந்துருவின் தோழர்களும் அன்பை பார்த்து சென்றுவிட்டனர். போகும்போது "என்ன சுவேதா அடுத்து உனக்கும் சுகுவுக்கும்தான்" என கூற "ஏய் உங்களுக்கு எப்புடிடி தெரிஞ்சது" என கேட்க "அது ரகசியம்" என அந்த பெரிய வீட்டை நோக்கி நடந்தனர்.

பெண் வீட்டில்தான் தாலிபூட்டும் வைபவம் நடைபெறும் எனபதால் சந்துரு அங்கு ஒரு மேடையே அமைக்க சொல்லிவிட்டான். அதை பார்வையிட வந்தான்.(அவன் எதை பார்வையிட வந்திருப்பான் என உங்களுக்கே தெரியும்)

"அத்த அத்த மாமா இல்லையா" என்றான்.

"மாப்பிள்ள வெளியவே நில்லுங்க" என்று வழிமறித்தாள் பார்வதி.

"இல்ல மாமா" என்றான் ஆனால் உள்ளம் அன்பு என்றது.

"அவுக டவுனுக்கு போயிருக்காங்க! நீங்க பெரிய வீட்டுக்கு போங்க மாப்பிள்ள எதாவது காத்துகருப்பு அனிடிரும்" என்றார்.

தன்னவனின் குரலை கேட்ட அன்புக்கு அந்த கதவை துளைத்துகொண்டு அவனை பார்க்கவேண்டும்போல இருந்தது.

‘அன்பின் மடியில் ஆழ்ந்த துயில்

காணும் ஏக்கமில்லா காதலனில்லை

அந்த இனமதில் அன்பையே அடைய

தவமிருந்த கண்ணாலன் காண

வந்திருந்த காலமிதில்

சாத்திரங்கள் பிரித்த உந்தன்

தலைக்கென் மடியுண்டு என்னவா

அதில் நீ துயிலுறங்க நானுந்தன் தலைகோதி

மகிழும்காலம் நாளைமுதல் அதுவரை

காத்திரு கண்ணாலா!

என்றென்னை நான் சாந்தபடுத்த

உந்தன் தேன்குரல் என்னை ஈர்க்குதடா

அரிசியான நான் உமியென கதவுதுளைத்து

வர இதய தசைகள்ஏங்குதடா

இங்கிருந்து செல் இல்லையேல்

உன்னை சுற்றும் எந்தன் மனம்

இந்த உடலையும் உன்னிடத்தில்

இழுத்துவர வெட்கம்விட்டு

கட்டி யனைத்துவிடுவேன் அட்டையென.

என் மன்னவா சென்றவிடு!

என கதவின் பின்னாலிருந்து அவனிடத்தில் மனதால் பேசிகொண்டிருந்தாள். ஆனால் அவள்கை விரல்கள் அந்த கதவினை வெட்கத்துடன் தடவிகொணடிருந்தது. தன்னவன் தோளில் சாய்ந்து கையால் அவன் இதய துடிப்பை கேட்பதுபோல் அந்த கதவில் சாய்ந்திருந்தாள்.

"சரிங்க அத்த நான் வாரேன்" என சத்தமாக கூறிவிட்டு நகர்ந்தான். பார்வதி சிரித்துகொண்டே உள்ளே சென்றார்.

மணித்துளிகள் நரகமாக மாற மெதுவாக நகர்ந்தது சந்துருவுக்கு. மறுநாள் தன்வாழ்கையை அரிசி இல்லை தன் அரசியிடம் ஒப்படைக்கும் நாள். இரவில் அந்த நிலாவை பார்த்தான்.

"அது என்னப்பா அங்க லைட்டு போட்டுருக்காங்க" என்று தன் தந்தையிடம் கேட்டவன் அதை அதற்கு அப்புறம் ஏறெடுத்து பாரித்தானோ தெரியாது. ஆனால் அதை வர்ணிக்காமல் கவிஞர்கள் இம்மண்ணில் மரித்தது இல்லை.

காதலன் என்றாலே கள்வன் கவிஞன்தானே அந்த வரிசையில் இன்று நுழைந்த சந்துருவின் இதயம் அந்த நிலவில் தன்னவள் முகத்தை காட்டி கண்ணாம்மூச்சி காட்டியது.

வின்வெளி ஓடம் நீரைதேடி நிலவை

நோக்கிய நேரமிது நானோ

நீ இருக்கிறாயா என்றுபார்க்கிறேன்

ஆனால் இந்த புதுகாதலனுக்கு(கவிஞனுக்கு)

தெரியா ரகசியம் அந்த வான்மதிதான்

உன் பிரதிபலிப்பு அதன் ஒளி உன்முகத்தின்

சிரிப்பு இந்த காரிருள் உந்தன் கருங்கூந்தல்டி

என கண்ணம்மா

உன் வெட்கத்தை நட்சத்திரமாக செய்தானோ அந்த

பிரபஞ்ச ரகசியமறிந்தவன். என்னை

ஈர்க்கும் நீ நியூட்டனுக்கு புலப்படாத

நான்காவது ஈர்ப்புவிதியோ

உன்னால் கவர்ந்து விழுந்து நொருங்கினேன்

என்னே சிறையெடுத்தாய்.

நான் உன் ஆயுள்கைதியடி

நீ எந்தன் ரதியடி!!!

என அவன் மனது கூறிய அந்த கவிதையை நினைத்தவன். என்னடா இது காதல்ன்னு வந்துட்டா எல்லாருமே கவிஞர்தானா என நினைக்க "டேய் வந்து தூங்குடா நாளைக்கு நீ நினைச்சாலும் தூங்க முடியாது" என பாலாஜி கேலியாக கூறி அவனை அழைத்துசெனைறான்.

மறுநாள் திருமனநாள் விடிய அனைவரும் கூடியிருந்தனர். அப்போது மனமகனும் மனமகளும் தயாராகிகொண்டிருந்த நேரம். ஒரு கார் அதிவேகமாக வந்து நின்றது. பலத்த ஹரன் ஒலியும்.

"யார்டா அது" என சந்துரு எட்டி பார்க்க சுகு அதிர்ச்சியில் உறைந்துநின்றான்.

அதிலிருந்து ஒருபெண் மிக அழகாகவும் உடன் நல்ல வலிமையான ஒருவனும் வந்தான். அவர்களை பார்த்த சந்துரு தன் நண்பனை பார்க்க ஒன்றும் விளங்கவில்லை.

“என்னடா ஆச்சு யாரு அது”

“ஜான்சி” என்றான் சுகு அதிர்ச்சியாக

“என்ன ஜான்சியா” இது சந்துரு

“ஆமா அவங்கதான் ஆதே ஜான்சிதான் அது சேகர்” என்றான்.

அந்த பெண் சந்துருவை கடக்கும்போது கட்டைவிரலை வைத்து டிக்டாக் என சைகை செய்து செனாறாள்.

## அத்தியாயம் - 47

சந்துருவை கடக்கும்போது அந்த பெண் டிக்டாக் என சைகை செய்ய நண்பர்கள் இருவரும் அதிர்ச்சியில் நின்றிருந்தனர். அவள்

சிரித்துகொண்டே செல்ல அந்த நேரம் "சந்துரு இந்தா இத அன்புக்கு!!" என சன்முகம் வந்த நேரம் அவரது கையிலிருந்த அந்த சிகப்பு பெட்டிகீழே விழுந்தது.

அதை தன் கையால் லாவகமாக பிடித்த அந்த இளைஞன் ஒரு சுழற்று சுழற்றி மேலே எடுத்தான். அங்கிருந்த அனைவரையும் கவர்ந்துவிட்டான். அனைத்து பெண்களும் அவனை பார்க்க சிரித்தவன். "இந்தாங்க சார் பத்துபிடிங்க" என்றான்.

"நீங்க??" என்றார் சன்முகம்

அந்த பெண் சிரித்துகொண்டே "நான் ஜான்சி இது என் தம்பி சேகர்"

"இல்ல நீங்க என்ன பன்றீங்க" என்றார் சன்முகம்.

"உங்களுக்கு தெரிஞ்சிருக்கும் உங்க ஒயிப் காவேரி ஆரம்பிச்ச காவேரி மில்ஸ்க்கு இருந்த ஒரே எதிரி மில்ஸ் ஒனரோட பொண்ணு ஜான்சி அப்புறம தம்பி சேகர். பயப்படாதீங்க நாங்க அந்த காட்டன் பிஸினஸ் விட்டுட்டு இப்ப சாப்ட்வேர் இன்டஸ்டரி சப்ளைக்கு மாறிட்டோம் அதனால உங்க பையனுக்கு இடையூரா இருக்க மாட்டடோம்" என சென்று முதல் இருக்கையில் அமர்ந்தனர்.

அந்த பெண்ணிற்கும் முப்பது வயது இருக்கலாம் என மதித்தனர். அதற்கு ஏற்ற அழகு சேலையில் மிக அழகாக இருந்தாள். சந்துரு குழப்பத்துடன் நின்றான். “சரிப்பா இது உங்க அம்மா ஆசையா வச்சுருந்த செயின் இத மருமக அன்புக்காக எடுத்து வச்சிருந்தா இத அன்புகிட்ட குடுத்துட்டு வா” என சன்முகம் கிளம்பினார்.

அதற்குள் சுகு சந்துருவை இழுத்துகொண்டு நடந்தான். “டேய் மச்சி இங்க பாரு போன வருசம் நம்ம தமிழ்நாட்டுல ஒரு சைபர் அட்டாக் நடந்துச்சு. முக்கியமான பிரபலங்களோட டேட்டா பேஸ் அக்ஸப்ட் பன்னாங்க. அதுல இந்த கம்பெனி மேல ஒரு கண்ணு கவர்மன்ட் எங்க டீம்கிட்ட சொல்லி வைக்க சொன்னாங்க. இவங்கதான் அந்த ஜான்சினு எனக்கு தெரியாதுடா! இன்னொரு முக்கியமான விஷயம்” என சுகு கூறும்போது சுவேதா அங்கு வந்தாள்.

“யேய் பொண்ணுகூட ரெடிப்பா நீங்க இன்னும் என்ன பன்றீங்க”

“சுவேதா இத அன்புகிட்ட குடு அப்பா குடுக்க சொன்னாங்க” என்றான் சந்துரு.

“உன்னதான குடுக்க சொன்னாங்க நீ போய் குடு” என்று கூறிகொண்டே சுகுவை பார்த்து கன்னத்தை காட்டினாள். அசை கவனித்து கவனிகாத மாதிரி “சரி” என அன்பின் அறைக்கு சென்றான்.

அவன் சென்றதும் “சுகு மாமா!” என்றாள். சுகு இன்னும் அதிர்ச்சியிலேயேதான் இருந்தான்.

“டேய் மாமா நான் ஒருத்தி கத்திகிட்டு இருக்கேன் உனக்கு கேக்குதா” என கன்னத்தில் முத்தம் வைக்க நிகழ்காலத்திற்கு வந்தான். “என்ன செல்லம் திடிர்னு மாமான்னு கூப்பிடுற” என்றான்.

அவனை கட்டிகொண்டாவள் “இல்லடா இங்க எல்லாரும் அப்புடின்னுதான் கூப்பிடுறாங்க அன்புகூட அப்புடிதான் கூப்பிடுறாங்க அதான் நானும் ட்ரை பன்னிபாத்தேன்” என்றவளை அனைத்தவன்.

“சுவேதா நீ இப்ப கிளம்பனும்”

“அப்போ என்ன கல்யானம் பன்னிகோ வாரேன்” என்று காதை கடித்தாள்.

“எனக்கு உன் உயிர்தான்டி முக்கியம் ப்ளீஸ் புரிஞ்சுகோ”

“டேய் மாமா என்னடா உளறிகிட்டு இருக்க” என அவனிடமிருந்து விலக முயற்சித்தாள். ஆனால் அவன் இறுக்கம் விடவில்லை. அவன் அழுகிறான் என்பதை உணர்ந்தாள்.

“நல்ல நாள்ள ஏன்டா அழற”

“என்ன மன்னிச்சிடுடி” என அவளை திருப்பியவன் அவள் முகத்தில் அந்த மயக்கமருந்து தடவிய கர்சீப்பை வைத்து அவளது கன்னத்தில் முத்தம் வைத்தான்.

அன்று சுகு இனையத்தை சலித்துகொண்டிருந்த நேரம் அவனதி கைபேசி ஒலித்தது அதில் எண்களே இல்லை. வெறும் கருப்புதிரை மட்டுமே அதிலும் அதுவை கால் அட்டன்ட் செய்து ஒலிபெருக்கியில் போட்டது.

“ஹாஹாஹா ஹலோ சாப்ட்வேர் கிங் எப்புடி இருக்கீங்க”

“நீ யாரு”

“நீ ரொம்ப கஷ்டபட்டு என்னதான் தேடிகிட்டு இருக்க அது உனக்கு தெரியுமா?”

“ம்ம் நான் உன்ன கன்டுபிடிச்சுடுவேன்” உறுதியாக கூறினான் சுகு.

“கிழிச்ச! இந்த வேகத்துல தேடுனா என்ன கண்டுபிடிக்க இன்னும் முப்பது வருசம் ஆகும் உனக்கு குழந்தைபையா! எப்புடிதான் இந்த நாட்டோட செக்யூரிட்டி மெயின்டனன்ஸ்ல உனக்கு வேலை

குடுத்தாங்களோ! இதுல நீயெல்லாம் சீக்ரட் ஒர்க்கர் வேற" என மீண்டும் சிரித்தாள்.

"ஹே அது எப்படி உனக்கு தெரியும்"

"அது குழந்தைங்களுக்கு புரியாதுப்பா! சரி அத விடு என்னதான தேடுற! என் பேரு ஜான்சி என தம்பி சேகர்! இப்பொதைக்கு இது போதும் உனக்கு! ம்ம் சுவேதா சுவேதா அவள ஏன்டா நீ காதலிச்ச பாவம் அவ சாக போற உன்னால"

"ஏய் அவளுக்கு எதாவது ஆச்சு"

"என்னடா பன்னுவ! உனக்கு தில்லிருந்தா இது என போட்டோ முடிஞ்சா என்ன பிடிடா பாக்கலாம்" என அந்த திரையில் ஒரு போட்டோ வந்து ஒரு வினாடியில் மறைந்தது.

"ஏய் அவள ஒன்னும் பன்னிடாதடி"

"நான் நேர்ல வரும்போது அவ இருக்கமாட்டா" என இனைப்பு துண்டிக்கபட்டது. அப்படியே பதறிகொண்டு சந்துருக்கு போன் செய்தான். அதன்பின்தான் நடந்தது அனைவரின் இட மாற்றம்.

அந்த நாள் நினைவில் இருக்கவே மயங்கிய சுவேதாவை தூக்கிகொண்டு ஒரு அறையில் பூட்டினான் சுகு.

“அன்பு இத அப்பா குடுக்க சொன்னாங்க” என சந்துரு நுழைந்த்தும் அவள் பதட்டத்துடன் தன் உடையை சரி செய்தாள். அங்கிருந்த பெண்கள் “பாருடி மாமாவுக்கு அதுகுள்ள அவசரத்த எதாவது சாக்கு வச்சு எங்க அக்காவ சைட் அடிக்காம இருக்க முடியலையா” என்று கூற “சும்மா இருங்கடி” என அன்பு சமாதானம் செய்தாள்.

“இது அம்மா உனக்கு எடுத்து வச்சது அதான் அப்பா குடுக்க சொன்னாரு” என்றான்

உடனே தன் கழுதிலிருந்த ஒரு நகையை கழற்றியவள் அந்த இடத்தை அந்த நகைக்கு கொடுத்தாள். என்ன அக்கா தங்கத்த விட்டுட்டு பாசிய போட்டுகிறீங்க” என கிண்டல் பேச்சுகள் தொடர்ந்தன.

அவளோ நல்லா இருக்கா என கண்ணாலயே சைகை செய்தாள். சந்துரு புருவத்தை உயர்த்தி சூப்பர் என சைகை செய்து நகர்ந்தான்.

சிறிது நேரம் ஒட அனைவரும் கூட சந்துரு காத்திரிந்தான் அந்த மேடையில். அரிசியை அன்பரசியாக மாற்றி அழைத்துவந்தனர் சில பெண்கள். கண்ணை எடுக்கவிடாத அழுகு. அதிலும் அந்த சிகப்பு பட்டு புடவை சந்துருவின் ரசனையை பறைசாற்றியது.

அவளருகில் அமர முன்னால் ஒரு பெண் ஓடி ஆடி வேலை செய்துகொண்டிருந்தால். “அது யாரு” என்றான் அன்பின் காதில்.

“அது வளர்மதி என சித்தப்பா பொண்ண் ஏன் என்ன ஆச்சு”

“இல்ல உன்னவிட அழகா இருக்காலே அதான்” அடுத்ததாக அவனது தொடையில் கிள்ளினாள். “ஹே இல்லடி அந்த பொண்ணுதான் காப்பு எடுத்து குடுத்துச்சு நீதான் வரலையே” என்றான்.

இருவரும் அவளை பார்க்க அவள் அந்த சேகரின் அருகில் நின்றாள். சந்துருவுக்கு அது சரியாக படவில்லை. சேகரும் வளர்மதியும் ஏதோ பேசிகொள்ள வளர்மதி வெட்கபட்டாள்.

“ம்ம் மாப்பிளை தங்கச்சி எங்கப்பா” என ஒரு குரல்.

அங்கு நின்றிருந்த சுகுவை பார்த்து “டேய் சுவேதா எங்கடா” என்றான்.

“டேய் அவ லூசுடா எங்கயாவது சுத்திகிட்டு இருப்பாடா” என்றான் சுகு அந்த கொட்டு சத்ததில் சுவேதா அந்த ஜன்னல் வழியே அழுவது தெரியவில்லை.

“சீக்கிரம்பா தங்கச்சிதான் மூனுாவது முடிச்சு போடனும்” என்று அவசரபடுத்தினார் அந்த பெரியவர்.

உடனே மஞ்சு அங்கு வந்து “நானும் தங்கச்சிதான் நான் பன்னுறேன்” என்றாள். அடுத்தாக தாலி கட்டும் வைபவம் அறங்கேறியது. மூன்றாவது முடிச்சை மஞ்சுபோட பூமாலைகள்தூவி அன்பரசி என்னும் அமிர்தம் இந்திரனாகிய சந்துருவை சேர்ந்தாள்.

பாவைமேனியதில் புதுஅணிகலனாக

சூட்டிய கண்ணாலன் இன்று மன்னவனாக

மாறிய நேரம் தாய் தந்தை கண்ணில்

ஆனந்த கண்ணீர் மகனை வாழ்த்தினாள்தாய்

சொர்க்கபுரியிலிருந்து அத்துடன்

ஊரார் வாழ்த்திய மொழிகள்

மகராசி குடுத்து வச்சவ

இல்லை மகராசன் கவர்ந்துவிட்டான்

கள்ளிமனதை! என மலர் பொடிகளாய்

வந்து முத்தமிட்டது இந்த புறாக்களை

வெள்ளம் ஆனந்த வெள்ளமிது

அதில் நனைந்த இருவர் உள்ளம்

இனி ஒன்றுதான் என்றும்.

அதன் சாட்சியாக ஒரு குட்டி தேவதை

இருவர் சாயலில் பெற வாழ்த்தினர்

மக்கள்! மங்கையோ வெட்கத்தில்

தன்னவன் மார்பில் முகம் புதைத்தாள்

இதுதான் காதலா அங்ஙனம் மாரியும்

பொழிந்து வாழ்த்தியது இவர்களை

நாம்முடன் இருந்து!!

“என்னடி இப்புடி மழை பெய்யுது. அரிசியா தின்னியா” என்று கன்னதில் குத்தினாள் மலர்.

“என்னது அரிசியா தின்னாலா?” என்றான் சந்துரு.

“இப்புடி கல்யானத்தன்னைக்கு மழை பெஞ்சுச்சுனா பொண்ணு வயசுக்கு வந்ததும் அரிசியா தின்னுருக்கானு இங்க ஊர்ல பேசிக்குவாங்க” என மலர் கூற “சும்மா இருடி” என அன்பு வெட்கபட்டாள்.

“அட நீ வேற மலர் உன் பிரண்டு அரிசி அரிசியெல்லாம் தின்னுருக்கமாட்டா அவ பேருல கன்பிசனாகி மழை வந்துருக்கும். என்ன அப்புடிதானுங்க மேடம்” என அரிசியை பார்த்துகேட்டான்.

“போங்க” என அவனை செல்லமாக திட்டினாள்.

அடுத்து சில சம்பிரதாயங்கள் முடிய போட்டோ கிராபரோ அவசரமாக "எனக்கு பசிக்குதுப்பா கிப்ட் எதாவது இருந்தா குடுங்க" என தன்நிலையை கூறினார்.

"ஹேய் அன்பு செல்லம் கொஞசம் லேட் ஆகிடுச்சு" என ஆசிரிய தோழி இந்திரா வந்தார். அந்த பரிசை கொடுத்துவிட்டு "இதுதான் உன் உட்பியா செம்ம செலக்ஸன்டி" என தன் தோழிக்கு முத்தம் கொடுத்தாள். பின் "அப்பா எங்க இன்னைக்கு ட்ரீட் தர்ரேன்னு சொன்னாரு. நான் அவர்கிட்ட பேசிகிறேன்" என கிளம்பினாள். 'உன்னமாதிரியே எல்லாம் வாயாடி பிரன்ட்ஸ்தானா' இது சந்துருவின் மைன்ட் வாய்ஸ்.

அடுத்தாக ஜான்சி வந்தாள். சிரித்துகொண்டே போட்டோவில் விழுந்தவள். அன்பரசியின் காதில். "ஜெனி நியாபகம் இருக்கா" என்றதும் அவள் முகம் மாறியது. சந்துரு ஜான்சியை முறைத்து பார்த்தான்.

"இது அவளோட டைரி இந்தாபிடி" என வண்ணகாகிதம் சுற்றிய அந்த பரிசை கொடுத்தாள். பின் "இங்க பாரு அன்பரசி அந்த மாதிரி உன் புருசனும் சாவாகூடாதுன்னு நினைச்சேன்னா சீக்கிரம் ஒரு குழந்தைய பெத்துட்டு நீ செத்துடு" என கூறிவிட்டு சிரிக்க அன்பு அழுதாள். சந்துரு தன்னவளை மார்போடு அனைத்துகொண்டான். சுற்றி இருந்தவர்கள் "ஊருக்குள்ளயே சுத்திகிட்டு திரிஞ்ச பொண்ணுல அதான் ஊர விட்டு பிரிய முடியாம அழறா"என்று கிண்டல் செய்தனர்.

கீழே இருந்த சேகர் வளர்மதிக்கு தன் கையிலிருந்த மோதிரத்தை மாட்டிவிட்டான். பின் மேடை ஏறி வந்தவன்.”என்ன சந்துரு தம்பி நல்லாபடியா கல்யானம் முடிஞ்சிடுச்சு, என அக்கா சொன்னாங்களா டிக்டாக் ரூல். குழந்தை இருந்தா அன்புக்கு செக் இல்லைனா உனக்கு செக் நான் வாரேன்” என இறங்கியவன் கீழே இருந்த வளர்மதியை பார்த்து ரகசியமாக கன்னத்தில் கிள்ளிவிட்டு “நான் ஃபோன் பன்றேன் என்பதுபோல சைகை செய்து கிளம்ப அந்த கார் வந்த வேகத்தில் பறந்தது.

சந்துருவுக்கு அன்பு அழுவது தாங்கமுடியவில்லை. “ஏய் கிறுக்கி அது என் காலேஜ் சீனியர் அக்கா அவங்க கல்யானத்துல நாங்க இப்புடிதான் மாப்பிள்ளைய பயமுறுத்துனோம். இப்ப பதிலுக்கு பன்றாங்க இது எங்களுக்குள்ள சகஜம்டி” என அவளை இறுக்கமாக அனைத்துகொண்டான்.

அவனது கண்களை பார்த்தாள் அன்பு. உதட்டில் சிரிப்பை வைத்திருந்தான். அவனிடம் கேட்பதாக நினைத்து தன்னையே கேட்டுகொண்டாள்.

‘சந்துரு ஏன் பொய் சொல்லற! உன் பிரண்டுக்கு எப்படி ஜெனிய பத்தி தெரியும்! இப்ப என்ன நான் அழகூடாது அதுதான உன் விருப்பம். நான் அழமாட்டேன் சந்துரு’ என கூறிவிட்டு. “நிஜமாவாங்க நான் பயந்துட்டேன்” என்றாள் சினுங்கிகொண்டே.

“ஆமாடி என செல்ல அரிசி! என பொண்டாட்டி” என இறுக்கினான், “விடுங்க எல்லாரும் பாக்குறாங்க”

“ஓ இப்பதான் அது உனக்கு தெரியுதா! என் மேல சாஞுசுகிட்டு என சட்டைய ஈரமா ஆக்குனியே அப்ப தெரியலாயா” என்றான். அவள் வெட்கபட்டுகொண்டு சற்று தள்ளி நிற்க அவன் அவளை உரசிகொண்டு நின்றான். “மாப்ள கொஞ்சம் சென்டர் பன்னி நில்லுங்க” இது போட்டோகிராபரின் கதறல்.

சுகு அந்த கார் சென்றதும் சுவேதாவின் அறைக்கு சென்றான் மெதுவாக கதவினை திறக்க சுவேதா வெளியே வந்தாள். “சுவேதா என்ன மன்னிச்சிடு நான் ஏன் அப்புடி பன்..” என சுகு கூறும் முன்னே சுவேதாவின் கையின் ரேகை சுகுவை நோக்கி நிற்க அவள் கோபத்தில் தலைகுனிந்து நின்றாள்.

“இனி என்கிட்ட பேசாத சுகு” என அங்கிருந்து வேகமாக நடந்தாள்.

அங்கே அவளை பார்த்த சந்துரு “என் தங்கச்சிகிட்ட மட்டும்தான் நான் பேசுவேன்” என முகத்தை திருப்ப சுவேதாவின் கண்கள் கலங்கியது. அதை பார்த்த அன்பு.

“அன்னி நீங்க இங்க வாங்க அவரு அப்புடிதான்” என சுவேதாவை தன்னோடு இழுத்து அனைத்துகொண்டாள் அன்பு.

*சுவேதாவோ என்ன சொல்வது என்று தெரியாமல் கண்கள் கலங்க சந்துருவையே பார்த்துகொண்டே நின்றாள்*

## *அத்தியாயம்* - 49

*சுவேதாவின் மீது கோபமாக இருந்தான் சந்துரு பின்ன அண்ணா அண்ணானு சுத்தி சுத்தி வந்தவ அந்த வார்த்தைக்கு அர்த்தம் குடுக்குற நேரத்துல காணாம போனா யாருக்குதான் கோபம் வராது. ஆனால் பாவம் சுகுவின் பயத்திற்கு முன்னால் சுவேதா என்ன செய்வாள். தன் அண்ணாவினை கலகிய கண்களோடு பார்க்க மட்டுமே முடிந்தது.*

*"டேய் சுவேதா அழறாடா" சுகு வந்தான் தன் நண்பன் அருகில்.*

*"டேய் இவதான் என தங்கச்சினு எல்லாருக்கும் தெரிஞ்சிருக்க வேண்டிய நேரத்துல வராம இப்ப அண்ணானு வந்தா! போடா டேய்! நான் தான் அவள தங்கச்சியா நினைக்குறேன் அவ அப்புடி நினைக்கலடா"*

*"டேய் நான்தான்டா அதுக்கு காரணம் அவ பாவம்டா"*

“நீ என்ன சொன்னாலும் சரிடா நான் பேச மாட்டேன்” தன் முடிவில் ஐயம் இல்லை சந்துருவுக்கு.

“டேய் முகூர்த்த நேரத்துல அவளுக்கு வலிப்பு வந்துடுச்சுடா அதான் நான் அவள சரி பன்னேன் அப்புறம் மயங்கிட்டா அதான் உன்னோட கல்யானத்த பாக்க முடியலடா சாரிடா” என்று சுகு சோகமாக கூறினான்.

சந்துருவுக்கு கோபம் வந்தது.”ஏய் லூசு டேப்லட் போடலையா” என்றான் சுவேதாவை பாரத்து. அவள் இன்னும் அழுதுகொண்டுதான் இருந்தாள்.

“ஏய் அண்ணா உன்கிட்ட கோவிச்சுக்ககூடாதா வா” என அன்பிடமிருந்து அவளை வாங்கி அனைத்துகொண்டான். அவள் இன்னும் அழுகை விடவில்லை.

“ஏய் என்னடா அழாதடா” என்று சமாதானம் செய்தான். ஆனால் பலனில்லை. அவன் வழியில்லாமல் தன் மனைவியை பார்த்தான். தன்னவனின் பார்வையை புரிந்துகொண்டு “அன்னி வாங்க அண்ணாகூட சண்டை போட்டுடலாம்” என தன்னவனை தள்ளிவிட்டாள்.

“ம்ம் வேணாம் அன்னி” என கண்ணீரை துடைத்துகொண்டாள். “ஐ சுவேதா அன்னி சிரிசுட்டாங்க” என கூச்சம் ஏற்படுத்தினாள்.

சுவேதாவும் சிரித்துகொண்டு "அன்னி அண்ணாவவிட்டு நீங்க பேச்சுக்குகூட பிரியகூடாது" என்றாள்.

"அப்போ நீங்க அழாம இருக்கனும்" இது அன்பு

"சரி இன்னொரு கல்யானம் பன்னிகிரீங்களா?" என சுவேதா கூற அனைவரும் திடுக்கிட்டனர். "அட நான் உங்க கல்யானத்த பாக்க முடியலப்பா அதான் இன்னொரு தடவ கல்யானம் பன்னிகோங்க" என கூற "என்ன ரெண்டு தாலியா" என்று பதறினான் சந்துரு.

"ஆமா விட்டா நீ அன்னிமேல வச்சுருக்குற பாசத்துக்கு ஆயிரம் தாலி கட்டுவடா அண்ணா! இந்தா இத கட்டு" என தன் கழுத்திலிருந்த அன்று பீச்சில் சந்துரு வாங்கி கொடுத்த அந்த அழகிய பாசியை சந்துருவின் கையில் கொடுத்தாள்.

"அத ஏன்டி கழட்டுற"

"நீ பேசாதடா நீ என்ன திட்டிட்ட நான் அன்னிகூட மட்டும்தான் பேசுவேன்" என்றாள் செல்ல கோபத்துடன். சந்துரு அமைதியாக அதை வாங்கி தன்னவளுக்கு இரண்டாவது தாலிகட்ட அங்கிருந்த பூவை எடுத்து இருவர் மீதும் போட்டாள்.

"இந்த ஜோடி நூறு வருசம் நல்லா இருக்கனும்" என வாழ்த்தினாள் அந்த பெரிய மனுசி.

“சரிம்மா பெரிய மனுசி” என சந்துரு கூற “அண்ணா எனகூட பேசாத” என்றாள். உடனே அரிசி “அன்னி உங்க அண்ணாக்கு எதாவது தண்டனை குடுத்து மன்னிச்சுவிட்டுருங்க” என்றாள். “ரெண்டுபேரும் என்ன டார்கெட் பன்னிட்டீங்களா” என்றான் சந்துரு.

“ம்ம் அண்ணா அன்னி அப்புடியே எனகூட சேந்து எஸ்கேப் ஆக பாக்குறாங்கடா! நீங்க டான்ஸ் ஆடனும் நியாபகம் இருக்கா” என்று தன் அண்ணன் பக்கம் சேர்ந்துகொண்டாள்.

“ஐயோ அண்ணி எல்லாரும் பாப்பாங்க”

“அதெல்லாம் முடியாதுப்பா டீல்னா டீல்தான்”

“நான் இன்னொருநாள் ஆடுறேன் அன்னி” என உத்தரவு வாங்கவே “கன்டிப்பா ஆடனும்” என சத்தியம் வாங்கிகொண்டாள். சுவேதா.

அதன்பின் நடந்த விளையாட்டுகள்; பெரியவர்களின் ஆசிர்வாதம் என அந்த வீடு கலைகட்டியது. அதிலும் சந்துரு தன் மனைவிக்கு ஊட்டிவிட “டேய் அண்ணா இனி எனக்கெல்லாம் ஊட்டிவிட மாட்ட?” என சுவேதா கூற அவளுக்கும் அதே செய்துவிட்டு “நீ எங்க மூத்தபிள்ளைடா சுவேதா! என்ன அன்பு நான் சொல்றது சரியா” என கூற சுவேதாவின் மனம் நிறைந்தது.

பழைய படத்தின் கிளைமேக்ஸ் போல கல்யானத்தான் இறுதி என காத்திருந்த பலர் ஏதோ இந்த கல்யானம் தன்னால்தான் நடந்தது என பரபரப்பாக இயங்கிகொண்டிருந்தனர். அதிலும் மனமக்களை வாழ்த்த வந்த வாய் வயிறாற இருந்தலும் அதையும் தாண்டி கல்யானத்தின் அர்த்தம் என்ன என்று கேட்டால் சாப்பாடு என்று கூறுமவிற்கு வந்து அனைத்து பந்தியிலும் கலந்துகொண்வர்களும் அவர்களையும் புன் முகத்துடன் கவனித்த அந்த ஊர் மக்களின் விருந்தோம்பலும் என மாலை சூரியன் மழை மேகங்களுக்கிடையே இருந்து ரசித்து வந்தான்.

மேற்குதொடர்ச்சி மலையின் உதவியால் தன்னை மறைத்துகொண்ட ஆதவன். கூடவே அன்பின் அறை காதல் ஜோடிகளின் அறையாக மாறிகொண்டிருந்தது. அன்பரசிக்கு அலங்காரங்கள் செய்யபடவே

“அன்னி எங்க அண்ணா இதுல எல்லாம் ரொம்ப வீக்கு நீங்கதான் சொல்லிதரனும்” இது சுவேதாவின் வழக்கமான கிண்டல். அதற்கு பதில் பேசமுடியாமல் வெட்கத்தில் திணறினாள் அரிசி.

“என்ன அன்னி நீங்க முழிக்குறத பாத்தா உங்களுக்கும் எதுவும் தெரியாது போல” என்று கன்னத்தை கிள்ளினாள்.

“ஆமா இவ பத்துகோர்ஸ் முடிச்சுருக்கா” என மஞ்சு சுவேதாவடன் வம்பிழுத்தாள்.

“அன்னி உங்க ஊர்ல ஒரு பழமொழி சொன்னாங்க காலையிலதான் கேட்டேன். ஊமை ஊர கெடுக்குமாம்னு” என்று மஞ்சுவை பார்த்தாள்.

“ஏன்டி சும்மா இருடி அன்னி முன்னாடி” என சினுங்கினாள்.

ஆனால் தன்னை வம்பிழுத்த தோழியை சும்மா விடுவதாய் இல்லை சுவேதா “நானாவது பரவாயில்ல அன்னி இவ இருக்காளே கடைசி வரைக்கும் எதுவுமே பன்னாத மாதிரி இருந்தா திடிர்னு பாத்தா இவளுக்கும் பாலாஜிக்கும் கல்யானம் முடிஞ்சுதான் சந்துரு கூட்டிபோறான் அப்பதான் எனக்கே தெரியும்னா பத்துகோங்க! அதுவும் சாட்சி கையெழ்த்துபோட! அது மட்டுமா உங்க ஆளு அதான் சந்துரு இந்த மஞ்சுவோடு அப்பாகிட்ட வாங்குன் அந்த அறை இப்ப நினைச்சாலும் எனக்கு காது வலிக்குது” என்று காதை பொத்தினாள்.

“என்ன அவர அடிச்சாங்களா” என்று பதறினாள் சுவேதா.

“ஆமா ஆனா அதுக்கு அப்புறம் சந்துரு பேசி அவரை சமாதானம் செஞ்சது நீங்க பாத்துருக்கனுமே! நானே அசந்துட்டேன். அடுத்த லவ்வுக்கெல்லாம் ஹெல்ப் பன்னவன் உங்க்கிட்ட லவ் சொல்றதுக்குள்ள ஐயோ அப்பா” அரிசியின் முகத்தில் புன்னகை தாழம்பூ போல பூத்தது.

“ஆனா இந்த மஞ்சு இவ மாசமா இருக்குறத இன்னு அவன்கிட்ட சொல்லாமா இருக்கா! அவனுக்குதெரிஞ்சா எவ்வளவு சந்தோஷபடுவான் தெரியுமா”

“ஏன் அன்னி இன்னும் சொல்லல” இது அன்பு

“இல்ல அன்னி ஏற்கனவே மாசமா இருந்தப்போ சொன்னேன் அவன் சந்தோஷபட்டான். ஆனா குழந்தை என வயித்துல தங்கள அது தெரிஞ்சு அழுதுட்டான். அவன் என்னால அழ வைக்கமுடியாது அன்னி. அதான் இந்த முறை என்னால சொல்லமுடியல.” என்று மேலே பார்த்தாள். மஞ்சுவின் கன்னில் நீர் காத்திருக்க.

“ஏய் மஞ்சு அன்னிக்கு எதாவது டிப்ஸ் இருந்தாகுடு” என சுவேதா அந்த இடத்தின் நிலையை மாற்றினாள். “ச்சீ போடி” என மஞ்சு சிணுங்க அந்த இடத்தில் சிரிப்பு குடிகொண்டது.

சந்துருவின் மனதில் ‘அந்த ஜான்சி அவ்வளவு அழுத்தமா சொன்னாளே! யாருக்குதமே கெடுதல் நினைக்காத எழிலரசியவே கருனையில்லாம கொண்ணங்க அப்போ குழந்தை பிறந்தா அன்பையும் சொன்னமாதிரியே கொண்ணுடுவாங்களோ. இல்ல அரிசி என்னோட உயிர் உனக்குதான் சொந்தம் நீ வாழ்ந்தா போதும் எனக்கு நான் செத்தாலும் பரவாயில்ல. நமக்குள்ள இது நடந்தாதான குழந்த! நடக்காது அன்பு என்ன மன்னிச்சிடு” என மனதில் புலுங்கிகொண்டிருந்தான். அந்த நேரம் “ஹாப்பி பர்ஸ்ட் நைட்

விஷ்ஸஸ் பை ஜான்சி" என ஒரு குறுஞ்செய்தி வர சந்துரு சற்றுபதறினான்.

அப்போது பின்னாலிருந்து ஒரு கை அவனது கைபேசியை பிடுங்கியது."டேய் உள்ள ஃபோன் அனுமதி இல்ல" என்றாள் சுவேதா.

"ஏய் லூசு ஒரு இம்பார்டன்ட் கால் வரும்டி அதான் வெயிட் பன்றேன்"

"அன்னி உனக்கு வெயிட் பன்றாங்க பரவாயில்லையா! இனிமே அவங்கதான் இம்பார்டன்ட் உனக்கு முதல்ல போ" என்று சுவேதா கூற உள்ளே அன்பரசி நின்றுகொண்டிருந்தாள்.

என்றுமில்லாமல் இன்று கொள்ளை அழகுதான். சந்துருவால் அவனது கண்களை எடுக்க முடியவில்லை அவளிடமிருந்து. அவன் வந்ததும் அவள் எழுந்துகொண்டு தலைகுணிந்துநின்றாள். நாட்டிற்கே அரசியாக இருந்தாலும் தன் மன்னவன் முன்னிலையில் ஓர் குழந்தையாக இருப்பது தமிழ்பெண்களின் ஒரு பன்பு. அரிசியும் அப்படியே.

"ஏய் என்ன அரிசி இதெல்லாம் உட்காரு" என்றான்.

"இல்ல நீங்க உட்காருங்க"

அவளருகில் அவன் வந்தான் அவளுது இதயதுடிப்பு அதிகமாகியது. தலையை கீழே குனிந்துகொண்டாள்.

‘எப்படி கூறுவது இவளிடம் பேசாமல் கலைப்பா இருக்குனு சொல்லிட்டு தூங்கிடாலாமா? இல்ல வேனாம்” என ஒரு திட்டம் தீட்டினான்.

அவளது கன்னத்தைபிடித்து நிமிர்த்தியவன் அவளை கட்டிலில் அமர வைத்தான். அவள் மீண்டும் தலைகுனிந்தாள். அவள் கண்ணில் ஜெனியின் மரணமும் கூடவே அந்த ஜான்சியும் வந்து சென்றனர். “சந்துரு சாககூடதுனா நீ குழந்தை பெத்துகிட்டு சாகனும்” எனற அந்த வார்த்தை எதிரொலித்தது.

“அரிசி என்க்கு ஒரு ஆசை அத நிறைவேத்துவியா”

அவள் குழப்பதுடன் நிமிர்ந்துபார்த்தாள். “ம்ம்” என தலையாட்டினாள்.

“இல்ல எனக்கு லவ் பன்னனும்னு ஆசை! சுத்தமான லவ் அதுவும் உன்ன மட்டும்! சின்ன வயசுல உன்கூட இருத்துட்டு பிரிஞ்சுபோனப்போ ஏதோ ஒருமாதிரி இருந்துச்சு! அது காதல்னு எனக்கு அப்போ தெரியல அரிசி. நான் உன்ன மட்டும்தான் நினைச்சுகிட்டு இத்தன நாள் வாழ்ந்தேன். இப்ப இங்க நான் வந்தது

கூட நீ யாரையாவது கல்யானம் பன்னிருப்ப உன்ன ஒருதடவ பாத்துட்டு உன் குட்ட ஏன்ஜல கொஞ்சிட்டு போகலாம்னுதான் வந்தேன் ஆனா உனக்கு கல்யானம் ஆகலை! உண்மைய சொல்லனும்னா எனக்கு கொஞ்சும் சந்தோஷமா இருந்துச்சு! அப்புறம் உன் லவ் பத்தி எனக்கு தெரிஞ்சது அன்பு" என்று வார்த்தைகளை விழுங்கினான்.

அவள் குற்ற உணர்வில் அவனை பார்த்தாள். "இல்ல அன்பு என்ன மன்னிச்சிடு என்னால உன்கிட்ட எந்த உண்மையும் மறைக்க முடியாது அதான் சொன்னேன் எதாவது தப்பா பேசிருந்தா மன்னிச்சிடுடா" என அவளை பார்த்தான்

அன்பு அவனது மனதைபார்த்து என்ன சொல்வது என்று தெரியாமல் அவன்மீது சாய்ந்துகொண்டாள். "சாரிடா அரிசி" என அவள் தலைமீது கை வைத்தான்.

"இல்லைங்க நான்தான் தப்பு பன்னிட்டேன்" என அவள்கூற

"இது இந்த வயசுல வரரதுதான்டா அதுக்கு நீ என்ன செய்வ! என்னால உன்மேல எந்த மாசும் நினைக்க முடியாது"

அவள் அமைதியாக இருக்க "ஏய் அரிசி என்ன என்னோட ஆசைனு கேக்க மாட்டியா"

“ம்ம்”

“என்ன ம்ம்! வாய தொறந்து கேட்டாதான் சொல்லுவேன்” என அவளை மார்பில் அனைத்தபடி கேட்டான்.

“சொல்லுங்க”

“இப்புடி இல்ல! அரிசி மாதிரி கேளு”

“சொல்லுடா ஓலைபட்டாசு” என்று செல்ல கோபப்பட்டாள்.

“இதுதான்டி என் அரிசி! ம்ம் நான் காலேஜ் படிக்கும்போது எல்லாரும் ஜோடியா சுத்திகிட்டு இருப்பாங்கடி எனக்கும் அத பாக்கும்போது மனசுல ஒரு ஆசை வந்திச்சு” என்று அவன் முடிக்கும் முன்னே “நீ யாரையாவது லவ் கிவ் எதுவும் பன்னியா” என்றாள்.

“ஆமாடி” என்றான்

அவனுது கையை பிடித்து கிள்ள “வலிக்குதுடி”

“என்ன தவற யாரையவது நினைச்ச”

*“அதான் நீ பொறந்ததும் உனக்கு நான் தான்னு முடிவுபன்னிடாருடி கடவுள் அப்பறம் எப்புடிடி!”*

*“அவரு வந்து உங்கிட்டு சொன்னாராக்கும்”*

*“இல்லையா பின்ன! அப்புடி இருக்க போயிதான் எனக்கு வந்த லவ் லட்டர்லாம் திரும்ப அனுப்பிட்டேன்.”*

*“ஆமா எத்தன வந்துச்சு”*

*“அது ஒரு நூறு இருக்கும் நான் எனக்கு கல்யானம் ஆகிருச்சுங்க அப்புடின்னு சொல்லி திரும்ப அனுப்பிட்டேன்”*

*“என்ன உங்களுக்கு ஏறகனவே கல்யானமாகிருச்சா?!”*

*“அட என அரிசி தாலிகட்டுனாதான் கல்யானமா! உன்ன நினைச்சுகிட்டு இருந்தாலும் அதுக்கு அதுதானடி அர்த்தம்! உள்ள உன்கூட வாழ்ந்துட்டு வெளிய எப்புடி”*

*“ம்ம்” என சிரித்தாள்.*

“ஆமா சொல்ல வந்த விசயத்த மறந்துட்டேன் பாத்தியா! எனக்கு உன்ன லவ் பன்னனும்டி அப்புறம் இதெல்லாம் வச்சுகலாமே ப்ளீஸ்டா அரிசி” என்றான்.

அவனது ஆசை மொழியில் சற்று மயங்கிபோனவள் “ம்ம் சரிங்க” என்றாள் உள்ளிருந்து. அதன்பின்தான் உணருந்தாள் ஜான்சி என்ற பெயரை.

“சரி அரிசி செல்லம் நீ தூங்கு” என அவளுளை பார்த்தான்.

வார்த்தை இல்லாமல் “நீங்க தூங்களையா” என்றால்.

“எனக்கு லேட் ஆகும் அரிசி நீதான் டயர்டா இருப்ப” என அவளை சாய்த்தான். அவள் அவனை ஏக்கமாக பார்த்துகொண்டிருந்தாள்.

“ஒழுங்கா தூங்கனும் இப்புடி அர கண்ணு மூடுற வேலைலாம் வச்சுக்கூடாது நான் உன்ன பாத்துகிட்டுதான் இருப்பேன். தூங்குறதுலையும் சரி சாப்பாட்டு விசயத்துலையும் சரி நான் உனக்கு புருஷனாதன் நடந்துகுவேன் பாத்துக்க! கண்ண மூடு” என அவன் கூற

“சரிங்க” என சிரித்துகொண்டே போலியாக கண்ணை மூடினாள்.

“என்ன சிரிப்பு” என்றான். தன் முகத்தில் இருந்த சிரிப்பை பார்த்துவிட்டான்.

அன்பரசி சிறிதுநேரத்தில் உறங்கிபோக அவளை தூங்கும் அழகை ரசித்துகொண்டிருந்தான். பின் அவன் போர்வையை எடுத்து தன் காதலிக்கு போர்த்திவிட தன்னவனுடன் நிகழ்வில் இல்லாமல் கனவில் வாழ்ந்துகொண்டிருப்பாள்போலும் அந்த போர்வையை இருக்கமாக கட்டி அனைத்து குழந்தை மாதிரி உறங்கினாள்.

“என்ன மன்னிச்சிடு அரிசி” என அவள் தலையை கோதியவன் அவள் நெற்றியில் முத்தம் வைத்துவிட்டு வெளியே நடந்தான். அவன் போனதும் கண்கள் திறந்தவள் அவன் செல்வதை பார்த்துகொண்டிருந்தாள்.

“ஏன்டா நீ செத்தா நான் மட்டும் உயிரோட இருப்பேன்னு நினைக்குறியாடா” என மனதிற்குள் கண்ணீர் வடித்தாள். அவன் முத்தம் வைத்த இடத்தை தொட்டுபார்த்தாள்.

அனைவரும் உறங்கிகொண்டிருக்க வெளியில் வந்தான். அந்த பந்தலில் ஒரு நபர் மட்டும் அமர்ந்திருப்பது தெரிந்தது.

“என்னப்பா இங்க உட்காந்துருக்கீங்க தூங்கலையா”

:"இல்ல தூக்க வரலப்பா! ஆமா நீ அன்புகூட இல்லாம இங்க என்ன பன்னுற" இது சன்முகம்.

"இல்லப்பா அவ ரொம்ப டையர்டா இருக்கா. அதான் தூங்குறா எனக்குதூக்கம் வரல அதான்" என்றான்.

அவனை பார்த்தவர் மீண்டும் அமைதியானார்.

"என்னப்பா காலையில இருந்து ஒருமாதிரி இருக்கீங்க நான் கவனிச்சிகிட்டுதான் இருக்கேன். கம்பெனில எதாவது பிரட்சனையா"

"இல்லப்பா உங்க அம்மா நியாபகம் அதான்" என அழ சந்துரு அமைதியாக இருந்தான்.

"அதான் அம்மாவா அன்பு வந்துட்டாளப்பா இனி ஏன் கவலை படுறீங்க! உங்கள நல்லா பாத்துப்பா"

"அவளுக்கு எதாவது ஆகிடுமோனு பயமா இருக்குப்பா" என்றார் சன்முகம்.

"என்னப்பா சொல்றீங்க"

“ஆமாப்பா காலையில அந்த ஜான்சின்னு ஒருத்தி வந்தா தெரியுமா”

“யாரு” என சிந்தித்தவன்.”ஆமா கூட ஒரு பையன் வந்திருந்தானே வளர்மதிகிட்டகூட கடலை போட்டானே அவங்களா” என்று சமாளித்தான்.

“அவதான்பா நான் யாருக்கு தெரியாம உன்ன வளக்கனும்னு நினைச்சேனோ அவதான் அது. இப்ப உங்க கல்யானத்துல வந்துருக்கா. அதுவுமில்லாம. சந்துரு எனக்கு தேவையில்ல அன்புதான் என்னொட டார்கெட்னு சொல்லுறா அதான் பயமா இருக்கு”

“என்னப்பா சொல்றீங்க எனக்கு புரியலை”

“அவங்க அப்பாதான் உங்க அம்மா பார்வதிமேல கார் ஏத்தி கொண்ணாங்க” என்று அழுதார்.

“என்னப்பா சொல்றீங்க ஏன் அம்மா நல்லவங்கப்பாஅவங்களுக்கு என்ன பன்னிருப்பாங்க”

“அம்மா நல்லவங்கதான்பா ஆனா தொழில்ல போட்டியவிட பொறாமை அதிகமா இருந்த காலம்பா அது.”

“அதுக்கு அம்மாவ கொல்ல எப்புடிப்பா மனசு வந்துச்சு” என சந்துரு கண்கலங்கினான்.

## அத்தியாயம் - 50

“என்னங்க அந்த பலசரக்கு கடையில வேலைக்கு ஆள் கேட்டாங்க அவங்களுக்கு வயசாகிருச்சுல அதான் முடியலையாம் கூடவே நானும் இருந்தா அவங்களுக்கும் பேச்சுதுனையா இருக்கும்ங்க நான் போகட்டுமா” என்று அனுமதி வாங்கிகொண்டிருந்தாள் காவேரி தன் கனவன் சன்முகத்திடம்.

“இல்லமா உனக்கு வீட்டுலையே வேலை சரியா இருக்கும்மா அங்கலாம் எதுக்கு வேணாம்மா” என தன் புது காதல் மனைவியிடம் பதிலுக்கு நின்றார் சன்முகம். அவருக்கு நன்றாக தெரியும் பணக்கார வீட்டில் வாழ்ந்தவள். இன்று தன்காதலால் இப்படி சிறிய வாடகை வீட்டில் கஷ்டபடுகிறாள்.

ஒரு நல்ல வீட்டையாவது கட்ட வேண்டும் எனபதுதான் சன்முகத்தின் இப்போதைய எண்ணம். சன்முகமோ கொடுத்து வாழ்ந்த வள்ளல் பரம்பரையின் வாரிசு. அந்த ஊரில் இயங்கும் அந்த பள்ளியும் கோவிலும் சில குளங்கள். அதன் பின் இருக்கும் இன்னும்

சில இடங்களும் சன்முகத்தின் தாத்தாவின் பெயரை பறைசாற்றும் நினைவுகள். ஊரை ஊட்டி வளத்தவர்கள் தன் பரம்பரையை கேட்பாரில்லாமல் விட்டது ஏனோ தெரியவில்லை. அதிலும் சன்முகத்திற்கு கல்யானமாகி வந்த மனைவிக்கு ஒரு நல்ல வீடில்லாமல் பட்டபாடு அந்த கடவுளுக்கே வெளிச்சம்.

என்னதான் வீட்டு ஓனர் நண்பர் என்றாலும் வாடகை தராமல் இருக்க சன்முகத்திற்கு பிடிக்கவில்லை அதற்கு காரணம் காவேரிதான். "எனக்கு இந்த அடுத்தவங்க காசுல வாங்கிட்டு வந்த பூ வேனாம்ங்க" என காதலிக்கும்போது கூறிய அந்த தருனம் இன்றும் சன்முகத்தின் நினைவைவிட்டு அகலவில்லை. அதனால் ஒரு வைராக்கியம் சன்முகத்திற்கு தன்னை நம்பி வந்தவளை கண் கலங்கவிடகூடாது என்பதே. காவேரியும் அப்படியே தன்னவர் கஷ்டபடகூடாது.

நான் வந்த பிறகு அவரது மகிழ்ச்சி பறிக்கபட்டதாக நினைத்தாள். இன்றும் அதே பிரட்சனைதான். வீட்டல் அடுப்புகூட சன்முகத்தின் கையை நம்பியிருக்க இன்றும் அவருக்கு வேலை இல்லை. தன்னவளுக்காக அந்த பாட்டியிடம் இருந்து பாத்திரங்களை கழுவி விட்டு அந்த இட்லியை கொண்டுவந்துவிட்டார்.

ஆனால் "நான் நல்லா சாப்புட்டேன்மா! உனக்குதானு அசைவம் ஆகாதுல அதான் உனக்கு இட்லிமட்டும்தான் இருந்துச்சு" என ஒரு வழியாக ஊட்டிவிட்டுவிட்டார். காவேரி அதை மனமில்லாமல் உண்டாள்.

இரவில் குட்டிபோட்ட பூனை மாதிரி எழுந்து தண்ணீரை அடிக்கடி குடித்து தன் வயற்றை சமாதானம் செய்த தன் கனவனை நினைக்கும் அவள் போர்வையில்லாத அந்த இல்லத்தில் தன் முந்தானையை மூடிகொண்டு அழுதாள். அவளை கூர்ந்து பார்த்த சன்முகம் அவள் தூங்கிவிட்டாள் என நினைத்துகொண்டு பசியால் உறக்கமில்லாமல் எனபதைவிட தன்னவளின் எதிர்காரத்தை நோக்கி கற்பனைகளை காட்சிகளாய் பார்த்தார். அனைத்தும் பூதாகரமாக பயமுறுத்தியது.

இந்த நிகழ்வுதான் இன்று இந்த சிறிய சண்டை "இஙல்லைங்க எனக்கும் வீட்டுல பொழுது போகமாட்டேங்குது. அங்க கஷ்டமான வேலை இல்லைங்க நான் படிச்சுருக்குறதால கணக்கு எழுதுற வேலேதான். அப்புறம் எதாவது சார் இல்லைனா மட்டும் சரக்கு எடுத்து தரனும் அவ்வளவுதான்" என்றாள் அந்த நிர்வாகம் பயின்ற மங்கை.

'என்ன காவேரி உன் மனசு எனகிட்டதான இருக்கு அப்புறம் எப்புடி உன்னால என்ன ஏமாத்த முடியும். அந்த கடைய பத்தி எனக்கு தெரியாதா! அந்த முதளாலி ஒரு அட்டை பூச்சிடி! அவனபோய் சார்னு கூப்புடுற. என்ன பாக்காம இருந்திருந்தா உன்ன நூறுபேர் முதளாலின்னு கூப்பிடுவாங்கடி" என மனதில் வருந்தினார்.

"என்னங்க நான் போரேனே!" என்று கெஞ்சினாள்.

"இங்க பாரு காவேரி! நான் செத்துக்கு அப்புறம் நீ வேலைக்கு போறதுன்னா போய்க்கோ! இல்ல அதுதான் உன் முடிவுனா நான் சொன்னதுக்கு அர்த்தம் உனக்கு தெரியும்னு நினைக்குறேன்" என கோபமாக கதவை அடித்துவிட்டு நகர்ந்தார் சன்முகம்.

உள்ளே தன்னவன் தனக்காக சிரம்படும்போதும் தன் மனைவி கஷ்டபடகூடாது எனபதில் உறுதியாக இருப்பதை நினைகும்போது கண்ணீர் பீறிட்டு வந்தது. தன்னவன் சென்ற வழியை பார்த்துகொண்டிருந்தாள்.

"டேய் சன்முகம் வீட்டுல இருக்கியா" என்று குரல் வர அந்த சாப்பாட்டு கடைகாரன் வந்துவிட்டான் என பயந்தாள். காலையில் இங்கிருந்த தினமும் காவேரிக்கு சாப்பாடு சென்றுவிடும். அவளுக்கு சமைக்க அவ்வளவாக தெரியாது என்றாலும். அங்கு சமைக்க பொருள் இல்லை எனபதே உண்மை. அன்று ஒருநாள் அந்த கடைகாரன் குடித்துவிட்டு வந்த காவேரியை திட்டியதை எப்படி கூறுவாள் தன்னவனிடம்.

இன்றும் அதே சத்தம் இதயதுடிப்பு அதிகரித்தது. அந்த கதவின் இடுக்கு வழியே பார்த்தாள். அங்கு அதிர்ச்சி அவளுக்கு.

"என்னம்மா என்ன கண்ணுல தண்ணி அவன் எதுவும் சொன்னானா?" கோபத்துடன் போஸ்.

“இல்லன்னா ஒட்டடை அதிகமா இருந்துச்சு அதான் அடிச்சேன் கன்னுல விழுந்திருச்சு அதான்” என்று சமாளித்தாள். “ம்ம் திட்டுனானா அண்ணானு ஒரு குரல்மட்டும் குடு தோல உறிச்சுபுடுறேன்” என்று தன் தொனியில் மிரட்டினார்.

தன் கனவனது கடை அடித்து நொறுக்கபட்டு இன்று கூலிவேலைக்கு கூட இன்று ஒருவரின்காலை பிடித்து தொங்கிகொண்டிருக்கிறார் என்று அவரது தோளனிடம் கூறினாள் அவ்வளவுதான். “இல்லன்னா கடைக்கு போயிருக்காரு நீங்க உள்ள வாங்கண்ணா”

“ம்ம் நம்ம வீடும்மா நான் வராமலா” என உள்ளே வந்தவர் அந்த சிறிய அறையை பார்த்தார். “இந்த புடவைதான அன்னைக்கு கட்டியிருந்த” என்றார் சந்தேகமாக.

“ஆமான்னா பத்துபுடவைய துவைக்க போட்டுருக்கேன் அண்ணா இது மட்டும்தான் இருந்துச்சு அதான்” என்று அவள் கூறினாலும் அதில் தண்ணீரில் மட்டும் ஊற வைத்து பிழிந்து அணிந்திருப்பதற்கான தடயமாக கறையும் அந்த கசங்கள்களுமிருந்தன.

“தண்ணி கொண்டுவாம்மா வெளிய சரியான வெயில்” என அந்த குளிர் காலையின்மீது பலிசுமத்தினார்.

குடுகுடுவென ஓடியவள் அங்கிருந்து எதையோ உருட்டும் சத்தம் கேட்டது. பின் ஒரு குவளையில் மோர் எடுத்து வந்தாள். அதுதான் அவளுக்கு மதிய உணவு எனபது போஸுக்கு தெரியாது.

“என்னம்மா இப்புடி குளிருது நீ மோர் தர்ர! தண்ணி போதும்” என அவளை கடந்து சமையலறைக்குள் சென்றார் போஸ்”

அங்கு அடுப்பு அதில் இருந்த சாம்பல் அளவு அங்கு இதுவரை நடந்த சமையலை விலக்கியது.அதிலும் அந்த மூலையிலிருந்த அந்த ஒரு பாத்திரம் அதன் இடுப்பில் இருந்த ஓட்டையால் நீரின் கொள்ளலவு குறைந்திருந்தது. அதேபார்த்த போஸ் அங்கிருந்த டம்ளரில் நீரை ஊற்றினார். பின் வெளியே வந்தவர்.

“ஏம்மா நானெல்லாம் செத்துபோயிட்டேனல”

“ஐயோ அண்ணா” என பதறினாள்.

“பின்ன என்னமா கஷ்டம்னா சொல்லங்கனு சொன்னேன்ல என்ன மறந்துட்டீங்கள்ள” என்றார் கையறுநிலையாக.

“இல்லன்னா” என கண்களில் நீர் வந்தது.

“கடை என்ன ஆச்சி”

"அது இப்ப கொஞ்சம் வியாபாரம் சரியா போகலைணா அதான்! அடுத்த மாசம் நல்லா போகும்னா சீசன் டைம்"

"எப்புடி அங்க அந்த ரவுடி ராணிகிட்டயா"

போஸ் முதலில் சென்று வந்தது அங்குதான் எனபது இவளுக்கு தெரியாது.

"மன்னிசிடுங்கண்ணா" என கீழே அமர்ந்து அழுதாள்.

"இங்கபாரும்மா எனக்கு தங்கச்சி இல்லைனு ரொம்ப கவலைம்மா! அத போக்கதான் நீ வந்தனு நினைச்சேன் ஆனா நீ என்ன உன் அன்னவா ஏத்துகல அப்புடி இருந்திருந்தா எதாவது பிரட்சனைனா எனகிட்ட ஓடி வந்துருப்பேல"

"இல்லனா அது வந்து" என்றாள் அழுதுகொண்டே

பின் எழுந்து சென்றவர் கைநிறைய காய் கறிகளும் பழங்களும் தின்பொருட்களும் கூடவே காவேரிக்கு சாப்பிட சாப்பாடும் வாங்கி வந்தார்.

"சாப்பிடும்மா"

“இல்லன்னா அவரு சாப்பிடல”

“உன்ன இப்புடி வச்சிருக்குறதுக்கு அவன் இன்னைக்கு என்கிட்ட செத்தான் நீ சாப்புடு அத பாக்க உனக்கு தெம்பு வேணுமில”

அவள் போஸை பாவமாக பார்த்தாள்.

“இப்ப சாப்புடுறியா என்னம்மா இருக்கு” என உறுமல் குரல் போஸிடமிருந்து வரவே கோழி தவிட்டை விழுங்கியதுபோல விழுங்கினாள்.

காவேரி சாப்பிட்டவுடன் “அவன் எப்பமா வருவான்”

“தெரியல்லண்ணா இன்னைக்கு வேலைய பொருத்து”

“ம்ம் சரிம்மா நான் இப்ப வந்துடுறேன்” என கிளம்ப காவேரி அமைதியாக அமர்ந்தாள்

சந்தைக்கு சென்ற போஸ் அங்கு பாத்திரங்களையும் துணிகளையும் வங்குவதற்காக சென்றார். அங்கு தன் நண்பன் இல்லை மச்சான் மட்டிகிட்டார். அதிலும் அந்த கனமான மூட்டைகளுடன்.

“தம்பி இந்த மூட்டையும் தூக்குறீங்களா” என்று போஸ் கூற திரும்பினார் சன்முகம். “டேய் நீ எப்படா வந்த”

“நீ என்னடா மூட்டை தூக்கிட்டு இருக்க?”

“நம்ம கடைக்கு சரக்கு ஏத்துற பையன் லீவுடா அதான் நானே கலத்துல இறங்கிட்டேன் எப்படி என் பலம்” என்று தன் கைகளை காட்ட

“எப்போல இருந்துடா காய்கறி கடைல உரம்விக்க ஆரம்பிச்சீங்க” அப்போதுதான் அந்த மூட்டையை கவனித்தான் சன்முகம்.

“இல்லடா”

“அப்புடியே ஒன்னு வச்சேன்னா தெரியும்டா! நான் தங்கச்சிய பாத்துட்டுதான் வாரேன்” என்று போஸ் கூற எதுவும் பேச முடியாமல் நின்றார் சன்முகம்.

“மரியாதையா கிளம்பு வீட்டுக்கு வா” என கூற அங்கிருந்த ஒரு நபரிடம் “கதிர் ஐய்யாகிட்ட சொல்லிரு வீட்டுக்கு சினேகிதன் வந்துருக்காங்க”

“சரி சன்முகம் நான் பாத்துகிறேன் போய்ட்டு வா”

இருவரும் கிளமப போஸ் கையில் நல்ல எடையுள்ள மூட்டையை தூக்கிகொண்டு வந்தார்.

“என்னடா இது மூட்டை” இது சன்முகம்.

“வாய மூடுடா எதாவது பேசுன அப்புறம் உன்ன கொண்ணுடுவேன் பாத்துக்க” தன் நண்பனின் கோபம் நன்கு அறிந்தவன் அதனால் அமைதியானான். பின்ன சிறு வயதில் சன்முகத்தை வாத்தியார் அடித்தற்கு அவரின் தலை உண்டிவில்லால் பிளந்தவன் அல்லவா!!

வீடும் வந்தது. “காவேரி வாம்மா” என சன்முகதின் குரல்,

அவள் வெளியே வந்து “என்ன அண்ணா இதெல்லாம்”

“ம்ம் இதுல பாத்திரம் இருக்கு அப்புறம் உனக்கு துணி எல்லாம் எடுத்து வச்சுருக்கேன் இவனுக்கும்தான்.”

“இதெல்லாம் எதுக்குன்னா”

*“ஏம்மா நீ கஷ்டபடுறது சொல்லிதான் எனக்கு தெரியனுமா” சன்முகமும் காவேரியும் அமைதிகாத்தனர்.*

*“சரி எதுக்கு சோகம்! இனிமே எதாவதுனா இந்த அண்ணன நினைங்க நான் உடனே வந்துடுவேன்”*

*என சமையலறையில் புகுந்தனர் இரு நண்பர்களும். காவேரி அவர்களுக்கு உதவி செய்ய சிறிது நேரத்தில் சாப்பாடு ரெடியாகியது. அனறுதான் ஒரு நல்ல சாப்பாட்டை சாப்பிட்டால் காவேரி. காதல் புறாக்கள் இருவரையும் அமரவைத்து சாப்பாடு போட்டு மகிழ்ந்தார் போஸ்.*

*“அண்ணா நல்லா சமைக்கறீங்க எங்க கத்துகிட்டீங்க”*

*“இவன் கத்துகிறேன்னு எங்க வயித்தல பதம் பாத்தான்” என கடந்தகால நினைவுகளை ஒட்ட காவேரி அவர்களின் நட்பின் ஆழம் கண்டு வியந்தாள்.*

*“சரிடா பார்வதி என்ன பன்றா”*

*“அட கடவுளே வந்த விஷயத்தயே மறந்துட்டேன் பாத்தியா! எனக்கு அவளுக்கும் கல்யானம்டா அடுத்த வாரம்! அத சொல்லத்தான் வந்தேன்” என்று சிரித்தார்.*

*“அட பாவி! ஒரு வழியா பிரட்சனை முடஞ்சது! அம்மா என்ன சொன்னாங்க ஒத்துகிட்டாங்களா”*

*“இல்லடா அவங்களுக்கு சம்மதம் இல்ல! அப்பா சாவுல இருந்து அந்த குடும்பத்துமேல பகைதான். என்ன பன்றது பார்வதி அரலிகாய அரச்சு சாப்புட்டுருச்சு”*

*“ஐய்யோ என்னடா சொல்ற”*

*“நானும் அப்புடிதான்டா நினைச்சேன்! எங்க அம்மா சம்மதிச்ச அப்புறம்தான் சொல்லுச்சு எனகிட்ட அது வெள்ளரிகாயாம்! கேட்டா சாகுறதுக்கா மாமா உன்ன காதலிச்சேன் உன்கூட வாழனும்னு அழுதா அதுகப்புறம் என்னை என்ன செய்ய சொல்ற!” என கூறிவிட்டு “இந்த அரலிகாய் மேட்டர ரகசியமா வச்சுகோட” என சிரிக்கவே அனைவரும் சிரித்தனர்.*

*பின் தன் கையிலிருந்த சில நோட்டுகளை தன் தங்கையின் கையில் திணித்தார். “அண்ணா இதெல்லாம் வேனாம் அண்ணா”*

*“இப்ப நீ வாங்கலைனா நான் இங்க வரவே மாட்டேன் பாத்துக்க” என போஸ் கூறவே அரைமனதுடன் வாங்கினாள். “அப்புறம் இந்த ஊர் தலைவர்கிட்ட பேசுனேன் நாளைக்கு கடைய காலிபன்னி*

குடுத்துருவாரு நாளைல இருந்தாவது தொழில பாத்து தங்கச்சிய நல்லா பாத்துக்க" கூறி நடந்தார்.

சன்முகம் அவரின் கூடவே நடந்துசென்று வழியனுப்பி வைத்தார். காவேரிக்கு இப்படி ஒரு அண்ணன் தன் கூட பிறக்கவில்லையே என்ற வருத்தம் இருந்தாலும புகுந்தவீட்டில் ஒரு அண்ணன் கிடைத்ததில் மகிழ்ச்சி.

அதிலும் போஸின் கல்யானநாளில் காவேரி தன் சொந்த அண்ணாவுக்கு கல்யானம் நடந்த்தை போல மகிழ்ந்தாள். அதிலும் தான் அசைவம் சாப்பிடாதவள் எனபதை கண்ணாலயே புரிந்துகொண்டு சைவம் ஏற்பாடு செய்த பார்வதி அன்னி கிடைத்ததில் இரட்டிப்பு மகிழ்ச்சி. சொந்தம் என்று சொல்லிகொள்ள காவேரிக்கு இரு உயிர்கள் கிடைத்தன.

"அன்னி நல்லா இருக்காங்க"

"ஆமா சொந்த மாமா பொண்ணாங்க"

"காதல் கல்யானமா ஆனா அப்புடி தெரியலையே" என தன் கனவன் எத்தனை முறை கூறினாலும் திரும்ப திரும்ப தன் அன்னியின் புகழை பாடிகொணாடே வீடு வந்து சேர்ந்தாள்.

"ஏங்க அன்னி நல்லா சமைப்பாங்களா"

“ம்ம் கருவாட்டு குழம்புக்கு அடிச்சுக்க ஆளே கிடையாது. நாங்க எட்டாப்பு படிக்கும் போதே கம்மாயில மீன புடிச்சுட்டு பார்வதிகிட்ட போயிடுவோம். அவ வீட்டுக்கு தெரியாம அப்புடி அருமையா சமச்சு குடுத்து விடவா! அந்த சுவை நாக்குல இன்னும் இருக்குடி” என கனவில் மிதந்துகூறினார்.

“அப்ப எனக்குதாங்க ஒன்னுமே தெரியல நான் வேனும்னா அன்னிகிட்ட கட்டுகிடவா” என்றாள். காவேரிக்கு தன்அன்னி பார்வதியின் அருகிலிருந்து தன்னிடமிருந்த பறிபோன அன்பை திரும்ப பெறலாம் என நினைத்தாள்.

“அதுக்கு என்ன தாராளமா சொல்லி தருதவாங்கம்மா” என அந்த நாள் நகர இரவிலும் அதே பேச்சிதான். சன்முகமும் தன் மனைவி நீண்ட நாள் கழித்து பேசுவதை ரசித்து ஆனந்தமாக கேட்டுகொண்டிருந்தார்.

பேசிகொண்டிருந்தவள் அப்படியே உறங்கிபோக சன்முகம் அழகாக தூங்கும் அவளை பார்த்து “நீ ரொம்ப நாள் கழிச்சு இப்ப தான்டி சிரிச்சு சந்தோஷமா பேசுற! நான் உன்ன ரொம்ப கஷ்டபடுத்ததிட்டேன் காவேரி என்ன மன்னிச்சிடு” என மனதினுள்ளேயே பேசிகொண்டு தலையை கோதிவிட அவள் தன்னவனை இறுக கட்டிகொண்டு உறங்க சன்முகமும் அப்படியே உறங்கிபோனார்.

காலையில் சூரியன் அன்றாட வேலையே துவங்க கூடவை காவேரியும் தொடர்ந்தாள். “என்னங்க இந்தாங்க காஃபி”

“இன்னைக்காவது இதுக்கு காஃபினு பேர் வச்சுகலாமா”

“கொஞசம் அட்ஜஷ் பன்னிகோங்க அன்னி அளவுக்கு இல்லைனாலும் ஏதோ என்னால முடிஞ்சது” என சினுங்க

“ஏய் காவேரி வர வர நல்லா சமைக்க ஆரம்பிச்சுட்ட! காஃபி நல்லா இருக்கு” என சன்முகம் கூற.

காவேரியின் முகம் மாறியது வயிற்றை பிடித்துகொண்டு வந்தி எடுத்தாள். சன்முகம் டம்ளரை கீழே போட்டு விட்டு அவளது தலையை பிடித்தார். பின் அப்படியே மயங்கினாள்.

சன்முகம் தண்ணீர் தெளித்து எழுப்ப கூடவே அருகிலிருந்த பாட்டி இடம் பெற்று “மகராசன் உங்கவீட்டுக்கு வர போறான்பா” என காவேரியின் முகத்த்தில் சொடுக்கிட காவேரி வெட்கபட்டு சிரிக்க சன்முகத்தின் மகிழ்ச்சியை விளக்க தமிழ் கடலில் வார்த்தைகள் இல்லை.

“காவேரி இருக்கியாமா..” என வெளியிலிருந்து ஒரு குரல் வர மூவரும் திரும்பி பார்த்தனர்.

## அத்தியாயம் - 51

*“காவேரி இருக்கியாமா….?” என்று குரல் வரவே மூவரும் கதவை பார்த்தனர். காவேரி கண்டுபிடித்துவிட்டாள். கலைப்பையும் பொருட்படுத்தாமல் “சந்திரசேகர் அப்பா” என எழுந்து ஓடினாள்.சன்முகத்தின் மனதில் குழப்பம் குடிகொண்டது. அவள் அப்பா இறந்துவிட்டாரே! அவர் இருந்திருந்தால் சன்முகத்தின் உயிர் இந்த நேரம் பல மயில்கள் கடந்து சென்றிருக்கும். தன் மகளை கவர்ந்து வந்தால் எந்த தகப்பனுக்குதான் கோபம் வராது. ஆனால் அவர்தான் இல்லையே அப்புறம் யார அப்பானு கூப்பிட்டுட்டு ஓடுறா” என வெளியே வர.*

*காவேரி தந்தை வயதுல்ல ஒருவர் தோளில் சாய்ந்துகொண்டு அப்பா என அழுதாள். அவர் தன் மகளின் தலையை வருடிகொடுத்தாள். சன்முகம் வந்து நிற்க. “வாங்க மாப்பிள்ள” என்றார்.*

*“ம்ம்” என தலை ஆட்டிய சன்முகம். “நீங்க?”*

*“இது என மகள் காவேரிப்பா நான் சந்திரசேகர்” மீண்டும் சன்முகம் குழப்பமடைய*

*“என்னப்பா அப்புடி பாக்குறீங்க இது என செல்ல பொண்ணு காவேரி; இவ அப்பா லிங்கம் என்னோட ஃபிரன்டு; இவ அவங்கிட்ட இருந்தத விட என்கிட்டதான் வளந்தா! என செல்ல தேவதை” என கூறிவிட்டு “எப்புடிம்மா இருக்க” என அவர் கேட்டதும் சன்முகம் தலைகுனிந்தார்.*

*“நிம்மதியா இருக்கேன்ப்பா” என காவேரிகூற சந்திரசேகரின் கண்ணில் நீர் வந்தது. “உங்க அப்பன்தான் விட்டுட்டு போயிட்டான் அவன் இருந்தா இப்புடி கஷ்டபடுவியாமா! இல்ல அவன்தான் உன்ன இப்புடி விட்டுருப்பானா? நீ ஓடிவந்து கல்யானம் பன்னாகூட கோவத்துல கத்துவாம் அப்புறம் என பொண்ணுடா அப்புடின்னு வந்துடுவான். இப்ப யாருமே இல்லாம் நீ கஷ்டபடுறியேம்மா” என அழுதார்.*

*“உள்ள வாங்கப்பா! நான் எந்த கஷ்டமும் படலப்பா இவரு என்ன நல்லா பாத்துகிறாரு” என்று அவள் தன்னவனை பார்த்தாள்.*

*“வேற எந்த குறையுமில்லையே?”*

*“அவளுக்கு என்ன ஐயா குறை மகராசி வயித்துல மகராசன் பொறக்க போறான்” என அந்த பாட்டி கூறிவிட்டு வெளியே நகர “இந்தாங்க அம்மா நல்ல செய்தி சொல்லிருக்கீங்க” என தன் பையிலிருந்த காந்திதாளை கொடுக்க வேண்டாமென்று மறுத்தார். பின் வற்புறுத்தலால் வாங்கிகொண்டு வெளியே சென்றார்.*

“என் குட்டி தேவதைக்கு ஒரு குழந்தையா! என்னால நம்பவே முடியலம்மா இன்னும் உன்ன தோள்ள தூக்கி வச்சுகிட்டு நானும் அவனும் அந்த அணைமேல நடந்த நியாபகம் தான் இருக்கு” என தன் மகளை பார்த்தவர் அவள் கழுத்தில் தன் கழுத்திலிருந்த சங்கிலியை அணியும்போது தாலி மஞ்சளில் கட்டியிருப்பது தெரிந்தது.

“என்னம்மா மஞ்சள்?” என கேட்க அதை உள்ளே எடுத்து போட்டவள். “இல்லப்பா இவங்க வழக்கம்பா ஒரு வருசம் மஞ்சள்தான் போடனுமாம்.” என்று சமாளித்தாள். தந்தையல்லவா கண்டுபிடத்துவிட்டார்.

“என்ன மாப்ள தொழில் பன்றீங்க?” என கேட்க அவள் முந்திகொண்டாள். “மார்கெட்ல பெரிய மளிகை கடைப்பா ஒரு நாளைக்கு நிறைய லாபம் கிடைக்கும்ப்பா” என சமாளிக்க சன்முகம் அமைதியாக நின்றார்.

“மாப்ள உண்மைய சொல்லுங்க”

“வாங்கப்பா சாப்பிடலாம். காஃபி போட்டு வரவா” என ரயிலை திசை திருப்பி பார்த்தால் முடியவில்லை.

“மாப்ள வாய தொறந்து பேசுங்க”

“இல்ல மாமா சின்ன கடைதான்”

“அதிலையும் நல்ல லாபம்தான்ப்பா”

“எப்புடி உங்க அப்பன் லிங்கம் கம்பெனியவிட அதிகமா இருக்குமா” என முறைத்தார். காவேரி கண்ணில் நீர் வந்து அழுதாள். “இந்த வருமானம் போதும்ப்பா”

“உங்க ரெண்டுபேருக்கு போதும் என பேரபுள்ளை வந்தா என்ன பன்றது” என்று ஆத்திரமடைய இருவரிடமும் பதிலில்லை.

“இங்க பாரும்மா காவேரி உங்க அப்பன் சாகுறதுக்கு மூனுமாசத்துக்கு முன்னாடி எனகிட்ட வந்தான்”என்ற தன தந்தையை பார்த்தாள்.

“புல்லா போதைல இருந்தான். இதுவரை அவன் அந்த அளவுக்கு குடிச்சி நான் பார்த்தது இல்லமா. நான் டேய் என்னடா இப்புடி பன்றனு கேட்டேன். அவனுக்கு மனசு சரிஇல்லைனு புலம்புனான். ஆனா அவன் அடிக்கடி சொன்ன வார்த்தை என பொண்ண பாத்துகோடா அப்புடின்னுதான். ஆனா இப்புடி திடிர்னு இறப்பான்னூ நான் எதிர் பாக்கலைம்மா” என கண்ணை துடைத்துகொண்டார்.

காவேரிக்கு கண்கள் மட்டுமே பேசிகொண்டருந்தன. சன்முகமோ மௌனமாக நிற்க.

“ம்ம் அவன் எனக்கு பன்ன நல்லதுக்கு நான் உனக்குதான்மா நன்றிகடன் பட்டுருக்கேன்”

“ஐயோ அப்பா என்ன பெரிய வார்த்தைலாம் சொல்றீங்க. நான் உங்க பொண்ணுப்பா” என்று பதறினாள்.

“அது இல்லமா! உன் பேர்ல அந்த மில்ல மாத்தி எழுதிருக்கேன் அப்பறம் இந்த வீட்டுல கஷ்ட படாதீங்க! நம்ம பவன் ஹவுஸ் உன்பேர்ல மாத்திட்டேன்மா கொஞ்சம் இரு” என வெளியில் சென்றவர் கையில் சில பத்திரங்களுடன் வந்தார்.

“அப்பா வேணாம்ப்பா” என மறுத்தாள்

“இது உங்க அப்பன் எனக்கு குடுத்ததுதான்மா இப்ப நான் நல்லபேரோட இருக்கேன்னா அவன்தான் காரணம் அதுக்கு! இது உன்னோட சொத்துதான் நான் சும்மா இத்தனை நாளை அத பாத்துகிட்ட பூதம் அவ்வளவுதான்”

காவேரி தயங்கி நின்று தன் கனவனை பார்த்தாள். “மாமா இதெல்லாம் வேணாமே” என்றார் சன்முகம்.

*“ஒரு உண்மைய சொல்லட்டுமா! இந்த காட்டன் மில்ஷ் என்னால பாத்துக்க முடியலமா. ஆமா அந்த S.S கம்பெனிய என்னால சமாளிக்க முடியல. உங்க அப்பன் இருந்திருந்த எதாவது பன்னிருப்பான். என்னால முடியல. அதுவுமில்லாம எனக்கு வயசாகிருச்சு. நீதான்மா எனக்கு வாரிசு உன்ன விட்டா யாரு இருக்கா எனக்கு. என தங்கச்சி உனக்குதான் புள்ள இல்லைல அப்புடின்னு சொல்லி சொத்து வாங்கிகிட்டா. இந்த மில் பழசா இருக்காம் அதனால என்ன பாக்க சொல்லுறா! அதான் நேத்து உங்க அப்பா லிங்கம் என கனவுல வந்து! டேய் உன் பொண்ணு கஷ்டபடுறாடா அப்புடின்னு அழுதான். அதான் உன்ன தேடி கண்டுபிடிச்சு வந்துட்டேன்” என்றார் சந்திரசேகர்.*

*“இல்லப்பா நீங்க பாருங்க நான் உங்களுக்கு ஹெல்ப் பன்றேன்” என்று சமாளித்து பார்த்தாள்.*

*சந்திரசேகர் சோகமாக நின்றார். காவேரிக்கு மனதில் உறுத்தியது.*

*“அப்பா நீங்க எங்க கூடயே இருப்பீங்கன்னா சொல்லுங்க நான் சம்மதிக்குறேன்” என்றாள். சிறிது யோசித்தவர்.*

*“ம்ம் பொண்ணு வீட்டுல கஞ்சி குடிக்கனுமா! சரிடா குட்டிம்மா நீ எது சொல்லி அப்பா இல்லைனு சொல்லிருக்கேன்! ஆனா சீக்கிரமா*

அப்பாவுக்கு ஒரு பேரன பெத்துகுடுத்தா விளையாடிட்டு இருப்பேன் இல்லைனா பாத்துக்கோ" என்றார்.

"சரிப்பா" என்றாள்.

"ஒன்னுனா ஒன்னு இல்லமா! இந்த வீடு நிறைய குழந்தைங்க சத்தம் கேட்கனும் அப்பாதான் அப்பா நிம்மதியா சாவேன்"

"ஏன்பா சாகுறத பத்தி பேசுறீங்க"

"பின்ன என்னமா இங்கயேவா தங்க முடியும் போயிதான ஆகனும்."

"சாப்டீங்களாப்பா?"

"என பொண்ணு கையால சாப்பிடலாமுனு வந்தேன்"

"வாங்கப்பா" என அழைத்தவள் வயிறார சாப்பாடு போட்டாள. "பரவாயில்லயே காவேரி நல்லா சமைக்க கத்துகிட்டியே"

"ஆமாப்பா பார்வதின்னு எனக்கு அன்னி இருக்காங்க அவங்க ட்ரைனிங்க்" என்று சிரித்தாள்.

“ஐயோ மாமா அவங்க சமையல இவ பாத்ததுகூட இல்ல. இவளே ஏகலைவன் மாதிரியும் பார்வதி துரோனாச்சாரியார் மாதிரியும் சொந்தமா கத்துகிறா” என்று சீண்டினார்

“இல்லப்பா அவங்ககிட்ட போய் கத்துகனும்” என்று கூறியவள் தன் தந்தையிடம் பார்வதி பற்றியும் போஸ் பற்றியும் புரானத்தை பாட துவங்கினார். அவை அனைத்தையும் பொருமையாக கேட்டுகொண்டிருந்த சந்திரசேகர்.

“யாரும்மா அது நான் அவங்கள பாக்கனும். என மகளுக்கு கிடைச்ச சொந்தம்”

“நேத்துதான் பா கல்யானம் ஆச்சு, நாம இன்னொரு நாள் போயிட்டு வரலாம்ப்பா. உங்கள பாத்தா அண்ணா சந்தோஷபடும்” என்றாள்.

“இன்னொரு நாள் எதுக்கும்மா அடுத்த மாசம் அந்த கம்பெனிய நீதான நடத்தபோற! போஸ் அதான் உன் அண்ணா அன்னி கையாலையே திறப்புவிழா வச்சுடலாம்” என்று சந்திரசேகர்கூற காவேரியின் அழகினை புன்னகை வந்து மெருகேற்றியது.

“சரிம்மா அப்பாவுக்கு கொஞ்சம் டாக்குமன்ட் வேலை இருக்கு முடிச்சிட்டு அடுத்த வாரம் அப்பா என தங்கத்த தேடி ஓடி வந்துடுவேனாம்” என்று கூற

“அப்பா போக வேனாம்ப்பா இருங்க” என பள்ளிமுதல்நாள் குழந்தைபோல அழுதாள்.

“அப்பா வந்துடுவேன்டா தங்கம் கம்பெனி லீகல் ரைட்ஸ்ல உன்ன சேக்கனும்லம்மா! சரியா ஏழு நாள் தான்மா” என்று செல்ல அந்த வழியை கதவின் மீது சாயந்து பார்த்துகொண்டிருந்தாள் கண்ணீருடன்.

“காவேரி நான் கடைக்கு போயிட்டு வாரேன் ஒழுங்கா சாப்புடு” என சன்முகம் கிளம்ப. “நீங்களும் போறீங்களா” என்றாள்.

“என்னம்மா ஏன் அழற”

“இல்ல அப்பா மனசுல கஷ்டத்த வச்சுகிட்டு எனகிட்ட சிரிச்சிட்டுபோறாரு. எனகூட இருந்தா அவரு நிம்மதியா இருப்பாரு. பிஷினஸ்ல எதாவது பிரட்சனைனாகூட சின்ன வயசுல என்ன பாக்க ஓடி வருவாரு. இப்ப அவரு அழுதத என்னால தாங்க முடியலங்க! அதான் எல்லாரும் என்ன விட்டுபோறாங்க எனக்கு பயமா இருக்கு” என அழுதாள்.

“ஏய் என்னம்மா குழந்தையாட்டம் அழுதுகிட்டு! வயித்துல பாப்பா இருக்குல்ல” என சன்முகம் கூற. “ம்ம்” என்றாள்.

“அப்பா பாப்பாவும் அழும்ல!” அவளது கண்ணீரை துடைத்துவிட்டான்.

“அப்பா அடுத்தவாரத்துல இருந்து நம்மகூடதான் இருக்கபோறாருடா காவேரி எதுக்கு அழற” என்று சமாதானம் செய்து கிளம்பினார் சன்முகம். காவேரி பல முடிவுகளை எடுக்கும் அளவுக்கு வலிமையானவள் என்றாலும் அன்பிற்கு ஏங்கும் உள்ளம் அதனால் உறவுகளுக்காக எளிதில் கண்ணீர் விட்டுவிடுவாள்.

நாட்கள் ஓடியது. சந்திரசேகர் வரவில்லை ஆனால் அவரது வாக்கு வந்துசேர்ந்தது அந்த மில்லின் மேனேஜர் வடிவில்.

“மேடம்! சார் உங்களதான் அடுத்த எம்.டியா போட்டுருக்காரு. இந்தாங்க டாக்குமன்ட்” என்றுநின்றார்.

“அப்பா வரலையாங்க”

“மேடம் உங்களுக்கு விசயம் தெரியாதா! “

“என்னங்க சொல்றீங்க புரியல”

“அப்பாவுக்கு பக்கவாதம் வந்துருச்சு அவர் வக்கில்கிட்ட எழுதுன கடைசி உயில் இதுதான்” என அந்த பத்திரத்தை அவளிடம் கொடுத்தனர்.

“என்ன அப்பாவுக்கு பக்கவாதமா” என கால்கள் அவரை காண நினைத்து துடித்தன. ஆனால் அவளால் முடியாது அல்லவா அதனால் கண்களாலேயே தன் கவலைகளை வெளிகாட்டினாள்.

“மேடம் அடுத்த வாரம் திறப்புவிழா வைக்கனும்னு ஆசைபட்டாரு” என அந்த நபர் அந்த பத்திரத்தை காவேரியிடம் கொடுக்க அதை கண்ணீருடன் வங்கினாள்.

“சரிங்க மேடம் அப்ப நான் வாரேன்” என அவர் கிளம்பினார்.

அந்த பத்திரத்தை தூக்கி எரிந்தவள். “அப்பா எனகிட்ட வர்ரேன்னு சொல்லிட்டு என்ன ஏமாத்திட்டீங்கப்பா! இந்த சொத்துமட்டும் எனக்கு எதுக்கு என்மேல பாசம் வச்ச எல்லாத்துரும் இப்புடி ஆகிடுது. நான் ராசியில்லாதவங்க” என தன் கனவனின் தோளில் சாய்ந்து அழுதாள்.

“காவேரி ஆழாதம்மா! நீ ஏன் இப்புடி நினைகுற” என தோளில் தட்டிகொடுத்தார். மணிகளை தான்டி அழுதாள். சன்முகமும் அவளை முடிந்த அளவு சமாதானம் செய்தார்.

மறுநாள் விடிய காவேரி வழக்கமான வேலைதுவங்கியிருந்தாள். சன்முகம் அந்த உயிலை படித்து பார்த்துகொண்டிருந்தார். “காவேரி இங்க வாம்மா”

“என்னங்க” சோகமாக

“இந்த இத பத்திரமாவை” என்றார்.

“அத கிழிச்சு போட்டுருங்க” என கண்ணீர்விட்டாள்.

“இத கிழிச்சா நூறு குடும்பம் நடுதெருவுக்கு வந்துடும் பரவாயில்லையா”

காவேரி முகத்தில் சிறு சலனம்.

“என்னம்மா பாக்குற இத படி” என அதில் உடனிருந்த அந்த லட்டரை கொடுத்துவிட்டு நகர்ந்தார். அதை வாங்கிபடித்தாள் காவேரி. அதில்.

காவேரி என் செல்ல பொண்ணுக்கு இந்த அப்பா எழுதிகொள்வது நான் இந்த கம்பெனிய உன்கிட்ட ஒப்படைக்க காரணம் இது உன் சொத்துங்கிறதாலமட்டுமில்ல. இது நிர்வாகம் பன்றதுக்கு அறிவு உன்கிட்ட மட்டும்தான் இருக்கு. அதுமில்லாம அப்பாவால அந்த

எஸ்.எஸ் கம்பெனிய எதிர்த்து எதுவும் பன்னமுடியல. உங்க அப்பன் லிங்கம் அடிக்கடி சொல்லுவான் “டேய் நமக்கு நட்டம் வந்தாலும் பரவாயில்லடா. ஒர்க்கர்ஷ்க்கு எந்த பிரட்சனையும் வர கூடாதுடா. அவங்க கடவுள் மாதிரின்னு” ஆனா நம்ம எதிரி கம்பெனி பன்னுர பிரஸ்ஸர்ல அந்த வார்த்தைய என்னால காப்பாத்த முடியாம போயிடுமோன்னு எனக்குபயமா இருக்குமா! நம்மல நம்பி இருக்குற அந்த நூறு குடும்பத்த காப்பாத்தும்மா அது இந்த ரெண்டு அப்பாவுக்கும் நீ செய்யுர கடமைமா. அப்புறம் அந்த கம்பெனிகிட்ட முன்ன மாதிரி போட்டி இல்லம்மா பொறாமைதான் அதிகமா இருக்கு. இப்ப அந்த கம்பெனி முதலாளி மருமகன் பாக்குறான்னு உனக்கு தெரியும். அந்த செல்வத்துகிட்ட ஜாக்கிருதையா இரும்மா. உன்ன நம்பி இருக்குற வேலைகாரங்கள பத்திரமா பாத்துக்கோ இந்த அப்பாவோட கடைசி ஆசை இதுதான்.

இந்த வரிகளை பார்த்ததும் கண்கள் கலங்கின காவேரிக்கு. வேறு வழியில்லாமல் மனதில் உறுதியான முடிவை எடுத்தாள்.

“ஏங்க அண்ணாவையும் அன்னியையும் பாத்துட்டு வரலாம்ங்க” என காவேரிகூற அதன் அரத்தம் அவர்களை திறப்பு விழாவிற்கு அழைக்கலாம்ங்க எனபதை புரிந்துகொண்டு “கிளம்புமா” என்றார் சன்முகம்.

## அத்தியாயம் - 52

பேருந்தின் சக்கரங்கள் பார்வதியை எதிர்பார்த்து சுழன்றன. காவேரியின் மனதில் தன் தந்தையின் நினைவுகள் அரித்துகொண்டிருந்தன. "ஏங்க அப்பாவ அப்புடியே ஒரு எட்டு பாத்துட்டு வந்துடலாம்ங்க"

"காவேரி நீ புரிஞுசுதான் பேசுறீயாமா" என்ற சன்முகத்தின் ஒற்றை வார்த்தையில் அமைதியானாள் சோகமாக மாறியது முகம். சன்முகத்திற்கு வருத்தம்தான்.

"ஏன்மா எனமேல கோபமா?"

"இல்லைங்க மனசு ஒருமாதிரி இருக்கு அதான்"

"அத உங்க அன்னி பார்வதி சரிபன்னிடுவாங்க வா" என்று கூறும்போது சிறிய புன்னகை தோன்றி மறைந்தது.

"ஏய் பார்வதி நீ மாசமா இருக்குறது தெரிஞ்சா போஸ் எவ்வளவு சந்தோஷபடுவான் தெரியுமா" என்றதும் கவலைகள் மறைந்து தன்னவனை பார்த்து சிரித்தாள். அவளது மனதின் தற்போதைய மருந்த அந்த புது சொந்தங்கள்தான்.

“அன்னி கையால திறக்கட்டும்ங்க அப்பதான் ராசி”

“ம்ம் கன்டிப்பா உன் ஆசைதான் எனக்கும்”

“ஆனா வருவாங்களா?” என்றாள் சந்தேகமாக.

“நீ கூப்பிட்டு வரமாட்டேன்னு எப்புடி சொல்லுவான். தங்கச்சினு ஓடி வந்துடுவான். நீ ஏன் அதபத்தி நினைக்குற”

“இல்லங்க மனசுல ஏதோ உறுத்தலா இருக்கு அதான் கேட்டேன். அண்ணா வரலைனு சொல்லிட்டா என்ன பன்றது” என்றாள் குழந்தை மாதிரி

“உன் பையன் வந்து திறக்கட்டும் இன்னும் எட்டு மாசம் வெயிட் பன்னுவோம்” என சன்முகம் கூற “ச்சீ போங்க எப்பவும் கிண்டல் பன்னிகிட்டு. அதெல்லாம் அண்ணன் வரும்.”

‘அப்பாடா சிரிச்சுட்டா’ என மனதில் மகிழ்ந்த சன்முகம் “உனக்கு என்ன குழந்தைடி வேணும் நான பையன்னு பிக்ஸ் ஆகிட்டேன்.” என்றார். “எனக்கு இளவரசனா இருந்தாலும் சரி ஏன்ஜலா இருந்தாலும் சரிதாங்க.”

“ஆமா நீ எப்புடியும் வளர்க்கபோறது இல்ல”

“என்னங்க சொல்றீங்க” அதிர்ச்சியானாள் காவேரி. அது எந்த அளவுக்கு உண்மையாகும் என்று அப்போது தெரியவில்லை.

“அடி லூசு அங்க அன்னிக்கும் எனக்கும் ஒரு ஒப்பந்தம் இருக்கு சின்ன வயசுல! என் குழந்தை அவங்கதான் வளப்பாங்கலாம்.” என்று சிரித்தார்.

“அப்போ என் மருமகள நான் வளத்துகிறேன்” என்றாள்.

“என்னடி அன்னிக்கு பொண்ணுனே பிக்ஸ் ஆகிட்டியா”

“ஆமா அண்ணி மாதிரி அழகா ஒரு பொண்ணு பிறந்தா எப்புடி இருக்கும்” என வானத்தை பார்த்ததாள்.

“அப்போ நமக்கு பொண்ணு பிறந்து அவங்களுக்கு பையன்னா”

“கல்யானம் பன்னிடலாம்ங்க”

“ஏய் வயசு கூட இருக்கும்டி”

“பரவாயில்லங்க சொந்தம் விட்டுபோக்கூடாது”

“ம்ம் அப்ப ரெண்டுமே பொண்ணுனா” என சன்முகம் கூர காவேரி மனதில் பதிந்திருந்த பதில் “கல்யானம்தான்” என கூற “ஏய் லூசு என்ன பேசுறேன்னு தெரியுதா” என்றார் சிரித்துகொண்டே.

காவேரி நாக்கை கடித்துகொண்டா “ஐயா தெரியாம சொல்லிட்டேன்” என சிரித்தாள்.

“யாருக்கு தெரியும் இனி இதெல்லாம் நடந்தாலும் ஆச்சரியபடுறதுக்கு இல்ல” என சன்முகம்கூற அவருக்கு அடி கிடைத்தது. “விடும்மா வலிக்குது” என சிரிக்க அவர் தோளில் சாய்ந்துகொள்ள சிலமணிநேரத்தில் அந்த ஊர் வந்தது.

காவேரியும் சன்முகமும் பார்வதியின் வீட்டை நெருங்கியநேரம் உள்ளிருந்து கேட்ட குரல்கள்.

“ஏன்டி ஒரு உப்பு ஒழுங்கா போட தெரியுதா உனக்கு இதுவே என அண்ணன் பொன்னு சென்பகம்னா எப்புடி சமைப்பா தெரியுமா? போயும் போயும் உன்ன கட்டிகிட்டு வந்துருக்கான்பாரு. இத நாய்க்கு ஊத்துடி” இது மாரியம்மாளின் குரல்.

“குடுங்க அத்த நான் உப்பு போட்டுட்டு வாரேன்.” என்றார் பார்வதி.

“ஆமா சீமையில இல்லாத பொண்ணு இவ!” என முனங்கிகொண்டே “உப்பு மட்டுமா பிரட்சனை இது சாப்பாடு மாதிரியே இல்லடி சும்மா எப்ப பாத்தாலும் குலைய வச்சுகிட்டு”

“அவருக்கு அப்புடி இருந்தாதான் அத்த பிடக்கும்” என்று சோகமாக கூற

“அப்ப என்ன எங்கயாவது கோயில்லபோய் தூக்கிபோட்டுட்டு வந்துடுங்க ரெண்டுபேரும். அப்புறம் நிம்மதியா இருங்க” என்று குமுற பார்வதி கண்ணில் நீர் வந்தாலும் மௌனமாக இருந்தார். எல்லாம் தன் கனவனுக்காக.

இந்த பேச்சுவார்த்தைகளை கேட்ட காவேரி பயந்துகொண்டே நிற்க “அத்த அப்புடிதான் திட்டிகிட்டே இருப்பாங்க உன்ன பாத்த சந்தோஷமாகிடுவாங்க வா” என சன்முகம் அழைத்து வந்து “போஸ் போஸ்” என குரல் கொடுக்க பார்வதி வெளியில் வந்தாள். சட்டென கண்ணீரை துடைத்துகொண்டாள்.

“வாங்க அண்ணா வாங்க அன்னி அவுக வெளிய போயிருக்காங்க”

“அங்க யாருகூடடி பேசிகிட்டு இருக்க வேலைய பாக்காம” என உள்ளே இருந்து மாமியாரின் குரல்.

“சன்முகம் அன்னா வந்திருதக்காங்க அத்த”

“யாரு போஸோட பிரன்டுதான”

“ஆமா அத்த”

“ஆமா அவனுக்குதான இப்ப கல்யானம் முடிஞ்சிதுள்ள?” என மாரியம்மாள் கூறும்போதே

“நீங்க உள்ள வாங்கன்னா” என பார்வதி அழைக்க

“ஆமா அந்த பொண்ணுகூட அந்த *****ஜாதி பொண்ணுதான” என்றார் மாரியம்மாள். அவ்வளவுதான் மனதில்காத்துகொண்டிருந்த அனைத்து சோகங்களும் காவேரியை சுற்றி வளைக்க முன்னால் எடுத்து வைத்த கால்கள் சிலையாக மாறி பின்னால் வைத்தாள்.

உடனே தன் ஒரே ஆதரவான தன்னவனின் தோளில் சாய்ந்துகொணாடாள்.

“ஏய் அழாதடி இப்போ என்ன நடந்திருச்சு சின்னபுள்ளையாட்டம் அழாத” என சன்முகத்தின் கண்ணும் கலங்கியது. பார்வதி என்ன செய்வது என்று தெரியாமல் விழித்தாள்.

சன்முகத்தின் தோளில் சாய்ந்து அழுதுகொண்டிருந்த காவேரி "போஙலாங்க" என குரல் கொடுக்க சன்முகத்தின் காதில் மட்டும் கேட்டது.

"சரி நீ அழாத" என சமாதான படுத்தியவர். "சரிம்மா தங்கச்சி போஸ்கிட்ட எதுவும் சொல்லவேனாம் வருத்தபடுவான் நான் இன்னொரு நான் வாரேன்" என தன் மனைவியை தோளில் சாய்த்துகொண்டு நடந்தார்.

"ஏய் அழாதடி அவங்க அப்புடிதான் எப்பவும் பேசுவாங்க"

"இல்லைங்க என்ன எல்லாரும் காயபடுத்தாராங்க நான் பிறந்த்துல இருந்து உங்கல பாத்த அப்புறம் தான் சந்தோஷம்னா என்னனு தெரிஞ்சுகிட்டேன்." எனவிம்மி அழுதவள். "எங்க அப்பாகிட்ட காசு இருந்துச்சு ஆனா ஒரு கோயிலுக்கு கட்ட காசு கொடுப்பாரு ஆனா சாமிய நாங்க வெளிய இருந்துதான் கும்பிடுவோம்." என அவள் அழ சன்முகத்திற்கு என்ன ஆறுதல் கூறுவது என்றே தெரியவில்லை.

"என் பிரன்ட்ஸகூட எனக்கு தண்ணி தரமாட்டாங்க! அப்புடி ஒரு நாள் தாகத்துல எடுத்து குடிச்சுட்டேன் அவ அந்த பாட்டில குப்பைல போட்டுட்டா அதுவும் கையால தொடாம! அன்னைல இருந்த தாகம் வந்தாலும் யாருகிட்டயும் கேக்கமாட்டேன்" என விம்மி அழுதாள்.

*“நான் உங்கள கல்யானம் பன்னிகிட்டு ரொம்ப கஷ்டபடுத்துறேன்ல?”*

*“இப்ப நீ அடி வாங்க போற எனகிட்ட”*

*“அப்புடி அடிச்சு கொண்ணுட்டு வேற கல்யானம் பன்னிகோங்க ப்ளீஸ்” என அழுதாள்.*

*“இங்க பாரு நான் உன்ன நினைச்சு வாழுவேனே தவிற இன்னொரு பொண்ணு சான்சே இல்ல. சும்மா நீ என இப்புடி புலம்பிகிட்டு இருக்க. முதல்ல உன் தாழ்வுமனப்பான்மைய விட”*

*“அது இந்த சமுதாயம் எனக்கு குடுத்த பரிசுங்க அத விட முடியல, பாருங்க இப்ப என்ன ஆச்சுனு”*

*“ஐயோ உங்க அண்ணன் அப்புடி சொன்னானா இல்ல அன்னிதான் அப்புடி சொன்னாங்களா? ஏன்டி மனச குழப்பிக்கிற”*

*“இல்லைங்க என்னதான் நீங்க சொன்னாலும் என் பிறப்ப மாத்த முடியாதுல்ல” என அழ சன்முகம் அவளை அனைத்துகொண்டு அந்த பேருந்தில் ஊருக்கு திரும்பினர். பயனம் முடியும் வரை அழுதுகொண்டே வந்தாள். சன்முகமும் சமாதனபடுத்தி பலனில்லை.*

வீட்டிற்கு வந்தவள் அந்த அறையில் சென்று அழுதுகொண்டே உறங்கினாள். சன்முகம் சமையலைமுடித்து அவளை எழுப்பி ஊட்டினார். “இந்தாம்மா சாப்பிடு பாப்பா இருக்குல வயித்துல”

“என பையனையும் அப்படிதான சொல்லுவாங்க” என்று கண்ணீர் வற்றிய கண்ணுடன் கூறினாள்.

“ஏய் இப்ப எதையும் நினைக்காம சாப்புடுறியா இல்லையா” என சன்முகம் முதல்முறையாக கோவபட அவள் அமைதியாக சாப்பிட்டாள். பின் தன் கனவன் மடியில் உறங்கினாள்.

காவேரி எவ்வளவு அழகான பெயர் உனக்கு அதுக்கு ஏத்த அழகுதான்டி நீ! உன்ன நான் பாத்தப்போ நீ அழகா கையில ஒரு குழந்தைய வச்சுகிட்டு இருந்த அத ரோட்டுல விட்டுட்டு போனதால அது பஸ்ல அடிபட தெரிஞ்சது. அத காப்பாத்திட்டு உனக்கு கைல காயம் வேற இருந்துச்சு. ஆனா நீ அந்த பெத்தவங்க்கிட்ட போட்ட பாரு சண்டை. ரொம்ப துணிச்சலா இருந்த சும்மா ஒரு வேலுநாச்சியார் மாதிரி. அப்புடி தைரியமா இருந்தவ ஏன்டி இந்த விஷயத்துல மட்டும் இப்புடி கோழையா இருக்க என மனதில் புலுங்கினார்.

அந்த இரவின் ஓட்டம் இப்படியே முடிய சோகமாக இருவரும் பேசிகொள்ளாமலே நாட்கள் ஓடின. அந்த வாரம் வந்தது. அத்றகு இடையில் அந்த பங்களா வீட்டிற்கு மாறியிருந்தனர். பின் அந்த காரில் ஏறிகொண்டா தன் கன்பெனியை பார்க்க சென்றாள்.தன்

அன்னன் இல்லாத வருத்தம் இருந்தாலும் தன் அன்னியை நினைத்துகொண்டு கையெழுத்திட்டு வேலையை துவங்கினாள்.

தன் தொழில் திறமையால் நான்கு யூனிட்டாக இருநந்த தன் மில்லை ஐந்தாவது யூனிட்டை திறக்கவே அனைத்துவேலையாட்களும் பாராட்டினர்.

“லிங்கம் ஐயா பொண்ணுனா சும்மாவா!”

“முதலாளி அம்மா நல்லா இருக்கனும்” சம்பளமும் உயர்ந்தது கூடவே கம்பெனியும் வளர்ந்தது.

“அதான அந்த செல்வம் கம்பெனியால நம்ம நடுதெருவுக்கு வந்துடுவோம்னு பயந்துட்டோம்மா மகராசி எங்கள காப்பாத்த வந்துட்ட” என சிலர் என காவேரியின் மில் வளர்ந்தது

ஆம் எல்லாம் லிங்கம் மற்றும் சந்திரசேகரின் யுக்திகள்தான். எங்கு சென்றாலும் தன் பெண்ணை அழைத்துசெல்வார்கள். அதனால் தொழில் அனைத்தும் காவேரிக்கு அத்துபடி.

சில மாதங்களில் கம்பெனி என்றுமில்லாத அசுரவேகமடைந்தது. அனைத்து மற்ற பெரிய முதளாலிகளும் இந்த சிறிய கம்பெனியை பார்த்து அஞ்சினர். பல இடையூறுகள் வந்தன. ஆனால் காவேரியின் நேர்மைக்கு முன் அனைத்தும் பொடியானது.

காவேரியால் நடக்கவே இயலாத நிலை அது. மிகுந்த சிரமத்துடன் ஃபைல்களை பார்த்துகொண்டிருந்தாள். ஆம் குட்டி முதலாளி பிறக்க இன்னும் சில மணிதுளிகள்தான் பாக்கி. ஆனாலும் அடுத்த வாரம் டெலிவரி என்று கூறியதாலும் முக்கியமான வேலை எனபதாலும் வந்திருந்தாள். பிரம்மதேவர் அவனது ராஜ வாழ்வுக்கான குறிப்புடன் நின்றிருந்தார்.

இன்னும் நேரம் இருக்குப்பா என கடவுள் கூற அதெல்லாம் முடியாதுப்பா நான் எங்க அம்மாவ பாக்கனும் என வயிற்றில் அடம்பிடித்தான் அந்த குட்டி முதலாளி. காவேரிக்கு வலி அதிகமாக மில்லிருந்த பெண்கள் ஓடிவந்தனர்.

“என்னமா ஆச்சு”

“ரொம்ப வலிக்குதுக்கா அவர கூப்பிடுங்க எனக்கு பயமா இருக்கு” என்று பதறினாள்.

“அம்மா ஐயா வர லேட் ஆகும்மா”

“அம்மா வலிக்குது ஆஆஆ” என கத்த

“ஏய் என்னஙகடி பாத்துகிட்டு இருக்கீங்க ஆஸ்பத்திரிக்கு தூக்குங்க”

“அக்கா எந்திரிக்க முடியல”

“கிறுக்கிகலா ரூம் அடைங்கடி! சும்மா பேசிகிட்டு இருப்பாளுக” என அந்த பாட்டி வர காவேரி மிகவும் சிரம்பட்டாள். அந்த பெண்களால் தன் முதளாலியின் கண்ணீரை பார்க்கமுடியாமல் எல்லாரும் சோகமாக இருக்க

“என்னடி இது எப்பவும் நடக்குறதுதான்” என அந்தபாட்டி அதட்டி வேலை வாங்க அந்த நேரம் சன்முகம் பதறிகொண்டு வந்தார். சில பெண்கள் அவளை வெளியிலிருந்து தடுக்க முகத்தில் கவலையுடன் நின்றிருந்தார்.

‘எனக்குனு அவதான் இருக்கா கடவுளே அவள எனக்கு திரும்ப கொடுத்துரு’ என வேண்டிகொண்டிருந்தார்.

காவேரியோ தன்னவனின் கண்ணீரை அந்த சிறிய கண்ணாடி துளை வழியே பார்க்க அவனது கண்ணீரை துடைக்க மனம் நாடியது. ‘கடவுளே என் உயிர் போனாலும் பரவாயில்ல அவருக்கு ஒரு வாரிசு பிறந்திடனும்’ என இவள் வேண்ட மயக்கமடைந்தாள்.

குழந்தைசத்தம் அந்த அறையை நிரப்ப “குட்டி முதளாலி சார் பிறந்துருக்காரு” என அந்த பாட்டி கூற அனைத்து பெண்களும் கொஞ்ச ஆரம்பித்தனர். காவேரி லேசாக கண்விழித்து தன் மகனை

வாங்கினாள். “அவர கூப்பிடுங்க” எனயை நிரப்ப “குட்டி முதளாலி சார் பிறந்துருக்காரு” என அந்த பாட்டி கூற அனைத்து பெண்களும் கொஞ்ச ஆரம்பித்தனர். காவேரி லேசாக கண்விழித்து தன் மகனை வாங்கினாள். “அவர கூப்பிடுங்க” என்றாள். அவரது வாரிசை தோற்றுவித்த மகிழ்ச்சியில்.

ஒரு பெண் வெளியே போக சன்முகத்தை வெளியே இருந்த அந்த டெலிஃபோன் அழைத்தது. அதை எடுத்து பன்றாள். அவரது வாரிசை தோற்றுவித்த மகிழ்ச்சியில்.

ஒரு பெண் வெளியே போக சன்முகத்தை வெளியே இருந்த அந்த டெலிஃபோன் அழைத்தது. அதை எடுத்து பேசவேசவேயில்லை சன்முகம் ரிசிவர் கீழேயில்லை சன்முகம் ரிசிவர் கீழே விழுந்து நொருங்கியது.

“ஐயா ஆண்குழந்தைங்க! அம்மா உங்கள வர சொன்னாங்க” என்றாள்.

சன்முகம் கண்ணீருடன் வந்து தன் குழந்தையை தூக்கி “சந்திரசேகர்” என வாய் குழற “சந்துரு” என கூறினார். காவேரியின் முகத்தில் அதிர்ச்சி.

“ஆமாம்மா உங்க அப்பா நம்ம வீட்டுக்கு நிரந்தரமா வந்துட்டாரு” என சந்துருக்கு முத்தம் வைத்தான். காவேரிக்கு கண்கள் கலங்கியது.

“அழாதமா உங்க அப்பா முன்னாடி நீ அழகூடாது” என கூற கண்ணீர் வடிய உதட்டில் சிரிப்பை முயன்றாள்.

சந்திரசேகராக மறித்து. இன்று தன் மகள் மடியில் சந்துருவாக அவதறித்த தன் தந்தையை சீரும் சிறப்புமாக வளர்த்தாள். அந்த மில்லில் வேலை செய்யும் அனைவருக்கும் சந்துரு என்றாள் விருப்பம்.

அனைவரும் அவனை தூக்கி கொஞ்ச போஸ் ராணுவத்திற்கு சென்றதால் பார்வதியும் தன் மருமகனை பாக்க வரமுடியாமல் போனது. அதன்பின் அன்பரசி எனும் குட்டி தேவதை அவதறிக்கும் போதுதான் பார்த்தார் பார்வதி அந்த இரு பிள்ளைகளையும். பார்வதியின் வீட்டிற்கு செல்ல காவேரிக்கும் சிறிது பயம் இருந்தது. அதற்கு காரண்ம உங்களுக்கு தெரியுமே

ஆனால் அன்னிக்கு பிரசவவலி என்று தெரிந்ததும் மிகபெரிய மீட்டிங்கை “அடுத்த வாரம் பாத்துகலாம்” என கிளம்பிவந்தவளுக்கு தன் மருமகள் அன்பரசியை தொடும் பாக்கியம் கூட இல்லாம்ல் போனது காவேரியின் துர்அதிஷ்டம் தான். ஆனாலும் தன் மருமகளை தன் மகனுக்கு எடுக்க வேண்டும் என ஆசை அவளுக்கு. அது இன்று நிறைவேறிவிட்டதை நினைத்து சன்முகதின் கண்ணில் இன்று ஆனந்த கண்ணீர்.

இதை கேட்ட சந்துரு மௌனமாக நின்றிருந்தான்.

“அன்னைக்கு அதான் அவ கடைசி நாளைக்கு முன்னாடி நைட் “ என சன்முகத்திற்கு கண்களில் நீர் வந்தது.

“என்னடி உன் பிள்ளைய நீயே கண்ணு வச்சுடுவ போல” என தன் ஏழுவயது மகனின் தூங்கும் அழகை ரசித்துகொண்டிருந்த தன் மனைவியின் அருகில் நின்றாள்.

“இல்லைங்க அழகா தூங்குறான்ல”

“அவனுக்கு விளையாட ஒரு பாப்பா வேனும்னு உனக்கு தோனலையாடி” என சன்முகம் கூற “ஆமாங்க பாவம் தனியா விளையாடுறான்ல” என்றாள் வெட்கபட்டுகொண்டு

“வா ஒரு பாப்பா பர்ஜேஷ் பன்னிட்டு வந்துடலாம் கடைல”

“என்ன கடைலயா அப்ப நான் எதுக்கு இருக்கேன்” என்று முறைத்தாள்.

“நீதான் வேலைனு சுத்திகிட்டு இருக்கியே!”

“கம்பெனியும் பாக்கனும்லங்க”

“அப்ப நான் வேற கல்யானம் பன்னிகிட்டு ஒரு பாப்பா பெத்துக்க வேண்டியதுதான் வேற வலியில்லை.”

“அடி விழும்” என்று தன்னவனின் மார்பில் சாய்ந்துகொண்டாள். அப்போது சந்துரு புரண்டுபடுக்க “பையன் டிஷ்ட்ரப் ஆகுறான் நாம் கீழ போகலாம்” என காவேரியை தூக்கிகொண்டு நடக்க காவேரி சிரித்துகொண்டே வெட்கபட்டாள்.

சிறிது நேரம் காதலை காமம் ஊடுருவ தன் அடுத்த ஏன்ஜலுக்காக காத்திருந்த தன்னவனை கட்டி அனைத்தாள். “ஏங்க பையன் வேனுமா பொண்ணு வேனுமா”

“உனக்குதான்டி சமைக்க தெரியல! அதனால ஒரு பொண்ணு பெத்துகுடு அவளாவது நல்லா சமைக்கட்டும் எனக்கு. அதுவுமில்லாம அன்பரசிக்கு ஒரு நாத்தனார் வேனும்ல. ரொம்ப சுட்டிதனம் பன்றாலாம் தங்கச்சி சொல்லுச்சு”

“அப்போ பாத்துட்டு வரலாமா”

“ம்ம் வா கிளம்பு போகலாம்”

“இப்பவேவா”

“ஆமா இப்புடியே கிளம்பு”

“ச்சீ போங்க” என வெட்கபட “சும்மா சொன்னேன்டி நீ உன் மறுமகள பாக்க இப்புடி கிளம்புனாலும் கிளம்பிடுவ” என்று சீன்டினார்

“சரி நாளைக்கு சந்துருக்கு பள்ளகூடம் முடிஞ்சதும் சந்துருவ பிக்கப் பன்னிட்டு கிளம்பி வந்துடு நான் அன்புக்கு பொம்மைலாம் வாங்கிட்டு வந்துடுறேன்.”

“நாளைக்கு குடிக்காம வாங்க அப்புறம் அண்ணாகிட்ட சொல்லிடுவேன்”

“அய்யோ ஆத்தா அவன் கிட்ட சொல்லிடாது அப்புறம் நான் செத்தேன்! ஆமா அவன் தான் ஊருல இல்லையே அப்புறம் எப்புடி சொல்லுவ”

“அதான் அன்னி இருக்காங்கள்ள”

“அதுக்கு அவன் கிட்டயே சொல்லிடலாம்” என்று சிரிக்க தன் மனைவியை கட்டி அனைத்துகொண்டார்.

"ஏங்க அந்த செல்வம் என்ன பேச்சு பேசுனான் தெரியுமா"

"ம்ம் யாரு அந்த SS கம்பெனி முதளாலியா" என அவளை மேலும் இறுக்கினார் தன் அன்பை காட்ட.

"ஆமாங்க அவன் தான் இன்னைக்கு மீட்டிங்கல! எல்ல ஸ்டாக் புரோக்கர்ஸ்ஸும் அப்புறம் காட்டன் முதலாளிங்களும நமக்கு அவங்க சேர் போட்டு புடு மில் கட்டிதாரேன் உங்க குவாலிட்டி பிடச்சிருக்கு. இன்னமும் இந்த செல்வத்துகிட்ட ஏமாற தயார இல்லனு சொல்லிடாங்க"

"ம்ம் அவன் குவாலிட்டிதான் ஊருக்கே தெரியுமே. நல்ல முடிவுதான் எடுத்துருக்காங்க அப்ப காவேரி மில் இன்னும் பெரிசா ஆகபோகுதா"

"காவேரி மில்ஸ் இல்லசந்துரு மில் ஓகேவா!" என சன்முகத்திற்கு முத்தம் வைத்தாள்.

"ம்ம் சரிங்க மேடம்"

"ம்ம அவன் அந்த மீட்டிங் முடிஞ்சு வெளிய வந்து ஏய் காவேரி வீட்டுல பாத்திரம் தேக்கவேண்டியவடி நீ! நீ எனக்கு போட்டியா வாரியா! உன் உயிர் உனக்கு இல்லடி அப்புடின்னு மிரட்டுனான் எனக்கு பயமா இருக்குங்க"

“அடி லூசு குலைக்குற நாய் கடிக்காதுடி! வா நாம் டுவின்ஸ் பிறக்க வைக்கலாம்” என மீண்டும் விளையாட்டை துவங்கினார்.

மறுநாள் சந்துரு கேட்ட அந்த பாரின் சாக்லெட் கொரியரில் வர அதில் ஒரு பகுதியை எடுத்து அன்பரசிக்கு வைத்திருந்தாள். சன்முகம் அன்புக்கு பொம்மைகளை வாங்க சிறிது மதுவும் குடித்தார் எனபதே உண்மை

காவேரிக்கு தன்னை பின்பற்றியை வந்த வண்டியை பார்த்து பயம்.தன்னவனுக்கு அழைக்க சன்முகமோ பயந்துகொண்டு “இவ நான் சரக்கடிச்சத ஃபோன்லயே கன்டு பிடிச்சுடுவா” என பயந்துகொண்டு எடுக்கவில்லை.

பின் வண்டியை ஓரமாக நிறுத்திவிட்டு சந்துருக்காக காத்துகொண்டிருந்தாள் பதட்டதுடன். அவன் வந்தான். கையில் அந்த சாக்லெட்டை எடுத்து நடந்தாள். “அம்மா அம்மா” என சந்துரு ஓடி வர அந்த வெள்ளைகார் அவனைநோக்கி விரைந்து வந்தது.

அப்போதுதான் கண்கள் விரிய பார்த்தாள். அந்த காரை இயக்குவது அந்த செல்வம். அசுரவேகம் அவனது ரத்தவெறி இன்று சந்துருவை குறிவைத்து.

என்ன செய்வது என்று தெரியாமல் விழித்த காவேரி வேகமாக ஓடிசென்று “சந்துரு” என அவனை ரோட்டின் அந்த பக்கம் தள்ளிவிட செல்வம் காவேரியின் மீது கார் ஏற்ற அவள் முன் சக்கரங்கள் ஏற தன் மகனை கண்ணீருடன் பார்த்தாள். “சந்துரு அப்பாவ பாத்துகோட” என கூறினாலும் வார்த்தைகள் வரவில்லை.

கண்ணாடி வழியே பார்த்த செல்வம் அவள் துடித்துகொண்டிருப்பதை கண்டு ஆத்திரம் மேலோங்கியது. “இன்னும் சாகலையாடி நீ” என திட்டிவிட்டு மீண்டும் வண்டியை இயக்க அந்த காரின் பின் சக்கரங்கள் ஏற ரத்தவெள்ளத்தில் இறந்தாள் தன் மகன் கண்முன்னே!

இதை கூற சன்முகம் அழுது அப்படியே சரிய கண்ணீருடன். “அப்பா” என அவரை தாங்கிபிடித்தான் சந்துரு. “மாமா” என அன்பரசியும் ஓடிவந்திருந்தாள்.

## அத்தியாயம் - 53

சன்முகம் மயங்கிவிழ சந்துரு “அப்பா” என தாங்கிபிடித்தான். அதற்குள் தன்னவனை காணாமல் வந்த அன்பு “மாமா” என ஓடிவந்தவள் தன் மாமனாரை பிடித்துகொண்டு “அப்பா வாங்க” என கத்தினாள்.

“என்னங்க பொண்ணுகத்துற சத்தம் கேக்குதுங்க” என்றார் பார்வதி. போஸோ கலைப்பாய் இருந்து எழுந்தவர். “என்னம்மா” என்றார்

“இல்ல அன்பு கத்துற என்னனு தெரியலைங்க”

“அடி போடி” என மீண்டும் தூங்க செல்ல அதற்குள் சத்தம் வெளியிலிருந்து வந்தது. பதறிபோய் ஓட அங்கு மூவரையும் பார்த்தார். பின் சந்துரு வண்டியை எடுக்க அந்த மருத்துவமனைக்கு விரைந்தனர்.

டாக்டர் பார்த்துவிட்டு “இவரு ரொம்ப எமோஷனல் ஆகிருக்காரு அதான் ரொம்ப நாளா அடக்கிவச்சுருந்த ஸ்ட்ரஸ் மொத்தமா வெளிய வந்துருக்கு மத்தபடி பயப்படுறதுக்கு ஒன்னுமில்லை மார்னிங்க கூட்டிட்டி போங்க” என்று கிளம்பினார்.

தன் தந்தையின் அருகில் சந்துரு அமர அவனது தோளை ஒரு கைதட்டியது. திரும்பி பார்க்க சுவேதாதான் அது. “ஏய் என்னப்பா அப்பாக்கு ஒன்னுமில்லையே”

“இல்ல சும்மா கொஞ்சம் ஸ்ட்ரஸ்ப்பா அவ்வளவுதான்”

பின் சன்முகத்தின் அருகில் சென்ற சுவேதா "என்னப்பா அதான் அண்ணாவுக்கு கல்யானம் முடிஞ்சிருச்சுல அப்புறம் என்ன கவலை உங்களுக்கு! ஓ என் கல்யானத்துக்கு யோசிக்குறீங்களா" என ஸ்ட்ரஸ் ரிலிப் செய்ய முயன்றாள்.

சன்முகமோ தன் வலி தன்னுடன் இருக்க "ஆமாமா உன்கல்யானத்த பத்திதான் யோசிச்சேன் எனக்கு ஒரு சத்தியம் பன்னுமா"

சுவேதா குழம்பிவிட்டாள். "என்ன அப்பா"

"இல்லம்மா நீ வாழுற வயசுல ஏன் சாகனும்னு நினைக்குற"

"என்னப்பா சொல்றீங்க"

"ஏம்மா உனக்கு இருக்குற அந்த வலிப்பு எதுவரைக்கும் இருக்குனு எனக்கு தெரியும்மா; பாவம் சுகு எனகிட்ட எப்புடி அழுதான் தெரியுமா"

"இல்ல அப்பா அப்புடில்லாம் இல்ல"

"அவன் தான் உன்ன கூட்டிபோய் ட்ரீட்மன்ட் பன்னுறான்னு சொல்றான்ல."

“எனக்கு ஒன்னும் இல்லப்பா” என சமாளித்து பார்த்தாள். கண்கள் காட்டிகொடுத்தது.

“ஏம்மா உன் ரிப்போர்ட் கன்சல்ட் பன்னிட்டுதான் வாரோம். இன்னும் இரண்டு வருசம்தான் அதுல உனக்கு கெடு இருக்கு: எடுக்கு முரண்டு பிடிக்குற”

“மன்னிச்சிடுங்க அப்பா! நான் வாழ்ந்து என்ன ஆகபோகுது” என கண்ணீர் வந்தாலும் உதடுகள் சிரித்தன.

“இது சாகுற வயசு இல்லடா உனக்கு; நீ சுகு அன்பு சந்துரு எல்லாம் நல்லா வாழனும் ஒன்னா! இந்த அப்பா செத்தாகூட உங்கள பாத்துகிட்டு சந்தோஷமா இருப்பேன் காவேரிகூட சேந்து.” என கூற “அப்பா ஏன்ப்பா சாகனும்னு சொல்றீங்க” என்று அழுதிவிட்டாள்.

“பின்ன என்னம்மா உன்ன மட்டும் எப்புடி நான் சாக விடுவேன்” எனகூறி விட்டு சுவேதாவின் கையை எடுத்து தன் தலையில் வைத்ததார். “சத்தியம் பன்னுமா நீ ஆபரேஷன் பன்னுறேன்னு” சுவேதாவும் “பன்னிகுறேன்ப்பா” எனகூற சுகு மௌனமாக நின்றான். அவன் உள்ளம் மகிழ்ந்தது அனுக்கு மட்டும்தான் தெரியும்.

பின்ன தன் காதலியை காப்பாற்ற வலி இருந்தும் தவற விடம் பயம் அவனுக்கு “நான் எங்க அம்மாவ பாக்க சீக்கிரம் போறேன்டா” என்று சிரிப்பாள்.

“ஏய் அப்ப உன்ன நினைச்சுகிட்டு இருக்குற எனக்கு என்னடி முடிவு நானும் உன் கூட வந்துடவா”

“லூசாடா நீ! நீ நிம்மதியா ஒரு பொண்ண கட்டிகிட்டு வாழனும்டா” என முத்தம் தருவாள்.

“சுவேதா முரண்டு பன்னாத சொன்னா கேளுடி!”

“ஏன்டா நான் இப்பதான் கொஞ்சம் சந்தோஷமா இருக்கேன் இதே சந்தோஷத்தோடயே செத்துடுறேனே என்ன விட்டுருடா. என்னால இனி கஷ்டம் வந்த தாங்க முடியாதுடா” என குழந்தையாக மாறுவாள்.

“ஏன்டி உன்ன கஷ்டபடுத்திகிட்டு என்னையும் கஷ்டபடுத்துற”

“அதான்டா சொல்லுறேன் அந்த லதாவ கல்யானம் பன்னிகோ அவதான் ரொம்ப பிரியமா இருக்கா உன்மேல! அப்புறம் உனக்கு பிறக்குற குழந்தைக்கு என்பேரு வச்சிடாத என்னமாதிரி வீனா போயிடுவா”

“நீ சரியா வரமாட்ட இரு சந்துருகிட்ட சொல்லுறேன்” என ஃபோனை எடுக்க “ஐய்யோ அண்ணாகிட்டயா வேணாம்டா” என

ஃபோனை பிடுங்கிவிடுவாள். ஆனால் இன்று தன் தந்தையிடம் மாட்டிகொண்டு சம்மதம் தெரிவித்ததில் சுகுவுக்க மகிழ்ச்சி. கேட்டால் செயற்கையா வாழ்கைய அதிகபடுத்துனா சுவாரஸ்யம் இருக்காதுன்னு ஐன்ஸ்டின் டயலாக் பேசுவா! அப்புறம் என்ன அவமட்டும் இயற்கையாவா சாகபோறா அந்த போதை பொருள் அது இதுன்னு உடம்ப கெடுத்துகிட்டு இப்ப சாகபோறேன்னு சொன்னா விடமுடியுமா.

“ஏய் சுவாதா அப்பா என்ன சொல்றாங்க” முறைத்தான் சந்துரு.

“டேய் அண்ணா அன்னிய விட்டடட்டு நீ இங்க என்னடா பன்னுற போ போய் அவங்கள பாரு” என விரட்டினாள்.

“நான் போறது இருக்கட்டும் உனக்கு என்ன பிராப்ளம்! டேய் சுகு நீயாவது சொல்லுடா” அவனும் மௌனமாகவே நின்றான்.

“டேய் அது பெரியவங்க மேட்டர் உனக்கு என்ன வந்துச்சு அன்னிய விட்டுட்டு இப்புடி வந்திருக்கியே அவங்க ஏமாந்துறபோறாங்க”

“அதெல்லாம் ஒன்னும் ஏமாற மாட்டா!”

“என்னடா சொல்லற”

“ஆமா அவ ஆட்டம் எல்லாம் பகல்லதான்! நைட் அவ தூங்கனா நவீன கும்பகர்னன்தான் எழுப்பவே முடியாதுப்பா” என சந்துருகூற “உனக்கு எப்புடிடா அவங்க ஃபீலிங்க தெரியும்” என சுவேதா கூறும் தருனம். போஸ் அங்கு வர அனைவரும் மௌனாமாமார்கள்.

“மாப்ள நீங்க வீட்டுக்கு போங்க”

“இல்ல மாமா இருக்கட்டும்”

“ஐயோ கல்யானம் ஆன புதுசுல இப்புடி இருந்தா உங்க அத்த பார்வதி பேய் அடிச்சிடும் பூதம் பிடிச்சிடும் அப்புடின்னு சொல்லுவா”

“ஆமா அன்கில் அன்ப தனிய விட்டுட்டு வந்துருக்கான்” என சுவேதா தன் பங்கை ஆற்றனாள்.

“ஆமாமா நீயும் கூட கிளம்பு”

“இல்ல நான் அப்பாகூட இருக்கேன்”

“இது கொஞ்சம் சரியில்லாத ஏரியாமா அதான் நீ சந்துருகூட கிளம்பு அதான் நானும் சுகுமாரும் இருக்கோம்ல”என கூற அரைமனதுடன் கிளம்பினர்.

கார் அந்த குளிரில் அமைதியாக செல்ல “சுவேதா நான் உன் அண்ணன்தான அப்புடிதான நினைக்குற”

“டேய் ஏன்டா அப்புடி கேக்குற”

“இல்ல சும்மாகேட்டேன் உன்ன என் சொந்ததங்கச்சியாதான் நான் பாக்குறேன் அத புரிஞ்சுகோ” எனகூற அதன் உள் அர்த்தம் புரிந்தவள் மௌனமாக இருக்க கார் வீட்டைநோக்கிவிரைந்தது.

“மாமாக்கு எதுவும் ஆகாதுலமா” என்று பார்வதியை வருத்திகொண்டிருந்தாள். “ஏய் போய் தூங்க்குடி இப்பதான் உங்க அப்பா பேசுனாரு சும்மாதானாம் எந்த பிரட்சனையும் இல்லைனு சொல்லிட்டாரு”

“அது இல்லமா இன்னொரு தடவ கேக்குறியா”

“எதுக்கு உங்க அப்பா என்ன அடிக்கவா இப்ப நீ தூங்கறியா இல்லையா”

“சரிம்மா” என தன் தாயின் மடியில் படுக்க.

“ஏய் உள்ள போய் படுடி மாப்ள வந்துகிட்டு இருக்காங்க” என்று திட்ட அன்பு “போம்மா” என எழுந்து சென்று நுழைந்தாள்.

அப்போது பேப்பர் சுற்றபட்ட அந்த டைரி அன்பின் காலில் தவறி விழுந்தது. “ஆஆஆ அம்மா” என கத்தினாள்.

“சேட்டை பன்னாம தூங்கறியா இல்ல சூடு வைக்கவா” என பார்வதி வாசலில் சென்று அமர்ந்தார். அதை எடுத்து பிரித்தாள் அன்பு. உள்ளே முதல் பக்கத்தில் ஜெனியின் அந்த வெள்ளை உடை இருக்க அதில் அவள் தேவதையாக தெரிந்தாள். எப்படியும் வானத்து தேவதைகளின் காதலை சேர்த்துவைக்கும் பனியை பெற்றிருப்பாள் என நினைத்தாள் அன்பரசி.

பின் அடுத்த பக்கத்தை பிரட்ட அதில் அந்த குருப் போட்டோ. ‘யார்டா அது என தலைமேல கைய வச்சு கொம்பு வைக்குறது’ என பார்க்க அது ஜெனியின் கைதான். “குசும்புகாரி” என செல்லமாக திட்டியவளை அந்த டைரி மெதுவாக பிரட்ட வைத்தது. அதை பிரட்டியதால் தன் நிம்மதி கெட போவதை அன்பு உணரவில்லை.

“அக்கா ஆஆஆ இல்லைங்க நான் இல்ல என்ன மன்னிசிடுங்க தெரியாம” என்று புலம்பினான் சேகர். உடனே விளக்குகள் எரிய “என்னடா ஆச்சு அதேகனவா” என்றாள் ஜான்சி தன் தம்பியின் தலையில் கைவைத்துகொண்டே.

ஆம் அவளது உலகம் சேகரை சுற்றித்தான். தந்தை செல்வம் இறந்தபின் தனக்கு இருக்கும் ஒரே உறவு தம்பிதான். தம்பிக்காக தொழிலை நல்லமுறையில் கவனித்தவள். தன் தந்தை சாவிற்கு காரணமான அனைவரையும ஃபலிவாங்குவதும். தன் தம்பிக்கு ஒரு நல்லா வாழ்கை ஏற்படுத்துவதும்தான் லட்சியம்.

ஆனால் சிறுவயதில் எப்போதாவது வரும் கனவு இப்போதெல்லாம் அடிக்கடி ஏற்படுகிறது. தன் தம்பி தூங்காமல் சிரம்படுவதை பார்த்து வேதனைபட்டாள். அதிலும் அந்த ஜெனியை கொல்லும் போது இவன் உடன் இருந்தான்.

“அக்கா வேனாம்க்கா அந்த பொண்ணு அழகா இருக்கு” என கூறும்போதே ரத்தம் அவனதி கன்னாடியில் தெரித்தது.அதில் சற்று பயந்துவிட்டான். அப்போதிருந்து இந்த கனவு அடிக்கடி வர ஆரம்பித்துவிட்டது. ஆம் அவன் கனவு வந்துவிட்டு “அக்கா தலை வலிக்குதுக்கா” எனபான்

பின் “நான் ஏன் அப்புடி பன்னேன்”

“இல்லம்மா எனமேலதான் தப்பு” எனபான். ஜான்சி தோளைதட்டிய பிறகுதான் கூறுவான் “அக்கா இந்த கனவுல இருந்து தப்பிக்க முடியாதா செத்துடலாம் போல இருக்கு” என்று ஒருமுறை அழுதிருக்கிறான். “அக்கா அந்த ஜெனி ஆவிதான் இப்புடி பன்னுதோ” எனபான். “டேய் அதுக்குமுன்னாடில இருந்து உனக்கு இந்த கனவு வந்திருக்குடா”

“ஆமாக்கா ஆனா அடிக்கடி வரலையே” என்ற வாசகம் ஜான்சியை யோசிக்க வைத்தது.

ஆரம்பத்தில் அதிகமாக கனினி என்று சுற்றுவதால் இப்படி ஆகிறது என்று நினைத்தாள் ஜான்சி ஆனால் அவன் கூறுவது நாளுக்குநாளா அதிகமாக பயந்தாள் ஜான்சி. “ஒன்னுமில்லைடா” என தட்டி தூங்க வைப்பாள்.

அவனது கனவில் குறிப்பாக அவன் கூறியது. அந்த பாழடைந்த பங்களா அப்புறம் அந்த ஆடைகிழிந்த ஒரு பெண் ஓட இவன் துரத்திகொண்டு போவான். சில நடுக்கங்கள் ஏற்பட அவன் நிற்க அந்த பெண் ஒருமூலையில் அமர்ந்துகொண்டு அழ “மன்னிச்சுடுங்க தெரியாம பன்னீட்டேன” என்று கெஞ்ச “என கற்புக்கு என்னடா பதில்” என அந்த பெண் கழுத்தை அறுத்துகொள்ள. “நீ செத்ததுக்கு அப்புறம் எனக்கு என்னடி இருக்கு” என இவனும் அறுத்துகொள்ள திடுக்கிட்டு விழித்துகொள்வான்.

இன்றும் அப்படியே நடக்க “நம்ம அப்பாவ கொண்ண எல்லாத்தையும் பலிவாங்கிட்டு அவங்க ரத்ததுல உனக்கு கல்யானம் பன்றேன்டா அக்கா உனக்கு! உனக்குனு ஒருத்தி வந்துட்டா இந்த கனவு வராதுடா” என சபதம் எடுத்து அவனை உறங்க வைத்தாள்.

தன் கை அவனை அரவனைக்க தன் நினைவுகள் அந்த நாளை நோக்கி நகர்ந்தன.

“ஹேய் ஜானு யூ ஹேவ் லட்டர்”

“ஃபிரம் வேர்? ஃபஃபிட்டி”

“ம்ம் ஃபிரம் யுவர்டாட் பிங்கி”

“ஓ கிவ் தட் டு மி”

“ஐ கேன் ஓபன் யா”

“பட் யு கான்ட் அன்டர்ஸ்டேன்ட் அவர் லாங்குவேஜ் ஸ்வீட்டி”

“ஹே ஐ எம் ஜூலி ஃபிரன்ட் ஆஃப் ஜானு ஐ ணோ டமில்யா”

“ஹாஹா யா ஸ்பீக் சம்திங் ஃபார் மி”

“வெயிட்! ம்ம் சாப்பாட்டுயா!; எபடி இருகான;! ம்ம் நானீ நலமா! ம்ம் வணகம்”

“கிழிஞ்சது வணக்கம் வணகமாயிருச்சு”

“தட்ஸ் ஓவர்யா இட்ஸ் டமில்”

“யா யா எனாப் ஜுலி கிவ் இட் ஐ டிரான்ஸ்லேட் ஃபார் யூ” என அந்த லட்டரை வாங்கி பிரித்தாள்.

ஜான்சிம்மா எப்புடி இருக்க. தம்பிய பாத்துட்டு வந்தியா(ம்ம் வாரத்துக்கு ஒருமுறை பாத்துட்டு வந்துட்டுதான்பா இருக்கேன். இப்பல்லாம் அவன் புரோக்ராமிங்க ஸ்கில் அதிகமாகிட்டே போகுது என தனக்குள் பதில் கூறினாள்). நல்லா இருக்கியானு நீ திரும்ப கேக்காதமா நான் நல்லா இல்ல.(என்னப்பா ஆச்சு).பல வருசத்துக்கு முன்னாடி நான் அந்த காவேரி மேல தெரியாம கார் ஏத்திட்டேன் அதனால அந்த காவேரி மில்ஸ் முதளாலி திட்டம் போட்டு இப்ப அப்பாவ இந்த மாதிரி ஆக்கிட்டாங்கம்மா. ஜான்சி புரியாமல் விழித்தாள்.

ஆமாமா அப்பாவுக்கு ஆக்ஸிடன்ட் ரெண்டு காலும் போயிருச்சும்மா அந்த கம்பெனி லாரிதான் அப்பா மில்லுக்கு போனப்போ வந்து மோதிட்டாங்க. நீதான்மா அவங்கள தட்டிகேக்கனும். நல்லா படிச்சுட்டு ரெண்டுபேரும் வாங்க. அதுக்கு முன்னாடி நான் செத்தாகூட வரகூடாது. இதுதான்மா ஒரு மகளா நி எனக்கு பன்னவேண்டிய கடமை.

என லட்டர் முடிய கண்ணீருடன் நின்றாள்.

“ஹேய் ஸ்வீட்டி வாட் ஹேப்பன்” இது ஜூலி.

“நத்திங் யா”

“தென் ஒய் யூ ஹேவ் டியர்”

“மை ஃபாதர் காட் ஆக்ஸிடன்ட் அன்டு லாஸ்ட் ஹிஸ் லெக்ஸ்” என தன் தோழி அழுததும் ஜூலிக்கு தன் தந்தை யார் என்றே தெரியாது.ஆனாலும் தந்தை பாசம் என்றால் இதுதானா என உணர்ந்து. தன் தந்தையாக நினைத்து வருந்தினாள்.

“அதுக்குதான்டா தம்பி அப்பா இறந்தப்போ நீ அவ்வளவு அழுதும் நான் உன்ன விடல. இதுக்கெல்லாம் அப்பா எனக்கு குடுத்த அந்த கடமைதான்டா காரணம். அந்த காவேரி குடும்பத்த நான் முழுசா அழிக்கனும். அவனையும் அவன் சார்ந்தங்களையும் அவங்க பிரண்டுனு யாரையும் விடமாட்டேன்” என்று சபதம் எடுத்துகொண்டு எழும்போது சேகர் தன் அக்காவின் கையை இறுக்கமாக பற்றிகொண்டான்.பின் அவளை பார்த்தவள் அவனருகிலேயே அமர்ந்தாள்.

“என்ன அன்பு என்ன இன்னும் தூங்கலையா” இது சந்துரு.

“இல்லா மாமாக்கு எப்புடி இருக்கு”

“அப்பாவுக்கு எதுவும் இல்ல நீ தூங்கு” எனகூறும்போது அந்த டைரி அவள் கையிலிருப்பதை பார்த்தான்.

“ஆமா மேடம் இப்புடி நடுராத்திர உட்காந்துதான் டைரி எழுதுவீங்கலா. அது எப்புடின்னு எனக்கும் சொல்லி குடுங்க”

“ம்ம் இது நான் உங்கள நினைச்சு எழுதற டைரி இப்ப காட்டமாட்டேன்”

“என்னடா இது எனக்குனு சொல்லுற ஆனா நான் பாக்க கூடாதா”

“நீங்க என் புருசனா இருந்தா பாக்கலாம் ஆனா நீங்க என்னோட லவ்வராதான் அதானால நோ”

“ம்ம் அப்ப நான் சாகுற வரைக்கும் பாக்க முடியாது”

“என்ன?!!!!”

“இல்லம்மா அரிசி நீ எனக்கு எப்பவுமே காதலிதான் நமக்கு நூறு குழந்தை பிறந்தாலும் நீ எனக்கு செல்லமான காதலிதான். அதனாலதான் அப்புடி சொன்னேன்”

“ம்ம் சரி நீங்க தூங்குங்க” என அங்கிருந்த மேஜைக்கு சென்றாள்.

“என்ன அரிசி அவ்வளவு ரகசியமா”

“இல்லைங்க”

“அப்புறம் என்ன? இங்கயே உட்காந்து எழுதுங்க” என்று கட்டிலில் அமர்ந்தான்.

“எதுக்கு நீங்க ஒட்டுகேக்குறமாதிரி ஒட்டுபாக்கபோறிங்களா”

“ஆமா என் லவ்வர் கையெழுத்து எப்புடி இருக்குனாபாக்கத்தான்”

“டீச்சர் கையெழுத்து நல்லாவாங்க இருக்கும்”

“அதுக்கு இல்ல அரிசி நான் வீட்டுல டெடி பியர கட்டிபிடிச்சுட்டுதான் தூங்குவேன். அதான் “ என இழுத்தான். அரிசிக்கு வெட்கம் வரவே “அதுக்கு” என அவளும் இழுக்க.

“உன் தலையனைய நான் எடுத்துகட்டுமா இல்லைனா அப்புறம் உன்னதான் கட்டிபிடிக்க வேண்டியிருக்கும்”

‘அதுக்குதான்டா நான் இருக்கேன்’ என நினாத்தவள்.

“இந்தாங்க” என அதை எடுத்து அவனிடம் கொடுத்துவிட்டு அந்த கட்டிலில் அமர்ந்து டைரியை புரட்ட அவன் கலைபில் தூங்கினான்.

அன்பரசி டைரி படிக்க அரிசி தன்னவனை அடிக்கடி பார்த்துகொண்டாள்.

## அத்தியாயம்-54

தன்னவன் உறங்க தன் தோழியின் நினைவுகளை தாங்கியிருந்த நினைவுகளை புரட்டினாள். அதில் மொத்த டைரிக்கான விதியையும் தகர்த்திருந்தாள் ஜெனினியின் புதுமை அப்படி. அன்புக்கும் அந்த எண்ணம்தான்.

இங்க பாருங்கப்பா எனக்கு டைரிலாம் எழுதுற பழக்கம்லாம் கிடையாதுப்பா அதுமில்லாம இந்த டைரி நான் பத்தாவது படிக்கும்போது எக்ஸிபிஸன்ல வாங்குனது இப்பதான் தூசி தட்டி எடுத்தேன். சும்மா எழுதலாம்னு ட்ரை பன்றேன். இந்த டேட் பத்தி கேக்காதீங்க எனக்கு டேட் நியாபகம் வச்சுகிறுது பிடக்காதுப்பா. அதனால எப்புடி இருந்தாலும் மன்னிச்சிடுங்க. அப்புறம் இத யாராவது கன்டிப்பா திருட்டுதனமா படிப்பீங்கனு எனக்கு தெரியும் அதனால இப்பயே சொல்லிடுறேன் உங்க இன்சூரன்ஸ் பாலிசிய ஒருவாட்டி செக் பன்னிக்கோங்க. நம்ம எழுத்தும் வார்த்தையும் அப்புடி. கொஞ்சம் நான் கோவகாரிப்பா அதனால இடைல சில வார்த்தை வந்தா மன்னிசிடுங்க

என அடுத்தவர் டைரியை எடுத்து படிக்கும் அரிசி போன்ற திருட்டு எலிகளுக்காக தன் வணக்கத்தை தன் பானியில் வைத்திருந்தாள் ஜெனி.

ம்ம் நான் இன்னைக்கு காலேஜ் போரேன்பா எனக்கு பிடக்கவே இல்ல எங்க அப்பாவ நான் போட்டோ எடுக்குற மாதிரி காலேஜ்ல சேத்துவிட சொன்னா நீ டீச்சர்தான் அப்புடின்னுட்டாரு. அப்ப நீ கேக்க வேண்டியதுதானனு கேக்குறீங்களா நீங்களே கேக்கும்போது நான் கேக்க மாட்டேனா எங்க அப்பாகிட்ட நீங்க ஒன்னும் சொல்லவேனாம். அதுக்கு அவரு உங்க அக்காமாதிரி யாரயாவது இழுத்துட்டு ஒடுறதுக்கா அப்புடின்னுடாரு. அவ்வளவுதான்பா நான் சைலன்ட். அப்புறம் ஒரு விஷயம் கர்தரே நான் இன்னைக்கு செம்ம கோவத்துல இருக்கேன் சோ எனகிட்ட யாரும் வந்து பிரன்டு பிடிக்குறேன்னு பேசி திட்டுவாங்காம பாத்துகோங்க. இல்லைனா நான் உங்க்கிட்ட பாவமன்னிப்பு கேப்பேன்னு நினைக்குறேன்.

என அன்பரசி படிக்கும்போது “நீ அப்ப இருந்தே அப்புடிதானா ஜெனி” என கூற “யாருங்க மேடம்” என்றான் சந்துரு.

“நீங்க இன்னும் தூங்கலையா”

“இல்ல ஒட்டுபாக்குறேன்” என சந்துரு கூற முறைத்தாள்.

“ஏம்மா நீ மட்டும் நான் தூங்குறத பாக்கலாம் நான் நீ பேசறத நான் கேக்ககூடாதா” என கண்களை திறக்காமல் கூறினான். “இப்புடி நீங்க பாத்தா நான் எப்புடி படிக்குறது” என சினுங்க “சரிம்மா அடுத்தவங்க ரகசியம் எனக்கு எதுக்குப்பா” என மீண்டும் தூங்க ஆரம்பித்தான். இல்லை நடிக்க ஆரம்பித்தான்.

ஹேய் நல்ல வேலைப்பா நானகூட காலேஜ்ல போர் அடிக்கும்னு நினைசேன்பா அங்க எனக்கு ஒரு பிரன்டு கிடைச்சுட்டா. அவள பாக்குறீங்களா என கீழே ஒரு போட்டோவை இனைத்திருந்தாள்.

அது அன்பரசி பாவமாக முதல்நாள் அம்ர்ந்திருந்தபோது அவளுக்கே தெரியாமல் எடுக்கபட்ட புகைபடம். அதை பார்த்த அன்புக்கு உதட்டில் புன்னகை தவழ்ந்தது.

என்னப்பா போட்டோவ பாத்துட்டு இந்த வாயாடிக்கு இப்புடி ஒரு அமைதியான பிரன்டானு நினைச்சுடாதீங்க. என டைரியை வாசிக்க அந்த நாள் நினைவுகள் வந்தன.

'எங்க அப்பாகிட்ட என்ன கேட்டேன் ஒரு ஸ்கூட்டர்தான! பாவம் பொண்ணு காலேஜ்க்கு முதல்நாள் போறாளே அப்புடின்னு வாங்கிதர்ராரா! ம்ம் என்ன அந்த கிளவிக்கு நான் ஸ்கூட்டர் ஓட்டி கால் உடஞ்சதால நான் என்னப்பா செய்வேன். சரி பிரேக்கு பதிலா ஆக்ஸிலரேட்டர் முறுக்கிட்டேன். சின்ன தப்புதான! இதுக்கு என்ன சைக்கிள்ல போக வச்சுட்டாரே" என சோகமாக அமர்ந்தருந்த தருனம்.

"ஹேய் நீ எந்த ஊர்டி" என முதல் பெஞ்சுக்காக சிலர் அவளிடம் வந்துநிற்க

"ம்ம் ஆஃபிஸ்ல போய் கேளுங்க சொல்லவாங்க" என்று முடிக்க ஜெனி 'சம்திங்க இன்டரெஸ்டிங்க' என ஆர்வமானாள.

"ஏன் உன் திருவாய திறந்து சொல்லமாட்டியா"

"ம்ம் சொன்னா என் வாயில இருக்குற முத்து உதிந்துபோயிரும்டி! நானே கடுப்புல இருக்கேன் பேசாம போயிருங்கடி" என்றாள். ஜெனிக்கு மிகவும் பிடித்து விட்டது அந்த துனிச்சல் பெண்ணை.

“என்னடி காலேஜ் முதல்நாள்ள உனக்கு கடுப்பு” என ஒரு பெணகூற “என்னடி ஓவரா பேசுறீங்க இப்ப என்ன வேணும் உங்களுக்கு”

“ம்ம் இந்த முதல் பெஞ்சு எங்களுக்கு வேனும்”

“ஓஒ அப்புடியா” என கூறியவள் எழுந்து “ஹேய் இங்க வாடி” என ஜெனியை அழைக்க ஜெனியின் கால்கள் ஏன் அவளை நோக்கி நகர்ந்தது என்று தெரியவில்லை. கேமிராவை கழுத்தில் மாட்டிகொண்டு அவளருகில் சென்றாள்.

“இத பிடிடி” என்றாள் அரிசி

“ம்ம்” என அந்த பெஞசை இருவரும் பிடிக்க அது முதலில் இருந்து கடைசி இருக்கைக்கு தள்ளபட்டது. இரண்டாவதாக இருந்த இருக்கை முதலாவதாக மாறி பல்லை காட்ட “இப்ப போய் எடுத்துகோங்கப்பா” என அதில் அமர்ந்தாள்.

“என்னடி கிண்டலா” என ஒரு பெண் கேட்க “பச்ச்” என எழுந்த அரிசியை பார்த்த இருவரும் தங்களை அடித்துவிடுவாள் என்ற பயத்தில் “அம்மா தங்கச்சி நாங்க இந்த டிபார்ட்மன்ட் செகரட்டரிம்மா. சும்மா ஜூனியருக்கு ரேகிங் விழிப்புனர்வு ஏற்படுத்த இந்த திட்டம் போட்டோம். ஆனா எங்களுக்கு இப்ப தனி கவுன்சிலிங் தேவைபடும் போல” என அந்த அக்கா சிரிக்க உடன் ஜெனிக்கும் சிரிப்பு வந்தது.

சொல்லுங்கப்பா இவளா பாவம் அந்த அக்காங்கதான் பாவம். அவள எப்புடியாவது பிரன்டு ஆக்கனும் எனக்கு. பாக்கலாம். என முடிய அன்பு சிரித்துகொண்டே அடுத்த பக்கத்தை திருப்ப அதில் ஒரு வருடம் கடந்து ஒரு தேதி இருந்தது.

ஹே சாரிப்பா சில நாட்களா உங்கள பாக்கமுடியல நான் அன்புகூட! ஓ அவ பேர் சொல்லலைல. அவ அன்பரசி. இல்ல அன்புனு நான் கூப்பிடுவேன். மத்தவங்களுக்கு ராட்ச்சி! ஆமா கொஞ்சம் வாலு! அவ எனக்கு பிரன்டா கிடைச்சுட்டா எப்புடின்னு கேக்குறீங்களா அது எப்புடின்னு இன்னும் எனக்கு தெரியல. சரி அத விடுங்க அவளோட சேட்டை இப்ப குறஞ்சிடுச்சு. ஆமா மேடம் காதல்ல விழுந்துட்டாங்க. ஆனா சொல்ல மாட்டாங்க. ஆனா எனக்கு இந்த அன்பு பிடக்கலப்பா. அதனால ஒரு ஐடியா பன்னிருக்கேன்.

ஆமா நாளைக்கு இந்த சங்கீதாவையும் சிந்துஜவையும் வச்சு ஒரு கேம் ஆட போறேன். ஆமா ஸ்கிரிப்ட் படி சங்கீதா இப்ப நம்ம ஹீரோ ராஜேஷ்கிட்ட லவ் சொல்ல போறாங்க! அப்ப நம்ம ஹிரோயின் அன்புக்கு கோபம் வரும் அப்புறம் என்ன காதல் ஸ்டார்ட் ஆகிறும் நாளைக்கு பாக்கலாம்பா என்ன நடக்குதுன்ன. ம்ம் நான் பிஸி ஆகிட்டா வரமாட்டேன் ஸோ வெயிட் பன்னனும்.

அதற்கு அடுத்து நடந்த அந்த டிராமாதான் அன்பரசி கேன்டினில் வைத்து காதல் சொன்ன கதை. அதில் நடித்த நடிகர்கள் சங்கீதா (இவளுக்கு பெரிய மனசுதான் ஆமா ராஜேஷ் மீது காதல் இருந்தும்

தன் தோழிக்காக விட்டு கொடுத்தவள்). பின் சிந்துஜா. முக்கியமாக ராஜேஷ். அப்புறம் மிக முக்கிய ரோல் ஜெனி. பலி ஆடு அன்புதான். இயக்கம் திரைகதை வசனம் ஜெனி. என அரிசி அந்த டைரியை படிக்க சிரிப்பு வந்தது. "அடிபாவி என்னடி என்ன வச்சி இப்புடி விளையாடிருக்கீங்க" என்று இல்லாத ஜெனியிடம் கேள்விகேட்டாள்.

அடுத்த பக்கத்தை புரட்ட எனக்கு என்னப்பா ஆச்சு கொஞ்ச நாளா மனசு சரியில்ல. அது எனகிட்ட இல்லைனுதான் நினைக்குறேன்

என வாசிக்கும்போது சந்துருலேசாக உடலை அசைக்க புரன்டு படுத்தான். அந்த டெடிபியர் தலையனை அவனுக்கு கீழே சிக்குன்டது. அவன் படுத்திருந்த நிலைக்கு அவன் உடலில் சில பகுதிகளுக்கு ரத்தத்தை பாய்ச்ச நிச்சயம் இதயம் சிரம்படும்.

உடனே அரிசி அந்த தலையனையை இழுக்க முயன்றாள் முடியவில்லை. பின் வழுவாக இழுத்தாள். "சந்துரு எரும என்னடா நீ முன்னவிட வெயிட்டா இருக்கடா என்னால முடியல எந்திரிடா" என அவனை பார்த்து மெதுவாக திட்ட அவன் லேசாக சிரித்தான். அவனுக்கு என்ன கனவோ.

மீண்டும் விடா முயற்சி என இழுத்தாள். இம்முறை வெற்றி. அதற்கு விலை அரிசி டெடிபியர் தலையனை அப்புறம் அந்த டைரி என மூன்றும் கட்டிலில் இருந்து கீழே விழ "அம்மா" என இடுப்பை பிடித்தாள்.

“என்ன தள்ளிவிட்டுட்டு தூங்கறத பாரு” என இடுப்பே தேய்த்துகொண்டு எழுந்தவள். அவன் உடல் குளிரில் நடுங்கவதை பார்த்து அவனருகில் அமர்ந்து போர்வையை போர்த்தினாள்.

பின் அப்படியே அந்த டைரியை அவள் கைகளை விட்டு துலவ அந்த நேரம் தூக்கதில் அவன் டெடிபியரை தேட மாட்டியது அரிசிதான். நன்கு அனைத்துகொண்டான். அவனுது அனைப்பிலிருந்து வெளியே போக அவளால் முடியவில்லை. அவள் முயற்சிக்கவில்லை எனபதே உண்மை.

இந்த அனைப்பு அவள் ஏற்கனவே அனுபவித்த நியாபகம் லேசாக மூளையிலிருந்த கிளம்பி வந்தது. அன்று தாய் இல்லாத பையன் என பரிதாப்பட்டு அவனுக்கு போர்வை போர்த்திவிட்டு பின் தன் தாயின் சீலையை போர்வையாக்கியவள். நடு இரவில் குளிர் எடுக்க தன் போர்வேயை நாட அதிலிருந்த கூட்டுபுழு அந்த சின்ன சந்துரு.

குளிர் தாக்கத்தால் அரை தூக்கத்தில் புகுந்தவள் அவனை அனைத்துகொண்டு கதகதப்பு தேடியிருக்கிறாள். அன்றிலிருந்துதான் சந்துருவுக்கு இந்த டெடிபியர் பழக்கம் தொற்றிகொண்டுவிட்டது. அந்த தருனம் நினைவுக்கு வரவே சற்று வெட்கமாகதான் போய்விட்டது அரிசிக்கு பின் தன்னவன் மடியில் உறங்கிபோனாள்.

அரவனைப்பு யாதென தேடிய

அர்தங்கள் நிமிடத்தில்

உணர்த்தி துயில்கொள்ளும்

மன்னாளன் மனதில்

சுமக்கும் என்னை

எனக்கு பிடித்திருக்கிறத

ஒருபடி மேல் பொறாமை

அந்த கனவு பிம்பத்தின் மீது

எனக்கு!!! இந்த அனைப்பு

என் வாழ்வின் சொர்க்கமடா

இதுபோதும் நான் இங்ஙனம்

சாக ஆயத்தம்.

என அவனது கையை அனைத்துகொண்டு துயில் கொண்டாள். நிலா பல்வேறு கோணங்களில் இவர்களை அந்த சிறிய ஜன்னல் இடுக்கு வழியே ஆசையாய் நோட்டம் பாரத்து தோற்றது. அதற்கோர் ஆசை. எந்த கோணத்திலும் இயலாத காரணத்தால் சோகமாக தன் மன்னவன் சூரியனை அழைக்கும் நேரம். அன்புக்கு வழக்கம்போல முழிப்பு தட்ட அங்கிருந்த கடிகாரம் நான்கை காட்டியது.

இன்னும் அவன் அவளை சிறைபிடித்துதான் இருந்திருந்தான். அவனது கையிலிருந்து தப்பிக்க முயன்றாள். தோல்வி சதுரங்க ராணிக்கு வந்த சோதனை இது. "ஐயோ கடவுளே அந்த டெடி பாவம்பா" என திட்டினாள்.

"சந்துரு விடுங்க நான் குளிக்கனும்" என்று சினுங்க அவனோ நன்றாக இருக்கிகொண்டான். சந்துருவை பொருத்தவரை தனது டெடி அவள். வேறு வழியில்லாம் சிறிதுநேரம் விழித்தவள். அந்த அனைப்பில் மயங்கி மீண்டும் துயிலுக்கு செனாறாள்.

"ஹலோ அரசி மேடம் குட் மார்னிங்" என்று அவளை எழுப்பினான் கையில் பூஸ்டுடன். "ஐயோ மணி ஏழு ஆச்சுங்க" என்று பதறினாள்.

"ஏன் ஸ்கூலுக்கு போகனுமா! நான் குளிச்சுட்டேன்மா பயப்படாத ரெஸ்ட் ரூம் ஃபிரியாதான் இருக்கு. அப்புறம் கார் ரெடிதான்

வேனும்னா நான் டிராப் பன்றேன்" என்று பூஸ்டை அவளிடம் கொடுக்க. அவளது பயம் தன் பெரிய மனுசி ஆனதுக்கு அப்புறம் நான்குமணிக்கு எழுந்திரிக்கவேண்டும் எனபது பார்வதியின் உத்தரவு. ஒருமுறை ஆறுமணி வரை உறங்கியதால் பார்வதி அடித்துவிட்டார். அந்த பயம்தான் இன்று. தலையில் கைவைத்து தன் தாய் வருகிறாளா என்று பார்த்தாள்.

"என்ன மேடம் நான் உங்க கண்ணுக்கு தெரியுரேனா" என்ற சந்துருவை பார்த்தாள். "இந்தாங்க உங்க ஃபேவரட் பூஸ்ட் என் பிரபரேஷன்" என்றான்.

"இல்லைங்க பிரஸ் பன்னிட்டு" என்று கூறும்முன் "இன்னாரம் அரிசியா இருந்தா இப்புடி யோசிக்கமாட்டா" என்றவுடன் வாங்கி குடித்தாள்.கண்கள் பார்வதியை தேட பார்வதி வந்தார்.

"என்னமா இப்பதான் எழுந்திருக்கிறியா சரி குளிச்சிட்டு வா அம்மா சாப்பாடு எடுத்து வைக்குறேன்" என அமைதியாக கூறி செல்ல அன்புக்கு வித்தியாசமாக இருந்தது.

"அரிசி பாத்தியா எனக்கு தரனும்னு தோனுச்சா உனக்கு! நம்மக்குள்ள பார்லீஜி ஒப்பந்தம் மட்டும்தான் இருக்கு! பூஸ்ட் உடன்படிக்கை போடல சரியா" என அவள் குடித்துகொண்டிருக்க அதை பிடுங்கிஇவன் குடித்துவிட்டு. "மீசை நல்லா இருக்குடி டிரிம்மர் வேனுமா" என்றான்.

“நீங்கதான் பிடுங்கறேன்னு ஆட்டிவிட்டு இப்புடி ஆகிருச்சு” என வாயை துடைத்தாள். “ம்ம் மக்களே நம்புங்கப்பா” என சந்துரு கூற “நான் எப்ப இப்புடி குடிச்சுருக்கேன்” என முறைத்தாள்.

“எனக்கும் பொய்சொல்ல கத்துகுடு அரிசி”

“நான் பொய்யே சொல்லமாட்டேன்பா”

“ஓஒ அப்ப நீச்சல் கத்துதாரேன்னு சொல்லிட்டு யாருப்பா இன்னும் கத்துதராம சுத்திகிட்டு இருக்குறது இப்புடி மீசை வச்சுகிட்டு” என தன் உதட்டை தடவினான்.

“அரிசி நீச்சல்” என கன்மாய்கரையில் நடந்ததை நினைவுபடுத்த “அம்மா இருக்காங்க” என ஓடி குளியலறையில் பதுங்கினாள். மீதிமிருந்த தேன்துளியை ரசித்து பருக ஆரம்பித்தான்.

“ரஞ்சிதம் அம்மா தம்பி எழுந்துட்டானா”

“ம்ம் எழுந்துட்டாங்க பாபப்பா குளிக்க போயிருக்கு”

“ம்ம்” என டைனிங் டேபிளில் அமர்ந்தாள் ஜான்சி.

ரஞ்சிதம் அவர்கள் வீட்டில் நீண்ட நாட்களாக வேலை செய்யும் சமையல் ஆள். ஜான்சி மற்றும் சேகர் மீது பாசம் அதிகம் அவருக்கு.

*“இட்லி இருக்குமா சாப்புடுறீங்களா”*

*“இல்லமா தம்பி முதல்ல சாப்புடட்டும்”* என அமைதியாக டைனிங்க டேபிளில் தாடையை வைத்து சோகமாக அமர்ந்தாள். ரஞ்சிதம் அம்மா அவளது சோகமான முகத்தை பார்த்து பெருமூச்சு விட்டு சென்றார். ‘ஐயா இருந்திருந்தா இதுங்க இப்புடி உறவு இல்லாம இருந்திருக்குங்களா! ஜான்சி பாப்பாக்கு இன்னாரம் கல்யானம் பன்னி குழந்தையோட விளையாடிட்டு இருந்திருப்பாரு’ என மனதிறுகுள்ளே பேசிகொண்டு சென்றாள்.

*“அக்கா எப்ப வந்த”* என படியிலிருந்து சுறுசுறுப்பாக இறங்கிவந்த சேகரை பார்த்ததும் ஜான்சி உற்சாகமாக நிமிர்ந்தாள். அவன் ஸ்பைடர்மேன் மாதிரி இது வரை அவனிடம் அந்த வேகம் குறையவே இல்லை.

*“இல்லடா இப்பதான் வந்தேன்”*

*“சாப்புட்டியா”*

*“இல்ல நீ சாப்புடு முதல்ல”*

“ச்ச்ச் இங்க பாரு எனக்கெல்லாம் வெயிட் பன்னாத சரியா உன் உடம்ப பாத்துக்க”

“அய்யோடா பெரிய மனுசனா ஆகிட்டியா அக்காக்கு அட்வைஸ் பன்றியே குட்”

“இதுல என்னக்கா அட்வைஸ் இருக்கு! நீ என்ன பாத்துகிற பதிலுக்கா நான் உன்ன பாத்துக்க வேனாமா”

“ஆரம்பிச்சுட்டியா வா உட்காரு” என இரண்டு இட்லியை எடுத்து வைத்தாள்.

“என்னக்கா இட்லி போரக்கா”

“ரஞ்சிதம் அம்மா பாவம்ல அவங்களுக்கு வயசாகிருச்சுல நீ வேற சமையல்காரி வேனாம்னு சொல்லுற” என்று சேகரிடம்கூற.

“சரிக்க இட்லிவை” என்றான் சோகமாக.

சிறிது யோசித்தவள். “சரிடா இன்னைக்கு அவங்களுக்கு ரெஸ்ட் குடத்துடலாம்”

“என்னக்கா பன்னபோற”

“கோட்டை உட்புகுதல்” எனகூற அவன் சிரித்துகொண்டே “சூப்பர்க்கா” என தட்டை எடுத்துகொண்டு சமையலறையில் புகுந்தான். ரஞ்சிதம் அம்மாவை தூக்கியவன் அங்கிருந்த ஒரு சேரில் அமரவைத்து “அம்மா டேக் ரெஸ்ட்” என்றான்.

பின் அந்த கேஸ் அடுப்பின் பக்கம் அவன் அமர தோசை கல்லை எடுத்து அடுப்பில் அதன் அடியில் நெருப்பு வைக்க அதன் மீது விழுந்த நீர்துளிகளின் மீது கோபத்தை காட்டியது. புஸ்ஸ்...

“பாப்பா தோசை கேட்டுருந்தா நான் சுட்டு குடுத்துருப்பேன்ல” என்றார் ரஞ்சிதம்.

“இது ஜான்சிராணி தோசைம்மா மை ஃபேவரட்” என்று சேகர் கூற முதல் தோசை சூடாக விழுந்தது தட்டில்.

“எல்லாம் சரி அன்னைக்குமாதிரி கைய சுட்டுகிட்டு வந்த எனக்கு கெட்ட கோபம் வரும்பாத்துக்கமா” என்றார் ரஞ்சிதம்.

“அத நான் பாத்துகிறேன் ஸ்வீட் மம்மி” என்று கன்னத்தை கிள்ளினாள் ஜான்சி. “என்னமோ பன்னுங்க நான் வீட்ட பெருக்குறேன்” என கிளம்பினார்.

“அவங்களவிட நல்லா சமைக்குறேன்னு பொறாமைக்கா” என்றான்.

“டேய் நெய் வேனும்னா கேளுடா அதுக்கு ஏன் ஐஸ் வைக்குற” என அவள் கூற தட்டை நீட்டினான் அனைத்து பற்களும் தெரிய.

“அக்கா மாமா குடுத்து வச்சவருதான் ஜான்சி தோசை போட்டே கவுத்துடுவ” என்றான் குறும்பாக. ஜான்சியின் முகம் மாறியது.

“என்னக்கா ஆச்சு சாரிக்கா” என்றான் சோகமாக. “ச்சீ லூசு அம்மா வெங்காயம் வெட்டி அப்புடியே வச்சிட்டு போயிருக்கு அதான் கன்னு கலங்குது” என்று சமாளித்தாள். ஆனாலும் சேகருக்கு மனதில் உறுத்தல் எவ்வளவு சொல்லியும் கல்யானம் வேனாம்டா நீ நல்லா இரு எனக்கு அது போதும் என கூறும் தன் அக்காவிடம் என்ன பேசுவான். அதனால் சோகத்தை காட்ட.

“டேய் யாருடா அந்த பொண்ணு ரொம்ப நேரமா கடலை போட்ட”

“யாருக்கா”

“அதான் கல்யானத்துல தாவனி கட்டிகிட்டு சுத்திகிட்டு இருந்தாலே! அக்கா உனக்கு போட்ட மோதிரம் நான் அங்கருந்து வரும்போது அவகிட்ட இருந்துச்சே”

“அக்கா பாத்துட்டியா”

“ஆமா அங்க இருந்த எல்லாரும் உன்னதான் பாத்துகிட்டு இருந்தாங்க”

“வளர்க்கா”

“என்ன வல்லாரைகீரையா” என்றாள் நக்கலாக

“வளர்மதிக்கா காலேஜ் பஸ்ட் இயர் படிக்குறா கம்ப்யூட்டர் சைன்ஸ்ம

“ஓஓ சார் அதான் டிப்ஸ் குடுத்துகிட்டு இருந்தீங்களோ”

“இல்லக்கா சும்மா போசிட்டு இருந்தேன்”

“அவள பிடிச்சிருக்கா”

“ம்ம்”

“இதோட நாலாவது லவ்வுடா உனக்கு”

மூனும் வெள்ளைகாரிங்க்ககா இது நம்ம ஊர் பொண்ணு”

“என்னமோபா அக்கவேனா பேசி முடிச்சிடவா! வேனாம் தரமாட்டனுக தூக்கிட்டு வந்திடலாம்” என்று கண்ண்டிக்க “ஆமா தூக்கிட்டு வந்து என்ன பன்றது” என்றான். “நல்லா கேக்குறடா கேள்வி” என்றுகூறிவிட்டு நல்ல நெய ஊற்றிய தோசையை வைத்தாள்.

“அக்கா ஒன்னு சொல்லவா”

“என்னடா”

“இல்ல எனக்கு கனவு வருதுனு சொல்லிருக்கேன்ல”

“ஆமா”

“அந்த கழுத்த அறுத்துகிட்டு சாகுற பொண்ணு வளர்மதிதான்க்கா”

“என்னடா சொல்லுற”

“அதான் அவ எனகிட்ட இருந்தா எதாவது பன்னிகுவானு பயமா இருக்கு”

“டேய் அது நீயா கற்பனை பன்னிகாதடா அவளுக்கு பதினெட்டு வயசு ஆகட்டு அக்கா பேசுறேன் இரு” என கூறிவிட்டு அடுத்ததோசையை வைத்தாள்.

“இல்லக்கா போதும்” என்று வைத்துவிட்டு செல்ல அடுப்பை அனைத்தவள் அவன் மீதம் வைத்த தோசையை எடுத்து சாப்பிட ஆரம்பித்தாள். கையோடு ஃபோனை எடுத்தவள்.

“ஹலோ என்ன புடுங்கிகிட்டு இருக்கீங்க! அந்த கம்பெனி ஆர்டர் நம்மலவிட்ட போக்கூடாதுனு சொன்னேன்ல” என்றுகூற மறமுனை “இல்ல மேடம்” என்றது

“உங்கள வேலைக்கு வச்சேன்ல அது என தப்பு நீங்க *****தனம் பன்னிகிட்டு கம்பெனிய விட்டுடுறதா. ****மாதிரி பிகேவ் பன்னாம நான் சொல்றத கேளுங்க இல்லைனா வேலையவிட்டு மூடிட்டு போங்க”

“அந்த கம்பெனி புதுசு அதான் கோட் கம்மியா போட்டுருக்காங்க”

“அப்ப அந்த கம்பெனி பத்திரமும் அந்த முதளாலியும் நாளைக்கு என் ஆஃபிஸ்ல இருக்கனும்” மைன்ட் இட்” என துண்டித்தாள். அந்த நேரம் அவனுக்கு வைத்திருந்த அந்த மாத்திரையை சாப்பிடாமல் போயிருந்தான்.

“இன்னைக்கும் மறந்துட்டியா ஐயோ உன்ன ஒருத்திகட்டிகிட்டு என்ன பாடுபடபோறாளோ” என தண்ணீரை ஊற்றியவள். மாத்திரையை எடுத்துகொண்டு “தம்பி” என அவன் அறைக்கு சென்றாள்.

அன்பு குளித்து முடித்துவிட்டு வர சந்துரு பாத்திரங்களை எடுத்து வைத்துகொண்டிருந்தான். அன்பு வா சாப்பிடலாம் என்றான்.

அதற்குள் ஹாஸ்பிட்டலில் இருந்து அனைவரும் வந்திருந்தனர். “அப்பா மாமாக்கு சரிஆகிடுச்சா” என்றாள்.

“எங்க அப்பா உங்க அப்பா மாதிரியா அன்னி அவரு ஸ்ட்ராங் மேன்” என சுவேதா கூறினாள். “ம்ம் எங்க அப்பா மிலிட்டரி மேன்” என சிறுவயது குரலுடன் கூற.

“ஆமா மிலிட்டரில ரொட்டி சுட்டுபோட்டுகிட்டு இருந்தவரெல்லாம் மிலிட்டரி மேனா” என சுவேதா வம்பிழுக்க அன்புக்கு கோபம்

வந்தது.”அவரு ரொட்டோலாம் சுடல” என சினுங்கினாள். மற்ற அனைவரும் அவளை சிரித்துகொண்டே பார்த்தனர்.

சுவேதாவுக்கு ஏதோ அடம் பிடிக்கும் சின்னுகுழந்தையிடம் பேசுவதை போல இருந்தது. மேலும் தொடர்ந்தாள். “அப்ப அப்பளம் சுட்டாரா”

“அவரு ஸோல்ஜர்”

“ம்ம் ரயில்ல ஏறி போயிட்டு பானிபூரி வித்துட்டு இங்க வந்து மிலிட்டரினு உங்கள ஏமாத்திருக்காரு அன்னி மாமா.... என்ன மாமா அப்புடிதான” என சுவேதா கூற “ஆமா காஷ்மீர்ல அன்பரசி பானிபூரிகடை பேமஸ்மா மாமாதுதான்” என்றார் அவரும் சிரித்துகொண்டே. அன்புரசி மௌனமாக நின்றாள்.

“அய்யோ அன்னி நாங்க உங்கள ஓட்டிட்டு இருக்கோம்” என கூறி அனைவரும் சிரித்தனர். அவள் சோகமாகதான் இருந்தாள்.

“அட சுவேதா இப்பதான் அவள சைலன்ட் மோட்ல இருந்து நார்மலுக்கு மாத்தினேன் நீ மறபடியும் சைலன்டல போட்டுடியா” என்றான் சந்துரு

“அரிசி நீ உட்காரும்மா” என அவளது தோளை பிடித்து அழுத்தி அமரவைத்தவன் அவளுக்கு பறிமாறினான். “ம்ம் அண்ணா சூப்பரா

சமைச்சுருக்க அத்தைலாம் எந்த மூலைக்கு" என்று அடுத்து அவள் தாயை குறிவைக்க.

"எங்க அம்மாதான் நல்லா சமைப்பாங்க இது நல்லா இல்ல" என்று சினுங்கினாள்.

"இது உங்க அம்மா பார்வதி சமச்சதுதான் அத வைக்குற கைமட்டும்தான் சந்துரு" என கூற அன்புக்கு வெடகமாக போனது.

"சுவேதா சும்மா இரு பாரு அவள அழவைக்காம விடமாட்டியா"

"யாரு எங்க அன்னி அழுவாங்களா மை ஸ்வீட் டார்லிங்" என தன் இலையிலிருந்த அப்பளத்தை எடுத்து அன்புக்கு ஊட்டிவிட அப்போதுதான் சிரித்தாள் அரிசி.

"அப்பாடா என்னமா கோவம் வருது உங்களுக்கு டேய் சந்துரு இனிமே உன் கத அவ்வளவுதான்டா என்ட் கார்டு போட்டுடுறேன்"

"எனக்கு என்டு போடுறது இருக்கட்டும் இந்த ரெண்டு வானரங்க எங்க போச்சு ஆளேயே கானோம். சாப்பாட்டு நேரத்துக்கு சரியா பிரஸன்ட் ஆகிருங்களே"

"யாரு மஞ்சுவா"

“அந்த ஜீவ ராசிங்கதான்”

“அதுங்க நேத்தே கிளம்பிடுச்சுங்க”

“ஏய் என்ன சொல்ற”

“ஆமா சந்துரு” என்றார் சன்முகம்.

“என்னப்பா எனகிட்ட சொல்லவே இல்ல”

“மஞ்சுக்கு செக்கப்ப்பா” என்றாள் சுவேதா தெரியாமல்.

“செக்கப்பா என்ன பிரட்சனை அவளுக்கு”

ஐயோ உளறிட்டோமே என சுவேதா பயந்து “இல்லடா அவங்க டாக்டர் மாமா வந்துருக்காங்கலாம்” என்ற சுவேதாவின் ஓசையுடன் “அவங்க மாசமா இருக்காங்க” என்ற அரிசியின் குரல் வந்தது.

சந்துருவின் கண்கள் கலங்க உதட்டில் ஒரு புன்னகை. “நிஜமாவா அன்பு”

“ம்ம்”

“ஏன் எனகிட்ட சொல்லல”

“ஆமாடா கரு கலஞ்சப்ப ஹாஸ்பிட்டல்னுபாக்காம் அப்புடி அழுதா யாரு சொல்லுவாங்க உன்கிட்ட” என்றாள் சுவேதா.

சந்துரு அமைதியானான்.

சிறிது நேரத்தில் சாப்பிட்டு எழ வெளியே ஒரு பெரியவர் நின்றிருந்தார். “போஸ் போஸ்”

“வாங்க மாமா” என்றார் சன்முகம்.

“ம்ம் வாங்க பெரிப்பா” இது பார்வதி.

“பொண்ணுக்கு திடிர்னு கல்யானம் பன்னிட்ட என்னகூப்பிடனும்னு தோனலையா” என்றார் அவர்.

“இல்ல மாமா திடிர்னு முடிவாகிடுச்சு அதான்” என சமாளித்தார் போஸ்.

“சரிப்பா எங்க அந்த வாலுபொண்ணு கூப்பிடு” எனவே “அன்பு மாப்பிள்ளையகூட்டிட்டு வாம்மா” எனறார் போஸ். அந்த குரலில் மொத்த கூடவே சுகு சுவேதா என அனைவரும் வர.

அன்பரசியும் சந்துருவும் அவர் காலில் விழுந்து ஆசிர்வாதம் வாங்கினர். பின் அவர்களுக்கு சந்தனம் வைத்தவர். அன்பரசியின் கையில் காந்திநோட்டை திணித்தார்.

“இங்க பாரும்மா போற இடத்துல ஊர்மானத்த காப்பாதனும்” என கூறிவிட்டு “மாப்ள பொண்ண நல்லா பாத்துகனும் அப்புறம் நீங்க கொஞ்சம் பாதுகாப்பா இருந்துகோங்க! ரொம்ப சுட்டி பொண்ணுப்பா எனகிட்டயே வேலை கட்டிருக்கா” என்று கூற போஸ் ஒரு கூல்ட்ரிங்கஸ் பாட்டிலுடன் வந்தார்.

“இல்லபா சுகர் பேக்டரியே என உடம்புலதான் இருக்கு” என கிளம்பினார். உள்ளே வந்த பார்வதி எதையோ நினைத்து சிரிக்க சந்துரு ஏன் அத்த சிரிக்குறீங்க என்றான்.

“இல்லப்பா சும்மாதான்” என மீண்டும் சிரித்தாள்.

“அத்த என்ன ஆச்சு” என சுவேதா கூற

“உங்க அன்னி கொஞ்சநஞ்ச வாலுதனமா பன்னி வச்சுருக்கா”

“அம்மா சொல்லாதமா” என்று சினுங்கினாள் அன்பு.

“நீங்க சொல்லுங்க அத்த” என்று சந்துருவும் சுவேதாவும் கோரஸ் பாடினர்.

அத்தியாயம் - 55

“ஹேய் மலை என்னடி இதெல்லாம்” என அழுக்கு சட்டை பாவைடையுடம் வந்தாள் அரிசி.

“எதடி கேக்குற”

“இல்ல தலைல முழச்சிருக்கே இந்த செம்பருத்தி இத யாருடி குடுத்தா”

“அதுவா எங்க மாமா தோட்டத்துல பறிச்சதுடி அம்மா வச்சுவிட்டாங்க” என்று மலை கூறும்போதே அந்த செம்பருத்தியை தலையிலிருந்து எடுத்தாள்.

“அத ஏன்டி எடுத்த?”

“ம்ம் திங்கதான்” என கூறிகொண்டே ஒரு இதழை எடுத்து வாயில் போட்டுவிட்டு தன் தோழிக்கு ஒன்று பிய்த்து கொடுத்தாள். “அம்மா திட்டுவாங்கடி”

“சித்திகிட்ட நான் சொல்லிகிறேன்டி”

“உன்கிட்ட போய் காட்டுனேன் பாத்தியா குரங்கு குரங்கு இப்புடி பூவ பிச்சிட்ட” என்று திட்டினாள்.

“எல்லாமே திங்குறதுக்குதான்டி இருக்கு” என்று அரிசி முழுதாக வாயில் போட்டாள்.

“அப்படின்னா போய் அந்த மண்ண அள்ளி திண்ணுடி” என்று சிறிது ஆத்திரபட்டாள். பூ போய்விட்டது அல்லவா.

“சரிடி” என மண்ணை அள்ளிவிட்டு “இந்தா” என நீட்டினாள்.

“என்கிட்ட எதுக்கு தர்ர”

“நான் உனக்கு குடுக்காம எதுடி திண்ணுருக்கேன்”

“ம்ஹூம்! உங்க அம்மா வாங்கி தந்த அந்த சாக்லெட் எனக்கு தந்தியா”

“என் அம்மா எப்படி எனக்கு சாக்லெட் வாங்கி தந்துருக்கு”

“அன்னைக்கு நீ மரத்துல ஏறிகிட்டு எனக்கு பளிப்பு காட்டிகிட்டே தின்னியே அந்த சாக்லட்டி. வெளிநாட்டு மிட்டாய்”

“ஓஓ அதுவா!”

“அதுதான்டி அரிசி”

“அது தந்தாங்கனு அப்பா குடுத்தாருடி”

“அப்ப நீ ஏன் எனக்கு குடுக்கல”

"ம்ம் எல்லாதுலையும் பங்குகேப்பியா" என்றாள் அரிசி

"ம்ம் அதான் இந்த மண்ணும் எனக்கு வேணாம் நீயே திண்ணு" என்று வேகமாக கோபித்துகொண்டா நடந்தாள்.

"ஏய் மலை ஏன்டி கோவிச்சுகிட்டியா"

"ஆமா இனி பேசாத போ!" என்று அவள் கூறியது அன்புக்கு எல்லாம் தன்னைவிட்டு போனதுபோல இருந்தது. "நான் என்ன பன்னா பேசுவ நீ இப்ப" என்றாள்.

"ம்ம் நீ திண்ணியே பூ அது குடு"

"சரிடி வாந்தி எடுத்து தரவா" என்று சிரிக்க முறைத்துகொண்டு நடந்தாள். "சித்திகிட்ட சொல்லிடுவேன்டி சித்தி இவ என்கிட்ட பேசமாட்டேங்குறானு" என்று கத்த "சொல்லிகோடி எங்க அம்மாக்கு கொம்பா முளைச்சுருக்கு" என நடந்தாள்.

"இதையும் சொல்லுறேன் இரு" என பிளாக்மெயில் தொடர்ந்தது. "பரவாயில்லடி" என்று அவள் கன்மாயில் குதித்தாள். அனைத்து உத்தியும் பாலாய் போனதால் சோகமாக அந்த படிகட்டில் அமர்ந்தாள் அரிசி.

“இப்ப நீ பேசுறியா இல்லையாடி”

“முடியாதுடி” என்று மலை நீந்தினாள். “இப்ப நீ பேசல நான் எப்பவுமே உன்கூட பேசமாட்டேன்டி” என அரிசிகூற “நான் அந்த மாலாகூட சேந்துகுவேன்” என்றாள். “ச்சீ அவ தூங்கும்போது உச்சாபோனவடி”

“பெரிம்மாவும் அன்னைக்கு போர்வைய துவைக்கும்போது உன்ன திட்டுனாங்க! நானும் சேந்துதான் பிழிஞ்சேன். இரு எல்லார்கிட்டயும் சொல்லுறேன்”

“ம்ம் அப்ப நான் அன்னைக்கு நீ ஐய்யனார் கோயில் தட்டுல இருந்து காசு எடுத்து முறுக்கு வாங்கி தின்னைல நான் அத சொல்லுவேன்” என பதிலுக்கு தன் ஜோக்கர் கார்டை எடுத்து ரம்மி சேர்த்தாள்.

“சரிடி பதிலுக்கு பதில் கழிஞ்சுபோச்சு” என்றாள் மலை. “அப்ப எனகூட பேசுவியா” என்றாள் அரிசி. “ம்ஹூம் இன்னும் அது கழியல நான் பேசமாட்டேன்”

அரிசி உடனே தண்ணீரில் பாய மலை விலகி நின்றாள். நீண்ட நேரமாகியும் அரிசியை கணவில்லை. மலைக்கு பயம் தொற்றிகொண்டது. “ஏய் அரிசி வெளிய வாடி நான் பேசுறேன்டி” என கத்த துவங்கினாள். கால்மணி நேரமாக கத்த அவள் தென்படவில்லை.

தன் பாட்டி கூறியது நினைவுக்கு வந்தது. “அந்த கம்மாய்க்கு போக்கூடது மலரு”

“ஏன் பாட்டி” என அரிசியும் மலரும் கண்கள் விரிய பார்த்தனர். “அய்யாசாமி தாத்தா உங்க்கிட்ட சொல்லலையா” ஆம் அவருக்கு இந்த ஊர்சுற்றி திரியும் சிறுசுகளை கடத்தி கோயிலில் பிச்சை எடுக்க வைப்பார்கள் திருடர்கள் என்ற பயம். அதனால் பேய் கதைகள் சொல்லி பயமுறுத்தி வைப்பார் அந்த ஊர் புளியமரத்தில் சின்ன குழந்தைகள் அனைவரையும் அமரவைத்து. அதுவுமில்லாமல் சமீபகாலமாக ஊரில் திருட்டுவேறு அடிக்கடி நடந்துவந்தது.

அதிலும் அம்மன்கோவில் சாத்திரபடி அதை பூட்டகூடாது. ஆனாலும் ஜெமின் குடுத்த பரம்பரை அம்மன் நகை அந்த ஓலைபெட்டியில்தான் உள்ளது. அதனால் கோடாங்கி என்பவரை ஊர் காவலுக்கு இரவில் போட்டிருந்தனர். பக்கத்து ஊரில் திருடர்கள் ஒரு பெண்ணை கழுத்தறுத்துவேறு போட்டு சென்றுவிட்டனர். அதனால் அய்யாசாமிக்கு முக்கியம் தன் ஊரின் வாரிசுகள். இந்த குட்டி வானரங்கள்தான் அதை திருடர்களிடமிருந்து காக்கவேண்டும். அதற்கு ஆயுதம் பேய் கதைகள். அதிலும் பனங்க்கொட்டை சாத்தான் இப்போது ரொம்ப பேமஸ். ஊர் பழைய கிளவிகள்கூட நம்பியிருந்தனர். ஒருவரின் சொல் உண்மையாகும் நிறையபேரின் நம்பிக்கை நிகழ்உலகிற்கு வரும் எனபதுபோல அந்த குட்டி சாத்தானை நிறையபேர் பார்த்ததாக கூறியிருக்கின்றனர். அதிலும் அய்யாசாமி தாத்தா கூறும் விதம் பகலிலேயே கிளியூட்டும். அன்பு ஆர்வமாக கேட்டுகொண்டிருக்க “அரிசி எனக்கு பயமா இருக்குடி”

என வயிற்றை தடவினாள் மலை. அதனால் இருவரும் அந்த குட்டி சாத்தான் கதைக்கு ஆப்ஸன்ட்.

இன்று பாட்டி அந்த கதையை கூறும் நிலை வாங்க கேக்கலாம். “இவதான் பாட்டி பயந்துகிட்டு என்ன கேக்கவிடாம பன்னிட்டா” பலிபோட்டாள் அரிசி.

“அந்த கதை வேனாம்பாட்டி எனக்கு பயமா இருக்கும்” மலை சினுங்கினாள். “நான் பயப்படாம சொல்லுறேன்” என மலையின் பாட்டி துவங்க மலை அரிசியை இருக்கமாக கட்டிகொண்டாள்.

பாட்டி சின்னபுள்ளையா இருந்தப்போ அந்த அய்யசாமி தாத்தாதான் ஊருல பெரிய பையன். நாங்க எல்லாரும் அந்த தாத்தா மாட்டுவண்டில ஏறிகிட்டு ஊரு சுத்துவோம். அப்ப அவங்களுக்கு பெரிய காடு இருக்கும் காடு ஓரத்துல பனமரம் நிறைய இருக்கும் நாங்க போனா எங்களுக்கு நுங்கு வெட்டி தருவாரு. அப்ப அவங்க தோட்டதுல ஒரு பெரிய மரம் இருந்துச்சு. அதுல ஒரு தாத்தா வேலை பாத்துகிட்டு இருந்தாங்க. அவங்க பொண்டாட்டி மாசமா இருந்தாங்க. அப்ப! என நிறுத்திவிட்டு வள்ளிபாட்டி தெரியும்ல?

“ம்ம் கொய்யாபழம் தருவாங்கள்ள அவங்கதான” என்றாள் அரிசி.

அவங்கதான்! ஒருநாள் அய்யாசாமிதாத்தா தோப்புக்கு போனப்போ அவரு இல்ல அதனால அங்க வேல பாத்துகிட்டு இருந்தவரு

*மரத்துல ஏறி நுங்கு வெட்டிருக்காறு மேல மரத்துல குட்டி நாகம் இருக்கும் தெரியும்ல?*

*"ஆமா பாட்டி பாம்புக்கு வயசான பன மரத்துல ஏறி உட்காந்துகிட்டு நுங்கு வெட்ட வர்ரவங்கள கடிக்குமே அதுதான"*

*ஆமா அந்த குட்டி நாகம் அங்க மானக்கத்த கக்க உட்காந்துகிட்டு இருந்தா கடிக்காத பின்ன" என்று மலையின் குரலும் வந்தது.*

*ஆமா அந்த பாம்புதான் அந்த தாத்தாவ கடிச்சிடுச்சு அவரு மேல இருந்து விழுந்து செத்துட்டாரு. வள்ளி பாட்டிகிட்ட கேளு சொல்லுவாங்க.*

*"அப்பறம் பாட்டி"*

*அவங்க பொண்டாட்டி அழுதுகிட்டு அங்க கிடந்த அருவாள எடுத்து கழுத்த அறுத்துகிட்டாங்களாம். வள்ளிபாட்டி பயந்துட்டு ஓடி வந்துருச்சு*

*"பாவம்பாட்டி" என்றாள் அரிசி.*

ம்ம் அப்ப அய்யாசாமி தாத்தா அங்க வந்திருந்துருக்காரு அப்ப அந்த பாட்டிவயித்துல இருந்த குழந்தை எந்திருச்சு வெளிய வந்திருக்கு ஒரே ரத்தமா இருந்துச்சாம்.

“ஐயோ அப்புறம்”

தாத்தாவ கடிக்க வந்திருக்கு

“ம்ம்”

தாத்தா அங்க இருந்த முனியசாமி கோயில்ல போய் ஒழிஞ்சுகிட்டாராம் அது வெளிய உட்காந்துகிட்டு எங்க அம்மாவ குடு அப்புடின்னு அழுதுச்சாம். அதுக்கு அவரு அம்மா செத்துடாங்க அப்புடின்னு சொல்லிருக்காறு.

“அப்புறமும் போகலையா அது”

இல்ல நீ அம்மாவ குடுக்குற வரைக்கும் நான் பனமரத்துல உட்காந்துகிட்டு பனங்காய தின்னுவேன் என்னமாதிரி குட்டிபசங்க வந்தா அவங்களையும் கடிச்சு சாப்புடுவேன் அப்புடின்னு சொல்லிட்டு மரத்துல ஏறிகிச்சாம்.

“அப்ப அங்கதான இருக்கனும் ஏன் ஊருக்குள்ள வந்து எல்லாரையும் கொல்லுது! பக்கத்து ஊர்லகூட ஒரு அக்காவ கழுத்த அறுத்துபோட்டுருச்சாம்” என்றாள் வக்கில் அரிசி

அதான் அந்த தாத்தா தோட்டத்துல இப்ப பனை மரத்தெல்லாம் கம்மாய ஆழமாக்க வெட்டிட்டாங்கள அதான் அதுக்கு இருக்க இடமில்லாம வருது பாத்து நீங்க வெளிய சுத்தாம இருங்க அப்புறம் உங்களையும் பிடிச்சிரும் என பாட்டி கூற மலை பயந்துவிட்டாள். அரிசியோ “வந்தா ஒத்தகைல அடிச்சுபோட்டுடுவேன் பாட்டி குட்டி சாத்தான” என கையால் குஸ்தி காட்டினாள்.

அந்த நினைவுகள் மலையின் மனதில் காட்சிகளாய் பதிந்திருக்க அதற்கு ஏற்றார்போல இப்ப அரிசியை காணவில்லை. தூரத்தில் அய்யாசாமி தோட்டம்வேற விகாரமாக காட்சியளிக்க அந்த தோட்டத்தில் மீதமிருந்தது. அந்த மொட்டைபனைமரம்தான் அதை பார்த்தாள். அதில் ஒன்னுமில்லை. ஆனால் ஏன் கண் கம்மாய்க்கு நடுவில் இருந்த அந்த ஒற்றை பனைமரத்தை பார்த்ததோ தெரியவில்லை. ஆம் அதில் அந்த பனங்காய் குட்டிசாத்தான் பனங்காயை தின்று தண்ணீரில் போட்டது மலையின் கண்கள் தண்ணீரால் சிவந்திருந்ததால் அனைத்தும் புகைமூட்டமாய் தெரிந்தது. அந்த மரம் மிக தொலைவில்வேறு இருந்தது. அதனால் அதன் நிழல் மட்டும் தெரிய இதயதுடிப்பு அந்த நீரில் அதிர்வை உண்டாக்கிய நேரம். அந்த சாத்தான் அந்த மரத்திலிருந்து நீரில் பொத்தென விழுந்தது. பின் மலையை நோக்கி வேகமாக வரவே “அரிசி வெளிய வாடி பனங்கா பேய் வந்திடுச்சு” என குரல் குலறியது.

கரையிலிருந்த சட்டையேகூட எடுக்காமல் பாவாடை மட்டும் அணிந்து ஓடினாள். “பெரிம்மா அரிசிய பனங்காபேய் மரத்துல வச்சு சாப்புடுது” என அழுதாள்.

“இந்தாடி உன் சட்டை வேனாமா” என வீட்டற்குள்ளிருந்து தலையை துவட்டிகொண்டே வந்தாள் அரிசி. மலையை விட வேகமாக காட்டுபாதையில் ஓடி வந்திருக்கிறாள்.

“அவ்வளவுதான்மா மலருக்கு இருளடிச்சிருச்சு ஒருமாசம் காய்ச்சல்மா பாவம் பயந்துட்டா” என பார்வதி கூற சந்துருவும் சுவேதாவும் சிரித்தனர். “ஆனா அன்னி உங்கள பகைச்சுக்ககூடாதுபோலையே” என்று அன்னியை அனைத்தாள் சுவேதா.

“இருங்கம்மா அதோட விட்டாளா!”

“ஓஒ இன்னுமா! சொல்லுங்க அத்த”

“இப்ப வந்துட்டு போறாறே அவருதான் கோடாங்கி ஊர்காவலர் அப்ப” என பார்வதி ஆரம்பித்தார்.

“டேய் மூக்கா அன்புக்கு இளநி பறிச்சு போடுடா” இது மாரியம்மாள் பாட்டி தோட்டத்தில்.

“அம்மா காலைல இருந்த வாய்க்கால் வெட்டி முடியலமா. சாப்புட்டுடுட்டு வெட்டுறேனே”

“ம்ஹூம் இனி உன்ன வேலைக்கு வச்சா சரியா வராது!”

“அம்மா “ என்று பயந்தார்

“அப்புறம் என்ன ராத்திரி மாங்காமரத்துல காய் கானாம்போகுது அதுக்கு காவலுக்கு வான்னா வரமாட்டேங்குற. வேலைலையும் சுத்தம் இல்லையே"

“அம்மா அந்த பனங்கா சாத்தான் இடமில்லாம சுத்திகிட்டு பனங்கா கிடைக்காம மாங்காய தின்னுதுமா அதான் ராத்திரி பயமா இருக்கு” என்றான் மூக்கன்.

“ஆமாப்பா ராத்திரி வேனாம் தின்னுட்டு போகட்டும் உங்க ஆத்தாலுக்கு நான் பதில் சொல்லமுடியாது உனக்கு எதாவது ஆச்சுனா! சரி சாப்பிட்டுட்டு இளநி பறிச்சு குடு” என மாரியம்மாள் கூற.

“பாட்டி நான் ஏறி பறிச்சுகிறேன்! மாமா நீங்க சாப்புடுங்க” என மரத்தில் ஏறினாள் சிறிது நொடியில்.

“ஏய் பாத்துடி கீழ விழுந்த உங்க அப்பன் என்ன கொண்ணுடுவான்”

“நான் விழமாட்டேன்பாட்டி” என அங்கிருந்து கைகலைவிட்டுவிட்டு காலால் மரத்தை பற்றிகொண்டு தலைகீழாக தொங்கினாள்.

“நீ ஒன்னும்பறிக்க வேனாம் இறங்கு” என பதறினார் மாரியம்மாள். அதற்குள் சில இளநிகள் கீழே விழுந்தன. அவள் மேலயே அமர்ந்து விரலால் ஓட்டைபோட்டு குடித்தாள்.

“தள்ளுங்கப்பா கூட்ட கீழ போடபோறேன்” என எப்படியும் ஒரு ஐந்து காலிகூடுகள் கீழே வந்திருக்கும். மலை ஒன்றுதான் குடித்திருந்தாள். பின் இறங்கியவள் பாட்டியின் கோழிகளை விரட்டி கூட்டில் அடைத்தாள்.

அங்கிருந்த குட்டி ஆடுகள் இவளையும் மலையையும் பார்த்து தெரித்து தன் தாயிடம் ஓடி பால்குடிக்க அதை எடுத்துவிட்டு இருவரும் அந்த ஆடுகளில் பாலை குடித்துவிடுவதுண்டு. “என்ன ஆட்டுக்கு புன்னாக்கு வைக்குறீங்களா இல்லையா குட்டிக்கு வயிறு நிறையலையே” என்று திட்டும்மாரியம்மாவுக்கு மூக்கன் பதில் கூறமுடியாமல் நிற்பான்.

அதிலும் அந்த ஆட்டுக்கு புல் வைக்கும்போடு அதை சாப்பிடவிட்டாதான. குதிரை இல்லை என்பதற்காக அதில் ஏறி

இருவரும் அம்ர்ந்துகொண்டு "நான் அர்ஜுனன் நீ கெட்டவன்" என தெருவில் பார்த்த மகாபாரத நாடகத்தை நடத்துவது. பாவம் அந்த ஆடுகள்.

இன்று விடுப்பு என்றால் இரண்டு நாட்களுக்கு கண்ணீர் விடும். அப்புறம் இவர்கள் வந்துவிட்டாள் தோட்டதை காவல்காக்க வளர்க்கும் நாய்கள்கூட ஊருக்குள் ஓடிவிடும் பின் பள்ளி திறந்த அப்புறம்தான் வரும்.

பின்ன டீச்சர் நாய் வால நிமித்த முடியாது உங்க ரெண்டு போத்தையும் திருத்த முடியாது என கூறயதால் முதல்கூற்று பொய் என நிறுபிக்க நாய்களைபிடித்து அதன் வாலில் கல்லை கட்டிவிடுவது. அதனால் இவர்கள் வந்தால் தெறித்து ஓடும்.

"வாத்த கழுத்த பிடிச்சுதான்டி தூக்கனும்" என்று மூன்று வாத்துகள் செத்துவிட்டன. கிளிக்கு வைக்கும் வாழைபழத்தை அது மூன்று வினாடியில் தின்றுவிடும் என்ற அதிசயம் இங்குதான் நடக்கும்.

மொத்ததில் தோட்டம் இந்த சனி ஞாயிறு. அதற்கு சனிதான்.

இரவு வரவே "அரிசி இங்க அந்த சாத்தான் வருதாம்டி மூக்கம் மாமா சொன்னாங்க பாத்தியா" என்றாள்மலை.

“ஏய் நான் வள்ளி பாட்டிகிட்ட கேட்டேன்டி அந்த குட்டிசாத்தான நாம பிடிச்சி டப்பாவுக்குள்ள அடச்சிட்டா அது கேக்குற வரம் தருமாம். நான் அதுகிட்ட அந்த ஃபாரின் சாக்லெட் கேப்பேன்பா”

“எப்படி கேட்ட வள்ளி பாட்டிகிட்ட”

“அவங்க தினமும் எனக்குதான முதல் பழம் தந்துட்டு போவாங்க”

“ஆமா அப்பதான் நல்லா விக்குதுனு சொல்லுவாங்க அதுக்கு என்னடி”

“அப்பதான் காதுல ரகசியமா கேட்டேன்”

வள்ளிபாட்டி அந்த சாவை நேரடியாக பார்த்ததால் அவருக்கு பேய் பயம் இல்லை. அதனால் முடிந்தவரை அய்யாசாமி தாத்தா கொள்கை எதிராலி வள்ளிதான். அன்புக்கு பேய்லாம் இல்லைனுகாட்ட இந்த பதில்.

“ஓஒ அப்படியாடி அப்ப எப்புடி அத டப்பால அடைக்குறது” என்றாள் மலை.

“அதுக்கு ஒரு ஐடியா இருக்குடி! நீ என்ன அதுகிட்ட கேப்ப”

“நானா! நான் நிறைய டிரஸ் அப்புறம் பூ அப்புறம் பாசிமணி மச்சிவீட்டு அக்கா போட்டுருந்தாங்கள்ள அந்த மாதிரி(அது முத்து என தெரியாது) அப்புறம்…”என அவள் அடுக்க.

“போதும்டி அது செத்துட போகுது”

“இன்னும் இருக்குடி”

“இரு முதல்ல அதபிடிப்போம்”

“எப்புடிடி”

“நான் குடிச்சுபோட்ட இளநிய பாத்தியா”

“ஆமா மேல ஓட்ட போட்டுருந்த”

“ம்ம் அதுதான் திட்டம் அந்த சாத்தான் வந்த்தும் இதுல அடைச்சு குச்சிய வச்சு குத்திமூடிருவேன்” என்று தன் ராஜ தந்திரத்தை காட்டினாள்.

“சூப்பர்டி ஆமா அது எப்புடி இதுக்குள்ள வரும்?”

“மாங்கா மரத்துக்கு வருதுன்னு பாட்டிசொன்னாங்கல்ல”

“ஆமா அரிசி”

“அங்க நுங்கு வச்சுருக்கேன் நுங்குனா அதுக்கு பிடிக்கும்ல அத எடுத்து இந்த இளநிகுள்ள போட்டுட்டு மாங்கா மரத்துல உட்காந்துகிறேன் நீ கீழ இருந்து ஒரு குழி வெட்டி வச்சுடு அத பிடிச்சதும் குழிக்குள்ள போட்டுமூடிலாம் காலை வரம் கேட்டுக்கலாம்” என திட்டம் முடிய அன்று இரவு பாட்டியை தூங்கவைத்துவிட்டு எழுந்து செனாறாகிவிட்டது.

மலை அங்கிருந்த தென்னை ஓலைகளை எடுத்துமேலே போட்டு ஒளிந்துகொள்ள அரிசி மூன்று பனங்காய் ஒரு இளநி ஒரு குச்சி என மேலை ஏறி அமர்ந்தாள்.(இன்னைக்கு அந்த சாத்தான் தொலைஞ்சது இந்த குட்டி சாத்தானுங்க்கிட்ட)

சுற்றிலும் இருட்டு காலடி சத்தம் கேட்க மலைக்கு வியர்த்தது. அரிசியோ கன்னிவைத்த வேடன்போல் ஆயத்தமானாள் ஃபாரின் சாகலெட் கிடைக்கம்ல்லவா

சற்று அருகில் வர அது கோடாங்கி ஊர்காவலன் கையில் ஒரு கம்பு இருந்தது. அரிசி ‘இவருக்கு தெரிஞ்சா அம்மாகிட்ட சொல்லிடுவாரு அவங்க சூடு வைப்பாங்க’ என பயந்து நடுங்கினாள்.

கோடாங்கி அந்தகம்பை வைத்து மாங்காய்களை பறிக்க ஆரம்பித்தார். அரிசியின் காலில் அது கீறிவிட ரத்தம் வந்தது. அரிசிக்கு கோபம் வரவே அந்த பனங்காயில் ஒன்றை எடுத்து அந்த கோடாங்கியின் தலையில் போட அவர் விலகிகொண்டார். பொத்தென விழ சற்று பயந்துமுழித்துவிட்டு மீண்டும் பறித்தார்.

மீண்டும் அனைத்தையும் போட அதில்ஒரு பனங்காய் அவரின் தலையில் நச்சென்று விழ "ஐயோ மாங்கா மரத்துல பனங்காயா" என குரல் நடுங்க சிரித்தாள் அரிசி.

"அய்யோ பனங்கா குட்டிசாத்தான்" என அந்த காவலரை அலற ஒழிந்திருந்த மலை பயந்து தென்னை ஓலையுடன் எழுந்திரிக்க நடுங்கினார் கோடாங்கி. அடுத்ததாக அரிசி அவர்முன் குதிக்க குட்டிசாத்தான் போல இருந்தால் அந்த இருளில். அந்த கோடாங்கியின் மூளை குடுத்த சமிக்கை "ஓடு"

அவர் தெறித்து ஓட இவர்கள் இழிச்சவாயன் கிடைத்தால் விடுவார்களா! அந்த தென்னை ஓலைக்குள் ஒழிந்துகொண்டு கோவில் வாசல்வரை விரட்டி விட்டு வந்தனர். பயந்தவர் கோவிலுக்குள் போனதுதான். மறுநாள் மூன்று திருடர்களை கோவிலில் தைரியமாக பிடித்த ஊர்காவலர் கோடாங்கிக்கு சர்கார் வேலை வழங்கியது. இவர்கள் பல கோவிலில் திருடிய திருடர்கள் என அம்பலம். ஒரு பெண்ணை கொன்ற வழக்கும் பதியபட்டுள்ளது. என்ற செய்திகிட்டியது.

“இந்த வாண்டுங்க ரெண்டும் அன்னைக்கு ஒருநாள். அந்த கோடாங்கி தாத்தா கூட விளையாடுன குட்டிசாத்தான் விளையாட்டு விளையாடலாமா அப்புடின்னு பேசிகிட்டு இருக்கும்போதுதான் விசாரிச்சேன் என்ன மேட்டர்னு அப்பதான் சொல்லுச்சுக” என அன்பின் தலையில் செல்லமாக கொட்டினாள் பார்வதி சிரித்துகொண்டே.

சந்துருவும் சுவேதவும் சிரிக்க. “அதான் அந்த வேலை வாங்கி குடுத்த குட்டி சாத்தான் கல்யானத்துக்கு வர முடியாம இப்ப வந்துட்டு பாத்துட்டுபோறாரு” என்று சிரிக்க.

“ஓ அதுக்குதான் எனக்கு அந்த அட்வைஸா” என்று சிரித்தான் சந்துரு.

“டேய் அன்னா நல்ல குட்டிசாத்தான்கிட்ட மாட்டிகிட்டடா” என்று சுவேதா தன் பங்கை ஆற்றினாள்.

அன்பரசிக்கு ஒடிபோய் கட்டிலில் முகம் புதைக்கவேண்டும்போல இருந்தது. ஆனால் சுவேதா கட்டிபிடித்துகொண்டிருந்தாள். அதனால் அன்பின் முகம் வெட்கத்தில் மேலும் சிவந்தது.

“திரும்பவும் அந்த கதையாடி! இத எத்தனபேர்கிட்ட சொல்லுவ நீ” என போஸ் உள்ளே வந்தார் சிரித்துகொண்டு.

சுவேதாவின் ஃபோன் ஒலிக்க “ஹலோ” என்றாள் சிரித்துகொண்டு இதுதான் சந்தர்ப்பம் என அரிசி ஓடிவிட “நில்லுங்க பனங்கா மேடம்” என சந்துரு விரட்ட.

சுவேதா “வாட் என்ன சொல்றீங்க” என்று சிரிப்பு அடங்கியது.

## அத்தியாயம் - 56

ஃபோனை பார்த்து “வாட் என்ன சொல்றீங்க” என்றாள். பாலாஜிதான் மறுமுனையில் பேசினான். “ஹாப்பி நியூஸ்தான்மா”

“கன்ஃபார்ம்பன்னிட்டீங்களா”

“இல்லமா ரெகுலர் செக் அப் பன்ன சொல்லிருக்காங்கள்ள அதுல இப்ப ஃபைன்ட் பன்னிருக்காங்க. மேபி இருக்கலாம்”

“ஐயோ நான் இப்ப அண்ணாகிட்ட சொல்லியே ஆகனுமே” என குதித்தாள்.

*“சுவேதா வேனாம் சந்தருக்கு சொல்லவேணாம்டி” என்று மஞ்சுவின் குரல். “ஏன்டி டிவின்ஸ்னா எவ்வளவு சந்தோஷபடுவான் தெரியுமா” என்று குதித்தாள்.*

*“சந்தோஷபடுற அளவுக்கு இந்த கடவுள் அப்புறம் கஷ்டத்த குடுத்துடுவாருடி அவனாவது நிம்மதியா இருக்கட்டும்” என்றாள் சோகமாக. “ம்ம் சரிடி பாப்பாங்கள பாத்தரமா பாத்துகோ” என இனைப்பு துண்டிக்கபட்டது.*

*அதன்பின் நேரம் செல்ல செல்ல கல்யானத்துக்கு வரமுடியாதவர்கள் பின் மனமக்களை வாழ்த்த தாமதமாக வந்தனர். அனைவரிடமும் ஆசிர்வாதம் பெற்ற தம்பதியினர்(சாரி காதலர்கள்) தனியாக இருக்கட்டும் என மற்ற அனைவரையும் கோவிலுக்கு இழுத்துசென்றுவிட்டார் போஸ்.*

*“அரிசி எனக்கு உங்க ஊர் ரொம்ப பிடிச்சிருக்கு”*

*(மைன்ட் வாய்ஸ்-அப்ப என்ன பிடிக்கலையா) “ஏன்?”*

*“அதுக்கு எதுக்கு முகம் அப்புடிபோகுது! உன்ன பிடிச்சதாலதான் இந்த ஊர் எனக்கு பிடிச்சிருக்குமா”*

*(ஐயோ கன்டுபிடிச்சிட்டான்) “இல்லைங்க நான் சும்மா நினைச்சேன்”*

“ம்ம் சரி வேற எதாவது சாகச கதைங்க இருந்தா சொல்லு அரிசி போர் அடிக்குது” என்று அவளருகில் அமர்ந்தான்.

அவள் காலை மடக்கிகொண்டு சுருண்டு அமர்ந்தாள் அந்த கட்டிலில் “இல்லைங்க அது சும்மா அந்த பேய்” என உளறினாள்.

“ஆமா அந்த பேய பிடிச்சீங்களா இல்லையா”

“இல்லைங்க அது வரவே இல்ல”

(ஆமா ரெண்டுகுட்டி பிசாசச பாத்து அது பயந்து ஓடிருக்கும்) “ம்ம் அப்ப யீ வரம் கேக்க முடியாம போயிருச்சுல” என்றான் சோகமாக.

“ம்ம்” என்றாள் அவளும்.

“சரி நீ சாக்லட்தான கேக்குறேன்னு சொன்ன”

“ஆமாங்க எனக்கு சாக்லெட் ரொம்ப பிடிக்கும்” என்றாள் கண்கள் விரிய. அந்த பாவனை சந்துருக்கு மிகவும் பிடித்திருந்தது.”ம்ம் இந்தாங்க மேடம்” என அவளுக்காக வைத்திருந்த ஒரு சாக்லட்டை கொடுக்க அவள் ஆர்வமாக வாங்கி சாப்பிட அந்த அழகை

ரசித்தான். அப்படியே "ம்ம் நம்ம வீட்டுல சாக்லட் மலையே இருக்கு" என்றான்

"ஆனா அம்மா நிறைய திங்க விடமாட்டாங்க" சோகமாக

"அத நான் பாத்துகிறேன்"

"ம்ம்"

"நான் தரனுமுனா ஒரு கன்டிஸன்பா! இல்லைனா கிடையாது.

"ம்ஹூம் கன்டிஸனா" என சினுங்கினாள்.

"ம்ம் ஆமா ரூல்னா ரூல்தான்"

"சொல்லுங்க"

"முதல்ல இப்புடி கூப்பிடுறத நிறுத்து" என அவன் கூற ஒரு குழப்ப பார்வை வீசினாள். "சரி அம்மா இல்லாதப்பயாவது சந்துருன்னு கூப்பிடு"

“சரி சந்துரு”

“ம்ம் குட், இப்ப நீ எனகூட டான்ஸ் ஆடனும் அதுதான் கன்டிஸ்ன்”

“ஐயோ முடியாதுங்க”

“அப்ப சாக்லட் இல்ல”

“வேணுமே” என்று கூறிவிட்டு “சரிங்க” என்று எழுந்தாள். சந்துரு தன் மொபைலில் இசையை ஒலிக்க ஆட துவங்கினர். சிறிதுநேரம் ஆட இருவரும் மூச்சுவாங்கினர். ஒருவரது சுவாசம் ஒருவரை தீண்டியது. மூச்சினுள் கலப்பது என்றாள் இதுதானா என அரிசி நினைத்தாள். அவளுக்கு முத்தம் தர எண்ணியது மனது அவளுது கன்னங்களை தன் கைக்குள் அடக்கினான். அவள் கண்களை மூடி அனுமதித்தாள்.

“அரிசி நீச்சல் கத்துகலாமா” என்றான் மெதுவாக.

“ம்ம்” என்ற குரல் இருக்க அவள் இதழருகில் சென்றான். அவனது அனைப்பில் அடங்கிபோனவள் எதிர்பார்த்து காத்திருந்தாள். அவளது உதட்டில் ஒட்டியிருந்த சாக்லெட் கறை அவனை அழைத்தது. இவ்வளவு அருகில் ஒரு ஆனின் மூச்சுகாற்றை அவள் உணர்ந்தது இல்லை.

அவள் உதட்டில் அவனது ஸ்பரிசம் பட்டது. அவனுது மற்ற விரல்கள் கன்னத்தை தாங்கியிருக்க கட்டைவிரல்கள் அந்த சாக்லெட்டை துடைத்துவிட்டன. அவளுக்கு ஏமாற்றம். ஆனாலும் அவன் தன் கன்னத்தை பிடித்திருந்த விதம் அவளுக்கு ஏதோ செய்தது. சட்டெ "ஐயோ பல்லி" என்ற சத்தம் வர கதவை திறந்துகொண்டு சுவேதா உள்ளே வந்து விழுந்தாள்.

அன்பு ஓடிபோய் கட்டிலில் அமர்ந்துகொண்டாள். "நீங்க டான்ஸ் ஆடுனத நான் பாக்கலைப்பா! இந்த கேமராமட்டும் பாத்துடுச்சு" என தன் கைபேசியை காட்ட அரிசியின் முகம் மாறியது. சந்துரு "சுவேதா குடத்துடு யார்கிட்டயும் காட்டாத"

"வெட்டியா இருந்தவனுக்கு விஞ்ஞானி வேலை கிடைச்சமாதிரி சும்மா வந்தவளுக்கு இது கிடைச்சுருக்கு விடுவேனா நானு" என்று எடுத்து ஓடு எதிரில் வந்த சுகு மேல் இடித்துவிட்டாள்.

பின் அவனை முறைத்துகொண்டே சென்றாள். அதை பார்த்த சந்துரு."ஆமா உங்களுக்கள்ள எதுவும் பிரட்சனையா"

"அபபுடில்லாம் எதுவுமில்ல மச்சி"

"டேய் உண்மைய சொல்லுடா"

“ஆமாடா அந்த ஜான்சி வந்திருந்தாள்ள அவளுக்கு பயந்துதான் நான் சுவேதாவ ரூம்குள்ள வச்சு பூட்டிட்டேன் உன் கல்யானத்த பாக்கமுடியலைனு கோபமா இருக்காட”

சந்துரு மௌனமாக நின்றான்.

“சரி விடுடா நான்தான தப்பு பன்னிருக்கேன் நான் தண்டனை அனுபவிச்சுகிறேன்” என உள்ளே நுழைந்தான்.

“சுவேதா அப்புடிதான்டா யார்கிட்ட கோவபடுறாளோ அவங்க மேலதான் அன்பா இருப்பா”

“அதுக்கு இல்லடா நான் கஷ்டபட்டு அவள ஆபரேஷனுக்கு சம்மதிக்க வச்சுருக்கேன் இப்ப கன்டிப்பா எனகூட”

“வருவா! அது என் பொறுப்புடா” என சந்துரு சென்றான். இவர்களின் உரையாடலை பார்த்த அரிசி. “ஏங்க அன்னிக்கு என்ன பிரட்சனை”

“அவ வெளியதான் சிரிச்சுகிட்டிருக்கா அன்பு மனசுஃபுல்லா ரனம்”

“அது எனக்கு தெரியும்ங்க”

“ம்ம் அத மறைக்க தப்பான வழிகாட்டுதலால அவ டிரக்ஸ்க்கு அடிமையாகிட்டா! இப்ப அந்த டிரக்ஸ் அவ உசுர கேக்கது. மாத்திரைபோடாம அவளால ஒருவாரம் கூட இருக்கமுடியாது. மாத்திரை போட்டாலும் சில வருசம்தான் இருப்பா”

“அவங்கள குணபடுத்த முடியாதாங்க” என சோகமாக கூறினாள்.

“ம்ம் அவளுக்கு ஆபரேஷன் பன்னி கவுன்சிலிங்க குடுக்கனும்னு என்பிரன்டி சொன்னான்!. 100% அவள மீட்டுடலாம். ஆனா அவ ஒத்துக்கமாட்டேங்குறா”

அரிசி சிறிது யோசித்துவிட்டு “ம்ம் நான் பாத்துகிறேன்” என்றதும் சந்துருக்கு மனதில் ஒரு மகிழ்ச்சி பிறந்தது. இப்படியே இவர்கள் பேசிகொண்டிருக்க. இரவு சாப்பிட அமர்ந்தனர்.

“மாப்ள நாளைக்கு மறுவீடு போயிடலாம் நாள் நல்லா இருக்கு” என்று போஸ்கூற.

“என்ன மாமா?” என்ற சந்துருக்கு சாதம் போட்டுகொண்டிருந்தாள் அன்பு.

“பொண்ணுபுகுந்த வீட்டுக்கு போகுற நாள்ப்பா”

போஸுக்கு சந்துருவின் பதில் எப்பொழுதும் “சரிங்க மாமா”

“ம்ம் நாளைக்கு காலைல பத்துமணிக்கு நேரம் நல்லா இருக்குமாப்ள” என சாப்பிட துவங்கினார்.

அந்தகட்டிலில் சோகமாக எதையோ யோசித்துகொண்டு அமரந்திருந்தாள் அரிசி. “என்னங்க மேடம் யோசனை” என அவளது தலையனையை எடுத்தான்.

“இத ஏன் எடுக்குறீங்க”

“நான் நேத்தே சொன்னேன்ல”

“ஆமா நைட்டு என்ன தூங்கவிடாம பன்னிட்டு இப்ப நல்ல புள்ளமாதிரி நடிக்குறீங்க”

“நான் என்னம்மா பன்னேன்”

“டெடிபியர்னு நினைச்சு என்னதான் கட்டிபுடிச்சிருந்தீங்க உடம்பெல்லாம் வலிக்குது”

“ஓஒ அதான் என்னடா டெடிபியர் அசையுதுன்னு பாத்தேன்” என தலையில் கைவைத்தான். “இருந்தாலும் அந்த டெடி ரொம்ப பாவம்ங்க”

“சாரி அரிசி தூங்க்கதுல” என்று அவன் கூற அவளுக்கு சிரிப்பு வந்தது.”சரி நான் தலைகானிய எடுத்துக்கவா இல்ல அந்த இடத்துல நீ வந்து படுத்துகுவியா? நான் தூங்குனதுக்கு அப்புறமா”

“நம்மலால முடியாதுப்பா” என எழுந்து அந்த மேஜையில் அம்ரந்துகொண்டாள். கூடவே ஜெனியின் டைரியும் துனைக்கு சென்றது.

“இன்னைக்கும் டைரிதானா?”

“இப்ப தூங்கலைனா அந்த டெடிபியர் தலைகானிய பிடுங்கி வச்சுகுவேன் பாத்துகோங்க”

“ஆமா எப்படி இருந்தாலும் நைட் அத தூக்கிபோட்டுட்டு நீ வந்து படுத்துக்குவ இதுக்கு எதுக்கு வெட்டி பில்டப்பு”

“யாரு நானாவ வந்தேன் புக்கு படிச்சவள கீழ தள்ளி விட்டடட்டு” என்று இழுத்தாள்.

"நானா?"

"இல்ல ஒலபட்டாசுனு ஒரு ஆளு"

"அது யாருப்பா ஒலபட்டாசு"

"இப்ப நீங்க தூங்குறீங்களா இல்லையா"

"உத்தரவு டீச்சரம்மா" என திரும்பி படுத்தவனை பார்த்து வெட்கத்துடன் சிரித்தாள். ஆனால் அந்த டைரியை அவள் எடுத்திருக்க கூடாது அது அவள் சிரிப்புக்கு உலை வைக்கும் என அவளுக்கு தெரியாது.

திருப்பி படிக்க ஆரம்பித்தாள்.

நான் என்ன பன்றதுன்னு தெரியலைப்பா எனக்கு மனசு சரியில்ல.ஆமா அது எனகிட்ட இல்லைனுதான் சொல்லனும். ஆமா இந்த ஆசிக் எனகிட்ட வந்து புரபோஸ் பன்னுவான்னு நான் எதிர்பாக்கலைப்பா. என தன் நிலைக்குள் புகுந்தாள்.

"ஜெனி ஒரு நிமிடம் நில்லுங்க" இது ஆசிக்கின் குரல். ஜெனிக்கும் அவன்மீது ஒரு ஈர்ப்பு இருந்தது.

“என்னங்க” அனைவரையும் பேர் சொல்லிகூப்பிட்டுவிடுவாள் இல்லை என்றால் அண்ணா என்று அழைத்துவிடுவாள். ஆனால் இவனிடம் முடியவில்லை.

“இல்ல நான் உங்க்கிட்ட ஒன்னு கேக்கனும் தப்பா நினைக்க மாட்டீஙங்கள்ள”

“ம்ம் சொல்லுங்க” என அவன் முகத்தை பார்த்தாள் அந்த சைக்கிளை பிடித்துகொண்டு.

“அத எப்புடி சொல்றதுன்னு தெரியல” என தன் காலை பார்த்துகொண்டே கூறினான்.

ஜெனிக்கு புரிந்துவிட்டது. “என்ன வீட்டுல தேடுவாங்க நான் போகட்டுமா” என்றாள் மெல்லிய குரலில் இதுதான் இவள் பிறந்ததிலிருந்து மெதுவாக பேசிய தருனம்.

“என்ன ஒரு போட்டோ எடுத்தீங்கள்ள அத பிரின்ட் பன்னி தர்ரீங்களா” என்றான்.

“நான் எப்ப எடுத்தேன்”

“இல்ல நான் பாத்தேங்க அந்த நாய் குட்டிகூட விளையாடிட்டு இருக்கும்போது”

“அய்யோ உங்கள எடுக்கலைங்க அந்த நாய் குட்டியதான் எடுத்தேன்”

“ம்ம் சரிங்க நான் வாரேன்” என கிளம்ப ஜெனி சைக்கிளை எடுத்துகொண்டு கிளம்பினாள்.

அவளது நினைவுகள் வாட்ட துவங்கின. ‘இங்கபாருடி அந்த ஓடுகாலிமாதிரி நீயும்ஓடிபோயிடலாம்னு நினைக்காத. அப்பா நான் அப்புடில்லாம் பன்ன மாட்டேன்பா. ம்ம் அவளாவது நம்ம மதத்துல பாத்து ஓடிபோயிட்டா நீ பன்ற கூத்துக்கு வேற மததுல கூட்டி வந்த உன்ன கழுத்த அறுத்து போட்டுருவேன். அப்புடிலாம் பன்ன மாட்டேன்பா நான் உங்க பொண்ணு’

என அலைகள் ஓட வயசு எனபது அந்த எண்ணங்களின் செறிவை குறைத்தது. ‘என்னமா நீ ஊருல உள்ள லவ்கெல்லாம் அட்வைஸ் பன்ற உன் லவ்வ சொல்ல இப்புடி பயப்படுற. ‘

“எனக்கு பயமெல்லாம் இல்லை” என தன் மனதிடம் கூறுவதாக நினைத்து சைக்கிளை மிதித்துகொண்டே கூறினாள். ‘அப்ப நாளைக்கு சொல்லு பாக்கலாம்’

“ம்ம் சொல்றேன்” என வீட்டை அடைந்தவள் தன்கென்று தனி அறை ஒதுக்கிஇருந்தாள். அங்கு சென்று அந்த ஃபிலிம்மை எடுத்தாள். சிறிது நேரத்தில் அதில் ஆசக்கின் தோற்றம் அந்த அழகிய நாய் குட்டியுடன் முத்தம் கொடுக்கும் புகைபடம் இருந்தது. அதை எடுத்து தன் ஆல்பத்துக்குள் வைத்துகொண்டாள் பத்திரமாக. ஜெனியின் பரினாம வளர்ச்சி எனும் ஆல்பத்தில் அவள் வருங்கால கனவரான ஆசிக்கின் புகைபடம் இடம் பிடத்தது.

“அடிபாவி இதுக்குதான் நீ அன்னைக்கு அந்த ஆல்பத்த என்ன பாக்க விடலையா கள்ளி” என அன்பரிசி கூறிவிட்டு

“சரி லவ் சொன்னியா இல்லியாடி” என மீண்டும் படிக்க ஆரம்பித்தாள்.

## அத்தியாயம் - 57

‘ம்ம் அவன் ஆசையா கேட்ட போட்டோவ எடுத்து அவன்கிட்ட குடுத்து புரபோஸ் பன்னிடவேண்டியதுதான்.’ என நினைத்துகொண்டு எடுத்து வைத்தாள். சைக்கிளும் உருன்டது அவளது இதயதுடிப்புபோலவே அந்த மரத்தின் நிழலில் தன் தோழர்களுடன் நின்றுகொண்டு ஜெனியை பார்த்தால்தான் ஆசிக்குக்கு அன்றைய நாள் விடியும். இவளும் ஓரக்கண்ணால் சைட்

அடிக்க தவறியதில்லை. ஆனால் அவன் நேற்று அப்படி கேட்டடிருக்ககூடாது. இன்று அவளது நிம்மதி சிறிது சிதறிதான் போனது.

சுவையான சம்பவமாக தன் தோழியிடம் மாட்டிகொண்டது கன்டிப்பாக நினைவைவிட்டு அகாலாது.

"இந்தாடி சாக்லெட்" என மேஜையில் அமர்ந்திருந்த அன்பயசியின் முன் வைத்தாள் ஜெனி. அன்று ஆசிக்கின் பிறந்தநாள் அது தெரிந்தவள் ஒரு உணர்ச்சி வேகத்தில் சாக்லெட் வாங்கிவந்து தன்க்கு இருக்கும் ஒரு மனதோழி அன்புதானே அவளிடம் நீட்டினாள். ஆனால் சாக்லெட் பிரியை அன்று ஜெனியிடம் கேள்வி கேட்டது ஏனோ தெரியவில்லை.

"எதுக்குடி சாக்லெட்?" என அன்பரசி கேட்க "அதான் நாம செகன்ட் இயர் வந்துட்டேம்ல அதான்" என சிரித்தாள் ஜெனி.

"

அப்போ ஏண்டி காலேஜ் சேந்தப்போ தரலை?" என வக்கில் வண்டுமுருகனாக மாறினாள் அன்பரசி. "அப்போ தந்திருந்தா இதுல விசம் தடவிருக்கியானு நீ சாப்பிடாமல பேயிருப்ப" என கண்ணடித்தாள்.

"

நீ பேசறத பாத்தா..! ஏய் இதுல விசம் எதுவும் இல்லையே" என சந்தேகமாக பார்த்தாள். "ஆமாடி நீ ஒரு ஆளு உன்னையெல்லாம் கொல்றதுக்கு நான் தீவிரவாதிகிட்ட பேயி சைனைடு வாங்கிட்டு வந்து சாக்லெட்ல தடவி கொடுக்க பேறேன் ஏண்டி காமெடி பன்ற நல்லா கொசு மாதிரி இருக்க அப்புடியே நசுக்கி கொண்ணுட மாட்டேன்" என பேலியாக அன்பரசியின் கழுத்தை பிடிக்க அடுத்ததாக அந்த ஆல்பத்தை காட்டி அன்பை திசை திருப்ப அப்புறம்தான் நிம்மதி அவளுக்கு.

இன்னைக்கு அன்புகிட்டயும் சொல்லஏட வேண்டியதுதான். என முடிவுடன் வர ஜெனிக்கு ஏமாற்றம். ஆம் ஆசிக் அந்த மரநிழலில் இல்லை பதிலாக அந்த மரம் மட்டும் ஜெனியை வெறித்து பார்த்துகொண்டிருந்தது. அவனை கண்கள் தேட சைக்கிளை பூட்டாமல் சென்றாள்.

“அக்கா என்ன ஆச்சு உங்களுக்கு சைக்கிள் சாவி இந்தாங்க” என ஒருவள் தர “தாங்கஸ் பாப்பா அக்கா மறந்துட்டேன்” என்று மீண்டும் அவனுக்காக அந்த மரத்தின் முன் காத்திருந்தாள்.

“டேய் மச்சி போடா சொல்லிரு” எனறு ஒருவன் கூற அவள் சைக்கிள் சிறிது நடுங்கதான் செய்யும்.

“இருங்கடா அவ ஆங்கரிபேடா மாரிட்டானா கஷ்டம்டா அப்புறம் இந்த மாதிரி பாக்ககூட முடியாதுடா” என்று ஒழிந்துகொள்வான் ஆசிக்

“என்னடா இப்புடி இருக்க அவ தைரியத்துக்கு நீ கொஞ்சம்கூட நிக்க மாட்ட போலியே” என்று ஒருவனும்

“கடைசிவரைக்கும் நீ இதயம் முரளிதான் மச்சி” என மற்றொருவனும் கூற “பரவாயில்ல மச்சி நான் அவள பாத்துகிட்டே வாழ்ந்துடுறேன்” எனபான்

“அப்ப வேற எவனாவது கட்டிகிட்டு போயிடாவான் அப்புறமும் பாத்துகிட்டு இருக்க முடியுமா”

“பரவாயில்லடா என் காதல அவள் உணரும் போது அவ வந்து சொல்லுவாடா” என ஆசிக் கூறும் தருனம் அந்த சைக்கிளை நிறுத்திவிட்டு இந்த கூட்டதை கடக்கும்போது ‘ஒரு பொண்ணா எப்புடிடா சொல்லுவா மரமன்டா’ என மனதிலேயே திட்டிவிட்டு நகர்வாள். அவன் ஒழிந்துகொள்வான்.

இன்று அந்த நாள் ஆம் அவன் காதலை ஜெனி புரிந்துகொண்டு அவள் எதிர்பார்த்து காத்திருந்த தருனம். ஆனால் அவன் இல்லை. அந்த மாநாட்டுகூட்டம் இடத்தை மாற்றி இருந்தனர். ஆனாலும் ஜெனியின் கண்ணில் பட்டுவிட்டனர்.

சட்டென சுவற்றுக்கு பின்னாலிருந்து கேட்க துவங்கினாள். அவர்கள் சுவர் மறைவில் நின்று பேச துவங்கினார்.

“டேய் என்ன சொன்னா”

“இல்லடா அவ என்ன போட்டோ எடுகலையாம்டா”

“அதான்டா சொல்றேன் அவள நீலாம் கரெக்ட் பன்னமுடியாது எனகிட்ட விடுடா நான் கரெக்ட் பன்னிகாட்டுறேன்” என்று கூற ஜெனியின் மனதில். ‘என்ன கரெக்ட் பன்னபோறியா அப்ப நான் என்ன பொம்மையாடா ஆளு ஆளுக்கு சூதாட்டம்மாதிரி விலையாடுறீங்க’ என மனதில் நினைக்க “நான் பன்றேன் மச்சி” என கூட்டம் கலைய கோவத்தின் சிகரத்தில் ஏறி அமர்ந்த முதல் பெண் அவளாகதான் இருக்கமுடியும். ஆனால் அவள் அதற்கு அடுத்து அவர்கள் பேசியதை கேட்டிருக்க வாய்ப்பில்லை.

“நீ வேற ஏன்டா அவன வெறுப்பேத்திகிட்டு இருக்க”

“நான் என்னடா பன்னேன் தங்கச்சிய உனக்கு கரெக்ட் பன்றேன்னு சொன்னது தப்பா”

“ஆமாடா இவன் மனசுல நினைச்சுகிட்டு அவ வருவான்னு உட்காந்துகிட்டு இருக்கான் நீ மேல ஏத்திவிடு! அப்புறம் ஜெனி கிட்ட போயி ஆசிக் உன்ன லவ் பன்றான்னு உளறிகிட்டு இருக்காத அவ கொஞ்சம் இல்ல நிறையவே கோவகாரி”

“என்னடா என தங்கச்சிகிட்ட நான் பேசமாட்டேனா! ஈவ்னிங் பாரு அவ உன்கிட்ட வந்து லவ்வ சொல்லுவா” என “டேய் வேனாம்டா” என பலர் தடுத்தும் அவன் கிளம்பி சென்றுவிட்டான்.

தன்னை ஒரு போதை பொருளாக நினைத்த ஆசிக்கின் மீது அவளுக்கு கோபம் வராமல் தன்னிலையை எண்ணி கண்ணீர் வந்தது. “அன்பு எனக்கு தலை வலிக்குது கொஞ்சம் தனிய விடு” என்று தன் தோழியை விரட்டி அடித்துவிட்டு தன் மனதில் ஆசிக்கை அகற்ற முடியாமல் அந்த கேன்டினில் தவித்து கொண்டிருந்தாள்.

அது யார் கெட்டநேரமோ தெரியவில்லை “ஹலோ” என அந்த கரெக்ட் பையன் வந்துநிற்க தன் கேமிராவை எடுத்து கழுத்தில் மாட்டிகொண்டு கிளம்பினாள்.

“ஹலோ நான் உங்க்கிட்டதான் பேசனும்”

“எனகிட்ட என்ன பேசபோற” என்றாள் எரிச்சலுடன்.

“லவ் மேட்டர்தான்”

கதை முடிந்தது. அவள் கொடுத்த அறையில் அந்த பையனது கடவாய் பல் வெளியில் வந்துவிட்டது. அவன் பேயறைந்ததுபோல நின்றான். கண்ணில் தானாக நீர் சுரந்தது.

“இங்க பாரு பேசாம போயிடுங்க எல்லாரும்” என தன் ஆட்காட்டிவிரலை அவனை நோக்கிகாட்டிவிட்டு கிளம்பினாள் வகுப்பறைக்கு.

ஆனால் அப்போதுதான் பிரட்சனை ஆரம்பித்தது. மொத்த கெமிஸ்டரி டிபார்ட்மென்டும் அங்கு அசம்பில். தற்போது அதன் இன்சார்ஜ் ஆசிக்.

“எதுக்குடி இவன அடிச்ச” ஆசிக் கோபத்துடன்

“அத அவன் கிட்டயே கேளு சொல்லுவான்” இது ஜெனி. காதலர்களாக வேண்டியவர்கள் எதிர் எதிரில் நின்றனர்.

“ம்ம் அவன் சொன்னதாலதான் உன்கிட்ட வந்துருக்கேன். நீ சொல்லு”

“இங்க பாருங்க தேவையில்லாம பிரட்சனை பன்னாதீங்க! அப்புறம் எனக்கு கெட்ட கோவம் வரும்”

“இங்க பாருடி உனக்கு இவ்வளவு திமிர் இருக்ககூடாதுடி” என்று கூட்டத்தில் ஒருவன் குரல் கொடுக்க. “ஆமாப்பா சாமிகளா ஒரு பொண்ணு தன்ன காப்பாத்திக்க கோவபடுறதுக்கு போரு திமிருனா

நான் திமிரு பிடிச்சவதான். அப்புடி திமிர் இல்லாமதான் நியூஸ் பேப்பர்ல பொண்ணுங்கமேல அவ்வளவு வக்கிரம்"

"ஓஒ மேடம் அந்த ரகம்! ஏன்டி பொன்னுங்கள சீரளிக்குற பத்துபோருக்கு முன்ன இருக்குற அந்த நூறு நல்லவங்க உங்க கண்ணுக்கு தெரியமாட்டாங்களா" என்றான் ஆசிக்.

"ஆமாங்க நீங்க சொல்லுறமாதிரி ஆளுங்க இருக்காங்க! ஆனா இந்த கூட்டதுல இல்ல" என்று முகத்தை திருப்ப "உன்ன லவ் பன்னேன் பாத்தியாடி என்ன சொல்லனும்! அதுக்கு தூது வந்தவன இப்புடி ரத்தம் வரர அளவுக்கு அடிச்சுருக்க பாத்தியா உன்னலாம் ச்சை" என தன் தலையில் அடித்தவன் "வாங்கடா போகலாம் இந்த பக்கமே வரகூடாது" என அனைவரையும் அழைத்து செல்ல ஜெனிக்கு இதயத்தில் ஊசி குத்துவது போலதான் இருந்தது. 'ஆசிக் என்ன மன்னிசிடுடா' எனபது இதயத்தின் மொழி ஆனால் ஈகோவோ 'இப்புடி பேசுறான் நான்கூட நல்லவன்னு நினைச்சேன் ஆனாதிக்கம் பிடச்சவன்' என ஜெனியின் வாயை அடைத்தது.

"ஆசிக் அண்ணா என்ன இந்த பக்கம்" என்ற அன்பை கடக்கும் போது "உன் பிரன்ட கேளு" என்று நடக்க ' எந்த பிரன்ட சொல்லுறாரு' என அன்பு நடந்தாள்.

அதற்கு அடுத்து வந்த ராஜேஷ் "என்ன மச்சி லேப்ல சோடியம் குளோரைடு தீந்துருச்சா இங்க வந்துருக்கீங்க"

“ஆமாடா அந்த ஜெனிதான் சோத்துல உப்பு போட்டு சாப்புடலையா நீ அப்புடிங்குறமாதிரி கேட்டுட்டா நீயும் அத கேட்டு கடுப்பு ஏத்தாத”

“என்னடா ஆச்சு ஜெனி லவ்வுக்கு ஒத்துகலையா”

“ஒத்துகலைனாலும் பரவாயில்லடா இவனையும் அறைஞ்சிருக்கா திமிரு பிடிச்சவ” என நகர ராஜேஷ் மௌனமாக நகர்ந்தான்.

இதுல என தப்பு என்னப்பா இருக்கு அவன்தான் எனகிட்ட வந்து நேர சொல்லலாம்ல நான் என்ன பன்னுவேன். எந்த பொண்ணா இருந்தாலும் மனசுகுள்ள ஒருத்தன் இருக்கும் போது வேற ஒருத்தன் வந்து வலிஞ்சா கோவம் வருமா வராதா. அதுக்கு அவன் எனக்கு வச்ச பேரு திமிருபிடச்சவ. ம்ம் அவனுக்கு நான் அப்புடியே இருந்துட்டு போறேன்பா. அவனா வந்து எனகிட்ட பேசட்டும் அதுவரைக்கும் அவன நான் பாக்கமாட்டேன். இது சத்தியம்.

என அந்த அர்த்தமற்ற டைரி நீண்டுகொண்டுபோக அதை வாசித்த அரிசிக்கு “அடி பாவி எனகிட்ட அப்பயே சொல்லிருந்தா சேத்து வச்சுருப்பேனடி” என திட்டிகொண்டிருக்க சந்துரு இன்றும் குளிரில் நடுங்க எழுந்து சென்றவள். அவன் தூங்க்கும்போது கழுத்திலிருந்து இப்போது நகர்ந்துசென்று கடைசியாக கனுக்காலை அடைந்தது. அதை பார்த்து விட்டு மீண்டும் எடுத்து போர்த்திவிட அவன் சினுங்கிகொண்டு அந்த தலையனையை இருக்கமாக கட்டி

அனைக்க அன்புக்கு ஏதோ செய்தது. நேற்றைய நியாபகம் அது அந்த அரவனைப்பு இன்றும் அவள் உடலின் ரத்தங்களில் உணர்ந்தாள்.

'ம்ஹூம் அரிசி கட்டுபாடு!! சந்துரு என்ன சொல்லிருக்கான்" என தனக்குள் கூறிகொண்டு மீண்டும் அமர்ந்தாள் அந்த டைரியில முகம் புதைத்து.

இன்னைக்கு அந்த வான்டுபையன் பன்ன சேட்டை முடியலடா சாமி இவன எப்புடிதான் விட்டுட்டு எங்க அப்பா இருக்காரோ தெரியல.

ம்ம் இன்னைக்கு ஒன்னுமே நடக்கலப்பா சொல்லறமாதிரி.

கடைசிய ஒருவாட்டி எங்க அப்பாகிட்ட பேசபோறேன். அப்புறம அந்த வாண்டு பையன நான் வீட்டுல வச்சு கொஞ்ச வேனாமா. பேசாம எங்க அக்ககிட்ட இவன எழுதிகேட்டுடலாம்.

இன்னைக்கு எங்க அக்காகூட சன்டைப்பா! என்னனு கேக்குறீங்களா! அதான் நேத்து சொன்னேனே அந்த சஞ்சிவ அதான் என வாண்டுகுட்டய நான் வளத்துகிறேன்னு கேக்க எங்க மாமா கூட ஒத்துகிட்டாருப்பா! இந்த மேரிக்கு என்ன குசும்பு இருக்கனும். அவள நீயாடி பெத்த அப்புடின்னூ கேக்குறா. அதான் பெரிய சன்டை. ம்ம் முக்கியமான விஷயம் அவன வீட்டுக்கு தூக்கிட்டு வந்துட்டேன். டேய் பேனாவ கடிக்காதடா. அட கரும்மே இதையும் எழுதிட்டேனா. சரி விடுங்க இருக்கட்டும்.

என அந்த இடத்தில் ஜெனி இல்லை என்றாலும் சிரிக்க வைத்தாள். புன்னகையுடன் இதுதான் எனக்கு கிடைச்ச பெரிய கிஃப்ட் என நினைத்துகொண்டு அடுத்த பக்கத்தை திருப்ப சுற்றி இருந்த தேவதைகள் வேனாம் என ஓலமிட்டனர். தேவதைக்கு தேவதேகளின் குரல் கேட்கவில்லை.

இன்னைக்கு ஒரு தப்பு பன்னிட்டேன் அப்பா கொஞ்சம் பனம் கொடுத்து சென்னைல ஒரு சர்ச்க்கு மனிஆர்டர் அனுப்ப சொன்னாரு நான் சின்ன அட்ரஸ்ல மிஷ்டேக் பன்னிட்டேன். கொஞ்சம் பெரிய மிஸ்டேக்தான். ஆனாலும் முள்ளுக்குள் புன்னகை மாதிரி எனக்கு ஒரு பிரன்டு கிடைச்சுட்டாங்க. அட ஆமாம்பா அந்த மனி ஆர்டர் போனது ஒரு ஆசிரமத்துக்கு அங்க இருந்து ஏழில்னு ஒருத்தவங்க ரிட்டன் பன்னிட்டாங்க. ஆனா எங்க அப்பா திட்டுறத்தான் காதால கேக்கமுடியல. சில வார்தை சாம்பிளுக்கு. உங்கள படிக்க வச்சதுக்கு பன்னிமேய்க்க அனுபிருலாம். ஒருலட்டர்கூட அனுப்ப தெரியல. கேட்ட அவங்க ஆத்தா மாதிரி வாயிமட்டும் கிளியுது. கேட்டுகிட்டீங்களா.

இன்னைக்கு நான் பயந்துருக்கேன்பா எங்க ஊர சுத்தி என்ன நடக்குதுன்னு தெரியலப்பா. ஆமா கேளுங்க.

அன்று அந்த புது கடித தோழி எழிலரசிக்கு கடிதம் அனுப்பிவிட்டு காத்திருந்தாள். அதிலும் முகம் பார்க்காத இவர்களின் நட்பு ஆழமாக இருந்தது. (உங்களையும் என்னையும் போல). இப்போதெல்லாம்

யாரிடமும் விளக்கிகூற முடியாத முக்தி போன்ற வித்தியாசமான டாப்பிக்குகள் அனைத்தும் அந்த கடித்தோழியிடம்தான் பேசிகொண்டிருக்கிறாள். அதிலும் கடிதமே கானாத கிராமத்திற்கு பாவம் அந்த தபால்காரர் எப்படியும் நூறு முறை வந்து செல்லும்படி சென்றுவிட்டாள். பதிலுக்கு அவருக்கு என்றும் மோர் வழங்காமல் அனுப்ப மாட்டாள். அது அவள் இயல்பு அந்த மோருக்காவே அந்த தபால்காரர் ஆனந்தமாக வருவதுன்டு. கேட்டால் பாவம்பா வெயில்ல வர்ராஙகப்பா எனபாள்.

அன்புள்ள எழிலுக்கு என கடிதம் துவங்கி. எழில் அக்கா என திரிந்து. இன்று எழில் மேடம் இங்க ஜெனின்னு ஒருத்தி இருக்கேன் என மாறி இருந்தது. இருவருக்கும் ஒருவரை ஒருவர் பார்க்க ஆசை. அதனால் அக்கா அடுத்து முறை எனது புகைபடம் நான் அனுப்புகிறேன். நீங்களும் அனுபுங்க. என வின்னப்பம் விடுத்திருந்தாள்.

ஜெனி பெரிய போட்டோகிராபர் ஆச்சே (அப்புடின்னு நம்பிகிட்டு இருக்கா விட்டுருங்க) அதனால் நல்ல இடம் தேடி அழைந்தாள். தன்னை அழகாக காட்ட வேண்டாமா புது தோழிக்கு. எந்த செல்பியும் அவளிடமில்லை. ஒரு வழியாக அந்த பிலிம் கேமிராவால் உலகிற்கு செல்பி அறிமுகபடுத்தினாள். அப்போது அந்த இடம் நல்லா இருக்கே என அந்த தென்னை தோட்டம் கண்ணில் பட்டது.

“யாரும்மா அது தோப்புகுள்ள” என்ற அன்பின் குரலை கேட்டு திரும்பினாள்.

*“இல்ல பாட்டி போட்டோ எடுத்துக்க வந்தேன்”*

*“ம்ம் பாத்தும்மா கீழ குப்பையாகிடக்கு எதும் பூச்சிவட்டு கிடக்க போகுது”*

*“இல்ல பாட்டி நான் பாத்துகிறேன்”*

*“ஆமா உன் பேரு என்னமா பாக்க அழகா இருக்க”*

*“நான் ஜெனி பாட்டி ஜெனிபர்”*

*“ம்ம் இந்த சிலுவை கும்பிடுவாங்கள்ள அவங்களா?”*

*“ம்ம் ஆமா பாட்டி உங்க பேரு என்ன”*

*“மாரியம்மாமா” என்று அவர் கூறியது மேரி என ஜெனியின் காதில் விழுந்தது.*

*“எனக்கும் மேரின்னு அக்கா இருக்காங்க! நீங்களும் கிருஷ்டினா”*

“அட கழுத நான் மாரியம்மா”

“ஓஓ சாரிபாட்டி”

“நல்லா பேசுறமா என பேத்தியும் இப்புடிதான் நல்லா பேசுவா வாயாடி வர்ரேனு சொன்னா ஆள காணாம்”

“பேத்தியா! அப்புடின்னா குட்டி பாப்பாவா”

“ஹாஹா” என சிரித்தவர் “உன் வயசுமா காலேஜ் படிக்குது ஏதோ எம்முனு ஏதோ படிப்பாம்.

“எம்னு படிப்பா”

“அப்புடிதான்மா சொல்லுச்சு! சரி நீ எடும்மா நான் வாய்கால பாத்துட்டு வந்திடுறேன்” என கிளம்ப.

“நீங்க இங்கதான் தங்கியிருக்கீங்களா பாட்டி”

“இல்லமா முன்ன தங்கியிருந்தேன் இப்ப என் பையன் வீட்டுல இருக்கேன். சாகபோற காலத்துல எங்க இருந்தா என்னமா அதான் பேத்திக்கு ஒரு கல்யானம் பன்னிபாத்துட்டா நிம்மதியா

செத்துடுவேன்” என கிளம்ப அவருக்கு தெரியாமல் ஒரு அந்த பாட்டியின் நிழலை புகைபடம் எடுத்தாள் ஜெனி. அந்த டைரியில் அதை பார்த்த அன்புக்கு தன் பாட்டி என்ற ஆன்ந்தம். (ஏய் ஜெனி எங்க பாட்டிய நீ பாத்துருக்கியா) என்று மகிழ்ந்தாள்.

பின் லொகேஷ்ன் தேடி அழைந்தவளுக்கு ஒரு இடம் சிக்கியது அந்த புதருக்குள் இருந்த நாலைந்து கிளுக்குகள் கிளுக்கினாள். அப்போது ஒரு குரல்.

“மேடம் இந்த பிரிட் இங்க விட்டே ஆகனுமா”

“சொல்றத மூடிகிட்டு செய்றீங்களா”

“இல்லமா இந்த ஊரயே அழிச்சுடும் மேடம்” என்ற வார்தை வந்த திசையில் புதரை கிழித்துகொண்டு பார்த்தாள். அங்கு ஒரு படித்தவன் நின்றிருக்க கூடவே ஒரு பென் நின்றிருந்தாள். அவளது சத்தம் தான் பலமாக இருந்தது.

“மேடம் இது ஃபாரின் ரக பாம்புமா இந்த ஊர சுடுகாடா மாத்திடும் வேனாம்னு தோனுது” என்றான் அந்த இளைஞன் கையிலிருந்த கூண்டில் இருண்டு பாம்புகள் கோரமாக இருந்தன.

“இங்க பாரு இது வேகமா இனபெருக்கம் செய்யும் அப்புறம் சாகுறதுகுள்ள எப்புடியும் பத்து பாலூட்டியவாவது கடிக்காம

விடாது. கடிச்சா அப்பயே மரனம்தான். இப்புடி எல்லாம் எனக்கு தெரியும் அதனாலதான் இங்க அதிக விலைகுடுத்து வாங்கி வந்துருக்கேன்”

“ஆனாலும் “ என அவன் இழுக்க.

“புல்சிட் ******மாதிரி பேசிகிட்டு இருக்க நான் சொல்றத செய்றியா இல்ல சாகுறீயா” என கூற அவன் “சரிங்க மேடம் “ என அந்த பாம்பை திறந்துவிட அவை அங்குகிடந்த தென்னை மட்டைகுளுக்குள் மறைந்தன. இவர்களின் செயலை ஜெனியின் கேமிரா படமெடுத்துகொணடே இருந்தது.

“மேடம் லேன்ட் கம்மி ரேட்ல கிடைக்குறதுக்கு இப்புடி உயிர்கூட விளையாடுறது சரியா”

“இது பிஷினஸ் இன்னும் கொஞ்ச நாள்ள இங்க பெரிய மில்ஸ் வர போகுது. இந்த நாயிங்கள காலி பன்ன சொன்னா விவசாயம் அது இதுன்னு ரூல் பேசுவானுக. ஆனா உயிர்னா பயப்படுவானுக. அதான் இந்த பாம்பு வைத்தியம். அது மட்டுமில்ல என் எதிரி கம்பெனி காவேரி லிமிடட்ல இங்க ஒரு மில் கட்ட பிளான் வச்சிருக்காங்க அங்க இருந்து ஒருத்தன் எனக்கு பார்வேர்ட் பன்னான். அதுக்கு முன்னாடி நாம இங்க கட்டனும்” என கூற அவளது முகத்தை தெளிவாக படமெடுத்தாள் ஜெனி. அந்த புகைபடத்தை பார்த்த அன்புக்கு தலை சுற்றியது. ஆம் இது ஜான்சி கல்யானத்தில் வந்து மிரட்டிய அதே பெண்.

*பின் ஜெனி லாவகமாக எதுவும் தெரியாதவள் போல அங்கிருந்து நடக்க ஜான்சி அவளை பார்க்காமல் இல்லை கூடவே அந்த கேமிராவையும். “அந்த பொண்ண பாத்தீயா! எவ்வளவு அழகா நடிக்குறா” என ஜான்சி சிரித்துகொண்டே “கார்ல ஏறுங்க” என கூறி சென்றதை ஜெனி அறிந்திருக்கமுடியாது. அப்படி அறிந்திருந்தாள் இறந்திருக்க மாட்டாள்.*

*பின் அங்கிருந்த ஒரு பத்திரிக்கை நிறுவனத்திற்கு லட்டர் எழுதியவள் கூடவே அந்த புகைபடங்களை எடுத்து கவரில் போட்டாள். பின் தந்தை அழைக்க வெளியில் செல்ல நம்ம கூலிபடை தலைவன் சஞ்சீவ் அந்த லட்டரை எடுத்து. பிரித்தான். பின் தன் சித்தி வந்த அவசரத்தில் மேஜையின்மீது தன் கடிததோழி எழிலுக்கு எழுதபட்ட கடித்ததுக்குள் போக இரண்டு லட்டர்களின் உட்கருத்தும் மாறியது.*

*பணம் பத்தும் செய்யுமல்லவா ஜான்சியின் பணம் ஜெனியின் முகவரியிலிருந்து புறப்படும் லட்டரகளை கவனித்துகொண்டிருந்தது. அதில் சிக்கியது அந்த இரு லட்டர்களும்.*

*“ம்ம் ஜெனி நீ புத்திசாலிதான்டி! எங்கள குழப்ப இப்புடி பொய்யா லட்டர் எழுதி அட்ரஸ் மாத்தி அனுப்பிருக்க சூப்பர்” என அந்த லட்டர்களை கையில் வைத்துகொண்டு அந்த போஸ்ட் மாஸ்டருக்கு சில கட்டுகளை தள்ளினாள் ஜான்சி.*

கூடவே இலவச இனைப்பாக "இந்த அட்ரஸ்ல இருந்து இதுவரைக்கும் சென்னைல ஒரு ஆசிரமத்துக்கு எழில்ங்குற பேருக்கு நூறு லட்டர் போயிருக்கும்மா" என அந்த போஸ்ட் மாஸ்டர் வழங்கினார்.

"ஏங்க மேடம் அந்த காவேரி கம்பெனி முதலாளி சன்முகம் நம்ம கம்பெனிய நோட்டம் பாக்க இந்த ஜெனிய அனுப்பிருக்கலாம் மேடம்"

"ஆமா நானும் அததான் சஸ்பெக்ட் பன்னுறேன். நல்லா யோசிச்சா. இந்த ஜெனிக்கும் சென்னைல இருக்கற எழிலுக்கு என்ன சம்பந்தம். ஏன் திடிர்னு இத்தன லட்டர் இவங்களுகுள்ள போகனும்"

"மேடம் அந்த சன்முகத்துக்கு ஒரு மகன் இருக்கான் தெரியுமா"

"ம்ம் சந்துரு" என்றாள்.

"அவனுக்கு இங்க ஒரு முறைபொன்னு இருக்கானு கேள்விபட்டேன்"

"அன்பரசி ஐ எம் ரைட்" என்றாள் ஜெனி.

"எப்புடி மேடம்?"

“எதிரிய அழிக்க முதல்ல அவங்கபத்தி தெரிஞ்சுக்கனுப்பா”

“ம்ம் அந்த ஜெனியும் இந்த அன்பும் ஒரே காலேஜ்ல படிக்குறாங்க”

“ம்ம் இதுதான் எனக்கு புரியாம இருந்துச்சு. இப்ப கிளியர்”

“அதோட மேடம்” என அவன் கூறும் முன். “ அந்த காவேரி கம்பெனில இருந்து அந்த ஆசிரமத்துக்கு பன்ட் போகுது கூடவே அந்த சந்துரு அந்த ஆசிரமத்துல எழிலரசிகூட அதிக நேரம் ஸ்பென்ட் பன்னுறான்.கடைசில எல்லாம் ஒரு கோட்டுல வந்துடுச்சு இனி இந்த ஜான்சியோட செக்மேட்தான்.”

“என்ன மேடம் பன்னபோறீங்க”

“அந்த அன்பு கன்னுமுன்னாடியே அந்த ஜெனிய முடிச்சாதான் சந்துருக்கு புத்தி வரும். சோ நாளைக்கு ஒரு லாரி வரவைங்க அப்புறம் நான் சொல்லுறமாதிரி பன்னுங்க கூடவே அந்த எழிலரசிய புலிகள் சரனாலயத்துல வச்சு முடிச்சிடலாம்” என திட்டுதீட்டியது அந்த டைரியில் இல்லை. அது ஜெனிக்கு தெரியாதல்லவா.

‘கர்த்தரே அந்த செய்தி சீக்கிரம் பேப்பர்ல வரனும் பாவம் அந்த மாரியம்மா பாட்டி என்ன பாவம். அந்த ஊர்காரங்கள காப்பாத்துப்பா

நான் அவங்களுக்காக பிரார்தனைப்பன்னுறேன்பா. என குழம்பிகொண்டு சைக்கிளை எடுத்தாள்.

அப்போது ஒருகை ஜெனியின் சைக்கிளை பிடித்தது. “இப்ப உங்களுக்கு என்ன வேனும்” என்றாள் கோபமாக.

“என்ன மன்னிச்சிடு ஜெனி நான் தப்பா புரிஞ்சுகிட்டேன் ராஜேஷ்தான் எனகுக புரியவச்சான்”

“அப்ப என மனச உன்னால புரிஞ்சிக்க முடியல அப்புடிதான” என்றாள் கண்ணீர் வந்திருந்தது.

“இங்க பாருடி நீ இல்லாம என்னால வாழமுடியாதுடி ப்ளீஸ். இத்தன நாள் லவ்வ சொல்லமுடியாம நான் பட்ட கஷ்டம் எனக்குதான்டி தெரியும்”

“அப்ப உன்னயே நினைச்சுகிட்டு மனசுக்குள்ளேயே நான் அழுதுகிட்டு இருந்தது உனக்கு தெரியாதுல்ல” என்று அழுதாள்.

“நான் சொல்றத புரிஞ்சுகோடி”

“நீ என்ன புரிஞ்சுகிட்டியாடா”

“இல்ல என தப்புதான் அதுக்கு என்ன தன்டனை வேனா குடுடி நான் ஏத்துகிறேன்”

ஜெனி எதுவும் கூறாமல் நிற்க “அப்ப நீ எனக்கு தன்டனை குடுக்க மாட்ட நானே குடுத்துகேறேன்” என பிளேடை எடுத்து கையை வெட்ட போனான். அதற்கு அவனை அறைந்தாள்.

“ஏன்டா இப்புடி பன்னுற நீ இல்லாம மட்டும் நான் வாழுவேனா” என அழ அவன் அப்படியே நின்றான்

மொத்த ஈகோவும் தகர்ந்தது காதல் எனும் பூவின் முன். அதன் எச்சங்களாய் தன் கோபத்தை அவன் நெஞ்சின் மீது காட்டிவிட்டு அவனது மார்பில் தன் மென கரங்களால் அடித்ததில் வலித்திருக்கும் என நினைத்திருப்பாள் போலும் உடனே முகம் புதைத்துகொண்டாள். அவன் அவளை அரவனைத்தான்.

“ஜெனி இப்புடியே இருந்துடேன்”

“ம்ம் ஆனா வீட்டுல தேடுவாங்களே”

“அப்ப என்ன கல்யான்ம பன்னிகோ நான் பாத்துகிறேன் எந்த பிரட்சனை வந்தாலும் நீ என்கூட இருந்தா போதும்”

“எனக்கு ஒரு ஆசை இருக்கு” என்றாள் சினுங்கலுடன்.

“ம்ம் சொல்லு பன்னிடலாம்”

“எங்க அக்கா அந்த வான்டு பயல தரமாட்டேங்குறா! நாம அவனமாதிரி ஒன்னு பெத்துகனும் அவன்கூட விளையாடனும்”

“ஒன்னுதானா?”

“ஹேய் நீ கெட்ட பையன்பா” லேசாக சிரித்துகொண்டே.

“ஒன்னு பெத்துக்க நான் எதுக்குப்பா உன்ன கல்யானம் பன்னனும் அதுக்கு நான் கோவமா போறேன்டி என் இதயத்த திரும்ப குடுடி” என ஆசிக் திரும்ப.

அவனது முகத்தினை திருப்பியவள் இதழுடன் இதழ் சேர்த்து முத்தமிட்டாள். அந்த காட்சிக்கு அவளது புகைபட கருவியும் கண்ணை மூடிகொண்டது.

பின் வெட்கபட்டு சிரித்தவள் “ஐ லவ் யூடா” என்றாள்.

*“அடிபாவி நான் பர்ஸ்ட் சொல்லனும்னு இருந்தா நீ முந்திகிட்டியா எல்லா கோட்டையும் அழிங்க நான் முதல் இருந்து சொல்லுறேன்” என உதட்டை தடவினான்.*

*“போட ஒருநாளைக்கு ஒன்னுதான்” என அவள் சைக்கிளை எடுத்துகொண்டு பறந்தாள். அங்கு நடந்துசென்ற அன்பும் ராஜேஷும் கண்ணில் படவே எப்படியும் ராஜேஷ் தன்னை கலாய்க்கும் முன் அவர்களை கலாய்க்க எண்ணினாள்.*

*"ட்ரிங் ட்ரிங் ட்ரிங்" என சைக்கிளின் மணியோசையை எழுப்பிகொண்டு "இந்த லவ்பேர்ட்ஸ் கொஞ்சம் வழிவிட்டு பறந்தீங்கன்னா நல்லா இருக்கும்" என ஜெனி இருவரின் பின்னாடியும் சைக்கிளில் வந்தாள்.*

"

*ஏம்மா உனக்குத்தான் அவ்வளவு இடம் இருக்குள்ள" என ராஜேஷ் சிரிக்க "ஏய் ஜெனி நீதான் அப்போவே கிளம்பிட்டியே ஆனா இப்போ எங்க பின்னாடி வந்துகிட்டு இருக்க" என சந்தேகமாக கேட்டாள் அன்பரசி.அன்பரசி யின் கைகளை பிடித்திருந்த ராஜேஷோ "அவ ஆசிக்கை கொஞ்சிட்டு வந்திருப்பா" என ராஜேஷ் சிரித்தான். "என்ன ஆசிக்கா? யாரு அந்த கெமிஸ்ட்ரி டிபார்ட்மென்டா?" என அன்பரசி கேட்கவே*

"

ஆமா அந்த ஆசிக் முகமது தான் " ராஜேஷ் கூறும் முன் ஜெனி இவர்களை கடந்து ஒரு ஐம்பது அடி சென்றிருப்பாள்.உடனே அன்பரசி "ஏய் ஜெனி நீ கூட லவ்பேர்ட் தானா" என கத்தினாள் மகிழச்சியில். அன்பரசியின் ஓசை ஜெனியின் காதினை அடைய அவள் சைக்கிளை ஓட்டியபடியே தன் தோழியை திரும்பிபார்த்து சிரித்தாள்.

"

ஜெனி........." என அன்பரசியின் தொண்டையிலிருந்து பலத்த குரல்.

ஜான்சி ஜெனியின் தொன்டையை அறுத்துவிட்டு காரில் பறந்தாள். அவள் கழுத்தில் ரத்தம் வழிவதை கண்ணாடி வழியே பார்த்தாள் ஜான்சி. "இன்னும் சாகலையா ஜெனி உனக்கு ஆயிசு கெட்டிதான்" என்ற நேரம் ராஜேஷ் அங்கு ஓட பின்னால் வந்த ஜான்சியின் லாரி ஜெனியை ஏற்றியது. "ம்ம் செத்துட்டா! முடிஞ்ச்சு! அன்பு நீ இப்பவாவது திருந்துடி" என தன் கையை தலைகீழாக காட்டி அன்புக்கு சிக்னல் செய்து காரில் பறந்தாள்.

ஹாய் அன்பு நான் ஜான்சி, ஏன் ஜெனி டைரில நான் வந்திருக்கேனு பாக்குறியா. அவள கொண்ண்து உன் புருசன் சந்துரவ பலிவாங்கதான். ஒரேகல்லுல ரெண்டு மாங்கா மாதிரி நீயும் இப்ப அவன கல்யானம் பன்னி மாட்டிகிட்ட. என் அப்பாவ கொண்ண குடும்பத்த நான் முழுசா அழிக்காம விடமாட்டேன் அன்பு. மன்னிக்கனும் அவன் உன்ன எப்புடி கூப்பிடுவான் அரிசின்னுதான. ம்ம் சீக்கிரம் ஒரு குழந்தைய பெத்துகிட்டு சாக ரெடியா இரு

இல்லைனா அவன் சாவ பாக்க தயாரா இரு டிக்டாக். இப்படிக்கு ஜெனியின் டைரியில் முடிவுரையாக ஜான்சி.

அப்புறம் ஒன்னு மறந்துட்டேன்மா அந்த பாம்பு அதுக்குள்ள கோவபட்டு உங்க பாட்டிய கடிச்சது எனக்கு தெரியாது. சாரி.

அன்புக்கு அழுகை வரவே தன்னவனை பார்த்தாள். அவன் குழந்தையென் உறங்கிகொண்டிருந்தான். அவனை கொல்வேன் என அவள் எழுதியிருந்தது சாதாரன விசயமாக தெரியவில்லை அன்புக்கு. ஜெனியின் கொலையை நேரடியாக பார்த்தவள் அல்லவா. மறுநாள் தன்னவனிடம் “எனக்கு குழந்தை வேனும்ங்க” என அடம்பிடக்கலாம் என மூளை அவளை உந்தியது. ஆனாலும் தற்போது தேவை அவனுது அரவனைப்புதான். மிகவும் பயந்திருந்தவள் அந்த டெடியை பிடுங்கிவிட்டு அந்த இடத்தை நிரப்பினாள். உடல நடுங்கியது பயத்தில்.

‘நான் உங்கள சாகவிடமாட்டேன்’ என மனதில் புலுங்கினாள்.

சட்டென அவனுக்கு முழிப்பு வர “யாரோ நான் உங்க பக்கதுல படுக்கமாட்டேனு சொன்னாங்கப்பா” என்றான் நக்கலாக அரைதூக்கத்தில்.

பதிலுக்கு அவள் அழுவது தெரியவே “அன்பு ஏன் அழற”

*அவள் ஏதும்கூறாமல் திரும்பி படுத்துகொண்டு அழுதாள். அவனுக்கு குழப்பமாக இருக்க தன் கைகளால் அனைத்தான். ஏதும் சொல்ல மனம் வரவில்லை. அப்படியே உறங்கிபோனாள். அவன் அவள் தலையை கோதிவிட்டு உறங்க வைத்தான். பின் யோசித்துகொண்டே அமர்ந்தவனுக்கு அந்த நினைவு வந்தது.*

*"மாப்ள நாளைக்கு மறுவீட்டுக்கு போறதுக்க நாள் நல்லா இருக்க" என தன் மாமா கூறும் போது அன்பரசியின் முகம் ஒருவினாடி வாடியதை பார்க்க தவறவில்லை இவன்.*

*"அடி அரிசி இந்த ஊர என்னலையே பிரிய முடியல! நீ இங்க ஆட்டம் போட்டுகிட்டு சுத்துனவ இந்த ஊருதான் உன்ன பிரிய முடியாம அழனும் ஆனா நீ அழற! பயப்படாதமா நான் பேக்டரியோட சேத்து இங்க வீட்டையும் கட்டிடுறேன அப்புறம் நீதான்மா ராணி எனக்கு" என்று அவளது ஊர்பாசத்தை எண்ணி நெகிழ்ந்தான்.*

*பின் தன்னவள் தூங்கும் அழகை ரசித்தான். அவளது பால் முகத்தை மறைக்குமாறு விழுந்த அந்த கூந்தல்களை எடுத்து விலக்கி அவள் அழகை ரசித்துகொண்டு உறங்காமல் கழித்தான்.*

## அத்தியாயம் - 58

அன்பரசியின் குழந்தை உள்ளத்தை ரசித்துகொண்டே தூக்கதை தொலைத்த சந்துரு காலத்தின் ஓட்டதை உணர்ந்திருக்கவில்லை. அவனுக்கு அது தேவைபடவில்லை எனபதே உண்மை. மணிமுள் ஐந்தை அடைய அன்பரசி விழித்துகொண்டாள்.

“தூங்கு அரசி நாலுமணிதான் ஆகுது” என்று அவன் கூறியதன் அர்த்தம் இந்த வீட்டில் தன் உரிமை அவ்வளவுதான் என அவள் நினைத்து அழுத அந்த நிமிடத்தால்தான்.

“இல்லைங்க நான் எழுந்திருகுற நேரம்தான்” குரலில் சுரத்தை இல்லை. எல்லாம் அந்த டைரி பன்னிய வேலைதான். “இல்லமா தூங்கு நைட் நீ லேட்டாதான தூங்குன” என்று அவனும் விடவில்லை.

“அம்மா திட்டுவாங்க நான் எதாவது அம்மாக்கு வேலை செய்றேன்” என அவள் கூற அதுவரை இல்லாத அம்மா என்ற பாசம் தெரிந்தது. ஒரு பொருள்தன்னை விட்டு போகும் போதுதான் அதை பாசமாக பார்த்துகொள்ள வேண்டும் என்று நினைப்பது மனிதர்களின் இயல்பு போல.

“அத்த எதுவும் சொல்லமாட்டாங்க”

அவள் மௌனமாக இருந்தாள். “அரசி நீ ஏன் டல்லா இருக்க” என்றான் அவள் முகத்தை வைத்து. அவள் எப்பிடி கூறுவாள் அந்த டைரியை பற்றி. அப்படி அவனுக்கு தெரிந்தால் குழந்தைக்கு ஒத்துகொள்ள மாட்டான். “ஒன்னுமில்லைங்க” என்று சமாளித்தாள்.

“நான் ராத்திரில இருந்து பாத்துகிட்டுதான் இருக்கேன் அன்பு ஏதோ பேசிகிட்டு வேற இருந்த ஜெனி ஜெனின்னு யாரு அது” என்றான். உடனே கண்ணீர் வந்தது. எதுவும் கூறமால் அழ சந்துருக்கு நிலைமை உண்ர்ந்து.

“ஒன்னுமில்லம்மா” என அவளை மடியில் சாய்த்துகொண்டான், அவள் அவனிடத்தில் அழுது தீர்த்தாள். அடக்கி வைத்திருந்த சோகங்கள் அனைத்தும் வெளியேற ஒரு வடிகால் அமைத்துகொடுத்தான்.

அந்த நேரம் பார்வதி வர தன்கையை வாயில் வைத்து பார்வதியை அமைதியாக்க அவர் அமைதியாக சென்றார். தன் மகளது அழுகை அவரை ஏதோ செய்ய முதல் பிழையாக டீயில் உப்பின் அளவு கூடியது.

“டேய் இது டீ இல்லடா குடிக்காத” என போஸ் தன் நண்பரை காப்பாற்ற “ஏன்டா” என்றார். அந்த குவளையையும் வாங்கிகொண்ட போஸ் உள்ளே வந்து “என்னமா பிரட்சனை” என்றார்.

“இல்லங்க அன்பு அழறா மாப்பிளகிட்ட”

“என்ன?”

“அவ இப்புடி அழறது எனக்கு என்னமோ மாதிரி இருக்குங்க”

“விடு நான் கேக்குறேன் என்னனு” என்று அமைதியானார்.

சிறிதுநேரம் செல்ல அன்பு எழுந்து கண்ணீரை துடைத்துகொண்டு குளியலறை புக சந்துரு கிச்சனுக்குள் வந்தான். அங்கே விசாரனை ஆரம்பம் சன்முகம் போஸ் பார்வதி முன்னிலையில்.

“மாப்ள எதுவும் பிரட்சனையா அன்பு ஏன் அழுதுச்சு”

“இந்த ஊர்லயே வளந்திட்டாள மாமா அதான் பிரிய மனமில்லாம அழறா நானும் சமாதானபடுத்தி பாத்தேன் ஆனா முடியல சரி அழுதாவாது ரிலாக்ஸா இருக்கும்னு விட்டுடேன். இப்ப கொஞ்சம் பரவாயில்லனு நினைக்குறேன்”

“அதுக்குதான்பா இங்க வீடு கட்ட பிளான் பன்னிருந்தேல அப்புறம் என்னப்பா” இது சன்முகம்.

“அது வந்துப்பா” என சந்துரு இழுத்தநேரம் “இல்லடா எல்லாருக்கம் அப்புடிதான் இருக்கும் இந்தா இவள பாரு உள்ளூர்குள்ளதான் வீடு ஆனா எப்புடி அழுது நாடகம் போட்ட தெரியுமாடா! அதுல இவக ஆத்தாவ பாக்கனுமே முடியலடா” என போஸ் சிரித்துகொண்டே சென்றார் கூடவே நண்பரை அழைத்துகொண்டு.

“சரி அத்த காஃபி அப்புறம் அன்புக்கு பூஸ்ட்” என சந்துரு எடுக்க “மாப்ள அதுல கடல்தண்ணி கலந்துட்டா உங்க அத்த” என போஸ் கூறி கிண்டல் செய்துவிட்டு செல்ல “கொஞ்சநேரம் இருங்க மாப்ள நான் போட்டு எடுத்துட்டு வாரேன்.

“சரி இந்த சுவேதா இன்னுமா தூங்குறா” என சந்துரு கேட்க “அவ எங்க தூங்கனா ஊர சுத்திபாக்கனுமாம் அதனால கன்மாய் பக்கம் போயிருக்கா”

“ஐயோ தனியாவா”

“தனியாதான் போனா ஆனா சுகு தம்பி கூட போயிருக்கு”

“சரி அத்த” என உள்ளே சென்று அந்த டைரியை பார்த்தான். “அப்புடி என்ன எழுதிட்டு இருக்க இதுல” என்று.

பார்வதிக்கு ஏதோ மாதிரி இருந்தது. தனது கல்யான நாளில் மனதில் வந்த அந்த கலக்கம். இனி அம்மாவிடம் சன்டையிட முடியாது. “பொட்ட புள்ள இன்னும் தூங்குற ஏன்டி எழுந்திரிடி” என அம்மாதிட்டிகொண்டே எழுப்ப சோம்பலுடன் எழுந்து அமர கன்டிப்பாக காலையில் ஒரு அடி விழுந்துவிடும். அதிலும் “இந்தாடி உனக்குதான் சீலை இல்லைல இத எடுத்துகோ அப்புறம் உங்க அப்பாரு என்ன திட்டுவாரு” என அந்த பழைய சீலையை கட்டிகொண்டு புதிது மகளுக்கு எடுத்துகொடுக்கும் அந்த பாசம் இனி இல்லை.

“அம்மா மாமா உங்கள கேட்டுச்சு” என உளறி வைக்க “ அவகள எங்கடி பாத்த கல்யானத்துக்கு முன்னாடி பாக்ககூடாதுனு சொல்லிருக்கேன்ல” என அந்த கன்டிப்பு.

உடல்கோளாறு செய்தால் “டீகுடிச்சுட்டு தூங்குடி நீ எந்திரிச்சாலும் எந்த வேலையும் செய்யமாட்ட சும்மா வீட்ட பெருக்கிட்டு உங்க அப்பாகிட்ட என்ன திட்டுவாங்கிகொடுக்குறதுக்கா நீ போயிதூங்குமா” என அந்த கன்டிப்புடன் கூடிய அக்கறை.

அதிலும் “பொண்ணு சாப்பிடட்டும்ங்க நான் திங்காததா” என்று தனக்கு பிடித்த பால்கோவை தன் மகளுக்கு கொடுக்கும் அந்த தாய் பாசம்.

“பார்வதி வா திருவிழாக்கு போகலையாமா” என்று தன் அன்னையின் கட்டை அவிழ்த்துவிடும் அந்த தந்தை பாசம். “அம்மா அக்கா அடிக்குதும்மா” என்று கோர்த்துவிடும் தம்பி.

தம்பிக்காக தின்பண்டங்களை ஒழித்துவைத்து கொடுக்கும் போது “இது என்க்கு பிடிக்காது நீயே தின்னு” என தன் அக்காவுக்கு பிடிக்கும் என விட்டுகொடுக்கும் தம்பி.

பிறந்தவீட்டின் ஒவ்வோரு செங்கலிலும் தன் அன்பை கையெழுத்தாக இட்டு வாழ்ந்த இடத்திலிருந்து ஒரு வாழை மரத்தை அடியோடு பெயர்த்து எடுக்கும்போது அந்த வாழைமரத்தின் மனதுக்குமட்டுமே வலி தெரிகின்றது. அந்த தருனங்களை நினைக்கும்போது பார்வதிகண்ணீருடன் காஃபியை கலக்கினார்.

‘அன்பு சுட்டி பொன்னுதான் அதநாளதான் இந்த ஊருல்ல உள்ள எல்லாருக்கும் அவள பிடிக்குது. வீட்டுகுள்ள அடஞ்சுகிடந்த எனக்கே அப்படி மனசு வலிச்சதுன்னா அன்புக்கு எப்புடி இருக்கும்’ என நினைக்கும்போது பார்வதியால் மனதை நிலைபடுத்த முடியவில்லை. அதிலும் ஊரைவிட்டோ வேறுஇடம் செல்கிறாள் அல்லவா.

“அத்த” என சந்துரு வந்த நேரம் அவர் கண்ணீரை துடைக்க.

“என்ன அத்த ஏன் அழறீங்க”

"மாப்ள அன்ப நல்லா பாத்துகோங்க அவ வாலுதான் ஆனா அப்பாவி. அவ எதுகேட்டாலும் முகம் சுன்டி மட்டும் பேசிடாதீங்க அவ நொறுங்கிபோயிடுவா" என பார்வதி அழ.

"அத்த அவள நல்லா பாத்துகிறது என் பொறுப்பு. அப்புறம் அவ கேட்டு நான் எத இல்லைனு சொல்லபோறேன். அவ கேட்ட நான் எதானாலும் தருவேன் இது சத்தியம்" என தன் அம்மாவை சமாதான்ம் செய்தான்.

பின் அன்பு வர பூஸ்ட் என குடுக்க அவள் கட்டிலில் அம்ர்ந்துகொண்டு சோகமாக இருந்தாள். அந்த பூஸ்டும் ஆறிவிட்டது. பின் சுவேதா "அன்னி இந்தாங்க புளியங்கா நான் கஷ்டபட்டு பறிச்சேன்" என கூறியும் வெற்று புன்னகையுடன் அதை வாங்கிகொள்ள அவள் சந்துருவை பார்க்க "அவ இந்த ஊரவிட்டு பிரியபோறான்னு வருத்தமா இருக்கா"

"ஓஒ சரிடா" என சுவேதா அகன்றாள்.

சிறிது நேரத்திரல் சாப்பாடு காத்திருக்க அனைவரும் அமர அன்பரசி பறிமாற நின்றாள்.

“அன்பு மாப்பிள்ளகூட உட்காரும்மா அம்மா பறிமாறுறேன்” என பார்வதிகூற தன் மகளுக்கு தன் கையால் ஒருமுறை பறிமாற ஆசை அவருக்கு.

சாப்பிடும்போது பேசகூடாது எனபது கார்பொரேட் லாஜிக் அதை உடைக்கும் கூட்டுகுடும்ப சாப்பாட்டுநேரம் அவ்வளவுகலகலப்பாக இருக்கும் ஆனால் இன்று எல்லாரும் அமைதியாக இருந்தனர்.

முதலில் அமைதியை குலைக்கும் சுவேதாவும் தன் அன்னி முகத்தை பார்த்து சோகமாக மாறினாள். பின் சாப்பாடு முடிய சுகுமார் காரை எடுத்துகொண்டுவந்தான்.

அன்பரசிக்கு அந்த அழகிய பட்டுபுடவை கட்டிவிட்டு தன் கழுத்திலிருந்த அந்த பரம்பரை சங்கிலியை தன் அடுத்த தலைமுறைக்கு அணிவித்தாள் பார்வதி.

“நேரம் ஆச்சுமா ஃபிளைட் விடபோறீங்க பாருங்க” என போஸ் கத்திகொண்டிருக்க அனைவருக்கும் மனதிலிருந்த ஓர் சிறிய ஆசை அதுதான்.

மனமக்கள் இருவரும் போஸ் மற்றும் பார்வதியின் காலில் விழ பின் சன்முகத்தின் காலில் விழுந்து ஆசிர்வாதம் வாங்கினர். போஸ் சாமிக்கு சூடம் காட்டிவிட்டு திருநீரை எடுத்து தன் மகளுக்கும் மறுமகனுக்கும் பூசிவிட்டார்.

பார்வதியும் குங்குமத்தை வைத்துவிட்டு “அங்க இருக்குறங்கள அனுசரிச்சு நடந்துகனும்டி. அப்பாக்கு கெட்ட பேர் வராம பாத்துகோ. எதுனா அம்மாவுக்கு ஃபோன் பன்னு. தினமும் ஃபோன் பன்னுடி” என பார்வதி கூறிவிட்டு “மாப்ள பாத்துகோங்க” என சந்துருவிடம் கூறினார்.

“அண்ணா பொண்ணு எதுனா தப்பு பன்னா திட்டாதீங்க எடுத்து சொல்லுங்க கேட்டுகுவா! பத்திரமா பாத்துகோங்க அண்ணா” என சன்முகத்திடம் கூற “காவேரி இருந்தா எப்புடி பாத்துகுவாளோ அப்புடி பாத்துகுறேன்மா அன்பு என் மகமா அவள நான் பாத்துக்க மாட்டேனா?” என சன்முகம் கூற அனைவரும் வண்டியை நோக்கிவர அன்பு அழுதுவிட்டாள்.

“அம்மா போயிட்டு வாரேன்மா” என அவள் கூற அந்த வார்தையை தாங்கும் சக்தி இல்லாமல் பார்வதி அழுதுவிட்டார். “ஏய் பொண்ணு புதுவீட்டுக்கு போகும்போது இப்புடி கண்ணீர் வடிக்குற” என போஸ் திட்ட கண்ணீரை துடைத்தாள். அதற்குள் அன்பு கண்ணீர்வடிக்க சந்துரு துடைத்துவிட்டான்.

“பாத்து ஜாக்கிரதையா போயிட்டு வாம்மா” என பார்வதி கூற ஓடி வந்து தன் தாயை கட்டி பிடித்துகொண்டாள். “அம்மா நீயும் வாம்மா எனகூட” என்றாள் அழுதுகொண்டே

“இல்லமா அப்பாவ பாத்துகனும்ல”

“நான் இங்கயே இருந்துடுறேன்மா” என அழுதாள்.

“இங்க பாரும்மா இது பொண்ணுங்க வாழ்கைல நடக்குறதுதான் நீ ஏத்துகிட்டுதான் ஆகனும் அழாத”

“இல்லமா கொஞ்சநாள் நீயும் அப்பாவும் என்கூட இருங்கம்மா”

பார்வதிக்கு இதயத்தை சுரண்டுவதுபோல இருக்க தன்னவனை பார்த்தார். “பார்வதி நீ வேனும்னா அன்புகூட போயிட்டு கொஞ்சநாள் இருந்துட்டுவா”

“அப்ப நீங்க”

“தோட்டத பாக்கனும்லமா நீ போயிட்டு வா நான் கலப்புகடைல சாப்புட்டுகிறேன் இல்லைனா ராசு சித்தி வீடு இருக்குள்ள அங்க சாப்புட்டுகிறேன்”

“அம்மா வாம்மா”

பார்வதிக்கு ஆசையாக இருந்தாலும் தன்னவன் மிக தனிமையாக இருப்பார் என நினைக்கும்போது மனம் வருந்தியது. ஒருவழியாக

பார்வதியை சந்துரு சம்மதிக்க வைத்துவிட்டான். "அத்த வாங்க அன்பு ஆசை படுதுல"

கார் மிகுந்த சொத்தை எடுத்துகொண்டு புகையை மட்டும் அங்கு பரப்பிவிட்டு செல்ல போஸ் அந்த தின்னையில் சரிந்து அமர்ந்தார்.

தன்னை அறியாமல் கண்ணில் கண்ணீர் வந்தது. "அப்பா போப்பா போன பிறந்தநாளுக்கு நீ ஏன் வரல" என்று அடம் பிடிச்ச அந்த சின்ன அன்பரிசி அவர் மடியில் அமர்ந்திருப்பதாக தோன்றியது. ஊரில் இல்லத வம்பை இழுத்துவிட்டு "நான் ஒன்னும் பன்னலப்பா அவன்தான் என்ன முதல்ல அடிச்சான் அதான் நான் அவன் வாயில குத்திட்டேன்" என பாவம்போல் முகத்தை வைக்கும் மகளுக்கு வக்காலத்துவாங்காத தந்தை இருக்க முடியாது. வயதிற்கு வந்த அன்று தன் மகள்பட்ட அந்த வெட்கமும் பின் அந்த ஓலை சுவருக்குள் அவளை அடைத்துவிட்டு அவளை மூன்று நாட்கள் பார்க்கவிடாம் செய்த அந்த ஊரின் மீது கோபம் அவருக்கு அப்படி வந்தது.

வேலைவிட்டு திரும்பும்போது அப்பா என கழுத்தைகட்டிகொள்ளும் அந்த அட்டை அன்பு வயதுக்கு வந்த பிறகு ஒரு ஆசையில் ஓடிவர தாயின் கண் அசைவில் தனது பெட்டியை மட்டும் வாங்கிகொண்டு அப்பா என அழைத்ததும். கேட்டாள் பெரிய மனுசியாம்.

ஸ்கூட்டர் வாங்கி தாப்பா என அடம்பிடிக்கும்போது அந்த ஸ்கூட்டரிலிருந்த அவள் விழுந்த காட்சி நினைவுக்க வர

“ஸ்கூடர்லாம் இல்ல அப்பாகிட்ட காசு இல்ல இப்ப நீ சைக்கிள காலேஜ் போ” என்று திட்ட செல்லமாக கோபித்த அன்பரசி.

தன் மனதில் வலியை வைத்துகொண்டு தந்தைக்காக சிரித்து வாழ்ந்த அந்த தருனம் என போஸின் நினைவுகள் அவரை வாட்டி எடுக்க கண்ணீர் பூமாதேவியை நனைத்தது.

“சந்துரு அன்கிள் முகத்த பாத்தீயாடா பேசாம அவரையும் கூட்டிகிட்ட வந்திருக்கலாம்டா”

“ஆமா சுவேதா அரிசிய அவரால பிரிய முடியலடா”

“கொஞ்ச நாள்ள திரும்ப இங்க வந்திடனும் நீயும் அன்பும் அந்த கம்பெனிய நடத்துங்க”

“அப்பா பாசம்னா இதுதானாடா” என்று சுவேதா சந்துரு சொன்ன எதையும் காதில் வாங்காமல் கூறினாள்.

“ம்ம் பாசமா வளத்த பொண்ண பிரியும்போது அப்புடிதான் மனசுல ஏதோ பன்னும்.”

“எனக்கு அந்த குடுப்பனைலாம் இல்லடா” என சுவேதாவின் கண்ணில் நீர் வர அந்த கண்ணாடவழியே பார்த்தான்.

“சுவேதா அதான் சன்முகம் அப்பா இருக்காருல உனக்கு” என தன் தந்தையை கூறி தேற்ற முயன்றான். ஆனால் சுவேதா புலம்ப ஆரம்பித்தாள்.

“எங்க அப்பா என்னயும் அம்மாவையும் கொடுமை படுத்துனாலும் வெளிய இருந்து யாரும் எங்கள தொந்தரவு பன்னவிடமாட்டாரு. அவருக்கு நாங்க அவங்களுக்கு மட்டும்தான் சொந்தம்னு ஒரு எண்ணம் அதனாள எங்கள விட்டுகொடுக்க தயாரா இல்லடா! எனக்கு அவருமேல வெறுப்பு இன்னும் இருக்கு ஆனா அவர் கொஞ்சநாளா வீட்டுக்கு வரல. எனக்கு என்னமோ வாழ்கைல குறைஞ்சமாதிரி ஆகிறுச்சு. அவர பாக்கனுபோல இருந்துச்சு. ஆனா அவரு வரவே இல்லடா! அப்புறம் ஒருநாள் அவரு அனுப்புன ஒரு வக்கில் வந்தாரு அதுல எங்க அம்மாவ அபியையும் நந்தினியையும் என்னையும் வாரிசா போட்டு இப்ப இருக்குற அபி மில்ஸ் என்போருல எழுதி இருந்துச்சு. என்ன இருந்தாலும் குடிச்சமட்டும்தான் அவரு அப்புடி மிருகமா மாறிடுறாரு. ஒரே ஒருநாள் நான் ரூம்குள்ள இருந்தப்ப ஒரு டெடி வாங்கி உள்ள தூக்கிபோட்டுட்டு சுவேதா குட்டி இந்தாங்க பிறந்தநாள் கிப்ட் அப்புடின்னாரு. அன்னைக்கு குடிக்கலடா. அப்ப எங்க உண்மையான அப்பாவ பாத்தேன். என்ன இருந்தாலும் எனமேல அவருக்கு பாசம் இருக்கடா. இப்ப எப்புடி இருக்காரு எங்க இருக்காருன்னு தெரியலடா. என்னதான் தப்பானவரா இருந்தாலும் எங்கள நடுத்தெருல விட அவருக்கு மனசு வரல” என பெருமூச்சுவிட்டாள். தன் தந்தைபற்றி தனது அந்த வெள்ளை பக்கதை காட்டினாள்.

அவள் கூறிகொண்டிருக்க விமானநிலையத்தை அடைந்தனர். மஞ்சுவின் தந்தை காரை எடுக்க வந்திருக்க "அப்பா மஞ்சுவுக்கு டுவின்ஸாம்" என்றுகூற "இந்தமுறையாவது கரு தங்கனும்மா அந்த கடவுள்கிட்ட வேன்டிருக்கேன்! அவ ஓடிபோனப்போ நாங்க விட்ட சாபம்தான்மா எங்கள வாட்டுது" என வேதனைபட்டார். அவரை சமாதானம் செய்து விமானத்தில் ஏற சந்துருவின் அருகில் அன்பு அம்ர்ந்துகொண்டாள். சுவேதாவின் பக்கத்தில் சுகு வரவே சுவேதா எழுந்து பார்வதியின் அருகில் அம்ர்ந்துகொண்டாள் சுகுவைமுறைத்துகொண்டே.

அவனும் ஏதும் பேசாமல்செனெறு அம்ர்ந்தான். தன் அண்ணன் திருமனத்தை பாக்கவிடாமல் செய்த தன்டனை அவனுக்கு.

"அன்பு இதுக்குமுன்ன ஃபிளைட்ல போயிருக்கியா"

அவள் தன்னவனை சோகமாக பார்த்தாள்.

சிறிது நேரத்தில் விமானம் பறக்க அன்புக்கு ஏதோ அடிவயிற்றில் ஓர் உணர்வு "தன்னவனின் மார்பில் சாய்ந்துகொண்டு பயத்தை விரட்டினாள் கவைலகலை அல்ல.

## அத்தியாயம் - 59

விமான பறவையின் இறக்கைகள் வலுவிழந்த காரணத்தினால் அது அந்த நவீன நகரத்தில் இளைப்பாற இறங்கியது. மிகவும் பரபரப்பாக இயங்கிகொண்டிருந்த நகரம் அது தமிழ்நாட்டின் தலைமையாக முடிவெடுக்க வேண்டுமல்லவா. மூளையில் நரம்புகளின் வேகத்தைபோல அனைத்து மனிதர்களும் இயங்கிய தருனம் அது. கிராமத்தின் அமைதியால் அடைகாக்கபட்டவள் அன்பரசி. அவளுக்கு இதெல்லாம் புதுமையாய் இருக்க சற்று பயத்தில்தான் இருந்தாள்.

சந்துரு அதை புரிந்தவனாக பருந்துவரும் போது குஞ்சுகளை காப்பாற்ற அடைகாக்கும் கோழி போல அவளை அனைத்துகொண்டு வெளியே வர சிதம்பரம் காத்துகொண்டிருந்தார். “வாங்க தம்பி அம்மா மகாலட்சுமி மாதிரி இருக்காங்க” என அன்பரசியை பார்த்துகூறவிட்டு காரில் ஏறினார்.

“சந்துரு எனக்கு இங்க கொஞ்சம் வேலை இருக்குடா நீங்க போங்க” என சுகுமார் கழன்றுகொள்ள முயற்சிக்க அவனது மனதிலிருந்தது ‘சுவேதா என்னாலதான பேசம மௌனமா வர்ரா நான் இல்லைனா நிம்மதியா இருப்பாள்ள’ என அவர்களிடமிருந்து பிரிந்துகொள்ள ஈடுபட்டான்.

“டேய் வாடா வீட்டுக்கு வந்துட்டு அப்புறம் எங்கவேனாலும் போ” இது சந்துரு

“ஆமா தம்பி வாங்க” என பார்வதி கூற “இல்லம்மா இன்னொரு நாள் கன்டிப்பா வாரேன் நம்ம வீடுதான எப்ப வந்தா என்ன” என சுவேதா எதாவது கூறுவாளா என பார்த்தான். ஆனால் அவள் சுகுவை திரும்பிகூட பார்க்கவில்லை.

“சரிப்பா சிதம்பரம் கார் எடுங்க! சுகு நாளைக்கு வரட்டும் நல்ல நேரத்துல போயிடலாம்” என சன்முகம் கூற கார் நகர்ந்தது. சுகு அந்த காரை பார்த்துகொண்டு நிற்க சுவேதா அவனை திரும்பி பார்த்தாள் ஏக்கத்துடன். அதை சந்துரு கவனிக்காமல் இல்லை.

தேவதையை சுமந்துவரும் தேராக அந்த கார் அந்த பிரம்மான்ட வீட்டினை அடைய பார்வதியின் கண்கள் விரிந்தன. தன்மகள் நன்றாக வாழபோகிறாள் என்ற மகிழ்ச்சி அவருக்கு.

தோட்டகாரர், வாட்ச்மேன் சமையல்காரர்கள் என வீட்டில் தனிகுடும்பம் கூட்டு குடும்பமாக இருபதுபேர் இருந்திருக்க்கூடும். அனைவரும் தங்களது புது முதளாலி அம்மாவை காண ஆர்வமாக நிற்க முனியம்மாள் ஆர்த்தி தட்டை எடுத்து வந்தார்.

“தம்பி நீ குடுத்து வச்சுருக்கப்பா இப்புடி ஒருதங்கத்த பிடிச்சுருக்கபாரு” என அவர் கூற “இல்லக்கா அன்புதான் குடுத்து வச்சுருக்கா சந்துருவ கட்டிகிறதுக்கு” என பார்வதி கூறினார்.

ஆர்த்தி எடுத்து உள்ளே செல்ல பால்கொடுத்து வரவேற்பு நிகழ்ந்தது. "டேய் அன்னா நீயே குடிக்காம அன்னிக்கும் குடுடா" என சுவேதா கூற அன்பின் அந்த சோகமுகத்தை கலைக்கலாம் என சந்துரு நினைத்துவிட்டு "அவங்க பூஸ்ட் மட்டும்தான் குடிப்பாங்க இந்த பால் எல்லாம் பிடிக்காதுன்னு நினைக்குறேன். என்ன அரிசி நான் சொல்றது சரிதான?"

அவள் குழப்பத்துடன் ஒருபாரவை வீச "என்னப்பா பொண்ணு ரொம்ப அமைதியா இருக்காங்க சந்துரு மாதிரி தைரியமா இருக்கவேனாமா" என ஒருவர் கூற "அட ஏங்க அண்ணே நீங்க வேற அவ பன்ற சுட்டிதனத்துக்கு நீங்கலாம் ஈடு கொடுக்கமுடியாது. புது இடம்ல அதான் இப்புடி இருக்காங்க" என்றான் சந்துரு

"ஆமா இவங்க ஊர்லபோய் கேட்டு பாருங்க" என சுவேதா மேலும் தூண்டிவிட்டாள்.

பின் அனைவரும் அன்பை கொஞ்சிவிட்டு தங்களது வேலைகளை பார்க்க செல்ல பார்வதி முனியம்மாளுடன் சேர்ந்துகொண்டு சமைக்க ஆரம்பித்தனர். சுவேதாவோ "அப்பா நான் வீட்டுக்கு போயிட்டு வாரேன் நந்தினி என்ன பன்னுதுனு தெரியல"

"இரும்மா அப்புறம் போகலாம்" என சன்முகம் தடுக்க

"இல்லப்பா நாளைக்கு வாரேன் அப்புறம் நாளைக்கு அன்னிய எங்க வீட்டுக்கு கூட்டிட்டி போயிடுவேன் எனி அப்ஜக்ஸ்ன்?" என்றாள்

“நோ அப்ஜக்ஷன்மா உனக்கு இல்லாத உரிமையா” என கூற “ஸ்வீட் அப்பா” என கூறிவிட்டு கிளம்பினாள்.

சன்முகமோ தன் மனைவியின் புகைபடத்தை பார்த்துகொண்டு “காவேரி நான் உன் ஆசைய நிறைவேத்திடேன்மா நீ நினைச்சமாதிரி அன்பரசிய உனக்கு மருமளா ஆக்கிட்டேன் ஆனா நீதான் அத பாக்க இங்க இல்ல எப்படி இருந்தாலும் நீ பாத்துகிட்டுதான் இருப்ப எனக்கு தெரியும். இனி எனக்கு இங்க வேலை இல்லைனுநினைக்குறேன். அப்பறம் உன்ன பாத்தும் ரொம்ப நாள் ஆச்சும்மா பேசாம என்னயும் உன்கிட்ட கூப்பிட்டுகோமா! நானும் உன்கிட்ட வந்துடுறேன்” என அந்த புகைபட காவேரியிடம் பேசிகொண்டிருக்க அவளிடமிருந்து ஓர் அன்பான பார்வை வீசிகொண்டிருந்தது.

“அம்மா உங்க பேரும்மா” என பார்வதி கேட்க “நான் முனியம்மாமா” என அந்த காய்கறிகளை கழுவிகொண்டே கூற அதை வாங்கினார் பார்வதி. “ஐயோ அம்மா நான் நறுக்கிகிறேன் உங்களுக்கு எதுக்கு சிரமம்”

“இருக்கட்டும்மா” என அதை வாங்கிநறுக்க ஆரம்பிக்க முனியம்மாள் அடுத்த வேலையை துவங்கினார்.

“உங்க பொண்ணு அழகா இருக்காம்மா எங்க சந்துரு தம்பிக்கு ஏத்த ஜோடிம்மா. இன்னொரு விசயம்மா”

“என்ன” எனபதுபோல பார்க்க

“அன்பரசிய தவர யாரையும் சந்துரு கல்யானம் பன்னிருக்க வாய்பே இல்லமா”

“என்னங்க சொல்றீங்க”

“ஆமா அவர் ரூம் சுவத்துல பாருங்க ரெண்டே பேருதான் அவர் உலகம் ஒன்னு என தெய்வம் பார்வதி இன்னோனு உங்க பொண்ணு அன்பரசிமா” என்று அவர்கூற பார்வதிக்கு மனம்முழுதும் நிறைந்துவிட்டது.

“ஆமா அம்மா நீங்க காவேரி அன்னிய பாத்துருக்கீங்களா?”

“அட என்னமா இப்புடி கேட்டுடீங்க; அவங்கதான் எனக்கு தெய்வம் அப்ப சின்ன வயசும்மா புழைக்க இங்க வந்தோம் நானும் என் புருஷனும். அவரு இந்த கட்டிட வேலைக்கு போவாரு அப்ப ஒருநாள் மாடில இருந்து விழுந்துட்டாரு; எனக்கு உலகமே இருன்டுடுச்சுமா”

“ஐயோ என்னங்க சொல்றீங்க”

*“ஆமா கடவுள் நம்மகிட்ட நிறைய விளையாட்டு காட்டுவாறு ஆனா முடிவுல நல்லவழிகாட்டுவாரும்மா; அவர காப்பாத்த என்னபன்றதுன்னு தெரியல நிறைய பணம் செலவு பன்னும்னு சொல்லிடாங்க. நாங்களை புழைக்க வந்த இடத்துல இது என் சக்திக்கு ரொம்ப மீறுனதும்மா அவரு என்னவிட்டு கொஞ்சம் கொஞ்சமா பிரியுரத என்னால பாக்க முடியல அடுத்து என்ன பன்ன பேசாம ஒரு கோயில்ல போய் உட்காந்து அழுதேன். ஏழைவேற என்ன செய்யமுடியும். அப்ப சாமிமாதிரி ஒருபையன் வந்தான்.அம்மா ஏன் அழறீங்க அப்புடின்னு”*

*“மாப்பிளையா?”*

*“ம்ம் ஆமா தாயி அவரேதான். அப்பதான் காவேரி அம்மாவ பாத்தேன் அம்மா இந்த பெரிம்மா அழுதுகிட்டு இருக்காங்க அப்புடின்னு சொன்னதும் அந்த பொண்ணு என பக்கதுல உட்காந்துச்சு”*

*“ஏன் அக்கா அழறீங்க”*

*“அத எப்படிம்மா சொல்லுவேன்” என கண்ணீர் வடிக்க*

*“என்ன உங்க தங்கச்சியா நினைச்சு சொல்லுங்க அக்கா என்னல முடிஞ்சத நான் பன்னுறேன்” என அவள் கூறியதும் அந்த அம்பாளே கேட்பதுபோல இருக்க தன் கவலைகளை அழுது புலம்பினாள்.*

“ம்ம் எந்த ஹாஸ்பிட்டல் சொன்னீங்க” என அவள் கேட்டுதான் தாமதம் முனியம்மாளின் கனவரை குணபடுத்தி அவளிடம் ஒப்படைத்துவிட்டாள். ஆனால் அவருக்கு ஒரு கால் பறிபோனது.

காவேரி அப்படியும் விடவில்லை தன் சிறிய மில் யூனிட்டில் கணக்கு வழக்கு பார்க்க அவரை போட்டாகிவிட்டது. கூடவே

“அக்கா என்க்கு ஒரு உதவி பன்றீங்களா” என காவேரி கேட்க

“என்னம்மா உதவின்னு கேக்குற உத்தரவுன்னு சொல்லு நீ எங்களுக்கு எவ்வளவு உதவி பன்னிருக்க” என முனியம்மாள்கூற

“இல்லக்கா அன்னைக்கு ஒரு சாம்பார் அப்புறம் கிழங்குகூட்டு எடுத்து வந்தீங்கள்ள அதுநீங்க பன்னதா”

“ஆமாமா ஏன் நல்லா இல்லையா”

“இல்லக்கா சூப்பரா இருந்துச்சு”

“அதுக்கு என்னமா”

“இல்ல இதுவரைக்கும் என் ஹஸ்பென்ட்டுக்கு நான் ஒழுங்க சமச்சுபோட்டது இல்ல அவரும் எதுவும் சொல்லாம சாப்பிட்டுடுறாரு; ஆனா எனக்கு ஒரு பொண்டாட்டியா அவருக்கு நல்ல சாப்பாடு போட முடியலைனு வருத்தமா இருக்குமா ப்ளீஸ் எனக்கு கத்து தரரீங்களா” என தயங்கிய அந்த காவேரி கண்ணுக்குள் நிற்க கத்துகொள்வதற்கு யாரிடம் வேனாலும் யாசகம் கேக்கலாம் என்ற அவளது குணமும் பிடித்துபோக அந்த வீட்டில் முனியம்மாள் சமையலுக்க இருக்க கூடவே காவேரிக்கு கோர்ஸ் ஆரம்பித்தது.

“ஆனா என் தங்கச்சி என்கிட்ட முழுசா கத்துகிறதுக்கு முன்னாடியே..!!” என முனியம்மாளின் தொண்டை அடைத்தது. பார்வதி அவரை பார்க்க “அவங்களோட ஆசை ஐயாவுக்கு நல்ல சாப்பாடு போடுறது அதான்மா நான் இங்கயே வேலைக்கு சேந்துட்டேன் நான் சாகுற வரைக்கும் என் இந்த கட்டை இந்த குடும்பத்துக்குதான்மா” என அழுதார். பின் பார்வதி சமாதனம் செய்ய சமையல் வேலைகள் தொடர்ந்தன.

அன்பரசி தன்னவன் அறைக்கு செல்ல அவளுக்கு ஆச்சரியம் எப்படி தன் சிறிய அறைக்குள் அவன் இத்தனைநாள் இருந்தான் என. கூடவே காணாமல் போன அவளது சிறுவயது புகைபடம் சுவற்றில் பெரிதாக மாட்டியிருக்க அவன் காலையில் எழுந்ததும் பார்க்கும் வகையில் அந்த மேஜையின்மீது வைக்கபட்டிருந்த காவேரி மற்றம் அரிசியின் புகைபடத்தை பார்த்து மனதில் மகிழ்ந்தாள்.

அவளை பொறாமைபட வைக்குமாரு ஒரு விஷயமும் அங்கு இருந்தது. அது அந்த கட்டிலில் அமர்ந்திருந்த அந்த டெடிபியர்.
“என்ன அரிசி மேடம் வீடு புடிச்சிருக்கா”

“ம்ம்”

“இங்க என்ன மாற்றம் வேனாலும் நீ பன்னிக்கோ அப்புறம் எதுனா வேனும்னா முனியம்மா அத்தய கூப்பிட்டுகோ” என தன் உடைகளை மாற்ற அவள் திரும்பிகொண்டாள்.

‘ஓஓ சந்துரு மத்த நாள் மாறி பன்னிட்டியேடா’ என தனக்குள் திட்டிகொண்டு உடனே அங்கிருந்த அந்த குளியலறைக்குள் சென்றான். “சே அரிசி இப்புடி பன்னிடியே நீ கொஞ்சநேரம் வெளிய இருந்திருக்கலாமே” என தனக்குள் திட்டிகொண்டாள்.

பின் டீசர்ட் டிராக் அனிந்துவெளியே வந்தான். “அரிசி நீ போய் பிரஸ் ஆகனும்னா ஆகிகோ” என கூற “ம்ம் சரிங்க” என உள்ளே நுழைந்தாள். பின் முகத்தை கழுவிவிட்டு பட்டுபுடவையை மாற்றிவிட்டு சாதாரன உடைக்கு மாறினாள்.

பிறகு அவன் அங்கு கழற்றிய துணிகளை எடுத்து ஊறவைத்தாள். “மேடம் என்ன பன்றீங்க” என சந்துரு குரல் கொடுத்தான். அவளை நீண்ட நேரம் காணாத்தால்.

“ஒன்னுமில்லைங்க”

“இல்லையே டிரஷ் மாத்த இவ்வளவு நேரமா அம்மாவேற கீழ சாப்பிட கூப்பிடுறாங்க” என அவன் கூற “நீங்க சாப்பிடுங்கநான் வாரேன்” என சத்தம் கொடுத்தாள்.

“என்னதான் அரிசி பன்ற நீ”

என அவன்கூற கதவைதிறந்துகொண்டு முகத்திலிருந்த வியர்வையை துடைத்தாள். அங்கு பார்த்தவன். “ஆமா உன்ன யாரு இத பன்ன சொன்னா அதுக்கு ஆள் இருக்காங்க அரிசி” என அவன்கூற “இல்லைங்க சும்மாதான இருக்கேன் அதான்”

“உங்க அம்மாகிட்ட நான் சத்தியம் பன்னிருக்கேன்மா உன்ன கஷ்டபடுத்தமாட்டேன்னு இந்தமாதிரியெல்லாம் பன்னி என்ன கஷ்டபடுத்தாத” என அவன் முகத்தை சோகமாக்கினான்

“இல்லைங்க இதுல என்ன கஷ்டம் இருக்கு” என அவள் கூற “ம்ம்” என அவன் முடித்தான் பேச்சுபோட்டியில் அவளை ஜெயிக்கமுடியாது அல்லவா!

“சரி வா சாப்பிடலாம்” என கையோடு கூட்டிசெல்ல சாப்பாடு முடிந்தது.

பின் அப்படியே அறைக்கு செல்ல அரிசி அசதியாக இருப்பது கண்ணாலையே கண்டான். “என்னமா தூக்கம் வருதா”

“ம்ம்”

சரி தூங்கு” என கூறிவிட்டு அந்த மடிகனினியை எடுத்து அமர்ந்தான். முற்றலும் புதிய இடத்திலும்தன்னவன் அருகில் அமைதியாக துயில்கொண்டாள். நேரம் ஓடியதே தெரியவில்லே அவளுக்கு பின் அவள் எழும் வரை காத்திருந்தான்.

தூக்கம்தான் பொரும்துன்பத்திற்கு மருந்து என அறிந்தவன் அவன். ஆதவன் ஓய்வெடுக்கும் நேரத்தில் எழுந்தாள். “பூஸ்ட் வேனுமா அரிசி” என கேட்க “மணி எவ்வளவுங்க”

“ம்ம் அங்க வாட்ச் இருக்குபாரு”

அது ஏழு என காட்ட”ஐயோ இவ்வளவு நேர்ம் தூங்கிட்டேனா” என தலையில் கைவைத்தாள்.

“அதுக்குதான் நைட் தூங்கனும்னு சொல்றது”

அவனை ஓரகண்ணால் பார்த்தாள். “சரி இந்த டைரிதான உன்ன தூங்கவிடாம பன்னுச்சு” என அதை காட்டினான்.

“இத நீங்க படிச்சீங்களா” என பதறினாள்.

“நீதான சொன்ன இது சஸ்பென்ஸ்னு! எனக்கு நீ வச்சுருக்குற சஸ்பென்ஸ நான் எப்படி இப்ப பாப்பேன் அப்புடி பாத்தா நீ ஏமாந்துற மாட்டியா” என கூற அவனை கட்டிகொண்டாள்

“ம்ம் ஆவுன்னா அன்பு எக்ஸைட் ஆகிடுறாங்கப்பா” என கிண்டல் பன்ன அவன் அந்த டைரியை படித்திருப்பதை அவள் அறியவிலை.

“ஏங்க நான் ஒன்னு கேக்கவா”

“ம்ம் உத்தரவு கொடுங்க மாகாராணி”

“மலரபாத்தீங்களா”

“ஆமா உன் கல்யானத்துல உன்னவிட அதிகமா சந்தோஷமா சுத்துனது அவதான் நீதான் மனசுல எதயாவது நினைச்சுகிட்டு உர்ருனு இருந்த” என கன்னதை கிள்ளினான்.

“அவ குழந்தை..!”

“ஆமா பிரியாகுட்டி அவளுக்கு என்ன”

“இல்ல நம்மலுக்கும் அதுமாதிரி” என அவள் அந்த ஜான்சியை பார்த்து பயந்துகொண்டுகூற சந்துருக்கும் அந்த எண்ணம்தான் அவளிடமிருந்துவிலகி நின்றான்.

“அன்பு நான் உன்கிட்ட ஏற்கனே சொன்னேன்ல எனக்கு ஒருத்திய முழுசா லவ் பன்னனும் அப்பறம் தான் இந்த குழந்தை இதெல்லாம் நம்பிக்கை மனச குழப்பிக்காம போய் சாப்பிட்டு தூஙகு”என அந்த டெடிபியரை கட்டிகொண்டு தூங்கினான். நடித்தான்.

அவனது அருகில் அமர்ந்தவள். என்ன செய்வது என்று தெரியாமல் அவனை பார்த்தாள்.

## அத்தியாயம் - 60

தன்னிடம் கோபித்துகொண்ட சந்துருவை பார்தபடி அவனருகில் உறங்கிபோனாள் அரிசி. அவளை தூங்குவதை பார்த்த சந்துரு “அரிசி அரிசி எழுந்திரிம்மா”

அவள் அசைவில்லாமல் உறங்க “அரிசி சாப்புட்டியா போ முதல்ல சாப்பிட்டுவா எழுந்திரு” என கூற அவள் நன்றாக உறங்கிவிட்டாள். அந்த நேரம் பார்வதி அங்கு வந்து “சப்பிட வாங்க மாப்பிள்ள” என கூற “இல்ல அத்த அன்பு சாப்பிடல” என்றான்.

“ஆமா அவ இப்புடிதான் ராத்திரி சாப்பிடுறதே இல்லை” என புலம்ப “நீங்க போங்க அத்த நான் எழுப்பிட்டு வாரேன்” என்றதும் பார்வதி செல்ல ஒரு வழியாக எழுப்பினான். அரை தூக்கதுடன் எழுந்து செல்ல சாப்பிடவைத்து உறங்கினான் சந்துரு. இப்போதுதான் அவனுக்கு ஒரு நிம்மதி.

காலையில் சீக்கரம் எழுந்தவள் என்ன செய்வது என்று தெரியாமல் அமர்ந்திருக்க தன்னை யாரோ பார்க்கிறார்கள் என கனவில் உணர்ந்தவன் “என்ன அரிசி ராத்திரி அசந்துதூங்கிட்டு இப்ப தூக்கம் வரலையா”

“ம்ம்” என்றாள் சிறிது கோபம் அவள் குரலில் இருப்பதை உணர்ந்தான். “ரொம்ப கோபத்துல இருக்கீங்கபோல ஆங்கிரிபேர்டா” என்றான்

“இல்லங்க” என்ற வார்த்தையிலும் கோபம் தெரிந்தது. “ம்ம் அப்ப கோபம்தான் சரி அரிசி ஏன் கோபமா இருக்காங்கனு தெரிஞ்சுகலாமா” என்று அவள் தோளில் தன் தாடையை வைக்க அவள் எதுவும் பேசவில்லை.

“இப்ப என்ன நம்ம வீட்டுக்க ஒரு குட்டி ஏன்ஜல் வரனும் அவ்வளவுதான” என அவன் கூற அவளின் கண்களில் ஒரு ஒளி. “ம்ம் சரி அப்ப எனக்கு தெரிஞ்ச ஒரு ஆசிரமம் இருக்கு அங்கபோய் ஒரு ஏன்ஜல் கடன் வாங்கிட்டு வந்துடலாம்” என்றதும் அந்த ஒளி வலுவிலந்தது.

“ஏன் அன்பு ஒரு மனைவியா என் ஆசைய நிறைவேத்த மாட்டியா! நான் உன்ன காதலிக்கனும் முழுசா அப்புறம் நீ என்ன புரிஞ்சுகனும் நான் உன்ன முழுசா புரிஞ்சுகனும் நாம சின்ன வயசுல பாத்திருந்தாலும் இப்ப நிறைய மாறிட்டோம் அதான் சொல்லறேன் அதுவுமில்லாம எனக்கும் காதல் பன்னனும்னு ஒரு ஆசை இருக்காதா சொல்லு இல்ல உனக்கு உன்விருப்பம்தான் முக்கியம்னா சொல்லு” என சோகமானான்.

அன்பரிசி இருதலைகொள்ளி எறும்பாக தவித்தாள். “சொல்லு அன்பு என் அரிசியா இருந்தா இப்புடி யோசிக்காம பதில் சொல்லோருப்பா” எனகூற “அது இல்லைங்க நான்” என தயங்கினாள்.

“நாம ஆசைபடுறது என்னைக்கு நடந்துருக்கு சின்ன வயசுல அம்மாகூட இருக்கனும்னு ஆச பட்டேன் அவங்களும் போயிட்டாங்க அத சரிபன்ன அரிசி வந்தா இப்ப அவளும் தன்ன மறச்சுகிட்டு அன்பா வாழுறா நான் ஆசைபடுறதுக்கு தகுதியில்லாதவன்” என கூறிகொண்டு திரும்பினான். அவள் எழுந்துசென்று குளியலறைக்குள் சென்றாள்.

‘அரிசி புரிஞ்சுகோடி உன் உயிர்தான்டி எனக்கு முக்கயம் அதுவுமில்லாம அந்த டைரிய படிச்ச எனக்கே அவ்வளவு பயமா இருக்கு அந்த ஜெனிகூட நீ வாழ்ந்துருக்க உனக்கு எப்புடி இருக்கும்னு என்னால உணரமுடியுதும்மா நான் உன்ன கஷ்டபடுத்துறேன்னு நினைக்காதம்மா இந்த காவேரி லிமிடட்ஸ் நீ நிர்வாகம் பன்ன வேன்டியதும்மா எனக்கு அப்புறம் நீ நடத்து எனக்கு உன் உயிர்தான் என்னைக்கும் முக்கியம்’ என மனதில் புலம்ப.

அவளோ ‘ஏன்டா என்ன புரிஞ்சுக்க மாட்டேங்குற அந்த ஜெனியோட மரணத்த நான் கண்ணால பாத்தவடா அதுமாதிரி உன்ன பறிகுடுக்க நான் தயாராக இல்லடா அதனாலதான் உன்னமாதிரி ஒரு வாரிசையும் என் நினைவுகளையும் உனக்கு தரரமாதிரி ஒரு குழந்தைய உனக்கு குடுத்துட்டு நான் செத்துடுறேன்டா ப்ளீஸ்’ என மனதினுள் புலுங்கிகொண்டிருக்க அந்த குளிர்நீர் அவள் மீதுபட்டது. சிறிது நேரத்தில் குளித்து வெளியே வந்தவளால் சந்துருவை நேராக பார்க்க தைரியமிலாமல் குனிந்துகொண்டு வெளியேறினாள்.

சந்துரு அவள் அப்படி செல்வதை பார்த்துவிட்டு தன்மீது அவள் கோபமாக இருப்பதை உணர்ந்தான். பின் எழுந்து வாசலுக்கு செல்ல “அம்மா குடுங்கம்மா இத நான் பாத்துகிறேன் “ என ஒரு பெண் அன்பிடம் கூறிகொண்டிருக்க அந்த போர் கோலம் போடுவதற்கு என்பது தெரிந்தது. பின் அதில் அன்பு தோல்வி எனவே சமையலறைக்குள் சென்றாள்.

*“நானும் முனியம்மா அத்தயும் பாத்துகிறோம் நீ மாப்பிளைக்கு டீ எடுத்துட்டுபோய் குடு” என அந்த பாத்திரத்தை திணித்தார் பார்வதி.*

*“இந்தாங்க” என அவன் கண்ணை பார்க்கவில்லை அவள். அவனும் சோகமா எடுத்துகொண்டான்.*

*“ம்ம் அன்பு இன்னும் கொஞ்சநாளைக்கு நான் ஆபிஸ்லதான் இருக்குற மாதிரி இருக்கும் அங்க இருக்குற அந்த ரெஸ்ட் ஹவுஸ்ல தங்கிடுவேன் அத்தகிட்ட சொல்லிடு” என அவன்கூற அவள் திடுகிட்டாள்.*

*“என்ன?”*

*“இல்லமா நிறைய ஃபைல் பென்டிங்க இருக்கு அத முடிக்கனும் அதுமில்லாம அந்த ஃபாரின் கன்பெனி ஆர்டர்வேற இழுத்துகிட்டே போகுது அதான் ப்ளீஸ்டா” எனகூற “பரவாயில்ல மாப்பிள்ள கம்பெனிய பாருங்க நான் இருக்கேன்ல பாத்தகிறேன் இவள” என பார்வதியின் வாய் கூறினாலும் மனதில் புதுபொண்ணான தன் மகளை தவிக்கவிட்டு செல்வதை எந்த தாய்தான் விரும்புவாள்.*

*சந்துரு அவரை பார்க்க “ஓ இவ சீனி போடாம எடுத்துட்டு வந்துட்டா அதான் வந்தேன்” என பார்வதிகூற “அத்த தப்பா நினைச்சுகிட்டீங்களா கொஞ்சம் பெரிய ஆர்டர் அதான்” என்றான்.*

“இல்ல மாப்ள கொஞ்சநாள்தான இவளுக்கும் இந்த இடம் பழகனும்ள அப்புறம் சந்தோஷமாதான இருக்கபோறீங்க நீங்க போயிட்டுவாங்க” என்று தைரியம் கொடுத்தார்.

அன்பரிசியிடம் இருந்தால் அவளது கண்ணீரை தாங்கமுடியாமல் தான் அவளை பறிகொடுக்க நேரிடும் என நினைத்து இந்த திட்டத்தை தீட்டினான் சந்துரு. கூடவே தந்தை வந்தாள் மொத்த திட்டமும் கெட்டுவிடும் என நன்றாக தெரிந்ததால் அவர் எழும் முன் கிளம்பி சென்றான். “எதாவது வேனும்னா ஃபோன் பன்னுங்க அத்த” என தன் மனைவியிடம் சைகை மொழியில் கூறிவிட்டு காரை எடுத்து கிளம்பினான்.

“என்னமா சந்துரு எழுந்துட்டானா?” என சன்முகம் வர “மாப்ள காலையிலேயே ஆபிஸ்க்கு போயிருச்சு அன்னா”

“என்னமா சொல்லுற”

“ஏதோ ஃபாரின் ஆர்டராம்ல” என கூற அந்த ஆர்டர் சப்ளை ஒரு ஃபோன்காலில் முடித்துவிடலாமே என நினைத்தார் சன்முகம். பின் மனதில் சந்துரு எதையோ மனதில் வைத்துதான் இப்படி செய்கிறான் என்று விளங்கியது. கூடவே அந்த விஷயத்தை பார்வதியிடம் கூறினாள் சந்துருவை தவறாக நினைத்துவிடுவார் அல்லவா அதனால் “ஆமாமா உங்கள பாக்குற அவசரத்துல அப்புடியே விட்டுட்டு வந்துட்டான் சரி சரி முடிச்சிட்டு சாயந்தரம் வரட்டும்” என்றார்.

“இல்ல அன்னா இன்னும் கொஞ்சநாள் அங்கதான் தங்குவாராம்” என்றதும் ஏன் அவன் இப்படி செய்கிறான் அன்புகூட என்ன பிரட்சனை என மனம் ஓட “ஆமா புதுசா ஆர்டர் தர்ரேன்னு சொன்னாங்க குடுத்துருப்பாங்க அதான் கொஞ்சம் ஒர்க் ஹெவியா இருக்கும் அது பிரட்சனை இல்லமா அவன் புத்திசாலி சீக்கிரம் முடிச்சுட்டு வந்துடுவான் அவன நம்பி பல குடும்பம் இருக்குள்ள” என சன்முகம் கூற பார்வதிக்கு சிறிது நம்பிக்கை வந்தது. இருந்தாலும் இவர்களுக்குள் சண்டை இருப்பது உணர முடிந்தது பார்வதியால்.

“ஹேய் புது மாப்பிள்ள என்ன ஆபிஸ்பக்கம்” என வழக்கமாக கிண்டலுடன் கோபிகிருஷ்ண்ன். இந்தகாவேரி கம்பெனியின் பெரிய ஷேர் ஹோல்டர் அன்ட் சந்துருக்கு கேர் டேக்கர். அவர் வயதில் மூத்தவர் என்பதால் அண்ணா என்று கூப்பிட்டு பழகிவிட்டான்.

“இல்ல அன்னா உங்கள பாக்காம இருக்கமுடியலைல அதான்”

“அதுசரி மத்த நாள்ள என்ன நீ எப்படியும் சாவுடா அப்புடின்னு போயிடுவ இன்னைக்கு பாசம் பொத்துகிட்டு வருது ஏன் பொண்ணு வேலைக்கு போக சொல்லி உதைக்குதா” என்று கண்ண்டித்தார்

“இல்லன்னா அன்பரசிய எங்க அம்மாவுக்கு ரொம்ப பிடிக்கும் அவள நான் எங்க அம்மா ஸ்தானத்துலதான் வச்சுருக்கேன் அதானாலதான் அவ” என சந்துரு இழுக்க

“டேய்!!!!” கோபி பதறினார். “ஐயோ அன்னா இல்ல நான் எங்க அம்மாவபத்தி எதாவது புலம்பிகிட்டு இருந்துடுவேன்னா அவகிட்டு அதுவுமில்லாம அவளுக்கும் கொஞ்சம் இடம் செட் ஆகனும்ல” என சந்துருகூற “அதுக்குன்னு புதுசா கல்யானம் பன்னிட்டு இப்புடி விட்டுட்டு வருவியா நீ முதல்ல கிளம்பு”

“இல்ல அண்ணா அந்த இங்கிலாந்துல இருந்து”

“அது போன வாரம் முடிச்சிடேன்”

“கூடவே அந்த சேக்”

“அது ஓவர்டா”

“அப்பறம்”

“அப்பறம் என்னடா நான் என்ன சொன்னேன் உன்கிட்ட நிம்மதியா எனஜாய் பன்னு எல்லா ஒர்க்கும் நான் பாத்துகிறேன்னு சொன்னேன்ல” என கோபி திட்ட “இல்ல அண்ணா இருக்கட்டும் இனிமே இன்னும் ஒருமாசம் இங்கதான் ஸ்டே”

“என்னது டேய் நான் உன்ன ஒருநாளைக்கே திட்டிகிட்டு இருக்கேன் நீ ஒருமாசம்னு சொல்ற பேசாம கிளம்புடா”

முதல்முறையாக சந்தரு கோபியின் பேச்சை தட்டிசெல்கிறான் தனது அறைக்கு. ‘என்னமாதிரி இருந்தா தெரியும்’ என மனதில் திட்டயவருக்கு இருந்து ஆதங்கம் இன்னும் திருமனம் ஆகவில்லை. ஏதோ செவ்வாய் தோஷமாம். அப்படி கூறிதான் தன் உழைப்பை தன் குடும்பத்திற்கு செலவு செய்தார் தனது இளமையை இன்று இவருக்கு பிடித்த பெண்களுக்கு இவரை பிடிக்காமல்போக முதலிரல் தனது வாழ்வை மட்டும் எண்ணிய தங்கைகளை வெறுதவர் இப்போதெல்லாம் பெண்கள் என்றாளே வெறுப்புதான். இதில் ஆண்கள் உரிமை சங்கம் என ஆளே கூடாத சங்கமும் இவரை உறுப்பினராக ஏற்றுகொண்டதில் ஆச்சரியமில்லை.

“அண்ணே மேட்ரிமோனில உங்க போட்டோ போட்டேன் ஒரு பொண்ணு அப்ரோஜ் பன்னிருக்கு” என்று சந்துரு அவரின் வாழ்கையில் அக்கறை எடுத்து கூறினாலும் “இல்லப்பா எனக்கு பிடிக்கல” என அந்த போட்டோவை பார்க்காமலேயே கூறிவிடுவார். திருமனத்தின்மீதிருந்த அந்த ஆசை முற்றிலும் வெறுத்துவிட்டார். அதனால் அவரது இன்றைய ஒரே காதலி இந்த பிஸினஸ். “நாலுபேருக்கு நல்லது நடக்குதுல” என இந்த வேலையை செய்கிறார்.

“பணம்மட்டும் இருந்தா போதாது சந்துரு, நம்மல நினைக்குறதுக்காவது ஆளுவேணும் அதுதான் மனித வாழ்கைக்கு அர்த்தம் எனக்குதான் அந்த வாழ்கை கிடைக்கல” என மதுவின் வசனத்துடன் கூறும்போது “அதான் நாங்க இருக்கோம்ல” என சந்துருவின் அறிவுரை பயனலிக்காது. ஆனால் அந்த மாமனிதரின்

வார்தைகளை சந்துரு கேட்காமல் விட்டதில்லை. உறவுகளைபற்றிய அறிவுரையும்சரி அலுவல் சார்ந்த அறிவுரையும் சரி கோபி ஒரு தீர்க்கதரிசி. ஆனால் சந்துருவின் மனம் இன்று நிலைகுலைந்தது. அதனால் அவர் வார்தையை மீறிவிட்டான். அரிசியை காப்பாற்ற வேண்டுமல்லவா!.

சந்துருவின் அறையில்தனியாக அமர்ந்திருந்த அன்பை பார்த்தார் தாய் பார்வதி. “ஏன்டி மாப்பிளகூட எதுவும் சண்டையாடி”

“இல்லம்மா அப்புடி எதுவுமில்லம்மா”

“அப்பறம் ஏனடி மாப்பிள்ள முகத்துல ஒரு கலையே இல்லாம இருக்கு”

அன்பு அமைதியாக இருக்க “இப்ப நீ சொலறியா இல்லையாடி நீதான் எதாவது சொல்லிருப்ப”

“இல்லமா நீ சும்மா ஏன் அதையே கேக்குற”

“ஆமாடி அம்மா உன்ன அப்பவே கன்டிச்சு வளக்காமதான் நீ இப்புடி என்ன கேக்க வைக்குற” என பார்வதி ஆதங்கபட தன்தாயிடம் இதை எப்படி கூறுவாள் தன் வேதனையை.

“இல்லம்மா நான் அவரு டிரஸ் தொவச்சேன் அப்ப அவரு இது உன்வேலை இல்லைனு சொன்னாரும்மா நான் இதகூட பன்ன கூடாதா சொல்லு” என தன்தாயிடம கேள்வி கேட்க.

“நான் என்னடி உன்கிட்ட சொன்னேன் மாப்பிள்ள என்ன சொல்றாரோ கேட்டு நடன்னு சொன்னேன்ல” என திட்ட அன்புக்கு மட்டும் தான் தெரியும் தன்னவன் கூறுவதை கேட்டு நடந்தால் அவர் உயிருடன் இருக்கமாட்டார் என.

“என்னப்பா இங்க சத்தம் நான் மேல வந்துட்டேன்” என சுவேதா வந்துநிற்க “வாம்மா” என ஆழைத்தார் பார்வதி.

“என்ன அம்மா நமக்குள்ள ஒரு டீலிங் இருக்குப்பா அத மறந்துட்டீங்க பாத்தீங்களா”

இருவரும் புரியாமல் விழிக்க. “அட இன்னைக்கு அரிசி எங்க வீட்டுக்கு வரனும்னு சொன்னேன்ல”

“அட ஆமாமா கூட்டிட்டு போ அதுதான்குறச்சல் இங்க” என கடைசி வார்தையில் சுரத்தை இறக்கினார் பார்வதி.

“எனிதிங் பிராப்ளம்?” என சுவேதா அரிசியின் காதை கடிக்க “சுரக்கால உப்பு இல்லையாம் அதான் அம்மா திட்டுறாங்க” என அரிசி சுவேதாவின் காதை கடித்தாள்.

“அம்மா இதெல்லாம் ஒரு பிரட்சனையா கல்யானம் ஆன புதுசில எல்லா வீட்டுலையும் நடக்குறதுதான” என சுவேதாஎன்ன பிரட்சனை என்றே தெரியாமல் குத்துமதிப்பாக சமாளித்தாள்.

“என்னமோமா” என பார்வதி சென்றார்.

“என்ன அன்னி அன்னாகூட சண்டையா”

எப்படி கன்டுபிடித்தாள் என்று குழம்பிகொண்டு பார்த்தாள். “ஐயோ அன்னி நம்பீடாதீங்க அவன் நடிக்குறான். சின்ன வயசுல அவன எப்புடி அழவச்சுருக்கீங்க அதனால சும்மா டிராமா பன்றான்” என சமாளித்தாள். கோபியிடமிருந்து சுவேதாவிற்கு “சந்துருக்கும் அன்புக்கும் எதுவும் சன்டையாமா” என குரல் வர “இல்ல சார் இருங்க நான் என்னனுபாக்குறேன்”

“இல்ல அவன் ஆபிஸ்ல உட்காந்துகிட்டு இன்னும் ஒருமாசத்துக்கு இங்கதான் அப்புடின்னு சொல்லுறான்” அதான் என்னனு பாரும்மா நான் சந்துருவ இவ்வளவு டிஸடிர்படா பாத்தது இல்ல” என முடிக்க காரை எடுத்து பறந்துவந்துவிட்டாள். கூடவே தன் அன்னனைபற்றிய சமாதானபேச்சுவார்த்தையும் நிகழ்கிறது.

ஆனால் அன்பரிசியிடம் எந்த மாறுதலும் இல்லை. “சரி நீங்க இங்க அடஞ்சுகிடக்காம வாங்க நம்ம வீட்டுக்கு போகலாம் நந்தினி உங்கள

பாக்குனும்னு சொல்லுச்சு" என கையோடு அழைத்துசென்றுவிட அங்கு நந்தினி அம்மா காத்துகொண்டிருந்தார்.

"இவங்கதான் அந்த அரிசியா" என நந்தினி வரவேற்க "என்ன பாக்கறீங்க சந்துருவ தெரிஞ்ச எல்லாருக்கும் அரிசிய தெரிஞ்சிருக்கும்! குறிப்பு அரிசிய மட்டும்தான் அன்னி அன்பரசிய இல்ல" என கண்ண்டித்தாள்.

பின் ஒவ்வொரு அறையாக காட்டினாள். "இது என் ரூம் அப்புறம் நந்தனி அம்மா அங்க தூங்குவாங்க" என அவள் கூறும்போதே அந்த பூட்டபட்ட ரூமை பார்த்தாள் அன்பரசி.

"அது அபியோட ரூம் அன்னி! நான் அங்கபோயி உட்காந்துகிட்டு அழ ஆரம்பிச்சுடுவேன் அதான் நந்தினி பூட்டி வச்சுருக்கு" என கூறும்போது சுவேதாவின் கண்ணில் நீர் இருந்தது.

"சரிப்பா வந்தா சாக்லெட் தர்ரேன்னு சொன்னீங்க உங்க அன்னாவும் எஸ்கேப் இப்ப நீயும் கண்ணுல காட்ட மாட்டேங்குற" என அரிசி அந்த சோகத்தை கலைத்துவிட்டாள்.

"ம்ம் வாங்க" என பிரிட்ஜ் அருகேகூட்டி சென்று திறந்துகாட்ட அரிசியின் கண்கள் விரிந்தன. "என்னப்பா இது இவ்வளவு" என வியந்தாள்.

“ம்ஹூம் இதுக்கேவா அன்னி சந்துரு உங்களுக்கு விட்டா ஒரு போக்டரியே கட்டி வச்சுடுவான் இருங்க நான் என் அம்மா போட்டோ எடுத்துட்டு வாரேன்” என உள்ளே செல்ல அந்த நேரம் ஃபோன் அடித்தது.

“அன்னி ஃபோன்” என கத்தினாள் அன்பரசி.

“அட்டன்ட் பன்னி கேளுங்க அன்னி” என சுவேதா அந்த பரனிலிருந்த பைல்களை தூசிதட்டிகொண்டிருந்தாள்.

“ஹலோ யாருங்க”

“ம்ம் என்ன எப்புடி நியாபகம் இருக்கும் மேடம் உங்களுக்கு! நீதான் என்கிட்ட நழுவுன மீனாச்சே”

“ஹலோ யாருடா நீ”

“ஹேய் டார்லிங் ஏன் கோபபடுற பூபதிமா”

“பூபதியா!”

“ம்ம் ஆமா அன்னைக்கே உன்ன அனுபவிச்சுருந்தா என்ன மறந்துருக்க மாட்ட! அதான் அந்த பான்டவர்கூட்டம் உன்ன காப்பாத்திடுச்சே! சரி விடு இப்ப அந்த சுகுகூட சண்டையாம் கேள்விபட்டேன். வா ஒருமுறை வச்சுகலாம்”

“ஹே என் ஹஸ்பன்ட்கிட்ட சொன்னா நீ அவ்வளவுதான்டா” என சீறினாள் அரிசி.

“ஹலோ நீ யாருடி”

“மரியாதையா ஃபோன வைடா” என துண்டிக்கபட மீண்டும் ஒலித்தது. அந்த நேரம் சுவேதா “அன்னி இதுதான் என் போட்டோ” என வந்தாள். அந்த கால் அடிக்க “அன்னி எவனோ பூபதின்னு பேசுறான்”

“அந்த நாயா அது அப்புடிதான் குலைச்சுகிட்டு இருக்கும் அன்னி நீங்க ஏன் மனசுல வைக்குறீங்க” என சுவேதா இயல்பாக பேசினாள். அவளது வாழ்கையில் நடந்த சம்பவங்கள் அவளை அவ்வளவு தைரியமாக மாற்றி இருந்தது.

பின் சுகுவின் அழைப்புவரவே நடுங்கினாள் சுவேதா. அந்த பொறுக்கிக்கு மிக சாதாரனமாக ரியாக்ட் செய்தவள் தன் காதலனுக்கு இப்படி நடுங்குகிறாள் என நினைக்கும் போது அரிசிக்கு ஆச்சரியம்.

“ஹலோ அன்னா நான அன்பு” என ஃபோனை எடுத்தாள்.

“நீ எப்புடிம்மா அங்க”

“இல்ல சுவேதா அன்னிதான் கூட்டி வந்தாங்க”

“சுவேதா எங்கமா” என சுகு கேட்க ‘நான் இல்லைனு சொல்லு என்பதுபோல சைகை செய்தாள். “அன்னா அவங்க இங்க இல்லனா நான் மட்டும் தான் ஆல்பம் பாத்துகிட்டு இருக்கேன் எதுனா சொல்லனுமா”

“இல்லமா ஒன்னுமில்ல சும்மாதான் ஃபோன் பன்னேன்” என வைத்தான் சுகு.

“ஆமா உங்களுக்கும் அண்ணாவுக்கும் என்ன பிரட்சனை?” என இருவரும் ஒருவரை ஒருவர் பார்த்து ஒரே மாதிரி கேட்டனர்.

## அத்தியாயம் - 61

ஆமா உங்களுக்கும் அன்னாவுக்கும் என்ன பிரட்சனை என இருவரும் கேட்க ஒருவரை ஒருவர் பார்த்து சிரித்தனர்.

“இல்லையே அப்புடி எதுவுமில்லையே” என மீண்டும் கோரஸ்பாட இந்த கேள்விகள் இரண்டுபேருக்கும் செதுக்கியெடுக்கபட்டவை “அப்புறம் ஏன் அண்ணா அப்புடி பன்றாரு” என மீண்டும் கேட்க இந்த முறை அன்பு மௌனமானாள்.

“சொல்லுங்க அன்னி என்ன பிராப்ளம்” சுவேதா விடுவதாக இல்லை.அதனால் அன்பு சோகமானாள். “என்ன அண்ணி நான் எதாவது தப்பா கேட்டுடேனா” என்றாள் மீண்டும்.

“இல்ல அன்னி அவுகளுக்கு வேலை இருக்கு அதான்” என இழுத்தாள். “அவனக்கு எந்த வேலையும் இல்ல அங்க கோபி சொன்னாங்க” என சுவேதா வாய் தவறி உளறிவிட அன்பரசிக்கு என்ன சொல்வது என்று தெரியாமல் விழிக்க ‘இந்த கேள்வியை கேட்டிருக்ககூடாதோ’ என சுவேதா வருந்தினாள்.

“இல்ல அன்னி ஊரவிட்டு பிரிஞ்சு வந்துட்டேன்ல அதான் அவருகூட சரியா பேசல அதுக்கு சின்ன சன்டை வேற எதுவுமில்ல அன்னி” என அன்பு சமாளித்தாள் அவள் கண்ணில் பொய் மின்னியது. மனமோ

‘உன்கிட்ட குழந்தை கேட்டதுக்கு என்ன தப்பா நினைச்சுட்டியா சந்துரு நான் உன்ன எவ்வளவு லவ் பன்றேன் தெரியுமா

அதனாலதான் உன்ன சாகவிடகூடாதுன்னு கேட்டேன் நீ என்ன புரிஞ்சுக்கலைல. சரி எனக்குனு இந்த உலகத்துல என்ன இருக்கு. அவனும் போயிட்டான் இப்ப உன்மேல அன்பு வந்துச்சு நீயும் என்ன தப்பா நினைச்சுட்ட எல்லாம் என் விதி' என நினைக்க

"என்னப்பா டீப் திங்கிங்கா இருக்கு! உங்க மனசுகுள்ள இருக்குற திட்டத்த கண்டுபிடிக்குற அளவுக்கு நான் உங்க அளவுக்கு பெரிய செஸ் பிளேயர்லாம் இல்லப்பா நீங்களே சொன்னாதான் உண்டு"

"அட அன்னி நீங்க வேற நான் எதுவும் நினைக்கல"

"அப்புறம் ஏன் இந்த சைலன்ட்"

"இல்ல நீங்க ஏன் சுகு அண்ணாகூட பேசல? எங்க கல்யானத்துல இருந்து பாத்துகிட்டுதான் இருக்கேன் பாவம் அவரு ஏர்போர்ல எல்லாரும் இருந்தும் அனாதை மாதிரி நின்னாரு"

இப்பொழுது சுவேதாவின் முகத்தில் சோகம் உள்ளம் உறுத்த ஆரம்பித்த தருனம் 'ஏன்டா சுகு உங்க வீட்டுல இருக்குறவங்களுக்கு என்ன பிடிக்கல ஆமா நான் டிரக் அடிக்டா இருந்தா யாருக்குதான் பிடிக்கும் சொல்லு. அதுலையும் நான் எந்த ஜாதி பொண்ணுனுவேற தெரியாது இதுல உங்க வீட்டுல ஜாதி பாத்துதான் உங்க கம்பெனில வேலையே தருவாங்க! நீகூட அன்னைக்கு ஒருநாள் தெரியாம ஃபோன் ஆன்பன்னி வச்சுட்டு போகலைனா எனக்கு இந்த விசயம் தெரிஞ்சுருக்காது. உங்க அம்மா உன்ன திட்டுனாங்க "யாருடா அந்த

சிறுக்கி உன்ன வழச்சு போட பாக்குறாளா! இந்த குடும்பத்துக்கு மறுமகளா வர்ரதுக்கு ஒரு மதிப்பு வேனும்" கூடவே உங்க தங்கச்சி "ஆமா அம்மா இவன் ஒயிஃப்னு போட்டு ஒரு நம்பர்ல பேசிகிட்டே இருக்கான்மா" அதுக்கு அப்பறம் உன்ன திட்டுறத என்னால கேக்க முடியலடா அதான் நீ சந்துரு கல்யானத்துல பன்னத சாக்கா வச்சுகிட்டு உன்கூட பேசாம இருக்கேன் என்ன மறந்துட்டு நீ நிம்மதியா வாழுடா! எப்படியும் இந்த டிரக்ஸ் என்ன இரண்டு வருசத்துல கொண்ணுடும் ஏன் என்ன வீனா காப்பாத்த நினைக்குற நீ! காலேஜ்ல நீ என்ன பாத்ததுல இருந்து நீ என்னால கஷ்டத்த மட்டும் தான் அனுபவிச்சிருக்கு அதான் நீ நல்ல இருக்கேன்னு நிம்மதியோட என்ன சாக விடுடா' என தனக்கு ஆசைபடவே தகுதி இல்லை என்ற மனப்பான்மையோட தன்னை காயபடுத்திகொண்டிருந்தாள்.

"என்ன அன்னி என்ன சொல்லிட்டு நீங்க இவ்வளவு நேரம் திங்க் பன்றீங்க மஞ்சுளா எதுவும் செஸ் டிரயினிங் குடுத்தாங்களா" என அன்பரசிகூற இயல்புநிலைக்கு வந்தது.

"ம்ஹூம் இப்ப அதுதான் குறையாக்கும்" என சுவேதா கூற நந்தினி அம்மா வந்து இவர்களுடன் அமர சுவேதா அரிசியின் சாகசம் என அந்த ஊரில் சேகரித்த துணுக்ககளை சேகரித்துதன் தாயிடம் கொட்டிகொண்டிருந்தாள்.சிரிப்பு சத்தங்கள் அரங்கேற அரிசி சைலன்ட் டூத ஃபார்ம்,

பின் வீட்டிற்கு வந்தாள் அன்பு இரவில் தன்னவன் அருகில் இல்லை மிகுந்த ஏமாற்றம் சூழ்ந்தது. அவனது நினைவாக விட்டு சென்ற

அந்த டெடி பியர் இருக்க அதை பார்த்தாள். அது அவன் இல்லாம்ல் இவளை பார்க்க அதை அனைத்துகொண்டாள். தன்னவனின் அனைப்புகிடைக்கும் என்ற ஏக்கம் அவளுக்கு.

“நரக இரவுகளை எனக்களித்த

நாடக மைந்தன் கடமையாக

இருக்க என் தனிமை

அழுகை துக்கம் தோலுரித்து

அன்பு பரப்பி நகையணியவைத்து

அரிசிக்கழகு அரசி பட்டம்

இங்கு என தலைவா

உன் துணை தேடும் கூட்டுபுழு

நீ இல்லமல் விழிஈர இரவுகள்

உந்தன் அனைப்பாய்

இந்த கரடிபதுமை விட்டாய்

துணையென அதற்காறுதல் நான்

எனக்காறுதல் உந்தன் நினைவு

திரும்பி வா என்னவா!”

என இரவுகள் தன்னவன் இல்லாமல நரகமாக கடந்தது. காலையில் எழுதல் தன்னவனின் முகம் பார்த்தல் புகைபடத்தில் அன்னையுடன் சமையலறையில் உளாவுதல். சுவேதா தன் அண்ணன் இல்லாத்தால் தினமும் வந்துவிடுவாள். இல்லையெனாறால் அரிசி தனிமையாக உணர்ந்துவிடுவாள் அல்லவா. அவளுடன் உரையாடுதல் என்று காலம் நகர்ந்தது.

‘சே அன்ப பாக்கம் இருக்க முடியலையே சீக்கரம் அவ முகத்தயாவது காட்டுடா’ என அடிமனதில் ஓர் வலி எடுத்தது சந்துருவுக்கு இந்த ஒரு மாததை கடந்துவிட்டான் அவளை பார்க்கமல் எனபது பெரிய காரியம்தான்.

தன்னவளிடம் மனதை கொடுத்துவிட்டு எந்த மனதை வைத்து வேலை செய்வான் பாவம்.

“என்ன மேடம் பன்னி வச்சுருக்கீங்க சும்மா ரீசன்லாம் சொல்லாதீங்க இன்னொரு முறை தப்பு நடந்துச்சுன்னா வேற கம்பெனி பாருங்க” என அந்த பைலை தூக்கிவீசினான் சந்துரு. எதிரில் நின்றிருந்த பெண்ணிற்கு கண்கள் கலங்கியது. அந்த பைலில் சிதறிய காகிதங்களை சேகரிக்க.

“அதுல எதுவுமே ஒழுங்கா இல்ல நீங்க இத கலெக்ட்பன்னீ டைம் வேஸ்ட் பன்னாம போயி புதுசா ரெடிபன்னிட்டு வாங்க” என்று கூற அவள் கண்ணீரை துடைத்துகொண்டே வெளியேறினாள். அங்கு வந்து கோபியின் கண்ணில் சிக்கியது. கோபிக்கு புரிந்தது “ஓ இதுதான் தனக்கு மனதுக்கு பிடித்தவர்களை விட்டு பிரிந்தாள் வரும் கோபமா” என நினைத்துகொண்டு சந்துரு அறைக்கு வெளியே நின்றான்.

“எக்ஸ் கியூஸ் மி சார்” இது கோபி. சிறிது நக்கலும் கோபமும் கலந்திருந்தது.

“அண்ணா இது என்ன விளையாட்டு”

“அப்பாடா நீ யாருடான்னு கேட்டுடுவியோனு பயந்துட்டேன்”

“என்ன சொல்றீங்க நீங்க” குழப்பமடைந்தான் சந்துரு.

“இல்லப்பா இங்க சந்துருன்னு ஒரு பையன் இருந்தான் அவன நீங்க பாத்தீங்களா”

“கோபி அண்ணா இது என்ன வித்தயாசமாஇருக்கு”

“பின்ன என்னடா நீ! நம்ம அஃபிஸ் மேல அக்கறை இருக்குற ஸ்டாஃப்ல ஸடெல்லாவும் ஒருத்தி நீ கூட ரொம்ப பெருமையா நிறையதடவ சொல்லிருக்க ஆனா இப்ப அந்த பைல் பறந்துச்சு அததான் நான் பாத்தேனே” என முகத்தை திருப்ப.

“அந்த டேட் பாத்தீங்களா என்ன பில் பன்னிருக்கான்னு”

“அட பாவி இது அடுத்த வருசத்துக்கு ஆர்டர் ரினிவல் பன்னிருக்காட அவ அந்த காஃபிதான் இது. இந்த வருசம் ஆர்டர் முடிஞ்சிடுச்சுடா! நான் வெரிஃபை பன்னிட்டுடதான் அனுப்புனேன்டா”

உடனே சந்துரு அந்த சிதறிகிடந்த பேப்பர்களை பார்க்க அதில் இப்போது தவறு இல்லை. அவன் பார்த்துகொண்டிருக்கும்போதே “ம்ம் அவ ஹஸ்பென்ட் இன்னைக்கு பாரின்ல இருந்து வர்ராரு. அவளோட குழந்தைக்கு இப்ப மூனு வயசு கடன அடைக்க போனவரு இப்பதான் திரும்புறாரு. பிரசவத்துக்குகூட கூட இருக்கல.

அதான் சார் லீவு தருவாரான்னு தெரியலைன்னு சொல்லிகிட்டு தயங்கி தயங்கிதான் வந்தா ஆனா நீ!" என கூறிவிட்டு "அதெல்லாம் பாசம் கிடைக்கம அலையுறவங்களுக்குதான தெரியும் அன்புனு பேரோட அன்பா ஒரு ஒயிஃப் கிடைச்சும் இப்புடி உட்காந்துகிட்டு இருக்குற சிலருக்கு எப்புடி புரியும்' என ஜாடையாக பேச அந்த ஏசி அறையில் சந்துருக்கு கேட்காமல் இல்லை.

"என்னமோ பன்னுங்கப்பா! இங்க பாரு சந்துரு வேலைல கவனம் இல்லைனா கொஞ்சம் ரெஸ்ட் எடு இல்லைனா கம்பெனியோட நிலைமை சொல்றமாதிரி இருக்காது" என திட்டிவிட்டு கோபி வேளியே போக சந்துருவின் மனதை அது உறுக்க ஆரம்பித்துவிட்டது.

"அன்பு இல்லாம அலையுறவங்களுக்கு தெரியும். உனக்கு போய் அன்பா ஒரு ஒயிப் கிடைச்சுருக்கா பாரு" என கோபியின் வார்த்தைகள் திரும்ப திரும்ப கேட்டன.

ரிசிவரை எடுத்தான். "ஸ்டெல்லா கொஞ்சம் கேபினுக்கு வாங்க"

"இன்னும் பேப்பர் முடிக்கல சார் ஒரு 5min முடிச்சுடுவேன் சார்" என அவள் கூற ஒருநாள் வேலையை இவளால் எப்படி அரைமணிநேரத்தில் முடிக்க முடிகிறது என்ற ஆச்சரியம் அவனுக்கு,

"இல்ல நீங்க வாங்க"

அவள் வந்ததும் "இந்த பைலே கரெக்டாதான் இருக்க மேடம்" என அதை எடுத்து டேபிளில் வைத்தான். "ஓகே சார் அப்ப நான் இத போஸ்ட் பன்னிடுறேன்" என அதை எடுக்க போகும்போது அதில் கைவைத்தவன். "இத லதா பன்னவாங்க அக்கா" என்றான் அவள் பார்க்க.

"எத்தன மணிக்குக்குகா பிளைட்" என்றான்

"என்ன சார் சொல்றீங்க"

"இல்ல உங்க ஹஸ்பென் வர்ராங்கள்ள இன்னைக்கு"

"ஆமா சார்"

"அதான் கேட்டேன"

"அப்பா கூப்பிட போயிருக்காங்க! பிளைட் ஒரு மணிநேரம் லேட்டாம்" என அவள் கண்களில் ஒரு ஆர்வம் ஆசை காதல் தெரிந்தது.

“இந்தாங்க ஒருமாசத்துக்கு சம்பளம்” என ஒரு கவரை வைத்தவன் “இன்னும் ஒரு மாசத்துக்கு லீவு எடுத்துகோங்க அக்கா முதல்ல ஏர்போர்போங்க அவங்க உங்களதான் தேடுவாங்க அவங்கள ஏமாத்திட வேணாம் கிளம்புங்க”

“ரொம்ப த்தாங்கஸ் தம்பி” என்றாள். முதல் முறை சாரிலிருந்து தம்பி உரிமையாக. “அக்கா என்ன மன்னிசிடுங்க”

“எதுக்கு” என விழியால் அவள் பார்க்க “இல்ல அப்ப நான் ரொம்ப கோவமா நடந்துகிட்டேன் அதான்” என முகத்தை சுறுக்க “இதென்ன தம்பி வாழ்கைல நிறைய பாத்துட்டேன்” என அவள் வார்த்தையில் ஒரு வழியுடன் கடந்து போனாள்.

இப்படிதான் தன்னுள் பல கஷ்டங்களை வைத்துகொண்டு பிறருக்காக சிரித்து வாழ்வதில் ஓர் அலாதி இன்பம் இருப்பதை உணர்ந்தான். தன்னவள் ஆசையை நிறைவேற்ற முடியாவிட்டாலும் அவள் அருகில் இருந்து அவளை சிரிக்க வைக்கலாம் என நினைத்து வெளியேற அங்கு கண்கள் கோபியை தேடியது. புத்துருக்கோர் போதி மரம் போல சந்துருக்கு கோபி அல்லவா இன்று.

“கோபி சார் எங்க” என கேட்க “அவரு டீ சாப்பிட போனாருங்க” என்ற பதில் கிடைத்தது. ஆம் கோபிக்கு மனசு சரியில்லை எனில் இந்த ஐயங்கார் பேக்கரி டீதான் ஆறுதல்.இன்றும் சந்துருவின் மனதை காயபடுத்தியதால் கோபிக்கு சிறிது வருத்தம் இருக்கும் என்பதை இந்த டீகடை படையெடுப்பு காட்டியது. இந்த விததில்

கூறினாள்தான் புரியும் என்ற மனோபாவத்தில் இருந்தான் சந்துரு. அதனால் கோபிக்கு வேறு வழியில்லை

“என்ன அண்ணா இங்க வந்துட்டீங்க”

“என்னப்பா ஒரு டீ சாப்பிடலாம்னு வந்தேன்”

“அப்புறம் கம்பெனிய யாரு பாக்கறது” என்று சந்துருகூற கோபி சந்துருவை பார்க்க சந்துரு அந்த சாவியையும் அந்த மொபைலையும் வைத்தான் அந்த டேபிளில்.

“நிஜமாவா” இது கோபி கூடவே ஒரு சின்ன குறிப்பு குடும்ப வாழ்கைக்கு கொடுத்தார் “சந்துரு எந்த பிரட்சனையா இருந்தாலும் மனசுவிட்டு பேசுனா முடிவுக்கு வந்துடும்” என கூற “ஆமா அண்ணா உண்மதா” என

சந்துரு எழுந்து தன் காரை நோக்கி நடக்க “எப்படா திரும்ப வருவ”

“தெரியல ஒன்னு நீங்களா கூப்பிடனும் இல்லைனா என் ஒயிப் அடிச்சு விரட்டனும்”

“நான்னெல்லாம் கூப்பிடமாட்டேன்பா அவதான் உன்ன அடிச்சி விரட்டுறமாதிரி இருக்கும்”

“ஆமா அப்புடி ஆளுதான் அன்பு ஆனா போக சொல்லி விரட்டமாட்டா வேனுமுனா போகதனு சொல்லி அடிப்பா” என சிரித்தான்.

“சரி சரி ஒரு டீயாவது சாப்பிட்டு போ”

“அட இல்லண்ணா இப்போவே லேட் ஆகிடுச்சு”

“ஆமா ஆமா ஒருமாசம் லேட் ஆகிடுச்சு” என்று கோபி முடிக்க காரில் இருந்தான் சந்துரு.

தன்னவளை தேடி சக்கரங்களை இறக்கை ஆக்கினான்.

“ம்ம் அன்னி இது ராணிதான இதுக்கு இவ்வளவு பவரு ஆனா ராஜாக்கு பவரு கம்மியா இருக்கே ஏன்” சுவேதாவின் உச்சகட்ட கேள்வி. இப்போதுதான் சதுரங்கத்தில் நுழைகிறாள். கோச் அரிசி.

“ம்ம் அது அப்புடிதான் ராஜாவ பாதுகாக்க வேண்டியது ராணியோட கடமை”

“ம்ம் பாருங்க அன்னி அந்த காலத்துலயே பெண்களுக்கு அதிக உரிமை குடுத்துருக்காங்க ராணி எங்க வேனாலும் போகலாம் பாத்தீங்களா” என அரிசியின் குதிரையை வெட்டினாள்.

“இல்ல அன்னி செஸ் கன்டுபிடிச்ச காலத்துல ராஜாதான் எங்க வேனாலும் போகும் ஆனா இப்பதான் ரூல்ஸ் மாத்திகிட்டாங்க அப்புறம் குதிரை ஒருமாதிரி போகும் யானைகூட கிராஸா போயிருக்கு” என அந்த ராணியை சிப்பாயால் காலி செய்ய அது வெட்டபட்ட குதிரையின் அருகில் அமர்ந்தது.

“ஓஓ அப்ப இப்ப இருக்குற ஆண்கள்தான் நமக்கு ஃபேவர் பன்றாங்க இவங்க கிரேட்பா” என்று மெச்சினாள். தன் அன்னிக்கு சந்துருமேல் கோபம் இருந்தால் குறையும் என்று போடபட்ட நங்கூரம் இது.

காரில் வந்துகொண்டிருந்த சந்துருவின் கைபேசி ஒலிக்க புதிய எண் “ஹலோ யாரு”

“என்ன என்ன மறந்துட்டியா” என்ற குரல் கேட்க காரின் பிரேக்குகள் கடினமாக வேலை செய்தன.

“ஜான்சி மேடம்?” என்று கூற எதிர் புறம் சிரித்தது.

*ஆனால் சந்துருவின் மனதில் இப்போது ஓடிகொண்டிருந்த தாரக மந்திரம் "பேசினா தீராத பிரட்சனை இல்ல" எனபதாகும்,*

*"நான் உங்கிட்ட ஒன்னு பேசனுமே" என்றான் பகையை முடிவுக்கு கொண்டுவர.*

*"யாருடா அது ஜான்சி சுவேதாவ நீ கல்யானம் பன்னலையா?" என்றது அந்த குரல்.*

## *அத்தியாயம்* - 62

*"நீ யாருடா முதல்ல அத சொல்லு" என்றான் சந்துரு.*

*"இந்த பூபதிய மறந்துட்டியாடா? சரி உன்னதான் நான் மறக்கமுடியாது ஆனா நீ என்ன மறக்குறதுல தப்பு இல்லடா" என்று திமிராக பேச "யேய் பூபதி இப்ப உனக்கு என்னடா பிரட்சனை! பேசாம போயிரு"*

*"ஆமா டியூட் நான் பேசாம போயிடுறேன் ஆனா பூபதினா யாருன்னு உனக்கு தெரியனும்ல அதான் அந்த சுவேதாவுக்கு என் வாரிச குடுக்கலாம்னு இருக்கேன் முடிஞ்சா காப்பாத்திகோபா"*

“டேய் நீ ஒன்னும் பன்னு முடியாதுடா முடிஞ்சா பன்னிகோ” என திமிராக கூறினான் சந்துரு. குலைக்கிற நாய் கடிக்காது எனபதை இந்த பூபதி மூலமாக பார்த்தவன் சந்துரு அதானல் இந்த அலட்சியம் ஆனால் இது மிக பெரிய பிழை என அவன் உணர்ந்திருக்கவில்லை. கூடவே இனைப்பையும் துண்டித்தான். கார் வீட்டை நோக்கி விரைந்தது.

“என்னம்மா இங்கயும் செஸ் ஆரம்பிச்சுட்டியா?” என்ற குரல் கேட்க இருவரும் திரும்பிகொண்டிருக்க “அப்பா” என ஓடினாள் அன்பு. வாசலில் செருப்பினை கழற்றிகொண்டிருந்தார் போஸ்.

“அப்பா வாங்க” என சுவேதாவும் ஓடினாள். “அம்மா வாங்க யாரு வந்திருக்கா பாருங்க” என்ற சத்தம் யார் எழுப்பியது தெரியவில்லை. ஆனால் அதற்கு விடையாக பார்வதி வெளியே வந்தார்.

“என்னங்க எப்போ வந்தீங்க”

“நான் வர்ரது இருக்கட்டும்மா! நீ ஊருக்கு வர்ர ஐடியா இருக்கா” என கிண்டலாக கேட்டார்.

“டேய் போஸ் எப்ப வந்த” இது சன்முகம் சிறிய டீ கிடைக்கும் என வெளியே வந்தவருக்கு இவ்வளவு பெரிய சஸ்பென்ஸ் கிடைக்கும் என அறிந்திருக்கவில்லை.

“டேய் நான் இந்த பூமிக்கு வந்து பல வருசம் ஆச்சுடா” என போஸ் கூற “அப்பா சாமி உன்கிட்ட பேசமுடியுமாடா”

“அப்ப பேசாதடா” என புல் ஃபார்மில் இருந்தார் போஸ்.

“சரி எப்புடி வந்த”

“கடவுள் எனக்கு இறக்கை குடுத்துட்டாருடா கீழ மாதிரி மேல டிராபிக் இல்லப்பா ஒரு பிளைட்ல மோதுரமாதிரி போயிட்டேன் எனக்கு பக்குனு ஆகிருச்சு” என கூற “முடியலடா இன்னுமா இந்த மாதிரி கடிச்சுகிட்டு இருக்க? தங்கச்சி உன்கூட எப்புடிதான் இத்தனை வருசம் காலம் தள்ளுச்சோ” என புலம்ப

“பின்ன என்னடா பஸ்லதான் வந்தேன்”

“அட பாவி நீ வர்ரேன்னு தெரிஞ்சிருந்தா பிளைட் புக் பன்னிருப்பேன்ல”

“இல்லப்பா எனக்கு பஸ்தான் வசதி” என கையிலிருந்த அந்த தின்பன்டங்களையும் தன் மகளுக்கு பிடித்த பால்கவாவையும் கொடுத்தார். கூடவே “இத மறந்துட்டேன் பாத்தியா” என அந்த இடிச்ச புளிமாதிரி இருந்த பார்சலை குடுக்க அன்பு வாங்கினாள்.

“ஐ அப்பா கடலை உருண்டை” என கண்கள் விரிய ஆசையை அடக்க முடியாமல் ஒரு கையால் எடுத்தாள். அப்போதுதான் உணர்ந்தாள் தான் சிறு குழந்தை அல்ல என. அதனால் “இந்தாங்க அன்னி” என சுவேதாவிடம் நீட்ட

“ஐய்ய அன்னி இது பாக்கவே ஒருமாதிரி இருக்கு எனக்கு வேனாம்” என்று முகம் சுளித்தாள். “சுவேதாம்மா தின்னு பாரு நல்லா இருக்கும்” என போஸ் கூற சிறிதளவு கிள்ளி வாயில் போட்டாள். அதற்குள் “இது என் பங்குப்பா” என சன்முகம் ஒரு உருண்டையை எடுத்துகொண்டு கிளம்பினார்.

சுவேதாவின் முகம் சுவிட்ச் போட்ட பல்பு போல பிரகாசம் ஆகியது. “அப்பா சூப்பர்ப்பா செம்மயா இருக்கு” என ஆனந்தமாக கூற அன்பரசி கை வைத்தாள்.

“அன்னி கல்யானம் ஆனவங்களுக்கு இது கிடையாது அதனால உங்களுக்கும் அன்னாக்கும் சேத்து நான் தின்னுகிறேன்” என முழுதாக தூக்கிகொள்ள அரிசிக்கு ஏமாற்றம் இருந்தாலும் சுவேதா தன் மகள் அல்லவா அதனால் மகிழ்ந்தாள்.

“இந்தாங்க அன்னி நீங்க எடுத்து குடுங்க” என அரிசியிடம் கொடுக்க அனைவருக்கும் கொடுத்தாள். அனைவரும் அங்கு அமர்ந்து கடலை உருண்டையுடன் அரட்டையை துவங்கினர்.

“ஆமா அப்ப இது இவ்வளவு டேஸ்டா இருக்கு எப்புடி பன்னுவாங்க” ஒரு விசயம் பிடித்துவிட்டது என்றால் அதை முழுவதுமாக அறியும் ஆவல் அவளுக்கு.

“இது கடலை சீசன்மா நம்ம ஊர்ல அதனால விதப்புக்கு எடுத்து வச்சிருந்த தானியத்த குலுக்கைல இருந்து எடுப்பாங்க இப்ப நம்ம காட்டுல கடலை”

“அப்பா குலுக்கைனா அந்த பெரிய வீட்டல பெரிய சைஸ் சிலின்டர் மாதிரி இருந்துச்சுல அதுதான” என்று கேட்க

“ஓஒ சுவேதா அத நீ பாத்துருக்கியா”

“ஆமா கிராமத்தோட ஸ்டோரேஜ் யார்ட்”

“ம்ம் அதுதான் அதுல கடலைய எடுப்போம். அப்புறமா ஊர்கூடி உட்காந்து அரட்டை அடிச்சுகிட்டு கடலைய உடைச்சு விதைய பிரிப்போம். அப்புடி உடைக்கும் போது சில பருப்பு ரெண்டா உடஞ்சிடும்மா அத பாட்டிங்க எடுத்து வச்சிருப்பாங்க பின்ன விதச்சதுக்கு அப்புறமா சும்மா இருக்குற நேரத்துல கேப்பைனு ஒரு தானியம் நீ பாத்துருக்க மாட்ட. அத மாவா அரச்சு ரொட்டி சுடுவாங்க”

“அப்புறம் அப்பா?” சுவேதா ஆர்வமானாள்.

“அப்புறம் இந்த கடலைய வருத்து கூட இந்த ரொட்டி அப்புறம் வெல்லம் போட்டு உலக்கைய வச்சு இடிப்பாங்க இப்ப நீ சாப்புடிறியே அந்த மாதிரி பதத்துக்கு வர்ர வரைக்கும்”

“ஓ இதுல இவ்வளவு வேலை இருக்கா அதான் டேஸ்டா இருக்கு” என சுவேதா சுவைத்துகொண்டே கூறினாள்.

“அப்புறம் நீ சாப்புடும்போது முகத்து சுளிச்ச?”

“அது பாக்க புளி மாதிரி இருந்துச்சு அதான் அப்பா அப்புடி இப்ப குடுத்து பாருங்க யாருக்கும் இருக்காது. அப்புறம் இடிச்ச அந்த பாட்டிக்கு தங்க வளையல்தான் போடனும் மெச்சினாளா சுவேதா”

“என்னமா நீங்களே சாப்புடுறீங்க மாப்பிள்ளைக்கு எடுத்து வைங்க! ஏ பார்வதி சின்ன புள்ளைங்க ஆசையில சாப்புடுதுங்க உனக்காவது மாப்பிள்ளைக்கு எடுத்து வைக்க தோனுச்சா” என திட்ட அங்கிருந்த அனைவருக்கும் சுருக்கெ இருந்தது.

கல்யானம் ஆனதிலிருந்து வீட்டிற்கு வரவில்லை என்று எப்படி கூற முடியும் தன் தந்தையிடம். “இல்லப்பா அவரு வர லேட் ஆகும்பா”

“இது என்னமா கெட்டா போக போகுது எடுத்து வை”

“அது வந்துப்பா” என தயங்கினாள்.

“அதான் வந்துட்டேனே” என வெளியிலிருந்து ஒருகுரல் வர திரும்பி பார்த்தனர்.

அங்கு சந்துரு நின்று கொண்டு சூவை கழற்றினான். கூடவே “எனக்கு தராம உள்ள என்னப்பா சாப்புடுறீங்க” என சிரித்தான். அவனை பார்த்த அரிசி பசுவை பார்த்த கன்று போல மின்னலென ஓடி அட்டையாக அவன் மேல் ஒட்டிகொள்ள அவன் அவளை தூக்கி ஒரு சுழற்று சுழற்றினான்.

“பாத்தியாடி நம்ம பொண்ணுக்கு மாப்பிள்ளைமேல எவ்வளவு பாசம் நீயும் இருக்கியை உருகி உருகி காதலிச்ச ஆனா ஒரு மாசத்துல மாமாங்குற மரியாதையே போக்கிட்டியேடி! உன் பொண்ண பாத்து கத்துக்க” என பார்வதியின் காதில் ரகசியமாக ஓதினார்.

அரிசிக்கு அழவேண்டும்போர இருந்தது ஆனால் அப்பா முன் அழுதால் பிரட்சனை என்பதை புரிந்திருந்தாள. அதனால் அமைதியாக இருந்தாள். “அப்பாகிட்ட எதுவும் சொல்லலையே” என சந்துரு கேட்க

“இல்லைங்க” இப்பதான் வந்தாங்க”

“அப்ப அப்போவே வந்துருந்தா எல்லாதையும் சொல்லிருப்ப?” என சிரித்தான்.

“என்ன மாப்பிள்ள ரகசியம்”

“அப்பா புருஷன் பொண்டாட்டிகுள்ள ஆயிரம் இருக்கும் அது ஏன் உங்களுக்கு” என சுவேதா நகையூட்ட “ஆமா எனக்கு எதுக்குப்பா ஊரு வம்பு” என போஸ் பதுங்க அந்த இடமே சிரிப்பால நனைந்தது. ஆனால் அது அதிக நேரம் நீடிக்க போவதில்லை.

அன்பை அனைத்தபடி வந்தவன் அவள் காதில் ரகசியமாக “இனிமே நான் உன்ன விட்டு போக மாட்டேன் சரியா” எனகூற அவளுக்கு ஓர் இனம் புரியாத மகிழ்ச்சி.

“ம்ம் மாமா என்ன திடீர்னு”

“உங்க அத்தய எழுதிகுடுத்துட்டுபோகலாமுனு வந்தேன் மாப்புள்ள”

“அங்களதான் அன்புகூட எங்களுக்கு இனாமா தந்துட்டீங்கள்ள அப்புறம் என்ன” என சுவேதா முடித்தாள்.

“அப்ப நீயே வச்சுகோமா என்ன அடுத்த பஸ்ல ஏத்திவிட்டுடுங்க” என அவரும் சலைக்கவில்லை.

“இப்ப நீங்க இங்க வந்துட்டீங்கள்ள உங்களையும் குத்தகைக்கு எடுத்தாச்சு” என சுவேதா கைகலால் அனைத்துகொண்டாள் சன்முகத்தை.

“என் மறுமக இல்ல மக என்ன அரஸ்ட் பன்னிட்டா யாராவது ஜாமின் எடுக்க முடியுமாப்பா” என பறிதாபமாக கேட்டார்.

“இங்க ஒருத்தி இருக்கேனே ஒருமாசம் ஒரு ஃபோன்கூட பன்னல நீங்க உங்களுக்கு அரஸ்ட்தான் நீ விடாதமா” என பார்வதி சுவேதாவிடம் கூற மேலும் பிடியை இறுக்கினாள்.

சிரிப்பு சத்தங்களுக்கு ஊடே அந்த காரின் சத்தம்கேட்க சிறிது நேரத்தில் சுகு வந்தான். “வாடா சுகு” இது சந்துரு.

அவன் எதுவும் பேசாமல் சுவேதாவின் கையை பிடித்து இழுக்க அவள் நழுவி கொண்டு சந்துருவின் பின்னால் ஒழிந்துகொண்டாள். “சுவேதா இப்ப நீ வர்ரியா இல்லையா” என்றான் எரிச்சலாக.

“டேய் இருடா என்ன பிரட்சனைடா” இது சந்துரு

*“சுவேதா “ என மீண்டும் அழைத்தான் அவள் முகத்தில் பயம் தெரிந்தது.*

*“சுகு என்னப்பா பிரட்சனை சுவேதாவ ஏன் கூப்பிடுற அதுவும் இவ்வளவு கோபமா”*

*“அன்கிள் இவளுக்கு ட்ரீட்மன்டுக்கு நான் எல்லாவேலையும் பாத்துட்டேன் ஆனா நான் சாக வேண்டியவ சுகு என்ன சாக விடுன்னு சின்னபுள்ள மாதிரி அடம் பிடிக்குறா”*

*“சுவேதா போயிட்டு வாம்மா அவன் உன் ஹெல்த்துக்குதான கூப்பிடுறான்”*

*“இல்லடா அண்ணா இப்பதான் எனக்கு ஒரு குடும்பம் அண்ணன் அண்ணி அப்பா அத்த மாமான்னு கிடச்சு சந்தோஷமா இருக்கேன். அங்க ஆபரேஷன்ல எதாவது தப்பு நடந்து நான் உங்கள திரும்ப பாக்கமுடியாம போயிருச்சுனா அதான்டா என்ன ஒரு ரெண்டு வருசம் உங்க்கூட வாழ விடுங்க நான் அப்புறம் நிம்மதியா செத்துடுவேன்டா! இந்த சுவேதாங்க்குற வாழ்கைக்கு இது போதும்” என கண்ணீர் முட்டியது.*

*ஆனால் சுகுவுக்கு தன் காதலியை சுகமாக்க வேண்டும் என்ற ஆதங்கம். ஆனால் அவள் ஒத்துழைக்கவில்லை.*

“சுவேதா உன் நல்ல மனசுக்கு ஒன்னும் ஆகாதுமா நீ நூறு வருசம் எங்க்கூட வாழுவ” என போஸ் கூற சன்முகம் வெளியே வந்திருந்தார். “இல்ல அப்பா” என அழுதாள்.

“அன்னி நீங்க சந்தோஷமா இருந்தாதான உங்க அண்ணா நிம்மதியா இருப்பாரு ப்ளீஸ் போயிட்டு வாங்க அன்னி நீங்க எங்க்கூடதான் வாழனும் உங்கள பாக்காம என்னால இருக்க முடியாது” என்றாள் அரிசி.

அனைவரின் நோக்கமும் சுவேதாவின் நலனை நோக்கி திரும்பியிருக்க அவளுக்கு எப்படி தப்பிக்க என்று தெரியவில்லை. “சுகு உன்கூட நான் வர்ரதுக்கு என்ன உரிமை இருக்கு எனக்கு” என கோபமாக வார்த்தையை விட்டாள். விருப்பமில்லா விசயத்தில் காதலனாக இருந்தாலும் அழுத்தம் கொடுக்கும் போது அழுகையும் இயலாமையும் கோபமாக வெளிவர கத்தினாள்.

ஆனாலும் அவன் அவ்வாறு செய்திருக்ககூடாது. சிறிதுநேரம் என்ன செய்வது என்று தெரியாது சுகு. சட்டேன ஏதோ யோசித்து பூஜை அறைக்கு சென்றான். பின் சுவேதாவின் கையை பிடித்து இழுத்து சென்று காவேரியின் புகைபடத்தின் முன் நிற்க வைத்து அங்கு எடுத்த அந்த மஞ்சள் கயிற்றினை அவளுது கழுத்தில் கட்டிட சுவேதா திகைப்பில் சிலையாக நின்றாள்.

“இப்ப நான் உன் புருஷன் போதுமாடி” என சுகுகூற அனைவரும் ஆனந்தமாக மாறினர்.

“என்ன பாக்குற விசாகூட உன்ன என் பொண்டாட்டின் பதிஞ்சுதான் வாங்குனது” என அவன் கூற அவர்கள் ரகசியமாக பத்திரபதிவு திருமனம் செய்த சான்றிதழ் அவனிடமிருந்ததை உணர்ந்தாள். அதறுகு சான்றாக இருவரிடமும் ஒரே மாதிரியான வைர மோதிம் கையில் மின்னும் கேட்டால் இது என் லவ்வுக்கு அடையாளம் என சமாளிப்பதுண்டு. ஆனால் அதுதான் இவர்களின் திருமன சாட்சி என யாரும் அறிந்திருக்கவில்லை. இன்று சுவேதாவின் சொந்தங்களின் முன்னிலையில் தாலிகட்டி அவளை தன் மன எனும் கூட்டின் அரிசியாக ஆக்கிவிட்டான் சுகு எனும் சுகுமார்.

உடனே சுவேதா சுகுவின் தோளில் கண்ணீருடன் சாய்ந்துகொள்ள அது ஆனந்த கண்ணீர். எனக்கெல்லாம் திருமனம் ஒரு தேவையா என நினைத்துகொண்டிருந்தவளின் மனதில் இந்த தாலி ஒரு நொடியில் புது பந்தம் ஏற்படுத்திவிட்டது. அதை உணரும்போது கண்களில் ஆனந்த கண்ணீர்.

“எங்க அம்மா அப்பா” என போஸ் பார்வதி காலில் விழ “நல்லா இருங்கப்பா” என ஆசிர்வாதம் செய்தனர். பின் சன்முகத்தின் காலில் விழுந்தனர். “காவேரி உங்கள நல்லா வச்சுக்குவாம்மா” என அவர் வாழ்த்த.சந்துரு அன்பின் காலில் விழ முனைந்தனர் “ஏய் என்னடா இது” என சந்துரு கூற “அன்னி நீங்க எனக்கு அம்மா மாதிரி” என சுவேதா கூறவே “நல்லா இருப்பீங்க அன்னி உங்க அண்ணா நல்லா பத்துகுவாரு” என அன்பு கண்ணீருடன் கூறினாள் முதல்மகள் திருமனம் அல்லவா.

சுகு அவளை பார்த்துவிட்டு நடக்க அவன் பின்னால் குழந்தையென நடந்துசென்றாள். நரகத்துக்கே என்றாலும் அவன் பின்னால் செல்வதில் மகிழ்ச்சி அவளுக்கு.

சுகு காரில் ஏற சுவேதாவும் ஏறிகொள்ள இருவரும் சிரித்தனர் பின் கார் சுகுவின் வீட்டை நோக்கி புறப்பட சந்துரு அனைவரையும் அழைத்துகொண்டு தனது காரில் சுகுவின் வீட்டை நோக்கி சென்றான். கூடவே கோபியிடம் சொல்லி நந்தினி அம்மாவை கூட்டி வரவும் ஏற்பாடுகள் தயாரிகிவிட்டது.

சுகுவையும் சுவேதாவையும் பார்த்த அவனுது தங்கை "அம்மா இவன் என பன்னிட்டு வந்துருக்கான் பாரு" என கோபத்துடன் கத்திகொண்டு ஓடினாள். அதற்குள் சந்துரு என அனைவரும் வர சுவேதாவிற்கு உள்ளூர பயம். இவங்க ஜாதி பாப்பாங்கள்ள அன்னைக்கு ஃபோன்ல கூட அப்புடி பேசுனாங்க. நீ யாரடி என் பையன கட்டிகிறதுக்கு அப்புடின்னு என்னவெறுத்து ஒதுக்குனாலும் பரவாயில்ல ஆனா சுகுவ ஒதுகிட்டாங்கன்னா நான் என்ன பன்றது. என வேதனையில் வாடினாள். இருவரும் வாசலில் நிற்க சந்துரு இருவரையும் தனது ஹெஸ்ட் ஹவுசில் தங்கவைக்கலாம் என மனதில் எண்ணங்கள் ஓடின எப்படியும் துரத்த போகிறார்கள் அதற்குள் ஆசிர்வாதம் வாங்கிகொள்ளளாம் என நினைத்து வந்திருப்பான் போலும் சுகு.

சிறிது நேரம் செல்ல சுகுவின் தாய் "இந்த தீப்பட்டிய எங்கதான் வப்பாளோ" என திட்டிகொண்டே கையில் ஒருதட்டுடன் வந்தார்.

ஆரத்தி எடுத்துகொண்டே "என்னமா அத்தய பாக்க இப்பதான் நேரம் கிடைச்சதா" என சிரித்துகொண்டே இருந்தவர். பின்னால் சுகுவின் தங்கை நிற்க "அன்னி உங்களுக்க வந்த கவிதை இவனோது இல்ல அதுக்கு ராயல்டி எனக்குதான் நீங்க குடுக்கனும் இந்த முன்டம் கம்ப்யூட்டரும் கையுமா சுத்தும் அதனால சேட் பன்னு அப்புடின்னு என்கிட்ட ஃபோன குடுத்துட்டு போயிடும் நானும் அவன் பேசற மாதிரி உங்க்கிட்ட பேசிகிட்டு இருப்பேன்! அட போங்கப்பா உங்க லவ்வுக்கு ஹெல்ப் பன்னி எனக்கு லவ் செட் ஆகலப்பா அம்மா நீதான் நல்ல பையனா கட்டி வை" என கூற "படிக்குற வயசுல பேச்சப்பாத்தியா இவளுக்கு அடி கழுத" என திட்ட சுவேதா குழப்பத்தில் இருந்தாள். அவளது குழப்பதை புரிந்த சுகு சிரித்தான்.

"டேய் அன்னா எப்ப பாத்தாலும் அன்னிகூட கடலை போடுறதுக்கு பேசாம இங்க கூட்டகிட்டு வந்துடுடா" எனற தன் தங்கையின் குரலை ஒருகாதில் வாங்க மறுகாதில் சுவேதா பேசிகொண்டிருந்தாள்.

ஃபோனை கையால் அழுத்தியவன் "நான் கூட்டி வரு ரெடியாதான் இருக்கேன் அவதான் ஒத்துக்க மாட்டேங்குறா"

"சரி சும்மா விளையாடலாமா"

"என்ன!!"

“நான் அப்புறம் கூப்புடுறேன்னு சொல்லு” என அவள்கூற ஃபோனை காதில் வைத்தான்.

“அம்மா கூப்பிடுறாங்க சுவேதா நான் அப்பறமா கூப்பிடுறேன்” என அவன் கூற ஃபோனை பிடுங்க சத்தமாக போட்டு தன் தாயிடம் சென்றாள்.

“அம்மா இவன் யாருகூடயோ கடலை போடுறான்” என தங்கைதன் தாய்க்கு கண்ணடித்து சிக்னல் செய்ய அவர் புரிந்துகொண்டார்.

“யாருடா அந்த சிறுக்கி உன்ன வழச்சு போட பாக்குறாளா! இந்த குடும்பத்துக்கு மறுமகளா வர்ரதுக்கு ஒரு மதிப்பு வேனும்”

தங்கச்சி “ஆமா அம்மா இவன் ஒயிஃப்னு போட்டு ஒரு நம்பர்ல பேசிகிட்டே இருக்கான்மா” என அவள் கூற இனைப்பை துண்டித்தாள் சுவேதா.

“என்னடா அன்னி கோவபட்டுடாங்களோ”

“ஆமா உங்கள வச்சுகிட்டு ஒரு லவ் நிம்மதியா பன்ன முடியுதா இப்ப நான் எப்படி அவள சமாதானம் செய்யபோறேனோ” என சுகு புலம்ப “நான் வேன ஹெல்ப் பன்றேன் அண்ணா”

“ஆமாடா ஃபோன் போடு நான் சேத்து வைக்குறேன்” என தாய் கூற “நீங்க ரெண்டு பேரும் பன்னது போதும் நான் பாத்துகுறேன்” என தலைமேல் கைகூப்ப “சரி போ அன்னி அழகா இருந்தா நீ தப்பிச்ச இல்லைனா செத்தடா” என தங்கை கூற “உன்னவிட அழகான தேவதை அவ” என தங்கையை சீண்டினான். இப்படியாக செல்ல சண்டைகள் தொடர ஃபோன் அடித்தது. “ஹலோ மஞ்சு சொல்லு”

“யாருடா அது அடுத்த லவ்வரா” என தங்கை கேட்க வாயில் விரல் வைத்தான்.

“சுகு சந்துருக்கு கல்யானமாம் நிச்சயம் பன்னபோராங்களாம்”

“அட ரஸ்கல் ஒரு வார்தைகூட சொல்லல எனகிட்ட”

“அதான் சுவேதா உன்கிட்ட சொல்லுறேன்னு சொன்னா சொல்லையா”

“இல்ல மஞ்சு அதுக்குள்ளதான் எங்கவீட்டுல ரெண்டு இருக்கே இதுங்கள வச்சுகிட்டு சரி நீ எப்ப கிளம்புற”

“ஆன் தி வேடா சுவேதாவ பிக்கப் பன்ன போய்கிட்டு இருக்கேன்”

“ஓகே ஐ ஜாயின்” என்ற சம்பவம் ஓட சுகுவின் மனைவி சுவேதாவ மட்டம் குழப்பத்தில் நின்றாள். அதற்குள் “அப்பா கங்க்ராட்ஸ்” என சுகுவின் தங்கை ஃபோன் போட

“எதுக்குமா உனக்கு தம்பி பாப்ப பிறக்கபோறானா” என்றார் சிரித்துகொண்டே

“அதுக்கு உன் ஒயிப் சரியா வராது நீ வேற கல்யானம் பன்னாதான்”

“வேற என்ன”

“நீங்க மாமானார் ஆகட்டீங்க”

“என்னமா சொல்லுற”

“என்ன சந்தேக படாதீங்க உங்க பையன்தான் சுவேதா அன்னிய வீட்டுக்கு கூட்டிகிட்டு வந்துட்டான் கழுத்துல தாலியோட”

“வாவ் சூப்பர் ஓகே நான் ரிசப்சனுக்கு ஏற்பாடு பன்னுறேன். அப்பாட நிம்மதியா இனி இவன் அருவையில இருந்து தப்பிச்சு தூங்கலாம்பா” என இனைப்பைதுண்டிக்கும் நேரம்.

“இந்த முறை ஒத்துகிறேன் அன்னி என்னவிட அழகுதான் அவங்க போட்டோ அனுப்பிருக்கேன் வாட்ஸ்அப்ல பாத்துகோங்க”

“ஓகேமா” என வைத்தார். பின் அவள் திருமனஜோடிகள் இருவரையும் தன் மொபைலில் ஒரு கிளுக்கிளுக்கினாள்.

அப்புறம் நந்தினி வந்து கண்ணீருடன் திருமனம் வைக்க “அத்த சுவேதா அன்னி மாதிரி உங்களுக்கு அழகான பையன்லாம் இல்லையா”

“ஏன்மா”

“இல்ல எனக்கு செட்பன்னி விட்டீங்கன்னா நல்லா இருக்கும் வயசு கம்மியா இருந்தாலும் பரவாயில்ல” என கூற சிரிப்பொலி அதிர்ந்தது. அனைவரின் உள்ளமும் நிறைய முழுமனதுடன் தன் வீட்டை அடைந்தனர் அனைவரும். சுகுவின் வீட்டில் சிறிய அளவில் கல்யான பந்தி நடந்த்தால் அங்கு சாப்பிட்டு விட்டு வந்திருந்தனர். “மச்சி ரிசப்ஸன்ல மாஸ் காட்டிடுறேன்” என சுகு வாக்கு கொடுத்துள்ளான்.

மனதும் வயிறும் நிறைய இங்கு வந்திருந்தனர். சந்துருவும் அரிசியும் தங்களது அறைக்குள் செல்ல “அரிசி மேடம் எதாவது கதை சொல்லுங்க” என்றான்.

“அதான் ஆபிஸல உங்களுக்க கதை சொல்ல ஆள் இல்லையா அதான் ஒருமாசமா இருந்தீங்கள்ள”

“அடி பாவி! அப்ப நீ சொல்ல மாட்டியா” என கூற அவள் அங்கிருந்த ஒரு மேஜையில் அமர்ந்துகொண்டு டைரி படிப்படுபோல் நடத்தாள். இவனுக்கு முதுகுகாட்டி அமர்ந்திருந்தாள். “நான் சொல்ல மாட்டேனபா”

“ம்ம் அப்ப நீ சேட்ட பன்ன கத எதாவது சொல்லு”

“நான் சேட்டலாம் பன்னலங்க”

என்ன கோவமா இருக்காளா என மனதில் நினைத்தவன் தன் அருகிலிருந்த டெடிபியரை திரும்பி உட்காந்திருந்த அரிசியின் மீது தூக்கி எறிந்தான்.

அந்தபுறமாக சிரித்துகொண்டிருந்தாள் தன்னவனின் அடுத்த நடவடிக்கை என்ன என்று அரிய ஆவளாக.

“அது கீழ விழுந்திருச்சு கொஞ்சம் எடுத்து தர்ரியா”

திரும்பியவள் சிரிப்பை முறைப்பாக மாற்றிகொண்டாள். அதை எடுத்து அவனருகில் தூக்கி வீசிவிட்டு திரும்பி அமர்ந்து சிரித்தாள். ‘என்ன பயங்கர கோவமா இருக்காளோ’

மீண்டும் தூக்கிவீசினான்.

“அரிசி எடுத்து குடேன்”

மீண்டும் எடுத்துகொடுத்தாள். கண்ணில் இந்த முறை அதிக கோபம் காட்டினாள்.

மறுபடியும் வீசினான். “அரிசி…!!!!!!” என இழுக்க “இன்னொரு தடவ வந்துச்சு அவ்வளவுதான்” என்று கூறிவிட்டு அவனருகில் வைத்தாள். கன்டிப்பாக அந்த டெடிக்கு வலித்திருக்கும்.

மீண்டும் தூக்கி எறிந்தவன் “என்னடி பன்ன இந்த ஒருமாசமா என் டெடி பியர என்கிட்ட இருந்து உன்கிட்ட ஓடி வந்துடுது” என சிரித்தான்.

அதை பார்த்தவள் அதோ மேஜையின் மீது வைத்துவிட்டு “இதுதான் என்கிட்டதான் இருப்பேன்னு சொல்லுதுல அப்புறம் ஏன் உங்களுக்கு” என எடுத்துவைக்க

“அப்ப நான் என்ன பன்றது” என எழுந்து வந்தான்.

“நீங்க வேற டெடி வாங்கிகோங்க”

“அதான் என் டெடி இருக்கே” என அரிசியை தூக்கி கட்டிலில் போட்டு இருக்கமாக கட்டிகொண்டான். அவளால் தப்பிக்க முடயவில்லை. “ஏங்க இன்னைக்கு வேனாம்”

“என்ன வேனாம்”

“ம்ம் நான் என் டெடி கட்டிபிடிச்சு தூங்கனும் அவ்வளவுதான்” என கட்டிகொண்டான்.

“ஏன் அரிசி கோபிதான் புரியவச்சாங்க”

“என்ன”

“பேசுனா தீராத பிரட்சனை இல்லையாம்”

“ஆமாங்க பேசுனா எல்ல பிரட்சனையும் தீந்துடும்”

“ம்ம் நான் உனக்கு ஒன்னு சொல்ல போறேன் கோவபட கூடாது”

“சொல்லுங்க”

“நான் அந்த டைரிய படிச்சிட்டேன் உன் வலி எனக்கு தெரியும் அரிசி என்ன மன்னிச்சிடு”

அவளுக்கு அதிர்ச்சியா பயமா என தெரியவில்லை வார்த்தைகள் வரவில்லை.

“அந்த ஜான்சிகிட்ட பேசி பாக்கலாம்னு இருக்கேன்”

“வேனாம்ங்க” என பதறினாள்.

“ப்ளீஸ்டா அரிசி என்ன இந்த ஒரு விசயத்துல மட்டம் விட்டுடு நான் அந்த அக்காகிட்ட எப்புடியாவது பேசி முடிஞ்சா கால்ல விழுந்தாவது சமாதனத்துக்கு கொண்டு வாரேன்”

“இல்லைங்க என் மனசுக்கு சரியா படல”

“அரிசி அவங்க்கிட்ட பேசி நல்லது நடந்துச்சுனா நாம தடயில்லாம குழந்தை பெத்துகலாம் அதான் எல்லாரோட நிம்மதியும் கெடுக்குறதுக்கு பதிலா பேசிபாக்கலாம் அரிசி”

“ம்ம் சரிங்க” என மெல்லிய குரலில் வாய் கூறினாலும் மனமோ மறுதத்து.

“இதுதான் என செல்ல பொண்டாட்டி அரிசி” என இறுக்கமாக கட்டிபிடித்து தூங்க ஆரம்பித்தான்.

அதிகாலை விடிய அரிசியோ குளியலறையில் இருக்க எழுந்தவன் மேஜையிலிருந்த டெடியை எடுத்து கட்டிலில் வைத்துவிட்டு செல்ஃபோன் கேமிராவை ஆன் செய்துவிட்டு வெளியே சென்றான். அவனுக்கு அந்த பொக்கிஷம் சிக்கியது.

அரிசி வெளியே வந்தாள். அந்த டெடி அங்கிருப்பதை பார்த்து. “என்ன என் ஆளு வந்ததும் உன்ன கழட்டி விட்டுடேன்ன் பாத்தியா”

“என்ன முழிக்குற”

“….!” டெடி அமைதியாக இருந்தது.

“நீ அவருகிட்ட இருந்து என்கிட்ட ஒட்டிகிட்ட இப்ப அவருகிட்ட மறுபடியும் ஒட்டிகலாம்னு பாக்குறியா” அதன் கண்ணில் குத்தினாள். “அப்புடியே முழிய புடுங்கிடுவேன் பாத்துக்க” என அதனுடன் சண்டையிட்டாள்.

அது என்ன செய்வது என்று தெரியாமல் மௌனமாக அமர்ந்திருநத்து.

“நீ இருக்குற இடத்த நான் பிடிச்சுட்டேன் பாத்தியா இன்னும கொஞ்சநாள்தான் பாரு இந்த ரூம்ல இருந்து உன்ன மொத்தமா வெளியேத்துறேன் பாரு” என சக்கலாத்தி சண்டை நிகழ்ந்தது அந்த டெடியுடன்.

அந்த நேரம் ஃபோன் அடிக்க டெடியை தூக்கி மேஜையில் வைத்துவிட்டு “நீ இங்கதான் இருக்கனும் அங்க வரகூடாது” என கட்டிலைகாட்டிவிட்டு “மாமா ஃபோன்” என வெளியை எடுத்து செல்ல அங்க சாவி துவாரத்தின் வழியே பார்த்துகொண்டிருந்தான் சந்துரு.

“என்னங்க பன்றீங்க”

“இல்ல இதுக்கு எப்புடி சாவி செய்றாங்கனு பாக்குறேன்”

“ச்சீ போங்க” என போனை அவனிடம் கொடுத்துவிட்டு ஓடினாள்.

“ஹலோ சொல்லுடா சுகு”

“மச்சி நானும் சுவேதாவும் ரெண்டு நாள்ள அமெரிக்க கிளம்புறோம் மூனு மாசம் ஆகும்டா திரும்ப வர”

“ஓகேடா நான் டிராப் பன்ன வாரேன் சரி வீட்டுக்கு வாங்க புதுதம்பதிகள்”

“இல்லடா கொஞ்சம் ஒர்க் இருக்கு புதுசா ஏதோ வைரஸ் ரிலிஸ்பன்னி நம்ம தாலிய அறுக்குறானுக”

“நீ கம்ப்யூட்டர்லயே இருக்காம தங்கச்சிய ஒழுங்கா பாத்துகோடா”

“நான் எங்க பாக்குறது நீ போகும் போது விட்டுடுட்டு போனவதான்டா இன்னும் என் தங்கச்சி கூடதான் இருக்கா! பேசாம என் தங்கச்சிக்கு அவள கட்டி வச்சிருக்கலாம்”

“அதுக்கு நம்ம ஊர்ல சட்டம் இல்லடா” என சந்துரு சிரிக்க சுகுவும் சிரித்துகொண்டு “சரிடா நான் கூப்புடுறேன்” என வைத்தான். பின் அந்த வீடியோவை பார்த்து சிரித்துகொண்டிருந்தான் சந்துரு.

“ஏங்க சிரிக்குறீங்க” என அவள் கேட்டாள்.

“உன் வாலுதனத்த நினைச்சு சிரிக்குறேன்” என மீண்டும் சிரிக்க அவள் சினுங்கிகொண்டே நகர்வாள்.

பின் போஸ் “சரிங்க மாப்ள நாங்க கிளம்புறோம்”

“என்ன மாமா அதுக்குள்ள அத்த நீங்களுமா”

“ஆமா மாப்ள காட்டல போட்ட வேல அப்புடியே கிடக்கு இவள கூப்பிடதான் வந்தேன் அப்புறம இவள ஊர் திருவிழா வருது அதான் ஊர் பொண்ணுங்க மூனு நாளைக்கு வெளிய தங்க்கூடாதுனு சொல்லுவாங்க அதான் வந்தேன்”

“சரிங்க மாமா” என்றான் சோகமாக அரிசி பிரியமனமில்லாமல் நின்றாள் கல்லூரி விடுதியில் பெண்ணை விட்டுசெல்லும் பெற்றோர்போல அவர்களும் சோகமாகதான் சென்றனர்.

“மாப்ள திருவிழாக்கு வந்துடுங்க”

“நான் கூட்டிகிட்டு வந்துடுறேன்டா” என சன்முகம் உறுதியளித்தார்

பின் அவர்கள் கிளம்பிசெல்ல காலம் எந்திரத்தை வேகமாக சுழற்ற சுவேதாவை வழியனுப்ப ஏர்போர்ட்டில் காத்திருந்தனர் சந்தருவும் அன்பும்.

“டேய் சுகு வந்துட்டீங்களா”

“2 min டா பார்கிங்ல இருக்கேன்”

“ஓகேடா” என இனைப்பு துண்டித்த அடுத்த அவன் கூறிய இரண்டு நிமிடத்தில் மீண்டும் அழைத்தான். “என்னடா சுகு உள்ளதான் நிக்குறோம் பாத்துட்டியா இல்லையா”

“....!!!” பதில் இல்லை.

“டேய் எங்கடா இருக்க”

“பார்கிஙலடா” என வாய் குலறியது சுகுக்கு

“இன்னும் பார்கிங்கலதானா”

“டேய் சந்துர் சுவேதாவ காணோம்டா” என குரல் உடைந்தது.

சந்தருவின் முகத்தில் சலனம் “என்னடா சொல்லுற” என கூறும் போது கைபேசி திரை கருப்பாக மாறியது.

:”ஹலா ஜான்சி அக்கா சுவேதாவ விட்டுடுங்க” என்று குரல் உடைய கூறினான் சந்துரு.

“யூ பிரில்லியன்ட் காய்; நான்தான் சொன்னேன்ல உன் கல்யானத்துக்கு கிப்ட் சுவேதாதான்னு கொஞ்சம் லேட் ஆகிருச்சுப்பா”

“சுவேதாவ விட்டுடுங்க அக்கா”

“அந்த கிப்ட நீ ஜெனி ஸ்பாட்ல வந்து வாங்கிகோ முக்கிய குறிப்பு குடும்பத்தோட வந்தா உயிரோட குடுத்துடுவேன்” என இனைப்பு துண்டிக்க மீண்டும் அழைப்பு “என்னப்பா சந்துரு முடிஞ்சா” என பூபதியின் குரல். சந்துரு எவ்வளவு பெரிய தவறு செய்துவிட்டோம் என உணர்ந்தான்.

## அத்தியாயம் - 63

சந்துருவின் முகத்தை பார்த்தே உணர்ந்தாள் அன்பு "என்னங்க ஆச்சு" என்று பதறினாள். "சுவேதாவ கடத்திட்டாங்க" என குரலில் பதற்றம் இருக்கவே அன்பின் முகத்திலும் அந்த பதற்றம் தொற்றிகொண்டது. "என்னங்க பன்றது"

"உங்க ஊருக்கு வர சொல்லிருக்காங்க"

"வாங்க போகலாம் சுவேதாவ காப்பாதனும்! அவ என் பொண்ணுங்க" என்றாள் அரிசி.

உடனே ஃபோனை எடுத்தான். "ஹலோ அப்பா! எதுவும் பேசாதீங்க ஏர்போர்ட் கிளம்பி வாங்க" என்று ஃபோனில் அடுத்து துழவினான். "சுகு பதற்றபடாம கிளம்பி உள்ள வா" என்று கூற சுகு வந்தான்.

"என்னடா ஆச்சு"

"ஒன்னுமில்லடா நாம இப்ப அன்பு ஊருக்கு போகனும்"

"ஏனடா"

"ப்ளீஸ்டா எதுவும் பேசாதடா" என்று அவன் கூற சுகு அமைதியானான். அதன்பின் சன்முகம் வரவே "என்னப்பா ஆச்சு எதுவும் பிரட்சனையா"

“இல்லப்பா நாம ஊருக்கு போகனும்”

“ஏன்ப்பா” என அவர் கேட்க அன்பு அவரின் கையைபிடித்து வேண்டாம் எனபதுபோல சைகை காட்ட அமைதியானார். சிறிது நேரத்தில் விமானத்திற்காக நிற்க அப்போதுதான் தோன்றாயது சந்துருக்கு ‘பேம்லின்னா அதுல அத்தயும் மாமாவும் இருக்காங்கள்ள’ பதறிகொண்டு ஃபோனை எடுத்தான்.

அடுத்த கனம் அதில் போஸின் நம்பர் ஏற்றபடவே அந்த அழைப்ப கருடன் போல காற்றில் பரவி சென்று பார்க்க அந்த மொபைல் ரோட்டில் விழுந்துகிடந்தது. உடனே பார்வதிக்கு முயற்சி செய்தான்.

“இந்த மொபைல் தற்சமயம் சுவிட்ச் ஆஃப் செய்யபட்டுள்ளது” என வரவே முகத்தில் மாற்றம் தொற்றிகொண்டது. “என்னஙக ஆச்சு” என அன்பு அவனை பார்க்க. எதாவது சொன்னால் பயந்துவிடுவாள் என நினைத்து கொண்டு “ம்ம் அத்த எங்க இருக்கீங்க” என எதிர்புறம் யாருமே இல்லாத மொபைலில் பேசினான்.

“மாமா எங்க”

“ஓ அப்பபடியா சரி நாங்க எல்லாரும் வந்துகிட்டு இருக்கோம்”

“இல்ல பிரட்சனைலாம் இல்லை”

“திருவிழாக்கு அப்பா கொஞ்சம் சீக்கிரம் கிளம்ப சொல்லிடாரு நாங்க வர்ர வரைக்கும் வீட்டுலதான் இருக்கனும் சரியா”

“சரிங்க அத்த வைக்குறேன்”

என பாசாங்கு செய்தான். அன்பு அவனை பார்க்க அவளுக்கு தெரியும் பார்வதியின் மொபைல் ரிப்பேர் என்று தனக்காக பொய் சொல்கிறான் என கண்டுகொண்டாள்.

“அம்மாக்கு” என கேட்க “அம்மா வீட்டுல இருக்காங்கமா அப்பா தோட்டத்துக்கு போயிருக்காங்கலாம் எந்த பிரட்சனையும் அவங்களுக்கு இல்ல”

அன்பு சமாதானம் ஆனதுபோல நடித்தாள். ஆனால் மனதில் ஓர் அறிப்பு இருந்துகொண்டருந்தது.

விமானம் இவர்களின் பதட்டத்திற்கு ஏற்ப பறக்க துவங்கியது. தன் அருகில் அமரந்திருந்த சுகுவை பார்த்த சன்முகம் “என்னப்பா ஆச்சு” என கேட்க

“அன்கிள் சுவேதாவ கடத்திடாங்க” என அழுதான். சன்முகத்திறுக்கு தூக்கிவாறி போட தன் இதயத்தை பலபடுத்திகொண்டு சுகுவை ஆறுதல் செய்தார்.

மனதில் ‘ஜான்சி நீ பன்றது தப்புமா! நீ என்ன பன்னுவ உன் அப்பா உனக்கு அப்புடி சொலிலகுடுத்துருக்கான் அத்தான செய்வ! உனக்கு என்மேல தான பகை என்ன கொண்ணுடு உன் ஆத்தரம் தீரட்டும் என் பிள்ளைங்க வாழனும்’ என மனதில் அவளுடன் வேண்டினார்.

சிறிது நேரத்தில் ஜான்சி மற்றும் அவளிடமிருந்த பார்சல் காரில் ஏற்றபடவே அதை பிரித்தாள்.அதில் வாய் கட்டபட்டிருந்த சுவேதா மூச்சுவிட சிரம்பட்டாள். அப்போதுதான் பார்த்தான் அவளை சேகர். அவனுக்கு மனம் பொருக்கவில்லை.

“அக்கா என்னக்கா பன்னிவச்சுருக்க பாவம்க்கா இந்த பொண்ணு” என அவள் வாயினை அவிழ்த்துவிட்டு கட்டுகளை அவிழ்த்தான். ஜான்சியோ சிரித்துகொண்டே வந்தாள்.

சுவேதா அவளை பார்த்து பயந்த தள்ளி அமர்ந்தாள்.

“இவங்க சந்துரு கல்யானத்துல பாத்தோம்ல அவங்கதான” என அவன் கேட்க மீண்டும் சிரித்தாள்.

“என்னக்கா சிரிக்குற”

“இல்லடா உன்ன நினைச்சேன் அதான் சிரிப்பு வருது. இவ்வளவு இன்னசன்டா இருக்கியேடா”

“எதுக்கு இவங்கள கடத்திருக்க அத சொல்லு! இது தப்புக்கா”

“தம்பி இது அப்பா எனக்கு குடுத்த கடமைடா நீ இவள உன் கையால கொல்லனும்” என ஜான்சி கூற “என்னக்கா சொல்ற நானா முடியாது” என பதறினான். ஒரு பூச்சியைகூட காலால் தெரிந்து அவன் மிதித்தது இல்லை.

“பொண்ண கொல்ல பாவமா இருந்தா சந்துரு வந்துகிட்டு இருக்கான் அவன கொல்றியா”

“அக்கா ஏன் கொலையபத்தி பேசுற கொல்லற அளவுக்கு என்ன தப்பு பன்னாங்க அதுவும் உயிர கொல்றதுக்கு உரிமை நமக்கு இல்லை அக்கா இவங்கள இறக்கி விட்டுரு” என சேகர் கூற “பேசாம வாடா அப்பாவோட வலி உனக்கு தெரியுமா” என அப்போதுதான் தம்பி முன்னால் சத்தமாக பேசியுள்ளாள். அவளை அது மாதிரி முதலில் காண்பவன்.

“சாரிக்கா நான தெரியாம பேசிட்டேன் நீ எது சொன்னாலும் செய்யுரேன் என்ன மன்னிசிடுக்க” என அவன் கூறுவதற்கு காரணம்

இல்லாமல் இல்லை. சிறுவயதிலிருந்த தன்னை தூக்கி வளர்த்தவள் அல்லவா அதுவுமில்லாமல் அன்னையில்லாமல் அவளை அன்னையாக நினைத்து வாழ்ந்தவன் பலமுறை அம்மா என்றுதான் அழைத்துள்ளான் அவளை.

அவன் சுவேதாவின் வாயினை மூடினான் கண்களில் கண்ணீர் அதை பார்த்த ஜான்சி "அழாதடா" என முன்னாலிருந்து குரல் கொடுத்தாள். ஆனால் அவளுக்கு கண்ணில் கண்ணீர் வந்தது. அவளது நினைவுகள் தீபந்தமாக சுட்டெரிக்க அந்த நெருப்பில் கிடைத்த உஷ்னத்தில் காரை அசுர வேகத்தில் இயக்கினாள் ஜான்சி.

"அம்மா பால் தம்பிக்கு" இது ஜான்சி அந்த ஆறு வயதிலையே தம்பியின் மீது பாசம் அதிகம். "இப்பதான்மா குடிச்சான் போதும்" என ஜான்சியின் தாய் கங்கா கூற "அப்பறம் ஏன் அழறான்" என சண்டைக்கு வந்தாள்.

"ஈரமா இருக்கும்மா அதான் அழறான் நீகூட இப்புடிதான் அழுத"

"போம்மா தம்பிய ஈரத்துல போட்டு வச்சுருக்க" என திட்டிவிட்டு தனது தமையனை தூக்கிகொண்டு நடந்தாள்.

"ஏய் கீழ போட்டுடாதடி" என கங்கா சத்தம் போட்டாலும் அவள் கேட்பதாக இல்லை.

“என்ன ஜான்சி தம்பி என்ன சொல்றான்” என செல்வம் வந்து நிற்க

“அம்மா ஈரத்துல போட்டு வச்சுருக்கப்பா அதான் அழறான் நான் அவனுக்கு கதை சொல்லி சரி பன்னிடுறேன்” என இரண்டாவது தாயாக மாறினாள்.

“வாங்க பட்டனத்துல வேலைலாம் முடிஞ்சிடுச்சா”

“ம்ம் முடிஞ்சிடும்னு நினைக்குறேன்”

கங்கா அழகான பெண். படிப்பு இல்லை எனினும் அழகான கூட்டுகுடும்பத்தை நிர்வகிக்க ஏற்ற குணம் படைத்தவள். செல்வம் அவர் கனவர். இப்போது கங்காவை கட்டியதாள் சுந்தரம்-சரஸ்வதி கம்பெனியை நிர்வகித்து கொண்டிருக்கிறார். எல்லாம் கங்காவை கல்யானம் செய்த்தாள் வந்த சீதனம்தான். சுந்தரம் கங்காவின் தந்தை நல்ல அன்பானவர் தன் பொண்ணுக்காக உயிரையே கொடுப்பவர். சரஸ்வதி சிறுவயதிலேயே கங்காவை விட்டுவிட்டு வின்னுலகம் பயனித்துவிட்டார். அவரது நினைவாகதான் தனது கம்பெனிக்கு SS pvt ltd. சுந்தரம் சரஸ்வதி மில்ஸ் என பெயரில் நடத்திவந்தார். அந்த கம்பெனிக்கு இருந்த ஒரே எதிரி சந்திரசேகர் நடத்திவந்த அந்த காவேரி மில்ஸ்தான் அதுதான். அதனுடன் போட்டியை சமாளிக்க முடியாத்தாலும் வயசாகிவிட்ட காரணத்தினாலும் தனது எஸ்.எஸ் மில்ஸை தனது மருமகன் செல்வத்திடம் ஒப்படைத்தார்.

ஆனால் செல்வம் சொல்லிகொள்ளும் அளவிற்கு நேர்மையாக போட்டியிடுபவர் இல்லை. பல குறுக்கு வழிகள் முயன்று இன்று அந்த சந்திரசேகரின் காவேரி மில்ஸ் தவிடுபொடியாகிகொண்டிருந்தது. தனது நண்பன் லிங்கம் தன்னிடம் ஒப்படைத்த அந்த கம்பெனியை இப்படி விட சந்திரசேகருக்கு மனமித்தை எனவே அவளது மகள் காவேரியை தேடி வந்தார் சன்முகத்தின் வீட்டிற்கு. காவேரி கைக்கு கம்பெனி மாறியதும் செல்வத்தின் குறுக்குவழிகள் பலனலிக்கவில்லை. அதன்பின் நடந்த சம்பவங்கள் அனைவரும் அறிந்த்துதான்.

இப்போதும் அந்த சந்திரசேகரின் கம்பெனிக்கு செல்லும் பஞ்சில் சில கலப்படம் செய்துவிட்டுதான் வீட்டிற்கு வந்துள்ளார் செல்வம். அவரது மனைவி கங்கா வரவேற்க ஜான்சி கையில் தன் தம்பி சேகருடன் விளையாடிகொண்டிருக்கிறாள்.

“நீ சாப்புட்டியாம்மா” என செல்வம் கேட்டார். என்னதான் செல்வம் முரடனாக குறுக்குபுத்திகாரனாக இருந்தாலும் ஜான்சி மீது தனி பாசம் அவளுக்கு மகள் அல்லவா

“நான் சாப்புட்டேன்பா தம்பிதான் பசியா இருக்கான் இந்த கங்கா அவன கண்டுக்கவே மாட்டேங்குது” என தன் தந்தையிடம் கம்ப்ளைன்டை தாக்கல் செய்தாள்.

“இந்த வயசுலேயே வாய பாத்தீங்களா இந்த வாலுக்க” என கங்கா சுவையான கறிகுழம்புடன் சூடான சாதத்தை எடுத்துகொண்டு வந்தாள்.

“ம்ம் கறிகுழம்பு வைக்குறதுல உன்ன அடிச்சுக்க யாருடி இருக்கா” என கன்னதை கிள்ளினார் செல்வம்.

“என்னங்க பன்றீங்க பொண்ணு இருக்கா”

“என் பொண்ணுதான்டி இப்புடி உன்ன கொஞ்சுனதாலதான அவ பிறந்தா” என சீண்டினார் செல்வம்.

“ஆமாங்க இப்புடி கொஞ்சி தான் பிறந்தா இப்ப சேகரும் பிறந்துட்டான்” என சிரித்தாள்.

“அப்ப உன்க்கு ரெண்டு போதுமாடி”

“அப்புடி இல்லைங்க”

“நம்ம கம்பெனிய பாக்க நிறைய குழந்தைங்க தேவைபடுறாங்க பெத்துகுடு” என செல்வம் கூற கங்காவின் முகம் மாறியது. ஆம் கம்பெனியின் நிலவரம் பற்றி கங்காவின் தந்தை சுந்தர்ம் விசாரித்து சென்றிருந்தார் தன் மகளிடம்.

“அப்பா வாங்கப்பா சாப்பிடுங்க”

“சாப்புடுறதுக்கு நான் வரலமா உன் புருஷன் எங்க”

“ஏன்பா”

“கேட்டதுக்கு மட்டும் பதில் சொல்லுமா”

“பட்டனத்துக்கு போயிருக்காருப்பா மில்லு விஷயமா”

“எப்படி அந்த சந்திரசேகரோட மில்லுக்கு வர்ர பஞ்சுல எஸ்டர் கலந்து விட்டு பாலக்குறதுக்கா”

“என்னப்பா சொல்றீங்க அவரு அப்புடி பன்ன மாட்டாருப்பு அந்த மாதிரி ஆளு இல்லை”

“ம் சொன்னாங்க அந்த சந்திரசேகர் ஃபோன் பன்னி என்கிட்ட சொன்னான் லட்சகனக்கான ரூபாய் நஷ்டமாம் அவங்களுக்கு”

கங்காவால் எதுவும் பேசமுடியவில்லை.

“ஒழுக்கமா கம்பெனி நடத்துறதுனா நடத்த சொல்லு இல்லைனா என்கிட்ட திரும்ப கொடுக்க சொல்லிடுமா” என சுந்தரம் திட்டிகொண்டிருக்க கங்கா அழுதுகொண்டுநின்றாள்.

“இதுவரைக்கும் லாபத்துல ஓடிகிட்டு இருந்த கம்பெனி மேல லோன்போட்டு ஓட்டிகிட்டு இருக்கான் உன் புருஷன் அது தெரியுமாமா உனக்கு! அதுவுமில்லாம ஒர்கர்ஸ்க்கு மூனுமாசம் சம்பளம் தரலமா”

“நான் கேக்குறேன்ப்பா அவர்கிட்ட” என அழுதாள்.

“அடுத்த வாரம் வருவேன் எனக்கு இதுக்கு ஒரு முடிவு தெரிஞ்சாகனும் இல்லைனா கம்பெனிய குடுத்துட்டு கூலிவேலைக்கு போக சொல்லுமா” என சுந்தரம் பொறிந்துவிட்டு கிளம்பி “ஐ தாத்தா” என ஜான்சி ஓடி வந்து ஒட்டிகொண்டாள்.

“குட்டிமா எப்புடி இருக்கீங்க”

“இந்தாங்க தாத்தா தம்பி உங்ககிட்டதான் வரனுமாம் இங்க பாருங்க கண்ண உங்களதான் பாக்குறான்” என சிரித்தாள். உடனே சேகரை தூக்கியவர் அந்த குழந்தையின் கழுத்தை பார்த்தார்.

“ஏன்மா குழந்தைகழுத்துல ஒரு ஊசி அளவு தங்கம்கூட வச்சுருக்க முடியலைல” என முறைத்துவிட்டு தனது கழுத்திலிருந்த அந்த சங்கிலியை கழற்றி ஜான்சிக்கும் சேகருக்கும் அணிவிக்க சேகர்அதை கையால் எடுத்து வாயில் எச்சில் ஊற கடித்துகொண்டிருதான்.

“ஐ தாத்தா பாருங்க” எனவிளையாட்டு காட்டியவர் “சரிம்மா நான் வாரேன்” என கூற ஜான்சி அழுதாள். “இருங்க தாத்தா போகாதீங்க”

“குட்டிபொண்ணு தாத்தாக்கு நிறைய வேலை இருக்குமா தாத்தா இன்னொரு நாள் வருவேனாம் அப்புறம் போகவே மாட்டேனாம் சரியா” என கன்னதை கிள்ளினார். ஜான்சி அரை மனதுடன் சம்மதித்தாள்.

ஆம் ஜான்சி என பெயர் வைத்தது சுந்தரம்தான். வெள்ளையனை வெளியேற்ற முனைப்புடன் இருந்தவர் இவர். பல போராட்டங்கள் அடிகள் மிதிகள் வாங்கிவிட்டார்.

வெள்ளையர்களுடம் தொழில் முறையில் போராட்டங்களும் நடத்தி இடைஞ்சல் கொடுத்தவர் அதனால்தான் என்னவோ புதிய இந்தியன் கவர்மென்ட் இவருக்கு இந்த மாதிரி கம்பெனி வைக்க ஆதரவாக நின்றது. இந்தியாவின் நிதிநிலையை சரிசெய்ய வேண்டுமல்லவா!

அந்தகாலத்தில் உருவானதுதான் இந்த சுந்தரம் சரஸ்வதி கம்பெனி. ஆனால் அந்த வெள்ளையனை விரட்ட கிடைத்த கம்பெனி இன்று

செல்வத்தின் கையில் சிக்கி தொழிலாலர்கள் அவதிபட்டுகொண்டிருக்கின்றனர்.

அந்த ஆத்திரத்தில் வந்தார் சுந்தரம் ஆனால் செல்வம் இல்லை. இரண்டு நாளுக்கு பின் வந்தவரிடம் எப்படி கேட்பது என தெரியவில்லை கங்காவுக்கு.

சாப்பிடும்போது கனவனிடம் எதுவும் கோபம் வருமாறு பேசகூடாது எனபது அறிந்தவள்தான் இருந்தாலும் மனம் பொருக்காம் கேட்டாள். “அப்பா வந்தாருங்க”

செல்வத்தின் முகம் மாறியது “எதுக்கு”

“இல்ல கம்பெனி” என மெல்லிய குரலில் கூறவே அந்த சாப்பாட்டு தட்டு பறந்தது. அது தொட்டிலில் கிடந்த சேகரின் மீது சாதங்களை கொட்டியது. ஜான்சி தம்பி உறங்கிவிட்டான் என தொட்டிலில் அவனை கிடத்திவிட்டு விளையாட சென்றிருந்தாள்.

“ஐயோ குழந்தைங்க” என பதறிகொண்டு அவனை தூக்கி துடைக்க செல்வம் முறைத்துகொண்டு வெளியேறினார்.

“ஏன்மா தம்பிய குளிப்பாட்டுற” என ஜான்சி வந்தாள். அவளிடம் குடும்ப பிரட்சனையை எப்படி சொல்வது சொன்னாலும் புரியும் வயசு இல்லை அவளுக்கு.

“பெரிய மனுசிமாதிரி கேப்பா போடி போய் விளையாடு” என திட்ட அவள் அழுதுகொண்டே வீட்டினுள் ஓட கங்கா கண்ணீருடன் தன் மகனை துடைத்தாள்.

“ஏன்மா அழுற அப்பா எங்க காணோம்” என ஜான்சி தூங்கும்போது கேட்க “ஜான்சி அம்மா அடிப்பேன் பேசாம தூங்கு” என கங்கா ஒரு அதட்டலில் பயந்துகொண்டு தம்பியின் அருகில் சென்று படுத்துகொண்டாள்.

அடுத்தநாள் ஜான்சி தம்பியுடன் விளையாடிகொண்டிருக்க ஆட்டோவில் வந்து ஒருவர் கங்காவிடம் ஏதோ பேசுவது தெரிந்தது ஜான்சிக்கு. உடனே “அப்பா…!” என அழுற ஆரம்பித்தாள் கங்கா.

ஜான்சிக்கு ஒரே குழப்பம் அவள் யோசித்துகொண்டிருக்கும்போதே கங்கா வந்து ஜான்சியையும் சேகரையும் தூக்கிகொண்டு ஆட்டோவில் ஏறினார். கண்ணீருடன் அந்த நபரும் ஜான்சியிடம் “என்ன படிக்குறீங்க பாப்பா” என கேட்க கங்கா மட்டும் வேறு உலகத்தில் இருந்தாள்.

“சாப்புட்டீங்களா”

“இல்ல மாமா இனிமேதான்”

“என்ன சாப்புடுவீங்க”

“அம்மா சமச்சது சாப்புடுவேன் மாமா”

“தம்பி பேரு என்ன பாப்பா” என அவர் கேள்விகள் ஓயவில்லை.

“அவன் சேகர். எங்க குடும்ப பேரு” என சிரித்தாள்.

இப்படியாக கேள்விகள் ஓட அந்த ஆட்டோ நீண்ட நேரம கழித்து சுந்தரம் தாத்தாவின் வீட்டை அடைய அங்கு துணிகள் சுற்றபட்டு ஒருவர் படுத்திருக்க “அப்பா “ கங்கா மயங்கிவிழுந்தாள்.

ஜான்சி அருகில் சென்று பார்க்க அது தன் தாத்தா சுந்தர்ம வயிற்றில் ரத்தத்திற்கான அடையாளம் கத்தியால் யாரோ குத்தியுள்ளனர். ஆனால் அதை புரந்துகொள்ளும் வயது இல்லை ஜான்சிக்கு. அவளை பொருத்த வரை தன் தாத்தா இறந்துவிட்டார். போன வாரம் தான் ஆசையாக வளர்த்த மணி இறந்ததை போல.

“தாத்தா தாத்தா” என அழுதாள். அவள் கையில் இருந்த குழந்தையை சிலர் வாங்கிகொள்ள கண்ணீருடன் அழுதார். கண்ணீர் எல்லாதையும் மறைத்தது.

அப்போது தன் தந்தை யாருடனோ சன்டையிடுவது தெரிந்தது. ஊர்மக்கள் அனைவரும் அந்த நபரை அங்கிருந்து அடித்து விரட்டினர். ஆனால் ஜான்சிக்கு கண்ணீர் தன் தாத்தா சுந்தரத்தின் மீதுதான் இருந்தது.

தன் தாத்தா பிரிந்தது முதல் அடியாக இருக்க ஆண்டவர் அடுத்த சோதனையை கட்டினார். ஆம் அடுத்த மாதம் தன் தாயும் இறந்துபோனாள். ஜான்சியின் மொத்த உலகமும் இருண்டுபோனது. தம்பிதான் உலகம் ஆனாலும் மனதில் ஏதோ ஒருவித பயம் தொற்றிகொள்ள இரவில் திடீரென எழுந்து. “அம்மா அம்மா” என அழுவாள். செல்வத்தால் தன் மகள் அழுவதை பார்க்க முடியவில்லை. பின் திடீரென அப்பாவை எழுப்பி “அம்மா எப்ப வருவாங்க தாத்தாவ கூட்டிட்டி வர சொல்லுப்பா” என கண்ணீர் விடுவாள். செல்வம் என்ன செய்வது என்று தெரியாமல் “அம்மா சாமிகிட்ட போயிட்டாங்கடா குட்டி தாத்தாவும்தான்” என மடியில் சாய்த்து தூங்க வைப்பார்.

இப்படியே தொடர ஜான்சி தன் அப்பாவின் தாயான ஸ்வர்னாவின் வீட்டிற்கு செல்வம் அனுப்பி வைத்துவிட்டார். அதுதான் ஜான்சியின் குணத்தை மாற்றியமைத்த இடம். பின்ன தன் மாமனாரை கொல்லும் அளவிற்கு செல்வத்திற்கு துணிச்சல் கொடுத்தது கூடவே திட்டம் எல்லாம் இந்த ஸ்வர்னாதானே. அந்த உண்மை தெரிந்த்தால் கங்காவின் உயிரும் பறிக்கபட்டது. இங்குதான் “யாரவேனாலும் அடிக்கலாம்” என பாடம் கற்றாள் ஜான்சி.

பின் ஹாஸ்டலில் தங்கி படித்தாள். மேற்படிப்புக்கு அமெரிக்க பறந்தாள். அங்கும் மேற்படிப்புக்கு தன் தம்பி வந்த போது தனக்கு கிடைத்த மகிழ்ச்சிக்கு ஈடுஇல்லை ஜான்சிக்கு. தன் மனதில் சிறிது சிறிதாக கிடந்த கோபத்தை எடுத்து ஓர் ஆயுதமாக மாற்றியிருந்தனர் சுற்றத்தார். ஆனால் யாரை தாக்குவது என்று தெரியாமல் தன் மனதையே காயபடுத்திகொண்டிருந்த தருனம் அது அப்போதுதான் அந்த கடிதம் தன் தந்தையிடமிருந்த வந்தது. தனது கால்களை சன்முகம் பறித்துவிட்டான் என. முழுகோபத்தையும் அந்த குடும்பத்தின் மீது திணித்தாள். இன்று அவர்களை கூண்டோடு அழிக்க காரில் விரைந்துகெண்டிருக்க ஜான்சியின் கண்ணீர் காற்றில் சிதறி பறந்தது.

ஜெனியின் உயிர் பிறிந்த இடம் அன்று விடுமுறைநாள் என்பதால் சற்று அமைதியாக இருந்தது ஆள்நடமாட்டம் இல்லை. அப்போது வேறு ஒரு காரில் போஸையும் பார்வதியையும் ஏற்றிகொண்டு ஜான்சியின் கார் அருகில் வந்தது.

சந்துருவும் அனைவரும் அங்கு வரவே சந்துரு மட்டம் இறங்கினான். “நீங்க இருங்க நான் பேசிபாக்குறேன்” என அவர்களை உள்ளேயே இருக்க செய்தான்.

அங்கிருந்து ஜான்சி மட்டும் இறங்கினாள். கூடவே தன் தம்பியின் கையில் அந்த துப்பாக்கியை கொடுத்தாள். தன் கையிலும் ஒன்றை எடுத்துகொண்டாள்.

*“அக்கா நான் சண்டை போட வரலைக்கா என்ன பிரட்சனைனு சொல்லுங்க நாம பேசி தீத்துகலாம்”*

*“என்ன பேசி தீக்க போறியா ஹாஹா”*

*“ஏன்டா நீ பேசி தீக்குறதுனால எங்க அப்பா எனக்கு திரும்ப கிடைப்பாரா”*

*“என்ன?”*

*“என்க்கு சின்ன வயசுல இருந்து பாசம்னா என் தம்பி மட்டும்தான்டா எங்கள நல்ல நிலைக்கு கொண்டுவர எங்க அப்பா அவ்வளவு கஷ்டபட்டாரு. சரி நானும் என் தம்பியும் படிச்சு முடிச்சுட்டு எங்க அப்பாகூட சந்தோஷமா வாழனும்னு ஆசையா இருந்தா உங்க அப்பா லாரி வச்சு ஏத்தி அவர் கால உடச்சிட்டாரு” என கோபத்தில் அனலாக தகித்தாள்.*

*“என்னக்கா சொல்றீங்க எனக்கு புரியல”*

*“உனக்கு புரியாதுடா சன்முகம்னு உனக்கு ஒரு அப்பன் இருக்கான்ல அவனுக்கு புரியும் அப்புறம் உன் அம்மா இருக்கலே காவேரி எப்புடிதான் அந்த புனிதமான பேர அவளுக்கு வச்சாங்களோ தூ” என உமிழ்ந்தாள்.*

“அவ ஒரு தே***** அவல்லாம் எங்க அப்பா செல்வத்துக்கு போட்டி” என திட்ட சந்துருக்கு கோபம் வந்தது ஆனால் சுவேதாவுக்காக பொறுத்துகொண்டான்.

ஆனால் அதை கேட்டுகொண்டிருந்த சன்முகம் வெளியே வந்தார். “அவள பத்தி உனக்கு என்னடி தெரியும்” என வந்த வரை பார்த்து.

“வாங்க சார் என் அப்பாவ கொண்ணீங்கள்ள இப்ப நீங்க உயிரா நினைக்குற எல்லாதையும் கொண்ணுடுறேன் அப்பதான் உங்களுக்கு அந்த வலி தெரியும்” என துப்பாக்கியை சந்துருவை நோக்கி உயர்த்த அன்பு பதறிகொண்டு வெளியே வர சுகுவும் வந்தான்.

“இவர விட்டுடுங்க” என அவளிடம் கெஞ்சினாள்.

“இங்கதான உன் பிரன்டு செத்தா இப்ப உன் புருஷன் சாகுறதையும் பாரு” என டிரிகர் செய்தாள். “என்ன கொண்ணுட்டா எல்லாரையும் விட்டுடுவியா” என்றான் சந்துரு தெளிவாக.

“ம்ம் ஓகே” இது ஜான்சி உள்ளே அமர்ந்திருந்த சேகருக்க தலை தன்அக்காவின் செயலை பார்த்து தலை வலிக்க அந்த கனவு மீண்டும் வந்தது. இன்று வந்தது கனவு அல்ல அது நினைவு என உணர்ந்தான்.

ஆம் தன் அக்காவை தன்னிடமிருந்து பிரித்து ஸ்வர்னா பாட்டிவீட்டிற்கு அனுப்பயாகிவிட்டது. இப்போது அந்த குழந்தையை வளர்க்கும் பொறுப்பு அங்கு வேலை செய்த லதாவை வந்தடைந்த்து.

லதா ஓர் இருபது வயதுபெண் கருப்புதான் ஆனால் நல்ல அழகு. திருமனத்திற்கு அவளது அன்னன் பென் பார்த்துகொண்டிருந்தார். சேகர் அந்த லதாவின் அனைப்பில் தாய்மையை உண்ர்ந்து வளர்ந்தான். நான்கு வயது அந்த காட்சியை சேகர் பார்த்திருக்க கூடாது.

ஆம் தன் அன்னை(லதா)வின் சத்தம் தனது தோட்டத்தை ஒட்டியிருந்த ரூமில் கேட்க அங்கு சென்றான். ஒரு புதருக்குள் இருந்து பார்த்தான். அந்த பாலடைந்த கட்டிடத்தில் தனது தந்தை குடித்துவிட்டு லதாவை கற்பழித்த காட்சிதான் அது. “ஏன்டி உன் அன்னன் உனக்கு மாபிள்ளை பாக்குறானாக்கும். என் புள்ளைங்கள நீ வளக்கும்போதே உன்மேல எனக்கு ஆசைவந்துருச்சுடி” என திட்ட தனது உடலை துணிகளால் மறைத்த அந்த பெண் அழுதுகொண்டே அருகிலிருந்த கண்ணாடி துண்டினை எடுத்து தன் கழுத்தை அறுத்துகொள்ள நான்கு வயது குழந்தையின் இதயம் படபடவென் அடிக்க மயங்கி விழுந்தான். ஆனால் மனதில் தன்னை தன் தந்தையாக உருவக படுத்தியுள்ளான். தன் தாயை தான் கொண்ற குற்ற உணர்ச்சி தொற்றிகொள்ள “என்ன மன்னிச்சிடுங்க” என அந்த பெண் இறப்பதற்கு முன் மன்னிப்பு கேட்பதாக ஒரு பிம்பம் ஏற்படுத்திகொண்டான். இதனால் இவன் மனதுக்கு நெருக்கமாக எந்த பெண் வந்தாலும் அந்த லதா இடத்தில் அமர்ந்துவிடுவாள்.

இவன் செல்வமாக தன்னை கருதிகொண்டு "நான் பன்னது தப்புங்க என்ன மன்னிச்சிடுங்க" என அவன் கூற அவள் அதை மதிக்காமல் கழுத்தை அறுத்து இறக்கும் காட்சி வந்துபோகும். இன்று " என் அப்பாக்காக உங்கள கொல்லபோறேன்" என ஜான்சிகூற பதறினான். "அக்கா அப்பா நல்லவரு இல்லக்கா" என கதவை திறக்க அவள் சந்துருவை நோக்கி சுட ஆயத்தமானாள்.

"அக்கா என்ன மன்னிச்சிடு" என அவளை தன் முழுபலத்தை பயன்படுத்தி தள்ளிவிட சிறிதுதூரம் தள்ளிசென்று விழுந்தாள்.

"அப்பா நல்லவரு இல்லக்கா அம்மாவ கொண்ணது அவருதான்" என்று கத்தினான். ஜான்சி தன் தம்பி கூறினாள் எதையும் நம்பி விடுவாள்.

"என்னடா சொல்லுற"

"ஆமாக்கா" என அழுதான். அவளுக்கும் அழுகை வரவே "ஆமாமா செல்வத்த நான் லாரி வச்சு ஏத்தலமா; நம்பு" என சன்முகம் அழுதார்.

"என்ன சொல்றீங்க"

*“உங்க வீட்டல லாதான்னு ஒரு பொண்ணு வேல பாத்துட்டு இருந்தா அவள உங்க அப்பாதான கெடுத்து கெண்ணுட்டாரு. அவங்க அன்னன் என் தங்கச்சியே செத்துட்டா நானும் சாகுறேன்னு போனான். அதான் நான் அவன திருத்தி என் கன்பெனில வேலைக்கு வச்சு பாத்துகிட்டேன். அப்படி அவன் லாரி எடுத்துட்டு போகும்போது உங்க அப்பவ ஏத்திருக்கான்மா!. உன் சொந்தத்த நான் கொண்ணுட்டேன்னு உனக்கு எவ்வளவு ஆத்திரம் இருக்கு அவனுக்கும் அப்புடிதான்மா இருந்திருக்கும் படிச்சி பொண்ணா யோசிம்மா” என சன்முகம் கூற “அக்கா எல்லாதையும் விட்டுடுக்கா” என்றான் சேகர்.*

*ஜான்சிக்கு என்ன செய்வது என்று தெரியவில்லை.*

*“இப்ப நீ யாருக்குக்கா உழைச்சுகிட்டு இருக்க எனக்கு தான நான் சொல்றதையே நீ நம்பல நான் ஏன் இருக்கனும் இந்த உலகத்துல” என தன்னிடமிருந்த துப்பாக்கியை எடுத்து தனது தலையில் வைத்தான் சேகர்.*

*ஜான்சிக்கு இதயம் பதறியது “டே தம்பி அது லோடிங்கல இருக்குடா” என பதறிகொண்டு ஓடி வந்தவள் தன் பகையை அந்த இடத்தில் ஜெனியின் சாட்சியாக கழற்றி வைத்துவிட்டாள். இப்போது சுத்தமான ஜான்சியாக தன்தம்பியை காப்பாற்ற வரும்போது அங்கு ஒரு பைக் அசுர வேகத்தில் கடந்துசெல்லம்போது ஜான்சியின் மீது இடித்து தடுமாறிகீழே விழ ஜான்சி கழுத்தில் பிளேடால் வெட்டிய தடத்துடன் நின்றாள்.*

தன் தம்பியின் கண்ணை பார்த்து கீழே மண்டியிட்டு அமர்ந்தாள். அந்த பைக் மனிதனின் ஹெல்மட் கழற அவன் கையில் ஒரு பிளேட் இருந்தது. அன்போ "ஆசிக்….. " என கூற; சந்துருவோ "ஜான்சி" என அவளை நோக்கி ஓடினான்.

## அத்தியாயம் - 64

ஆம் ஆசிக் தனது காதலிக்கான பலிவாங்குதலை நிகழ்த்திவிட்டான். அதற்குள் சந்துரு அவளை நோக்கி ஓட சேகரும் பின்னாலயே தன் அக்காவை கண்டு ஓடி வந்தான்.

சந்துரு அவளை ஏந்திகொண்டு வரவே ஆசிக் அவனருகில் வந்து "சார் விடுங்க சார் இவ சாகவேண்டியவதான்" என கூறிவிட்டு "ஜெனிக்கு இப்புடிதான்டி வலிச்சிருக்கும் உன்ன கொல்றதுக்காகதான் இவ்வளவு நாள் உயிரோட இருந்தேன்டி இப்ப ஜெனி உயிரவிட்ட இடத்துலயே அவ சாட்சியா உன்ன கொண்ணுட்டேன் சார் கீழ போடுங்க சார் நாயி சாகட்டும்" என திட்டிகொண்டே வர அவனுக்கு ஒரு அறை விழுந்தது.

"அன்பு நீயா?"

“ஆமாடா ஜெனி இப்புடி பன்ன சம்மதிச்சிருப்பாளா? இவங்கள கொண்ணதால அவ ஆத்மா நிம்மதியா இருக்கும்னு நினைக்குறியா”

“ஆனா என் ஜெனிய கொண்ணவள நான் சும்மா விட முடியுமா”

“டேய் நீ ஜெனிய புரிஞ்சுகிட்டது அவ்வளவுதான்டா; என்னதான் அவ கோவமா பேசுனாலும் அவ ஒரு புழுக்குகூட கெடுதல் நினைக்காதவடா அவள காதலிக்குறேன்னு சொல்லுற ஆனா அவள புரிஞ்சுகள. அப்ப நீ அவ அழகமட்டும் தான்டா காதலிச்சிருக்க. அவ மனசு உனக்குபுரியலை” என்று அன்பு திட்டும்முன் காரில் ஏற்றிகொண்டு கிளம்பியிருந்தான் சந்தரு.

ஆசிக்கிற்கு ஜெனி இதை விரும்ப மாட்டாள் என புரிந்துவிட்டுது. அங்கிருந்த காரில் மற்றவர்கள் அனைவரும் ஏற ஆசிக் அங்கேயே நின்றான். கார் வேகமாக பறந்தது.

ரோட்டில் தனித்துவிட பட்ட ஆசிக்கிற்கு இருந்த ஒரே சொந்தம் ஜெனியின் நினைவுகள்தான். கனவுகளில் வந்து அழகாக கேசம் கோதிவிட்டு காதில் காதல் சொல்லுவாள். கவலைகள் சூழ்ந்த நேரத்தில் அருகில் அமர்ந்து ஆறுதல் தருவாள். காற்றிலும் தன் காதலனுக்காக உறங்க அன்னை மடி தருவாள். அந்த குளிர்காற்று ஏனோ இன்று உஷ்னமாக மாறியிருந்தது. புது முடிவு தருவிக்கும் முன் மனதிலிருந்த ஜெனியிடம் கேட்பான். சரி என்றாள் வெட்கத்துடன் சிரிப்பாள். தவறென்றால் தலையில் கொட்டிவிட்டு

கண்களை மூடிகொள்வாள். ஆனால் இந்த முடிவை ஆசிக் உணர்ச்சி வேகத்தில் எடுத்துவிட்டான்.

இந்த கூற்று மெய்பட்டால் ஆம் உணர்ச்சி என்பது ஜெனியுடன் இணைந்தது அல்லவா பின் எப்படி உணர்ச்சிவசபட முடியும். அப்படியானால் ஜெனி என்னை விட்டு போகிறாளா? என்ற எண்ணம் தூளைக்க தன் கண்ணீரை சிந்தியவன் "ஜெனி ப்ளீஸ்டி என்ன மன்னிச்சிடு நான் தெரியாம தப்பு பன்னிட்டேன் என்ன விட்டு போயிடாதடி" என அழுதான். ஆனால் தேவதைகள் வந்து அந்த பைக்கின் அருகில் நின்ற ஜெனியை பட்டு கம்பளம் போர்த்தி ராணியாக அலங்கரித்து மேலே எழுப்ப ஜெனி அவனை ஏக்கத்துடனும் ஒருவித குற்ற உணர்வுடனும் பார்த்தாள்.

"ஜெனி போகாதடி"

என வார்த்தைகள் வர பின் மனதில் ஓர் எண்ணம் "சரி ஜெனி நீ மேல சந்தோஷமா இருக்கனும் இவங்கள கொண்ண பாவம் உனக்கு வரகூடாது நான் அவங்களை எப்படியாவது காப்பாத்துறேன்டி இது சத்தியம்" என கூறிவிட்டு பைக்கின் அருகில் செல்ல அந்த தேவதைகளின் தங்க விளங்கை அறுத்துகொண்டு அந்த பைக்கில் அவன்பின் ஏறி அமரந்துகொண்டு கட்டிகொண்டாள்.

"என்ன மேடம் விட்டுட்டு போனிங்க"

“ம்ம் நீ கொலைகாரனா மாறிட்ட பின்ன எப்புடி உன்ன நம்பி வர முடியும்”

“அது சரி சரி பிடிச்சுகோ கொஞ்சம் வேகமா போக போறேன்டி” என பைக்கை முறுக்க மின்னலாக சீறி பாய்ந்தது.

சந்துருவும் குடும்பத்தினரும் அந்த அவசர அறைக்கு வெளியே காத்துகொண்டிருக்க செவிலயர்கள் போவதும் வருவதுமாக இருந்தனர். சேகர் முற்றிலும் உடைந்துவிட்டான்.

“எங்க ஆக்கா செத்துடுமா” என திரும்ப திரும்ப கேட்க “எதுவும் ஆகாது சேகர் அவ நல்லவ” என சன்முகம் ஆறுதல் செய்துகொண்டிருந்தார். அப்போது அங்கு வந்தான் ஆசிக்.

“சார் என்ன மன்னிச்சிடுங்க” என சேகர் காலில் விழ அன்பு முறைத்துகொண்டு நின்றாள்.

“என் இழப்பு பெருசு சார் ஜெனியோட உயிர எடுத்துட்டாங்க எனக்கு அவதான் உலகம் அந்தகோவத்துல பன்னிடேன் சார் எதுனா தன்டனை குடுக்கனும்னா குடுங்க சார்” என்ற ஆசிக்கை பார்த்த சேகர்.

“நீங்க என்ன பன்னுவீங்க விடுங்க” என மீண்டும் தலை குனிந்துகொண்டான். அப்போது ஆசிக் அங்கு வந்த ஒரு நர்ஸ் ஆசிக்கை பார்த்தாள்.

“ஹேய் ஆசிக் என்னப்பா ஹாஸ்பிட்டல் பக்கம் நீதான் பெரிய அத்தலட் ஆச்சே எதுவம் மெடிக்கல் செக்அப் பன்னனுமா” என கேட்க அவன் கண்ணில் இருந்த நீரை பார்த்தாள்.

“ஏய் என்னடா ஆச்சு” என பதறினாள்.

“இல்ல தேவி உள்ள ஆபரேஷன் நடந்துகிட்டு இருக்கே அவங்க எனக்கு வேண்டபட்டவங்க அதான்” என இழுத்தான்.

உடனே அவனை தனியாக அழைத்து சென்றவள் “அவங்க சீரியஸ்தான்டா அதுவும் O- ரத்தம் சும்மாவே கிடைக்காதுடா அதனால டாக்டர் பர்தரா எதுவம் பன்னமுடியல நான் கூட அதுக்குதான் ஃபோன் பன்ன வந்தேன்” என கூற “எனக்கும் அந்த குருப் தான்”

“ஆனாலும் கொஞ்சம் கஷ்டம்தான்டா” என அவள் முகத்தில் தெளிவாக இருந்தாள் பல ஆபரேஷன் பார்த்திருக்கிறாள் அல்லவா. ஆசிக் கண்கள் மேலும் குளமாகின. அவள் செய்வதறியாது நின்றாள்.அப்போது அவனருகில் நின்ற ஜெனி இவனை பார்த்து

சிரித்துவிட்டு பாசத்துடன் தலையை கோதிவிட்டு பின் அந்த அறைக்குள் சென்று மறைவதாக தோன்றியது.

சிறிது நேரத்தில் "ஏய் டாக்டர் கத்திகிட்டு இருக்காருடி அவங்களுக்கு கான்ஸியஸ் வந்துகிட்டு இருக்கு எல்லாம் கன்ட்ரோலா இருக்குடி சீக்கிரம் வா" என அங்கு வந்த ஒரு பெண் கூற "ம்ம் இவருதும் அதே பிளட்தான்டி" என தேவி நியாபகம் செய்துவிட்டு செல்ல அந்த பெண் வாங்க ஆசிக்(சார்) என இவனை அழைத்து சென்றாள்.

"இவங்க உங்களுக்கு என்ன வேணும்" என ஊசி வலிக்காமல் இருக்க சில கேள்விகள் கேட்டாள். "என் அக்கா" என அமைதியாக கூறினான்.

பின் சிறிது ரத்தம் எடுக்க "ஆமா தேவி உங்களுக்கு என்ன வேணும்"

"தெரிஞ்ச பொண்ணுங்க"

"சொந்தமா"

"இல்லங்க"

"பின்ன?"

“அது எதுக்குங்க” அவள் முகத்தில் சிறிய கலக்கம் வந்துபோனது.

“சரி உங்க பேரு என்னங்க”

“ஆசிக்” எனஅவன் கூற அவள் கண்கள் விரிந்தன. “நீங்கதான் அந்த ஆசிக்கா அப்பாடா நான் உங்கள பாத்துட்டேன்” என அவள் கூறுவதில் ஆச்சரியம் இல்லை.

ஆம் ஜெனியின் நினைவாக பல தொண்டுகளை செய்துகொண்டிருக்கிறான். அதிலும் ஜெனியின் மரணம் அவனை வெகுவாக பாத்ததிருந்த்தாள். இனி யாரையும் சாகவிடபோவதில்லை என மருத்துவம் செவிலியர்கள் படிப்புக்கான பணங்களும் இலவச வகுப்புகளும் என பெரிய அளவில் செய்து கொண்டிருக்கிறான். இந்த பெண்ணாலும் ஒருமுறை பணம் கட்ட முடியவில்லை.

“ஏன்டி டல்லா இருக்க”

“இல்லடி எங்க அப்பா அம்மா வச்சுருந்த காச எடுத்து சீட்டாடி குடிச்சு காலிபன்னிடாருடி இப்ப எப்புடி பீஸ் கட்டுறதுன்னு தெரியல இன்னைக்கு கடைசி நாள் வேற எங்க மாமா காசு தரும்னு நம்பி கடைசில கைய விரிச்சுட்டாங்கடி” என புலம்பினாள்.

“ஒரு நிமிசம்இருடி” என தேவி ஃபோன் செய்து விட்டு வந்தாள். “ம்ம் கட்டியாச்சுடி போய் ஹால்டிக்கட் வாங்கிகோ”

“எப்புடிடி” என அவள் கண்கள் விரிய ஆசிக்கை பற்றி விளக்கினாள். “அந்த அண்ணதான்டி ஜெனி சேவை மையம்னு ஒன்னு வச்சு இதுவரைக்கும் எனக்கு பீஸ் கட்டுது” என்றாள். அந்த பெண்ணிற்கு இவனை வாழ்வில் ஒருநாளாவது பார்க்க ஆசை இன்று பார்த்துவிட்டதாள் இந்த மகிழ்ச்சி.

“சார் நான் இப்ப நல்லா சம்பாதிக்குறேன் சார் உங்கள எனக்கு ரொம்ப பிடிக்கும்” என கூறி கொண்டிருக்க “பிளட் எடுத்துட்டியாடி” என அந்த சிவப்பு தண்ணீரை எடுத்துகொண்டு செல்லும்போது ஆசிக்கின் காதில் “அண்ணா நீங்கதான் ஆசிக்னு சொல்லிடாதீங்க அப்புறம் இது லூசுமாதிரி பிகேவ் பன்னும் சின்ன கிரஸ் இருக்கு உங்கமேல இந்த பொண்ணுக்கு ஜாக்கிருதை” என செல்ல அந்த அறிவிப்ப கால தாமதம்.

“ஆமா நர்ஸ் உங்க பேரு என்ன”

“ஜெனிபர்” என கூறிவிட்டு தன் நம்பர் எழுதபட்ட ஒரு காகிதததை கொடுத்துவிட்டு அறையில் புகுந்தாள். அந்த தாளின் பின் புறம் “உங்கள எனக்கு பிடிச்சிருக்கு” என இருந்தது.

சிறிது நேரம் கழிய டாக்டர் வெளியே வர அங்கு ஆசிக் நிற்பதை பார்த்து தலைகுனிந்து நின்றாள் ஜெனி.

“டாக்டர் அவங்களுக்கு” என சந்துரு கேட்க

“அவங்களுக்கு எதுவும் இல்ல நரம்பு எதுலையும் கட் ஆகல ஆனா குரல் வளைலதான் கொஞ்சம் கீறல் இருக்கு”

“என்ன சொல்றீங்க” என பதறினான் சேகர்.

“இல்ல ஒரு மூனு மாசம் பேச முடியாது” என சந்துருவின் முகத்தை பார்த்துகூறினார். “அப்புறம் ஸ்பீச் தரபி கொடுக்கனும் இனிமே அவங்க ரொம்ப நேரம் பேசகூடாது அன்ட் சத்தமா பேசகூடாது சரியா”

“எத்தன நாளைக்கு டாக்டார்”

“எப்பவும்தான்” என டாக்டர் நகன்றார்.

பார்வதியும் அன்பும் வீட்டிற்கு சென்று அனைவருக்கும் சாப்பாடு எடுத்து வந்தனர். மற்ற அனைவரும் ஜான்சிக்கு காவலாக இருந்தனர். அன்பும் சுவேதாவம் அவளை ஓர் குழந்தையாக

பார்த்துகொண்டனர். தன் உயிரை கொல்ல வந்தவளுக்கும் பாசம் அளிப்பவள் அன்புஅரிசி சுவேதாவும் அப்படியே.

இரண்டு வாரங்கள் ஓட சுவேதா அங்கு இருந்தால் காயம் ஆறதுவங்கியது. சுவேதா ஜான்சியின் அருகில் அமர்ந்து இருந்தால். அன்பரசி அந்த ஆரஞ்சுபழத்தை பாடாய் படுத்திகொண்டிருந்தாள். இவர்களை பார்த்த ஜான்சியின் மனம் கனமாக இருந்தது.

'ஜான்சி நீ இவங்கள கொல்லனும்னு பாத்த ஆனா இவங்க உன்ன காப்பாத்தனும்னு நினைக்குறாங்க அதுலையும் இந்த சுவேதா சொத்துக்கு பங்கா வந்துடுவாளோனு பயந்த ஆனா இப்புடி அன்பா பாத்துகிறா என்ன மன்னிச்சிடுமா நீ வயசுல சின்னவளா இருந்தாலும் என்னவிட மனசுல நல்லவமா" என கண்ணீர் விட ஜான்சி இப்போதுதான் அழுகிறாள் அடுத்தவர் முன்.

அவளது கண்ணீரை துடைத்துவிட்ட சுவேதா "ஏன் அக்கா அழறீங்க நாங்க இருக்கோம் எதுனாலும் சொல்லுங்க"

அந்த நேரம் அரிசி "இந்தாங்க ஜூஸ்" என குடுக்க அதை வாங்கி கீழே வைத்தாள். ஜான்சியோ நான் பேசனும் என்பதுபோல சைகை செய்ய

"அக்கா டாக்டர் ஸ்ட்ரைன் பன்ன வேணாம்னு சொல்லிருக்காங்க" என தடுத்தாள் சுவேதா.

இருந்தாலும் ஜான்சி முயன்று “ரொம்ப நன்றிம்மா தங்கச்சி அக்காவ மன்னிச்சிடு” என வார்த்தை வந்து மறைய அவளது தொண்டையில் ரணமும் கண்ணீர் குளமாகவும் மாறியது.

“ஐயோ அக்கா எதுக்கு மன்னிப்பு கேக்குறீங்க நீங்க பெரியவங்க” என தடுத்துவிட்டு ஜான்சியை தலையனையில் சாய்த்தாள். ஆனால் அவள் “எனக்கு ஒரு பேப்பர் வேனும் எனபது போல சைகைகாட்ட” ஒரு நோட் எடுத்து கொடுத்தாள் அரிசி. பின் மீதமிருந்த ஆரஞ்சு பழத்தில் எதாவது வருகிறதா என பார்த்துகொண்டிருக்க ஜான்சி எழுதி முடித்து சுவேதாவிடம் கொடுத்தாள்.

அதை படித்தாள் சுவேதா. அதில் சுவேதா நீ என் வாரிசுடா ஆமா நீ சுந்தரம்-சரஸ்வதி குடும்பத்தோட கடைகுட்டிடா. என வாசிக்க சுவேதா ஜான்சியை பார்த்தாள். அவள் கண்ணீருடன் மேலும் வாசிக்க சொன்னாள்.

ஜான்சியும் சேகரும் திரும்ப இந்தியா வரவே அவளுக்கு இருக்கும் பொறுப்பு காவேரி குடும்பத்த முழுசா அழிக்கனும். தனது தம்பிக்கு நல்ல ஒரு கம்பெனியை கட்டமைக்கனும் என்ற இரண்டுதான்.

தன் ஆடிட்டரை அழைத்தாள். “சார் அப்பாவோட பிராபர்டி டீடயில்ய்ஸ் எனக்கு வேணும்.”

“ஓகேம்மா ஆனா அப்பா இப்புடி திடிர்னு இந்தமுடிவு எடுப்பாருன்னு எனக்கு தெரியாதும்மா”

“லுக் மிஸ்டர் இந்த அனுதாபம் காட்டற வேலைலாம் என்கிட்ட வேனாம் அன்ட் கால் மி மேடம் ஆர் யு அன்டர்ஸ்டேன்ட்” என கத்த அவர் “ஒகே மேடம்” என கிளம்ப “வந்துட்டானுக பன்னுற தப்ப மறைக்க எதாவது சொல்லிகிட்டு” என திட்டியது அவர் காதில் விழாமல் இல்லை.

அவர் கொண்டுவந்த டாகுமென்டை பார்த்தவள். “என்ன சார் இது”

“இது உயில்மா உங்க அப்பா உங்களுக்குதான் எழுதியிருக்காரு”

“இதோட ஒரிஜினல் எங்க”

“அது உங்க வக்கில்கிட்டதான் இருக்கும்”

“ம்ம்” என வாசித்து பார்த்தாள்.

அதில். இது நான் சுய நினைவோட எழுதுற உயில். எனக்கு ஜான்சி மூத்த பொண்ணு மற்றம் சேகர் ஒரு பையன். கூட அபின்னு ஒரு மனைவி எனக்கு இருந்தாங்க அவங்களுக்கு சுவேதான்னு ஒரு

பொண்ணு இருக்கிறாள். அவதான் என்னுடைய இளைய வாரிசு. பட்டினத்தில் இருந்த என்னுடைய சில மில்கள் அவளது பெயரில் மாற்றி எழுதிவிட்டேன் மேற்படி என் உடல்நிலை மோசமான காரணத்தால் என்னுடைய சொத்துக்களில் சுவேதாவுக்கும் பங்கு உள்ளது என்பதையும் என் இளையமகள் சுவேதாவை மூத்த மகள் ஜான்சியின் பொறுப்பில் விடுகிறேன் எனவும் கூறி கொள்கிறேன். மேற்படி விவரங்கள் பின்னால் இனைத்துள்ளேன்.

இப்படிக்கு,

செல்வதனசேகர்.

என ஜான்சியின் தந்தை செல்வமுமாய் சுவேதாவின் தந்தை தனசேகருமாய் கூற ஜான்சிக்கு தன் தம்பியின் சொத்தில் பங்கு கேட்க யாருக்கும் உரிமை இல்லை என நினைத்தாள். அப்போது சுவேதாவை கண்காணிக்க அவள் "போடா நீயும் உன் சாப்பாடும்" என ஜான்சியின் எதிரி சந்துருவின் வீட்டிலிருந்து சிரித்துகொண்டே ஓடி வர அந்த கருமை பூசிய கண்ணாடி வழியே பார்த்தாள். பின் சந்துருவுடன் சிரித்துகொண்டே காரில் ஏறி சென்றாள் சுவேதா.

ஜான்சியின் மனதில் 'அப்ப அபிநயான்னு ஒரு வேசிய வச்சு எங்க அப்பாவ மடக்கிபோட்டு இப்ப அவளுக்கு சுவேதா வாரிசா; நேரடியா எங்க அப்பாகூட மோத முடியாம அந்த சன்முகம் இப்புடி எமோஷனல் பிளாக்மெயில் பன்னி எங்க சொத்தோட ஒரு பாதிய காவேரி கம்பெனி எடுத்துகலாம்னு பாக்குறீங்களா! அதுக்கு சுவேதா

இருந்தாதான்" என மனதில்கூறியவளுக்கு கிடைத்த தகவல் சுவேதா மில்ஸ் காவேரி மில்ஸோட பார்ட்னர் என்பது கூடவே இந்த கம்பெனியின் முடிவு எடுக்கும் பொறுப்பு சந்துருவிடமிருந்தது. இந்த தரவுகள் இது சன்முகத்தின் சதிதிட்டம் என ஜான்சியை நம்ப செய்தது.

ஆனா உனக்கு எதுவும் தெரியாதுங்குறது எனக்கு இப்பதான் குட்டிமா தெரியும் அக்கா உன்ன கஷ்டபடுத்திருந்தா மன்னிச்சிடுடா நீ எங்க வீட்ட தங்ககுட்டிடா அக்காவ உன்கூட சேத்துகுவியா.

கோவம் இருந்தா சொல்லிடு நான் தனியா இருந்துகிறேன் ஆனா உன் அண்ணன் சேகரையாவது உன்கூட சேத்துகோடா சுவேதா. இது அக்காவவோட ஆசை என அந்த கடிதம் முடிய சுவேதாவின் கண்ணில் கண்ணீர் அது ஏன் வந்தது என்று தெரியவில்லை.

நீண்ட நாட்களாள பாசம் என்பதை அறியாதவலுக்கு கோடையில் பெய்த அடைமழையாக சந்துரு அன்பு மஞ்சு போஸ்மாமா சன்முகம் அப்பா பார்வதி என தொடர்ச்சியாக பெய்ய தனது உண்மையான சொந்தங்களான ஜான்சி அக்கா கிடைத்துவிட்டார் கூடவே சேகர் அண்ணா போனஸ். செல்வதனசேகர் வாரிசு ஜான்சி சேகர் சுவேதா.

"அக்கா" என ஜான்சியை கட்டிகொண்டாள் சுவேதா கண்ணீருடன்.

தன் தங்கையை அனைத்தாள் சுவேதா. இப்படி ஒரு பாசமான தங்கையின் அரவனைப்பை இன்று ஜான்சி உணர இப்படியே இறந்தாலும் சரி என்று தோன்றியது.

அன்பு அவர்களை பார்த்துகொண்டு நிற்க "இத புடிம்மா" என சன்முகம் வந்தார் கூட சந்துரு பார்வதி போஸ் சேகர் ஆசிக்(ஜான்சியை பார்க்கம் சாக்கில் ஜெனியும் வந்தாள்). அனைவரும் ஜான்சியை சுற்றி அம்ர்ந்தனர். கூட நந்தனி அம்மா வந்திருக்க சுவேதாவோ "இதுதான் நம்ம அம்மாக்கா" என ஆர்வமாக கூற "அவரோட பொண்ணாமா நீ அழகா இருக்க என்ன அவர மாதிரி முன் கோவம் இருக்கு! இனி நீ என் கன்ட்ரோல்தான்மா சொல்லிட்டேன் உன்ன கட்டி கொடுக்குற வரைக்கும் நீ என் குழந்தைதான்" என கன்டிப்பாக ஜான்சியை பார்த்து கூறிவிட்டார் நந்தினி அம்மா.

"அத்த நாங்க எங்க அன்னய கூட்டி போயிடுவோம்" என அரிசி மல்லுக்கு நின்றாள்.

"ஏய் நிறுத்துங்கப்பா இவங்க எங்க அக்கா என்கூடதான் இருப்பாங்க" என சுவேதாவின் வாதம்.

இப்படியே சண்டை தொடர "ஹலோ இங்க கவனிங்கப்பா" என சந்துரு கூறினான்.

*திடீரென அவன் கையின் பின்னாலிருந்து அந்த கேக் முளைக்க “ஹாப்பி பர்த்டே ஜான்சி அக்கா” என அந்த மருத்துவமனையின் அமைதியை குலைக்க “ஏங்க சத்தம் போட வேனாம்னு சொல்லுங்க டாக்டர் திட்டுவாறு” இது ஜெனியிம் புலம்பல் (என்னுடயதும்தான் நீண்ட நாள் கழித்து சுவேதாவுக்கு சொந்தம் கிடைத்ததாள் ஏற்படும் சத்ததின் அளவை யூகித்து பாருங்கள்)*

*பிறந்தநாள் என்றால் “நான் ஏன் பிறந்தேன்னே தெரியலடா தம்பி எனக்கு பிறந்தநாள்தான் கேடா” என கூறி நகர்வாள். இன்று சிப்பிக்குள் முத்தாள அதை ரசித்தாள். ஜான்சி.*

*மருத்துவமனை விழாகோலம் பூண்ட ஜான்சியை சுற்றி அனைவரும் அமர்ந்தனர். அவர்களை பார்த்த ஜான்சி தன் எதிரியாக இருக்கும் சன்முகத்தை பார்த்தாள். அவர் முகத்தில் ஒரு புன்னகை அழகாக அந்த புன்னகையை பார்த்ததும் அவர் கையை பிடித்துகொண்டு சற்று சிரம்பட்டு “ என்ன மன்னிச்சிடுங்க சார்” என கண்ணீர் விட்டாள்.*

*“எதுக்கும்மா மன்னிப்பு! சொந்தகாரங்க மன்னிப்பு கேக்கலாமா?” கண்ணில் நீருடன் சிரிக்க முயன்றார். பின் “நீ உன் குடும்பத்த பத்தி முழுசா தெரிஞ்சுக்காமதான இப்புடி நடந்துகிட்டு உன் மேல தப்பு இல்லம்மா அப்புறம் நீ அழிக்க நினைக்குறியே காவேரி மில்ஸ் அப்புறம் அதோட ஓனர் சந்துரு இவங்க யாருன்னு தெரியுமா?”*

# அத்தியாயம் - 65

அனைவரும் ஓய்வு எடுத்தாலும் இந்த சூரியன் மட்டும் அதன் வேலைகளை செவ்வனே செய்துகாலையில் உதயமாகிகொண்டு காவேரியை காண வந்தது. அந்த சூரியனை ஆச்சரியமாக பார்த்துகொண்டிருந்தாள். அதைவிட அவளுக்கு இருக்கும் ஆச்சரியம் சூரியனைவிட வேகமாக ஓடும் தன் தந்தை சுந்தரம்தான். காவேரிக்கு மனதில் இருந்த அந்த எண்ணம் எல்லாம் காதல்தான் வேறுஎன்ன தன் தந்தையிடம் எப்படிகூறுவது என தயங்கிகொண்டிருந்தாள்.

“என்னடி லீவு விட்டா எழுந்திரிக்குறது பத்து மணி அதுலையும் வானத்த பாத்துகிட்டு என்ன யோசிச்சிட்டு இருக்க”

“அக்கா எப்ப வந்த” என ஆர்வமாக எழுந்துகட்டிகொண்டாள் தன் உடன் பிறப்பான கங்காவை.

“ஆமாடி நீ நாளைக்குதான் எந்திரிப்பேன்னு பாத்தேன் பரவாயில்ல எந்திரிச்சுட்ட இந்த டீ சாப்புடு”

“நான் என்ன உன்ன மாதிரியா பிரஸ்பன்னிட்டுதான் சாப்புடுவேன்” என கண்ண்டித்தாள் காவேரி.

“அடி கழுத ஒன்னு வச்சா தெரியும். உனக்கு முதல்ல பிரஸ் பிடிச்சு பல்லு விளக்கிவிட்டுது இந்த அக்காதான் தெரிஞ்சுகோ”

“ஆமா ஆமா சீமைல சொன்னாங்க” என அந்த கோபால் பல்பொடியை தட்டினாள் தனது குதிரைமுடி பிரஸ்ஸில் மகளுக்கு வாயில் கீறிவிடும் என வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்திருந்தார் காவேரியின் தந்தை லிங்கம்.

“கேட்டுபாருடி சொல்லுவாங்க” என கங்கா வேலைகளை தொடர்ந்தார். சிறிது நேரத்தில் காவேரி உள்ளே வரவே “டீய குடுக்கா குடிப்போம்” என நின்றாள்.

“வாய திற”

“எதுக்குனு சொல்லுறீங்கள”

“திறடி” என்றதும் தன் அக்காவின் வார்த்தைக்கு மறுவார்த்தை இல்லை திறந்தாள் காவேரி. “இந்த சர்கரை” என வாயில் போட “எதுக்கு அக்கா”

“ம்ம் நம்ம வீட்டுக்கு இன்னோரு குட்டிவாரிசு”என கங்கா கூற “ம்ம் கலக்கு மூனாவதா!! ஏன் மாமவுக்கு ஜான்சியும் சேகரும் போதாதா” என்று கிண்டல் செய்தாள்.

“ஏய் எனக்கு தெம்பிருக்கு நான் பெத்துபோடுறேன் உனக்கு என்ன”

“ஆமா அக்கா அதுவும் சரிதான் ஆனா ஒரு கன்டிஸன் அந்த ரெண்டும்தான் அப்பாவீட்டு வாரிசு மாதிரி ஸ்வர்னா அத்த வீட்டுலயே தங்கிடுச்சுங்க இதாவது நம்ம வீட்டுல கிடக்குற மாதிரி பெத்துபோடுமா மகராசி” என தன் அக்கா இல்லை தாயை கிண்டல் செய்துகொண்டிருந்தாள்.

“ம்ம் என்கிட்ட ஏன்டி கேக்குற பிறந்ததும் தூக்கிட்டு வந்துடு”

“சொல்லிடேல பன்னிடலாம்” என காவேரி அந்த சீன கண்ணாடியால் செய்யபட்டிருந்த டம்ளரின் தன் தேன் இதழ்களை அமிழ்த்தி எடுக்க உதட்டில் ஒட்டிய சிறு துளிகள் மின்ன வைரமாக ஜொலித்தன.

காவேரி வீட்டின் செல்ல குழந்தை கடைகுட்டி என்றால் அப்படிதான் அதுபோல தவமிருந்த பிறந்தவள். இவளது துயரம் தன் தாயை பார்க்க ஆசையாக வந்தால் அவளுக்கு பதில் அங்கு இருந்தது அக்கா கங்காதான். ஆம் தாய் சரஸ்வதி காவேரி பிறக்கும்போது காலமாகிவிட்டார். அந்த கவலை தன் சகோதரிக்கு சிறிதும்

வரகூடாது என்பது கங்காவின் ஆசை. புன்னிய நதிகளாய் தன் மகள் இருவருக்கும் கங்கா காவேரி என பெயரிட்டிருந்தார்.

தன் தங்கைக்காவே வாழவேண்டும் என நினைத்திருந்தாள் கங்கா. ஆனால் கடவுள் கணக்கு என்பது வினோதம். அந்த நாள் அறங்கேறியது. இருபத்திரண்டு வயது அழகுடன் அந்த கோவிலை சுற்றிவந்தாள் கங்கா. பார்ப்பவர் கண்களை எடுத்தாள் நினைவுகளில் ஒட்டிகொள்ளும் பேரழகி.

அவள் பின்னால் அழகிய பதினைந்துவயது சுட்டிபெணாக காவேரி வர அங்கு படிகட்டில் அமர்ந்திருந்தனர் ஓர் பையனும் அவரது தாயும். “அம்மா இங்க வந்து என் டைம் வேஸ்ட் பன்றியா” என திட்டிகொண்டிருக்க

“இங்க பாருடா நீ கல்யானத்துக்கு ஒத்துகோ அப்பதான் நான் வருவேன்” என அடம்பிடித்தாள்.

“அட போமா நான் கட்டிகிற அளவுக்கு அழகி இங்க பிறக்கல நீ வந்தா வா இல்லைனா நடந்துவா” நா கிளம்புறேன் “ என கார் சாவியை சுழற்றிகொண்டு படியிலிருந்து கீழே இறங்க அவள்மீது மோதி இருவரும் சரிந்தனர். அருகிலிருந்த காவேரி “ஐயோடாடா” என ராகம்பாடினாள்.

“உடனே எழுந்துகொண்டவன் ஏம்மா பாத்துபோகமாட்டியா” என திட்ட காவேரிக்கு கோபம் அணைகட்டை உடைத்தது. “ஏய் நீதான்டா எங்க அக்கா மேல இடிச்ச ஒரு சாரி கேக்காம என்னடா தெனாவட்டா பேசுற” என பாய்ந்தாள். ஆனால் “சும்மா இரு காவேரி கோவில்ல என்ன சத்தம் போட்டுகிட்டு” என அவளை அமைதியாக்கினாள்.

அவர்கள் சென்றதும் சிலையாக நின்றான் எல்லாம் அவள் அழகில் மயங்கிதான். “என்னடா செல்வம் பேசிடலாமா”

“ம்ம் பேசிருமா”

“அட பாவி இது உங்க மாமா சந்திரசேகர் இருக்கரே அவரோட பார்ட்னர் பொண்ணுடா”

“என்னமா சொல்லுற நான் பாத்தது இல்லையே”

“சரியா போச்சு வா” என இருவரும் கிளம்பி நேராக சந்திரசேகர் வீட்டை அடைந்தனர்.

அங்கே “வாம்மா ஸ்வர்னா என்ன திடிர்னு”

*“இல்லனா கோவிலுக்கு போயிட்டு வந்தேன் அப்புடியே உங்கள பாத்துட்டு போகலாம்னு” என இழுத்தாள். அவள் இப்படி இழுத்தாள் பெரிய தொகை கேட்பாள் என்று அர்த்தம். இப்படி பல லட்சங்கள் செல்வம் தொழில் ஆரம்பிக்கிறான் என வாங்கி சென்றுள்ளார். ஆனால் அந்த தொழிலைதான் காணவில்லை.*

*“உள்ள கணக்குபிள்ளை இருக்காருமா வாங்கிட்டு போங்க நான் கொஞ்சம் முக்கியமான வேலையா போறேன்” என முன்னால் செல்ல ஸ்வர்னா குறுக்கே வந்து நின்றாள்.*

*“என்னமா”*

*“இல்லனா உங்க பார்ட்னர் சுந்தரலிங்கம் இருக்காருல அதான்* **SS-COMPANY** *ஓனர்”*

*“ஆமா அவன் இன்னைக்கு என்கிட்ட காவேரி மில்ஸ்னு புதுசா ஒன்னு ஓபன் பன்னி ஒப்படைக்கபோறான் அதுக்குதான் இப்ப கிளம்பிகிட்டு இருக்கேன்”*

*“அவங்க பொண்ண என் பையனுக்கு” என மீண்டும் இழுத்தாள்.*

*ஆனால் சந்திரசேகர் யோசித்தார். “இல்லமா மாப்ள எதுவும் தொழில் இல்ல அதான் எப்புடி நான் அவன்கிட்ட பொண்ணுகேப்பேன்”*

“அவங்க மில்ல பாத்துகுவான் அண்ணா”

“அதிக்கில்லமா” என மறுத்தார்

“உனக்குதான் கல்யானம் ஆகல ஒன்டிகட்டயா கிடக்க இப்புடி சொத்து சேத்து என்ன பன்னபோற. அதுமாதிரி என் பையனும் ஆகனும் அதுதான உன் ஆசை” என கண்ணை கசக்கினாள்.

இது தன் அண்ணனிடம் காரியம் சாதிக்க பன்னும் வேசம் “சரிம்மா நான் கேக்குறேன்” என கிளம்ப வழியெல்லாம் யோசனை அவள் கூறிய வாசகம் திரும்ப திரும்ப கேட்டது. “ஒன்டிகட்டதான நீ”

உலகமே அப்படி கூற பழகிவிட்டது சந்திரசேகருக்கு பின் என்ன செய்ய முடியும் கல்யானம் ஆன சில நாட்களிலேயே கனவனை பறிகொடுத்து வந்த தங்கையை கண்ணாக பார்த்தார். ஆனால் ஸ்வர்னாவுக்கு புது காதல் பூக்க ஓடி சென்று இப்போது செல்வதனசேகர் வளர்ந்துநிற்கிறான்.

ஒன்டிகட்ட என்ற வார்த்தையை கேட்கும்போதெல்லாம் திரும்பி பார்ப்பார் அதிர் முழுவதும் கஷ்டமும் ஸ்வர்னாவம்தான் இருப்பார்கள். இதில் தன் வாழ்கை எங்கு என அவர் தேடும்போதுதான் அதில் மின்மினி பூச்சியாய் காவேரியின் அன்பு இருக்கும்.

காவேரி பிறந்தவுடன் தன் வீட்டிற்கு தூக்கிவந்துவிட்டார் அல்லவா! அவரிடமிருந்து தனது குழந்தையை வாங்க சுந்தரலிங்கம்பட்ட பாடு சொல்லிமாலாது கேட்டாள் “டேய் சரஸ்வதியும் இறந்துபோயிடுச்சு பாவம் இந்த குழந்தைய நான் வளக்குறேன்டா” என சந்திரசேகர் கேட்க “சித்தப்பா இவ என் தங்கச்சி நான் வளக்குறேன்” என்ற கங்காவின் வார்த்தைக்குதான் இசைந்தார்.

தினமும் காவேரியை பார்க்காமல் நாட்கள் நகறுவதில்லை. சிறுவயதில அவளை தோளில் தூக்கி நடப்பதும் யானை சவாரி காட்டுவதும் என காவேரிக்கு தன் அப்பா சந்தரசேகர்தான் என்ற குழப்பம் வந்துபோகும். ஆனால் சுந்தரலிங்கம் கம்பெனியை வளர்ப்பதிலேயே கண்ணாக இருந்தார். இப்போது பதினைந்து வயது பெரியமனுசி அதனால் மடியில் வந்து அமர்ந்துகொள்ள சந்திரசேகர் அனுமதிப்பதில்லை. ஆனாலும் காவேரி தன் தந்தையை ஒட்டிகொண்டுதான் அமர்வாள். வளர்ப்பு தந்தையா இல்லை உண்மையான தந்தை இவர்தானா என பலர் குழம்புவர்.

பிஸினஸில் சந்திரசேகருக்கும் சுந்தரலிங்கத்திற்கும் நல்ல இனக்கம் உள்ளது. ஆனால் தன் தங்கை மகனுக்கு எப்படி கங்காவை பெண் கேட்பது தன் நண்பனிடம் என்ற குழப்பம் இருந்தது.

காவேரி மில்ஸ் முன் வண்டி நிற்க அங்கு சுந்தரலிங்கம் நின்றிந்தார்.

“டேய் சந்துரு வர்ரதுக்கு இவ்வளவு நேரமாடா”

“டேய் தங்கச்சி வந்திருந்திச்சுடா”

“ஓ சரிடா! சரி இந்த கம்பெனிய உனக்கு நான் தர்ரேன் ஆனா எனக்கு போட்டியா நீ நடத்துவியா அவ்வளவு திறமை இருக்கா” என சிரித்தார்.

“டேய் சின்னவயசுல ஒட்ட போட்டில நீ அழகூடாதுனாதான் விட்டுகொடுத்தேன். இந்த பிஸினஸ்ல விட்டு கொடுப்பேன்னு எதிர்பாக்காத” என கூற இருவரும் சிரித்தனர் அந்த பத்திரத்தில் கையொப்பமிட SS-COMPANY தனக்கான போட்டியாளரை தானே உருவாக்கியது.அதுவும் தன் நண்பன். அப்போதுதானே வேகமாக முன்னேற முடியும் என்ற யுக்திதான் அது.

கையெப்பமிட்டு வெளியே வர சுந்தரலிங்கம் தன் நண்பனின் முகத்தை வைத்தே கண்டுபிடித்துவிட்டார். “என்ன ஜீ உடம்பு மட்டும்தான் இங்க இருக்க ஆள் எங்கடா இருக்க”

“ஒன்னுமில்லடா”

“அப்ப ஏதோ இருக்கு சொல்லுடா” என சுந்தரலிங்கம் விடவில்லை.

“உன்கிட்ட எப்பிட சொல்றது”

"என்னடா இது நமக்குள்ள சும்மா சொல்லு"

"இல்லடா உன் பொண்ண என் தங்கச்சி கோயில்ல பாத்திருக்கும் போல அதான்"

"அவ பையனுக்கு கேட்டாங்களா" என சுந்தரலிங்கம் முடித்தார். ஆனால் சந்திரசேகர் குற்ற உணர்வில் நிற்க "இதுக்கு என்னடா தயக்கம்! டேய் கங்காவ என் மாப்ளைக்கு கட்டிகுடுடா அப்புடின்னு உத்தரவு குடுடா நாம எல்லாம் ஒன்னுகுள்ள ஒன்னு" என அவன் கூறுவான் என சந்திரசேகர் சிறிதும் சிந்திக்கவில்லை.

அடுத்ததாக பெண்பார்க்கும் படலம் அங்கு தன் தாயிடம் "அம்மா நான் கங்காவ கேக்கலமா என்ன திட்டுச்சே அந்த பொண்ணு அததான் கேட்டேன்" என காவேரியை கூற "டேய் அவ சின்ன பொண்ணுடா அதுவுமில்லாம அக்காவ கட்டிகுடுக்காம தங்கச்சிய எப்புடிடா" என அவர் தன் மகனிடம் ரகசியம் பேசினார்.

அதை பார்த்த சுந்தரலிங்கம் "என்னமா பொண்ணுக்கு என்ன போடுவோம்னு பேசிகிறீங்களா! நம்ம கம்பெனிய மாப்ளயே பாக்கட்டும் அதுவுமில்லாம நானும் என் பொண்ணுங்கிட்ட அன்பா பழகி நாள் ஆச்சு அதான் கொஞ்சம் ரெஸ்ட் எடுக்கலாம்னு பாக்குறேன்" என கூற ஸ்வர்னாவுக்கு பணத்தில் ஆசை தொற்றிகொள்ள "டேய் இப்ப அக்காவ கட்டிக்க அப்புறம்

நொண்டி சாக்கு சொல்லி தங்கச்சிய கேக்லாம்" என திட்டம் முடிவானது.

பின் திருமனம் முடிய காவேரி தவித்தாள். இந்த உலகத்தில் யாருக்கும் வராத சோதனை அது ஆம் தாய் கல்யானமாகி வேறு வீட்டிற்கு தன்னைவிட்டு செல்வதை யாரால்தான் தாங்கிகொள்ள முடியும்.

"அக்கா விட்டுட்டு போகாதக்கா" என அழுதாள். ஆனால் சம்பிரதாயம் பிரித்தது அவர்களை. அந்த தனிமையை விரட்ட புத்தகங்களில் மூழ்கினாள் காவேரி. கல்லூரி என மேற்படிப்பு தொடர ஒருநாள் அந்த சந்தையில் அந்த சம்பவம் நடந்த்து.

பொம்மையில் அழகாக தெருக்கலில் விற்றுவரும் அந்த பொம்மை குழந்தைகளை பார்த்தாள் கைதட்டும். மழலைகள் கூட்டமாக கூடவே வாட்ச் பாம்பு மீசை செயின் என மிட்டாயால் செய்து மாட்டிவிடுவார் அந்த மாமா. அந்த மிட்டாய் என்றாள் காவேரிக்கு ஆசை. மாடியிலிருந்து ஒரு ஜவ்வுமிட்டாய் காரன் சந்தை நோக்கி செல்வதை பார்த்தாள். உடனே இறங்கி சந்தையை நோக்கி ஓடினாள் சாப்பிட்டு பல நாள் ஆச்சு அல்லவா. இருபது வயது பெண் தன்னை ஒரு குழந்தையாக எண்ணிகொண்டு ஓடினாள். ஆனால் அந்த மாபெரும் சந்தையில் அவன் எங்கு சென்றான் என்பது தெரியவில்லை.

ஜல் ஜல் என்ற சத்தம் காவேரியின் பின்னால் ஒலித்தது. சட்டென திரும்பி பார்க்க அந்த ஜவ்வுமிட்டாய்காரன் நின்றிருந்தான். காவேரியின் வாயில் நீர் சுரக்க அவனது காலுக்கடியில் சில குழந்தைகள் நின்றிருந்தனர். அவர்களுடன் குழந்தையுடன் குழந்தையாக ஒருவன் அமர்ந்திருந்தான். ஆம் அந்த பேட்டையில் வாழும் அனைத்து குழந்தைகளும் ஆசைபடும் என நினைத்து அனைவரையும் அழைத்து வந்து ஆளுக்கு மீசை வாட்ச் மற்றும் கொழுசு வரை போட்டுவிட்டார் அந்த பொம்மை மிட்டாய்காரர்.

காவேரி அவர் அருகில் வந்து நின்று "அண்ணா எனக்கு ஒன்று" என கேட்கவே சிரித்துகொண்டே பார்த்தார் அந்த மிட்டாய்காரர் பின் ஒரு செயின் செய்து மாட்டிவிட்டார். ஆர்வமாக அதை பார்த்தவளுக்கு நாக்கில் உமிழ்நீர் வர கையில் அந்த ஜவ்வுமிட்டாயை இழுத்துகொடுக்க வாங்கி வாயில் போட்டாள்.

அப்போதுதான் உணர்ந்தாள் வந்த அவசரத்தில் காசு இல்லையென அந்த மிட்டாய்காரரை பார்த்து "அண்ணா காசு நான் வீட்டல விட்டு வந்துட்டேன்" என கூற அவரை பார்க்க பாவமாக இருந்தது.

"நீங்க போங்க நான் குடுத்துகிறேன் ஆசையா குழந்தை மாதிரி வந்தீங்க உங்களையும் ஒரு குழந்தையா எடுத்துகிறேன்" என சன்முகம் கூறிவிட்டு நகர்ந்தார் கையில் அந்த சிறுகுழந்தையை தூக்கிகொண்டு. காவேரியும் தனக்கு கிடைத்த மிட்டாயை சுவைத்துகொண்டே வர அந்த மிட்டாய் செயின் பாதுகாத்து வைத்தாள் மெழுகை உருக்கி.

அவனது கண்கள் இவளை இரவில் தொந்தரவு செய்ய தூங்காமல் விழித்தாள். இது என்ன பந்தம் 'நான் அவனை பார்த்து ஒருநாள்தான் ஆகிறது. கண்டதும் காதல் இதில் என்ன நம்பிக்கை இருக்கிறது.அதிலும் பல புலவர்கள் விழிதான் காதல் நுழையும் பாதை என வர்ணித்த நூல்கள் இவள் கண்ணில் வந்துபோக சிரித்தாள். தன்னை அறியாமல் அவன் வசம் சேர்ந்தாள்.

ஆம் சன்முகமும் சாதாரனமாக இல்லை இவளுக்காகதான் தன் சொந்த கடையை விட்டுவிட்டு இங்கு மூட்டை தூக்குகிறான். ஆம் சந்தை பராமறிப்பு என கல்லூரியிலிருந்து வந்தபோது இவளை பார்த்தான். காதல் அதிலும் அவள் அனைவரிடமும் பழகிய விதம் அன்பு என ஈர்த்துவிட்டாள். உடனே இவளது ஊருக்கு வந்த பின்தான் தெரிந்தது அவள் பொரும் செல்வ சீமாட்டி என அந்த ஈர்ப்புதான் இன்று அவளை பாடாய் படுத்துகிறதோ தெரியவில்லை.

ஆனால் சன்முகத்தின் நிலைபாடு வேறுவிதமாக தெரிந்தது. “நாம தினமும் சாப்பிடுவதற்கே கஷ்டபடடுறோம் ஆனா அவங்க பணத்துல தூங்குறவங்க. எதுக்கு இந்த ஆசை பேசாம ஊருக்கு போயிடலாம். அதான் அவங்களுக்கு ஏதோ என்னால முடிஞ்சத வாங்கிகொடுத்துட்டேன்ல, சாமிய கும்பிடதான் முடியும் வீட்டுக்கு கூட்டிவரனும்ங்குறது பேராசை சரி நாளைக்கு ஊருக்கு வண்டியகட்ட வேண்டியதுதான்” என சன்முகம் முடிவெடுத்துருக்க காலையில் தன் முதலாளியிடம் சென்றான்.

“ஐயா நான் ஊருக்கு போறேன்”

“ஏன்டா சம்முவம் நல்லாதான வேலை பாக்குற ஏன் என்ன ஆச்சு”

“இல்ல ஐயா ஒரு உறுத்தலா இருக்கு மனசுல வீட்ட தேடுது”

“ம்ம் சரிடா இன்னைக்கு லோட் அதிகம்ல அதனால இன்னைக்கு நில்லுடா பொழுதுசாய போயிக்கலாம் ரெட்டை சம்பளம் தரேன்டா எனக்கு யாரு இருக்கா பாரு” என அவர் கேட்க சிறிது பறிதாபம்தான். காதலுக்காக வந்தவன் கடமைக்காக தங்கினான்.

அந்த மாலை பொழுதில் அடைமழை பிடிக்கும் என யாரும் எதிர்பார்க்கவில்லை. அந்த பழைய கோணியை பொத்தினாலும் அவன் சிரிது நனைந்துகொண்டிருக்க அங்கிருந்த ஓட்டை செட்டுக்குள் சென்றான் சற்று இருள் சூழ்ந்துதான் இருந்தது. ஒருவர் ஒழுங்காக நிற்கலாம் அவ்வளவுதான். அதனால் சிறிது நனைந்தான். தன்னவள் (மன்னிக்கவும் நினைவு தேவதை) சினிமா ஹீரோயின் மாதிரி மழையில் ஆடுவதாக நினைத்துகொண்டான்.

ஆனால் அவளுக்கு அவ்வளவு தைரியம் இல்லை. எப்படியும் மாடியில் நின்றுகொண்டு இந்த சந்தையை பார்த்துகொண்டிருக்க வேண்டும்.

மழையின் அளவு அதிகரிக்க சிறிது உள்ளே நகர்ந்தான் அங்கு யார் காலிலோ மிதிக்க “ஆஆ” என சத்தம் வந்தது

“ஏங்க நீங்க இங்க என்ன பன்றீங்க”

“இல்லங்க உங்களதான் பாக்க வந்தேன்” என குளிரில் பற்கள் தட்டச்சு செய்ய கூறிகொண்டிருக்க அந்த கோணியை அவளுக்கு போர்த்திவிட சிறிது கதகதப்பாக உணர்ந்தாள்.

“என்ன பாக்கவா! என்னங்க விஷயம்”

“இல்ல நீங்க மிட்டாய் வாங்கி தந்தீங்கள்ள அந்த காசு” என தாளை நீட்டினாள்.

“இதுக்கு சில்லரை சேக்கவே நான் நாலு நாள் மூட்டை தூக்கனும்” என சிரித்தான்.

“என்கிட்ட இதுதாங்க இருக்கு” என பறிதாபமாக பார்க்க

“நான் கேட்கவே இல்லைங்க நீங்களே வச்சுகோங்க”

“ஏங்க”

“நான் என்ன சொன்னேன் உங்கள குழந்தையாதான் பாத்தேன் அதான் குழந்தைகிட்ட காசு வாங்குவாங்களா”

“அது இல்லைங்க கடன் அன்பை முறிக்கும்னு சொல்லுவாங்க” என அவள் இழுக்க

“அன்பா” என சன்முகம் கூற

“ அன்பு காதல் வேற எதாவதுஉஉ” என இழுத்தாள்.

“புரியல”

‘மரமண்ட நான் எவ்வளவு கஷ்டபட்டு சொல்லிகிட்டு இருக்கேன் புரிஞ்சுகிறானா பாரு’ என திட்டியவள். “இல்லைங்க நான் யாருன்னு தெரியுமா”

“ம்ம் தெரியும் சுந்தரலிங்கம் ஐயாவோட பொண்ணு அப்புறம் இந்த சந்தை உங்க மாமா தனசேகர் கன்ட்ரோல்ல இருக்கு”

“இது எப்புடி உங்களுக்கு” என அவள் கேட்க

“எனக்கு ஒழிச்சு பேச தெரியலைங்க நான் எங்க ஊர்ல உங்கள பாத்தேன் அழகா ரோஸ் புடவை கட்டிகிட்டு நடந்துவந்தீங்க அப்போவே எங்க அம்மாவ பாக்குற மாதிரி இருந்திச்சு. எங்க அம்மா டேய் நான் சாகுறதுக்குள்ள ஒருத்திய கூட்டிவா அவ இப்புடிதான்

இருக்கனும் அப்புடின்னு உங்களதான் சொல்லிருக்காங்க! நான் என்ன பன்றது நீங்க சின்ன இடத்துல இருப்பீங்கனு பாத்தேன் ஆனா கோபுரத்துல இருக்கீங்க அதனால தான் உங்கள பக்கத்துல ஒருவாட்டி பாக்கனும்னு ஆசை அதுவரை இங்க மூட்டை தூக்குனேன். நேத்து பாத்துட்டேன் வேறஎன்ன வேனும் வாழ்கைல அதான் இன்னைக்கு ஊருக்குகிளம்புறேன்" என அவன் கூற அவளது கண்ணில் நீர் இருந்தது அது மழைதுளிதான் என எண்ணினான் அனால் அவள் குரல் காட்டிகொடுத்த்து.

"ஏங்க நீங்க இங்கயே இருங்களேன் ஊருக்கு வேனாம்" என சிறுவயது குழந்தை தந்தையிடம் கெஞ்சுவதைபோல கெஞ்சினாள். சிறுவயதிலிருந்த எதுவும் பணத்தால்கிடைக்கும் என்று நினைத்திருந்தவளுக்கு அன்பு அப்பாற்பட்டது என்பது அறியும் தருனம் தன் அக்கா கங்கா இல்லை. அவள் தனது குழந்தைகளை பார்க்கவே நேரம் போதவில்லை. இதில் மாமியார் கொடுமை வேறு. அப்போது அன்புக்கு ஏங்கியதருனம்தான் சன்முகத்தை பார்த்தாள். தனக்காக ஒருவன் இவ்வளவு கஷ்டபடுகிறான் என நினைக்கும்போது அந்த வயதிற்கு உண்டான ரசாயன மாற்றம் நிகழ்ந்தது. இருவருள்ளும் காதல் மலர்ந்தது.

"ஐயா நான் இனிமே ஊருக்கே போகலைங்க" என ஆயுள் அடிமையாக பாவித்துகொண்டான் காவேரி என்ற இந்த மாணிக்கத்தை பார்த்து மகிழ அவளும் தினமும் மாலை இவனை காணாமல் வீட்டிற்கு செல்வதில்லை. வீட்டிலும் அப்பா லேட்டாகதான் வருவார் அதனால் கேட்க ஆட்கள் இல்லை.

ஆனால் அன்று சந்திரசேகரிடம் சிக்கினாள். “எதுனா வேனும்னா அப்பாகிட்ட சொல்லுமா நீ ஏன் சந்தைக்கு போயி கஷ்டபடுற” என அவர்கூற அன்றுதான் அவரை பார்த்து அமைதியாக சென்ற நாள். பின் அவர் வந்து தன் கணக்குபிள்ளையிடம் “அந்த பையன பத்தி விசாரிங்க” என உத்தரவு பிறப்பித்தார்.

இப்படியாக இருவருக்கும் காதல் பூத்து குலுங்கியது.

ஏழைக்கு வயிரெனும் வாய் மூட

முட்டிஉழைக்கும்போது சிந்திய

வியர்வையின் முத்தாய்

ரசித்த மங்கையை கைபிடிக்க

எண்ணி கன்டம் கடந்தான்

அவளோ தங்க்கூண்டு கிளி

இவனோ புழுவாய் துடிக்க வந்தாள்.

அமிர்தமாய் தேனதையூட்டி

அந்த வாய்மொழியொன்று

இவனது காலத்தை நகர்த்த

காதலும் நகர்ந்தது.

அந்த தாலியை கட்டினான் அவள் கழுத்தில்

அவள் மறைத்து வாழ்ந்தாள்

பிறந்தவீட்டில் வாழ்வை எதிர்நோக்கி

அவனும் காத்திருந்தான் அவளை கன்டம் கடத்த

“ஏங்க நான் இன்னைக்கு சந்திரசேகர் அப்பாகிட்ட சொல்லிடுறேங்க இனிமே உங்கள பிரிஞ்சு என்னால இருக்கமுடியாது. அவரு எங்க அப்பாவ சம்மதிக்க வச்சிடுவாறு” என அழுதாள்.

“ஏய் லூசு இப்ப எதுக்கு கண்ணீல் விட்டுகிட்டு இருக்க எல்லாம் நல்லது நடக்கும்” என அவன் ஆறுதல் கூற இந்த நினைவுகளுடன்

தன்அக்கா கொடுத்த தேநிரும் முடிய தனது தாலியை ஒருமுறை சரிபார்த்துகொண்டாள்.

முதலில் தனது தாயான அக்காவிடம் கூறுவதாக முடிவு “அக்கா நான் உன்கிட்ட ஒன்னு சொல்லனும்”

“நீ என்ன சொல்லபோற எனக்கு ஆயிரத்தெட்டு வேலை இருக்குடி அப்பா வர்ரதுக்குள்ள எதாவது சமைக்கனும் இன்னைகு வேலைகாரங்களாம் லீவு”

“அக்கா “ என சினுங்கினாள்.

“இங்க பாரு நான் வெளியே போறேன் மரியாதையா நீயும் கிளம்பி வா”

“போக்கா நான் வரல”

“சரி அந்த அஞ்சுகன்னி பேய் வந்தா நான் கேட்டதா சொல்லு”

“இருக்கா நானும் வாரேன் பயமா இருக்கும் தனியா” என சினுங்க கங்கா சிரித்துகொண்டே “சரி போய் குளிச்சிட்டு வாடி அக்கா தலைவாரி விடுறேன்”

சிறிது நேரத்தில் சிட்டாக வந்தவள் தன் தாலியை மறைத்துகொண்டாள். “என்னடி இது முடிய இப்புடி வச்சிருக்க”

“ஆமா நீ இருந்த எதாவது தலைவாரி விடுவ இப்ப அந்த செல்லதாயி பாட்டி எப்பவும் ஒத்தசடைதான். அதுல பாவம்அதுக்கு கண்ணுவேற தெரியல”

“அப்ப நான்வேனா இங்கயே இருந்து மேடம்க்கு தலைவாரி விடவா”

“இல்லக்கா நான் வாரேன் அங்க ஜான்சி பிறந்தப்போ பாத்தது அத்த அவங்கள இங்க வரவே விடமாட்டேங்குது”

“சரி சரி இது என்னிடி உன் கழுத்துல எதோ புடைப்பா இருக்கு” என கங்கா கேட்கவம் பதறினாள் காவேரி. “அது சுடிதார்ல நூல் பிரிஞ்சிருக்கும் அக்கா” என சமாளித்துவிட்டாள்.

பின் இருவரும் நடக்க “ஏன்டி அப்பா உன் கல்யானத்த பத்தி என்கிட்ட பேசுனாரு பன்னையாராம் ஏக்கர் கணக்குல சொத்து இருக்கு அவரு மகன் உன்னளவுக்கு படிச்சிருக்கான் என்ன பேச சொல்லவா அப்பாவ” என கூற அவள் முகம் சுருங்கியது.

“அக்கா நான் இன்னும் படிக்குறேனே”

“சரிடி அம்மா உன் விருப்பம்” என அமைதியாக நடக்க காவேரி தலைகுனிந்துகொண்டு தன் அக்கா பின்னால் நடந்தாள்.திடீரென கங்காவின் கால்கள் நிற்க காவேரியும் நின்றாள்.

“சன்முகம் அந்த வென்டைகாய் எடுத்துபோடுப்பா” என கங்கா கூற சன்முகமும் காவேரியும் திகைத்து நின்றனர்.

“என்ன திருடய்ங்களா அப்புடி பாக்குறீங்க அக்காவுக்கு எதுவம் தெரியாதா கேட்டா இவங்களுக்கு நூல் பிரிஞ்சிடுச்சாம் அப்படியே ஒன்னு போட்டேனா தெரியும்! எல்லாம சந்திரசேகர் அப்பா சொல்லிட்டாரு அப்பாகிட்ட பேசுறேன்னு சொல்லிடாரு என்ன இப்ப வெளியூர்ல இருக்காரு வந்த்தும் உங்க கல்யானத்த ஜாம்ஜாம்னு நடத்திடலாம் சரி இப்ப லவ்ஸ் ஓரம கட்டிட்டு புழப்ப பாருங்க” என கங்கா அவளை இழுத்து வர சன்முகம் ஏக்கதுடன் பார்த்த காட்சி நினைவைவிட்டு அகலாது.

வீட்டிற்கு வந்ததும் “ எத்தனநாள்டி ஆச்சு”

“போன மாசம் ஆடி வெள்ளி அன்னைக்குக்கா இருக்கன்குடி கோவில்ல”

“ம் தாலி மட்டும் தான இல்ல மத்தது எதாவது” என கங்கா கூற காவேரி புரிந்துகொண்டாள். “ஐயோ இல்லக்கா இது அப்பா

சம்மத்ததுக்காகதான் மத்தபடி அவரு ரொம்ப நல்லவருக்கா இதுகூட நான்தான் கட்டாயபடுத்தி" என நிறுத்தினாள்.

"சரிடி மாமா தேடுவாங்க! நான் இத பத்தி பேசதான் வந்தேன் சரி அப்பா வந்தா கேட்டதா சொல்லு நான் கிளம்புறேன்"

"அக்கா இருக்கா இப்ப வந்திடுவாரு"

"இல்லடி நேரம் ஆச்சு" என கிளம்பிய கங்கா எப்பிட கூறுவாள் தன் கனவனின் மில் நிர்வாகம் சரியில்லை என அந்த ஆத்திரத்தில் சுந்தரலிங்கம் தனசேகரை தேடிகொண்டிருந்தார். பின்ன தன் நண்பன் சந்திரசேகர் நடத்தும் காவேரி மில்லின் பஞ்சில் எஸ்டரை கலந்ததாள் கடும் கோபத்தில் இருந்தார்.

"ஒரு மில் அமச்சு குடுத்தாகூட உம்புருஷன் ஒழுங்கா நடத்தமுடியலைல! பாரு ஒர்கர்ஸ்தெருல்ல நிக்குறாங்க" என SS-COMPANY யின் நிலையை கூறி திட்டுவார் என வேகமாக கிளம்பினாள். ஆனால் அவளுக்கு அதிரச்சி ஆம் தன் தந்தை அங்குவந்த மில்ல திரும்ப கொடுத்திட சொல்லுமா காவேரி நடத்திக்குவா என திட்டிவிட்ட வந்த கதைதான் தெரியுமே.

அதன்பின் வந்து சாப்பிட அமர்ந்த செல்வதனசேகரிடம் "அப்பா வந்தாரு" என கங்கா கூற "அது இருக்கட்டும் நீ அங்க போனியா"

“ஆமாங்க தங்கச்சிய பாக்க போனேன்”

“எதுக்குபோன”

“அவளுக்கு கல்யானம் பன்றதபத்தி பேச சொல்லி அப்பா சொன்னாருங்க” என சந்திரசேகரை மனதில் வைத்துகூற இவன் சுந்தரலிங்கம் என முடிவு செய்துவிட்டான்.

அப்படி அவர் செல்லும்போது காரினை மறைத்தவன். “மாமா எப்புடி இருக்கீங்க”

“டேய் நீ பன்ற காரியத்துக்கு என் பொண்ண உனக்குபோய் கட்டி வச்சேன் பாத்தியா என்ன சொல்லனும்டா” என பொரிந்தார்.

“சரி மாமா உன் ரெண்டாவது பொண்ணு காவேரிய எனக்கு கட்டி குடுத்துடு” சுந்தரலிங்கம் அதிர்ந்துவிட்டார்.

“என்னடா உளர்ர”

“ஆமா மாமா எனக்கு அவளதான் பிடிச்சிருந்தது. ஆனா அம்மாதான் சொத்துக்கு ஆசபட்டு கங்காவ கட்டிக்க வச்சிடுச்சு”

“டேய் காவேரிய பத்தி பேசுன உனக்கு மரியாத அவ்வளவுதான்”

“ம்ம் அப்ப அந்த மூட்டை தூக்குற சன்முகம் ஒகேவா” உன் பொண்ணுக்கு “அவன் தங்கமான பையன்டா உன்னமாதிரியா” என அவர் திட்ட தன்னைவிட ஒரு மூட்டைதூக்கும் பையனை உயர்த்திகூறியதாள் ஆத்திரம் அடைந்தவன் கத்தியை இறக்கினான் தன் மாமா மார்பில்.

துடித்துகொண்டிருந்த அவருக்கிருந்த ஒரு ஆறுதல் இவன் தன்னை எப்படியும் கொண்றுவிடுவான் என கனவில் வந்த்தாள் போன மாதம் தன் நண்பன் சந்திரசேகரிடம் சென்று.

“டேய் எனக்கு காவேரிய நினைச்சா பயமா இருக்குடா”

“என்னடா பயம் அதான் நானிருக்கேன்ல” என சந்தரசேகர் சமாதானம் செய்தார்.

“இல்லடா எனக்கு எதாவது ஆச்சுனா அவளுக்கு யாரும் இல்லடா”

“டேய் என்னடா பேச்சு இது அவள பாத்துக்கு நல்ல அன்பான இதயங்கள் இருக்குடா” என சன்முகத்தை மனதில் வைத்து கூறினார்.

“டேய் அவளுக்கு யாருமே இல்லைனா நீ அவள பாத்துகுவேன்னு சத்தியம் பன்னுடா” என சத்தியம் வாங்க சந்திரசேகரின் சத்தியத்துடன் நிம்மதியாக உயிரை விட்டார் சுந்தரலிங்கம் அந்த அரக்கன் கண்முன்.

“அப்பா அப்பா” என காவேரி அழுதுகொண்டிருக்க ஆட்டோவிலிருந்த ஜான்சி இறங்கிவந்து தன் தாத்தாவே கட்டி அழுதாள். பிறந்தபோது பார்த்தவளை இன்றுதன் தந்தைசாவில்தான் பார்க்கிறாள் காவேரி.

கங்கா மயக்கமடைந்து செல்ல “பிள்ளதாச்சி பொண்ணுப்பா மயங்கிடுச்சு” என அங்கிருந்தவர்கள் அவரை தூக்கி செல்ல காவேரியும் ஜான்சியும் தன் அப்பாவுக்காகவும் தாத்தாவுக்காகவும் அழுதனர்.

அப்போது அங்கு தன்னவளுக்கு ஆறுதல் அளிக்க வந்து நின்றான் சன்முகம் அவனை பார்த்த தனசேகர் “டேய் இங்க ஏன்டா வந்த”

“என்னங்க சொல்றீங்க”

“உன்னாலதான்டா எங்க மாமா இறந்தாரு”

“என்னாலையா” என பதறினார் சன்முகம்

“ஆமாடா அவர கொல்லதான வந்து திட்டம் தீட்டிகிட்டு உங்க ஊர்ல இருந்து வந்த இப்ப என்னடா நாடகம் போடுற அதான் வேலை முடிஞ்சிடுசுல கிளம்புடா” என தனசேகர் கூற காவரி சன்முகத்தை முறைத்தாள். தன் தந்தையை கொண்றவன் அல்லவா அந்த கோபம் அவளிடம் தெரிய அவன் நான் எதுவம் பன்னலம்மா என்பதுபோல அவளுக்கு சைகை செய்ய அவனை சட்டையை பிடித்து வெளியேற்றினர்.

## அத்தியாயம் - 66

“என்னமா இங்க தனியா இருக்கபோறியா” என ஊர் பெரியவர்கள்கூற “அப்பா இன்னும் சாகலை அவரோட நினைவுகள் இங்கதான் தாத்தா இருக்கு நான் இங்கயே இருக்குறேன்” என கண்ணீர் விட்டாள் காவேரி.

“அப்புடில்லாம் வயசுக்கு வந்த பொண்ண தனியா விட முடியாது” என தனசேகர் சத்தமிட “ஆமா மதராஸ்ல இவனே அபின்னு ஒரு பொண்ண வச்சிருக்கான் இவன் போசுறான் பொண்ணு பாதுகாப்ப பத்தி” என கூட்டத்தில் ஒருவர் கூற இவனது பார்வைக்கு ஒடுங்கிபோனான் அவன். அந்த வார்த்தையை கேட்டு கங்கா தலைகுனிந்து நின்றாள் அவளுக்கு தெரியாமல் இல்லை. ஆனால் தொழில்ரீதியாக பழகுகிறேன் என கூறி சமாளித்திருந்தான்.

“அவன் கேக்குறதுல என்னப்பா தப்பு இருக்கு தன் மச்சினிச்சி பாதுகாப்புக்கு பேசுறான்பா” என தனகது ஆதரவாகூற “அதான் அந்தபொண்ணுதான் வரமாட்டேங்குதுல்ல”

“அப்ப அவ அக்காவும் மாமாவும் அவளுக்கு பாதுகாப்பா இங்க தங்கட்டும்பா” என கூற முடவு செய்தனர். “ச்சீ இந்த பொம்பளைகூட நான் தங்கமாட்டேன்” என ஜான்சி கூற “சித்திய அப்புடி பேசகூடாது” என கங்கா அடக்கிவைத்தார்.

பின் கங்கா தங்கியிருக்க கூட ஜான்சி சேகர் மற்றும் செல்வதனசேகர் தங்கினர். அங்குதான் வினை ஆரம்பமானது. ஆம் அன்று இரவு தன்மேல் தவறில்லை என கூற சன்முகம் அங்கு வர தனசேகர் அவனை பார்த்துவிட்டான்.

“டேய் காவேரி என் சொத்துடா அவள நீ சொந்தமாக்கலாம்னு பாக்குறியா” என மிரட்டி அடிக்க அவன் அலரும் சத்ததில் காவேரி வெளியே வர “மாமா அவர விட்டுடுங்க”

“என்னது அவரா” என கேட்க தயங்கி நின்றாள். கனவனை எப்படி பெயர் சொல்வது.

“ம்ம் இவரரர்ர்ர்ர். சூப்பர்டி நீ எனக்கு மட்டும்தான்டி சொந்தம் உன்னதான் நான் கல்யானம் பன்னிருக்கனும்” என கூறிவிட்டு

அவனை அடித்து தூக்கிவிச ஆட்கள் வந்தனர். காவேரியை கையைபிடித்து இழுத்துசென்றான் தனசேகர்.

மறைவில் நின்றிருந்த கங்கா கண்கள் கலங்கினாள். அவளை முறைத்து பார்த்தவன் காவேரியை இழுத்துசென்று ரூமிற்குள் வைத்து பூட்டினான். “தங்கச்சி பாவம்ங்க வெளிய விடுங்க” என தனசேகரின் காலில் விழுந்த கதறினாள்.

“இங்க பாருடி நம்ம குடும்பத்துக்குனு ஒரு மரியாதை இருக்கு உன் தங்கச்சி அத கெடுக்க பாக்குறா! அந்த கூலிகாரனுக்கு கட்டி கொடுக்குறதுக்கு பதிலா இந்த ரூம்குள்ள வச்சு அவள கொழுத்திடலாம்” என மண்ணெனயை எடுத்து ஊற்றினான். கங்கா தன் தங்க்கையை காப்பாற்ற அந்த எண்ணெயின் மீது அமர்ந்துகொண்டாள்.

“என்னையும் கொழுத்திடுங்க என் தங்கச்சி கூட நானும் போயிடுறேன்”

“அக்கா ப்ளீஸ் நீ போக்க நீ ஏன் சாகனும்” என காவேரி அழ ஜான்சி தன் தம்பியை தூக்கிகொண்டு பயத்துடன் பார்த்தாள் அந்த கதவு இடுக்கின் வழியே.

அதை பார்த்த தனசேகர் "பாத்து நடந்துகோங்க" என திட்டவிட்டு நடந்துசென்று தன் மகளை தூக்கிகொள்ள. "அப்பா அம்மாஏன் அழறாங்க" என்றாள்.

"அதுகுட்டி உங்க சித்தி இருக்காங்கள்ள காவேரி"

"யாரு தாத்தா வீட்டுல தங்கியிருந்தாங்கள்ள அவங்களா"

"ம்ம் ஆமா"

"அவங்கள எனக்கு பிடிக்கலப்பா நாம நம்ம வீட்டுக்கு போயிடலாம் பாருங்க தம்பிக்குகூட பிடிக்கல"

"ஆமா குட்டி எனக்கு மட்டம் பிடச்சிருக்கா என்ன! உங்க சித்தி நம்ம ஊருல அந்த கூத்தாடிபொண்ணு இருக்குள்ள அப்பத்தாகூட சொன்னாங்கள்ள அந்த மாதிரி பொண்ணுடா அதான் அப்பா அவங்கள பாத்துகுறேன்"

"நாம எதுக்கு பாத்துகனும்ப்பா"

"தாத்தா சொல்லிருக்காங்கடா அதான்"

“ம்ம் சரிப்பா எப்ப நாம வீட்டுக்கு போறோம்”

“உங்க சித்திக்கு கல்யானம் ஆனதும் போகலாம்டா குட்டி அதுவரைக்கும் விளையாடுங்க” என தனசேகர் சிறு குழந்தையின் மனதில் விசத்தை கலந்துவிட்டு நகர்ந்தார்.

நாட்கள் ஓடின. காவேரி ரூமிற்குள் அடைந்து இருந்தாள். “இந்தாடி சாப்புடுடி” என கங்கா வந்த தன் தங்கையிடம் கெஞ்சினாள்.

“எனக்கு அவர பாக்கனும் அக்கா” என காவேரி அழுதாள்.

“எப்புடிடி”

“ப்ளீஸ்க்கா எனக்காக அவர்கிட்ட பேசுக்கா”

“சரிம்மா நான் அவர கூட்டிவாரேன் நீ சாப்புடு இப்புடி சாப்புடாமயா இருப்ப”

“இல்லக்கா எனக்கு வேணாம் அவர பாக்கனும்” என கூறியவள் மனதில் இரண்டு நாளுக்கு முன் நடந்த சம்பவம் மனதில் ஓடியது.

தனசேகர் குடித்துவிட்டு வர இரவு பன்னிரண்டு மணி ஆகிவிட்டது கங்கா தன் மகள் அருகில் உறங்கியிருந்தாள். காவேரி தன்னவன் நினைவில் காத்திருந்தாள்.

“யேய் காவேரி” என்று குரல் கேட்டு ஜன்னல் ஓரத்தில் அமர்ந்திருந்தவள். பதறிகொண்டு எழுந்துதள்ளி அம்ர்ந்தாள். “யேய் என்னடி ஒடுற எனக்கு நீ வேணும்டி ஒருநாள் போதும்! ம்ம்ம் இல்ல இல்ல உன்ன ஆயுள் முழுக்க அனுபவிக்கனும்டி! யாருக்கும் விட்டகுடுக்க மாட்டேன். இப்ப வேணாம் நீ எனக்கு பிடிச்ச பொண்ணு மத்த பொண்ணுங்கனா நினைச்சதும் தொட்டுடுவேன் ஆனா நீ வேற! அதனாலதான் சொல்லுறேன் அடுத்த வாரம் நல்ல நாள் முதல்ல நமக்கு பர்ஸ்ட் நைட் அப்பறம் கல்யானம் பன்னிகலாம் சரியாடி செல்லம் உம்மா” என தன் கையால் அவளது கன்னதை கிள்ளினான்.

அதனால்தான் காவேரி தன்னவனிடம் தன் கஷ்டத்தை கூறலாம் என நினைத்திருந்தாள்போலும்.பின்ன தன் அக்காவிடம் மாமாவைபற்றி எப்படி கூற முடியும்.

“ஜான்சி சித்திய பாத்துக்கோ நான் சந்தைக்கு போயிட்டு வந்துடுறேன்” என சன்முகத்தை காண சென்றார். “போம்மா இவள நான் பாத்துக்க மாட்டேன்” என சீறினாள்.

“இப்ப சித்தி பக்கத்துல போய் உட்காருரியா இல்ல தோள உறிக்கவா”

“ம்ஹூம்” என சினுங்கிகொண்டே சென்று அமர்ந்து தன் தம்பியுடன் விளையாட துவங்கினாள். கங்காவோ கிளம்பி சென்றாள்.

அந்த குழந்தையின்முகத்தை பார்த்த காவேரிக்கு சிறிது மனநிம்மதி அளிப்பதாக அமைந்தது. “ஜான்சி தம்பிய குடும்மா நான் வச்சுருக்கேன்” என கண்ணீருடன் கேட்டாள். இதுவரை பார்த்தது இல்லை அந்த குழந்தையை.

“போடி நீ ஒரு ****** எங்க அப்பா சொன்னாரு” என அங்கிருந்து எழுந்து நடந்தாள். அந்த வார்த்தை காவேரியை அப்போதே கொன்றுவிட்டது. இந்த உடல்மட்டும் சன்முகத்தின் வருகைக்காக காத்திருந்தது.

சந்தையில் “சன்முகம்”

“யாரும்மா அந்த பாபு அய்யா கடைல நிப்பாரே அவரா”

“ஆமாங்க”

“அவன் குடிச்சிட்டு விழுந்துகிடக்கான்மா பின்னாடி கிணத்தடில போயி பாருங்க”

“ம்ம் சரிங்க” என கங்கா நடந்து கிணத்தடிக்கு போனாள்.

அங்கு “டேய் என்னடா ஆச்சு உனக்கு ஏன்டா இப்புடி பன்னுற”

“எல்லாம் போச்சுடா எங்க அம்மா விட்டு போயிடுச்சு இப்ப காவேரி அவளும் போக போறா” என தன்னிலை மறந்து உளறிகொண்டிருந்தான் சன்முகம்.

“டேய் நான் இருக்கேன்டா நீ ஏன் இப்புடி பேசற” சன்முகத்தை காண வந்திருந்த அவர் நண்பன் போஸ்க்கு இவனது நிலை அதிர்ச்சிதான்.

“நான் ஒரு பாவபட்டவன்டா எனக்குனு எதுவுமே நிலைக்காதுடா என்ன விட்டுடு சாகுறேன்”

போஸ் என்ன ஆறுதல் சொல்வது என்று தெரியாமல் விழித்தார். “மச்சி ஒருதடவ அவள பாத்துட்டா நிம்மதியா சாவேன்டா கூட்டி போயேன்” என சன்முகம் கெஞ்ச

“நீங்க செத்துட்டா அவ உயிரோட இருப்பானு நினைக்குறீங்களா உங்கள பாக்காம சாப்பிடாம கிடக்கா” என கங்கா கண்ணீர் விட சற்று நிதானபடுத்தி எழுந்து நின்றான்.

“காவேரி சாப்புடலையா அவ பசி தாங்கமாட்டாங்க சாப்பிட சொல்லுங்க” என்று குடியின் ஸ்லாங்கில் பேசினான்.

“டேய் நீ இருடா நான் பேசிக்கிறேன்” என போஸ்போயா கங்காவிடம் பேச விஷயங்கள் தெளிவானது அவனுக்கு. “சரிங்க இன்னைக்கு ராத்திரி நான் உங்க வீட்டுக்கு வந்துடுறேன் காவேரிய தயாரா இருக்க சொல்லுங்க நான் கூட்டிகிட்டு வந்து இவன் ஊர்ல விட்டுடுறேன் அவங்க அங்க நிம்மதியா வாழுவாங்க” என திட்டம் முடிவானது.

இரவும் நெருங்க போஸ் நிதானமாக ராணுவமுகாமில் எடுத்த பயிற்சி போல யாருக்கும் தெரியாமல் வந்தார். அந்த சத்தம் கேட்டது. “அய்யோ அக்கா” என காவேரி கத்தினாள். சற்றுமேலே எழுந்துபார்த்தான் போஸ்.

அங்கு காலையின் தன்னுடன் பேசிய அந்த பெண் வயிற்றில்இருந்த கத்தி வழியாக ரத்தவெள்ளம் பாய்ந்துகொண்டிருந்தது. காவேரி அந்தபெண்ணின் அருகில் அழுதுகெண்டிருக்க “என்னடி அக்கா” என அவளது முடியை பிடத்தான்.

“இங்க பாருடி இன்னைக்கு நாள் நல்லா இருக்கு ஒழுங்க ஒத்துகோ” என அவளை இழுத்து செல்ல “அக்கா அக்கா என கத்தினாள்”

“அவ எப்போவோ செத்துட்டாடி அவளுக்கு உங்க அப்பன் செத்துதல இருந்தே ஸ்லோ பாய்சன் குடுத்துட்டு வாரேன்டி எப்புடியும் உன்ன அனுபவிக்குறதுக்கு அவ விடமாட்டா அதான் அவள கொல்லலாம்னு முடிவு பன்னிட்டேன். சரி வலிக்காம சாகட்டும்னு பாத்தா கழுத உன்ன காப்பாத்துறேன்னு வந்து கத்தில குத்து வாங்குது” என அவளது சேலையை உறுவ பின்னாலிருந்து தனசேகரை ஒரு உருவம் மிதித்தது.

“கிளம்புமா சன்முகம் வெயிட் பனனுறான்” என போஸ்கூற தனசேகர் கங்காவின் வயிற்றிலிருந்த கத்தியை உருவி குத்த வந்தான். அதை லாவகமாக தடுத்தவன் அடித்த அடியில் கீழே விழுந்தான். அதற்குள் போஸும் காவேரியையும் காணவில்லை.

இந்த சண்டை காட்சிகளை அந்த பிஞ்சு கண்கள்பார்த்துகொண்டிருந்த்து. போஸ்தான் தன் அம்மாவை குத்தினான் என்பது ஜான்சிக்கு பதிந்துவிட்டது. கூடவே அதை தடுக்க வந்த தன் அப்பாவின் காலை உடைத்துவிட்டான். அதனால் அவர் நீண்டதூரம் நடக்க சிரம்படுவார். அந்த ஒடுகாலியை இழுத்து செல்ல ஒருவன் தன் தந்தை மற்றம் தாயின் உயிருடன் விளையாடியிருக்கிறான்.

தன் தந்தை ஜான்சியையும் சேகரையும் தாயில்லாமல் வளர்க்க படும் கஷ்டத்தினை கண்ணால் பார்த்தவள் ஜான்சி அதனால்தான் அன்புக்கு குழந்தை பிறந்தவுடன் அன்பை கொன்றுவிட்டு சந்துரு தன் தந்தைபோல கஷ்டபடவேண்டும் அதை ரசிக்க வேண்டும் என பார்த்தாள் இதுதான் அந்த டிக்டாக் ரூலுக்கு காரணம்.

மறுநாள் அக்காவின் இறுதி சடங்கிற்கு வந்தாள். ஜான்சி அம்மா என அழுதுகொண்டிருக்க சன்முகம் கட்டிய தாலியுடன் வந்து அழுதுகொண்டு நின்றாள் காவேரி.

“அதான் அக்காவ முழுங்கிட்ட உடம்பு சுகத்துக்காக ஓடி போயிட்டேல அப்புறம் என்னடி இங்க வந்து நீலி கண்ணீர் வடிச்சுகிட்டு இருக்க” என ஸ்வர்னா கத்திகொண்டிருக்க “நான் சொல்றத கேளுங்க” என போஸ் கூறியும் பலனில்லை. ஊர்மக்கள் அவர்களை அடித்து விரட்டிவிட்டனர். தன் அக்காவின் இறுதி சடங்குகள்கூட செய்ய முடியாத நிலையில் அழுதுகொண்டே வந்தாள் காவேரி. எந்த ஒரு பெண்ணிற்கும் இப்படி திருமனம் நடந்திருக்காது. அத்தனை கஷ்டங்களையும் தாங்கி தன்னவன் தோளில் சாய்ந்துகொண்டாள்.

சன்முகம் “அழாதம்மா” என ஆறுதல் மட்டமே சொல்ல முடிந்தது. போஸ் இவர்களுக்கு நல்ல வாழ்வை ஏற்படுத்திகொடுக்க முயற்சி செய்தார். பின் சன்முகத்தின் ஊர் வரவை அதுவரை சன்முகம் குடிசையில் தங்கி கடையை பார்த்துகொண்டிருந்தார். போஸ் தனக்கு தெரிந்த நபரிடம் பேசி இந்த வீட்டை வாடகைக்கு எடுத்தார்.

“சன்முகம் வாடகைய நான் கட்டிகிறேன் நீ தங்கச்சிய பத்திரமா பாத்துகோ”

“இல்லண்ணா வேணாம் நாங்க வாடகை குடுக்க வேணாம்னா” என தடுத்தாள் காவேரி. அவளது குணம் அப்படி.

“சரிம்மா எதுனா வேணும்னா கேளுங்க இனிமே உங்கள அந்த செல்வதனசேகர் தொந்தரவு பன்ன மாட்டான்” என கூறிவிட்டு தன் நண்பனை தனியாக அழைத்தார் போஸ்

“இந்தாடா வச்சுகோ தங்கச்சிக்கு தெரிஞ்சா வாங்கவிடாது கடைய டெவலப் பனனு” என கையில் சில நோட்டுகளை திணித்தார்.

“இது எதுக்குடா”

“மூடிட்டு வாங்குடா எதுக்கு ஏன்னு கேட்டுகிட்டு” என திணித்துவிட்டு “சரி நான் வாரேன்டா” என கிளம்பினார்.

“என்னடா அதுக்குள்ள கிளம்புற”

“அங்க பார்வதிக்கும் எங்க அம்மாவுக்கும் சண்டையாம் தெரியல என்ன ஆச்சுனு நான் பாத்துட்டு வந்துடுறேன்டா எதுனா பிரட்சனைனா பீடி பெரிப்பா கடைக்கு ஃபோன் பன்னுடா” என அந்த நம்பரை கையின் திணித்துவிட்டு கிளம்பினார் போஸ்.

தனசேகரால் ஊருக்குள்தான் வரமுடியாது ஆனால் பணத்தை வைத்து மிரட்டி சன்முகத்தின் கடையை பிடுங்கிகொள்ள மிகவும் கஷ்டபட்டனர்.

அப்போதுதான் வெளிநாட்டிலிருந்து திரும்ப வந்தார் சந்திரசேகர். "டேய் என்னடா பன்னி வச்சுருக்க" என தனசேகரின் கன்னத்தில் பளாரென அறைந்தார்.

"என்ன எதுக்கு அடிக்குறடா" என எதிர்த்து கேட்க "மாமாவையே எதுத்து பேசுறியாடா! நல்லா புள்ள வளத்துருக்கடி " என தன் தங்கையிடம் சண்டையிட

"ஆமா நீர் ஒழுங்காக்கும் ஒன்டிகட்ட தானடா" என ஸ்வர்னா கூற உடைந்துவிட்டார் சந்திரசேகர்.

"ஏன்டி உனக்காகதான நான் வாழ்ந்தேன். நீ சொன்னதால தான அழகான பொண்ணுடி கங்கா அவள கட்டி வச்சேன். அதுமில்லாம என் மொத்த சொத்தும் இவன் பேருல எழுதி வச்சேன். அதுக்கு தண்டனையாதான்டி எனக்கு இந்த பதில் ஆனா கங்காவையும் என் நண்பன் லிங்கத்தையும் கொண்ணது நீங்கதான்னு எனக்கு நல்லா தெரியும் இப்ப காவேரி வாழ்கைய சீரளிக்க நினைச்சதும் எனக்கு தெரியும் அதுக்கு நான் எப்புடி உங்கள பலிவாங்கனுமோ அப்புடி வாங்கிகிறேன்டி; சாமின்னு ஒன்னு இருந்தா நீங்க அழியுரது உறுதி" என கூறிவிட்டு காரை எடுத்துகொண்டா பறந்தார் தன் மகள் காவேரியை தேடி.

தன்னிடம் மீதமிருந்த சொத்தான அந்த காவேரி மில்ஸ் அர்ஜுனன் கையில் கொடுக்கபடும் பிரம்ம அஸ்திரமாக கொடுக்க எண்ணி விரைந்தார் இந்த கயவர்களை அழிக்க ஒரே வழி அதுதான்.

தன்மகளை அந்த கோலத்தில் பார்த்தவர் அவளுக்கு வாக்குகொடுத்துவிட்டு திரும்ப வரவே ஸ்வர்னாவும் தனசேகரும் காத்திருந்தனர்.

“அந்த ஓடுகாலி சிறுக்கிய பாத்துட்டு வர்ரியாக்கும்”

“அவ ஓடுகாலி இல்லடி மகாராணி”

“இருக்கட்டும் அவளுக்கு மில்ல குடுக்கலாம்னு முடிவு பன்னிட்ட”

“ஆமா உங்கள அழிக்கனும்ல அது அவளாலதான் முடியும்”

“அந்தமில் கைக்கு மாறும்போது அவள கொண்ணுட்டா நீ என்ன பன்னுவ” என ஸ்வர்னா கூற மனதில் கவலைகளை சுமந்தவருக்கு பக்கவாதம் வந்து சரிந்தார்.

“கெழம் சாஞ்சிடுச்சுடா தூக்கி மூலைல போடுங்க” என ஸ்வர்னா கூறிவிட்டு நகர்ந்தாள் பத்திர பதிவு நடக்காது என ஸ்வர்னா

மகிழ்ந்தாள். ஆனால் சந்திரசேகர் அந்த வேலைகளை முடித்துவிட்டுதான் வந்திருந்தார் அவருக்கு சிறிய மகிழ்ச்சி.

அதேபோல் தனது மேனேஜர் அந்த பத்திரங்களை காவேரியிடம் ஒப்படைக்க வேலைகள் துவங்கின. முதல்முறையாக ஒரு சிறிய கம்பெனியை பார்த்து பெரிய SS-COMPANY பயந்து நடுங்கியது. அதில் ஏற்படும் ஒவ்வொரு தோல்விகளுக்கும் மனதில் தனசேகருக்கு ஏற்பட்ட வலியால குடித்துவிட்டு வந்து அபிநயாவை துன்புறுத்தி ஆனந்தம் கண்டார்.

இப்படியாக நாட்கள் ஓட சந்தரசேகர் கட்டிலில் படுத்து சிரித்தார். “ஹாஹா என்னடி ஸ்வர்னா என் தங்கச்சி நான் சொன்ன மாதிரி நடக்குதா உங்கள மொத்தமா அழிச்சு நடுத்தெருல நிறுத்துவாடி என் பொண்ணு” என மீண்டும் சிரிக்க ஸ்வர்னாவுக்கு கோபம் வந்தது

“ஏன்டா யாரோ ஒருத்திக்கா கூட பிறந்த தங்கச்சிய இப்புடி பேசுறியா”

“ஏய் கூட பிறந்த என்னடி கிழிச்ச அவ என்னோட மகள். அவளுக்கு இருக்குற பாசம்கூட உனக்கு இல்லடி. அவ அந்த சின்ன வீட்டுல கஷ்டத்துல இருக்கும்போதே அப்பா வந்துடுங்கப்பா நான் உங்கள பாத்துகிறேன்னு சொன்னா ஆனா நீங்க இப்புடி ஒருவேலை சாப்பாட போட்டு என்ன கொடுமை படுத்துறீங்க. இருக்கட்டும் இதுல ஒரு சந்தோஷம் இருக்கு நீங்க புலம்பறத பாக்கமுடியுதுள்ள” என சிரித்தார்

“உனக்கு அவகூட இருக்கனும் அவ்வளவுதான அப்ப செத்து ஆவியா போ” என அவரது மூச்சை பிடத்தாள். சிறிது துள்ளளுடன் ஜீவன் அடங்க தன் மகளை காண பறந்த ஆவி அங்கு புதிதாக தன் மகளுக்கு பிறந்த குழந்தையை பார்த்தது. அந்த கூட்டில் தன்னை இனைத்துகொண்டு “இனி நான் உன்கூடதான்மா இருப்பேன் அப்பாவா இல்ல. உன் மகனா” என சபதமிட சந்துரு அந்த பணிபெண்கள் முன் அவதறித்தான்.

அடுத்து நடந்த்து எல்லாம் அந்த SS-COMPANY யின் வீழ்ச்சிதான். அந்த மீட்டிங்கிலும் அதுதான்நடந்த்து.

“இங்க பாருங்க மிஸ்டர் செல்வம் உங்க புராடெக் குவாலிட்டி இல்ல ஸோ டென்டர் காவேரிக்குதான்” என அவர்கள் முடிவு செய்தனர்.

ஆத்தரமடைந்த செல்வதனசேகர் வெளியே வந்து “ஏன்டி அன்னைக்கு அந்த மிலிட்டரி காரன் வராம இருந்திருந்தா நீ இன்னாரம் என் வீட்டல பாத்திரம் தேச்சுகிட்டு இருந்திருப்படி! நீலாம் என கூட போட்டியா” என கோவமாக கூறிவிட்டு அந்த இடத்திலிருந்த நகர்ந்தான்.

அவன் கூறியதில் ஒரு அழுத்தம் இருக்க பயந்த காவேரி தன் கனவனிடம் கூறினாள். ஆனால் தன்மனைவியின் மீது காதல் மோகத்திலிருந்த சன்முகம் அதை சட்டைசெய்யவில்லை. “குரைக்குற

நாய் கடிக்காதுடி" என தள்ளிவிட்டு தன் நண்பனை கானும்திட்டதை துவங்கினர்.

ஆனால் மறுநாள் காவேரியை பின்பற்றிவந்த செல்வதனசேகர் அவளை காரால் அவள் மகன் கண்முன்னே ஏற்றி கொண்றான். "என்னயாடி வேனாம்னு சொல்லிட்டு போற சாவுடி" என்று கிளம்பிவிட்டான். ஆத்திரத்தில் சென்று சன்முகம் அவனை வெட்ட அவனது கையில் இரண்டு விரல்கள் வெட்டபட போலிஸ்கேஸ் பதிவானது.

அப்போதுதான் போஸ் வந்து சன்முகத்தை பார்த்துவிட்டு கேஸை முடித்துவைத்தார். பின் சந்துருவை அழைத்துகொண்டு ஊருக்கு புறப்படனர். சன்முகம் தன் மனைவி மறைந்த வலியை மறைக்க கடுமையாக உழைத்து நல்ல நிலைக்கு காவேரிமில்ஸை உயர்த்தி இன்று சந்துரு அதை கவனித்து கொண்டிருக்கிறான்.

கர்மா எனபது அடுத்து பிறவியில் தாக்குவதற்கு அதற்கு நேரமில்லை அதனால் இந்த பிறவியிலேயே செல்வதனசேகரை உணரவைத்தது. அதுதான் அந்த விபத்து அதில் இரண்டு கால்களையும் இழந்தார். ஆனால் ஆத்திரத்தில் தன் மகளுக்கு கடிதம் எழுதிவிட்டார். பின் கட்டிலில் படுத்துகிடக்க அவருக்கு மரியாதை யாருமே கொடுக்காத்தை உணர்ந்தார்.

ஆம் ஏன் கொடுக்க வேண்டும் அவருக்கு நம்பகமாக யாருமில்லை பாசமான மனைவி இருந்திருந்தாள் இந்த நிலையில் பத்திரமாக

*பார்த்திருப்பாள். இல்லை மகளாவது உடனிருதால் அவளாவது பார்த்திருப்பாள். அவருக்குதான் யாருமே இல்லேயே. தாயும் இறந்திருந்த்தால் மனதில் முழுவதும் கனமாக இருந்த்து.*

*“ஆமாடி இவன் அந்த லதா பொண்ண கெடுத்தான்ல அதான்டி இப்புடி படுத்து கிடக்கான்”*

*“அதுமட்டுமா அந்த காவேரி பொண்ணுக்கு இவன் பன்ன கொடுமை கொஞ்சமா”*

*“ம்ம் இது என்ன அந்த கங்காவ! பாவம் அவ புள்ளதாச்சி பொண்ணுனு பாக்கமா கத்தியால குத்திட்டு வேற யாரு மேலயோ பலிய போட்டுடான்டி இவன் இன்னும் அனுபவிப்பான்” என சுற்றியிருந்த வேலையாட்கள் அப்படி பேச நரகத்தில் வழங்கபடும் தண்டனை இங்கு கிடைத்தது அவனுக்கு.*

*தன் தவற்றை உணர துவங்கினான். “இவனுக்கு சாப்பாடு வக்கிறது பாவம்டி” என யாரும் இவனருகில் வருவது இல்லை. ஒருவேலை சாப்பாடு என்பது கிடைப்பது அறிதானது. தன் மாமாவை பன்னிய சித்திரவதை நியாபகம் வந்தது முதல்முறையாக தன் தவற்றை எண்ணி கண்ணீர் விட்டான்.*

*“காவேரி என்ன மன்னிச்சிடும்மா; கங்கா நான் உனக்கு நல்ல புருஷன் இல்ல இருந்தாலும் என்ன மன்னிப்பியா முடிஞ்சா என்ன*

கூட்டிட்டு போயிருடி" என அழ அடுத்தாக அந்த பெயர் நினைவுக்கு வந்தது."ஆமா அபிநயா அப்புறம் சுவேதாகுட்டி! ஐயா நான் தப்பு பன்னிட்டேன்" என கூறிவிட்டு ஒரு சிறுவனை அழைத்து வக்கிலை வர சொன்னார்.

"ஐயா ஏன் இப்புடி இருக்கீங்க"

"அத விடுங்க வக்கில் சார் நான் சாவ எதிர் பார்த்து காத்துகிட்டு இருக்கேன்"

"ஏன் இப்ப சாவ பத்தி பேசுறீங்க"

"இல்லப்பா நான் வாழ தகுதி இல்லாதவன் அவ்வளவு கொடுமை பன்னிருக்கேன்ப்பா"

"சரி அழாதீங்க சார். நான் என்ன பன்னனும்"

"சென்னைல எனக்கு ஒரு பொண்ணு இருக்கா அவ பேர் சுவேதா அவள்பைர்ல ரெண்டு கம்பெனய மாத்திடுங்க அப்புறம் ஒரு உயில் என் மூத்த மகள் ஜான்சிக்கு எழுதனும் அவதான் என்குடும்பத்த ஒன்னு சேக்கனும்" என கூற அந்த பத்திரமும் உயிலும் தயாரானது.

பின் தன் கையால் ஒரு லட்டரை எழுதினார் செல்வம் தன் மகளுக்கு. இதுவரை தான் செய்த தவறுகள் பற்றியும் சுவேதா காவேரி சன்முகம் போஸ் அனைவரும் உனக்கு சொந்தங்கள் அதனால நீ அனாதை இல்லமா உன் குடும்பம் ரொம்ப பெருசுமா நீதான் மூத்தவ எல்லாருக்கும் அவங்கள பாத்துகோ அப்பாவ மன்னிச்சிடுமா என லட்டர் எழுதி "என் மகளுக்கு அனுப்பிருங்க சார்" என அந்த வக்கிலிடம் கொடுத்தார்

ஆனால் அந்த லட்ரை ஏந்தி சென்ற கப்பல் தண்ணீரில் மூழ்கிய நாளில் செல்வதனசேகரும் உயிரைவிட்டு அபிநயாவையும்( அவள்மீது தனிபாசம் இவருக்கு) கங்காவையும் காண வின்னுலகம் சென்றார்.

கண்ணில் கண்ணீர் வர கதையை கூறிகொண்டிருந்தார் சன்முகம் தன் குழந்தைகளிடம் போஸும் அமாம்மா காவேரி நல்லவங்க உங்க அம்மா கங்காவும் நல்லவங்கம்மா என முடிக்க ஜான்சியின் கண்ணில் நீர் வந்தது. சந்துரு திகைத்து நிற்க அனைவரும் அழுதுகொண்டிருந்தனர்.

"இனிமேலாவது என் பிள்ளைங்க எல்லாரும் ஒன்னா வாழனும். அத பாத்துகிட்டு நான் உயிர விடனும் இதுதான்மா என கடைசி ஆசை" என சன்முகம் முடிக்க "அப்பா அப்புடி பேசாதீங்க" என சன்முகத்தின் வாயை போத்தியவள். சன்முகத்தை கட்டிகொண்டாள்.

“அப்ப நீங்க என்னோட பெரியப்பா மகளா அப்ப என்னோட நிஜ அக்கா சேகர் என்னோட அண்ணன். சுவேதா என்னோட தங்கச்சியா” என கண்ணீருடன் நின்றான் சந்துரு.

“அண்ணா” என சுவேதா தன் அண்ணன் தோளில் சாய்ந்துகொண்டாள்.

“அக்கா இனிமே நீங்க என்கூடதான் இருக்கனும் சொந்தகாரங்க இல்லாம என்னால வாழமுடியாது” என ஜான்சியிடம் சந்துரு கூற அவனை அனைத்து கொண்டவள் கன்னத்தில் முத்தமிட்டுவிட்டு அவனது காதில் ரகசியமாக “அப்ப அன்புகிட்ட சொல்லி எனக்கு ஒரு மறுமகள பெத்து குடு அப்பதான் அக்கா உன்கூட இருப்பேன் டிக்டாக்” என கூற அனைவரும் சிரித்தனர். அரிசியோ வெட்கத்தில் தன்னவன் பின்னால் மறைந்துகொண்டாள். அனைவரும் அன்பரசியை தீண்டி “அன்னி எனக்கு ஆம்பளபிள்ளை பெத்துகுடுங்க” என சேகரும். “இல்லப்பா எனக்கு வாலுதனம் பன்னுற குட்டி அரிசி வேனும்” என சுவேதாவம் கூற கண்ணீர் மறைந்து சிரிப்பு குடிகொள்ள ஜான்சி மனதில் எந்த சலனமும் இல்லாம் ஓர் தெள்ளிய நீரோடைபோர இந்த உறவுகளை ரசித்தாள். அன்பு மழையில் நனைந்தாள்.

சந்துரு ஃபோனை எடுத்தான். “இன்ஜினியர் சார் புதுசா மில் கட்டறோம்ல அங்க வீடு கட்ட பிளான் குடுத்தீங்கள்ள”

“ஆமா சார் நாலு ரூம் இருக்குறமாதிரிதான”

“ஆமா சார் ஆனா இப்ப எங்க ஃபேமிலி கொஞ்சம் பெரிசா ஆகிடுச்சு”

“என்ன சார் பன்றது ஃபேமிலினா முன்ன பின்ன இருக்கதான் செய்யும்”

“அதான் பத்து ரூம் வர்ர மாதிரி கட்டிருங்க”

“ஓகே சார்” என இனைப்பை துண்டித்தான்.

“இனி யாரும் என்ன விட்டு போக முடியாது எல்லாரும் என்கூடதான் இருக்கனும் இது இந்த சந்துருவோட உத்தரவு” என கூற “சரி அண்ணா “ சுவேதா ஆனந்தமாக.

“தம்பி எனக்கு கம்யூட்டர் இருக்கனும் இல்லைனா நா செத்துடுவேன்” என சேகர் கூற

“அப்ப சுவேதா நீ தனியா இருந்துக்கோ இந்த கம்ப்யூட்டர் பசங்க சுகுவையும் சேகர் அன்னாவையும் ஒரு ரூம்ல அடச்சிடலாம்”

“ஆமா அண்ணா இவரு கம்ப்யூட்டர கட்டிகிட்டு அழட்டும் நான் அரிசி அன்னிகூட இருந்த செஸ் பிராக்டிஸ் பன்னிகிறேன்”

“அடி பாவி அப்புறம் எப்புடி நீங்க கேட்டமாதிரி குழந்தை பெத்துக்க முடியும்! என்ன அரிசி நீ சொல்லு” என தன் மனைவியை பார்க்க “ச்சி போங்க” என சினுங்கினாள்.

“சரி எல்லாரும் ஒன்னா உட்காருங்க” இது பார்வது உத்தரவு

“ஏன் அம்மா குருப் செல்பி எடுக்கபோறோமா” என சுவேதா நக்கல் செய்தாள்.

“அடி கழுத சுத்திபோட போறேன் உங்கமேல எவ்வளவு கண்ணுபாருங்க” என சுத்தினார்.

இனிய குடும்ப பந்தம் நிலைக்க

கட்டிய கூட மனதிருக்க

விரோதம் மறைந்து

விழாகோலமாக வாழ

தனிமனதும் குடும்பமும்

கூடின கூட்டுகுடும்பமாக

வாழ்த்துங்கள் அதன்

அரச அரசி(அரிசியை)

நீடூடி வாழ்க என.

சுவேதாவை கட்டாயமாக ஆபரேஷன் செய்துவிட்டு வருமாறு சுகுவுடன் அனுப்பிவைத்தான் சந்துரு. அவள் அழுதுகொண்டே சென்றது சந்துருக்கு வருத்தமாக இருந்தாலும் அபரேஷ்ன் முடித்து தங்களுடன் நீண்ட நாள் தங்கையாக வாழ்வால் என்ற தைரியத்துடன் தன் கண்ணீரை மறைத்துகொண்ட் அனுப்பிவைத்தான்.

“அன்னி நான் உயிரோட திரும்பி வந்தா என் உயிர் உங்களுக்குதான் அப்புடி இல்லைனா என் போர உங்களுக்கு பிறக்குற பிள்ளைக்கு வைக்குறீங்களா” என சுவேதா கெஞ்ச அரிசியோ “அன்னி வாய மூடுங்க நீங்க நல்லா வாழுவீங்க அப்புறம் மாமியாருக்கும் மறுமகளுக்கும் ஒரே பேர் சுவேதான்னு இருந்தா நல்லாவா இருக்கும் உங்க பையன் கஷ்டபடமாட்டானா கூப்பிடுறதுக்கு

அடியேய் சுவேதா அப்புடின்னா கூப்பிடுவான்” என அரிசி கூற "அதுக்கு நான் திரும்ப வரனுமே” என்றாள் பறிதாபமாக.

அரிசி அவளை கட்டியனைத்து வழியனுப்பிவிட்டு வரும் வழியெல்லாம் அழுதுகொண்டே வந்தாள். அவளை சமாதானம் செய்ய சந்துரு பட்ட பாடு சொல்லிதீராது.

இந்த இரண்டுமாதமாக அனைவரும் போஸின் வீட்டிலும் பொரிய வீட்டிலும் தங்கியிருக்க சந்துரு புது கம்பெனியின் கட்டிட வேலைகளையும் புது வீட்டின் கட்டிட வேலைகளையும் கவனித்துகொண்டான்.

சன்முகமும் போஸும் வயலிற்கு சென்று தன் பழைய நினைவுகளை புரட்டிகொண்டே பாத்திகட்டுதல் பயிருக்கு தண்ணீர் விடுதல் என விவசாயத்தில் இறங்கினர். அடிக்கடி அருகிலிருக்கும் கன்மாயில் மீன் பிடித்து சாப்பிடுவதும் உண்டு சில நேரம் வேட்டையும் நடந்தது. அது அந்த கால இன்பத்தை திருப்பி பார்க்கும் இன்பத்தைவிட அதை வாழ குடுத்து வைத்தவர்கள் இவர்கள்.

ஆனால் சேகருக்கு இருக்கும் ஓரே பொறுப்பு வளர்மதியை சைட் அடிப்பதுதான். வளர்மதியும் அவனும் அந்த குளகரையில் அமர்ந்து பேசிகொண்டிருக்க அதிக வாய்ப்பிருக்கிறது. இருந்தாலும் ஒரு பதினேழு வயது பொண்ணுக்கு இவ்வளவு ஆகாது.

பார்வதி மற்றம் நந்தினி மற்றும் அரிசி ஜான்சிக்கு துனையாக மருத்துவமனையில் தங்கியிருந்து குழந்தையாக பார்த்துகொண்டனர். கூட ஆசிக் தங்கியிருந்தான். எதாவது எமர்ஜன்சி என்றாள் ஓடுவதற்கு ஒருவன் வேண்டும் என ஆசிக்கை விட்டு சென்றான் சந்துரு. எல்லாம் தன்னவள் "ஆசிக் நல்லவங்க" என கூறிய அந்த வார்த்தைகாக முழுவதுமாக நம்பினான்.

"ஜான்சி இதுல இருக்குறத ஸ்ரைன் பன்னாம வாசிங்க" என ஒர அட்டையை நீட்டினார். அதை வாங்கியவள் வாசித்தாள். கண்களில் கண்ணீர் வந்த்து.

"எங்கல்லாம் வலி இருக்கு உங்களுக்கு" என டாக்டர் கேட்க

அவள் சில இடங்களை தொட்டு காட்டினாள். "ம்ம் ஓகே இன்னும் கொஞ்சநாள்ள நீங்க நல்லா பேசிடலாம் அடுத்த வாரம் டிஸ்ஜார்ச் பன்னிடலாமா"

"சந்துரு தம்பிகிட்ட கேளுங்க டாக்டர்" என ஜான்சி கூறிவிட்டாள். அவள் அதிக நேரம் பேசினாள் கண்களில் தண்ணீர் வந்துவிடும். "சரிம்மா நான் சந்துருகிட்ட சொல்லிடுறேன்" என டாக்டர் கிளம்ப "அன்னி இந்தாங்க சாப்புடுங்க" என தயிர் சாத்ததை பிசைந்து எடுத்துவந்தாள் அரிசி

வாய் வழியாக சாப்பாடு அதிகம் செல்லாத்ததால் அதை ஊசிவாயிலாக அனுப்பினர் கேட்டால் குளுகோஸாம். அதனால் ஜான்சியால் கையை தூக்கமுடியவில்லை.

“இருங்க அன்னி நான் ஊட்டி விடுறேன்” என அன்பு ஊட்டிவிட அப்போது கோவிலுக்கு சென்று வந்த பார்வதியும் நந்தினியும் கண்ணாடி வழியாக இவர்களது பாசமலர் படத்தை பார்க்க சிறிது நேரம் வெளியே காத்திருதிருக்க உள்ளே ஜான்சிக்கு ஊட்டிவிட்டாள் அரிசி.

“ம்ம் போதும்மா”

“நல்லா சாப்புடுங்க அன்னி அப்புறம் அவரு வநதா திட்டுவாரு” என சந்துருவை கேடயமாக்கினாள்.

“அது இருக்கட்டும் எதுனா விசேசம் இருக்கா”

“என்ன புரியல அன்னி” என சாத்தை வாயில் ஊட்ட அதை விழுங்கிய ஜான்சி “புதுவரவு இருக்கா” என அரிசியின் வயிற்றில் கைவைக்க “இல்ல அன்னி அப்புடில்லாம் எதுவம் இல்ல” என முகத்தில் சிறிது சோகம் தெரிந்தது.

“ஏன்மா?” என கேட்க “அவரு வேலைவிசயமா” என இழுத்தாள்.

“இது சரிபட்டு வராது எனக்கு சீக்கிரமா ஒரு மறுமகனோ இல்ல மருமகளோ வேனுமே சரி நான் சந்துருகிட்ட கேட்டுகிறேன்” என கூறி அரிசியை பார்க்க அவள் வெட்கத்துடன் ஜான்சியின் உதட்டை துடைத்துவிட்டு பின் எழுந்து சென்று தட்டை கழுவினாள்.

“என்னமா ஒரே பாசமா பொழியுறீங்க! அவ ஊட்டிலாம் விடுறா”

“இல்லமா அன்னி கைய தூக்கமுடியல அதான்” என அரிசி இழுக்க

“ஏன்டி நான் உடம்பு சரியால்லாம படுத்தப்போ எனக்கு ஊட்டிவிட்டியாடி! எல்லாம் அவங்க சொந்தத்துகூடதான் ஒட்டுது” என சிரித்தார் பார்வதி.

“ம்ம் அக்கா அடுத்தவாரம் டிஸ்சார்ஜ் பன்றாங்களாம் ஓகேவா” என சந்துரு உள்ளே நுழைந்தான். “நீ பாத்து பன்னுப்பா” என்றாள் ஜான்சி.

“அப்புறம் அக்கா அடுத்த மாசம் நாம இந்த கம்பெனி இங்க ஸ்டார்ட் பன்னலாம் கூடவே புதுவீட்டுக்கு எல்லாரும் குடியேறிறலாம். அப்புறம் ஒரு குட் நியூஸ் நம்ம ரெண்டு கம்பெனியும சேந்த்தால சேர் பயங்கரமா கூடிருச்சு கோபி இப்பதான் ஃபோன் பன்னாரு நம்ம கம்பெனி திறக்க அவரும் வர்ரேன்னு சொல்லிருக்காரு. ஓ சாரி உங்களுக்கு கோபி தெரியாதுல்ல” என

பேசிகொண்டிருக்கும்போது “சார் கொஞ்சம் தள்ளுங்க ஊசி போடனும்” என ஜெனி உள்ளேவந்த ஜான்சியின் கையில் ஊசி ஏற்ற அரிசி கண்களை மூடிகொண்டாள். அந்த கோலத்தை தன் கேமிராவால் படம்பிடித்து வால்பேப்பராக வைத்தான். “ம்ம் ஊசி போட்டாச்சு கண்ண திறக்கலாம் அரிசி” என்றதும் திறந்தாள்.

“ஆமா சார் ஆசிக் இல்லையா” இது ஜெனி

“சிஸ்டர் அத நாங்க உங்க்கிட்ட கேக்கனும் ஆசிக் எங்க”

“இங்கதான் வர்ரேன்னு சொன்னாரு வரலையா” என சோகமாக செல்ல ஆசிக் வந்தான். அவனை பார்த்து ஒரு வெட்க சிரிப்புசிந்திவிட்டு நகர்ந்தாள் ஜெனி.

“என்ன ஆசிக் அண்ணா அந்த ஜெனிக்கு இது தெரிஞ்சது அவ்வளவுதான் பேயா வந்து கொல்லுவா” என அரிசி சிரிக்க “இல்ல அன்பு சும்மா” என சமாளித்தான்.

“ஆசிக் என்ன மன்னிச்சிடுப்பா ஜெனிய “ என குரல் வரவில்லை காத்துதான் வந்தது.”ஐயோ ஜான்சி நீங்க தெரியாமதான பன்னீங்க விடுங்க அவளே உங்கள மன்னிச்சுட்டா நான் யாரு நீங்க வந்துதுல இருந்த நூறுதடவ கேட்டுடீங்க என்கிட்ட இதுக்கு மேல இப்புடி பேசுனா நான் உங்கள பாக்க வரமாட்டேன் பாத்துகோங்க” என ஆசிக் கூற ஜான்சி அமைதியானாள்.

“என்ன பன்றீங்க எல்லாரும் “ என சன்முகமும் போஸூம் வந்தனர். “

“சரிப்பா சேகர்னு ஒருத்தன உங்க்கூட அனுப்பி வச்சேன்ல அவன எங்க” என சந்துரு கேட்க “அவன் அந்த வளர்மதி வீட்டுலதான்ப்பா இருக்கான் கேட்டா கம்யூட்டர் கிளாஸ் எடுக்குறானாம் அவனுக்கு இப்ப பத்து ஸ்டூடன்ட் வேற இருக்காங்க அதுதான் கொடுமை அதுக்கு பீஸ் அந்த வளர்மடி பொண்ணு கலைக்ட் பன்னுது”

“அப்ப அந்த கன்மாய் கரையில அவங்களுக்கு என்ன வேலை”

“அதுவந்து” என சன்முகம் இழுக்க போஸ் முறைத்தார். “என்ன மாப்ள சொல்றீங்க”

“அட மாமா அதுங்க லவ் பன்னுதுங்க”

“ஆமா மாமா சந்துரு கல்யானத்துலையே பாத்து பழகிடுச்சுங்க” என ஜான்சி சிரமபட்டுகூற “சரி விடுங்க என் தம்பி பொண்ணுதான் கேட்டு பாக்குறேன் நான் கேட்டு இல்லைனா சொல்லபோறான்” என போஸ் கேட்க அனைவருக்கும் ஒரு மகிழ்ச்சி.

“அம்மா நீயும் ஒரு கல்யானம் பன்னிகோமா” என நந்தினி கூற சோகமானள். “சித்தி எனக்கு வயசாகிடுச்சு அதுவுமில்லாம இந்த

நிலையில என் மனசு கல்யானத்துக்கு தயாரா இல்ல நான் சொந்தங்க்கூட வாழனும் அவ்வளவுதான் ஒரே ஆசை." என இடம் சோகமாக மாற சந்துரு தவிர்க்க முயன்றான்.

"ஆமா அரிசி எனக்கு ரொம்ப நாளா ஒரு சந்தேகம் உனக்கு ஏன் அரிசின்னு பேர் வச்சாங்க" என கூற சும்மா இருங்க என சைகை செய்தாள். "அது ஒரு பெரிய கதை மாப்ள" என பார்வதி வாயை திறந்துவிட்டார்.

"அம்மா சும்மா இரும்மா இவக சும்மாவே என்ன ஓட்டுவாங்க "

"நீங்க சொல்லுங்க" என அனைவரும் கோரஸ்பாட அவர் துவங்கினார்

"ஏய் மலை விராலிமீன்டி பிடிடி" என மழையில் வெள்ளம் ஓட அந்த ஓடையில் இருவாண்டுகளும் விளையாடி கொண்டிருக்க அந்த மீனை பார்த்துவிட்டாள் அன்பு.

"போடி நான் இறங்கமாட்டேன என்ன தண்ணி அடிச்சுட்டு போயிடும் நீ வேனா புடி" என மலை பின் வாங்கினாள். சரிடி நான் புடிக்குறேன் என நீரில் பாய்ந்தாள் அந்த சுட்டிபெண்.

"ஏய் மாட்டிகிச்சுடி மலை"

“அங்கபாருடி பனமட்டை தன்னில அடிச்சிகிட்டு வருது சீக்கிரம் மேல வாடி வெட்டி விட்டுற போகுது”

“இருடி வாரேன் நீந்த முடியலடி உன் துண்ட தூக்கி போடுடி” என அன்பு கூற அவளும் அந்த துண்டை வீசினாள். “ஏன்டி என்னயா தண்ணில இறக்கிவிட்டுட்டு நீ மட்டும் மேல இருக்கியாடி” என கூறிவிட்டு வெடுக்கென இழுத்தாள்.

சட்டென மலை தண்ணீரில் விழ தண்ணீரை குடித்துவிட்டாள், “நீந்த முடியலடி அன்பு தூக்கிவிடுடி” என கெஞ்ச சரி சரி என அவளை தூக்கிவிட்ட இருவரும் மேலே ஏறினர்.

“என்னடி இது கைல” என மலை பதறினாள்

“என்னடி” என அப்போதுதான் தன் கையை பார்த்தாள் அன்பு அது விராலிமீன்தான் ஆனால் செவுல்கள் இல்லை. கூட தன் இரண்டு பற்களை காட்டி கொண்டு அன்பை கடித்ததும் உணர்ந்தாள். அது தண்ணி பாம்பு என்று.

“ஐயோ அன்ப தன்னி பாம்பு கடிச்சிடுச்சு” என மலை அலறிகொண்டு ஓட பார்வதி கம்பை எடுத்துகொண்டு வந்தார். “ஏன்டி உன்ன ஆடத மழை போஞ்சுருக்கு வீட்டுல இருடினுதான சொன்னேன்” என நாலு சாத்து சாத்தினார். அவள் கையை பிடித்து

கொண்டு பாவமாக நின்றாள். கையில் வீக்கம் ஏற்படவே அங்கிருந்த பச்சிலை வைத்தியர் வந்து மருந்துபோட்டுவிட்டு "ஒன்னுமில்லமா தண்ணி பாம்புக்கு விசம் இல்ல ஆனா இந்த மாதிரோ வீங்கிடும் சரிம்மா இந்த இலைய சாப்பிடசொல்லுங்க அப்புறம் ஒர மூனு நாளைக்கு அசைவம் வேனாம் அப்பதான் விசம் இறங்கும் சில குழந்தைங்களுக்கு இது தேவைபடாது இருந்தாலும் நம்ம ஜாக்கிருதையா இருக்கனும்ல எதுக்கும் ஒரு சூடு வச்சுட்டா நல்லதுதான்" என முரட்டு வைத்தியம் கூறி அவர் நகர்ந்தார்.

"ஏன்டி கம்மாயிக்கு போன"

"இல்லமா மலைதான் கூட்டிகிட்டுபோன" என சோகமாக கூற பார்வதிக்கு பாவமாக இருந்தது. தன் மகளுக்கு சூடு வைக்கவேண்டும் அல்லவா. அந்த கம்பி அடுப்பில் காயந்தது.

"தொடைய காட்டுடி" என சோகமாக கூற அன்பரசியோ "இந்தாமா" என நீட்டினாள். அப்போதுதானே விசம் இறங்கும். அந்த பலுத்த கம்பியை சோகமாக தன் மகளின் காலில் வைக்க அன்பரசியோ பல்லை கடித்துகொண்டாள். அந்த சம்பவத்தை கூறும்போது பார்வதிக்கு அழுகை வந்தது.

"சரி இந்த வாண்டு அப்பயாச்சும் திருந்துதானு பாத்தா இது அடங்குற கோஷ்டி இல்ல மாப்ள"

"ம்ம் அப்புறம் என்ன ஆச்சு"

“மறுநாளே ஆரம்பிச்சுட்டா”

ஊருக்குள் அந்த லாரி கவிழ்ந்த்தால் அதில் வந்த எருமை மாடுகளை அவசரத்தில் காப்பாற்ற கட்டுகளை அவிழ்த்துவிட்டனர். அந்த லாரி தீபற்றவே எருமைகள் கூரிய கொம்புகளும் வலிமையாக கால்களைகொண்டும் ஓடி ஊருக்குள் புகுந்தன. அந்த ஊர் கலக்டர் எருமைகளை பிடிக்கும் வரையில் ஊரடங்கு உத்தரவு பிறப்பித்தார். கூடவே சில காவலர்களும் அதை பிடிக்க உதவி செய்தனர்.

ஆனால் ஊருக்குதான அடக்கம் இவர்களுக்கு இல்லையோ

“மலை சீக்கிரம் ஏறுடி நம்ம ஊருக்குள்ள துப்பாக்கியோட வர்ராங்க பாருடி” இது அன்பு

“அம்மா வீட்ட விட்டு வெளிய போக்கூடாதுனு சொல்லிருக்குடி வாடிவீட்டுக்கு போவோம்”

“போடு பயந்தாங்ககோழி நான் பாக்கபோறேன்பா” என மரத்திலிருந்தபடி கூற மலர்விட்டு சென்றுவிட்டாள்.

நீண்ட நேரம் யாருமே வரவில்லை. அப்போது திடீரென ஒரு எருமை வந்து அந்தமரத்தின் மீது நிற்க அதன் பின் நிறைய எருமைகள்

தறிகெட்டு ஒடிவந்தன. அவை துப்பாக்கி ஓசைக்கு பயந்து ஓடி வந்தன. மரத்தில் அம்ர்ந்திருந்தவளுக்கு கால் அருகில் ஒரு ஓனான் அம்ரந்து இவளை பார்த்தது.

“ஏய் ஓனான்டி எங்க பிள்ளையாருக்கா இளநிள மோன்டு குடுக்குற இரு உன்ன” என கால்களால் மிதித்தாள். ஆம் பிள்ளையார் தாகத்தால் தவித்தபோது தண்ணீர் கேட்க இந்த ஓனான் தனது சிறுநீரை கழித்து கொடுத்ததாம் அதை பார்த்த அனில் தட்டிவிட்டு சாமி இது சிறுநீர் இந்தாங்க இளநி என குடுத்ததாக ஒரு கதை கிராமங்களில் உளவும் அதை நம்பியவள். இந்த ஒனான் வம்சத்தை பாதி அளித்துவிட்டாள் என்பது உண்மை. அதை மூக்குபொடி போட்டு டான்ஸ் ஆட வைப்பது. இல்லையென்றார் கரண்டு கம்பிமீது அடித்து போடுவது. தூக்கில் தொங்கவிடுவது என சில தண்டனைகள் நடக்கும் பின்ன பிள்ளையாருக்கு ஒன்னு என்றால் சும்மா விடுவாளா

இன்று அது தெனாவட்டாக அன்பரசியின்அருகில் நிற்க “என்ன கொழுப்பு உனக்கு எங்க அண்ணன் பிள்ளையாருக்கே நீ அப்புடி பன்னுவியா” என எட்டி மிதித்தாள். ஆனால மழை ஈரத்தில் வழுக்கிவிட கீழே இருந்த எருமையின் மீது விழுந்தாள்.

அந்த எருமை தறிகெட்டு தனது வீட்டின்புறம் ஓடவே அனைவரும் பார்த்துவிட்டனர். கிட்டதட்ட குட்டி எமதர்மராக இருந்தாள்.

போலிஸ்காரர்கள் சுடுவதற்கும் பயந்தனர். “சார் அந்த பொண்ணுமேல குண்டு பட்டா பிரட்சனை சார்” என பின் வாங்கினர். மற்றொருவர் “அது எருமை மிதிச்சி சாகட்டும் சார் அப்பதான் நம்ம தலை உருளாது” என கூற பார்வதி சுவர் பின்னால் நின்று கேட்டுகொண்டு அழுதாள்.

அந்த சவாரியை ஜாலியாக சிரித்துகொண்டே என்ஜாய் செய்தவள் அதன் காதினைபிடித்து ஸ்டியரிங்காக பயன்படுத்த பாவம் அவள் சொல்லும் திசைக்கெல்லாம் சென்றது. கூடவே பின்னால் அந்த கூட்டமே ஓடி வந்த்து.

அதை கவனித்த அந்த துப்பாக்கி மனிதன் “பாப்பா அங்க அங்க” என சைகை செய்தான். அவன் கூறிய இடத்தில் ஒரு பட்டி ஏற்பாடு செய்திருந்தனர்.

அவர் சொன்ன மாதிரியே செய்ய அனைத்து எருமைகளும் அந்த பட்டியில் அடைத்தாகிவிட்டது அங்கு நின்றிருந்த ஒருவர் இவளை படக்கென தூக்கிகொண்டு வெளியேற்றினார்.நிலமை கட்டுக்குள் வர உத்தரவு ரத்து செய்யபட்டது.

“மிலிட்டரிகாரரு பொன்னுனா சும்மாவா” என ஊரார் பாட “உங்க அப்பா மிலிட்டரியா பாப்பா” என அந்த மீசை காரர் கேட்க “ஆமா மாமா” என்றாள்.

“நீ பாரஸ்டல சேந்துகுறியா” என்று சிரித்தார். “அம்மா அடிக்கும் மாமா” எனவே தூரத்தில் பார்வதி மூங்கில் குச்சியை எடுத்துகொண்டு வருவது தெரியவே அவள் ஓடிய ஓட்டம் ஒலிம்பிக்கில் கூட யாரும் ஓடியிருக்க மாட்டார்கள்.

ஆனால் ராத்திரி சாப்பாட்டுக்கு அவள் வராமல் போனதுதான் பார்வதியை கலங்க செய்தது.தேடி அழைந்தனர் எங்குமில்லை. நல்லவேலை போஸ் ஊரில் இல்லை.இருந்திருந்தாள் அன்பரசிக்கு சூடு போட்டதுக்கே பார்வதிக்கு கன்னம் சிவந்திருக்கும்.இதில் அவளை காணவில்லை என்றால் பார்வதி பதறினாள்.

தூக்கமில்லாம் பொழுது ஓட “அந்த பாரஸ்காரரு தூக்கிட்டு போயிருப்பாருடி” என சிலர் புரளிபேச துவங்கினர். மலை பார்வதியின் அருகில் அமர்ந்து அழுது கொண்டிருந்தாள்.

தூங்கமல் இரவு விடிய “அம்மாடி உங்க மாமனார் வீட்டுல இருந்து பேயி சத்தம் கேக்குதுடி” என ஒரு கிளவி வந்துகூற பார்வதி அந்த பெரியவீட்டைநோக்கி ஓடானாள்.

அங்கே “அம்மா அம்மா” என சத்தம்கேட்க அது அன்பரசிதான். உட்னே கதவை திறக்க மீண்டும் சத்தம் மட்டும் கேட்டது “அம்மா அம்மா” என மெழுகுவர்த்தியை எடுத்துகொண்டு பார்க்க அந்த சத்தம் பெரிய வீட்டிலிருந்த குலுக்கையிலிருந்து வந்தது. உடனே அதன் கதவை திறக்க அதில் அரிசி மணிகளுடம் வந்து விழுந்தாள் அன்பு அரிசி.

பாவம் இரவில் பசிக்க அந்த அரிசியை தின்று கிடந்துள்ளால் அம்மாக்கு பயந்துகொண்டு பெரிய வீட்டில் இறங்க ஏணிபடி உடைந்து உள்ளே விழுந்திருக்கிறாள்.

“நல்லா அரிசி சைஸ்ல இருந்துகிட்டு பன்றதெல்லாம் சேட்டை” என பார்வதி அடித்த அடியை அரிசி மறந்திருக்க வாய்ப்பில்லை.

இவள் மலை என்று கூப்பிட அவள் பதிலுக்கு போடி அரிசி என கூப்பிட இருவரும் சிரித்துகொண்டு “இந்த பேர் நல்லா இருக்குடி நான் அரிசி நீ மலை மலையரிசி” என பட்டமளிப்புவிழா நடந்தது ஒரு தனிகதை.

அதை கேட்டதும் சந்துரு சிரிக்க ஆரம்பித்துவிட்டான். “அரிசி ஜல்லிகட்டுலாம் போயிருக்காங்களா” என சிரிக்க அனைவரும் சிரித்தனர்

“டாக்டர் வர்ராரு” என ஜெனி தகவல் சொல்ல சிரிப்பை சிறிது நேரம் அடக்கியிருக்க ஜான்சி அரிசியின் முகத்தை பார்த்தாள். அனைவரும் தன்னை கலாய்க்க போகிறார்கள் என்ற கலக்கத்தில் இருந்தாள்.

“ம்ம் சந்துரு நீ அன்பு கூட்டிட்டி வீட்டுக்கு போ பாவம் என்கூடயே இருந்து கஷ்டபடுது” என ஜான்சி கூற “இல்ல அன்னி நான் இருக்கேன்” என்றாள்,

“சொன்னா கேளுமா” என ஜான்சி கூற சரியென கிளம்பினாள்.

## அத்தியாயம் - 68

இருவரும் காரின் அருகில் செல்ல சந்துரு சிரிப்பை அடக்கமுடியாமல் சிரித்தான். “அது எப்புடி அப்ப கோடாங்கி இப்ப எருமையா ஹா ஹா” அவள் வெட்கத்தில் காரினுள் ஏறி அமர்ந்தாள்.

“என்னப்பா சட்டுனு உள்ள உட்காந்துட்ட இது கார்ப்பா எருமைமாடு இல்ல” என சிரிக்க முறைத்தாள். சிறிது கோவம் அடைந்துவிட்டாள் என்பதுதான் உண்மை அந்த மாலைநேர சூரியன் அவள் கன்னத்தில் பட்டு அதில் இருந்த கோபத்தை சிவப்பாக பிரதிபலித்தது.

“என்ன அரிசி வேற எதுவும் கதை இருந்தா சொல்லிடுமா இன்னைக்கு நான் சிரிக்குற மூட்ல இருக்கேன்”

“வண்டிய எடுங்க இல்லைனா நான் இங்கயே இருந்துகிறேன்” என கோபமாக பேசினாள். அந்த கோபத்தை ரசித்தவன் சிரிப்பை

அடக்கிகொண்டு காரை எடுக்க அது ரோட்டில் ஓடியது. ஆனாலும் சந்துரு ஜன்னல் புறமாக திரும்பிகொண்டு சிரிக்க அரிசி கோவத்தில் ஓரக்கண்ணால் பார்த்தாள்.

ஆத்திரத்தில் நகங்களை கடித்துகொண்டிருந்தாள் அவளுக்கு ஒருவித பயமும் தொற்றிகொண்டது.

வீட்டை அடைய "ஆமா எப்புடி அந்த குலுக்கைகுல்ல விழுந்த?" என சிரித்தான்.

"ம்ம்" என கூறிவிட்டு முறைத்துகொண்டு வீட்டின் கதவினை திறந்தாள் பின் சமையலறைக்குள் புகுந்து பூஸ்ட் தயார் செய்தாள். அந்த டம்ளர் வெளியில் தின்னையில் அம்ர்ந்திருக்கும் சந்துருக்கு கிடைத்தவிதம் இருக்கிறதே அப்படி ஒரு சத்தம். அந்த இரும்பும் கல்லும் மோதிகொண்டன.

"அரிசி பாத்து டம்ளருக்கு வலிக்க போகுது" இன்னும் அவன் உதட்டில் புன்னை இருந்த்து. முறைத்துகொண்டு தனது அறைக்குள் சென்றாள். அவனும் பின்னாலயே வந்தான். அவள் கட்டிலிலிருந்து எழுந்துகொண்டு அந்த மேஜையில் அமர்ந்தாள். "ம்ம் மேடம் செம்ம் கோவத்துல இருக்காங்க" என கூறிவிட்டு அந்தசாக்லட்டை எடுத்துஅந்த டேபிளில் வைத்தான்.

அதை தட்டிவிட்டாள். “ஓஓ அப்ப சாக்லட் சாப்புடுறது இல்ல” அன்பரசியின் கழுத்தின் பின் தன் தாடையை வைத்தான். “நான் சமைக்குறேன்” என அவள் எழுந்துகொண்டாள்.

அவளை கட்டிபிடித்தான் “விடுங்க” என கூற “சரி அப்புறம் சமைக்கலாம் நீ உட்காரு உன்ன நான் டிஸ்ட்ரப் பன்னல” என அவளை மேஜையில் அமரவைத்துவிட்ட கட்டிலில் விழுந்து தன கைபேசியை நோன்டினான்.

அவள் அவன் கூறியதை பார்த்து சிரித்தாள் மௌனமாக. சந்துரு அவளை பார்த்து “தூங்கபோறியா! நான் வேனா சாப்பாடு வாங்கிட்டு வாரேன் நீ சமைக்க வேனாம்” என்றான்.

அவள் மௌனமாக சிரித்தவள் எழுந்துகொண்டு அவனை முறைத்துகொண்டே சென்றாள். “என்ன அரிசி எங்க போற”

“டயர்டா இருக்கு குளிக்க போறேன்”

“நானும் வரவா” என அவன் கேட்க முறைத்துவிட்டு கிளம்பினாள். சிறிது நேரத்தில் அவள் அந்த சுடிதாரை அணிந்துகொண்டு வந்தாள். “வாவ் இது நான் உன் பர்த்டேக்கு எடுத்து குடுத்தது சூப்பர் அரிசி” என அவன் கூற முறைத்துவிட்டு கண்ணாடியின் முன் நின்று தலைசீவினாள்.

“என்ன அரிசி பேசமாட்டியா”

“ஆமா”

சோகமாக அவன் முகத்தை கண்ணாடி வழியே பார்க்க சிரிப்பு வந்தது இவளுக்கு. அவள் சிரிப்பதை பார்த்துவிட்டான் சந்துரு. ஐடியா என தன்னிடமிருந்த தலையனையை தூக்கி அவள் மீது எரிந்தான்.

“அரிசி எடுத்துகுடேன்” என கெஞ்சினான்.

எடுத்து அவனருகில் முறைத்துகொண்டே வைத்தாள். “ம்ம் நன்றிங்க டீச்சர்” என அவன் கூற அதில் அவன் அடுத்து நீச்சல் கத்துகுடுங்க என கேட்க போகிறான் என தெரியும் அதனால் சிரித்தாள்.

அதற்குள் மறுபடியும் தலையனையை அவள்மீது எறிய அவளும் தூக்கி எரிந்தாள். அதை எடுத்து அவளை அடித்தான். “என்னடி அடிக்குற”

“போடா நீ மட்டும் அடிக்குற” என அவனது கையை பிடித்துகொண்டு சண்டை போட்டாள்.

அவளை இழுத்து கட்டிலில் தள்ளிவிட்ட தலையானையால் அடித்தான். “இப்ப அடிடி பாப்போம்” என அவளது கையை பிடித்துகொள்ள அவள் முயன்று பார்த்தாள் ஆனால் முடியவில்லை.

அவள் மூச்சுவாங்குவதை பார்த்த சந்துரு அவளது கண்ணில் கரைந்தான். அவளோ கீழே இருக்க அவளுது துள்ளல் குறைந்தது. அரிசிக்கான பலம் இல்லை. அவளுது சூடான மூச்சினை ரசித்தான். அவளது இதழ்களை பார்த்தான் பூக்களில் தேனெடுக்க காத்திருக்கம் வண்டாக. அவளுக்கு மேலும் மூச்சு வாங்க அதை முழுவதுமாக தன்னுள் வாங்க நெருங்கினான்.

“அம்மாகிட்ட சொல்லிடுவேன்” ரகசியமாக கூறினாள்.

“சொல்லிகோடி” என இதழில் இதழ் பதித்தான் அவளது கைகள் அவனிடமிருந்து விடைபெற தன்னவனை இறுக்கமாக கட்டிகொண்டாள். நீண்டநாள் காதலை காமம் சிறிது துளைத்து பார்த்தது.

மின்னல் அழகியை பிடிக்க

இடியரசன் விரட்டுகிறான்

இந்த ஓட்டம் மழை என்று அந்த கால

மொழி

அதன் சான்றாக இப்பூவுடல் மின்னலை

காதலெனும் மழையினால் சிறை

பிடித்த காதலன் அந்த வேலையில்

காமம் எனும் குளிர் சேர்ந்து இருவரை

நனைக்க போர்வை துணைதேடினர்

பூமிக்கு வந்த மழையாக

அன்பு முழுவதையும் அன்பிடம்

செலுத்தினான். மங்கையோ

முகம் சிவக்க தன்னவன் அன்பில் கரைந்தாள்.

தன் உயிருடலை சமர்பித்தாள் அவனுக்கென

அந்த அமிர்த நேரம் அவளுள் ஓர் உறுதி

உனக்கென நான் இருப்பேனடா

என்னாளும் என

காதலெனும் கோட்டையை இந்தபுது

வெள்ளம் தகர்க்க நீர் வடிந்தபின்

கோட்டையின் பளிங்கு பவளமாக

காதல்மீதமிருக்க தன்னவளை

கட்டிகொண்டிருந்தான் மேனிக்கோர்

தடையில்லாமல் இருவருள்ளும் அந்த ஓசை

உனக்கென நான்.

“ரெட்ட புள்ளையா பெத்துகுடுடி அப்பதான் இவங்கள சமாளிக்கமுடியும்” என அவளை பின்னாலிருந்த அழைத்துகொண்டு அவளது கன்னத்தில் கன்னம் வைத்தான். பின் முத்தமிட்டான்.

“சரிங்க” என அவள் வெட்கத்தால் கண்களை மூட “அது என்ன சரிங்க”

“சரிடா பெத்து தாரேன்” என்றாள் சிறிது துணிவாக

“சரி என்ன பேர் வைக்கலாம்” என அவன் யோசிக்க “அதுக்குள்ள என்னங்க அவசரம்” என சினுங்கினாள்.

“ஆமால்ல இன்னும டைம் இருக்குள்ள சரி வா” எனமீண்டும் கட்டிபிடித்து தன் அன்பு மழையை பொழிந்தான் அந்த அன்பிடம்.இப்பிடயாக அவர்கள் இரவு கழிந்தது.

“ஏங்க நீங்க சண்டை போட்டதே இல்லையா”

“ம்ம் போட்டுருக்கேன்”

“யாருகூட”

“என் பொன்னாட்டிகூட இப்பதான சண்டை போட்டேன் அவகூட எனக்கு சரியா சண்டை போட்டாள்ள அப்புறம் நீச்சலும் சொல்லிகுடுத்தா” என அவன் கூற அவனது கன்னதை கடித்தவள் “அது இல்லடா நிஜமா சண்டை போட்டது இல்லையா”

“ஏன் கேக்குற”

“இல்ல சும்மா கேட்டேன்”

“நான் போட்டுருக்கேன்டி மன்டைலாம் உடைச்சுருக்கேன்”

“எப்பங்க”

“சுவேதா வரவும் கேட்டுக்கோ ஐயா இப்ப லவ் மூட்ல இருக்கேன் நோ ஆக்சன்” என தன்னவளை கட்டிகொண்டான்.

“சொல்லுங்க” என அன்பு செல்லமாக கூற “அடி அரிசி இரு சொல்றேன்” என இறுக கட்டிகொண்டு கூற ஆரம்பித்தான்.

“ஏய் உனக்கு பவுடர் வேணும்னா டிரஸ் கழட்டிட்டு நம்ம காலேஜ் சுத்திவாடி” என பூபதி தீவிரமாக கூறிகொண்டிருக்க எதிரில் சுவேதா

நடுக்கதுடன் நின்றுகொண்டிருந்தாள். அவளது கைகள் டிரஸ் நோக்கி போனது "நிறுத்து சுவேதா" என சுகு வந்து நின்றான்.

"ஏய் உனக்கு என்னடா வந்துச்சு"

"ஏய் அவ என்னோட" குரல் தழும்பியது சுகுக்கு "உன்னோட"

"என் பிரண்டுடா"

"போடி உன் பிரண்ட்கிட்ட போயி என்னமோ பன்னி வாங்கிகோ" என பூபதி எழுந்திரிக்க "இருடா" என பூபதியின் கையினை பிடித்தாள்.

"அப்ப அவுறு" என அவன் டிரஷ்ஷில் கைவைக்க சுகு ஓங்க ஒரு குத்து குத்த அனைவரும் அவனை ரவுன்டு கட்டி தாலித்துவிட்டனர். இருந்தாலும் சுவேதாவை இழுத்துகொண்டுவந்துவிட்டான் சுகு.

"டேய் இது"

"அப்புறம் சொல்றேன்டா" என அறை மயக்கதில் உளறிகொண்டிருந்த சுவேதாவை படுக்கவைத்துவிட்டு இருவரும் பூபதியை நோக்கி சென்றனர்.

பத்து பேரை பந்தாடினர் இருவரும் இறுதியில் ஒரு கட்டையை எடுத்து சந்துருபூபதியின் மண்டையை பிளக்க கல்லூரியிலிருந்து இரண்டு வாரம் அனைவரும் இடைநிறுத்தம் செய்யபட்டு டூர் சுற்றி திரிந்தனர்.

“இதுதான்மா நடந்துச்சு போதுமா!! அதான் அந்த பூபதி நாயி அடிக்கடி ஃபோன் பன்னி குலைக்கும்! நீ வா அரிசி” என அரிசியை இறுக்கமாக கட்டிகொண்டு தூங்கினான்.

காலையில் அசந்துதூங்கியவனை தண்ணீர் ஊற்றி எழுப்ப அவளை கட்டிபிடித்துகொண்டு தூக்கிசென்று மீண்டும் குளிக்க வைத்தான்.
“டேய் ஓல பட்டாசு நான் காலைலதான்டா குளிச்சேன்”

“ம்ம் என்ன குளுப்பாட்டுனேல அதான் இந்த தன்டனை” என அரிசியுடன் வம்பிழுத்தான்.

“போடா டிரஸ்லாம் நனைஞ்சிடுச்சு” என சன்டையிட்டு ஒரு வழியாக ஜான்சியை பார்க்க கிளம்பிவந்தனர். சந்துரு மத்த பார்மாலிட்டிகளை பார்த்தான்.

“என்ன அன்பு முகத்துல இன்னைக்கு ஒரே சந்தோஷம் பாப்பா ரெடியா” என ஜான்சி கூற வெட்கத்துடன் அந்த பெட்டின் நூலை

கையால் பிரித்தாள். “ம்ம் சீக்கிரம்மா” என ஜானசிகூற இருவரும் பேச துவங்கினர்.

இப்படியே நாட்கள் ஓட ஜான்சி வீட்டிற்கு அழைத்துவரபட்டால். பங்களாவில் தங்கியவலுக்கு போஸின் இந்த வீடு சிறியதாக தெரிந்தாலும் அன்பின் கூரையில் அழகாக இருந்தது.

ஒரு மாத்ததில் ஜான்சியால் நன்றாக பேச முடந்தது. பின் சுவேதாவிடமிருந்து ஃபோன் சுகுதான் பேசினான். “டேய் அவளுக்கு மூளைல இருந்த கட்டி கறைஞ்சிடுச்சுடா இட்ஸ் மெடிக்கல் மிராக்கில்ங்குறான் இங்க இருக்குற டாக்டர். ஆமாடா அவ சந்தோஷமா இருக்கா அதுதான் காரணம் இப்ப லேசர் ட்ரீட்மன்ட் மட்டம் பன்னிருக்காங்க அடுத்த வாரம் ஊருக்கு வாரோம்” என சுகு கூற சந்துரு அந்த ஃபோனை வாங்கி மாறிமாறி பேசி டவரை நோகடித்தனர் அன்பு தொல்லையால்.

அந்த நாளும் வரவே சுவேதா வந்தாள் அவளது கையால் கம்பெனி திறக்கபட்டது வீட்டன் கடைகுட்டு அவள்தான் அல்லவா அதனால்தான் இந்த பாசம். அந்த புதுவீட்டற்கும் வந்தனர் அனைவருக்கும் அறை ஒதுக்கபட்டிருந்தது.

ஆனால் கம்பெனி ஓபன் பன்னும்போது அந்தசம்பவத்தை யாரும் பார்த்திருக்க வாய்ப்பில்லை. ஆம் அங்கு கிடந்த சேற்றில் கால்வைத்த ஜான்சி தவறி சரிய கோபி அவரை தாங்கிபிடித்தார். “பாத்துபோங்க மேடம” என்றான்

அவள் ஒரு ஆண்மகனின் கைபட்டதால் வெட்கபட்டாள் ஆனால்கூட்டத்தில் காட்டிகொள்ளாமல் இயல்பாக சிரித்துவிட்டு நகர்ந்தாள். “ஆமா நீங்க” என அவர் கேட்க “ஜான்சி சந்துருவோட அக்கா”

“ஓஓ நீங்கதான் அந்த ஜான்சியா” என கூறிவிட்டு அங்கிருந்த நகர்ந்தார். ஏன்அவர் அப்படி கேட்டார் என்ற குழப்பம் ஜான்சிக்கு ஆனால் அவர் அப்படி கேட்டது பிடித்திருந்தது.

“எல்லாருக்கும் சாக்லட் குடுங்கப்பா” என சந்துரு “அண்ணா வாங்க” என சேகரை அழைக்க “நீ போயி குடு வளர்மதி” என தன் காதலியை அனுப்பினான்.

ஜான்சி அவனை பார்த்துவிட்டு “நீ நடத்துடா” என்றாள். “உன்னதாங்கி பிடச்ச ரோமியோ யாருக்கா” என சேகர் கேட்க “சும்மா இருடா” என நாணத்துடன் கூற “யாருப்பா ரோமியோ” என சந்துரு வந்தான்.

“அந்த மாமாதான்” என சேகர் கூறிவிட்டு ஓட அந்த இடத்தில் நின்று ஃபோன் பேசிகொண்டிருந்த்து கோபிகிருஷ்ணன்தான். “ம்ம் சரிக்கா” என சந்துரு ஜான்சியை பார்த்து கூற “சும்மா இருடா தம்பி” என அமைதியாக சென்றார்.

அனைத்து குடும்பமும் ஒரே வீட்டில் தங்க மஞ்சுளா தன் டுவின்ஸ் வான்டுகளை வளர்ப்பதில் பிஸி. இப்படியே நாட்கள் சென்றது. கோபியும் இந்த புது மில்லிலேயே இருந்தார்.

கம்பெனிகள் இனைந்துவிட்டகாரணத்தினால் சந்துருதான் அனைத்து கம்பெனியும் பார்த்து கொள்கிறான். ஆனால் இந்த ஜான்சி “கம்பெனிய சுத்திபாத்துட்டு வந்துடுறேன் தம்பி” என கூறிவிட்டு புது மில்லிற்கு அடிக்கடி செல்வாள். அங்கு என்ன பார்க்க போகிறாளோ. கோபியை இல்லை என நான் சொல்லமாட்டேன்.

ஆம் ஒரு நல்ல நாளில் ஜான்சி கோபி திருமனம் முடிந்தது. பின்ன என்ன “கோபி அண்ணா அந்த ஃபைல்” என சந்துரு பழக்க தோஷத்தில் கூற “அண்ணா இல்லடா மாமான்னு கூப்பிடு” என கோபிகூற சந்துருக்கு புரிந்துவிட்டது.

“கோபி மாமா ஜான்சி அக்காவ உங்களுக்கு பிடிச்சிருக்கா” என சந்துரு கேட்ட கேள்விக்கு அவர் கூறிய பதிலில் இந்த திருமனம் முடந்தது. ஆனால் இந்த சேகர் அன்னாதான் பிரட்சனை.

இல்லை இல்லை வளர்மதிதான் பிரட்சனை கம்ப்யூட்டர் பாடத்தில் பெயில் அதனால் தன்னவன் கம்ப்யூட்டர் ஹேக்கர் ஆனால் தான் பெயில் என மனதில் வருத்தம். தான் அதில் பாஸ் ஆகிட்டுதான் கல்யானம் பன்னுவேன் என சேகருக்கு முடிவாக கூறிவிட்டாள். அதானால் சேகர் சந்துருவிடம் தினமும் கேட்பது “தம்பி காசு குடுத்தாவது அவள பாஸ்பன்ன வைடா”

“ஐய்யோ நேர்மையா எழுதட்டும் அண்ணா வெயிட் பன்னுங்க” என சந்துரு எஸ்கேப்

“ம்ஹூம் நேர்மைநா எழுதுனா ஔவ்வையார மாறுன அப்புறம்தான் கல்யானம் பன்னனும் வேனாம் அடுத்த ஜென்மத்துல பன்னிகுறேன்” என சேகர்கூற அனைவரும் சிரிப்பர். “நான் பாஸ் ஆகுறேன்” என சபதம் விட்டு செல்வாள் வளர்மதி.

வருடங்கள் இப்படியே மகிழ்ச்சியாக ஓட மஞ்சுளா மதுரையில் தன் தாய் வீட்டிலேயே தங்கிவிட்டாள் தன்னவன் பாலாஜியுடன் இரு குழந்தைகள் அவளுக்கு.இந்த செட்டின் மூத்த வாரிசுகள்.

அப்பறம் நம்ம சுவேதாவுக்கும் சுகுவுக்கு ஒரு அழகான ஆண்குழந்தைங்க அதுக்கு என்ன பேர் வச்சுருப்பாங்க கெஸ்பன்னுங்க. ம்ம் கரெக்ட் அந்த வான்டு பேரு அன்பரசன். கொஞ்சம் இல்ல ரொம்ப வாலு அரிசியவே தூக்கி சாப்புட்டுருவான். எல்லாம் அரிசியின் டிரயினிங் மற்றும் அவள் கொடுக்கும் செல்லம். “பார்வதி அம்மா நீங்க அரிசி அன்னிய எப்புடிதான் சமாளிச்சீங்களோ அப்பா என்ன வாலு இவன்” என புலம்புவாள் சுவேதா.

“என் கஷ்டம் இப்ப தெரியுதாமா! அவனுக்கு அன்புனு பேரு வைக்காதனு சொன்னா கேக்குறியா” என பார்வதி சிரித்துகொண்டே செல்வார்.

நம்ம அரிசிகுடும்பத்த பாக்கனுமே அமாங்க அவளுக்கு ஒரு பொண்ணு அவள மாதிரி அழகா இருப்பா என்ன அவ கொஞ்சம் அமைதிங்க சந்துரு மாதிரி. அதனாலதான் அவள சுவேதாவோட மகனுக்கு இப்போவே பேசிட்டாங்க. ஸோ யாரும் பொண்ணோ மாப்பிள்ளையோ கேக்ககூடாது. அவள் தாத்தா செல்லம் அவளை போஸும் சன்முகம் வயலிற்கு அழைத்து சென்றுவிடவர். அவள் கழுத்தில் அந்த கேமிரா ஏன் வந்தது அப்புடின்னு தெரியல ஒருவேல. நீங்க யோசிக்குறது கரேக்ட்தான் அவ பேரு ஜெனிபர். போட்டோ எடுக்க கிளம்பிடுவா சும்மா கேமிரா வழிய பாப்பா போட்டோலாம் எடுக்க தெரியாதுங்க போக போக பழகிடுவா. உங்க வீட்டு விசேசத்துக்கு போட்டோ எடுக்கனும்னா புக்பன்னிகோங்கப்பா.

அப்புறம் போஸுக்கு இருக்குற நோய சன்முகம் சரக்குபோட்டு சந்துருகிட்ட உளறிட்டாரு. அன்னைக்குதான் அவ்வளவு ஆத்திரதபட்டான். இன்றுவரை சிகிச்சைதான். அவரு வாழ்கை சந்துருவின் அதட்டலுக்கு பயந்து நீடித்துள்ளது. மற்ற விசயத்தில் மாமாவுக்கு பயந்தாலும் இந்த உடல்நலன் விசயத்தில் விட்டு கொடுப்பதில்லை.

சரி இவங்க என்ன பன்றாங்க அட நம்ம கம்யூட்டர் புழுக்கள்ப்பா யாருன்னு பாக்குறீங்களா சுகுவும் சேகரும்தான். “மாப்ள இந்த புரோக்ராம கிராக் பன்னுங்க பாக்கலாம்” என சுகு புதிதாக கஷ்டபட்டு இயக்கிய புரோக்ராமை காட்ட சேகர் அதை பார்த்துவிட்டு சிரிக்க வளர்மதி வந்துவிடுவாள். “மாமா இது என்ன

தப்பு இருக்கு ஒரே கருப்பா இருக்க" என தன் கனினியை காட்டுவாள்.

சேகர் அவள் தலையில் கொட்ட தலையை கையால் தேய்த்துவிட்டு "என்ன மாமா ஏன்" என சினுங்க "#include<conio.h> போடுறதுக்கு பதிலா #include<coin.h> னு போட்டு வச்சிருக்க நமக்கு கல்யானம் இந்த ஜென்மத்துல நடக்காதுடி" என சிரித்துவிட்டு "மாமா முடிஞ்சு என்ன சப்பையா எழுதிருக்கீங்க இதையா கவர்மென்டுக்கு அனுப்ப போறீங்க" என சுகுவின் புரோக்ராமை தட்டிவிட்டு எழுந்து செல்ல சந்துரு நுழைந்தான்.

"என்ன தம்பி டல்லா இருக்க"

"இல்ல சேகர் அன்னா நேத்தே பணம் அனுபிருக்கனும் ஆனா பேங்க் லீவு இன்னைக்கும் லீவு அதான் பஞ்சு ஸ்டாக் கம்மியா இருக்கு சப்ளையர் சத்தம் போடுவான்" என சந்துருகூற

"கொஞ்சம் உங்க ஃபோன குடுங்க" என வாங்கியவன் பாஸ்வேர்டை மதிகப்பதில்லை. சிறிது நேரம்குடைந்தவன் "இந்தாடா தம்பி அனுப்பியாச்சு"

"சேகர் அண்ணா பேஙக்லீவுன்னா இன்னைக்கு"

"டேய் நான் போனவாரமே அனுப்பிட்டேன்"

“போன வாரமா?”

“அட நீவேற ஏன்டா இந்தியால பேங்க் செக்கியூரிட்டி சிஸ்டம் ரொம்ப மட்டம்டா” என நடந்துசெல்வான்.

“ஜான்சி அம்மா அத்த கத சொல்லுங்க” என குழந்தைகளை ஜான்சியை சூழ்ந்துகொள்வர். மூத்த வாரிசு என்றாள் இந்த அன்பு தொல்லை இருக்கதான் செய்யும். ஜான்சியும் அனைவரையும் மடியில் தூக்கிவைத்துகொண்டு கதை சொல்லவாள். அவர்கள் அடுத்து அடுத்து என கேட்க ஜான்சியால்நீண்ட நேரம் பேசமுடியாதல்லவா அவள் உடல்நிலை அப்படி. இருந்தாலும் செருமிகொண்டு கண்கள் கலங்க கதை சொல்லுவாள். அதை பார்த்து வேதனைபடுவான் சந்துரு. தன்னவனின் கண்ணை பார்த்தே புரிந்துகொள்ளும் அன்பு “ஏய் வாண்டுகளா ஜான்சி அம்மாவ கத்த வைக்ககூடாதுனு சொன்னேன்ல வெளிய போயி விளையாடுங்க” என அதட்டுவாள்.

இன்றும் அப்படி நடக்கவில்லை “குட்டிகளா ஜான்சி அம்மாவ டிஸ்ட்ரப் பன்னாதீங்க வெளிய பொம்மை கார் எல்லாம் இருக்கு போயி விளையாடுங்க” என கூற அனைவரும் ஐ ஜாலி என ஓடினர்.

ஆனாலும் ஜான்சி யின் மனதில் அந்த எழிலை கொண்ற நினைவுகளும் ஜெனியை கொண்ற நினைவுகளும் வந்து வாட்டி எடுக்கும். தன் அடியாள் ஒருவனை அழைத்துகொண்டு எழிலை காட்டினுள் தள்ளி சித்திரவதை செய்தாள். "ஏய் இது சந்துரவ

மிரட்டமட்டும்தான் ரொம்ப ஓவரா வேணாம்" என காதில் ரகசியமாக ஓதினாள்.

வீடியோ ஆன் ஆக அவன் அவளது டிரஸ்ஸினை கழற்றினான். "ம்ம் பன்னு" என ஜான்சி சைகை காட்ட அவன் முன்னேறினான்.

"ஹேய் போதும் அவன் போன உடைச்சுட்டானு நினைக்குறேன்" என ஜான்சி கூற அவனோ "அக்கா அழகா இருக்கா ஒருவாட்டி"

"ஏய் இதுவே கொஞ்சம் ஓவர்தான்டா வாங்குன காசுக்கு பன்னது போதும் வா"

"போக்கா" என அந்த அடியாள் முன்னேற எழில் அவன் கண்ணில் மண்ணை தூவி ஓடினாள்.

"ஏய் புடிடா" அதற்குள் அவள் இருட்டில் மறைந்தாள். ஜான்சி கோவமாக அவனை திட்ட மறுநாள் புலிகளால் கொல்லப்பட்டு கிடந்தாள். அவளது உடலை பார்க்கும்போது ஜான்சிக்கும் கொஞ்சம் பதறிவிடவே இன்றும் அதை நினைத்து கண்ணீர்விடுவாள். சந்துருதான் ஆறுதல் கூறுவான். அதற்கு பிராயச்சித்தமாக எழிலரசியின் கனவான நூறு முதியோர் இல்லம் திறந்துள்ளான் எழிலரசி பெயரில். இப்போதும் ஆறுதல் கூறினான் சந்துரு.

பின்

மேலே

சென்றான் ரூமில் அன்பு இல்லை. தேடினான். “அரிசி அரிசி எங்க போன” வீட்டிற்கு வந்து தன்னவள்முகம் காணாமல் அன்றைய நாள் முழுமையடையாது அவனுக்கு.

அவள் ஆசையாக வாங்கிகொடுத்த அந்த சுடிதாரை போட்டிருந்தாள். அழகான மாலைபொழுதில் அந்த வீட்டின் மாடியில் ஆம் அவள் வானிலிருந்துவந்திறங்கிய தேவதைதான் சந்துருவின் தேவதை. அவ்வளவு அழகாக முதல்நாள் கேக்குடன் வந்து பிறந்தநாள் வாழ்த்து கூறிய நியாபகம் அவனுக்கு கூடவே அந்த சிறுவயது அன்பும் வந்து சென்றாள்.

“என்ன அரிசி இங்க வந்து நிக்குற”

தன்னவனை திரும்ப பார்க்க அவளது கண்ணில் கண்ணீர் “ஏய் ஏன்டி அழற”

“இல்லைங்க எனக்கு எவ்வளவு சொந்தங்க இருக்காங்க அவங்களுக்காக வாழுறது தனி சுகம்தான் அதான் ஆனந்த கண்ணீர்ங்க”

“என்னடி நீ” என அவளை அனைத்துகொண்டான.

“இல்லைங்க நீங்க எனக்காக எவ்வளவு பன்னிருக்கீங்க இந்த வீடு பாசமான அன்னிங்க எனக்கு வாழ்கை இன்னைக்கோட முடிஞ்சா போதும்ங்க” என கண்ணீர்விட்டாள்.

“யேய் லூசு என்ன பேச்சு இது சந்தோஷமா வாழனும்டி நீ அதுக்குதான் நான் இருக்கேன்” என சந்துருகூற அவனது மார்பிரல் சாய்ந்து அவனது இதயதுடிப்பை கேட்டாள். உனக்கென நான் இருக்கேன்டா என் ஒலை பட்டாசு. என சிரித்தாள். “அம்மா சிரிங்க” என குட்டி ஜெனி தன் குட்டி கேமிராவில் இருவரையும் சேர்த்து தன் முதல் கிளுக் கிளுகினாள்.

இந்த குடும்பம் என்றும் நீடூடி வாழ அந்த குடம்பத்தில் ஒருவராக உங்களை ஆசிர்வதிக்க கேட்டுகொள்ளும் உங்கள் அன்புதோழி